
# நினைவுக் குமிழிகள்

90

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்



இரண்டாம் பகுதி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நினைவுக் குமிழிகள்—2

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின்கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்

## என்தேவையை நீஅறிவாய்

வேண்டத் தக்க தறிவோய்நீ
　　வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
　　வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
　　யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
　　அதுவும் உன்றன் விருப்பன்றே[1]

—மாணிக்கவாசகர்

1. திருவா, குழைத்த-6.

# நினைவுக் குமிழிகள்-2

(ஆசிரியரின் 74-வது அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
பேராசிரியர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார்,
(எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.)
தமிழ்ப்பேராசிரியர்-துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
184. பிராட்வே·சென்னை·600108

முதற்பதிப்பு—திசம்பர் 1989

© டாக்டர் S. இராமலிங்கம், M.Sc., D.Litt.,
(ஆசிரியரின் மூத்த மகன்)
AD-13 (Plot No. 3354)
அண்ணாநகர், சென்னை-600 040
தொ. பே. 621 1583

பக்கங்கள் : xxiv + 412 = 436

விலை : ரூ. 41.00

NINAIVUK—KUMIZHIKAL—Part II

VENKATAM PUBLICATIONS
AD-13 (Plot 3354)
Anna Nagar, MADRAS-600 040
Ph : 621 1583

அச்சிட்டோர் : கவின்கலை அச்சகம்
கந்தசாமி நகர், பாலவாக்கம்
சென்னை-600 041
தொ. பே. : 41 71 41


## நீயும் நானும்


அறியுந் தரமோ? நான்உன்னை
அறிவுக் கறிவாய் நிற்கையினால்;
பிறியுந் தரமோ? நீயென்னைப்
பெம்மா னே!பே ரின்பமதாய்ச்
செறியும் பொருள்நீ; நின்னையன்றிச்
செறியாப் பொருள்நான்; பெரும்பேற்றை
நெறிநின் றொழுக விசாரித்தால்
நினக்கோ இல்லை எனக்காமே.[2]

—தாயுமான அடிகள்

2. தாயுமான சுவாமிகள் பாடல்—தன்னையொருவர்-4

# அன்னையும் பிதாவும்






மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே
யாது ஆகில் யாதே இனி? (பெரி. திருவந்,70)
—நம்மாழ்வார்.



## பக்திப்படையல்

வண்ணமார் திங்கள் கதிரவன் முதலா
    மாண்புறும் ஒளியினில் விண்ணில்
மண்ணினில் கடலில் யோகிய ருளத்தில்
    வதிதலால் பயனிலை யென்று
எண்ணிநெஞ் சுருகி யாவரும் நோக்கி
    எழில்வியப் பெய்தவேங் கடத்தில்
நண்ணியெற் கருளும் மாதவ முகுந்தன்
    நல்லடிக் குரியதிந் நூலே.

(வேங்கடவனை அந்தர்யாமியாகக் காண்பது)



# அணிந்துரை

**ஆ. பன்னீர்செல்வம்**
*துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை*
*தமிழ்நாடு அரசு*
*"குறளகம்"—சென்னை-600 108*

பேராசிரியர் **டாக்டர். ந. சுப்பு ரெட்டியார்** அவர்களை, அவர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த காலத்திலிருந்தே ஓரளவுக்கு அறிவேன் என்றாலும், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர் அப்பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்று சென்னைக்கு வந்த பின்னரே எனக்கு வாய்த்தது. பேராசிர்யர் அவர்கள் 'நினைவுக் குமிழிகள்' எனும் தலைப்பில் எழுதும் தன்-வரலாற்று நூற்கோவையில் ஏற்கனவே வெளிவந்துள்ள இரு தொகுதிகளையும் (1, 3) படித்துள்ளேன். இந்நூற்கோவையின் இரண்டாம் தொகுதிக்கு நான் அணிந்துரை எழுதவேண்டும் எனப் பேராசிரியர் அவர்கள் ஒருநாள் என்னிடம் தெரிவித்தார்கள். அது எனக்கு எதிர்பாராத ஒன்றாக அமைந்தது. பேராசிரியர் அவர்கள் அவ்வாறு என்னைப் பணித்தமைக்கு அவர்கள் என்னிடம் கொண்டுள்ள பேரன்பே காரணமாகும்; அஃதன்றி வேறு எத்தகுதியினையும் நான் பெற்றிருக்கவில்லை. அறிவிலும், அநுபவத்திலும் உயர்ந்து விளங்கும் பேராசிரியர் அவர்களுடைய நூலுக்கு நான் அணிந்துரை வழங்குவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இவ்வுலகில் ஒவ்வொருவருடைய வாழ்வும் ஒவ்வொரு தன்மையில் அமைந்து கிடக்கின்றது. சூழ்நிலைகளாலும், வாழ்க்கைப் போராட்டங்களாலும் வாழ்க்கைப் போக்குகள் மாறுபடுகின்றன. 'ஏதோ வாழ்கின்றோம்' என வாழ்நாளை ஓட்டிச் செல்பவர் பலர். வாழ்க்கை வாழ்வதற்கே என வாழ்பவர்கள் சிலர். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு வரலாறே. தங்களுடைய வாழ்க்கை வரலாற்றை மற்றவர்கள் போற்றிக் கொள்ளும் சிறப்பினை அடையப் பெற்றவர்கள் பெரியோர்களெனப் புகழப் படுகின்றனர்.

தன்-வரலாறு எழுதுவதற்கு மிகுந்த தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கையால் கூடாத செயல்கள் எவையு மில. தன்னம்பிக்கையுடையோர் மனத்திட்பமும், செயல் திறனும், அறிவுத் தெளிவும் உடையவர்களாக விளங்குதல் இயல்பேயாகும். அவ்வகையில் எழுந்துள்ள பேராசிரியர் அவர்களின் நினைவுக் குமிழிகள் படித்துப் பயன்பெறுவதற் குரியனவாகும்.

"If is not the load that breaks you down; It is the way you carry it" என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். பேராசிரியர் அவர்கள் தமக்குரிய பொறுப்புகளைத் திட்ட மிட்ட முறையில் செயற்பாங்குடன் நிறைவேற்றி வருபவரா வார்கள். அதனால் வாழ்க்கையைச் சுமையாகக் கொள்ளா மல் சுவையாக்கிக் கொண்டு வாழ்ந்து வருபவர். 'நீர் வழிப் படூஉம் புணை போல'ன்றி எதிரிட்டு—எதிர் நீச்சலிட்டு —வாழ்க்கையில் வெற்றிகளை ஈட்டியவர்; சாதனைகளைப் படைத்தவர்.

இத் தொகுதியில் பேராசிரியர் அவர்கள் தம்முடைய துறையூர் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் அவர் அடைந்த இடர்ப்பாடுகளும், இன்னல்களும் 'விரிப்பின் நீளும், தொகுப்பின் மிஞ்சும்' என்ற முறையிலேயே அமைந்துள்ளதனைக் காண்கிறோம். 'ஞானியார் மரபில்' பிறந்து வளர்ந்து மேற்கல்வி பயின்ற பேராசிரியர் அவர்கள், ஆசிரியப் பணியில் சிறந்து விளங் கியவர். மிகக் குறைந்த சம்பளத்தில் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர் அவர்கள் நாள் முழுவதையும் பள்ளியின் முன்னேற்றத்திற்குரிய செயற் பாடுகளிலேயே கழித்து வந்துள்ளார்கள் (பக். 141). பள்ளியைச் சொந்த நிறுவனமாகவே கருதி உழைத்தவர் (பக். 204). 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு ஆளாகி பள்ளி முன்னேற்றத் திற்கு ஒல்லும் வகையெல்லாம் உழைத்துக் களிப்படைந்தவர். 'பணியே பரமன் வழிபாடு' எனக் கொண்டு வாழ்ந்தவர். 'மடி நிறையப் பொருளும், மனம் நிறைய இருளும்'படைத்த 'கஞ்சப் பிரபுக்களால்' தொடங்கப் பெற்ற புதிய பள்ளியில் பல பிரச்சினைகளையும் சமாளிக்கும் பொறுப்பு தம் தலை மீது அமைந்ததால் 'தலைமை' ஆசிரியர் எனத் தம்மை அழைத்தனரோ எனப் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுவது

(பக். 194) அவர்பட்ட தொல்லைகளை நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுவனவாகும்.

ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்பவர்கள் வெற்றி பெற வேகமாக ஓடினால் மட்டும் போதாது; ஓட்டத்தைக் காலத்தே (குறிப்பிட்ட நேரத்தில்) தொடங்க வேண்டும் எனக் கூறுவர். அவ்வடிப்படையில் பேராசிரியர் அவர்கள் முன்னேற்றங் கருதித் தாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் காலத்தே திட்டமிட்டுத் தொடங்கியுள்ள தனை அறிகின்றோம். பொதுவாக ஆசிரியர்கள் சிறந்த நிருவாகிகளாக இருப்பதில்லை; நிருவாகிகள் சிறந்த ஆசிரியர்களாக இருப்பதில்லை. இஃது உலகியலில் நாம் காணும் நடைமுறையாகும். ஆனால் நம்முடைய பேராசிரியர் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், சிறந்த நிருவாகியாகவும் விளங்குகின்றார்கள். பள்ளி ஆசிரியர்கள் நியமனம் (பக். 8-9), பள்ளிக் கணக்கு வைப்பு முறை (பக். 19-24), பள்ளிப் பணத்தை முறையாக வங்கியில் செலுத்தல் (பக். 27), மாணவர்களிடமிருந்து கட்டணம் தண்டலுக்கான ஏற்பாடு, மேலிடங்களிலிருந்து வரும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்புதல் (பக். 31), வகுப்புகளுக்கு இடவசதி செய்தல் (பக். 35), பள்ளி நூலக மேம்பாடு (பக். 38) கற்பிப்பு சாதனங்கள் (Educational Aids) வாங்குதல், வகுப்புகளுக்குத் தேவையான அறைகளை வசதி செய்தல், நான்காம் படிவம் தொடங்கத் தக்கவர் துணைகொண்டு விண்ணப்பம் தயாரித்தல் (பக் 44-45), வைரிசெட்டிப் பாளையம் குடிமைப் பயிற்சி முகாம் (பக். 244-255) ஆகியன பேராசிரியர் அவர்களின் தேர்ந்த நிருவாகத் திறனை எடுத்துக் கூறுவனவாகும்.

பேராசிரியர் அவர்களுக்குச் சிறுவயதில்பெற்றோர் இட்ட 'சுப்புரெட்டி' எனும் பெயர், உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் 'சுப்பு' என ஆகி துறையூரில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலை 'சுப்புரெட்டியார்' என மாற்றம் பெற்ற தனை அறிகின்றோம் (பக். 9-11). 'ரெட்டி' எனும் சாதிப் பின்னொட்டினை முதலில் வெட்டிக் கொண்டு பின்னர் 'ரெட்டியார்' எனும் பின்னொட்டினைப் பேராசிரியர் அவர்கள் தம் பெயருடன் ஒட்டிக் கொண்டது சாதிப்பற்றின் காரணமாக இல்லை என்பது தெளிவாகும். பேராசிரியர் அவர்கள் எக்காலத்தும் 'சாதி சமய வெறி சற்று மில்லாத' வராக இருந்து வந்துள்ளார் (பக். 154). எனவே தமிழுலகில், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர்.

உ.வே. சாமிநாதய்யர், திரு. வ.வே.சு. அய்யர், டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை, சித்தாந்தக் கலாநிதி ஔவை. சு. துரைச்சாமிப் பிள்ளை, நாவலர் வேங்கடசாமி நாட்டார், டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், திரு. கா. சு. பிள்ளை, திரு. வையாபுரிப் பிள்ளை போன்ற சாதிப் பின்னொட்டுகளுடன் கூடிய பெயர்கள் வழங்கி வருவதனைப் போன்று நம் பேராசிரியர் அவர்களுடைய பெயரும் வழங்கப் பெறுவதாயிற்று எனக் கொள்ளலாம்.

பொறுப்பான பதவிகளை வகிப்போர் இரு குற்றச் சாட்டுகளுக்கு ஆளாவதுண்டு. அவை, புகழ்மொழியை நச்சி அடிமையாதலும், பழிமொழியை நம்பிப் பகை கோடலுமாம். துறையூர் பள்ளியில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிய பேராசிரியர் அவர்கள் மேற்காணும் இரு குற்றச் சாட்டுகளுக்கும் ஆளாகாமல் இருந்து வந்துள்ளது சிறப்புக் குரியதாகும். பள்ளியில் பயின்ற 'அடங்காப் பிடாரிகளை'ச் சமாளித்த விதமும் (பக். 275), மொட்டை மனுக்களுக்குத் தக்க மறுமொழி அளித்த பான்மையும் (பக். 276-278), ஆசிரியர் திரு. பிச்சுமணி அய்யர் மகனுக்கு நீதி வழங்கிய நீர்மையும் (பக். 284), பேராசிரியரின நடுவுநிலை கோடாத் தன்மைக்கும், ஏற்ற பொறுப்பின்பால் கொண்ட கடமையுணர்வுக்கும் எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன.

விதிக்குப் புறம்பான தன்மையில் பள்ளி நிருவாகத்துடன் பெரிதும் இணங்கி தம்முடைய சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொண்டு 'சிவனே' என்று பேராசிரியர் தம் வாழ்நாளைக் கழித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு வாழ அவர் விரும்பினாரில்லை. தம்முடைய பணி தலைமையாசிரியர்க்கென விதிமுறைகளில் வரையறுக்கப்பட்ட பணிகளுடன் முடிவடைவதாக அவர் கருதவில்லை. பள்ளியின் முன்னேற்றத்திற்காக எல்லா வகைகளிலும் பாடுபட்டுள்ளார். தரத்திலும், அளவிலும் பள்ளியை மேம்படுத்தினார். பள்ளியில் 'மாணவர் இலக்கியக் கழகம்' எனும் அமைப்பினை நிறுவி வழக்கமான கூட்டங்களை மட்டுமின்றி, பெருமக்கள் பலரையும் வரவழைத்து மாணவர்களுக்குப் பல இலக்கிருங்களையும் அறிமுகம் செய்வதை வழக்கமாகக் கொண்டியந்தார். இஃது ஒரு சாதனை என்றே கருதப்படுவதற்குரியதாகும்.

பேராசிரியர் அவர்கள் மிகுந்த நினைவாற்றல் உள்ளவர்கள் என்பதையும் இந்நூல் நமக்கு எடுத்துரைக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவற்றை, எவ்விதக் குறிப்பும் எழுதி வைத்திராத நிலையில், நிரல்பட எடுத்துக் கூறியுள்ளமை வியப்பளிப்பதாக உள்ளது. துறையூரில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய போது கணக்குத் தேர்வு (Account Test) எழுத அவர் மேற்கொண்ட முயற்சிகளையும், கணக்குத் தேர்விலான வினாக்கள் பற்றிய விவரங்களையும் (பக். 48, 50) அறிகின்றோம். தற்போது பணியிலுள்ளவர்களில் கூட பலர் இந்த அளவுக்குக் கணக்குத் தேர்வைப் பற்றி அறிந்திருப்பார்களா என்பது ஐயத்திற்குரியதாகும். பள்ளி 'இலக்கிய மன்றக் கூட்டத்தில்' பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துரைத்த கருத்துகளும் (பக். 184-187), திருப்பராய்த்துறையில் தவத்திரு. சித்பவாநந்த அடிகள் அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் (பக். 207-208) பற்றிப் பேராசிரியருக்கு எடுத்துரைத்த விளக்கமும் படித்துணர்வதற்குரியன.

அன்புள்ளமும், செயல் திறனும் இணையும் போது பயன்மிகு விளைவுகள் ஏற்படும் என்பது நாமறிந்த உண்மையாகும். ஏழை மாணவர் நிலைக்கு இரங்கி காலம் தாழ்ந்த நிலையில் முன் தேதியிட்டுக் கட்டணம் பெற்றமை, அரசு விதிகளின்படிக் கட்டணச் சலுகைக்குத் தகுதியற்ற 'பரம ஏழை' மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை ஏற்பாடு (பக். 114), துறையூரிலும் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் சாதி வேற்றுமை பாராமல் செல்வர்களை நாடி கட்டணச் சலுகைத் திட்டத்திற்கென நன்கொடை திரட்டியமை, முதல், இரண்டாவதாகத் தேறிய மாணவர்களுக்குப் பரிசுத் திட்டம் ஏற்படுத்தியமை, **'இளைஞர் அறிவுச் சுடர்'** கையெழுத்து இதழ் தொடங்கியமை, வீட்டில் இடவசதியற்ற ஏழை மாணவர்களுக்கு இரவில் படிப்பதற்காகப் பள்ளியில் மின்விளக்கு வசதியுடன் இடவசதி ஏற்பாடு செய்தமை, (பக். 120) பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவருமே தம் குழந்தைகள் எனக் கொண்டு இரவு நேரத்திலும் மாணவர் தம் ஐயங்களைப் போக்கி அவர்களை நன்கு படிக்க வைத்தமை, சாலை வசதிகளற்ற நிலையில் இடர்ப்பாடுகளுக்கிடையே தொலைவிலிருந்து வந்து பயின்ற மாணவர்களின் துயர் துடைக்க 'மாணவர் இல்லம்' நிறுவியமை, நன்கொடை திரட்டி சமையல் பாத்திரங்கள் வாங்கித் தக்க பணியாளர்களைக் கொண்டு விடுதிக்கட்டணம் திங்கள்

ஒன்றுக்கு ரூ. 10/-க்கு மேற்படாத வகையில் மாணவர்களுக்கு உணவும், உறையுளும் அளித்தமை ஆகியன பேராசிரியர் அவர்களின் அன்புள்ளத்தின் அடிப்படையில்விளைந்த அருஞ் செயல்களேயாம். மாணவர் இல்லம் உண்மையாகவே விடுதி போலில்லாமல் 'இல்லம்' போன்றே இயங்கி வந்துள்ள தனை அறிகின்றோம் (பக். 169. 173).

உலகில் சிலர் எவரோடும் கலந்து பழகாமல் தனியராக வாழ்ந்து வருவதனைக் காண்கிறோம். அவர்கள் இணைப்புப் பாலங்களைக் கட்டிக் கொள்ளாமல் தங்களைச் சுற்றித் தடுப்புச் சுவர்களைக் கட்டிக் கொள்வதே அதற்குக் காரண மாகும். பேராசிரியர் அவர்கள் துறையூரில் பணியாற்றிய போது சுற்றுப்புற ஊர்களிலுள்ள மக்களுடன் நன்கு பழகியவர். திருமணம், இறப்பு நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வார். சாதி, சமய வேற்றுமையின்றி அனை வரிடமும் பழகினார். இதனால் பள்ளி வளர்ச்சிக்கும், மாணவர் நலனுக்கும் பொது மக்களின் ஒத்துழைப்பினை அவரால் பெற முடிந்தது. (பக். 18). உள்ளூரில் செல்வாக்கு வாய்ந்த பெருமக்கள் உதவியுடன் பள்ளியில் இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்தினார். திரு. நடேச முதலியார், திரு. வீ. உலக ஊழியனார், திரு. பு. ரா. புருடோத்தம நாயுடு, திரு. சாம்பசிவ ரெட்டியார், திரு. சி. இலக்குவனார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், தவத்திரு. சித்பவாநந்த அடிகள், டாக்டர் T. S. S. இராசன், பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், டாக்டர். மு.வ., திரு. ஏ.கே. செட்டியார் முதலிய பெரு மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களைப் பள்ளிக்கு அழைத்துவந்து சொற்பொழிவுகளை நிகழ்த்தவும் செய்தார். கற்றுத்துறை போய பெருமக்களிடம் தொடர்பு கொண்டு தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப் பேராசிரியர் தெளிவாகக் கற்றறிந்துள்ளார்கள். அந்நாளில் (1941-50) திருச்சி மாவட் டத்தில் தமிழ்படித்த—வித்துவான் பட்டம் பெற்ற-தலைமை யாசிரியர் பேராசிரியர் ஒருவரே எனும் சிறப்பையும் பெற் றுள்ளார்.

தமிழ் M. A. தேர்வு எழுதுவதற்கு 'நந்திமயமாக' அமைந்த சென்னைப் பல்கலைக் கழக விதிகளைத் தொடர்ந்து போராடி, தொடர்புடையவர்களைச் சந்தித்து நியாயமான உதவிகளை நாடி இறுதியில் M.A. தேர்வு எழுது வதற்குப் பேராசிரியர் அனுமதி பெற்றதானது 'விதி'யை

மதியால் வெல்லலாம் என்பதனை விளக்குகின்றது (பக். 67-68). மேலும் எந்த ஒரு விதியும் அது பொது நலனுக்கு உறுதுணை புரியும் தன்மையை வைத்தே மதிப்பிடப் பட வேண்டும் என்பதனையும் இந்நிகழ்ச்சி எடுத்துக் கூறுகின்றது.

உலகில் ஒருவர் நல்லவராக இருந்தால் மட்டும் போதாது;வல்லவராகவும்-உலகியல் புரிந்தவராகவும்-இருக்க வேண்டுவதனைப் பேராசிரியர்அவர்களின் வாழ்க்கைநிகழ்ச்சிகள் எடுத்துக் கூறுகின்றன. சீதனப் பணத்தின் நிலைபற்றிப் பேராசிரியர் கொண்ட கருத்தும் (பக். 96), நாமக்கல் நீதிமன்றத்தில் குடும்ப வழக்குத் தொடர்பாக அவர் மேற்கொண்ட செயற்பாடுகளும்,பேராசிரியரின் உலகியல் அறிவையும், வினைத்திட்பத்தையும் விளக்குவனவாகும்.

சிறுதிறப்பட்ட நேர்வுகளில் கூட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்க மனமில்லாமை, அடுத்தவர்கள் மனம் புண்படக்கூடாது என்ற எண்ணம் அல்லது இடையூறு ஏற்படும் என்ற அச்சம் ஆகியன மெல்ல மெல்ல ஒருவருடைய நேர்மையுணர்வினை அழித்து அதன்மூலம் நம்முடைய சமுதாயத்தையே பொய்யர்கள் நிறைந்த கூட்டமாக மாற்றி வரும் நிலைமையினைக் காண்கின்றோம். ஆனால் பேராசிரியர் அவர்கள் தம் சொந்த எண்ணத்தில் எழுபவை பெரும்பாலும் சரியாக இருக்கும் (பக். 54) என்பதில் நம்பிக்கையுடையவர். துணிவையே துணையாகக் கொண்டவர். மாவட்டக் கல்வி அதிகாரியின் எண்ணப்படி பள்ளிக்கு அநுபவம் மிக்க ஒருவரைத் தலைமையாசிரியராகப் போட வேண்டுமெனத் தாளாளர் தெரிவித்ததற்குப் பேராசிரியர் அஞ்சாமல் தம் கருத்தினை உறுதியுடன் எடுத்துக் கூறியுள்ளார் (பக். 57). பேராசிரியர் தமக்குச் சரியெனப் பட்டதை அஞ்சாமல் எடுத்துரைக்கும் இயல்பினர்.

தமிழ் மொழி வளர்ச்சி குறித்தும், தமிழ்க்கலைச் சொல்லாக்கம் குறித்தும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்துகள் ‘பழமைக்கும் பழமையான தமிழ் புதுமைக்கும் புதுமையாய் வளர்ந்தோங்க’ வகைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில தமிழாக்கங்கள் வழக்கிலுள்ளவற்றுக்குச் சற்று முரண்படுமாறு உள்ளன. (எ.கா.) Play ground (ஆடுகளம்) பக். 166); Public Service Commission (பொதுப் பணி ஆணையம்) (பக். 60); Personal Assistant (தனி அலுவலர்) (பக். 107). நூலில் ஆங்காங்கே

சில எழுத்துப் பிழைகளும் உள. (எ.கா.) 10 × 2400 ச.கெ. (பக். 121); இருவர்களையும் (பக். 347) எழுத்துப் பிழைகள் அடுத்த பதிப்பில் திருத்தப் பெறுவதற்குரியன. திருத்தலப் பயணம் பற்றிய பகுதி (பக். 293-362) சற்று நீண்டுவிட்டதோ என்று தோன்றுகின்றது.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் அமைந்த இலவச நண்பகல் உணவுத்திட்டம் (பக். 117-118) முதன் முதலில் எப்போது தொடங்கப் பெற்றது என்பது குறித்துச் சில ஆண்டுகளுக்கு முன்னர் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இத்திட்டம் முதன் முதலாக சென்னை மாநகர் மேயராக விளங்கிய நீதிக் கட்சியைச் சார்ந்த திரு. தியாகராயர் அவர்களால் தொடங்கப் பெற்றது என்று தெரிவிக்கப் பட்டுள்ள கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் அவர்கள் பல்வேறு பண்பு நலன்களைக் கொண்டுள்ளதனை அறிகின்றோம். இருப்பினும் விழுப்பம் தரும் ஒழுக்கத்தினை—தனி வாழ்க்கை ஒழுக்கத்தை (morality)—உயிரினும் உயர்வாக அவர் போற்றி வருவதனையே அவரிடம் அமைந்த சீரிய பண்பு நலனாகக் கூறலாம். பொருளாசையையும், பெண்ணாசையையும் ஒருவர் சமாளிக்கக் கூடுமானால் அவர் மனத் தூய்மையுடன் வாழலாம் என்பதில் நம்பிக்கை கொண்டவர் பேராசிரியர் (பக். 28). அண்மையில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குப் (Indian Express dt. 18-11-89) பேட்டியளித்த அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். வா. செ. குழந்தைசாமி அவர்கள் நன்னெறி, ஒழுக்கம் (moral and ethical plane) பற்றிய தம்முடைய கொள்கையைக் குறிப்பிடும் போது "What I cannot achieve in Public I shall not 'do in Private' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். நம் பேராசிரியர் அவர்கள் பொதுவாழ்க்கையில்—அலுவல் துறையில்—சீரிய நெறிகளைப் பின்பற்றியதன் காரணமாகத்தான் தனி வாழ்க்கையிலும் (Private life) அவர் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளார் எனலாம். எத்தனை ஆண்டு அநுபவம் பெற்றிருப்பினும் மேற்கொண்ட பணியில் உள்ளத் தூய்மையுடன் ஈடுபடாவிடால் எதனையும் சாதிக்க இயலாது என்பதனை உளங்கொண்டவர் பேராசிரியர் அவர்கள். 'வக்கற்றவனுக்கு வாத்தி தொழில்' என்பது உலக மொழியாயினும், 'அன்புடைய மனைவி இறுதிவரை கணவனே தெய்வம் என்று வாழ்வதைப் போன்று' பேராசிரியர் அவர்

களும் தாம் மேற்கொண்ட பணியைத் தெய்வப் பணியாகக் கருதி ஓய்வுபெறும் வரையில் அதே ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தார். குறைந்த சம்பளத்திலும், இடர்ப்பாடுகள் நிறைந்த நிலையிலும் துறையூர்ப் பள்ளியில் அவர் தொடர்ந்து தலைமையாசிரியராகப் பணியாற்றியதற்கு அவர் பணியில் கொண்டிருந்த மன நிறைவுதான் (Job satisfaction) காரணமாகும். இத்தகைய பணியிலான மன நிறைவு யாவருக்கும் வாய்ப்பதில்லை. அதிகாரங்களோ, உயர்ந்த சம்பளமோ, வேறு வகையிலான ஆதாயங்களோ உள்ளபடியான மன நிறைவினை அளிப்பதில்லை. அவை யாவும் வெளித் தோற்றங்களே. இதனை அறிந்து வாழ்வோர் மிகச்சிலரே. தன் முயற்சி விளம்பரங்கள், வெற்றி ஆரவாரங்கள், ஈனச் செயல் புரிந்தேனும் தான் முந்தியிருப்பதற்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் முனைந்து 'உள்ளமும் வாக்கும் புளியம் பழமும் ஓடும் போல' வாழ்வார் தொகை பெருகி வரும் இந்நாளில், பேராசிரியர் அவர்கள் அமைதியான முறையில்—ஆரவாரமற்ற தன்மையில் மறைந்த டாக்டர். மு.வ. அவர்களைப் போன்று—எழுத்துப் பணிமூலம் அருந் தொண்டாற்றி வருவது சிறப்புக்குரியதாகும்.

பேராசிரியர் அவர்கள் நல்ல உடல் நலத்துடன் வாழ்ந்து வர என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்தம் அறிவுத்திறனும், அநுபவமும இன்றைய தலைமுறையினர்க்கு ஏற்றவாறு பயன்பட அவர்கள் மேலும் சீரிய நூல்களை வடித்துத் தர வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''குறளகம்''
சென்னை-600 108.
31—12—1989

**ஆ. பன்னீர்செல்வம்**

# நூல்முகம்

*அறிவிலே தெளிவு, நெஞ்சிலே யுறுதி,*
*அகத்திலே அன்பினோர் வெள்ளம்,*
*பொறிக ளின்மீது தனியர சாணை,*
*பொழுதெலா நினதுபே ரருளின்*
*நெறியிலே நாட்டம் கருமயோ கத்தில்*
*நிலைத்திடல் என்றிவை அருளாய்,*
*குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்*
*குலவிடு தனிப்பரம் பொருளே.*[3]

— பாரதியார்

எம்பெருமான் ஏழுமலையான் கருணை வெள்ளம் கோத்து என்னைச் சூழ்வதால் இச்சிறியேனின் உயர்நிலைப் பள்ளிக் கல்விப்பணி நினைவுக்குமிழிகள்-2 என்ற தலைப்பில் இலக்கியமாகின்றது. நாடு விடுதலை பெறுவதற்குமுன் நம் நாட்டில் வேலை வாய்ப்புகள் மிகக் குறைவு. இந்நிலையில் துறையூரில் பெருநிலக் கிழவர் ஆதரவில் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப் பெற்றது. பள்ளி தொடங்கப்பெற்ற ஆண்டும் என் ஆசிரியப் பயிற்சி நிறைவு பெற்று (சைதை ஆசிரியர் கல்லூரியில்) நான் எல்.டி. பட்டம் பெற்ற ஆண்டும் மாதம் நாள் உட்பட ஒன்றாக அமைந்தன. இறைவன் திருவுளக் குறிப்பில் பள்ளியின் முதல் தலைமையாசிரியர் பதவி எனக்கென்றே அமைந்தது. தெய்வத்தின் கட்டளைப் படி நான் அப்பதவியில் அமர்ந்தேன். கீதையின் கருத்துப்படி ஆசிரியப் பணி என் சுதர்மமாக அமைந்தது. இப்பணியி லிருந்து கொண்டே மேலும் மேலும் கற்றேன். 'கற்றனைத்து ஊறும் அறிவு' என்பது வள்ளுவம் அல்லவா? இதனால் என் தகுதியும் திறமையும் வளர்ந்தன. வளர்ச்சிக்கேற்றபடி பணி யிடங்களும் பணியின் போக்கும் மாறிமாறி அமைந்தன. ஆனால் சுதர்மம் மாறாமலே இருந்தது இறைவனின் திருவுளக் குறிப்பாகும்.

இங்ஙனம் இறையருளால் என் நீண்ட வாழ்க்கையில், ஒரு சமயம் என் அரிய நண்பர் பேராசிரியர் டாக்டர்

3. பாரதியார் கவிதைகள்-சுயசரிதை. 49

க. அன்பழகன் (கல்வியமைச்சர்) ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் 'மிஸ்டர் சுப்பு, உங்கள் புறவளர்ச்சி குன்றியதாகத் தோன்றினும் உங்கள் அகவளர்ச்சி இமயம்போல் வளர்ந்திருப்பதை யான் காண்கின்றேன்' என்று கூறியதை உன்னுகின்றேன்; மகிழ்கின்றேன். இந்நிலையில்,

ஆணவமாம் இருட்டறையில்
கிடந்தசிறி யேனை
அணிமாயை விளக்கறையில்
அமர்த்திஅறி வளித்து
நீணவமாம் தத்துவப்பொன்
மாடமிசை ஏற்றி
நிறைந்தஅருள் அமுதளித்து
நித்தமுற வளர்த்து
மாணுறஎல் லாநலமும்
கொடுத்துலகம் அறிய
மணிமுடியும் சூட்டியஎன்
வாழ்முதலாம் பதியே
ஏணுறுசிற் சபையிடத்தும்
பொற்சபையின் இடத்தும்
இலங்குநடத் தரசேஎன்
இசையும் அணிந் தருளே.[4]

என்ற அருட்பிரகாச வள்ளலாரின் திருவாக்கும் நினைவில் குமிழியிடுகின்றது, பணியிலிருந்து ஓய்வுபெற்ற நிலையிலும் ஆய்வுப் பணியில் ஊக்கத்துடன் கற்பதிலும் கற்ற அறிவின் ஒளியில் எழுதுவதிலும் ஈடுபடுத்திய கருணாநிதியாகிய இறைவனின் கருணைப்பெருக்கினை எண்ணி எண்ணிக் களிக்கின்றேன். சிறியேனின் வரலாறு தன்வரலாறு இலக்கியமாக மலர்ந்தது அருட்பெருஞ்சோதியின் தனிப்பெருங் கருணையினாலாகும்.

என் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி (இரண்டாம் பகுதி) வெளிவருமா? என்று எண்ணித் தவித்துக் கொண்டிருந்த நிலையில் எம்பெருமானின் கருணையினால் கருணாநிதியின் தமிழக அரசு சிறிது நிதி உதவியது. முட்டுவழியில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லையாயினும் இறையருளால் நூல் வெளிவருகின்றது. நினைவுக்குமிழிகள்-2 என்ற இந்

---

4. திருவருட்பா - ஆறாம்திருமுறை - அருள்விளக்க மாலை-77.

நூல் துறையூரில் ஒன்பதாண்டுகள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபோது அமைந்த வாழ்க்கை குமிழிகளாக அமைந்திருப்பது. இந்த நூல் வெளிவருவதற்குச் சிறிது நிதி உதவிய தமிழக அரசுக்குத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின்மூலம் என் இதயங் கனிந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய திரு. **ஆ. பன்னீர் செல்வம்** 16 ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய நண்பர். 'உடன் பிறப்பில்லா உடம்புபாழ்' என்ற பழமொழி உடன்பிறப் பின்றி ஒரேமகனாகப் பிறந்த அடியேனுக்குப் பல அன்பர்கள் இறையருளால் தம்பிகளாக அமைந்து எனக்கு ஆன்மிகப் பலத்தைத் தந்து கொண்டுள்ளனர். 'தம்பியுடையான் பகை(டை)க்கு அஞ்சான்' என் பொன்மொழிக்கு இலக்கண மாக அமைந்து நேர்மையான ஆதரவாளராக (Moral supporters) இருந்து வருகின்றனர் என்றாலும் திருப்பதியி லிருந்தபோது அங்குத் தமிழ் வளர்க்கவும் (பல்கலைக் கழகத்தில்) ஒய்வுபெற்றபிறகு (அக்டோபர் 24, 1977) சென்னையில் குடியேறிய நாள்முதல் (14-1-1978) அரசு தமிழ் வளர்ச்சித்துறை ஒல்லும் வகையெல்லாம் என் சொந்த முயற்சியால் தமிழ் வளர்க்கவும் உதவி புரிந்து வருவது என் தமிழ்ப் பணிக்கு ஊக்கம் தந்து கொண்டிருப்பதை என்றும் மறக்காமல் போற்றத் தகுந்த செயலாகும்.

பெரும்பாலான அரசு ஊழியர்கள் தம்மை 'எசமானர் கள்' என்று கருதிப் பொதுமக்களுக்கு உதவியாக இருப்ப தில்லை என்பது கண்கூடு. எனினும், பாலைவனத்திலும் இடைச்சோலை (Oasis) போல், அப்பர் சுவாமிகள் மரபில் வந்தவர்களாகச் சிலர் 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்ற மனப்பான்மையுடையவர்களாக இருப் பதைக் காணாமல் இல்லை. நம்மாழ்வார் வேறோர் நோக்கத்தில்,

> தொண்டே செய்துஎன்றும்
> தொழுது வழியொழுக
> பண்டே பரமன்
> பணித்த பணிவகையே[5]

என்று கூறியிருந்தாலும் இவர்கள் தம்மைச் சமூகத் தொண்டர்களாகக் கருதுபவர்கள், சமூகம் தமது வரிப்

5. திருவாய் 10.4;5

பணத்தின்மூலம் தமக்கு 'வாழ்க்கைப்படி' அளப்பதால் தாம் சமூகத் தொண்டர்கள் என்று கருதுபவர்கள். தொண்டு செய்வதைவிட பாவனைதான் முக்கியம்.

நான் அறிந்து கொண்டவரை திரு. பன்னீர்செல்வம் சுமார் 30 ஆண்டுகளாக அரசுத் துறையில் உண்மை ஊழிய ராகத் திகழ்கின்றார். குறைவேண்டிவருபவர்கட்கு இன் முகத்துடன் பேசுவது, இயன்றவரை, குறைகளைத் தீர்ப்பது, அல்லது தம் செயலுக்கு அப்பாற்பட்டிருந்தால், அதுவும் உண்மையில் குறை என்று கண்டு விட்டால், மேலிடத்திற்குப் பரிந்துரைப்பது போன்ற செயல்களால் பொதுமக்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உள்ளவராகத் திகழ்கின்றார். அறிவியல் பட்டதாரியாக இருப்பதால் எதையும் அறிவியல் நோக்கில் காண்பவராகவும் திகழ்கின்றார். வாழ்க்கையின் பிரச்சினைகளைப் புதிர்க்கதிர் (X-ray) பார்வையுடன் நோக்கித் தெளிந்து ஒல்லும் வகையெல்லாம் உதவுபவர். அமைதியான போக்குடைய இவர் நல்ல இலக்கியச் சுவைஞர்; இறையுணர்வு மிக்கவர். 'பண்புடையார் பட்டுண்டு உலகு' என்பதைத் தெளிந்தவர். இத்தகைய ஒரு பேரன்பர்—இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியது இன்நூலின் பெறற்கரிய பேறாகும்; என் பேறுமாகும். அணிந்துரை வழங்கிய அன்ப ருக்கு என் இதயம் கனிந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலை எழுதி வெளிவருவதற்குத் தோன்றாத் துணையாக நின்று உதவியவன் வேங்கடவெற்பில் குன்றின் மேல் விளக்குபோல் எழுந்தருளியிருக்கும் வேங்கட கிருஷ்ணன் என்னும் சீநிவாசன். இவனே எனக்கு உடல் நலமும் மனவளமும் எதையும் தாங்கும் இதயமும் நல்கியவன். என்னைப் பல்வேறு பாங்கில் தமிழ்ப்பணியில் ஈடுபடுத்தி வருபவன். சமய நூல்கள் வெளிவரக் கணிசமான அளவு திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின்மூலம் நிதிவழங்கத் திருவருள் புரிந்தும், பிறநூல்கள் வெளிவரத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம ஏதோ ஓரளவு நிதி கிடைக்க வழியமைத் துத் தந்தும் என்னை வாழ்வித்து 'வருபவன். இந்த வேங் கடத்து எழில்கொள் சோதியினை,

> உளன்கண்டாய், நல்நெஞ்சே!
> உத்தமன்; என்றும
> உளன்கண்டாய்; உள்ளுவார்
> உள்ளத்து உளன்கண்டாய்;

வெள்ளத்தில் உள்ளானும்,
　　வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என்று
　　ஓர்.[6]

என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தால் மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கிச் சரண் அடைகின்றேன்.


'வேங்கடம்'
AD-13 (Plot 3354)
அண்ணாநகர்
சென்னை-600 040
31-12-1989
தொ. பே. 621 15 83

ந. சுப்புரெட்டியார்


6. முதல். திருவந். 99

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | | அன்புப் படையல் | vii |
| | | அணிந்துரை | viii |
| | | நூல்முகம் | xvii |
| குமிழிகள் | | | பக்கம் |
| 65. | 1. | நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் | 3 |
| 66. | 2. | தனிக்குடும்பம் வைத்த இல்வாழ்க்கை | 13 |
| 67. | 3. | முதலாண்டு பள்ளி வரவு செலவுக் கணக்கு | 19 |
| 68. | 4. | நிர்வாகப் பொறுப்பை ஆற்றிய முறை | 25 |
| 69. | 5. | பள்ளி வளர்ச்சியில் இரண்டாம் ஆண்டு | 32 |
| 70. | 6. | இரண்டாம் ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் | 39 |
| 71. | 7. | முன்னேற்றப் பாதையில் தகுதி பெறல் | 47 |
| 72. | 8. | இரண்டாண்டுப் பணியில் கிளம்பிய ஒரு சிறு புயல் | 52 |
| 73. | 9. | தமிழ் எம்.ஏ. பட்டம் பெறுவதில் மேற்கொண்ட முயற்சிகள் | 60 |
| 74. | 10. | நான்காம் படிவம் தொடங்க முயற்சி | 74 |
| 75. | 11. | என் மைத்துனரின் குடும்ப நிகழ்ச்சிகள் | 77 |
| 76. | 12. | சுப்பிரமணியம் மருமகனைப்பற்றி அறிந்து கொண்டவை | 83 |
| 77. | 13. | சதியின் பல்வேறு வடிவங்கள் | 89 |
| 78. | 14. | சதியின் விசுவரூபம் | 99 |
| 79. | 15 | நான்காம் படிவம்-சென்னைப் பயணம் | 106 |
| 80. | 16. | மாணாக்கர் நன்மைக்கான நற்செயல்கள் | 113 |
| 81. | 17. | சுப்பிரமணியத்தின் திருவிளையாடல்கள் | 121 |
| 82. | 18. | வழக்குத் தொடர்கள் | 126 |
| 83. | 19. | வழக்கு முடிவுகள் | 137 |

| | | | |
|---|---|---|---|
| 84. | 20. | ஆலத்துடையான்பட்டிச் சொத்து | 147 |
| 85. | 21. | வக்கீல் அரங்கசாமி ரெட்டியார் | 151 |
| 86. | 22. | நிலச்சீர்திருத்தம் | 166 |
| 87. | 23. | மாணவர் இல்லம்-தோற்றம் | 169 |
| 88. | 24. | திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகம் | 173 |
| 89. | 25. | பள்ளியில் சிறப்புச் சொற்பொழிவுகள் | 176 |
| 90. | 26, | பள்ளி விழாக்கள் | 189 |
| 91. | 27. | சித்பவாநந்த அடிகள் | 205 |
| 92, | 28. | மூன்று மாநாடுகள் | 216 |
| 93. | 29. | மாவட்டக் கல்வியதிகாரிகள் | 224 |
| 94. | 30. | வளர்ப்புப் பிள்ளையின் சோகக் கதை | 235 |
| 95. | 31. | வைரிசெட்டிப் பாளையம் குடிமைப் பயிற்சி முகாம் | 244 |
| 96. | 32. | திரு. R. கிருட்டிணசாமி ரெட்டியார் (R.K.) | 255 |
| 97. | 33. | நினைவுச் சிதறல்கள் | 273 |
| 98. | 34. | திருத்தலப் பயணம் - இராமேச்சரம் | 293 |
| 99. | 35. | திருத்தலப் பயணம் - மதுரை | 303 |
| 100. | 36. | திருத்தலப் பயணம் - நெல்லை | 315 |
| 101. | 37. | திருத்தலப் பயணம் - கன்னியாகுமரி | 327 |
| 102. | 38. | திருத்தலப்பயணம் - பழநி | 342 |
| 103. | 39. | திருத்தலப்பயணம் - திருவண்ணாமலை | 352 |
| 104. | 40. | இளைஞர் அறிவுச்சுடர் | 363 |
| 105. | 41. | கவிஞன் உள்ளம் | 367 |
| 106. | 42. | காரைக்குடி - கம்பன் திருநாள் | 377 |
| 107. | 43. | எதிர்பாராத நிகழ்ச்சி | 384 |


**பின்னிணைப்புகள்**


| | | |
|---|---|---|
| 1. | குமிழியில் எழுந்த நூல்கள் | 394 |
| 2. | பொருட்குறிப்பு அடைவு | 396 |
| | பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் | 408 |

# நினைவுக் குமிழிகள்-2

"அகிலத்து உள்ளே
மெய்யாய் இருந்தது நாள்செல
நாள்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே"[1]

—பட்டினத்தடிகள்

டாக்டர். ந. சுப்புரெட்டியார்

---

1. பட்டினத்தார் பாடல்-பொது-52

## டாக்டர். ந. சுப்புரெட்டியார்

# என்பணியின் நினைவுகள்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.[2]

—திருநாவுக்கரசர்

2. அப்பர்தேவாரம் - 5,19:9

## துறையூர் வாழ்வில்

குமிழி - 65

# 1. நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்

'ஞானியார்'—மரபில் பிறந்து வளர்ந்து மேற்கல்வி பயின்ற எனக்கு இறைவன் திருவுள்ளப்படி ஆசிரியர் பணி என் வாழ்க்கைத் தொழிலாக அமைந்தது. 1941-சூன் 4 ஆம் நாள் தொடக்கம் பெற்ற பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளியில் முதல் தலைமையாசிரியராகப் பணியேற்றேன். பள்ளி 4-ஆம் தேதி தொடங்கப்பெற்றாலும் சூன் முதல் தேதியிலிருந்தே நியமனம் பெற்று பொறுப்பு தொடர்ந்தது. மாத ஊதியம் ரூ 40/- என அறுதியிடப் பெற்றது.

பெருநிலக் கிழவர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி யிலிருந்து (இந்தப் பள்ளி துறையூருக்குள் இருந்தது; நடு நிலைப்பள்ளி ஊரையொட்டி சுமார் ஒருகல் தொலைவில்— மாவட்ட நீதிமன்றத்திற்கு எதிரில்—அமைந்திருந்தது) டி.எஸ். இராமய்யா, டி.ஏ. மகாலிங்கம் என்ற இரண்டு இடை நிலை ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பள்ளியிலிருந்து விலகி ரூ 33/-மாத ஊதியத்தில் நடுநிலைப்பள்ளியில் வந்து சேர்ந்தனர். இந்தப்பள்ளியில் நான் படித்த காலத்தில்

(1930-31) தலைமையாசிரியரராக இருந்த டி.எஸ். இராச கோபாலய்யர் என்பவரே தலைமையாசிரியராக இருந்து வந்தார். இந்தப்பள்ளி வெளியுலகு அறியாமல் அரண்மனைக் குள் அடங்கிக் கிடந்த முதியவர் பெருநிலக்கிழவர் பொறுப் பில் நடைபெற்று வந்தது. இராசகோபாலய்யர் மட்டிலும் அவரைக் காணமுடியும். முதியவருக்கு இவர் அவர் வேண்டும் போது இசை விருந்து அளித்து மகிழ்விப்பார். பள்ளியின் முழுப் பொறுப்பையும் இவரிடமே விட்டிருந்தார் முதியவ ராகிய பெருநிலக் கிழவர். இந்த முதியவரைப் பார்த்துப் பேசும் பேறு பெற்றவர்கள் இந்த இராசகோபாலய்யரைத் தவிர ஜமீன் வேங்கட்டராம அய்யர், ஷராப் செல்வ முத்து வாத்தியார் (வீரசைவர்), ஓர் இஸ்லாமியர் (இவர் பெயர் நான் அறிந்து கொள்ளவில்லை) ஆகிய மூவர். இவர்களுள் இஸ்லாமியர்தான் முதியவருக்கு அமைச்சர்போல் பணி யாற்றி வந்தார். இவர் அறியாமல் அரண்மனையில் ஒரு சிறு செயல்கூட நிகழ முடியாது. அரண்மனை நிர்வாகமே இவர் ஆணைக்குள் அடங்கிக் கிடந்தது; முதியவர் இவர் கைப் பாவையாக இயங்கி வந்தார். இப்படி இயங்கி வந்ததற்குக் காரணமான இரகசியம் என்னால் அறிந்து கொள்ள முடிய வில்லை; ஊகிக்கவும் இயலவில்லை. இந்த முதியவரைப்பற்றி இந்நூலின் முதற்பகுதியில் குறிப்பிட்டிருந்தாலும் இங்கும் குறிப்பிட விரும்புகின்றேன்.

முதியவருக்கு மூன்று ஆண் மக்கள்; எல்லோருக்கும் மூத்தமகன் (பிரசன்ன வேங்கடாசலதுரை?) நான் துறை யூரில் பணியேற்பதற்கு முன்னே திருநாடு அலங்கரித்து விட்டார்; இவர் துணைவியாரும் இவருக்கு முன்னதாகவோ பின்னதாகவோ மீளாஉலகம் அடைந்து விட்டார். இவர் கட்டுப் பிறந்த ஓர் ஆண்பிள்ளை திருச்சியில் பாட்டியார் (முதிய வரின் துணைவி) அரவணைப்பில் வளர்ந்து வந்தான்.

என்ன காரணத்தாலோ முதியவருடன்வாழவிரும்பாத அவர் துணைவியார் விசயவேங்கடாசலதுரை (நடுத்துரை) முத்து வேங்கடாசலதுரை (சின்னதுரை) என்ற இருமக்களுடன் அரண்மனையை விட்டு வெளியேறி திருச்சியில் வாழ்ந்து வந்தார். நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தனக்கு, 'தன் பேரனுக்கு, தன் மக்கள் இருவருக்கு-தலா ரூ 250/-மாத வாழ்க்கை ஊதியமாகப் பெற்றுவந்தார். திருமகளை நீங்கி வந்த இருமக்களுக்கும் கலைமகளின் அருள் இருந்தமையால் அவர்கள் இளங்கலைப்பட்டங்கள் பெற்று, அதற்குமேல் சட்டக்கல்வியை முடித்துக்கொண்டு வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டிருந்தனர். விசயவேங்கடாசலதுரை திருச்சியிலும், முத்துவேங்கடாசலதுரை துறையூரிலுமாக வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தனர்.

புதிதாகத் தொடங்கப்பெற்ற நடுநிலைப்பள்ளி (பெருநிலக் கிழவர் நடுநிலைப்பள்ளி) இந்த வழக்குரைஞர்களின் பொறுப்பில் இயங்கி வந்தது. விசயவேங்கடாசலதுரை பள்ளியின் மேலாளராகவும், முத்துவேங்கடாசலதுரை அதன் தாளாளராகவும் (Correspondent) பணியாற்றிவந்தனர். இருவரும் தாம் மேற்கொண்ட தொழிலுக்கு ''அலங்கார புருஷர்களாக''—'எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போய் வருகின்றார்' என்ற உலகப் பழமொழிக்கு எடுத்துக்காட்டுகளாக—இயங்கி வந்தவர்களாக என் அறிவுக்குப் புலனாயிற்று. ஏதாவது ஒன்றிரண்டு வழக்குகளை இவர்கள் கையாண்டிருக்கலாம். இவர்தம் தந்தையார் பெருநிலக் கிழவரின் ஒளிமங்கிக் கிடந்தாலும், இவர்கள் 'பெருநிலக் கிழவரின் மக்கள்' என்ற ஒளியால் சமூகத்தில் ஓரளவு மதிப்புடன் திகழ்ந்து வந்தனர் என்று சொல்லலாம். தொழிலில் இவர்கள் இருவருக்குமே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை; கணிசமான அளவுக்கு வருவாயும் இல்லை.

இருவரும் நாணயத்திற்கு'ப் பேர்போனவர்கள் என்று சமூகத்தினரால் போற்றப்பெற்றனர் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

இவர்கள் தலைமையில் யான் பணியாற்ற வந்தபோது எனக்குப் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை என்ற இருவர் பெயர்களும் நினைவிற்கு வந்தது. கட்டபொம்மன் செந்நிற மேனியையுடையவராத லால் 'சிவத்தய்யா' என்றும், ஊமைத்துரை கருநிறமாக இருந்தமையால் 'கருத்தய்யா' என்றும் வழங்கி வந்ததாகப் படித்ததாக நினைவு. இந்த இரு துரைமார்களும் சிவப்பாக வும், கருப்பாகவும் இருந்தனர். பாஞ்சாலங்குறிச்சியைச் சார்ந்த இருவரும் பெருவீரர்கள்; மானமே உயிரினும் பெரிது என்ற கொள்கையையுடையவர்கள். ஆனால் எனக்குத் தலைவர்களாக அமைந்த பெரு நிலக்கிழவரின் மக்கள் இருவரும் பெருங்கோழைகள்; எந்த முன்னேற்றப் பாதையிலும் துணிவாக இறங்கிச் செயற்பட அஞ்சுபவர்கள். ஆனால் இவர்கள் இருவரும் மானம் காத்து வாழ்ந்தவர்கள். நேர்மை தவறாது வாழ்ந்தவர்கள். இவர்களுள் மூத்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அதன் தொடக்கக் காலத்தில் தமிழ் இளங்கலைப் பட்டத் தேர்வில் முதல் நிலையில் முதல்வராகத் தேர்ந்தவர். தமிழில் பெரும் புலமை மிக்கவர். ஆனால் நான் பழகினவரையில் எந்தவிதமான புலமைக்கூறும் எனக்குப் புலனாகவில்லை. 'அறிவோர்க்கழகு கற்று உணர்ந்து அடங்கல்' என்ற முதுமொழியின் உண்மை யையும் இவரிடம் என்னால் காண முடியவில்லை. 'ஆன்ற விந்து அடங்கிய சான்றோராகவும்' இவர் எனக்குத் தென்பட வில்லை. இஃது பிறரை எடைபோடும் 'அறிவுக் கூர்மை' என்னிடம் இல்லாமையோ அன்றி அவரிடம் 'புலமைக் கூர்மை' இல்லாமை காரணமோ என்பது துறையூருக்கு

அண்மையிலுள்ள பெருமாள் மலையில் எழுந்தருளியிருக்கும் பிரசன்ன வேங்கடாசலபதிக்குத்தான் வெளிச்சம். இவருக்கு 'உலகியலும்' தெரியாது என்பது என் கணிப்பு; பலரது அநுபவமும் இந்த முடிவுதான்.

இளையவர் முத்து வேங்கடாசலதுரை கல்வித்துறையில் ஊக்கமும் ஆர்வமும் இல்லாதவராக இருந்தாலும், சட்ட நுணுக்கம் போதாதவராக இருந்தாலும், உலகியல் அறிந்த சதுரர். இல்லாவிட்டால் பள்ளியை ஒரு வாணிகம் போல்—ஒருதொழில்போல்—நடத்த முடியுமா? வெல்லப் பிள்ளையார் செய்தானாம் ஒருவன். அதன் நைவேத்தியத்திற்கு செலவு செய்ய மனம் அவனுக்கு இல்லை. ஆனால் அவனது 'கூர்த்த மதியில்' ஓர் அற்புதமான எண்ணம் உதித்தது. பிள்ளையார் வெல்லத்தால் ஆனது என்பதை 'உணர்ந்த' அவன் அதன் தலையிலேயே கொஞ்சம் வெல்லத்தைக் கிள்ளி எடுத்து அதனையே நைவேத்தியப் பொருளாக அந்தப்பிள்ளையாருக்கு வைத்துப் படைத்தானாம்! இந்த வெல்லப் பிள்ளையார் செய்தவனைப் போன்றவர் முத்துவேங்கடாசல துரை; பள்ளியை நடத்திய விதமும் அவன் நைவேத்தியம் செய்த கதையைப் போன்றதுதான். இப்படிப் பள்ளி நிர்வாகம் அற்புதமாக- நிர்வாகத்தினர் கையைக்கடிக்காமல்- நடைபெற்றது. ஆசிரியர்களின் உழைப்பின்மீது கட்டடங்கள் கட்டப்பெற்றன; எஞ்சியிருந்த பணம் கற்பனைச் செலவுக்காகத் தயாரிக்கப் பெற்ற பற்றுச் சீற்றுகளில் மறைந்து நிர்வாகத்தினர் கையில் மூலதனமாயிற்று. அந்தக் காலத்தில் பெரும்பாலான தனியார்ப்பள்ளிகளின் வரலாறு இதுதான். பெரும்பாலான பள்ளிகளின் நிர்வாகம் ஆசிரியப் பெரு மக்களின் குருதியை அட்டைபோல் உறிஞ்சிக் கொண்டிருந்தது.

பள்ளி தொடங்கின ஒன்றிரண்டு வாரங்களில் மாணவர்கள் ஏழுமலையான் உண்டியில் பணம் குவிவதுபோல் வந்து குவிந்து கொண்டிருந்தனர்[1]. மூன்றாம் படிவத்தில் (எட்டாம் வகுப்பு) 60 பேர்கட்குமேல் சேர்ந்து விட்டனர்; முதலில் இந்த வகுப்பிற்கு வெள்ளம்போல் வந்த கூட்டம் அடங்கி ஊற்றுநீர் வருவதுபோல் வாரத்திற்கு ஒன்றிரண்டு பேர்களாக வந்து கொண்டிருந்தனர். சூலை இறுதியில் மாணாக்கரின் தொகை எண்பதை எட்டுவது போலிருந்தது. தொடக்கக்காலத்திலேயே மூன்றாம்படிவத்தில் இருபிரிவுகள் ஏற்படும் என்ற அறிகுறி தோன்றியதால், இன்னோர் ஆசிரியர் நியமிக்கப் பெற வேண்டுமே என்று என் மனம் சிந்தித்த வண்ணம் இருந்தது. அன்றைய நிலையில் இடைநிலை ஆசிரியர் போதும். ஆனால் உயர்நிலைப்பள்ளியில் என்கணித ஆசிரியராகவும்—மாணாக்கர் விடுதிக்குக் காப்பாளராகவும்—சுருங்கச் சொன்னால் எல்லாவகையிலும் என் குருநாதராகவும் இருந்த கே. இராமச்சந்திரஅய்யர் (கே. ஆர். என்ற செல்லப்பெயருடன் திகழ்ந்தவர்) என்பவர் ஜி. கிருட்டிண மூர்த்தி அய்யர் பி.ஏ., எல்.டி. (அறிவியல் ஆசிரியர்) இடைநிலை வகுப்பு ஆசிரியர்க்குரிய ஊதியத்தில் பணியாற்றுவதற்குத் தயாராக இருப்பதாகவும், அவருக்கு வாய்ப்பு கிடைக்குமா? என்றும் கேட்டு எழுதியிருந்தார். இதனைப் பள்ளி தாளாளரிடம் தெரிவித்தேன். அவரும் இரண்டு பட்டப்படிப்பு ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளியில் இருப்பது பெருமை, (அதிலும் குறைந்த ஊதியத்திற்கு வருவது அவருக்கு இரட்டை மகிழ்ச்சி) என்று கருதி அவரை நியமிக்க ஒப்புக் கொண்டார்; அவரும் விரைவில் பணியில் வந்து சேர்ந்தார்.

---

1. வெள்ளைக்கார ஆட்சியின்கீழ் நாடு இருந்தபோது தொடங்கப்பட்ட பள்ளி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தொடக்கக் காலத்தில் நான் சேர்ந்த அன்றே ஒரு தமிழாசிரியரும் வந்து சேர்ந்தார். துறையூருக்கு அண்மையிலுள்ள சிக்கத்தம்பூர் என்ற ஊரைச் சேர்ந்தவர் இவர்; வீ.சி. கிருட்டிணசாமி என்பது இவர்தம் நற்பெயர். தொடக்கத்தில் முறையான படிப்பின்றி இருபது வயதிற்குமேல் திருவையாறு சென்று அரசர் கல்லூரியில் ஐந்தாண்டுகள் படித்து வித்துவான் பட்டம் பெற்றவர். நல்ல புலமையுடையவர்; பாட்டியற்றும் ஆற்றலுடையவர். இவர் தமிழாசிரியர் பயிற்சியும் பெற்றிருந்தார். கோவைக்கருகிலுள்ள பெரியநாய்க்கன் பாளையத்தில் இராமகிருஷ்ணா மிஷன் உயர்நிலைப்பள்ளியில் (திரு.தி.சு. அவனாசிலிங்கம் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் இருந்தது.) பணியாற்றி வந்தார்; அங்கும் குறைந்த ஊதியம். தம்மூருக்கருகிலுள்ள பள்ளியில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தாலும், நான்வந்து சேருமாறு வற்புத்தி எழுதினமையாலும் இங்கு வந்து பணியேற்றார். ஆக முதலாண்டில் ஐந்துபேர்களை ஆசிரியர்களாகக் கொண்டு நடுநிலைப்பள்ளி மிகச் சிறப்பாக இயங்கியது.

நான் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பதவியேற்ற ஒன்றிரண்டு நாட்களில் நடைபெற்ற ஒரு சிறு நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது. அதையும் ஈண்டுக் குறிப்பிடுவேன். அதற்கு அடிப்படையாக இருந்த ஒன்றையும் குறிப்பிடுவது மிகவும் இன்றியமையாததாகின்றது. சிறு வயதில் பெற்றோர்கள் எனக்கு வைத்த பெயர் சுப்புரெட்டி என்பது. பெரகம்பியில் நான் திண்ணைப் பள்ளியில் பயின்ற காலத்தில் என்னுடன் போஜரெட்டி, நல்லப்பரெட்டி, பாப்புரெட்டி, முத்துரெட்டி என்ற பெயர்களையுடைய மாணாக்கர்கள் நால்வர் பயின்றனர். என் பெயரையே கொண்ட சிறுவன் ஒருவனும் வந்து சேர்ந்தான். அப்போது என்

பெயரைப் பற்றி எந்தவித எண்ணமும் எழவில்லை. திண்ணைப் பள்ளியில் இந்தப் பெயராலேயே அழைக்கப் பெற்றேன். கோட்டாத்தூர் வந்து தொடக்கப் பள்ளியில் சேர்ந்து நான்கைந்து ஆண்டுகள் பயின்றபோது கூட 'சுப்பு ரெட்டி' என்ற பெயர் என் மனத்தில் எந்தவித எண்ணத்தையும் எழுப்பவில்லை.

ஆனால் துறையூரில் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் சேரும்போது (1930-31) இப் பெயர் என் மனத்தை நெருடியது. 'வயது முதிர்ந்த கிழவன்' என்பது போன்ற வளர்ச்சியை இப்பெயர் உண்டாக்குவதாக எண்ணினேன். என்னைப் பள்ளியில் சேர்க்க வந்த என் ஆசிரியப் பெருந்தகை வி. கே. அரங்க நாத அய்யரிடம் 'ரெட்டி' என்ற சாதி குறிப்பை —பின்னொட்டை — முந்திரிக்கொட்டை போல நீட்டிக் காட்டும் பகுதியை – 'வெட்டி' விடுமாறு வேண்டினேன். அவரும் என் 'மனக்குமுறலை' நன்கு உணர்ந்து 'சுப்பு' என்ற பெயரிலேயே என்னைப் பள்ளியில் சேர்த்து விட்டார். இந்தப் பெயர்தான் கல்லூரி வாழ்விலும் சைதை ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி வாழ்விலும் பெரு வழக்காக நின்று நான் பெற்ற சான்றிதழ்களிலெல்லாம் இடம் பெற்றுத் திகழ்கின்றது.

தொடக்கத்தில் ஒரு மூன்று திங்கள் குடும்பம் இன்றி பள்ளியிலேயே ஓர் அறையில் 'மாணிபோல்' வாழும் நிலை ஏற்பட்டது. பள்ளி விட்டதும் நடராச அய்யர் விடுதியின் சிற்றுண்டிக்காக ஒருகல் தொலைவிலுள்ள ஊரைநோக்கி மிதி வண்டியில் மெதுவாகச் சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்பாகப் பல மாணாக்கர்கள் சென்று கொண்டிருந்தனர். எதிரில் ஓர் தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர் மிதி வண்டியில் வந்து கொண்டிருந்தார். நான் ஊருக்குப் புதியவனாதலால் ஒன்றிரண்டு நாட்களில் ஊரார் என்னை

அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. மிதி வண்டியில் வந்தவர் எதிரில் வந்த சில சிறுவர்களிடம் "யாரப்பா உங்கள் தலைமையாசிரியர்?" என்று வினவ, சிறுவர்கள் "சுப்பு" என்று சொல்ல. அதனைக் கேட்ட அவர் "நடராச அய்யர் இட்டிலி கடை சுப்பா? முன் குடுமி சோழியன் கடை காஃபி ஆற்றுகிற சுப்பா?" என்று நக்கலாகச் சொல்ல, மாணாக்கர்கள் 'கொல்' லென்று சிரித்துச் சென்றதைக் காண நேர்ந்தது. மிதிவண்டியை வேகமாக மிதித்து மாணாக்கர்களைத் தாண்டிச் சென்று விட்டேன். ஒரு சிலர் "ஹெட்மாஸ்டர் போகிறாரடா" என்று பேசிக் கொண்டதும் என் காதில் விழாமல் இல்லை. அன்று மறுநாளே பள்ளிலுள்ள ஆசிரியர் பெயர்ப் பதிவேட்டில் "சுப்புரெட்டியார்" என்று பெயரை மாற்றி எழுதிக் கொண்டேன். 'ரெட்டி' என்ற பின்னொட்டு (Suffix) கிழவன் உணர்ச்சியைத் தருகின்றதே என்று வெறுத்து அதனை வெட்டத் தூண்டிய என் மனம் இப்போது (1941-42) 'கிழவன்' என்ற உணர்ச்சியை விரும்பி ஏற்றதைச் சிந்திக்கின்றேன்; இதைக் குறிப்பிடும் போதே சிரிக்கின்றேன்; சிரிப்பை அடக்கவும் முடியவில்லை.

வருகிற ஆண்டு நான்காவது படிவம் (9-வது வகுப்பு) தொடங்கித் தொடர்ந்து பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்க நினைத்து நிர்வாகம். அதற்குரிய விண்ணப்பமும் கல்வித் துறைக்கு அனுப்பியது. இரண்டு 'துரைகளும்' கோடையில் ஊட்டி சென்றிருந்தபோது கோவையில் இறங்கி அப்போது பிராந்தியக் கல்வித்துறை அலுவலராக இருந்த திரு V. R. அரங்கநாத முதலியாரைப் பார்த்து நான்காவது படிவம் திறக்க அநுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். திரு. முதலியார் பிராமணரல்லாதாருக்குரிய பள்ளிகட்குச் சலுகை காட்டுவார் என்ற பெயர் பெற்றிருந்தார். இந்தப் பெயரால் மயங்கி துரைமார்கள் இருவரும் முயன்றனர்

போலும். முதலியார் கூர்த்த மதியுடைய வராதலால் இவர்களைப்பற்றி நன்கு அறிந்திருந்தார்; எடைபோட்டும் வைத்திருந்தார் இவர்கள் நிர்வாகத்திலிருந்த உயர்நிலைத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் நிலை, சம்பளத் திட்டங்கள், கட்டட வசதிகள் ஆகியவைபற்றி நன்கு அறிந்திருந்த வராதலால் 'இவர்கட்கா உயர்நிலைப் பள்ளி' என்று நினைத்து விட்டார். 'ஜமீந்தார்' என்ற பெயரிலோ, 'வழக்குரைஞர்கள்' என்ற பதவியிலோ மயங்கவில்லை. அவர் தம் அநுபவத்தில் எத்தனை ஜமீந்தார்களைப் பார்த்திருப்பார்? எத்தனை வழக்குரைஞர்கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளைக் கண்டிருப்பார்? எனவே, இவர்களது நிலை அவருடைய புதிர்க்கதிர்ப் பார்வைக்குத் (X- ray vision) தப்பவில்லை.

நடுநிலைப் பள்ளித் திறக்கப்படும் போதே (1) ஓராண்டிற்குள் பள்ளிக்காகப் பத்தாயிரம் ரூபாய் வாங்கியில் போட வேண்டும் (2) பதிவுபெற்ற குழு ஒன்று அமைத்து அதன்கீழ்ப் பள்ளி நிர்வாகம் இயங்க வேண்டும். (3) மாணாக்கர்கள் விளையாடுவதற்கு ஐந்து ஏக்கர் பரப்புள்ள ஆடுகளம் Play ground) இருத்தல் வேண்டும் (4) அரசுத் திட்டப்படி ஆசிரியர்களின் சம்பளத் திட்டங்கள் அமைதல் வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்திருந்தது கல்வித்துறை. இவற்றுள் ஒன்று கூட நிறைவேற்றப்பெறாமல் உயர்நிலைப் பள்ளியாக வேண்டும் என்று நினைத்தால் அஃது எப்படிச் சாத்தியமாகும்? ஆகவே, நான்காவது படிவம் திறக்க இசைவு தரவில்லை. தவிர முறைப்படிக் காரணங்களைக் காட்டி விண்ணப்பமும் அனுப்பப்பெறவில்லை. ஆகவே (1942-43) இல் நான்காவது படிவம் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது. நான்காவது படிவம் திறக்க இசைவு கோரி அனுப்பிய விண்ணப்பம்பற்றிய தகவலைப் பின்னரே

யான் அறிந்தேன். உயர்நிலைத் தொடக்கப்பள்ளித் தலைமை யாசிரியர் டி. எஸ். இராச கோபாலய்யரைக் கலந்தே விண்ணப்பம் அனுப்பப்பெற்றது என்பதையும் பின்னர் அறிந்தேன். 'அநுபவம் இல்லாத இளைஞன்' என என்னைப் புறக்கணித்தவர் போலும் என ஊகித்துக் கொண்டேன்.

குமிழி – 66

## 2. தனிக்குடும்பம் வைத்த இல்வாழ்க்கை

திருமண ஆகி, ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டன. இதுகாறும் தனிக் குடும்பம் நடத்திய பழக்கம் இல்லை. உணவு விடுதிகளில் உணவு, மாமனார் வீட்டு உணவு என்ற முறையில்தான் என் வாழ்க்கை பொறுப்பற்ற முறையில் நடைபெற்று வந்தது. நடுநிலைப் பள்ளியில் தலைமை யாசிரியனாகப் பணியேற்ற பிறகுகூட மூன்று மாத காலம் 'மாணிவாழ்க்கை' தான். நடுநிலைப் பள்ளியின் கட்டட அமைப்பு தமிழ் எழுத்து ட-வைப் போல இருக்கும். மேற் பக்கப் பகுதியில் மூன்று அறைகள் இருந்தன. தென்புற ஓர் அறைக்குள் ஓர் உள்ளறை இருந்தது; இதுதான் தொடக்கத் தில் தலைமையாசிரியர் அறையாக அமைந்தது. வடபுறம் ஓர் அறைக்குள் உட்புறமாக ஒரு பெரிய அறை இருந்தது. இது நிரந்தரமான நூலகத்திற்குப் பயன் பட்டது. வடபுறமுள்ள பகுதியில் உள்ள இரண்டு அறைகள் குடும்பம் நடத்துவதற் கேற்றவாறு படுக்கை அறை, கூடம், உண்ணும் அறை, சமையல் அறை என்று பிரிவு செய்யப்பெற்று இருந்தன. இந்த இரண்டு அறையை பின்புறமாகத் தாழ்வாரம் இறக்கிக் குளியலறையும், விறகு வைக்கும் இடமும் அமைந் திருந்தன. இரண்டு அறைகட்கும் பின்புறமாகப் பத்தடி

இடம் விட்டுக் கழிப்பறைகள் அமைக்கப் பெற்றிருந்தன. இவற்றைத் தவிர வடப்புறப் பகுதியில் கீழ்க் கோடியில் சிறிய உள் அறையுடன் கூடிய ஓர் அறை இருந்தது. இது ஆசிரியர்கள் தங்கும் அறையாகப் பயன்பட்டது.

குடும்பத்திற்காக அமைந்த இரண்டு அறைகளுள் மேற் புறமாக இருந்த அறை என் இல்லமாகப் பயன் பட்டது. மற்றோர் அறையில் கூடம் சற்றுப் பெரிதாக அமைந்திருந்த தால் அது வகுப்பறையாகப் பயன் படுத்தப் பெற்றது. பள்ளியிலேயே என் இல்லம் அமைந்ததாலும், எனக்கு மக்கட்பேறு ஏற்படாததாலும் குடும்ப வேலைகள் அதிக மின்றி நான் துறையூரில் வாழ்ந்த ஒன்பதாண்டுக் காலமும் ஒருநாளில் 24 மணி நேரமும் பள்ளியின் முன்னேற்றத் திலேயே கழிந்தது. தூங்கும்போது கூடவா பள்ளி முன்னேற்றம்? என்று வினவலாம். ஆம்; உண்மைதான். வெறும் புகழ்ச்சி இல்லை. என் முழுக் கவனமும் பள்ளி யைப் பற்றியே இருந்ததால் காணும் கனவுகளும் பள்ளியைப் பற்றியேதான் இருக்கும். கட்டட மேற்பார்வை ஆடுகள மேற் பார்வை போன்றவைதான் கனவிலும் வரும். பள்ளித் தேவைக்காகப் பன்முறை சின்னதுரையைப் பார்த்துக் கெஞ்சி நிற்கும் காட்சிகள் கனவிலும் வரும். ஆகவே, '24 மணி நேரமும் பள்ளி முன்னேற்றத்திலேயே என் கவனம் சென்றது' என்று நான் கூறுவதில் சிறிதும் மிகைபடக் கூறிய தாகாது. பின் வரும் குமிழிகளில் வெளிபடும் சிலசெய்தி களிலிருந்து இக் கருத்து தெளிவாகும்.

காலாண்டுத் தேர்வின்போது நான் பொட்டணம் (என் மாமனார் ஊர்; நாமக்கல் வட்டம், சேந்தமங்கலத்திற் கருகிலுள்ள ஒரு சிற்றூர்) சென்று என் மனைவியை இட்டுக் கொண்டுவந்து எனக்குரியதாகவுள்ள இல்லத்தில் குடியேறி

னேன். என் அன்னையார் கோட்டாத்தூரிலிருந்து ஒரு சில தட்டுமுட்டுச் சாமான்களுடன் சிறிது அரிசி பருப்புடன் வந்து சேர்ந்தார்கள். இரண்டு வாரத்திற்குள் என் மாமனார் பொட்டணத்திலிருந்து ஓராண்டுக்குத் தேவையான அரிசி பருப்பு இதர மளிகை சாமான்கள் உட்பட ஓர் இரட்டை மாட்டுவண்டியில் வந்து சேர்ந்தார். கோட்டாத்தூரிலிருந்து விறகு வந்தது. பாலுக்கு எப்படியோ ஏற்பாடு செய்து கொண்டேன். எந்தவிதக் கவலையுமின்றி வாழ்க்கை இனிதாக நடைபெற்றது. என் மாமனார் மேசை, நாற்காலி, ஸ்டூல், அலமாரி செய்து கொள்வதற்காகத் தம் மகளிடம் ரூ 100/- தந்துவிட்டுச் சென்றார். இஃது இக்காலத்திலுள்ளவர்கட்கு மிக்க குறைவாகத் தோன்றும். இதனைக் கொண்டு தோதகத்தி மரத்தாலான (Rose wood) ஒரு நாற்காலி கூட வாங்கமுடியாது.

சின்னதுரைக்கு வேண்டிய மரச்சாமான்களைச் செய்து கொண்டிருந்தார் ஒரு தச்சாச்சாரி. இவர் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்; துறையூருக்கு மூன்றுகல் தொலைவிலுள்ள பெருமாள் பாளையத்தைச் சேர்ந்தவர். அந்தச் சிற்றூரில் பாதிபேருக்குமேல் எல்லாச் சாதியாரிலுமே கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்கள். இவர்களுள் ரெட்டி சமூகத்தைச் சார்ந்த ஒரு சிலருக்கு இலங்கைத் தொடர்பு இருந்து வந்தது; இவர்கள் யாவரும் பெருஞ் செல்வர்களாய்த் திகழ்ந்தனர். ஒரு நாள் சின்னதுரை பங்களாவில் வேலை செய்து கொண்டிருந்த தச்சாச்சாரியைக் கூப்பிட்டு பீரோ, மேசை, நாற்காலி, ஸ்டூல்கள் செய்ய வேண்டும் என்றும் இவை தோதகத்தி மரத்தாலானவையாக இருக்க வேண்டும் என்றும் கூறினேன். பீரோ துணிகள் வைத்துக் கொள்வதற்கேற்றவாறு ஒற்றைக் கதவுடன் இருந்தால் போதுமென்றும் ஆனால் அதனுள் டிராயர் ஒன்று இருத்தல் வேண்டும் என்றும் சொன்னேன். எல்லாவற்றிற்கும் அளவுகளையும் தந்தேன்.

மறுநாள் மரக்கடைக்குச் சென்று விலை விசாரித்துக் கொண்டு கூலியுடன் ஓர் உத்தேசச் செலவுக் குறிப்புடன் (Estimate) என்னைச் சந்தித்தார். எல்லாவற்றிற்கும் ரூ 92/- போதும் என்றார். நான் ரூ 100/- ஐயும் அவரிடம் தந்து ஒரு மாதத்தில் செய்து தருமாறு சொன்னேன். இவற்றைச் செய்வதற்குப் பள்ளியிலோ வீட்டிலோ இடம் இல்லாததால் சின்னதுரை பங்களாவிலேயே செய்துகொண்டு தருவதாகக் கூறிச் சென்றார். (மிக நல்லவர்; 45 ஆண்டு கட்குப் பின்னர் அவர் பெயரை நினைவுகூர முடியவில்லை). அன்றுமே சரி, இன்றுமே சரி எந்தத் தொழிலாளியும் சொன்னபடி நடந்து கொள்ள முடிவதில்லை. ஒரு மாதம் ஆயிற்று; இரண்டாவது மாதமும் கழிந்தது. சாமான்கள் வரவில்லை. இடையில் மழைக்காலம்வேறு; அக்காலத்தில் பெருமாள் பாளையத்திற்குச் சாலை வசதிகள் சரிவர இல்லாததால் மிதிவண்டியில் வரமுடிவதில்லை; இந்த வகை ஊர்தியைத் தவிர நடுத்தர வகுப்பினருக்கும் ஏழை மக்கட்கும் வேறு வகை வாகன வசதிகள் இல்லை. சனவரியில் (1942) சாமான்கள் வந்து சேர்ந்தன. "இன்னும் கொஞ்சம் வேலை உள்ளது; நைஸ் பட்டை சீலை போட்டுத் தேய்த்து ஃபிரெஞ்சு பாலிஷ் அடித்தால் சாமான்கள் கண்ணாடிபோல் மின்னும். உங்கள் பணம் ரூ 8/- என்னிடம் உள்ளது. அது போதும் இவ்வேலைகளைச் செய்வதற்கு" என்று கூறிச் சென்றார். அதன் பிறகு அவரும் வரவில்லை; நானும் அவற்றை மறந்தேன். அந்த நிலையிலேயே இன்றும் அந்தச் சாமான்கள் என்னிடம் உள்ளன. 1980-இல் சென்னைக்கு வந்த பிறகு இன்னொரு முறை பாலீஷ் தீட்டினேன். இன்று ரூ 2500/- க்குக்கூட அதைச் செய்து கொள்ள முடியாது என்பதை அறிகின்றேன். அவை இன்று செய்தவைபோல் மிக அழகாகவே உள்ளன.

குடும்பம் வைத்த பிறகு ஓரிரு மாதங்களில் என் மைத்துனர் தம் நண்பர் A. இராமச்சந்திர ஆச்சாரியுடன் எங்களைப் பார்ப்பதற்குத் துறையூர் வந்தார். திருமணம் முடிந்து ஆறு ஆண்டுகள் கழித்து நாங்கள் குடும்பம் நடப்பதை இவர்கள் பார்க்கின்றனர். இரண்டு நாட்கள் தங்கியிருந்தனர். ஊரைச் சுற்றிப் பார்த்தனர்; பெருமாள் மலை சென்று வந்தனர். இந்தப் பயணத்தின்போது என் மைத்துனர் பணப்பையிலிருந்து என் மனைவி ரூ 50/- எடுத்துக் கொண்டாள்; தன் தமையனிடமும் இதைச் சொல்லி விட்டாள். அவர்கள் தம்மூருக்குத் திரும்பிய பிறகு ஒரு நாள் நாங்கள் வெள்ளிக் கடைக்குச் சென்று ஒரு சொம்பு, ஒரு டம்ளர், ஒரு குத்துவிளக்கு இவற்றை வாங்கி வந்தோம். அன்று ஒரு ரூபாய் வெள்ளி எடை 0 = 12 = 0 அளவாக (75 பைசா) இருந்தது. அந்தச் சாமான்கள் இன்றும் புழக்கத்தில் இருந்து வருகின்றன. இவற்றின் மதிப்பு இப்போது ரூ 2000/- இருக்கும். விளக்குமட்டிலும் இல்லுறை தெய்வத்தின் சந்நிதியில் எரிந்து கொண்டுள்ளது ஏனைய இரண்டும் பீரோவினுள் அடக்கமாயின. நாங்கள் குடும்பம் நடத்தியபோது இருந்த ஸ்டீல் சாமான்கள் பித்தளை அண்டாக்கள், போவணிகள் யாவும் பரண்மீது தூங்குகின்றன. ஏதாவது சிறப்பான நிகழ்ச்சிகள் நடை பெறும் போது அவை தலைகாட்டும்.

நான் துறையூரில் பணியாற்றியபோது சுற்றுப்புற ஊரிலுள்ள குறிப்பிட்ட பெரும் புள்ளிகளுடன் நன்கு பழகுவேன். திருமணம், இறப்பு முதலிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் தவறுவதில்லை. அன்றிலிருந்து இன்று வரை சாதிவேறுபாட்டில் நம்பிக்கை இல்லாதவனாதலால் எல்லாச்

சாதியாரிடமும் நன்கு கலந்து பழகுவேன். இதனால் பள்ளி வளர்ச்சிக்கும், மாணாக்கர்கள் நலனுக்கும் இவர்கள் பெருமளவில் பயன்பட்டனர். ஊர்ப் பெருமக்கள், வணிகப் பெருமக்கள், சேடப் பெருமக்கள் இவர்களிடம் நன்கு பழகுவேன். பள்ளி ஆண்டு விழாக்களுக்கும் சில முக்கிய நிகழ்ச்சிகட்கும் ஒருகல் தொலைவைப் பொருட்படுத்தாது பெருங் கூட்டமாகத் திரளுவர் ஊர்ப் பெருமக்கள். இவர்கள் வசதியின் பொருட்டே இத்தகைய நிகழ்ச்சிகளை ஞாயிறு அன்றே வருமாறு அமைத்துக் கொள்வேன்.

நாற்பத்தொன்பது ஆண்டுகட்குப் பிறகு இப்போது நினைத்துப் பார்க்கின்றேன். காரைக்குடியில் வாழ்ந்த போதும், திருப்பதியில் வாழ்ந்தபோதும், இப்போது சென்னையில் வாழும்போதும் பல உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளில் நடைபெறும் ஆண்டுவிழாக்கள், வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் இவற்றில் கலந்து கொண்டுள்ளேன். இவற்றில் ஆசிரியர்களின் பங்கையும் கவனிக்கின்றேன்; மாணாக்கர்களின் பங்கையும் கூர்ந்து நோக்குகின்றேன். இப்பொழுது நடைபெறும் விழாக்களில் - நகரங்களில் நடைபெறும் விழாக்களில் - அமைச்சர்கள் பங்கு பெறுகின்றனர். அரசியல் கூட்டம் வருகின்றது. கார்கள், ஆட்டோக்கள், ஸ்கூட்டர்கள் இவற்றை விழாக்கள் நடைபெறும் இடங்களில் காண முடிகின்றது. படாடோபங்கட்குக் குறைவில்லை; எல்லாம் விளம்பரம்போல் காணப்படுகின்றன. ஆனால் சிற்றூரில் வசதிக் குறைவுகளுடன் நிர்வாகத்தின் துணை சிறிதுமின்றி ஊர்ப் பெருமக்களின் நன்கொடைகளைக் கொண்டு ஆசிரியர்களின முழு ஒத்துழைப்பையும் மாணாக்கர்களின் முழு உற்சாகத்தையும் பயன்படுத்தி நடத்திய விளையாட்டுப் போட்டி விழாக்கள், பள்ளி ஆண்டு விழாக்கள், மாணவர்கள் பங்கு கொண்டு நடத்திய நாடகங்கள், ஓரங்க

நாடகங்கள் போல நான் சென்ற இடங்களில் என்னால் காண முடியவில்லை. ஆனால் காரைக்குடியில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபொழுது இப்பொறுப்பு என் வசத்திலிருந்தது; முதல்வர் முழுப் பொறுப்பையும் என்னிடம் விட்டு விட்டார். என் தோழப் பேராசிரியர் களும், பயிற்சிபெறும் மாணாக்க ஆசிரியர்களும் (Pupli - Teachers) மிகுந்த ஒத்துழைப்பை நல்கியதால் தரங் குறையாத சிறந்த விழாக்களை நடத்தி மகிழ்ந்திருக்கிறேன். இங்கு நிர்வாகமே அனைத்துச் செலவுகளையும் தாங்கிக் கொண்டதால் நன்கொடை தண்டும் பொறுப்பு இல்லா திருந்தது. அழகப்ப வள்ளலின் கொடைத்திறன் எல்லோர் வாழ்க்கையிலும் காணப்பட்டது. பிசுநாறித்தனத்தை எவரிடமும் காண முடிவதில்லை.

குமிழி 67

# 3. முதலாண்டுப் பள்ளிவரவுசெலவுக்கணக்கு

பள்ளி நடைமுறையையும் கல்வித்துறைக்கு அனுப்ப வேண்டிய கணக்கு வழக்கு முறைகளையும் ஒரு புதிய தலைமையாசிரியர் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் நிறைய உள்ளன. நாமே செய்தால்தான் அனைத்தும் அற்றுபடியாகும். 'செய்து கொண்டே கற்றல்' (Learning by doing) என்பது கல்வி கற்றல் விதிகளுள் ஒன்று. இப்படி நாமே செயலில் இறங்கினால்தான் - முயன்று தவறிக் கற்றல் முறையில் (Trial - and error method) அடிப் படையான பழக்கங்கள் எய்த வாய்ப்புகள் உண்டாகும். நானே மேற்கொண்ட செயல்களால் கற்றவை பல; பிறரது துணையால் கற்றவை சில.

பள்ளி 1941 ஜூன் 4 தேதி தொடக்கப்பெற்றது. 1941-42 (மார்ச்சு முடிய) பள்ளி வரவு செலவுக் கணக்குகள் கல்வித் துறைக்கு அனுப்ப வேண்டும். எந்தப் பள்ளிக்குப் போனாலும் பொறுமையாக சொல்லித் தர மாட்டார்கள் என்பது நான் அறிந்த உண்மை; என் அநுபவமும் அதுதான். பல நாட்கள் யோசித்துக் காட்டுப்புத்தூர் பெருநிலக்கிழவர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் சுந்தரம் அய்யருக்கு எழுதினேன். அவரும் உதவுவதாக எழுதினார்; தினசரித் தண்டல் பதிவேடு, தண்டல் பேரேடு, மாத வரவு - செலவுக் கணக்குபற்றிய பதிவேடு, பற்றுச் சீட்டு அடிக்கட்டை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வரும்படி ஆலோசனை கூறினார். நானும் இவற்றையெல்லாம் மூட்டைக்கட்டிக் கொண்டு மே மாதம் (1942) காட்டுப்புத்தூர் சென்றேன்; மாணாக்கர்களின் தேர்வு அறிக்கை தயாரித்து அறிவிப்புப் பலகையில் ஒட்டி அதன் நகல் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பிய பிறகுதான் சென்றேன்.

அந்தத் தலைமையாசிரியர் உலகியல் நன்கு அறிந்தவர். அந்தச் சின்ன ஊரில் உணவு கொள்வதற்கும் தங்குவதற்கும் வசதிகள் குறைவாக இருந்தமையால் பெருநிலக் கிழவர் திரு K. C. சப்தரிஷி ரெட்டியாருக்கு என் வருகையைத் தெரிவித்துத் தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்து விட்டார். இருந்தாலும் நானும் மரியாதைக்காக திரு சப்தரிஷி ரெட்டியாரைப் பார்த்தேன்; இரண்டாண்டுகட்கு முன்னர் திருச்சி திரு. நந்திரெட்டியாரின் பரிந்துரைக் கடிதங் கொண்டு அவரைப் பார்த்ததையும், அவரிடம் நடத்தை பற்றிய சான்றிதழ் பெற்றதையும் தெரிவித்துக் கொண்டேன். அவரும் நினைவு கூர்ந்து மகிழ்ச்சி தெரிவித்தார். ஒருநாள் மாலை காட்டுப்புத்தூரை அடைந்ததால், அன்றே இந்தக் கணக்கு வழக்குகளைத் திறமையாகப் பார்த்து வரும்

இடைநிலை ஆசிரியர் ஒருவரைத் தலைமையாசிரியர் அறிமுகம் செய்து வைத்தார். மறுநாள் காலை ஒன்பது மணி முதல் எங்கள் பணியைத் தொடங்கத் திட்டம் இட்டுக் கொண்டோம்.

திட்டமிட்டபடியே மறுநாள் பணி தொடங்கப் பெற்றது. முதலில் பள்ளிக்கு மாணவர்களின் கட்டணம் மூலம் பெற்ற வருவாய், அரைக்கட்டணச் சலுகை தந்ததால் பள்ளியின் வருவாய் இழப்பு, மாணவர்களில் சிலர் நடுவில் படிப்பைக் கைவிட்டதால் தண்டல் செய்ய முடியாத நிலையால் ஏற்பட்ட இழப்பு போன்ற புள்ளி விவரங்களைத் தயாரிக்கும் முறையில் உள்ள நெளிவு சுழிவுகளையெல்லாம் காட்டிக் கொடுத்ததுமன்றிச் சரியான புள்ளி விவரங்களை என்னையே எடுக்கச் செய்து சரிபார்த்து உதவினார். அடுத்து, பல்வேறு செலவுகளைச் சரிபார்த்து அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களை என்னைக் கொண்டே செய்யச் செய்தார். இவற்றைச் முடிக்கச் சரியாக இரண்டு நாட்கள் ஆயின. இனி, பள்ளிக் கணக்கு வழக்குகளைச் சரிபார்ப்பது ‘தண்ணீர்பட்ட பாடாக’ என்னிடம் அமைந்தது. மூன்றாம் நாள் நான் பெருநிலக் கிழவரிடமும் பள்ளித் தலைமையாசிரியரிடமும் விடை பெற்றுத் துறையூர் திரும்பினேன். இதற்கெல்லாம் வழி காட்டின இடைநிலை ஆசிரியர் பெயரைக் கூட 49 ஆண்டுகள் கழித்து இதை எழுதும்போது நினைவு கூர முடியவில்லையே என்று வருந்துகின்றேன்.

தனியார் பள்ளிக் கணக்கு வழக்குகளைச் சரி பார்க்கவும் சரி பார்த்துக் கல்வித் துறைக்கு விவரங்களைத் தணிக்கை செய்ததற்கு சான்றிதழ் வழங்கவும் தனிப்பட்ட தணிக்கையாளர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும் பள்ளி நிர்வாகம். காட்டுப்புத்தூர் உயர்நிலைப் பள்ளிக்குத்

தணிக்கையாக இருந்தவர் திருச்சி மாநகரத்தைச் சார்ந்த **நாராயணசாமி அய்யர்** என்பவர். பல்லாண்டுகளாக இவரே இப்பள்ளிக்குத் தணிக்கையாளராக இருந்து வந்திருக் கின்றார். இப்பள்ளிக்கு முதலில் ரூ 25/-ஆக தணிக்கை யாளர் சம்பளம் தொடங்கி சிறிது சிறிதாக ரூ 50/-ஆக வளர்ந்திருந்ததைத் தலைமையாசிரியர் மூலம் அறிந்து கொண்டேன். இந்தக் கணக்கு வழக்குகளை அனுப்ப வேண்டிய முறையில் தயார் செய்து 4 படிகள் தட்டச்சு செய்வதற்கு ரூ 10/- தந்து வருவதாகவும் அறிந்து கொண்டேன்.

காட்டு புத்தூரிலிருந்தபோது அரண்மனையின் ஒதுக்குப் புறமாக இருந்த, ஆனால் உள்ளேயே இருந்த விருந்தினர் அறையொன்றில் தங்க இடம் தரப் பெற்றது; குளிப் பதற்கும் உறங்குவதற்கும் இது வசதியாக இருந்தது. அதிகாலையில் காஃபி, காலையில் சிற்றுண்டி, காஃபி (அல்லது பால்), நண்பகல் நல்ல உணவு, மாலை சிற்றுண்டி காஃபி, இரவு உணவு தரப் பெற்றன. யாரோ ஓர் இளைஞன் வந்து இவற்றை அன்புடன் பரிமாறிச் சென்றான். திரு. நந்திரெட்டியாரிடம் கடிதம் பெற்று வந்தபோது காட்டிய அன்பினின்றும் இப்போது காட்டிய அன்பு சற்றுக் குறைவாகவே இருந்தது. காரணம், நான் துறையூர் ஜமீன்தாரின் ஊழியன்தானே என்று நினைத்துக் கொண்டார் போலும்!

துறையூர் திரும்பியதும் தாளாளர் துரையவர்களின் இசைவு பெற்றுத் திரு நாராயணசாமி அய்யருக்குத் தணிக்கையாளராக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்தேன். காட்டுப்புத்தூர்ப் பள்ளிக்கு உதவி வருவது போலவே துறையூர்ப் பள்ளிக்கும் உதவ வேண்டும் என்றும் கேட்டு எழுதியிருந்தேன். அவரும் ஒப்புக் கொண்டு ஒரு குறிப்பிட்ட

நாளில் அலுவலர் ஒருவரை அனுப்பி வைத்தார். அவர் பெயர் இராமநாதன் என்பது; அவர் என் வயதுடைய இளைஞராக இருந்தது பெருமகிழ்ச்சியைத் தந்தது. வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தார். ஒரு பற்றுச் சீட்டு விடாமல் சரி பார்த்தார். தினசரி தண்டல் பதிவேட்டையும் பேரேட்டையும் பற்றுச் சீட்டுகளையும் இணைத்துக்கொண்டு கணக்குகளைத் தணிக்கை செய்தது என்னை வியக்க வைத்தது. சம்பளச் சலுகைகளால் பள்ளிக்கு ஏற்பட்ட இழைப்பையும், பள்ளிப் படிப்பை நடுவில் கைவிட்ட மாணவர்களிடமிருந்து தண்டல் செய்ய முடியாத தொகையையும் தனிப்பட்ட முறையில் கணக்கிட்டு நான் கணக்கிட்டு வைத்திருந்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுச் சரியாக இருந்ததைக் கண்டு வியந்தார். தங்கள் தலைவர் நாராயணசாமி அய்யரின் அறிவுக் கூர்மை என்னிடம் தெரிவதாகப் புகழ்ந்தார். இஃது எனக்கு நாணத்தை விளைவித்தது. ஆனால் அஃது உண்மையான புகழுரை என்று எனக்கு நன்கு புரிந்தது.

இராமநாதன் தங்கியிருந்தபோது அவருக்கும் நடராச அய்யர் சிற்றுண்டி விடுதியில் சிற்றுண்டியும் முத்து அய்யர் உணவு விடுதியில் உணவுமாக வாங்கி வழங்கி உபசரித்தேன். காட்டுப்புத்தூரில் நடைபெற்ற மரியாதைக்கும் துறையூரில் நான் காட்டிய அன்புக்கும் வேறுபாடு இல்லையென்றாலும் உணவு வகையில் வேறுபாடு இருப்பதாகத் தெரிவித்தார் இராமநாதன். ''காட்டுப்புத்தூர் அன்பு பெருநிலக் கிழவருடையது; துறையூரில் அன்பு என்னுடையது'' என்றேன். ''அங்கு உணவு முதலியவை அரண்மனையைச் சார்ந்தவை; இங்கு அவை உணவுக் கடைகளைச் சார்ந்தவை'' என்று சுட்டிக் காட்டினேன். இதனால் இரு இடங்களின் தராதரத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது.

மூன்றாம் நாள் மாலை திருச்சி திரும்பிய இராமநாதன் 20 நாட்களில் கணக்குகளை நன்முறையில் தட்டச்சு செய்து மூன்று படிகளை அனுப்பி வைத்தார். இவற்றுள் இரண்டு படிகளை நன்முறையில் காக்கி நிறத்தாள் அட்டையாக வைத்துத் தைத்து ஒவ்வொரு அறிக்கையிலும் (Statement) என் கையெழுத்திட்டு, தாளாளர் கையெழுத்திற்கு அனுப்பினேன். ஜுன் 30தேதிக்குள் கணக்குகளின் இரண்டுபடி களை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பிவைத்தேன்.

காட்டுப்புத்தூரில் இருந்தபோதே தலைமையாசிரியர் அனுப்பவேண்டிய புள்ளிவிவர அறிக்கைகளை (Statistical returns) பற்றித் தெரிந்து கொண்டு வந்திருந்தேன். ஒரு சில நாட்களில் இவற்றைக் கையெழுத்துப் படிகளிலேயே தயாரித்து அனுப்பி வைத்தேன் மாவட்டக்கல்வி அதிகாரிக்கு. பத்து நாட்கள் கழித்து மாவட்டக்கல்வி அதிகாரியின் தலைமை எழுத்தர் திரு. எல். கணபதி அய்யரைச் சந்திக்க நேர்ந்தபோது "ஒரே ஆண்டில் பள்ளி நிர்வாகத்தின் நாடியைப் பிடித்துப் பார்க்க நன்கு கற்றுக்கொண்டு விட்டீர் கள்" என்று வெகுவாக என்னைப் பாராட்டினார். நானும் ஓரளவு அனைத்தையும் நன்கு கற்றுக்கொண்டு விட்டதாகப் பெருமிதமும் பூரிப்பும் அடைந்தேன். புதுப்பள்ளியாதலால் நான் எல்லாவிதப் பதிவேடுகளையும் கோப்புகளையும் (Files) தொடங்கி வைக்கவேண்டிய நிலையை உணர்ந்து பார்ப்போருக்குத்தான் நான் மேற்கொண்ட முயற்சி, பட்ட தொல்லைகள் முதலியவை தட்டுப்படும். 1946-ஆம் ஆண்டு முடிய ஆண்டொன்றுக்கு ரூ. 25/- கட்டணமும் ரூ. 10/- தட்டச்சுக்கூலியுமாகத் தந்து வந்தேன். அதற்கு மேல் ரூ. 40+10 ஆக உயர்த்தியதாக நினைவு.

குமிழி 68

## 4. நிர்வாகப் பொறுப்பை ஆற்றிய முறை

மிக்க இளமையிலேயே தலைமையாசிரியர் பொறுப்பு வந்தது ஆண்டவனின் அளவற்ற கருணை, எல்லையற்ற பேரருள்—என்பதை அப்போது உணராவிட்டாலும் இப்போது உணர்கின்றேன். நான் இளைஞனாக இருந்தமையால் இறைவனை நினையாவிட்டாலும், என்னை ஆட்கொண்ட அவன் கவனியாமல் விட்டு விடுவானா? அவன் பேரருளை நினைந்து இப்போது,

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
　　தாயுடன் அணைப்பள்;தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்;இங் கெனக்குப்
　　பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
　　புனித!நீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
　　அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.[1]

என்ற அருட்பிரகாச வள்ளலாரின் பிள்ளைச் சிறு விண்ணப்பப் பாடலை உளம் உருகிப் பாடவேண்டும்போல் தோன்றுகின்றது. இப்படி நான் வேண்டாமலேயே என்னை ஆட்கொண்டதை எண்ணி எண்ணி மெய்சிலிர்க்கின்றேன்.

எம்பெருமான் என்னை உள்நின்று இயக்கியதால் 'சென்னைக் கல்வித்துறை விதிகளைக்' (Madras Educational Rules) கரைத்துக் குடித்தேன். என்றாலும், நடைமுறை

1. திருவருட்பா—ஆறாம் திருமுறை—பிள்ளைச்சிறு விண்ணப்பம்-1.

யில்—அநுபவத்தில் தான்—ஒவ்வொரு விதியின் தாற்பரியமும் அற்றுபடியாகும் என்பது நாளடைவில்தான் எனக்குப் புரிந்தது. நான் இளமை முதலே கலையுணர்ச்சி மிக்கவன். ‘செய்வன திருந்தச் செய்’ என்ற பாட்டியின் வாக்கை மறை மொழிபோல் போற்றி அதன்படிச் செயற்படுபவன். ஆகவே, கல்வித்துறைவிதிப்படி பள்ளியில் இருக்கவேண்டிய மாணவர் சேர்க்கைப் பதிவேடு, தினசரி தண்டல் குறிப்பேடு, மாணவர் கட்டணப் பேரேடு இவற்றை நல்ல தாளில் ஒவ்வொரு பத்தி யிலும் எழுதும் பொருளுக்கேற்ப இடம் அளவிட்டு அச்சிட்டு நன்முறையில் கட்டமைத்து வைத்துக் கொண்டேன். மாதக் கணக்கேடு கைப்படியிலே வைத்துக் கொள்ளப் பெற்றது. பற்றுச்சீட்டில் மாணவரின் சேர்க்கை எண்ணைக் குறிப்பிடு வதை விட வகுப்பு எண்ணைக் குறிப்பிடுவது உகந்தது. சரி பார்க்கவும் எளிதா இருக்கும் என்று கருதிஅவ்வாறே செய்யப் பெற்றது. தொடக்கக் காலத்தில்சிந்தனையோடு செயற்படா விட்டால் கணக்கில் பல குளறுபடிகளும் சிக்கல்களும் நேரிடும் என்று கருதிக் கவனத்துடன் காரியங்கள் மேற்கொள்ளப் பெற்றன.

முதல் மூன்றாண்டுகட்கு எழுத்தர் நியமனம் செய்யப் பெறாமையால் இடைநிலை ஆசிரியர்களின் ஒத்துழைப்பைக் கொண்டே அலுவலகப் பணிகள் நடைபெற்றன. அலுவலகத் தில் ஆள் இல்லாமையால் ஆசிரியர்களே கட்டணம் தண்டலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆதலால் மாணாக்கர் களைச் சரியான சில்லறைகளுடன் வருமாறு பணிக்கப் பெற்றது. முதற்பொழுது வகுப்புக்குச் செல்பவர்கள் பத்து மணித்துளிகளில் பணம் தண்டவேண்டும்! தண்டிய பணத்தை வகுப்பு, பிரிவு, வகுப்புஎண், மாணவர் பெயர், செலுத்திய தொகை இவை அச்சிடப் பெற்ற தாளில் எழுதி தண்டல் செய்த தொகையைஒரு தனிப்புட்ட காக்கித் துணிப்பையில்

போட்டு வைத்திருப்பார். ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித் தனிக் காக்கித் துணியாலான பை உண்டு. முதல் பொழுது முடிவிற்குள் அலுவலக உதவியாள் (peon) முத்துசாமி என்பவர் வகுப்புதோறும் சென்று பணப்பையையும் தாளை யும் பெற்று வருவார். இரண்டாம் பொழுதில் ஓய்வாக இருக்கும் ஆசிரியர் வகுப்புவாரியாகப் பற்றுச் சீட்டுகளை எழுதுவார்; ஒவ்வொரு பையிலுள்ள தொகைக்குத் தாளில் உள்ள தொகைக்கும் ஒப்பிட்டுச் சரிபார்த்து கையெழுத்திட்டு விடுவார்; தண்டல் செய்த ஆசிரியரின் கையெழுத்தும் தாளில் இருக்கும்.

பணத்தைச் சரியாகக் கணக்கிட்டுநான் வாங்கி வைத்துக் கொள்வேன். பகல் பன்னிரண்டரைக்குள் பணம் எண்ணப் பெற்று வங்கிக்குப் போகத் தயாராகி விடும். அன்று மாலைக்குள் ஓய்விலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு தினசரித் தண்டல் குறிப்பேட்டில் பற்றுச்சீட்டுகள் விவரப்படி பதியப் பெறும். P. முத்துசாமி என்னும் உதவியாள் எனக்குக் கிடைத்தது நான் செய்த தவப்பயன் என்று கருதுகின்றேன். பகல் பன்னிரண்டரை மணிக்குள் தண்டல் செய்த தொகையை 10, 5, 2, 1 ரூபாய் நோட்டுகளாக வகைப் படுத்தியும்; நாணயங்களை 1ரூ, ½ரூ, ¼ரூ இரண்டணா, ஓர்அணாவாகப் பிரித்துப் பொட்டலங்களாகியும் வங்கியில் செலுத்துவதற்குத் தயாராகி விடும். துறையூர் லட்சுமி விலாஸ் வங்கியில் சேமிப்புக் கணக்கு பள்ளிப் பெயரில் செலுத்தப் பெற்றாய் விடும். நானோ வேறு யாராவது ஓர் ஆசிரியரோ செலான் எழுதி விடுவோம். செலானின் அடிக் கட்டையும் தண்டல் குறிப்பேடும் தாளாளர் கையெழுத் திற்குப் போய்விடும். அன்றாடத் தண்டல் எப்படியும் பாங்கி யில் செலுத்தப் பெற்றாய் விடும். கையிருப்பு ஒன்றுமே இராது.

சில்லறைச் செலவிற்காகத் தாளாளர் இசைவு பெற்று ரூ 25/- கையிருப்பாக இருந்தது. மாத இறுதியில் செலவு விவரங்களுடன் ஒரு பில் தயார் செய்யப் பெற்றுத் தாளாள ருக்கு அனுப்பப் பெறும். செலவுகளை அநுமதித்து அத் தொகைக்கு காசோலை தரப்பெறும். இதனால் ஒவ்வொரு மாதமும் முதல் நாளன்று ரூ 25/- கையிருப்பாகி விடும். தண்டலிலிருந்து எந்தவிதச் செலவும் செய்தல் கூடாது என்ற வரம்பை நானாக ஏற்படுத்திக் கொண்டேன். கையிருப்பாகப் பெருந்தொகை இருந்தால்தான் தவறான முறையில் கையாளப்பெறும்; கையாடவும் பெறும்; அதற்கு இடமே இருத்தல் கூடாது என்பது நானே மோத கொண்ட விதி. வாழ்க்கையில் ஒருவர் மேல் பழிசுமத்த வேண்டுமானால் ஒன்று பணம் கையாடல்; இரண்டு மகளிர் பால் கொள்ளும் நேசம். இந்த இரண்டையும் பொறுப்புள்ள ஒருவர் சமாளிக்கக் கூடுமானால் அவர் மனத்தூய்மையுடன் வாழலாம். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கலாம். எந்த விரோதிகளாலும் வீண் பழி சுமத்துவதற்குக்கூட வாய்ப் பில்லாது போய்விடும். இளம்வயதில் பொறுப்புள்ள பதவியை எனக்கு நல்கிய இறைவன் தூய்மையாக இயங்கவும் நல்ல வழிகளைக் காட்டினான்; அவற்றில் நடந்து செல்லவும் மனவன்மையைக் கொடுத்தான். அந்த இறைவனின் தாள் களை நாள்தோறும் நினைந்து வழுத்துகின்றேன்; போற்று கின்றேன்.

மாத இறுதியில் மாத வரவு-செலவுக் கணக்குகளை மாத இறுதி நாளே தயாரித்துத் தாளாளர் கையெழுத்திற்கு என் கையெழுத்துடன் அனுப்பி விடுவேன். பல்வேறு வரவு விவரங்கள் இடப்பக்கமும் செலவு விவரங்களும் வலப்பக்கமு மாக இருக்கும். செலவுப் பக்கத்தில் வங்கியிருப்பும் ரூ 25/- நிரந்தரக் கையிருப்பும் காட்டப் பெற்றிருக்கும். இந்தக் கணக்கை முடிக்கும்போது ஒரு சிறந்த கவிதையைப் படித்து

அதனால் பெறும் **'பாட்டநுபவத்தைப்'** போன்ற ஒருவித **'கணித அநுபவம்'** ஏற்படும். எங்காவது கூட்டும்போது கூட்டுப்புள்ளிகளில் தவறு நேரிடலாம்; கட்டணம் உரிய காலத்தில் செலுத்தாதலால் தண்டத் தீர்வையாக மாணாக்கர்கள் கட்டணத்துடன் கட்டிய சிறிய தொகைகள் விட்டுப் போகலாம் (விட்டுப் போகாதிருப்பதற்காகவே இத் தொகை சிவப்பு மையினால் பதியும் மரபை நுழைத்தேன்). தினசரி தண்டல் குறிப்பேட்டிலும், பின்னர்ப் பேரேட்டில் பதியும் போதும் மிக்க விழிப்புடன் பதிதல் வேண்டும். இதில் தவறுகள் நேர்ந்தால் மாத வரவு-செலவுக் கணக்கை முடிக்கும்போது **'தலைவலியை'** உண்டாக்கும்.

இன்னொரு முக்கியமான செய்தியும் உள்ளது. பற்றுச் சீட்டுகளை வைத்துக் கொண்டு பேரேட்டில் தண்டப்பெற்ற தொகை மாணவர் பெயருக்கு நேராகப் பதித்தல் வேண்டும். இந்தப் பணி திங்கள்தோறும் இருபதுதேதிக்குள் நிறைவு பெறல் வேண்டும். இப்பணி முற்றுப் பெற்றால்தான் கட்டணம் செலுத்தாதவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்க முடியும். இவர்கள் மாத இறுதிக்குள் கட்டணம் தண்டத் தீர்வையுடன் செலுத்தத் தவறினால் அடுத்தமாதத்திற்குரிய வருகைப் பதிவேட்டிலிருந்து (Attendance Register) பெயர் கள் நீக்கப்பெறும். பணப்புழக்கம் அதிகம் இல்லாத காலம்; ஏழைக் குடும்பத்திலிருந்து வரும் மாணாக்கர்களின் நிலையை அறிந்து வருந்தியிருக்கின்றேன். இந்நிலையைக் காணும்போதெல்லாம் நான் பள்ளியில் கல்வி பயின்ற காலத்தில் சிரமப்பட்டது நினைவிற்கு வரும். ஒன்று முதல் மூன்று படிவம்வரை பயிலும் மாணாக்கர்களிடமிருந்து ரூ 2.12.0 (ரூ 2.75)மும், நான்கு முதல் ஆறு படிவம் வரை பயில்பவர்களிடமிருந்து ரூ 5-4-0 (ரூ 5.25)மும் மாதாமாதம் ஒன்பது மாதம் தண்டப் பெறும். இதுதவிர ஒவ்வொரு

பருவத்திலும் (Term) கீழ்ப்படிவ மாணவர்கள் நூலகக் கட்டணம் 0-8-0, விளையாட்டுக் கட்டணம் 0-12-0; தேர்வுக் கட்டணம் 1=00 மேற்படிவ மாணவர்கள் நூலகக் கட்டணம் 0-12-0, விளையாட்டுக் கட்டணம் ரூ 1=00ம் தேர்வுக் கட்டணம் 1-8-0ஆக சிறப்புக் கட்டணங்களாகச் செலுத்த வேண்டும். கட்டணம் உரிய காலத்தில் (மாதத்தில் 15 திங்கள்) செலுத்தாதவர்கள் மாத இறுதி வரை ரூபாய்க்கு ஓரணா வீதம் (கீழ்வகுப்பு மாணவர்கள் மூன்றணாவும் மேல் வகுப்பு மாணவர்கள் ஐந்தணாவும்) தண்டத்தீர்வையாகச் செலுத்த வேண்டும். இறுதி நாளில் தண்டத்தீர்வையுடன் செலுத்தாதவர்களின் பெயர்கள் நீக்கப் பெற்றால் நுழைவுக் கட்டணம் 0-8-0 சேர்த்துக் கட்டுதல் வேண்டும். இவை மாதமுதல் நாளில் செலுத்தும் போது அந்த மாதத்திற்குரிய கட்டணமும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும். இது ஏழைமக்க்ட்குப் பெருஞ் சுமையாக இருக்கும். ஏழை மாணவர்களின் நிலைக்கு இரங்கி ஒன்றிரண்டு நாட்கள் கணக்கு முடிக்காமல் வைத்திருந்து முன் தேதி போட்டு கட்டணத்தை வாங்கிக் கொண்டு நுழைவுக் கட்டணம் இல்லாமல் செய்த சந்தர்ப்பங்களும் இருந்தன. இவ்வுதவி என்னால் செய்யப்பெற்ற உதவியாக இருக்கும். ஏழைப் பெற்றோர்களின் வாழ்த்துக்கள் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன.

முதல் மூன்று ஆண்டுகள் எழுத்தரை (Writer) நியமிக்காததால் நான்பட்ட சிரமத்தை அளவிட்டு உரைத்தல் இயலாது. இடைநிலை ஆசிரியர்களில் மிகத் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்தேன். டி.ஸ். இரமய்யாவின் எழுத்து மணிமணியாக இருக்கும்; ஆதலால் புதிதாகச் சேர்ந்த மாணாக்கர்களின் பெயர்களை நுழைவுப்

பதிவேட்டில் (Admission register) இவரைக் கொண்டு எழுதுவித்தேன். தினசரி தண்டல் பதிவேடுகளில் பதிதல், பற்றுச் சீட்டுகளைத் தயாரித்தல் இப்பணிகளை இடைநிலை வகுப்பாசிரியர்கள் அனைவருமே செய்து உதவினர். 1945இல் தான் (ஜூன் மாதம்) மாவட்ட நீதிமன்றத்தில் அமீனாவாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கே. சீநிவாச அய்யங்கார் அவர்கள் ரூ 20/- மாத சம்பளத்தில் எழுத்தராக நியமனம் பெற்றார். இதனால் அலுவலகப் பணியின் பளு சிறிது குறைந்தது. இவர் வந்த பிறகுகூட ஓராண்டு ஆசிரியர்களே கட்டணங் களைத் தண்டும் முறை கடைப்பிடிக்கப்பெற்றது. 1946-ல் மற்றோர் இளைஞர் ரூ25/-ல் உதவி எழுத்தராகப் பணியேற்றார். சீநிவாச அய்யங்காரின் சம்பளமுப் ரூ 30/-ஆக உயர்ந்தது. மாணாக்கர் தொகை பெருகிக் கொண்டே போனதால், கட்டணம் தண்டல் பணியுக் அவற்றை முறைப்படிக் கணக்கிட்டுப் பதிதல் பணியும் பெருகிக் கொண்டே வந்தன. இந்நிலையில் வி.எஸ். உமாபதி, எம். அரங்கசாமி என்ற இடைநிலை ஆசிரியர்களும், வ. இலக்குமண ரெட்டி, ச. கணபதி என்ற தமிழாசிரியர் களும் சேர்ந்தனர். இவர்கட்கு முன்னதாக P. மாத்ருபூதமும் உயர்நிலைத் தொடக்கப்பள்ளிப் பணியிலிருந்து விலகி இங்கு வந்து சேர்ந்துவிட்டார். இவர்களில் வி.எஸ்.உமாபதி மிகத் திறமைசாலி; எந்தப் பணியை நல்கினாலும் அதனை மிகத் திறமையாக நிறைவேற்றுவார். டி.ஸ். இராமய்யாவும் வி.எஸ். உமாபதியும் தொடர்ந்து தேவைப்படும் போதெல்லாம் அலுவலகப் பணியில் எனக்கு மிகவும் உதவினர்.

மேலிடங்களிலிருந்து வரும் கடிதங்களை நான்தான் பிரிப்பேன். பல்வேறு தலைப்புகளில் கோப்புகளைப் பாகுபாடு செய்து வைத்திருந்தேன். நாளாக நாளாக இத்

தலைப்புகளும் பெருகி இருபதுக்கு மேற்பட்ட தலைப்பு களாயின. கடிதங்களையெல்லாம் ஆர அமரப் படிப்பேன் பதிலிறுக்க வேண்டாத கடிதங்களின் தலையில் File (கோப்பு) என்று எழுதிவிடுவேன்; பதிலிறுக்க வேண்டிய கடிதங்களின் தலையில் Reply (பதில்) என்று எழுதிவிடுவேன். முன்னவை யாவும் கோப்புகளில் அடங்கிவிடும். பணியாள் முத்துசாமி இப்பணியினை மிக அற்புதமாகச் செய்துவிடுவான். முதல் மூன்றாண்டுகளில் நானே இந்தக் கடிதங்கட்குத் தக்க முறையில் பதில் எழுதுவேன். தாளாளர் எழுத வேண்டிய பதில்களையும் நான்தான் எழுதி அவர் கையெழுத்திற்கு அனுப்புவேன். இதனால் பள்ளி நிர்வாகப் பொறுப்புகள் நன்கு அற்றுபடியாகிவிட்டன. K. பிச்சுமணி வந்து சேர்ந்த பிறகு கடிதங்கட்குப் பதில் எழுதும் பொறுப்புகளை அவருக்கு விட்டிருந்தேன். வாசகங்கள் சரியாக அமைந் தனவவா என்பதைச் சரிபார்த்த பிறகு அசல் கடிதம் தயாராகும். தாளாளர் அலுவலகம் என்ற ஒன்று தனியாக இல்லை; எல்லாப் பொறுப்புகளும் என் தலைமீது தான் இருந்தன. இதனால் பல பள்ளிகளை முன்னிருந்து நடத்து வதற்கேற்ற அநுபவம் பெற வாய்ப்பு ஏற்பட்டது. இஃது இறைவனின் திருவுள்ளக் குறிப்பின்படியே நடைபெற்றதாக இன்றும் நினைந்து போற்றுகின்றேன்.

குமிழ் – 65

## 5. பள்ளி வளர்ச்சியில் இரண்டாம் ஆண்டு

இந்த ஆண்டு பள்ளியின் செங்குத்து வளர்ச்சியில் (Vertical growth) ஒன்றும் இல்லை; கிடைமட்ட வளர்ச்சி யில் (Horizontal growth) கணிசமான அளவு தென்பட்டது; மாணாக்கர் தொகை 250 ஐ எட்டத் தொடங்கியது. எட்டாம் வகுப்பில் ஒரு பிரிவுதான் இருந்தது. ஏழாம்

வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் இரண்டிரண்டு பிரிவுகள் உண்டாயின; தமிழாசிரியர், ஓவிய ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர்களைத் தவிர, ஐவர் தேவைப்பட்டனர். தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்த கே. சேதுராமன் என்பவர் ஓவிய ஆசிரியர்க்குரிய எல்லாவிதத் தகுதியும் பெற்றிருந்ததால், அவர் நியமனம் பெற்றார். உடற்பயிற்சி ஆசிரியருக்குத் தக்கவர் ஒருவரும் கிடைத்திலர் யாரோ ஓய்வு பெற்ற (படிப்பு முதலியவற்றில் தகுதியற்ற) ஒருவரை நியமித்துக் கொண்டோம். நானும் ஜி. கிருட்டிண மூர்த்தி அய்யரும் அறிவியலாசிரியர்களாதலால் அவருக்கு எதிர்காலம் சரியாக இராது என்று கருதி பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

புதிதாகத் தொடங்கப்பெற்ற பள்ளி வளர்ச்சியில் நன்றாக உழைக்கக் கூடிய ஒரு சில இளைஞர்கள் ஆசிரியர்க் குழுவில் இடம் பெற்றால் சிறப்பாக இருக்கும் என் என் மனம் கருதியது. எப்படியிருந்தாலும் குறைந்த ஊதியத்திற்கு எவர் வருகின்றாரோ அவரை நியமித்துக் கொள்ள வேண்டும் என்று தாளாளர் துரை கருதினார். இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்று என் மனம் சிந்தித்துக் கொண்டு இருந்தது. வகுப்புகளின் எண்ணிக்கை கூடும் என எதிர்பார்த்து, நிர்வாகத்திற்குத் தெரிவித்து விட்டு, குளித்தலை வட்டத்தில் தொடக்க நிலைப்பள்ளியொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த P. மாத்ருபூதம் என்ற என் அரிய நண்பருக்கு எழுதினேன். அவரும் தொடக்க நிலைப் பள்ளிப் பணியினின்றும் தம்மை விலக்கிக் கொண்டு துறையூர் வந்து விட்டார். இவர் முசிறியைச் சார்ந்தவர்: உயர் நிலைப் பள்ளியில் வகுப்புத் தோழர். கல்லூரிப் படிப்பில் என்னுடன் சேர்ந்து பயிலவில்லை; திருச்சி தேசியக் கல்லூரியில் சேர்ந்து பயின்று இடைநிலைத் தேர்வில் ஒரு பாடத்தில் தோல்வி

யடைந்து, அத் தேர்வை முடித்துக் கொள்ளாமல் இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்று குளித்தலை வட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் குண நலன்களையும், சுறுசுறுப்பாக இயங்கும் தன்மையையும் நன்கு அறிந்தவனாதலால் இவருக்கு எழுதி வரவழைத்தேன்.

இந்நிலையில் எதிர்பாராத விதமாக வேறொன்று நிகழ்ந்து விட்டது.

**ஒன்றை நினைக்கின்**
**அதுஒழிந்திட்டு, ஒன்றாகும்;**
**அன்றி அதுவரினும்**
**வந்துஎய்தும் ஒன்றை**
**நினையாத முன்வந்து**
**நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன்**
**செயல்[1].**

என்பது பாட்டி வாக்கல்லவா? என்னுடன் எல். டி. வகுப்பில் பயின்று தேர்வில் வெற்றி பெற்ற எஸ். சோமசுந்தர அய்யர் என்பவர் மயிலத்தில் நடைபெற்று வந்த கீழ்த் திசைக் கல்லூரி (Oriental College) யொன்றில் முதல்வராகப் பணியாற்றிய வந்தார். ஓராண்டிற்குள் அந்தப் பணி அவர் மனத்திற்கு உகந்ததாக அமையாததால் தம்மூருக்கு (கீரம்பூர்) அருகிலுள்ள துறையூர்ப்பள்ளியில் பணியாற்றலாம் என்று கருதி அப்பணியைத் துறந்து துறையூர் வந்து சேர்ந்தார். இவர் வரலாற்று ஆசிரியர். ஜி. கிருட்டிண மூர்த்தி அய்யர் இடத்தில் இவர் இடைநிலை ஆசிரியர் ஊதியத்தில் பணியை ஏற்றுக் கொண்டார். எதிர் பார்த்து வந்த P. மாத்ருபூதத்திற்குப் பெருத்த ஏமாற்றம். ஏதோ சமாதானம் சொல்லி பெருநிலக் கிழவர் உயர்நிலைத்

1. நல்வழி-27

தொடக்கப் பள்ளியில் நியமனம் பெறச் செய்து விட்டார் தாளாளர் துரை. சில வாரங்களில் ஆறாம் வகுப்பு (முதற் படிவம்) இரண்டாகப் பிரிந்ததால் இன்னோர் இடைநிலை யாசிரியர் தேவைப்பட்டார். P. மாத்ருபூதம் பணியில் அமர்ந்து விட்டதால் அவருக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. இந்நிலையில் ''எங்கிருந்தோ வந்தான்: இடைச்சாதி நான்' என்றான்'' என்று பாரதியின் கண்ணனைப் போல் 'எங்கிருந்தோ ஒருவர் வந்தார்; சின்ன துரையைச் சந்தித்தார்'. துரையும் என்னைப் பார்த்து என்னிடம் விண்ணப்பம் தருமாறு பணித்ததால் என்னிடம் வந்தார். தன் பெயர் பிச்சுமணி என்று அறிமுகப் படுத்திக் கொண்டார். சிலதாள்கள் தருமாறு கேட்டார்; தந்தேன்.

ஒரு மூலையில் அமர்ந்து 20 மணித்துளிகளில் மிக அழகாக மூன்று பக்க அளவில் தம்மைப் பற்றி ஒன்றையும் விடாமல் செய்திகளைக் குறிப்பிட்டு விண்ணப்பம் தயாரித்துத் தந்தார். அவர் நடந்து கொண்டவிதம், விண்ணப்பம் தயாரித்த முறை, விண்ணப்பத்தில் கண்ட மணிமணியான கையெழுத்து, போன்றவை என்னைக் கவர்ந்தன. புதிய பள்ளியின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகை யெல்லாம் இவர் உதவுவார் என்று தீர்மானித்துக் கொண் டேன். இவரை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டேன். என்னைப் போலவே சின்னதுரையும் இவர்பால் ஈர்க்கப் பெற்றதை அறிந்தேன். ஒன்றிரண்டு நாட்களில் மீண்டும் வந்து என்னைப் பார்க்கு மாறு பணித்தேன். K. பிச்சுமணி (அய்யர்) உப்பிலிய புரத்துக்கருகிலுள்ள பாலகிருஷ்ணம்பட்டியைச் சேர்ந்தவர்; அவ்வூரிலேயே நல்ல குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணை மணந்து கொண்டவர். இடை நிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று மேற்கல்வியைத் தொடர முடியாமல் ஆசிரியப் பயிற்சி பெற்று அங்கும் இங்குமாக

நிரந்தரமற்ற நிலையில் பணியாற்றி இங்கு நிரந்தர நிலை ஏற்படும் என்று கருதித் துறையூர் வந்து சேர்ந்தார். இவ் விவரங்களை அவரிடம் உரையாடியபோது அறிந்து கொண்டேன். பின்னர் சின்னதுரையைக் கலந்து இடை நிலைக் கல்வி பெற்றவராதலால் ரூ 35/- என இவர் ஊதியத்தை அறுதியிட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இரண்டு நாட்கள் கழித்து என்னை பார்த்த பிச்சுமணியிடம் ஆணையை நேரில் தந்தேன். அவரும் உடனே பணியிலமர்ந்து கொண்டார். பணியிலமர்ந்த நாள் தொட்டு நான் துறையூர்ப் பணியைத் துறக்கும் வரை 'பருந்தும் நிழலும் போல்' இவர் எனக்குத் தந்த ஒத்துழைப்பு, திறமையாக ஆற்றின பணிகள், இத்தனைக்கும் மேலாக அவர் என்னிடம் நடந்து கொண்ட விதம் (என்னைவிட ஏழெட்டு ஆண்டுகள் மூத்தவர்) இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளன; இவற்றை நினைக்கும் போதெல்லாம் என்னைப் பூரிப்பு அடையச் செய்கின்றன.

இந்த ஆண்டு பள்ளி வளர்ச்சியடைந்த நிலையில் பல்வேறு அவசரப் பிரச்சினைகள் எழுந்தன. சென்ற ஆண்டு கோடை விடுமுறையிலேயே திட்டமிட்டு நான்கு வகுப்பு களுக்கான இடத்திற்காகக் கீற்றுக் கொட்டகைகள் நிறுவப் பெற்றன. இவை பள்ளியையொட்டியே அமைந்தன. உட்காரும் இடம், கைப்பிடிச் சுவர்கள் எல்லாம் சீமைக் காரை (Cement) கொண்டு ஆக்கப் பெற்றன. மாலை நேரத்தில் சூரிய ஒளியால் தாக்குறா வண்ணம், தட்டிகள் பொருத்தப் பெற்றன. மாணவர்கட்குத் தனியாகவும் மாணவிகட்குத் தனியாகவும் கழிப்பறைகள் திட்டமிடப் பெற்று நிறுவப்பெற்றன. இவையெல்லாம் நன்முறையில் ஒழுங்கு பட நிறைவேறுவதற்கு நான் பட்டபாட்டை அந்த ஆண்டவன்தான் அறிவான். 'எருத்துப் புண்ணைக் காக்கை உணராது' என்பதுபோல நான் கோடை வெயிலில் உணவு

கொள்வதையும் மறந்து அலைவதைச் சின்னதுரை உணர்வ தில்லை. பாரவண்டியை இழுத்துச் செல்லும் மாடுகள் படும் பாட்டை வண்டியோட்டி நன்கு அறிவான். நிலையறிந்து வண்டியை நிழலில் நிறுத்துவான்; மாடுகட்கு நீர் விடாய் இருக்குமென்று உரிய நேரத்தில் தண்ணீர் காட்டுவான். மாலை நேரத்தில் பருத்திக் கொட்டை புண்ணாக்கு கலந்த பச்சரித் தவிட்டால் உண்பிப்பான். 'இந்த வண்டியோட்டி யின் இரக்கம் கூட இந்தச் சின்னதுரைக்கு இல்லையே' என்று என்னையே நான் நொந்து கொண்டேன். பள்ளிக் கட்டட வேலையைக் கவனிக்கும் பொறுப்பெல்லாம் தலைமை யாசிரியருடையது என்று நினைத்துக் கொள்வார். கட்டடத்திற்குரிய சாமான்களை யெல்லாம் சேர்க்கும் வேலையாக எனக்குத் தரப்பெறவில்லை. அருகிலிருந்து வேலை வாங்கும் பொறுப்பு மட்டிலும் என் தலையில் விழுந்தது. இக்கடமையை நான் மகிழ்ச்சியாகவே ஏற்றுக் கொண்டேன். நான் கவனிக்கா விட்டால் மாணவர்கள் வசதிகேற்றபடிக் கட்டடங்கள் அமையா. பணிச்சுமையைக் கண்டு நான் என்றுமே முகம் சுழித்ததில்லை. பணி யாற்றும் என் திறமையைக் கண்டு சின்னதுரை ஒரு 'பாராட்டு மொழி' கூட நல்கவில்லை என்பதுதான் என் குறை; பிறரிடமாவது என் உழைப்பைப் பாராட்டியிருக்கலாம். அதுவும் செய்யவில்லை. நான் படும் சிரமங்களையெல்லாம் பிறர்கண்டு அவர் காதில் போட்டதை அறிந்து கொண்டேன். 'பணியே பரமனின் வழிபாடு' (work is worship) என்பதை அந்தப் பரமனே எனது பிறப்புரிமையாகத் தந்ததை அடிக்கடி எண்ணும்போது மெய் மயிர் சிலிர்க்கின்றது.

மூன்று வகுப்புகட்குக் கரும்பலகையைச் சுவரிலேயே அமைத்துக் கொண்டேன். இவற்றைத்தவிர ஆறு பலகை களைக் கரும்பலகைகளாக்கி அவற்றைப் பொருத்தி நிற்கக் கூடிய அமைப்பையும் முன்னரே திட்டமிட்டுத் தயாரித்து

வைத்துக்கொண்டேன். வகுப்புகள் பெருகினால் உடனே இவை வேண்டுமல்லவா? எய்ப்பினில் வைப்பாக இருக்கட்டும் என்றே நான்கு பலகைகளைச் சேம வைப்பதாகத் தயாரித்து வைத்துக்கொண்டேன். இவை தவிர ஆறு மேசைகள், ஆறு நாற்காலிகள், ஆறு பீரோக்கள் (கண்ணாடி முகப்புடையவை நான்கு; கண்ணாடி முகப்பற்றவை இரண்டு) தயாரிக்கப் பெற்றன. நாற்காலிகள், மேசைகள் வகுப்பில் ஆசிரியர்கட்குரியவை; கண்ணாடி முகப்புடைய பீரோக்கள் நூலகத்திற்குரியவை; ஏனையவை அலுவலகத்திற்குரியவை. நூலகம் பள்ளியின் இதயம் போன்றது என்பதை நான் நன்குணர்ந்தவனாதலால், ஆண்டுதோறும் மாணாக்கர்களிடமிருந்து தண்டப்படும் கட்டணத்தைக் கொண்டே நல்ல தரமான நூல்களை வாங்கி நூல் வளத்தைப் பெருக்கிக் கொண்டே வந்தேன். இவை யாவும் ஒரு தனி அறையில் கண்ணாடி பீரோக்களில் பாதுகாப்பாக வைக்கப்பெற்றன. வாங்கிய நூல்களை நூலின் பெயர், ஆசிரியர் பெயர், பெற்ற கம்பெனி, விலை என்ற விவரங்களுடன் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்து வைத்தேன். வேறொரு பதிவேட்டில் தமிழ், ஆங்கிலம், அறிவியல், புவியியல், வரலாறு என்ற நூல்களைப் பிரிவினை செய்து குறிக்கவும், குறித்தவாறே எடுப்பதற்கு எளிதாக இருப்பதற்கு நூல்களையும் வகைப் படுத்தித் தனித்தனிக் கண்ணாடி அலமாரிகளில் வைக்க ஏற்பாடுகள் செய்தேன்.

இரண்டாம் ஆண்டே புவியியல், வரலாறு பாடங்களை நன்முறையில் கற்பிப்பதற்குத் துணையாக இருக்கும் பொருட்டுத் தேசப்படங்கள் (Maps), பூவுண்டை (Globe), போன்றவற்றை வாங்கி ஆசிரியர்கள் அமரும் அறைக்கு அருகிலுள்ள ஓர் உள் அறையில் பாதுகாப்பாக அடுக்குமுறை அமைப்பில் வைத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்தேன். அங்ஙனமே உடற்கூறுகளை நன்கு விளக்கும் முறையில்

அமைந்த விளக்கப்படங்களை (Charts) வாங்கிப் பாது காப்பாக வைத்துக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்தேன்.

மூன்று வகுப்புகட்கான இருவர் உட்காரும் சாய்வு மேசைகள், ஆறு ஆசிரியர்கட்கான மேசை நாற்காலிகள். அறிவியல் தளவாடப் பொருள்கள் வைப்பதற்கான நான்கு அலமாரிகள் போன்றவை செய்வதற்காக மானியம் பெறு வதற்கு உத்தேச விலைகள் (Estimates) தயாரித்து கல்வித் துறை இயக்குநருக்கு முறைப்படி விண்ணப்பம் அனுப்பினேன் இவையெல்லாம் கிடைக்கும் என்று நம்பியே முற்கூட்டியே எல்லாப் பொருள்களையும் தயாரித்தற்குரிய ஏற்பாடுகளைத் தொடங்கி வகுப்புத் தேவைகட்குக் குந்தகம் விளையாமல் வேண்டிய பொருள்களையெல்லாம் தயாரித்துக் கொண்டேன். எல்லாப் பொருள்களும் தேக்கு மரத்தா லானவை. மாணாக்கரிடம் தண்டப்படும் கட்டணங்களைக் கொண்டே இவையனைத்தும் தயாராயின. ஆசிரியர்க்குத் தான் முறையான, ஒழுங்கான, நியாயமான சம்பளம் இல்லையே. இதனால் கட்டணத்தால் பெறும் நிதியே மிதமிஞ்சி இருந்தது. நிர்வாகத்தின் கையைக் கடிக்கவே இல்லை.

குமிழி—70

## இரண்டாம் ஆண்டின் சிறப்பு நிகழ்ச்சிகள்

இந்த ஆண்டு பள்ளியின் நூல வளர்ச்சிக்குரிய பல செயல்கள் மேற்கொள்ளப் பெற்றன. இவற்றிலெல்லாம் என் சொந்த வேலைகள் என்பனவாகக் கொண்டு என்னை நன்கு உட்படுத்திக் கொண்டேன். அடிக்கடி சின்ன துரையைச் சந்தித்து பள்ளியின் பெயரில் ரூ. 5000/-ஐ நிலையான நிதியாகப் (Fixed Deposit) போடச் செய்தேன்.

துறையூரில் அந்தக் காலத்தில் இருந்த ஆறு நாட்டு வேளாளர் பாங்கியில் இந்தத் தொகை மூன்றாண்டுத் தவணையில் போடப்பட்டது.

நிர்வாகம் அப்போதைய பள்ளிக் கட்டடத்திற்கு எதிரில், துறையூர்—திருச்சி நெடுஞ்சாலைக்குக் கீழ்ப்புறமாகப் பத்து ஏக்கர் நிலம் வாங்கியது. எதிர்காலத்தில் பள்ளியின் பன்முக வளர்ச்சிக்கு இதுபோதும் என்ற மனநிறைவினைத் தந்தது. சின்னதுரை சிக்கனக்காரர் (கஞ்சப் பிரபு என்றுகூடச் சொல்லலாம்; பிசுநாறி என்று சொல்லும் அளவுக்குத் தகுதி பெற்றவர்); இலெளகியம் நன்கு அறிந்தவர். பங்களாவின் நாலு சுவர்களுக்குள் அடங்கியிருந்தவாறே தமக்கேற்ற அமைச்சர்களாக இருந்துவந்த இலிங்க அய்யர் (பெருநிலக் கிழவர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுள் ஒருவர்), செ. பெருமாள் ரெட்டியரர் (துறையூருக்கருகிலுள்ள வாலீஸ்பரம் என்ற சிற்றூரில் வாழ்ந்தவர்; நாள் முழுவதும் துறையூரில் நடமாடுபவர்), இன்னும் சிலர் (அவர்கள் பெயர் களை நினைவுகூர முடியவில்லை) ஆகியவர்களைக் கொண்டே அற்புதமாகச் செயலாற்றுபவர்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.[1]

என்ற திருக்குறளின் கருத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியவர். இவர்களுள் யாரோ ஒருவரின் உதவியால் நிலம் விற்கும் உளவு தெரிந்து பத்து ஏக்கர் நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கி விட்டார். இது பள்ளி முன்னேற்றத்திற்குப் பெரிய சாதனையாகும்.

அடுத்து, ஆற்றப்பெற வேண்டிய செயல்கள் பல இருந்தன. இவற்றில் இறங்குவதற்கு முன்னர் மாவட்டக்

1. குறள்-517 (தெரிந்து வினையாடல்)

கல்வியதிகாரியின் அலுவலகத்தில் தலைமை எழுத்தராகப் பணிபுரிந்த எல். கணபதி அய்யரைச் சந்தித்துப் பள்ளி முன்னேற்றத்தில் உதவுமாறு வேண்டினேன். இவர் கையூட்டு வாங்குவார்; வற்புறுத்தி வாங்குவதில்லை. நாமே தந்தால் மகிழ்வுடன் வாங்கிக் கொள்வார். "உங்கள் தாளாளருக்கு ஒன்றும் தெரியாது. அவர் 'ஸ்பேட் ராஜா' போன்றவர். நீங்கள் அடிக்கடி வாருங்கள்; உற்சாகமான இளைஞர்போல் காணப்படுகின்றீர்கள். நீங்கள்தான் பள்ளியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்த வேண்டும். சங்கோசப்படாமல் அடிக்கடி வாருங்கள்" என்று அன்புடன் கூறினார். நிர்வாகத்தின் இசைவு பெற்றுக் காகித உறையில் 'அழைப்பு போல்' போட்டுத் தந்த ஐந்து—ஐந்து ரூபாய்த் தாள்கள் செய்த வேலையை முதன்முதலாக அன்று தான் அறிந்து கொண்டேன். இவரை L. G. பெருங்காயம் என்று பலர் சாட்டுப் பெயரிட்டு வழங்குவதுண்டு. உணவுப் பொருள்களில் பெருங்காயம் ஒன்றல்லவா?

இப்போது வந்த வேலை: மாணாக்கர்களின் இருக்கை வசதிகள்' ஆசிரியர்களின் இருக்கை வசதிகள், அலுவலகத்திற்கு வேண்டிய அலமாரிகள், மேசைகள், நாற்காலிகள் இவற்றிற்காக விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறைகள் இவற்றை அறிந்துகொள்வதற்காகவே வந்தேன். அவரும் மூன்று பேரிடம் உத்தேச விலைகள் அடங்கிய குறிப்புகளுடன் விண்ணப்பம் அனுப்புமாறு பணித்தார். அவர் சொன்ன முறைப்படியே விண்ணப்பம் தயாரித்து மூன்று பேரிடம் பெற்ற குறிப்புகளைச் சேர்த்து அனுப்பினேன். மானியம் கிடைத்துவிடும் என்ற உறுதியளித்தமையால் மரவேலையைத் தொடங்கி சாமான்களைத் தயாரிக்கும் பணியில் இறங்கினேன். சின்னதுரையின் பங்களாவில்தான் தச்சு வேலை மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

இந்த ஆண்டு (1943) பிப்பிரவரி வாக்கில் மீண்டும் கணபதி அய்யரைச் சந்தித்தேன். நான்காம் படிவம் (ஒன்பதாம் வகுப்பு) தொடங்குவதற்கான விண்ணப்பம் அனுப்பப் போவதாகத் தெரிவித்தேன். பத்தாயிரம் ரூபாயில் ஐந்தாயிரம் பாங்கியில் போட்டதையும் மீதி ஐயாயிரம் விரைவில் போடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள படுகின்றன என்பதையும் தெரிவித்தேன். பத்து ஏக்கர் நிலம் வாங்கிவிட்டதையும் சுட்டிக் காட்டினேன். பதிவு செய்யப் பெற்ற குழு (Registered body) அமைப்பதில் சிந்தித்து வருவதாகவும் குறிப்பிட்டேன். இந்தச் செய்திகளை அறிந்த அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இவற்றையெல்லாம், நினைந்து விண்ணப்ப நகல் தயாரிப்பதில் சில யோசனை களைச்சொன்னார். துறையூர் திரும்ப வந்து கணபதி அய்யர் சொன்ன யோசனைகளைத் தெரிவித்தேன். விரைவில் விண்ணப்ப நகல் தயாரித்துவருவதாகவும் தெரிவித்தேன். இதில் இவ்வளவு சிரமங்கள் இருப்பதை முதன் முதலாக இப் போதுதான் அறிந்தார் சின்னதுரை. 'பெருநிலக்கிழவர்' என்ற பெயரொளியில் ஒன்றும் நடைபெறாது; கடைப்பிடிக்க வேண்டிய நடை முறை வேறு என்பதை இப்போதுதான் அவர் புரிந்து கொண்டார்.

பள்ளித் தலைவர்கள் இருவரும் வழக்குரைஞர்கள்; குழு அமைக்கும் முறையை அவர்கள் அறிவார்கள் என்று நான் நினைத்திருந்தேன். சில பள்ளிகளை நெருங்கி 'நகல்கள்' கொண்டுவருமாறு பணித்தபோதுதான் இவர்தம் 'சட்ட நுணுக்கம்' பெரிய வட்டம் என்பது எனக்குப் புரிந்தது. 'அறி தோறும் அறியாமை கண்டற்றால்'[2] என்று வள்ளுவர் சொன்னார். நடைமுறைப் பள்ளி நிர்வாகத்தில் நாளாக நாளாக அநுபவம் வளர்வதையும், பல்லாண்டுகள் வழக்

2. குறள்-1110 (புணர்ச்சி மகிழ்தல்)

குரைஞராக அநுபவம் இருந்தும், நடைமுறையில் குழு பற்றிய செய்தி விவரம் கூட அறியாதிருந்தமையும் எனக்குப் புலனாயிற்று. ஒருகால் தாம் பிறரை நாடினால் 'இஃதுகூட அறியாதவர் ஒரு வக்கீலா!' என்று நினைப்பார்களோ என்று கருதித்தானோ பிறரை அணுகவில்லை போலும்' என்று நினைத்துக் கொண்டேன். சட்ட நூல்களில் கூட இஃது இருக்குமிடம் அறியார் போலும் என்று என் இளைஞனின் மனம் எண்ணியது.

குழு பதிவாவதுபற்றிக் கணபதி அய்யரிடம் யோசனை கேட்டேன். ''உங்கள் பள்ளி மேலாளரும் ளாளரும் வழக்குரைஞர்களாயிற்றே. அவர்களுக்குத் தெரியாதா என்ன?'' என்று சொல்லி ஒருபக்க வாயோரப் புன்முறுவல் செய்தார். இஃது என் பள்ளித் தலைவர்களின் அறியாமையைக் கிண்டல் செய்வது போலிருந்தது. அவர் நினைத்தால் ஈ.ஆர். உயர் நிலைப் பள்ளி, பொன்னையா உயர் நிலைப் பள்ளி, சிரீரங்கம் உயர் நிலைப்பள்ளி பற்றிய கோப்புகளினின்று நகல் எடுத்துத் தந்திருக்கலாம். அலுவலகத்தின் பழைய கோப்புகளினின்றும் இதைத் தேடியெடுப்பது மொகஞ்சதரோ-ஹரப்பா நாகரிகத்தைக் காண மறைத்திரு ஹெராஸ் செய்த முயற்சி போலாகிவிடும். நானும் மேலும் மேலும் அவரை நச்சரிக்க நேரிடும் என்று கருதித் தம்மை அப் பொறுப்பினின்றும் நழுவச் செய்து கொண்டார். ஆனால் தானாகக் கண்டறியும் முறையைப் (Heuristic method) பின் பற்றி அறிந்து கொள்ளட்டும் என்று கருதியோ என்னவோ ''நீங்கள் ஈ.ஆர். உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் (இவர் தாளாளரும் கூட) திரு. நடராச அய்யரை நாடுங்கள்; அல்லது பொன்னையா உயர்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியரைக் கேளுங்கள்'' என்று கோடிட்டுக் காட்டி விட்டார். இதில் அவருக்கு உதவ விருப்பம் இல்லை என்பதை அவர் பேசிய முறையினின்றும் முகத்தை

ஒரு விதமாகத் திருப்பிக் கொண்டு பேசின பாவனையி லிருந்தும் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. சிரீரங்கம் உயர்நிலைப் பள்ளியை அவர் குறிப்பிடாதது அங்கு தாளாள ராக இருக்கும் 'மலை முழுங்கி மகாதேவன்' திருமாத்ருபூதம் அய்யரை அசைத்து என்னால் அறிந்து கொள்ள முடியாது என்று கருதித்தான் என்னை அங்கு அனுப்ப மனமில்லாத வராக இருந்தார் என்பதை என்னால் ஊகம் செய்து கொள்ள முடிந்தது.

பொன்னையா உயர் நிலைப் பள்ளித் தலைமை யாசிரியரை நான் அறியேன். 'இந்தப் பரந்த உலகில் தாய் தந்தையரைத் தவிர எல்லோரும் புதியவர்கள்தாம். ஒவ் வொருவரையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தால் அறிந்து கொள்ளுகின்றோம். அடிக்கடி பழகுவதால் சிலர் நமக்கு நன்றாகத்தெரிந்தவராகின்றனர். ஏதோ ஒரு சந்தர்ப்பத் தில் பழகிப் பிறகு அடிக்கடிப் பழகும்வாய்ப்பில்லாதவர்கள் சிறிதளவு அறிமுகமானவர்களாகின்றனர்' என்று என் மனம் எண்ணியது. வழக்கம்போல் துணிவையே துணையாகக் கொண்டு பொன்னையா உயர்நிலைப் பள்ளியை நோக்கிச் சென்றேன். தலைமையாசிரியரிடம் (இவர் பெயர் கூட இப் போது நினைவில்லை) என்னை அறிமுகம் செய்து கொண்டு என் கோரிக்கையை அவர் முன்வைத்தேன். நகைமுகத்துடன் என்னை வரவேற்றவிதம், குளிர்ந்த பானம் நல்கிய பாங்கு, அமைதியாகப் பேசிய முறை இவையெல்லாம் என்னை மிகவும் கவர்ந்தன. அவரும் என்னுடைய சுறுசுறுப்புத் தன்மை, துணிவான போக்கு, அவரை அண்மி நாடிய முறை இவையும் அவர் மனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். 'இன்றைக்கு இங்கு வந்த காரியம் பழம்' என்று என் மனம் சிந்தித்துக் கொண்டிருந்த போது, ''மிஸ்டர் கண்ணப்பன், நமது பள்ளி பதிவு செய்யப் பெற்ற பத்திரத்தைக் கொண்டு வாரும்'' என்று எழுத்தருக்கு ஆணையிட்டார். அவரும்

உடனே அதனைக் கொணர்ந்து மேசை மீது வைத்தார். "மிஸ்டர் கண்ணப்பன், இவர் (என்னைக் காட்டி) துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் மிஸ்டர் ரெட்டியார். இவருக்கு இந்தப் பத்திரத்தின் நகல் ஒன்று வேண்டுமாம். விரைவாக நகலொன்றைத் தட்டச்சு செய்து கொண்டுவாரும்" என்று ஆணையிட்டார். அரைமணி நேரத்தில் நகல் என் கைக்கு வந்தது. 'இன்று நரி முகத்தில் விழித்ததாக' நினைத்துக் கொண்டேன். தலைமையாசிரியரிடம் விடைபெற்றுத் திரும்பினேன். இப்பள்ளியின் பத்திரம் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப் பெற்றிருந்தது. குறைந்தது 20 பேர்கள் குழுவில் இருக்க வேண்டும் என்பதை அறிந்தேன். இது துறையூர்ப் பள்ளிக்குச் சரிப்பட்டு வராது என்று நினைத்துக் கொண்டேன். சின்னதுரையின் உள்ளத்தை நன்கு அறிந்து கொண்டவனல்லவா?

அடுத்து, நடராச அய்யரை நாடினேன். அவர் அதிகமாகப் பேசும் பழக்கமுடையவர். யாருடனோ ஏதோ 'அரட்டை' அடித்துக் கொண்டிருந்தார். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு என் கோரிக்கையை வெளியிட்டேன். அவர் என்னை 'மேலும் கீழுமாக நோட்டம் விட்டுப்' பார்த்தார். என் தோற்றத்தைக் கண்டே என்னை அளந்துவிடுவார் போல் தோன்றியது. அப்போது என்னைப் பார்த்தால் ஒரு கல்லூரி மாணவன் போல் காணப்படுவேன். இன்றைய கல்லூரி மாணவனை நினைத்துக் கொள்ள வேண்டா என்பது என் பணிவான வேண்டுகோள். நான் வயதில் குறைந்தவனாக இருந்தாலும், ஏற்றுக் கொண்ட பதவியினால், பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டிய பாங்கினால், கம்பீரமாகக் காணப்படுவேன். இதனைக் கண்டு தான் திரு நடராச அய்யர் என்னை மேலும் கீழுமாகப் பார்த்து என் உள்ளத்தை அளந்து கொண்டாரோ என்று நினைத்துக் கொண்டேன். என்னைப் பார்த்தவர் வேறு

பக்கமாகத் திரும்பி எனக்கு முன் வந்தவரிடம். 'அரட்டையைத்' தொடர்ந்தார். என்னுடைய இளமையைக் கண்டு என்னிடம் குழைந்து பேச மன மில்லாவிட்டாலும், நான் வகித்த பதவியைக் கருதியாவது பண்பாடுள்ள மரியாதையைக் காட்டியிருக்கலாம். நானே ஒரு பிராமண இளைஞனாக இருந்திருந்தால் வேறுவிதமாக நடந்து கொண்டிருப்பார் என்று என் மனம் எண்ணத்தொடங்கியது. இப்போது,

உரைமுடிவு காணான்
இளமையோன் என்ற
நரைமுது மக்கள்
உவப்ப — நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான்
சோழன்[3]

என்ற பழமொழிப் பாடலை நினைத்துக் கொண்டேன். முழுக்கை சட்டை, அங்கவஸ்திரம் இன்றி 'கோட்டும் சூட்டும் பூட்டுமாக, வந்திருந்தால் (இதுதான் நான் பள்ளியில் தலைமையாசிரியனாக மேற்கொண்ட கோலம் — பள்ளி நேரத்தில்தான் இந்த வேடம்) ஒருகால் நடராச அய்யர் என்னைக் கவனித்து இருப்பாரோ என்று நினைத்துக் கொண்டேன். நாற்காலியில் எனக்கு இருப்புக் கொள்ள வில்லை. இதனை நடராச அய்யரும் புரிந்து கொண்டார். உடனே, "ரெட்டியார்வாள், ஒரு நாள் சாவகாசமாக வாருங்கள். நீங்கள் வந்தவிஷயத்தைப்பற்றி விரிவாக விளக்கமாகப் பேசலாம். நான் உங்களுக்கு வேண்டிய வற்றையெல்லாம் செய்யக் காத்திருக்கின்றேன்' என்றார். 'வெளியே நட; உனக்கு இங்கு வேலை இல்லை' என்று சொல்லுவது போலிருந்தது அவர் பேசிய தோரணை. நான்

3. பழமொழி—6

நன்றி தெரிவித்து விடை பெற்றுத் திரும்பினேன். தந்தை பெரியார் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து இத்தகைய பிராமணக் கோட்டைகளைத் தகர்த்தெறிய வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். பொன்னையா உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரையும் இவரையும் ஒப்பிட்டுக் கொண்டே துறையூர் வந்து சேர்ந்தேன்.

குமிழி 71

## 7. முன்னேற்றப் பாதையில் தகுதி பெறல்

அல்லும் பகலும் பள்ளி முன்னேற்றத்திலேயே சிந்தித்துக் கொண்டிருக்கும்போது என்னுடைய சொந்த வளர்ச்சியிலும் கவனம் செலுத்தலானேன். அந்தக் காலத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகள், மாவட்டக் கழக (District Board) ஆட்சியின்கீழ் உள்ள பள்ளிகள் இவற்றில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் வரவு-செலவு கணக்கு பற்றிய தேர்வில் (Account Test for Subordinate Officers-Part I) வெற்றியடைந்திருக்க வேண்டும் என்ற விதி இருந்ததைக் கேள்வியுற்றேன். மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் இத்தேர்வு பற்றிக் கவலை கொள்வதில்லை. தனியார் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் பெரும்பாலோருக்கு இப்படி ஒரு தேர்வு உண்டா என்று கூடச் சிந்திப்பதில்லை. ஆனால் சதா 'துருதுரு' வென்று செயற்பட்டுக் கொண்டிருந்த என் மனம் இதில் கவனம் செலுத்தியது. இத்தேர்வு, புத்தகங்களைத் தேர்வு மண்டபத்தில் வைத்துக் கொண்டே எழுதும் தேர்வாக இருந்தது. நிதிபற்றி அரசு வெளியிட்டுள்ள சட்டப் புத்தகங்கள் (The Financial Code Part I and II) வரவு-செலவு பற்றிய விதிகளடங்கிய நூல்கள் (The Account Code-

Part II and III) போன்ற ஒரு சில நூல்கள் இத்தேர்வுக்கு உரியவை. நடைமுறையில் இவற்றிலுள்ள சில விதிகள் அநுபவத்தையொட்டி மாறிக்கொண்டே இருக்கும். அரசு இதழில் (Government Gazette) இம் மாற்றங்கள் வெளி வரும். இம்மாற்றங்கள் பற்றிய குறிப்புகளும் அரசு வெளியீடுகளாக அவ்வப்போது வெளியிடப்பெறும். ஓரணா, இரண்டணா என இவற்றின் விலைகள் அமைந்திருக் கும். அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோர் இந்த வெளியீடுகளை வாங்கி நூல்களிலுள்ள விதிகட்கு நேராக இம்மாற்ற விதிக் குறிப்புகளை கத்தரித்து ஒட்டிவைத்துக் கொள்வார்கள். புதியனவாக நூல்கள் வெளியிடப் பெறும் போது இம் மாற்றங்களையும் சேர்த்து வெளியிடப் பெறும்.

இத் தேர்வினை எழுதி வெற்றி பெறவேண்டும் என்ற உந்தல் என் மனத்தில் எழுந்தது. உரிய நூல்களில் கிடைத்த வற்றைச் சொந்தமாக வாங்கியும், கிடைக்காதவற்றை உள்ளூர் அரசு அலுவலகங்களில் பெற்றும் இத்தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். இத் தேர்வின் பழைய வினாத் தாள்கள், அவற்றிற்குரிய விடைகள், வேறு குறிப்பு கள் இந்த விவரங்களைக் கொண்ட ஒரு நூல் புத்தகச் சந்தை யில் கிடைத்தது. அதை வாங்கி வைத்துக் கொண்டு பயிலலானேன்.

இந்நிலையில் எம். கிருஷ்ணசாமி செட்டியார் என்பவர் (என்னோடு எல்.டி. பயின்று மீண்டும் நீதித்துறையில் எழுத்தராகவே பணியாற்றியவர்) துறையூர் மாவட்ட நீதி மன்றத்திற்கு மாற்றப்பெற்றிருந்தார். இவர் இத்தகைய தேர்வுகளை எல்லாம் எழுதி வெற்றி பெற்றவர். அரசுப் பணியிலிருந்ததால் இத் தேர்வின் பயனை அன்றாட அலுவலில் காண்பவர். வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் மாலை நேரங்களில் பள்ளியை நோக்கி நடையாக வருபவர். அநுபவம் மிக்க இந்த அரசு அலுவலர்

அன்றாட நடைமுறையிலுள்ள செய்திகளை விதிகளுடன் பொருத்திக் காட்டி விளக்கினதால் தேர்வுபற்றிய பல செய்திகள் என் மனத்திற்கு அற்றுபடியாயின. புத்தகத் தோடு காணப்பெறும் பல செய்திகள் என் நடைமுறை அநுபவங்களாயின. பல்வேறு சாமான்கள் பல்வேறு அரசுத் துறைகளில் வாங்க நேரிடும்போது எந்த நிலையிலுள்ள அதிகாரிகளின் இசைவு பெறவேண்டும்? என்பது போன்ற வினாக்கட்கு அநுபவசாத்தியமாகக் காட்டிக் கொடுத்தார். இதற்கு விடையிறுக்கும்போது அதிகாரியின் பதவிப் பெயர் (Designation) இதற்குச் சான்றாக நூலிலுள்ள விதிகளின் எண் குறித்துக் காட்டினால் போதும். 60 மதிப்பெண்களை யுடைய வினாத் தாளில் இம்முறை வினாக்கட்குச் சரியாக விடையிறுத்தால் 15 மதிப்பெண்கள் பெற்றுவிடலாம்.

இவற்றைத் தவிர, ஒரு பெரிய கணக்கு ஒன்று கேட்கப் பெறும். இஃது ஓர் அதிகாரி பயணப்படியைக் கணக்கிடுவது பற்றியது. இதில் இரண்டு வகை உண்டு. ஓர் அதிகாரி ஆய்வுக்காகப் பல இடங்கட்குப் போகும்போது (a)இருப்பூர்தி யில் (b) பேருந்தில் (c) குதிரை வண்டியில் போக நேரிடலாம். இந்தப் பயணத்தில் ஒவ்வொரு பயண ஊர்தியிலும் செல்லும் தொலைவு கொடுக்கப்பெற்றிருக்கும். இவர் பெரிய நகரங் களில் தங்கும் நாட்களின் எண்ணிக்கை, சிறிய ஊர்களில் தங்கும் நாட்களின் எண்ணிக்கை தரப்பெற்றிருக்கும். இந்த அதிகாரியின் பயணப் படியைக் கணக்கிட்டுக் காட்டி அவற்றிற்குரிய பல்வேறு விதிகளையும் சான்றுகளாகக் குறிப்பிடல் வேண்டும். இஃது ஒரு வகை.

மற்றொரு வகை இது. ஓர் அதிகாரி சிறிய நகரத்தி லிருந்து பெரிய நகரத்திற்கும் பெரிய நகரத்திலிருந்து சிறிய நகரத்திற்கும் மாற்றப் பெறுகின்றார். டிசம்பர் மாதத்தில் அவருடைய மகள் எங்கோ ஓரிடத்திலும் மகன் பிறிதோர்

இடத்திலுமாகக் கல்வி பெற்று வருகின்றனர். மனைவி வேறோர் இடத்தில் ஒரு பெரிய மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர்கள் மூவரும் அதிகாரி மாற்றப் பெற்ற இடத்திற்கு ஏப்ரல் மாதம் வந்து சேர்கின்றனர். ஆயிரம் கிலோ எடையுள்ள சாமான்களை அதிகாரி தன்னுடன் எடுத்துச் செல்லுகின்றார். எல்லோருக்கும் பயணப்படி உண்டு; அதிகாரி தன் பதவி நிலைக்கேற்ப இவ்வளவு எடைதான் எடுத்துச் செல்லலாம் என்ற கணக்கு உண்டு. அவற்றிற்கு மட்டிலும் வண்டிச் சத்தம் ஏற்றுக் கொள்ளப்பெறும். இந்த அதிகாரிக்குப் பயணப்படி கணக்கிடுதல் வேண்டும். கணக்கிலேயே இருப்பூர்தி முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு பயணப் படியின் விகிதம், பேருந்து குதிரை வண்டியின் கட்டணங்கள் கொடுக்கப் பெற்றிருக்கும். அதிகாரியின் தகுதிக்கேற்ப முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு பயணப் படியைக் கணக்கிடுதல் வேண்டும். ஆய்வுக்காகச் செல்லும்போது பயணப் படியின் அளவு ஒருவிதமாகவும் (ஒரு முதல் வகுப்பு என்றாற் போல) மாற்றலாகிப் போகும்போது வேறொரு விதமாகவும் ($1\frac{1}{4}$, $1\frac{1}{3}$, $1\frac{1}{2}$, $1\frac{2}{3}$ முதல் வகுப்பு என்றாற்போல) இருக்கும். அதிகாரியின் தகுதிக்கேற்ப இது மாறுபடும், இங்ஙனம் பயணப் படிகளைக் கணக்கிடும்போது சட்ட நூலிலுள்ள விதிகளையும் குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

நான் தேர்வு எழுதின போது இந்த இரண்டு வகைப் பயண வகைகளையும் இணைந்துக் கேட்கப் பெற்றிருந்தது. ஓர் அதிகாரி (தகுதி, பணியாற்றும் துறையைக் குறிப்பிட்டு) ஆய்வுப் பணியில் (Inspection) ஈடுபட்டுப் பல இடங்கட்குப் போய் கொண்டிருக்கையில் வேறோர் இடத்திற்குப் போய்ச் சேருமாறு ஆணை பிறப்பிக்கப் பெற்றது. சேர்வதற்குப்

பத்து நாட்களை அவர் எடுத்துக் கொள்ளலாம். இவருடைய மனைவி ஓரிடத்தில் மருத்துவ மனையில் கருவுயிர்ப்பதாகச் சேர்க்கப் பெற்றுள்ளாள். மக்கள் இருவரும் வெவ்வேறு இடங்களில் உயர் கல்வி பெற்று வருகின்றனர். இவருடைய பயணப்படி கணக்கிடுமாறு கேட்கப் பெற்றிருந்தது. சரியாக விடையளித்தால் 25 மதிப்பெண்கள் தரப்பெறும் என்று வினாத்தாளில் கண்டிருந்தது. இந்தப் பயணப் படிக் கணக்கில் இரண்டு வகையான பயண வகைகள் உள்ளன, முதல் வகைக்கு ஒரு முதல் வகுப்பும், இரண்டாம் வகைக்கு 1-2/3 முதல் வகுப்பும் இருப்பூர்திக் கட்டணமாக எடுத்துக் கொண்டு கணக்கிடுதல் வேண்டும். இந்தக் கணக்கைச் சரியாகச் செய்வதற்கு ஒரு மணி முப்பது மணித்துளிகள் ஆயின; 25 மதிப்பெண்கள் பெறுவது உறுதியாயிற்று. மீதி 1½ மணி நேரத்தை ஏனைய வினாக்களுக்கு விடையிறுக்க எடுத்துக் கொண்டேன். அவற்றிற்கு 25 மதிப்பெண்கள் கிடைத்திருக்கும். தேர்வில் வெற்றியடைந்தேன்.

எனக்குத் தெரிந்த பல அன்பர்கள் இத்தேர்வில் நான்கு தடவை, ஐந்து தடவை உட்கார்ந்து தோல்வியுற்றதை அறிவேன், அவர்களுள் ஒருவர் திரு. K. S. துரைசாமி ரெட்டியார் என்பவர். இவர் மாவட்டக் கழகத்தில் ஓர் ஆய்வாளராகப் (Local fund Inspector) பணியாற்றியவர்; தூரத்து உறவினர். இவர் ஐந்து முறை தேர்வில் தோல்வி யடைந்தவர். அப்போது நான் பார்க்கர் பேனாவை வைத்துப் பயன் படுத்தி வந்தேன். அவர் இந்தப் பேனாவில் தான் ஏதோ 'மர்மம்' உள்ளது; அதனால்தான் முதல் தடவையிலேயே நான்வெற்றியடைந்தேன் எனக் கருதினார். அவர் கேட்டபடி அந்தப் பேனாவை அவருக்கு அன்பளிப்பாக உரிமையாக்கினேன். பின்னர் அவர் துறையூரிலிருந்து திருச்சிக்கு மாற்றப் பெற்றதால் அவர் தேர்வின் முடிவு பற்றி

அறியக் கூடவில்லை. சில ஆண்டுகள் கழித்து அவர் திருநாடு அலங்கரித்த செய்திதான் எனக்கு எட்டியது. என் வாழ்க்கையில் இத்தேர்வினால் யாதொரு பயனும் அடையா விட்டாலும் அரசுப்பணியில் உள்ள பிரச்சினைகளை அறிந்து கொள்ள இத்தேர்வு வழி காட்டியாக அமைந்தது.

குமிழி 72

## 8. இரண்டாண்டுப் பணியில் கிளம்பிய ஒரு சிறு புயல்

நான் பணியாற்றி வந்த இரண்டாம் ஆண்டில் என் வாழ்க்கையில் பணி வாழ்க்கையில் — ஒரு சிறு புயல் கிளம்பியது. இறையருளாலும் சில பெரியோர்களின் தலையீட்டாலும் அஃது அடங்கியது. அதனை இந்தக் குமிழியில் வெளியிட எண்ணுகின்றேன். சோதிடர்கள் ஒருவர் வாழ்க்கையில் நேரிடும் இடர்ப்பாடுகட்கும் துன்பங்கட்கும் தொல்லைகட்கும்; நல்ல சூழ்நிலை ஏற்பட்ட ஒருவர் முன்னேற்றப்பாதையில் நடைபோட்டுக் கொண்டு செல்வதற்கும் நற்கோள்கள் தீயகோள்கள் இவை இருக்கும் இடம், பார்வையின் கோணங்கள் இவற்றின் அடிப்படையில் பலன்கள் சொல்வர்; காரணங்களையும் விளக்கிக் கூறுவர். சில சமயம் கோள்கள் நிலைகளையறிந்து பரிகாரம் செய்ய வேண்டும் என்பர். சோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் பரிகாரங்களையும் தவறாது செய்வர்.

நான் துறையூரில் பணியாற்றிய தொடக்கக் காலத்தில் கல்வியுலகில் கோள்களின் நிலை இவ்வாறு இருந்தது. திருச்சியில் மாவட்டக் கல்வி அதிகாரி சி. இரகுநாதன்; அவருக்குத் தனி அலுவலர் எஸ் வீராசாமி பக்தர் தலைமை எழுத்தர் எல். கணபதி அய்யர் கோவையில் மண்டலப்பள்ளி

ஆய்வாளர் (Divisional Inspector of Schools) **வி. ஆர். அரங்கநாதமுதலியார்;** அலுவலக மேலாளர் **சி.வி. சுப்பிரமணியம்.** சென்னையில் பொதுக் கல்வி இயக்குநர் **ஆர்.எம். ஸ்ட்ராத்தம் துரை;** இவர் வெள்ளைக்காரர்; திருமணம் ஆகாதவர். இவர்களைத் தவிர பொதுக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் என் ஆசிரியப் பெருந்தகை **கே. இராமச்சந்திர அய்யரால்** அறிமுகம் செய்து வைக்கப் பெற்றவர் **வி. எஸ். இராமச்சந்திர அய்யர்,** இவர்கள் ஒவ்வொருவரும் நடுநிலைப்பள்ளி உயர் நிலைப்பள்ளியாக வளர்வதற்கு எவ்வெவ்வகையில் உதவினர் என்பதை அடுத்துவரும் குமிழிகளில் தெரிவிப்பேன், ஒவ்வொருவரையும் அணுகு முறையையும் சுட்டிக் காட்டுவேன்.

நான் துறையூரில் பணியாற்றத் தொடங்கியபோது முசிறியில் மூத்த உதவிக் கல்விஆய்வாளராக இருந்தவர் சி. சிங்காரவேலு முதலியார் இவர் புதிதாகத் தொடங்க இருந்த நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்பணிக்கு நான் அனுப்பியிருந்த விண்ணப்பம், சான்றிதழ்களின் நகல்கள் முதலியவற்றைப் பார்த்து முத்து வேங்கடாசல துரையிடம் 'விலைமதிக்கமுடியாதமாணிக்கம்' என்று என்னை வருணித்த தாகவும், என்னை நியமித்துக் கொண்டால் பள்ளி வளர்ச்சி நன்றாகஇருக்கும் என்றுசொன்னதாகவும்,எனக்குத்துறையூர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த **டி. எஸ். இராசகோபால் அய்யர்** சொல்லக்கேட்ட துண்டு. இவரை அடுத்து முசிறியில் அப்பதவியை ஏற்றவர் **கே. எல். பழநிசாமிப் பிள்ளை.** இவர்கள் அப்பகுதியில் பணியாற்றிய காலத்தில் எனக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவியமைக்கு "தலை அல்லால் கைம்மாறு இலேன்"[1]

---

1. நாச். திரு. 6 (குயில்பத்து).

சி. இரகுநாதன் பல்வேறு வகையில் ஆர். எம். ஸ்ட்ராத்தம் துரைக்கு மிகவும் வேண்டப் பெற்றவராக இருந்தார். எந்த அளவு அவரிடம் இவருக்குச் செல்வாக்கு இருந்தது என்பது துறையூருக்கு அருகிலுள்ள பெருமாள் மலையில் எழுந்தருளியிருக்கும் பிரசன்ன வேங்கடாசல பதிக்குத்தான் வெளிச்சம்! அக்காலத்தில் கல்வித்துறையில் பணியாற்றிய அலுவலர்கள், பல்வேறு நிலைப்பள்ளிகளில் பணியாற்றிய தலைமையாசிரியர்கள் சி. இரகுநாதனைக் கண்டு உண்மையிலே அஞ்சினவர்கள் சிலர் அஞ்சுவதாக நடித்தவர்கள் பலர். ஆனால் இஃது ஒரு மாயத் தோற்றம் என்பதை உணர்ந்தவர்கள் சி. சிங்கார வேலுமுதலியார், கே. எல். பழநிசாமி பிள்ளை போன்ற ஒரு சிலரே. ஆனால் இந்த மாயத் தோற்றத்தில் அதிகமாக ஒன்றும்இராது என்று என் உள்ளுணர்வு உணர்த்தியது. என் சொந்த எண்ணத்தில் எழுபவை யாவும் பெரும்பாலும் சரியாக இருக்கும். இருந்தாலும் அகவையில் இருபத்தைந்து எட்டாதவனாக இருந்தமையால் மூத்தவர்களைக் கலந்து ஆலோசியாமல் எந்தச் செயலிலும் இறங்குவதில்லை. எனக்கு அநுபவம் மிகக் குறைவாக இருந்த காலத்தில் எனக்கு மிகவும் உண்மையாக உதவியவர்கள் முதலியாரும் பிள்ளையவர் களும்தான். எப்பொழுதும் இவர்களை நன்றியுடன் உன்னுவேன்; மரியாதையுடன் போற்றுவேன். ஒரு சில ஆண்டுகளில் ஆத்தூர் போன்ற இடங்களிலுள்ள கழக உயர் நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி மிக்க புகழ்வாய்ந்த பி. ஆர். சுப்பிர மணிய பிள்ளை நாமக்கல் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றலாகி வந்த நாள் முதல் எனக்கு நெருங்கிய நண்பரானார். எங்கள் காலத்தில் பள்ளி விழாக்களை எங்கள் வீட்டுத் திருமணவிழாபோல் நடத்து வோம், எங்கள் பள்ளிவிழாக்களுக்கு அவர் தவறாமல்

வருவார். நானும் அவர் பள்ளி விழாக்களுக்குத் தவறாமல் போய் வருவதுண்டு.

அக்காலத்தில் இலால்குடி கழக உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிப் பெரும் புகழ்பெற்ற **திருவேங்கடம் பிள்ளை** என்பவர் மாற்றலாகி முசிறிக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியேற்றார். இவரையும் சந்தித்து நண்பராக்கிக் கொண்டேன். முசிறிப் பிள்ளையவர்களும் நாமக்கல் பிள்ளையவர்களும் பள்ளி வளர்ச்சியில் நான் அவர்கள் துணையையும் ஆலோசனையையும் நாடியபொழுது ஒல்லும் வகைகளிலெல்லாம் மனமுவந்து உதவியதை என் வாழ்நாள் உள்ளவரையும் மறக்க முடியாது. அநுபவம் மிக்க இந்த நான்கு பெரியார்களும் கவசம்போல் நின்று நான் பள்ளி வளர்ச்சிச் செயலில் இறங்கும்போது எனக்குப் பெரும் பாதுகாப்பாக இருந்து வந்தனர்.

இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தில் சி. இரகுநாதன் (மாவட்டக் கல்வி அதிகாரி) எங்கோ செல்கின்றவர் பள்ளிக்கு வந்து பார்வையிட்டார். ஆய்வுக்காக வரவில்லை. இது திடீர் வருகை. புதுப்பள்ளியாதலால் தாளாளரைப் பார்க்க வேண்டுமென்றார். தாளாளர் சின்ன துரையிடம் இட்டுச் சென்றேன். இருவரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். நான் ஒதுங்கிக் கொண்டு பங்களாவின் தோட்டத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். பதினைந்து மணித் துளிகள் பேசிக் கொண்டிருந்ததாக நினைவு. மரியாதைக்காக ஏதாவது பானம் வழங்கியிருக்க வேண்டும். அதை நான் கவனிக்கவில்லை. பொதுவாகப் பள்ளி வளர்ச்சிபற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும் பேச்சின் இறுதியில் ஒரு சொட்டு வைத்துவிட்டு வந்தார் என்பதைப் பின்னர் அறிய முடிந்தது மறுநாள் தாளாளர் துரை என்னைக் கூப்பிட்டனுப்பியிருந்தார். சென்று, அவரைக் கண்டேன்.

தாளாளர் சொன்னது: "மாவட்டக் கல்வி அதிகாரி என்ன அநுபவம் இல்லாத இளைஞரைத் தலைமை யாசிரியராக நியமித்திருக்கின்றீர்களே. அநுபவம் மிக்க ஒருவரைப் போட்டால் பள்ளி வளர்ச்சிக்கு நன்றாக இருந்திருக்குமே" என்பதாக.

நான் கேட்டேன் : "தாங்கள் அவருக்குச் சொன்னது என்ன? அவர் அதற்கு மீண்டும் சொன்னதென்ன?" என்று.

தாளாளர் : "இளைஞராக இருந்தாலும் மிக்க சுறுசுறுப் புடையவர். இப்பகுதியைச் சார்ந்தவர். ஓராண்டுக்குள் கல்வித்துறைபற்றிய விதிமுறைகளைக் கரைத்துக் குடித் திருக்கிறார். எதைக் கேட்டாலும் எப்பொழுது கேட்டாலும் தயாராக விடை இறுக்கின்றார். பொது மக்களிடமும் நல்ல செல்வாக்கு பெற்று விட்டார். நன்கு பாடம் சொல்வதால் மாணாக்கர்களின் அன்பையும் ஈர்த்து விட்டார். முதல் மூன்று ஃபாரங்கட்கும் அறிவியல் கற்பிக்கின்றார். தலைமை யாசிரியர் எப்பொழுது வகுப்பிற்கு வருவார்? என்று மாணாக்கர்கள் அவரை ஆவலுடன் எதிர்நோக்கி யிருக்கிறார்களாம். பள்ளியில் வைக்கவேண்டிய பதிவேடு யெல்லாம் அழகாக அச்சிட்டு அற்புதமாக வைத்திருக் கின்றார். நடைமுறையை அற்புதமாகக் கையாளுகின்றார். இவரைப் போட்டதால் பள்ளி நடைமுறையில் ஒரு குறையும் காணமுடியவில்லை. பள்ளி ஒழுங்குமுறையையும் நன்முறை யில் வைத்திருக்கின்றார்" என்று சொன்னேன் என்றார்.

மேலும், மாவட்டக்கல்வி அதிகாரி, "சில ஆண்டுகட்கு அநுபவம் மிக்க ஒருவரை நியமித்து, அவர்கீழ் இவரைப் பணியாற்ற வைத்தால், இவர் திறமை இன்னும் அதிக மாகும். தாங்கள் விரும்பினால் தக்கவர் ஒருவரைப் பரிந்து ரைப்பேன்" என்றாராம்.

என்னைநோக்கி, ''அவருக்கு வேண்டிய ஒருவரைச் சில ஆண்டுகட்குப் போட்டுக் கொண்டால் மேல் வகுப்புத் தொடங்க இசைவு, பள்ளி நிரந்தர அங்கீகாரம் பெறு வதற்கும் வசதியாக இருக்குமல்லவா?'' என்று சொன்ன போது மாவட்டக் கல்வி அதிகாரியின் கருத்திற்கு இணங்கி விடுவார் போல் எனக்குத் தோன்றியது.

நான் சொன்னேன்: ''சட்டப்படி நாம் நடந்து கொண் டால், யாரும் குறுக்கே நிற்க முடியாது, சட்டத்திற்கு மீறி நாம் நடந்தால் எவராலும் உதவ முடியாது. இந்தப் பொது உண்மையைக் கருத்தில் கொண்டு பணியாற்றினால் எவருக்கும் பணியவேண்டியதில்லை.'' என்று.

தாளாளர் சொன்னார்: ''அப்படிச் சட்டப்படி யாராலும் நடந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு நிலை யிலும் சிறு சிறு சலுகைகள் பெறவேண்டியிருக்கும். அவரது ஆளாக இருந்தால் அவற்றை எளிதில் பெற்றுவருவார் அல்லவா?'' என்று கூறி ''எல்லாவற்றையும் யோசித்துத் தான் ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும்'' என்று சொல்லி எனக்கு விடை கொடுத்தார். ஆனால் அவர் மனம் அதிகாரி யின் கருத்திற்கு இணங்கிவிடுமோ என்ற ஐயம் என்பால் எழுந்தது. தாளாளர் வயதில் பாதி கூட ஆகாத நான் அவரிடம் அதிகமாகப் பேசக்கூடாது என்று முடிவு கொண்டேன்.

மூத்த பள்ளித் துணை ஆய்வாளர் சி. சிங்காரவேலு முதலியார் உதவியை நாடினேன். புதிய ஒருவரைத் தலைமையாசிரியராகக் கொணர்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதைத் தாளாளருக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். காரணம், அவர் என் பள்ளியில் வந்து நான் மேற்கொண்ட பணிகளை எல்லாம் நன்கு கண்டவர். சிலர் எத்தனை ஆண்டு அநுபவம் பெற்றிருந்தாலும் பணியில் பக்தியுடன் ஈடுபடாவிடில் எதையும் சாதிக்க முடியாது

என்பதை நன்கு உணர்ந்தவர். என்னுடைய உழைப்பையும் பள்ளி வளர்ச்சியில் என் முழுமையான ஈடுபாட்டையும் நன்கு உணர்ந்தவர். இவர் ஒரு நாள் துடை நடுங்கி துரையைச் சந்தித்து மனம் விட்டுப் பேசினார், "மாவட்டக்கல்வியதிகாரியின் பரிந்துரைக்குச் செவிசாய்க்க வேண்டா. நம் ரெட்டியாரைப் போல் உங்கட்கு ஓர் ஆள்கிடைப்பது கஷ்டம். அவருக்குத் தெரியாத தொன்றும் இல்லை. இரவு பகலாக உழைக்கின்றார். மூத்த தலைமையாசிரியர்களிடம் (திருவேங்கடம் பிள்ளை, பி. ஆர். சுப்பிரமணிய பிள்ளை முதலியோர்) கலந்துரையாடி பல்வேறு புதிய செய்திகளைத் தெரிந்து கொள்கின்றார். கல்வித்துறை விதிகள் இவருக்கு அற்றுபடியாய் விட்டன. நானே ஒன்றரையாண்டுக் காலத்தில் எழுத்தரேயின்றி இவர் ஆற்றிய பணியைக் கண்டு வியந்து போனேன். என்னை இப்பணியில் ஈடுபடுத்தினாலும் என்னால் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு நிறையப் பணியை இவ்வளவு திறமையாக ஆற்றமுடியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். தயவு செய்து எவரையும் கொணர்ந்து பணியில் அமர்த்த வேண்டா. இதனால் ரெட்டியாரின் மனம் உடைந்து போகும்; மாவட்டக் கல்வியதிகாரி தமக்குக் கல்வித்துறை இயக்குநரிடம் செல்வாக்கு இருப்பதாக மாயா ஜாலத்தைக் காட்டி ஏமாற்றிவருகின்றார். அவர் பேச்சிற்குச் செவிசாய்க்க வேண்டா." என்று கூறி ஒருவாறு மனத்தை மாற்ற முயன்றார். ஆனால் அவர் மாற்றலாகிச் சைதாப் பேட்டை மாவட்டக்கல்வி அதிகாரியின் தனி அலுவலராக நியமனம் பெற்றுவிட்டார்.

அடுத்து வந்தவர் கே. எல், பழநிசாமிப்பிள்ளை: சிவ பக்தி மிக்கவர். எப்போதும் வெண்ணீறும் சந்தனப்பொட்டும் இவர் நெற்றியை அலங்கரிக்கும். நல்ல தமிழ்ப் பற்றுமிக்கவர். என்னுடைய தமிழ்ப் பற்று இவரை என்பால் ஈர்த்துக் கொண்டது. பள்ளிக்கு வரவழைத்து நான் மேற்கொண்ட பணிவகைகளை எல்லாம் இவருக்கு எடுத்துரைத்துப்

பார்க்கச் செய்தேன். அவர் குறுகிய காலத்தில் சிறிதும் அநுபவம் இல்லாத நான் திறமையுடன் ஆற்றியிருக்கும் பணியைக் கண்டு வியந்து போனார். ''அநுபவம் மிக்க எவராலும் இவ்வளவு திறமையுடன் ஆற்றமுடியாது'' என்று வாய்திறந்து சொல்லியே விட்டார். இவர் மாவட்டக்கல்வி அதிகாரியுடன் ஆய்வுக்கும் வந்திருந்தார். இக்காரணத்தை முன்னிட்டுப் பள்ளித் தாளாளரைச் சந்தித்து என்னைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். ''மாவட்டக்கல்வி அதிகாரி அநுபவம் மிக்க ஒருவரை நியமிக்க வேண்டும்'' என்று ஆய்வு அறிக்கையில் எழுதட்டும் துணிவு இருந்தால்'' என்று கூறி விட்டார். அப்படி அவரால் எழுதவும் முடியாது என்பதையும் உறுதிப்படுத்தினார். இந்த ஆண்டு பள்ளி ஆய்வு அறிக்கையும் (இரண்டாம் ஆண்டு) மிகச் சிறப்பான முறையில் அமைந்து விட்டது. தாளாளர் கல்வி அதிகாரியின் திட்டத்தை நிறைவேற்றுவதில்லை என்ற முடிவு எடுத்துவிட்டார் என்பதை பழநிசாமிப்பிள்ளையின் மூலமே அறிந்து கொண்டேன். மன அமைதி கொண்டேன், புதிய உற்சாகத்துடன் பணியாற்றத் தொடங்கினேன். இந்தச் சிறுபுயல் தோன்றி மறைந்ததை என்தோழ ஆசிரியர்கள் எவரும் அறியார். நாளடைவில் நான் சொன்னபிறகுதான் அவர்கட்குத் தெரிந்தது. எங்கள் பள்ளிக்குடும்பத்தில் நான் எதையும் மறைவாக வைத்துக் கொள்வதில்லை. 'வெள்ளை வாயன்' என்ற பட்டமும் சிலர் சூட்டியதாக அறிந்து மகிழ்ந்தேன். இப்பண்பு தோழ ஆசிரியர்கள் என்னிடம் மிக நெருக்கமாகப் பழகுவதற்கும் துணை செய்தது. இத்தகைய பண்பினால் நன்மை நிறைய இருந்தது. சிறு சிறு தீமைகளும் விளைந்தன. தீமைகளைச் சமாளிப்பதில் பொன்னான காலம் வீணாவதைக் கண்டு வருந்தியதுண்டு. அநுபவத்தில்தான் நெளிவு சுழிவுகளை யெல்லாம அறிந்து கொள்ள முடியும். இறைவன் துணையும் அவசியம் வேண்டும் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதில் நம்பிக்கை இருந்தால் போதுமானது.

குமிழி—73

# 9. தமிழ் எம்.ஏ. பட்டம் பெறுவதில் மேற்கொண்ட முயற்சிகள்

என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்கள்; செயற்படுத்த முடியாத தடைகள். பொறியியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரகளில் இடம் கிடைத்தும் படிக்க முடியாத நிலைகள். பி.எஸ்சி. முடித்த பாடே பெரும் பாடாகிவிட்டது. எல்.டி. படித்ததும் அப்படியே ஆயிற்று. சட்டம் படிக்க வேண்டுமென்ற என் அன்னையார் கண்ட கனவும் நனவாகவில்லை. சட்டப் படிப்பின்மீது எனக்கு நாட்டமும் இல்லை, நான்கு திங்கள் சார்பதிவாளர் (Sub-Registrar). வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) இரண்டு பதவிகட்கும் பொதுப்பணி ஆணையம் (Public Service Commission) மூலம் முயன்றேன். இவையும் கிடைக்கவில்லை. எல் டி. படிப்பதற்கும் விண்ணப்பம் அனுப்பினேன். உடனே கிடைத்துவிட்டது, நான்கு ஐந்து தடவை முயன்றவர்கட்கும் கிடைக்காமல் பலர் திண்டாடுவதை அறிவேன் இது உடனே கிடைத்தது என் தலை எழுத்து ஆசிரியப் பணிதான் என்பது உறுதியாயிற்று. இறைவன் அருளால் எப்படியோ அதையும் படித்துத் தொழிலிலும் அமர்ந்தேன்.

தமிழ் படிக்க வேண்டும் என்ற கனவு இருந்து கொண்டு தான் இருந்தது. ஆனால் அறிவியலில்தான் நாட்டம் அதிகமாக இருந்தது, ஆகவே ஒரே உறுதியுடன் பி.எஸ்சி வகுப்பில் சேர்ந்து கல்லூரியில் முதலாவதாகவும், பல்கலைக் கழகத்தில் மூன்றாவதாகவும் முதல் வகுப்பில் உயர்ந்த சதவிகிதம் மதிப் பெண்கள் பெற்றுத் தேர்ந்தேன். ஆசிரியர் தொழிலில் அமர்ந்த பிறகு தமிழ் படிக்க வேண்டும் என்ற கனவை

நனவாக்க முயன்றேன் அதில் பல தடைகள்; இத்தடைகளை யும் இவற்றை வெற்றியுடன் அகற்றின நிலையையும் இக் குமிழியில் வெளியிடுகின்றேன்.

1943 இல் என நினைக்கின்றேன். மூன்று ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் பணியாற்றினவர்கள் மேல்படிப்பிற்கு அருகதையுள்ளவர்கள் என்ற பல்கலைக் கழக விதியைப் பயன் படுத்திக் கொண்டு எம், ஏ. படிப்பதற்கு விதிவிலக்கு (Exemption) அளிக்க வேண்டும் என்ற விண்ணப்பம் அனுப்பி னேன். பி. எஸ்சி பட்டம் பெற்றவர்கள் எம்.ஏ. தேர்வு எழுத இயலாது, எம் எஸ்சி. தேர்வுதான் எழுதலாம் அதற்கு ஆய்வகப் பயிற்சி வேண்டுமாதலால் அதுவும் எழுத முடியாது என்ற மறுமொழி வந்தது பல்கலைக் கழகப் பதிவாளரிட மிருந்து, எனக்கு ஒரே ஏமாற்றம்; அதிர்ச்சி. உடனே பி.ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற்ற பிறகு எம்.ஏ. தேர்வுக்கு முயலலாம் என்று கருதி அதற்குரிய விண்ணப்பம் அனுப்பி னேன். உடனே பதிவாளரிடமிருந்து முதன்மைப் பட்டம் (Primary Degree) பெறாதவர்கட்குதான் இந்தச் சலுகை உண்டு. தாங்கள் பி. எஸ்சி. எல்.டி. பட்டங்கள் பெற்றிருப் தால் இந்தச் சலுகையைப் பெறுவதற்கு இல்லை என்ற மறு மொழி வந்தது. இதற்கு நான் (1) இடை நிலைவகுப்பு (Intermediate) தேர்வு பெற்றதாகவும், (2) எல்.டியை இடை நிலைப்பயிற்சி பெற்ற சான்றிதழாகவும் (3) மூன்றாண்டுகள் ஆசிரியப்பணி ஆற்றியிருக்கும் அநுபவத்தையும் கொண்டு எனக்கு இந்தச்சலுகை அளிக்க வேண்டும் என்று மீண்டும் எழுதினேன். "இதுதான் பல்கலைக் கழகத்தின் மரபு; ஆகவே மரபை மீறுவதற்கிலை" என்ற மறுமொழி வந்தது "ஆசிரியர்க்குரிய சலுகை எனக்கு உண்டு; அந்த உரிமையை எனக்குப் பல்கலைக் கழகம் வழங்கவேண்டும். தங்களால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை யானால், இதுகாறும் நம் மிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளை ஆட்சிக்

குழு முன்னர் வைக்க வேண்டும்'' என்ற கோரிக்கையை விடுத்தேன். ''உங்களுடைய கடிதங்களை ஆட்சிக்குழு முன்னர் (Syndicate) வைக்க முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்'' என்று மறுமொழி வந்தது பதிவாளரிடமிருந்து. அப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளராக இருந்தவர் இரவிவர்மா என்பதாக நினைவு, இங்ஙனம் விதிகட்குள்ளும் 'மரபுக் குள்ளும்' சதுரங்கம் ஆடி என்னை ஆடுகளத்தினின்றும் வெளியேற்றினர்.

நான் 'விடாக் கொண்டனாக'வும் பல்கலைக் கழகம் 'கொடாக் கொண்டனாக'வும் போராட்டம் நடத்தி இறுதியில் நான் தோல்வியுற்றேன். ''நான் முயல்வது என் நன்மைக்கு மட்டுமல்ல; ஆசிரியர் சமூகத்திற்கே இம்முயற்சி உதவட்டும்'' என்று சங்கல்பம் கொண்டு இதை என் பிரச்சினையாக்காமல் பொதுப்பிரச்சினை யாகட்டும் என்ற முடிவுக்கு வந்தேன். உடனே ஆட்சிக்குழுவிற்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதி அதையும் இதுகாறும் பதிவாளருக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளையும் அச்சிட்டு வரிசைப் படுத்தித் துணைவேந்தர் உட்பட அனைவருக்கும் அனுப்பி வைத்தேன். அப்பொழுது (1) என் ஆசிரியப் பெருந்தகை அருள்மிகு ஜெரோம் பாதிரியார், (5) நீதி மன்ற நீதிபதி பஷீர் அகமது, (3) சட்டக் கல்லூரிப் பேராசிரியர் துணை முதல்வர் திரு எஸ். கோவிந்த ராஜுலுநாயுடு இவர்கள் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக இருந்தனர், இவர்களை அணுகினால் வழிபிறக்கும் என்று சில 'பெரியவர்கள்' சொன்னதால் இவர்களை விடாமல் பிடித்துக் கொண்டேன். இவர்கள் மூவரையும்சென்னைவந்து சந்தித்தேன்;வாதாடினேன். ''தாங்கள் ஆசிரியர்க்கு அளித்து வரும் சலுகையை உரிமையாகக் கேட்பது சரியே;பல்கலைக் கழக மரபு குறுக்கிடுகின்றதே. எனினும், முயல்வேன்'' என்று

அன்புடன் கூறினார் அருள்மிகு ஜெரோம் பாதிரியார் (அப்போது லயோலா கல்லூரி முதல்வராக இருந்தார்). நான் "தாங்கள் திருச்சிபுனித சூசையப்பர் கல்லூரியில் முதல்வராக இருக்கும்போது பி.எஸ்சி ஆனர்ஸ் (இயற்பியல்) படிக்க என் உடல் நலம்கருதி மறுத்தீர்கள். அது படித்திருந்தால் இப்போது இவ்வளவு முயற்சி எடுக்க வேண்டியதில்லை தலைமையாசிரியர்களை 25 சதவிகித இடத்திற்கு மாவட்டக் கல்வி தியகாரிகளாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அதற்குள ம்.ஏ. அல்லது எம்எஸ்சி. படித்திருக்கவேண்டும் என்ற விதி உள்ளது. அதற்குத் தகுதியாக்கிக் கொள்ளவே இம் முயற்சி, தாங்கள் எப்படியாகிலும் எனக்கு ஆசி கூறவேண்டும்" என்று அவரை வேண்டினேன். 'முயல்வேன்' என்ற உறுதி கூறினார் அப்பெருந்தகை. பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலுநாயுடுவைச் சட்டக் கல்லூரியில் சந்தித்து இதனைக் கூறினேன். "சூஸ்தோம்" (பார்க்கிறேன்) என்று கூறி என் விடாமுயற்சியைப் பாராட்டினார். அடுத்து நீதிபதி பஷீர் அகமதுவை ஆழ்வார்பேட்டையில் அவர் இல்லத்தில் சந்தித்து என் கோரிக்கையை விளக்கியதுடன் ஜெரோம் டிசௌபொ, பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு இவர்களைச் சந்தித்துப் பேசினதையும் எடுத்துக் கூறினேன். நீதிபதியும் "என்னால் இயன்றதை யெல்லாம் செய்வேன். உங்கள் விடா முயற்சியைப் பாராட்டுகின்றேன்" என்று கூறி விடை கொடுத்தார்!

இதற்குரிய முடிவு 'இழுபறியாக' இருக்கும் என்பதை ஊகித்தேன். "இது பல்வேறு குழுக்களின் பரிசீலனைக்குப் போகவேண்டும். இந்தக் குழுக்களும் ஆறு திங்கள், மூன்று திங்கள் என்ற தவணைகளில்தான் கூடும். ஒவ்வொரு குழுக்களிலும் உறுப்பினர்களிடையே கருத்து மாறுபாடுகளும் இருத்தல் கூடும். இவற்றையெல்லாம் சமாளித்து முடிவு பிறக்கவேண்டும். இதற்குக் காலதாமதம் ஏற்படுவது இயல்பு" என்று கருதி இம்முயற்சியை இந்த அளவில் விட்டு

வைத்தேன். இவ்வாறு நான் முயல்வதைப் பலர் அறிந்தார்கள். சிலர் என்னைப் பாராட்டினர்; சிலர் என்னை மறைமுகமாகக் கிண்டல் செய்தனர்; சிலர் என்னை 'இளமைத் துடுக்கு' என்று பரிகசித்தனர். இச்செய்திகள் எல்லாம் என் செவிக்கு எட்டின, இவையும் என் முயற்சிக்கு ஊக்கமளித்தன. என் முயற்சி கெளரவப் பிரச்சினையாக மாறி விட்டது.

'தமிழ் படிக்கவேண்டும்' என்ற உந்தல் (Drive) என்னை மற்றொரு திசையில் செயற்படத்தூண்டியது. 1943 ஆம் ஆண்டு வித்துவான்-முதல்நிலை (Preliminary)தேர்வு எழுதுவதற்கு விதிவிலக்கு (Exemption) வழங்குமாறு விண்ணப்பம் உரிய காலத்தில் கட்டணத்துடன் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினேன்; அதற்குரிய இசைவும் பெற்றேன். 1944 மார்ச்சில் நடைபெறும் தேர்வுக்குக் கட்டணம் அனுப்பி, தேர்வு எழுதி வெற்றியும் பெற்றேன். பல்வேறு பணிகளுக்கிடையே இரவும் பகலும் ஓயாது படித்து தேர்வு எழுதி வெற்றி பெற்றது பெரும் சாதனை என்றே கருதுகின்றேன். இங்ஙனமே 1944 இல் உரிய காலத்தில் வித்துவான் - இறுதிநிலை (Final) தேர்வு எழுதுவதற்கு கட்டணத்துடன் விண்ணப்பம் அனுப்பி அதற்குரிய இசைவும் பெற்றேன். 1944 திசம்பா - ஜனவரியில் 20 நாட்கள் சென்னையில் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லத்தில் தங்கி அவரிடம் 'சிவஞான முனிவரின்' தொல்காப்பிய முதல் சூத்திர விருத்திக்குப் பாடம் கேட்டுத் தெளிவு பெற்றேன். ஹாமில்ட்டன் வாராவதியிலிருந்து திருவல்லிக்கேணி காவல் நிலையம் வந்து சேர்வதற்குச் சுமார் அரைமணி நேரம் ஆகும். இந்த நேரத்தில் கதை சொல்லுவதுபோல் சொல்லிக்கொண்டே வருவார். பல்கலைக் கழகம் வந்ததும் பக்கங்களைச் சுட்டி உரைத்து "நான்கு பக்கங்கள் படியுங்கள்" என்று கூறுவார். படித்தால்

கண்ணாடியில் நம் முகம் தெரிவதுபோல் அந்த நான்கு பக்கங்களில் கூறப்பெற்றுள்ள பொருள் தெளிவாகும். இப்படிப் பத்துப் பன்னிரண்டு நாட்களில் 'சூத்திரவிருத்தி தெளிவாயிற்று.

திரு முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் சீறாப் புராணம் பதிப்பித்தலில் டாக்டர் முகம்மது உசேன் நயினாருக்குத் (அரபுமொழிப் பேராசிரியர்) துணையாகப் பணி புரிந்து கொண்டிருந்தார். அவரும் திரு ரெட்டியார் குடியிருந்த தெருவுக்கு அடுத்த நாட்டு சுப்பராய முதலித் தெருவில் குடியிருந்தார். அடிக்கடி திரு. ரெட்டியார் இல்லத்திற்கு வந்து போவார். திரு. முதலியார் சங்க இலக்கியங்களிலும் சைவ சமய இலக்கியங்களிலும் நல்ல பயிற்சியுடையவராதலால் அவரை நோக்கி, ''நம் சுப்பு ரெட்டியாருக்கு அகநானூறு களிற்றியானைநிரையிலுள்ள முதல் ஐம்பது பாடல்களைக் கற்பியும்'' என்றார். அவரும் புலவர் பெருமான் பணியைச் சிரமேற்கொண்டு காலையிலும் மாலையிலுமாகப் பத்து நாட்களில் ஐம்பது பாடல்களையும் அற்புதமாகக் கற்பித்துவிட்டார்.

திரு. முதலியார் கடின சொற்களின் பொருளை விளக்கிக் கொண்டே பாடல்களை இசையுடன் பாடுவார். பாடலின் இறுதியடியைப் பிடித்துக்கொண்டு கீழிருந்து மேலே போவார். சரியாக முடிச்சினை அவிழ்த்துவிட்டுச் சிவகாசி வெடிச்சரங்களை ஆட்டும்போது வெடிகள் தனித்தனியாகக் கழன்று ஓடுவதுபோல், இவர் பாடலைக் கீழிருந்து மேலே பாடிக்கொண்டு போகும்போது, சொற்களின் பொருளும் பாடலின் முழுப்பொருளும் பாட்டிலிருந்து கட்டவிழ்த்துக் கொண்டு என் மனத்தில் பாய்ந்துவிடும்.

நான் துறையூரில பணியாற்றிய பொழுது அடிக்கடிச் சொற்பொழிவுகளுக்காக வந்து போகின்றவர் திரு வீ. உலக

ஊழியனார். அப்போது அவர் சேலம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரிடம் 'பொருநராற்றுப்படை', புறநானூற்றில் 1-50 பாடல்கள் பாடங் கேட்டேன். இவருக்குப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முழுதும் உரையுடன் மனப்பாடம். பொருநராற்றுப் படையில் பல அடிகளை இசையுடன் பலமுறை படித்து, நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தும்போது துணிக்கடையில் நல்ல விற்பனையாளர் பல்வேறு வண்ணத் துணிகளை வேகமாக விரித்துக்காட்டும்போது அவை நம் கண்ணைக் கவர்வது போல், ஊழியனாரின் பாட்டிசை என் கருத்தைக் கவர்ந்தது. சொற்பொருள்களை ஏற்ற இடங்களில் கூறிக்கொண்டே பொருநராற்றுப் படையை அற்புதமாகக் கற்பித்துவிட்டார். உலக ஊழியரிடம் பாடம் கேட்டது பெறற்கரிய பெரும் பேறாகக் கருதுகின்றேன். இந்த ஆண்டில் வார விடுமுறை நாட்களில் திருவையாறு சென்று தொல்காப்பியம்—சேனாவரையத்தில் தோன்றும் ஐயங்களையெல்லாம் திரு பு. ரா. புருடோத்தம நாயுடு அவர்களிடம் போக்கிக்கொண்டேன். இப்பொழுதுதான் திரு. சி. இலக்குவனாரின் தொடர்பும் அவர் துறையூருக்கு வந்து பேசும் வாய்ப்பும் ஏற்பட்டன.

அக்காலத்தில் திருச்சி மாவட்டத்தில் தமிழ் படித்த—வித்துவான் பட்டம் பெற்ற—தலைமையாசிரியன் நான் ஒருவனே என்ற தனிப்பெரும் புகழையும் பெற்றேன். மாவட்டத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றிய தமிழாசிரியர்கள் யாவரும் என்னைப் போற்றினர்; பாராட்டினர். தமிழாசிரியர்களிடையே தனி மதிப்புப் பெற்ற தலைமையாசிரியன் நான் ஒருவனே என்பதைப் பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கின்றேன். அவர்களிடையே நான் மதிப்பு பெற்றதற்கு நான் படித்த தமிழே காரணம் என்பதனையும் நினைந்து போற்றுகின்றேன். திரு. ப. அரங்க

சாமி (இலால்குடி கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்) யும், திரு. வி. ஆ. பரிமேலழகன் (திருச்சி புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்), திரு பட்டுசாமி ஓதுவார் (திருச்சி பொன்னையா உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்) போன்றவர்கள் என் நெருங்கிய நண் களானார்கள்.

x x x

நான் தமிழ் எம்.ஏ தேர்வு எழுதுவதற்கு மேற்கொண்ட முயற்சி 1946 இல் ஓரளவு வழியமைத்துத் தந்தது. தவத் திரு ஜெரோம் டி. செளஸாவின் விடாமுயற்சியால் பல்கலைக் கழகம் ஆசிரியர்கள் தேர்வு எழுத வகைசெய்யும் விதியைச் சற்று மாற்றியமைத்தது. B.A படித்தவர் B.O.L க்கும், B.O.L படித்தவர்கள் B.A. க்கும், B.Sc. படித்தவர்கள் B.A. க்கும்......... இப்படி ஒரு பட்டம் பெற்றவர்கள் இன்னொரு பட்டமும் பெறலாம் என்று விதியில் மாற்றம் செய்தது. இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு 1947ல் B.A யில் பகுதி 1: ஆங்கிலம், பகுதி 2 : தமிழ் பாடங் களில் தேர்வுகள் எழுதி வெற்றி பெற்றேன். தமிழில் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில், முதல் நிலைபெற்றுத் தேறினேன். B.Sc.யில் படித்த அறிவியலைக் கொண்டு எனக்கு B.A. பட்டமும் வழங்கியது பல்கலைக்கழகம், B.A. பட்டம் பெற்றவர்கள் M.A. பட்டத் தேர்வு எழுத வேண்டு மானால் B.A. பட்டம் பெற்ற பிறகு இரண்டு ஆண்டுகள் இடைவெளி வேண்டும் என்ற விதி எனக்குத் தடையாக அமைந்து நான் இரண்டு ஆண்டுகள் காத்திருக்க நேரிட்டது; 1949-இல் தான் எழுத முடியும் என்ற நிலை தோன்றியது. சில அசெளகர்யங்களால் 1949லும் 1950லும் இத்தேர்வு எழுத முடியவில்லை. 'பருவத்தால் அன்றிப் பழா' என்ற முதுமொழிக்கிணங்க இந்த இரண்டாண்டுகளிலும் தேர்வு எழுத வாய்ப்பில்லாது போயிற்று. 1950-இல் நான் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்

தமிழ்ப் பேராசிரியனாகப் பணியேற்ற பிறகுதான் M.A. தேர்வு எழுதி வெற்றி பெற்றேன். இங்ஙனம் பல்கலைக் கழக விதி என் தலைவிதியாக நின்று பத்து ஆண்டுகள் M.A. பட்டம் பெறமுடியாமல் செய்துவிட்டது.

குமிழி—74

## 10. நான்காம் படிவம் தொடங்க முயற்சி

1943 சனவரி என நினைக்கின்றேன்; 1943-44ல் நான்காம் படிவம் தொடங்க முயற்சி எடுக்கும் திட்டத்தை தாளாளர்முன் வைத்தேன். அவர் தயங்கினார். ஒன்றும் கிடைக்காது என்றார். 'நாங்கள் இருவரும்' முயன்றபோதே கிடைக்கவில்லை. இன்றும் அந்த நிலைதான் இருக்கும் என்று மறுதளித்தார். 'நடுநிலைப் பள்ளி தொடங்குவதற்குக் கல்வித் துறையினர் போட்ட நிபந்தனைகளை ஒன்றைக்கூட நிறைவு செய்யாது முயன்றது தவறு; முயன்றது எனக்குத் தெரிந்திருந்தால் நான் தடுத்து நிறுத்தியிருப்பேன்' என்றேன். 'ஆம் நீங்கள் சொல்வதுதான் சரி. டி. எஸ். இராசகோபால் அய்யரைக் கேட்டு அவர் சொற்படி விண்ணப்பம் அனுப்பினோம்; அவர் மாவட்டக்கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் பார்த்துக் கொள்வதாகச் சொன்னதின்பேரில் அனுப்பினோம்' என்றார். 'நான் இளைஞனாக இருந்தாலும், ஓராண்டு அநுபவத்தில் பல செய்திகளைத் தெரிந்து வைத்துள்ளேன்; மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் நடந்து கொள்ள வேண்டிய நெளிவு சுழிவுகளையெல்லாம் ஓரளவு தெரிந்து வைத்துள்ளேன்' என்றேன். 'உம் யோசனைப்படி எதையாவது செய்யும்; உரியவர்களைப் பார்க்க வேண்டுமானாலும் பாருங்கள்' என்று பச்சைக்கொடி காட்டி விட்டார்.

என் மூளை செயற்படத் தொடங்கியது. நடுநிலைப் பள்ளி தொடங்குவதற்குக் கல்வித் துறையினர் போட்ட நியந்தனைகள், அவை எந்த அளவு நிறைவேற்றப் பட்டுள்ளன? என்பவற்றை முன்வைத்துக் கொண்டு திரு. கணபதி அய்யர் சொன்ன யோசனைகளையும் நினைவில் கொண்டு அழகான முறையில் விண்ணப்பம் தயாரித்துக் கொண்டேன். ஒரு நாள் விடுமுறையன்று தயாரித்த விண்ண பத்தை எடுத்துக் கொண்டு முசிறி கழக உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திருவேங்கடம் பிள்ளையவர்களிடம் காட்டி அவருடைய யோசனைகளையும் சேர்க்கலாம் என்று கருதி முசிறி சென்றேன். நான் தயாரித்த விண்ணப்பத்தைக் கண்டு அவரே வியந்து போனார்; பாராட்டினார். "இவ்வளவு சிறிய வயதில் குறைந்த அநுபவத்தைக் கொண்டு இவ்வளவு அற்புதமாகத் தயாரித்து விட்டீர்களே!" என்று புகழ்ந்தார். "எல்லாம் தங்கள் மூலம் பெற்ற அகத் தெழுச்சியே (Inspiration) காரணம்" என்று அடக்கமாகப் பேசினேன். "இந்த அடக்கமே உங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்தும்" என்று வாழ்த்தினார்; "அடக்கம் அமரருள் உய்க்கும்" (குறள்-121) என்று வள்ளுவப் பெருந்தகையும் கூறியுள்ளாரல்லவா?" என்றேன். 'இலக்கியச்சுடர் ஒளிர்கின்றதே! நீங்கள் வருங்காலத்தில் சிறந்த புலவராகத் திகழ்வீர்கள்!' என்று மீண்டும் வாழ்த் தினார். 'திருவேங்கடம் பிள்ளை எல்லா வகையிலும் பேராற்றல் வாய்ந்தவர்; அடக்கமே உருவானவர்' என்று கண்டுக் கூறுதல் மிகவும் பொருத்தமுடையது.

சிற்றுண்டி, காஃபி வழங்கி உபசரித்தார். அதன் பின்னர் நான் தயாரித்துக் கொண்டு சென்றிருந்த விண்ணப் பத்தின் கரட்டு வரைவை (Rough draft) நகாஸ் வேலை செய்தார். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சொற்களை யும் நுழைத்து விண்ணப்பத்திற்கு மெருகேற்றினார்; இலக்கிய

மணம் கமழச் செய்தார். பணித்துறை சார்ந்த பொருளற்ற சொற்களையும் புகுத்தி சரியான விண்ணப்பமாக்கினார். அவரே எழுத்தரை வரவழைத்து நல்ல தாளில் ஐந்து படிகள் எடுத்துத் தந்து உதவினார். ஒரு படியை (முதற்படியை) முறைப்படி சென்னைக் கல்வித்துறை இயக்குநருக்கும், நகல்களை முன்னதாக கோவை மண்டல ஆய்வாளருக்கும். தாளாளர் கையெழுத்து வாங்கி அனுப்பி வைத்தேன். தாளாளரும் நான் தயாரித்த விண்ணப்பத்தைக் கண்டு வியப்புற்றது அவர் முகத்தில் பிரதிபலித்தது. இரண்டாண்டுகட்கு முன் அனுப்பிய விண்ணப்பத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ந்திருக்க வேண்டும்.

மாவட்டக்கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் எடுத்ததற்கெல்லாம் தலைமை எழுத்தரை நாடிக் கொண்டிருந்த எனக்கு அவருக்குமேல் அந்த அதிகாரிக்கு தனி அலுவலர் நியமிக்கப் பெற்று விட்டதால் சில முக்கியமானவை இவருடன் முடிந்து விடுகின்றது. எஸ் வீராசாமிப் பத்தர் என்பவர் தனி அலுவலராக இருந்து வந்தார். தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியர்களுள் பெரும்பாலோர் இவரை உதவி மாவட்டக்கல்வி அதிகாரி (Assistant District Educational Officer) என்றே தவறாக வழங்கி வந்தனர். இதனை அவர் கேட்டுப் பெருமிதமாகவும் மகிழ்ந்ததைப் பார்த்திருக்கின்றேன். இவரைப் பார்த்துப் பிப்பிரவரியில் (1943) நான்காம் படிவம் திறப்பதற்கு விண்ணப்பத்திருப்பதைக் குறிப்பிட்டுக் கைவசம் வைத்திருந்த நகலையும் காட்டினேன். அவர் படித்துப் பார்த்து மகிழ்ந்தார். ஏப்பிரல் மாதம் முதல்வாரம் நாங்கள் இருவரும் கோவை சென்று மேலும் முயல்வதாகத் திட்டமிட்டோம்.

திட்டமிட்டபடியே ஏப்பிரல் முதல் வாரத்தில் கோவை சென்றோம். கோவை இரத்தினசபாபதி புரத்தில் நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் கோவிந்தாச்சாரி

இல்லத்தில் இறங்கினோம். இருவருமே விசுவகர்மா குலத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு நாட்கள் தலைமையாசிரியர் இல்லத்திலேயே தங்கியிருந்தேன். சென்ற மறுநாளே சி. வி. சுப்பிரமணியத்தைப் (மண்டல ஆய்வாளரின் அலுவலக மேலாளர்) பார்த்தோம்;என்னை அவருக்கு அறிமுகம்செய்தும் வைத்தார் திரு பத்தர். நான் வந்த காரியத்தையும் அவருக்கு எடுத்து விளக்கினார். நான் விடைபெற்று வெளியில் வரும்போது மறுநாள் வந்து தன்னைக் காணுமாறு பணித்தார் சுப்பிரமணியம். பத்தரும் சுப்பிரமணியமும் ஒரு பத்து மணித்துளிகள் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர். பின் இருவருமாக வீடு திரும்பினோம்.

மறுநாள் சுப்பிரமணியத்தைச் சந்திக்கும்போது ஓர் உறையில் ரூ 25/- போட்டு வழங்குமாறு பணித்தார் திரு. பத்தர். அவ்வாறே செய்தேன். இந்த அலுவலகத்திலிருந்து விண்ணப்பம் சென்ற பிறகே ஊர் திரும்புவதாகச் சொன்னேன். அவர் பத்து நாட்களாகும் என்றார்; நானும் பத்து நாட்கள் காத்திருந்தேன். பத்தர் திருச்சி திரும்பிய பிறகு நான் ஓர் விடுதிக்கு மாற்றிக் கொண்டேன். துரை என்னிடம் தந்த ரூ 60/-இல் இதுவரை 35/- செலவாகி விட்டது. ரூ 1-00க்கு தினசரி வாடகையில் ஒரு சிறு விடுதியில் தங்கினேன். அறையில் இருப்புக் கொள்ளவில்லை. மண்டல ஆய்வாளர் கூனூரில் முகாம் செய்துள்ளார் எனக் கேள்வியுற்று ஒருநாள் மாலை 3 மணிக்குக் கூனூர் புறப்பட்டேன். அந்த நாள் பேருந்து அமைப்பில் வண்டியோட்டி அருகில் இருவர் உட்காருவதற்கு இடவசதியிருந்தது. நான் போகும்போது பேருந்து நிரம்பிவிட்டது. இடம் இருக்குமா? என்று நடத்துநரைக் கேட்க "முன் சீட்டில் அமருங்கள்; மற்றோர் இடம் கோவை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு ஒதுக்கப் பெற்றுள்ளது" என்றார். அவர் சொன்னபடியே அமர்ந்தேன்; ஒருசில மணித் துளிகளில் அதிகாரியும் வந்து அமர்ந்து விட்டார்.

இருவரும் பேசிக் கொண்டே சென்றோம்; ஒருவரையொருவர் அறிமுகப் படுத்திக் கொண்டோம். சாம்பசிவம் பிள்ளை என்பது அவர் திருநாமம் என்பதை அறிந்து கொண்டேன்.

**சா.பி. :** ரெட்டியார், சட்டை அங்கவஸ்திரத்துடன் கிளம்பி விட்டீர்களே. அங்கு மிகவும் குளிருமே.

**நான் :** எனக்கு ஒன்றும் தெரியாது. அது மலை இருப்பிடம் என்பதையும் அறியேன். அப்படிப்பட்ட அநுபவம் எனக்கு இல்லை.

**சா.பி. :** பரவாயில்லை; நான் நீங்கள் தங்க ஏற்பாடு செய்து விடுகிறேன்.

**நான் :** நான்காம் படிவம் திறப்பதற்கு ஆணை கோருவது பற்றி மண்டல ஆய்வாளர் வி. ஆர். அரங்கநாத முதலியார் கூனூரில் முகாம் அமைத்திருக்கின்றார் என்று கேள்வியுற்றேன், அவரைக் காணத்தான் போகிறேன்.

**சா. பி :** அப்படியே நானும் அவரைப் பார்க்கத்தான் போகிறேன். உங்களை இன்றிரவு 8-9 மணிக்குள் சந்திக்க வைக்கின்றேன். இரவு தங்கவும், உணவுக்கும் கூட ஏற்பாடு செய்கிறேன்.

**நான் :** மிக்க நன்றி. தந்தை மாதிரியுள்ள தங்களிடம் இறைவன் என்னைச் சேர்த்தான். இப்படித்தான் திக்கற்றவர்கட்கு அவன் நல்லோரைக் கொண்டு ஏற்பாடு செய்துவிடுகின்றான்.

இப்படியாக உரையாடிக்கொண்டு மாலை 6 மணிக்குக் கூனூரை அடைந்தோம். பல தலைமையாசிரியர்கள் திரு. பிள்ளையவர்களைச் சந்தித்தார்கள். அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார் திரு. பிள்ளை. காஃபி தருவிக்கப்பெற்றது; பருகினோம்.

திரு. பிள்ளையவர்கள் தாம் சொன்னபடியே, இரவு எட்டு மணிக்கு திரு. முதலியாருடன் நேர்காணலுக்கு ஏற்பாடு செய்தார். முதலியாருக்கு வணக்கம் செலுத்தி நான் வந்த காரியத்தை எடுத்துரைத்தேன். இந்த ஆண்டு நான்காம் படிவம் திறப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் தொடர்ந்து பள்ளி உயர்நிலைப்பள்ளியாக வளர்வதற்கு ஆசி கூறும்படியும் வேண்டினேன்.

**வி. ஆர். ஆர்.;** நீங்கள் ஏன் அங்குபோய் மாட்டிக் கொண்டீர்கள்? உயர்நிலைத் தொடக்கப் பள்ளியே நடத்தத் தெரியாதவர்கள். கஞ்சப் பிரபுக்கள். ஆசிரியர்கட்குப் பத்தும், பன்னிரண்டுமாக ஊதியம் தருகின்றனர். நாங்கள் தரும் மானியத்தைத் தந்து விடுகின்றார்களா? அதிலும் (உள் கணக்கில்) ஏதாவது பிடித்தமா? தெரியவில்லை.

**நான்:** நானே பணியைக் கோரித் தலைமையாசிரியர் பதவியை ஏற்றேன். நன்கு படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி (அறிவியல்—வேதியியல்) பெற்றிருக்கின்றேன். துறையூருக்கு அருகிலுள்ள சிற்றூர் என் சொந்த ஊர். திருமணமும் ஆகிவிட்டது. போர்த் துறையைத் தவிர, வேலை வாய்ப்பு எங்கும் இல்லை. ஊதியம் குறைவாக இருந்தாலும், நிலவருவாயைக் கொண்டு காலம் தள்ளுவேன். காலத்தை வீணடிக்காமல் மேலும் படித்துத் தகுதியாக்கிக் கொண்டு சில ஆண்டுகளில் கல்லூரியில் பணிஏற்க முயல்வேன். என் ஊழ் எம்.ஏ., அல்லது எம்.எஸ்சி., பட்டம் பெற முடியாது செய்து விட்டது.

**வி. ஆர். ஆர்:** உற்சாகமுள்ள இளைஞராகக் காணப்படுகின்றீர்கள். உங்கள் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன். நான்காம் படிவம் தொடங்கப் பரிந்துரை செய்தால் உங்கட்காகத்தான் செய்ய வேண்டும். உங்கள்

பள்ளி நிர்வாகம் காலத்திற் கொவ்வாதது. உயர்நிலைத் தொடக்கப் பள்ளியிலேயே ஆசிரியர்கட்குச் சரியான ஊதியம் இல்லை. ரூ 10, ரூ 12, ரூ 15, ரூ 18... என்று தான் ஊதியம் வாங்குகின்றனர். அரசு ஆசிரியர்கட்குத் தரும் மானியத் திற்குமேல் சிறிதுகூடச் சேர்த்துத் தருவதில்லை. தலைமை யாசிரியர்கட்கே ரூ 40/- எட்டவில்லை என்பதை அறிவேன். தொடக்கப் பள்ளியிலாவது அணா கணக்கில் கட்டணம் தண்டுகின்றார்கள். உயர்நிலைப்பள்ளியில் ரூபாய் கணக்கில் தண்டுவார்கள். கணக்கில் ஊழல் செய்து கொள்ளை அடிப் பார்கள். இதைத்தான் நான் இன்றைய தனியார் உயர் நிலைப்பள்ளிகளில் காண்பது. உங்கட்குக் கூட ரூ 65/ தர மாட்டார்கள்; அது தருவதுதான் நியாயம். நான்காவது படிவம் வந்தால் ரூ 110/- தருவார்களா? இப்போது உங்கள் ஊதியம் ரூ 35/- க்கு மேல் இருக்காது என்பதை நான் ஊகித்து அறிவேன்; நீங்களும் உண்மையை மறைப்பீர்கள். அப்படி ஏதாவது ரூ 40/- அல்லது ரூ 45/- ஆகத் தந்தால் ரூ 10/- ஆவது நீங்கள் திருப்பித் தரும் திட்டம் இருக்கும். உண்மைதானே! ஏன் விழிக்கின்றீர்கள்?

நான் : நான் புன்முறுவல் செய்து வாளா இருந்தேன்.

வி.ஆர்.ஆர். : உங்களுக்காவது நான்காவது பாரம் தொடங்கப் பரிந்துரைக்கின்றேன். மகிழ்ச்சியாகத் திரும்புங் கள்.

"வணக்கம் ஐயா! மிகவும் நன்றி" என்று விடை பெற்றேன். திரு சாம்பசிவம் பிள்ளை உணவுக்கும் தங்கு வதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். அவர் வி.ஆர். ஆரிடம் பேசி இரவு ஒன்பது மணிக்கு வெளிவந்தார். அவரிடம் பதினைந்து மணித்துளிகள் பேசிக் கொண்டிருந்தேன். "பள்ளி நிர்வாகம் அவருக்கு மன நிறைவு தராவிடில், பரிந்துரை செய்யார். இனிமையாகப் பேசியது உங்கட்கு மகிழ்ச்சியூட்டு

வதற்காக, எதற்கும் நீங்கள் சென்னை சென்று அங்கும் முயல்வது நல்லது. இஃது என் தனிப்பட்ட கருத்து. நீங்கள் துடிப்புடன் செயற்படுகின்றீர்கள், உங்கள் எதிர்காலம் சிறக் கட்டும்'' என்று வாழ்த்தினார்.

''அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி உண்டு ஊர் திரும்புங்கள். கோவையில் காத்திருக்க வேண்டாம். அது பயன் படாது. நல்லிரவு'' என்று கூறி விடை கொடுத்தார்.

திரு சாம்பசிவம் பிள்ளையின் அறிவுரைதான் பயன் படத் தக்கது. உலகியலையொட்டியது என்று நினைந்த வண்ணம் நான் தங்கும் இடத்தை அடைந்தேன். அது ஒரு பள்ளியின் வகுப்பறை. கம்பளி தயாராக இருந்தது. அதைப் போர்த்திக் கொண்டு உறங்கினேன். உறக்கம வரவில்லை. நெடுநேரம் விழித்திருந்து மணி 12-க்கு மேல் உறங்கி விட்டேன். அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டேன்; ஓர் ஆசிரியர் தயவால் வெந்நீர் கிடைத்தது. குளியலையும் முடித்துக் கொண்டு பேருந்து நிலையம் வந்து சிற்றுண்டி கொண்டு கோவை திரும்பினேன். திரு சாம்பசிவம் பிள்ளை உறங்கிக் கொண் டிருந்தபடியால் அவரைத் திருப்பள்ளி எழுச்சி செய்ய விரும்பவில்லை. ஆகவே, அவரிடம் விடை பெறமுடிய வில்லை.

சரியாக காலை ஒன்பது மணிக்குக் கோவைவந்து சேர்ந்தேன். ஏதோ இருப்பூர்தி இருப்பது தெரிந்து அறை யைக் காலிசெய்து, கணக்குத் தீர்த்துக் கொண்டு இரயிலடிக்கு வந்து சேர்ந்தேன். ஓர் எண்ணம் சிந்தையில் எழுந்தது, ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியில் மு.ரா. பெருமாள் முதலியார் புகழ்பெற்ற தலைமையாசிரியர் என்பதை அறிந்து வைத்திருந்தேன், அவரைச் சந்தித்து

பள்ளி நிர்வாகக் குழு அமைப்பது பற்றித் தெரிந்து கொள்ள நினைத்து ஈரோட்டிற்குப் பயணச் சீட்டு வாங்கினேன். பிற்பகல் இரண்டரை மணிக்கு வண்டி ஈரோடு நிலையத்தை அடைந்தது. நெரிசல் அதிகமாக இருந்தது. அழுக்கு உடைகள் வைத்திருந்த கித்தான்பை நழுவி விட்டது. கவலையுடன் கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு இரயில் மேடையில் நடந்து வந்தபோது ஒரு மூதாட்டி என் பையைக் கட்கத்தில் வைத்துக் கொண்டு நடந்து செல்வதைக் கண்டு அதை 'வெடுக்கென்று' பிடுங்கிக் கொண்டேன். 'குற்றமுள்ள நெஞ்சினள்' ஆதலால் வாய் பேசாது மௌனமானாள்.

ஒரு குதிரைவண்டியை அமர்த்திக்கொண்டு நேராகத் திருபெருமாள் முதலியார் பணியாற்றும் பள்ளியை வந்தடைந்தேன். அது கோடை விடுமுறைக் காலம். தலைமையாசிரியருக்கு விடுமுறை ஏது? எப்படியும் சந்தித்து விடலாம் என்றுதான் வந்தேன். 'தேடப்போன மருந்து காலில் தட்டுப் பட்டது போல்' அவரைப் பள்ளியிலேயே காண முடிந்தது. நான் அவரை முன்பின் பார்த்ததில்லை. நானே என்னை அறிமுகப் படுத்திக்கொண்டு என் கதையை விரித்துக் கூறி பள்ளிநிர்வாகம் அமைத்துள்ள நிர்வாக குழுபற்றிய விவரம் கேட்டேன். அந்தப் பள்ளியில் 'தாளாளர் அலுவலகம்' என்று தனியாக ஒன்று இருந்தது. ஓர் எழுத்தர்-தட்டச்சுப் பொறியாளர் எப்போதும் இருப்பார். திரு.முதலியார் அவரை வரவழைத்து நகலொன்று தட்டச்சு செய்யுமாறு பணித்தார்; அவர் தாளாளர் அநுமதியின்றித் தர முடியாது என்று மறுத்து விட்டார். அவர் அந்தண இளைஞர். இப்போது தான் அப்பள்ளியில் தலைமையாசிரியரின் செல்வாக்கை ஒரு வினாடியில் ஊகித்துக்கொண்டேன். முதலியாரும் "இது தான்ஐயா, இங்குள்ள நிலை. எவ்வளவு மானக்கேடாக நான் காலத்தைத் தள்ளி வருகிறேன் என்பது உங்கட்குப் புரியும்" என்றார். சிற்றுண்டி காஃபி அருந்தச் சொல்லி விடை

கொடுத்தார். அன்றிரவே திருச்சி இருப்பூர்தி ஏறி திருச்சி வந்து, தாமதியாமல் துறையூர் வந்தடைந்தேன்.

மறுநாள் காலையில் தாளாளரைச் சந்தித்து நான் போய் வந்த வரலாற்றை விரித்துரைத்தேன். முதலியார் நிர்வாகத்தைக் குறைவாகப் பேசியதை முற்றிலும் மறைத்து விட்டேன். அப்போது தாளாளர் சின்னதுரை ஜமீந்தார் அரண்மனைக் கெதிரிலுள்ள உயர்நிலைத் தொடக்கப் பள்ளியின் மேல்மாடி அறையொன்றில் தங்கியிருந்தார். தந்தையார் உடல் நிலை குன்றியிருந்தது. அரண்மனைக்குள் புகுந்து நிர்வாகத்தைக் கைப்பற்றும் திட்டத்தில் இருந்தார். அதற்கேற்ற காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த காலம் அது. செலவுக்கு என்னிடம் தந்த ரூ 60/- க்கு சல்லிக்காசு விடாமல் ஒரு சிறிய குறிப்பேட்டில் கணக்கு எழுதி வைத்திருந்தேன். அதைக் காட்டினேன். அதில் ரூ 1-10·0 மீதி இருந்தது தெரிந்தது. அதை மட்டிலும் கவனித்துக் கொண்டார். வாய்மட்டிலும், "சரி தான் போங்கள். இது என்ன பெரிய கணக்கு?" என்று அசட்டை யாக ஒலித்தது. "இன்னும் ஒரு வாரத்தில் சென்னை சென்று வரவேண்டும்" என்ற திட்டத்தைக் கூறி விடை பெற்றேன்.

குமிழி—75

# 11. என் மைத்துனரின் குடும்ப நிகழ்ச்சிகள்

திருச்சியில் என் கல்லூரி வாழ்க்கையின்போது சில நாட்கள் தாயுமான சுவாமி திருக்கோயில் என்னை ஈர்க்கும். அப்போதெல்லாம் நான் அக்கோயில் சென்று சுற்றித் திரிந்த வண்ணம் இருப்பேன். அப்போதெல்லாம் **'தாயுமான சுவாமி கள் பாடல்'** என்ற நூல் என் கையிலிருக்கும். அந்த இளவயதில், 'பக்தி' என்னை ஈர்க்கவில்லை. 'சமூகச்சேவை'

தான் என் நெஞ்சில் அடிக்கடி எழும். இடைநிலை வகுப்பு பயின்றபோது என் மனத்தைக் கவர்ந்தவை,

நெஞ்சமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே[1]

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே[2]

என்ற இரண்டு பாடல்கள். இவற்றை அடிக்கடி சிந்திப்பேன். பி.எஸ்சி பட்டப் படிப்பு படித்த பொழுது இவற்றை என் அறையில் மேசையருகே எழுதியும் வைத்திருந்தேன். காவிரிக்கரையில் உலவப் போகும் போதெல்லாம் அருகிலுள்ள 'நீராகாரமடம்' சென்று வருவேன். அந்தமடத்துள் மண்டபத்தில் பெரிய எழுத்துகளில் இவற்றை எழுதி ஒட்டி இருந்தேன். இந்தக் குமிழி எழுதும்போது இந்த இரண்டு கண்ணிகளும் மனத்தில் எழவே இவற்றை முதலில் குறித்தேன்.

1943-இல் ஜூலைத் திங்கள் என நினைக்கின்றேன்; என் மைத்துனரும் இராமச்சந்திர ஆச்சாரியும் துறையூர் வந்தனர். என்மைத்துனருக்கு இரண்டாம் திருமணம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், பெண் சிவநாயகன் பட்டி என்றும்; திருமணம் சிவநாயகன் பட்டியில் நடைபெற்றாலும் இரண்டு மூன்று நாட்கள் முன்னதாகவே பொட்டணம் வந்து விடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் என் மைத்துனர். அந்த ஆண்டு ஆவணியில் திருமணம் நடைபெற்றது. ஐந்து நாட்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு நானும் என் மனைவியும் திருமணத்திற்குப்போய் வந்தோம்.

பெண் வீட்டு நிலையைப் பற்றி இராமச்சந்திர ஆச்சாரியைக் கேட்டேன். அவர் "சிவநாயகன் பட்டியில் ஒரு சிறு

1. தா.பா. பராபரக்கண்ணி-151.
2. ஷை, 155.

குடும்பந்தான்; வீட்டுக்கு முதல் பெண்; அடுத்து ஒரு சகோதரனும் சகோதரியும் உள்ளனர். பெண்ணின் தந்தை சுப்பிரமணிய ரெட்டியார் புரோநோட்டு, பத்திரம் எழுதும் தொழிலை பொழுது போக்கும் தொழிலாக வைத்துக் கொண்டிருந்தாலும் அதில் நல்ல வருவாய் கிடைக்கின்றது; வேளாண்மையிலும் குடும்பத்திற்குத் தேவையான வருவாய் வருகின்றது. தவிர, பல குடும்பங்களில் நடைபெறும் பிணக்கு களையும் சச்சரவுகளையும் தீர்த்து வைப்பார்; நீதிமன்றத் திற்குப் போகும் நிலை ஏற்பட்டாலும் ஒருவருக்கு நன்கு உதவுவார்'' என்று சுருக்கமாக விளக்கினார்.

என் மைத்துனர் தன் வருங்கால மாமனாரைப் பற்றி வானளாவப் புகழத் தொடங்கினார்; ''இனிமேல் எந்த வித வழக்கு ஏற்பட்டாலும் கவலை இல்லை. நம் வீட்டிற்கே ஒரு பெரிய வழக்குரைஞர் வந்துவிட்டார்; இவருக்குத் தெரியாத சட்ட நுணுக்கங்களே இல்லை. எல்லாச் சட்டநுணுக்கங் களும் இவருக்கு அற்றுபடியாயிருக்கின்றன. நாமக்கல்லில் சில பெரிய வழக்குரைஞர்களும் சில விஷயங்களில் இவரைத் தான் யோசனை கேட்கின்றார்கள் எனக் கேள்வி. இவர் கிரயப் பத்திரமோ, கொதுவைப் பத்திரமோ எழுதுங்கால் அதில் இவர் வைக்கிற ''சொட்டை'' புதுதில்லி மேல்நிலை மன்ற நீதிபதிகளாலும் தகர்த்தெரிய முடியாது. நாமக்கல் பக்கத்தில் இவர் புகழ் எட்டுத் திசையினரும் நன்கறிந்தது...'' என்று புகழ் மாலை சூட்டினார்.

இஃது இராமன் இளைய பெருமாளுக்கு அநுமனைப் பற்றிக் கூறிய,

இல்லாத உலகத் தெங்கும்
ஈங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னும் காட்சி

சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொல்இச் சொல்லின் செல்வன்?[1]

என்ற பாடல் நினைவிற்கு வந்தது என் மைத்துனர் இராமசாமியின் புகழ்மாலையைக் கேட்டு. அநுமன் தன் நளினமான பேச்சால் இராமனது மனத்தைக் கவர்ந்தவன். என்மைத்துனர் இராமசாமி தன் வருங்கால மாமனார் சுப்பிரமணியத்தின் சற்றுத் திக்குவாயுடன் பேசும் படாடோபப் பேச்சைக்கேட்டு மயங்கிவிட்டார். அவர் படாடோபமாகப் பேசுபவர் என்பதை நான் திருமணத்திற்குப் பின்னர் தான் அறிந்தேன். இதைக் கேட்ட என் உள் மனம் இப்படி என் மைத்துனர் மதிமயங்கி விட்டாரே என்று கவலைப் பட்டது. என் மனைவியும், தன் அண்ணனைப் பல்லாண்டுகள் கூர்ந்து கவனித்தவளாதலின், "என் அண்ணன் எப்பொழுதும் இப்படித்தான்; முதலில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவார்; இறுதியில் காலால் எற்றிவிடும் நிலைக்குத் தள்ளப்படுவார்" என்று கூறினாள், காலப்போக்கில் இந்த உண்மையைக் காண முடிந்தது.

சில நாட்கள் கழித்து என் மாமனாரும் மாமியாருமாகத் துறையூருக்கு வந்தார்கள். புதுக் குடித்தனம் வைத்து இரண்டாண்டுகட்குப் பிறகு அவர்கள் வந்தது இதுதான் முதல் தடவை. மகள் மருமகனைத் தம் மகன் திருமணத் திற்கு வருமாறு நேரில் அழைத்ததாக இருக்கும் என்று நினைத்து வந்து சேர்ந்தார்கள். இரண்டு நாட்கள் தங்கியும் இருந்தார்கள். இவர்களும் வெள்ளை மனம் உடையவர்கள். பண விஷயத்தில் இருவரும் கெட்டி; மனிதர்களை அளந்து பார்ப்பதில் சிறிதும் அறிவில்லாதவர்கள். நீக்கு போக்கு இல்லாமல் பேசுவார்கள். இவர்கள் வருங்கால ஆண் சம்பந்தி சுப்பிரமணியத்தைப்பற்றிப் பேசுவதை

1. கம்பரா. கிட்கிந்தை-அநுமப். 20.

இன்னும் கேட்க வேண்டும்போல் இருக்கும். நாடாப்பதிவு வசதி அன்று இருந்திருந்தால் அவர்கள் பேச்சைப் பதிவு செய்து வைத்திருப்பேன். இருவரும் தொடர்ச்சியின்றிப் பலவாறு பேசினார்கள். அவர்கள் பேசியதன் முக்கிய கருத்தை மட்டிலும் கூறுவேன்; ''இனிமேல் எந்த வழக்கிற்கும் பெரிய வக்கீலிடம் போக வேண்டிய அவசியமில்லை; எல்லா நியாயங்களும் இவருக்கு அற்றுபடியாகும். சென்னை உயர்நீதிமன்ற நடுவர்கட்கும் அறியமுடியாத சட்ட நுணுக்கங்களை இவர் அறிவார். பாண்டு, பத்திரங்களைத் திறமையாக எழுதுவதில் இவருக்கு நிகர் இவரே. சேலம் மாவட்டத்திலேயே இவரைப்போல் எவரையும் காணமுடியாது. சட்டப் புத்தகங்கள் அச்சாகும்போது தமிழில் ஒரு புத்தகம் இவருக்கு அனுப்பி விடுவார்கள். வீடு முழுவதும் சட்டப் புத்தகங்களால் நிரம்பியிருக்கின்றன'' என்றார்கள். இவர்கள் பேச்சு என் மனைவிக்குச் சிறிதும் ஏற்றதாக இல்லை. ''இவ்வளவு மூடர்களாக இருக்கிறார்களே. இன்னும் ஓராண்டுக்குள் குடும்பத்தில் என்னென்ன நடக்கப் போகின்றனவோ?'' என்று கலங்கினாள். எனக்கும் இவர்கள் பேச்சைக் கேட்டு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

ஒருவர் மற்றவர்மீது அதிகமான பற்று வைத்திருக்கும் போது அதனைத் தடுத்துப் பேசுவது நாகரிகமல்ல திருமணம் ஆகாத நிலையில் சம்பந்தியை இவ்வளவு புகழ வேண்டியதில்லை என்றுகூட நான் சொல்லவில்லை. என் மனைவி தாய் தந்தையர்களுடன் உரிமையுடன் எதையும் பேசலாம்; கடிந்தும் பேசலாம். அவர்கள் பேச்சுக்குத் தாளமும் போடலாம். என் அளவை நான் அறிந்தவன். தனிக் குடும்பம் வைத்தபிறகு முதன்முதலாக வந்திருப்பவர்கள். நன்றாக விருந்து வைத்து உபசரித்தோம். ''இன்னும் ஓராண்டுக் காலத்தில் இதே பேச்சு இருக்குமா? என்று பார்க்கின்றேன். தோசையைத் திருப்பிப் போடுவீர்

கள். தோசை தின்று உண்பதற்குக்கூட முடியாத நிலையைக் காணப்போகிறீர்கள்'' என்று சொல்லி வைத்தாள். என் சிந்தனை வேறுவிதமாகச் சென்றது. திருவல்லிக்கேணி கடற்கரையில் கடலலைகள் மிக உயர்ந்து வருவது நினைவுக்கு வருகின்றது. ஒரு பெரிய அலை வருகின்றது; அதனைத் தொடர்ந்து இன்னொரு பெரிய அலை வருகின்றது. அதனைத் தொடர்ந்து சற்றுத் தொலைவில் மற்றொரு மிகப் பெரிய அலை வருகின்றது. இவற்றைப் பார்க்கும் எனக்கு இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. இந்த மாதிரியாக இருந்தது என் மாமியார் மாமனார் பேச்சு. இந்த அலைகள் தரையில் வந்து மோதித் திரும்பும்போது வருகின்ற அலைகளின் வேகத்தையும் உயரத்தையும் குலைப்பதும் என் நினைவுக்கு வருகின்றது. இந்த மாதிரி ஓரலை பிறிதோர் அலையை விழுங்குவதை இன்னும் சில மாதங்களில் இவர்கள் உணரப் போகின்றார்கள் என்று நினைத்துக் கொண்டேன். இரண்டு நாட்கள் தங்கி மாமனார் மாமியார் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு, ''நான்கு நாட்கள் முன்னதாகத் திருமணத்திற்கு வந்துவிட வேண்டும்'' என்று சொல்லிப் போனார்கள்.

திருமணம் சிவநாயகன் பட்டியில் சிறிய அளவில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் முன்னதாகவே பொட்டணம் சென்று திருமணத்தில் கலந்து கொண்டோம். கூட்டம் அதிகம் இல்லை. இரண்டாவது திருமணந்தானே. திருமணத்தன்றே முதலிரவு நிகழ்ச்சியும் நடைபெற்றுவிட்டது. திருமணத்தன்றே ஒருசில பிரமுகர்கள் காதோடு காதாக என்னிடம் சுப்பிரமணியத்தின் குணாதிசயங்களைப் பற்றி ஓதினார்கள். ''மாமனாரிடம் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும். பல்வேறு யோசனைகளைச் சிறுகச் சிறுக ஓதுவார். அவற்றை ஒரு காதில் வாங்கி மற்றொரு காதில் விட்டு விட வேண்டும். எந்த யோசனையையும் நிறைவேற்றக்

கூடாது. உங்கள் மைத்துனரிடம் தனிமையாக வற்புறுத்திச் சொல்லுங்கள்'' என்று சொன்னவை நினைவிலுள்ளன. நான் அவர்களிடம் ''எனக்கு இவற்றைச் சொல்ல வயது போதாது, மாமனாரைப் பற்றி மிகப் பெருமையுடன் பேசி வருகின்றார். இதுபற்றி ஏதாவது பேசினால் என் மரியாதை போய்விடும்; விரோதமும் நேரிடலாம். ஆகவே எதுவும் பேசேன். நீங்களே பட்டும் படாமல் ஏதாவது குறிப்பாகச் சொல்லி வையுங்கள்'' என்று சொல்லிவிட்டேன். அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். சொன்னார்களோ, சொல்லவில்லையோ என்பதைப் பின்னர் யான் ஆராயவில்லை. சொன்னாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலாகும் என்பதை மட்டிலும் நான் உறுதி கொண்டிருந்தேன். காரணம், நிலைமை அப்படியிருந்தது.

திரும்பவும் பொட்டணம் சென்று ஒருநாள் தங்கிவிட்டுத் துறையூர் திரும்பி விட்டோம். பல்வேறு செய்திகளைக் கேள்வியுற்றபிறகு அந்தச் சம்பந்தம் எங்கட்கு மனநிறைவு தரவில்லை. ஏதோ அழிவுகாலத்திற்கு விதை போட்டாயிற்று என்பது மட்டிலும் என் மனத்திற்குத் தெளிவாகத் தெரிந்தது.

குமிழி—76

## 12. சுப்பிரமணியம் மருமகனைப்பற்றி அறிந்து கொண்டவை

இராமசாமி ரெட்டியார் தன் மருமகனுக்கு முதல் மனைவி உண்டு; அவள்மூலம் ஒரு மகன் உள்ளான். மன வேறுபாட்டால் அவளைத் தள்ளி வைத்துள்ளார். இனி அவளை ஒருக்காலும் சேர்த்துக் கொள்ளார். அவளும்

அவள் மகனும் எருமைப்பட்டியில் தந்தை-தாய் இல்லத்தில் உள்ளார்கள். ஏழாண்டுகட்குமேல் மக்கட்பேறின்றி மைந்தன் பிறந்தும் அவளைத் தள்ளி வைத்ததன் காரணம் மட்டிலும் அவரால் ஊகித்தும் அறியமுடியாது. தீயொழுக்கம் இல்லை என்பதைக் கணவன் உட்பட உலகம் நன்கு அறியும். அந்தப் பெண் பெற்றோர் சொற்கேட்டு மதி கெட்டு நடந்து கொண்டதனால் அதன் பலனை அநுபவிக்கின்றாள் என்பது மட்டிலும் அவருக்குத் தெரிந்திருக்கும்.

தானே புரிவினையாற் சாரும் இருபயனும்
தானே அநுபவித்தல் தப்பாது—தான்நூறு
கோடி கற்பஞ் சென்றாலும் கோதையே; செய்தவினை
நாடிநிற்கும் என்றார் நயந்து.[1]

[கற்பம் - ஊழி; கோதை - பெண்]

இதனால் தன் மகளைக் கணவனின் மனங்கோணாது நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தி இருக்கவேண்டும். தந்தை எப்படியிருந்தாலும் பெண்ணைப்பற்றி ஒரு குறையும் சொல்லுவதற்கில்லை. இராமசாமி ரெட்டியாரும் தன் முதல் மனைவியின் கதையைச் சொல்லி இரண்டாம் மனைவியை எச்சரித்திருக்க வேண்டும்.

இராமசாமி ரெட்டியாருக்கு தங்கையொருத்தி உண்டு. அவள் கணவன் (நான்) கற்றுத் துறைபோய வித்தகன் என்று புகழுடன் ஓர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றுகின்றார், சொற்பப் பூர்வீகச் சொத்துடையவரேயன்றி செல்வச் சிறப்புடையவரல்லர். திருமணம்ஆகி ஏழாண்டுகள் கடந்தும் அத்தம்பதிகட்கு மட்கட்பேறு வாய்க்கவில்லை.

1. நீதிவெண்பா - 47.

இராமசாமி ரெட்டியாரின் தாய் தந்தையர் சூது-வாது அறியாத அப்பாவிகள். அவர்கள் கீழ் அடங்கியவர் அல்லர் தம் மருமகன். குடும்பச்சொத்து முழுவதும் தாய்வழியாக வந்திருந்தாலும் தாய்க்கு அந்தச் சொத்தின்மீது எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது. காரணம், அது பரம்பரைச் சொத்தல்ல. தாய் சுயமாகச் சம்பாதித்தது. அந்தக்கால நிலைப்படி ஆண்டு வருமானம் இருபத்தையா யிரத்திற்குக் குறையாது. நிலபுலங்களும் கையிலுள்ள ரொக்கமும் சேர்ந்தால் சொத்துமதிப்பு நான்கு இலட்சம் இருக்கும். இந்தச் சொத்துக்குரிய மூதாட்டி - இராமசாமி ரெட்டியாரின் தாயைப்பெற்ற பாட்டி - இன்னும் உயிரோ டிருக்கின்றாள். அந்தப் பாட்டிக்குத் தன் மகள்மீதோ மருமகன் மீதோ யாதொரு பாசமும் இல்லை. அந்தப் பாட்டிக்கு ரூபாய் நோட்டுகளைப் பார்த்துக்கூட அவற்றின் மதிப்பை இனங்கண்டு கொள்ள முடியாது.

என் மனைவி பொட்டணத்திலிருந்தவரை (அதாவது நான் துறையூரில் தனிக் குடித்தனம் வைக்கும்வரை) பாட்டிக்குப் பணிவிடைகள் செய்து வருவதுண்டு. பேரன் பணத்தைச் செலவு செய்து விடுவான் என்று தண்டவாளப் பெட்டியின் சாவி எப்போதும் பேத்தி (என் மனைவி) கையில் தான் இருக்கும். பாட்டியறியாமல் தன் தங்கையிடமிருந்து சாவியை வாங்கி தன் செலவுக்கோ குடும்பச் செலவுக்கோ தேவையானவற்றை எடுத்துக் கொள்வது வழக்கமாக இருந்து வந்தது. "பாட்டிக்குப் பேத்தி மேல்தான் உயிர்; அதனால்தான் பெட்டிச் சாவி பேத்தியிடம் உள்ளது" என்று ஊர் மக்கள் பேசிக் கொள்வார்கள். ஆனால் இஃது ஒருவித மயக்கம் என்பதை நான் நன்கு உணர்வேன். "பாட்டிக்குப் பணத்தின்மீது உயிர்; பாசம் பேரன்மீதுதான். பேத்தி ஒரு காவல்காரிபோல் தான்" என்ற உண்மை எனக்குத் தெளி

வாகத் தெரிந்தது. இந்த நிலைமையைச் சுப்பிரமணியமும் ஒருவாறு புரிந்து கொண்டிருக்க முடியும் என்பது என் ஊகம்.

நான் பி. எஸ்சி., பயின்றபோதும் (1937-39) ஒரு விருப்ப ஆவணம் (will) தயாராயிற்று, பல மாதங்கள் வக்கீலுடன் கலந்து விருப்ப ஆவணத்தின் நகல் தயாராகியது; நல்ல தாளில் 50 படிகள் அச்சிடப் பெற்றது. நல்லெண்ணத்துடன் தான் அந்த விருப்ப ஆவணம் தயாரானது. இந்தச் சொத்து பாட்டிக்குப் பிறகு தம் தாய்க்கு வரும் என்பதை என் மைத்துனர் நன்கு அறிந்திருந்தார். பாட்டிக்குப் பிறகு தன் தாயார்தான் சொத்தை ஆள்வார் என்பது அவருக்கு நன்கு தெரியும். இதை அவர் விரும்பவில்லை. தம் அன்னையை விடப் பாட்டி பன்மடங்கு உயர்ந்தவள் என்று அடிக்கடி சொல்லி வருவதை நான் கேட்டிருக்கின்றேன். தாம் இரண்டாவது திருமணம் புரிந்து கொண்டால் முதல் மனைவி ஜீவனாம்சத்திற்கு வழக்குத் தொடர்ந்தால் என்ன செய்வது? அவளுக்கு மகன் ஒருவன் இருக்கின்றான்; அவனை மைனராகப் (Minor) போட்டுக் கொண்டு சொத்தின் பாகப் பிரிவினைக்கு வழக்கு தொடுக்கவும் கூடுமல்லவா? இந்த முறையில் எழுந்த சிந்தனைதான் விருப்ப ஆவணம் தயாரானதற்குத் காரணம் என்பதை நான் அறிவேன்.

இந்த விருப்ப ஆவணம் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வைத்திருந்த சிறு அச்சகத்தில்தான் அச்சிடப் பெற்றது. நானும் என் மைத்துனருடன் பலமுறை அச்சகத்திற்குப் போயிருக்கின்றேன். பார்வைப் படிவங்களையும் (Proofs) திருத்தியிருக்கின்றேன். விருப்ப ஆவணத்தின் சாராம்சம் இது : (1) இந்தச் சொத்து முழுவதும் (விவரம் விருப்ப ஆவணத்தில் தரப்பெற்றிருந்தது) தான் சுயமாகச் சம்பாதித்தது; (2) தனக்குப் பிறகு இது தன் மகளைச்

சாரும்; ஆனால் தன் மகளுக்கு இதை விற்கவோ அல்லது வில்லங்கப் படுத்தவோ உரிமை இல்லை. இக்காலத்தில் பேரனுக்கு எந்தவித உரிமையும் இல்லை. இந்தச் சொத்தின் வருவாயை மட்டிலும்தான் தன் மகள் அநுபவிக்கலாம். (3) தன் மகள் காலத்திற்குப் பிறகுதான் சொத்தில் தன் பேரனுக்கு உரிமை உண்டு. அப்பொழுது இந்தச் சொத்தை அநுபவிக்கத் தன் பேரனுக்குச் சகலவித உரிமைகளும் உண்டு இந்த விருப்ப ஆவணத்தைத் தன் மாமனார் சுப்பிரமணியத்திற்குக் காட்டியிருப்பார்; இருவரும் இதைப் பற்றிப் பேசி இருப்பார்கள். ஆகவே, இந்த விருப்ப ஆவணத்தைப் பற்றிச் சுப்பிரமணியம் நன்கு அறிந்திருந்தார்.

நான் சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு மலையாளச் சோதிடரைக் கொண்டு என் மைத்துனரின் சாதகத்திற்கு ஆயுள் முழுமைக்கும் வார பலன் எழுதப் பெற்றது. நாமக்கல்லில் சோதிடருக்கு அறைவாடகை, உணவு விடுதிச் செலவு முதலியவற்றைஎன் மைத்துனர் ஏற்றுக் கொண்டார். குறைந்தது இரண்டாண்டுகள் இவ்வாறு எழுதும் பணி நடைபெற்றது சோதிடருக்கு ரூ.2000/-வரை ஊதியமாகத் தந்தார் என்று அறிந்தேன்.

தண்டவாளப் பெட்டியில் இலட்சம் ரூபாய் வரைக் கற்றைக் கற்றையாக ரூபாய் நோட்டுகள் இருக்கின்றன. சோதிடரோ இன்ன தேதி முதல் இன்ன தேதிவரை இது நடைபெறும் என்று எழுதிவைத்திருக்கின்றார். அதன்படி நிறைவேற்றுவதுதான் என் மைத்துனரின் வேலை. ரொக்கம் வேகமாகக் கரையத் தொடங்கியது.

திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும் என்று சாதகத்தில் வாரப்பலன் சொல்லப் பெற்றிருக்கும். பெண் பார்த்து இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து

கொண்டார். சொத்துகள் வாங்குதல் முதலிய நற்காரியங்கள் நடைபெறும் என்று குறிப்பில் எழுதப்பெற்றிருந்தது. உடனே ஊர் அருகில் குட்டைமேட்டில் ஒரு நிலம் விலைக்கு வந்தது. அதைப் பேசிக் கிரயத்தை முடித்துக் கொண்டார். புதிய தொழில்கள் தொடங்க வாய்ப்புண்டு என்று வாரப் பலனில் சொல்லப் பெற்றிருக்கும். உடனே நெல் அரைக்கும் ஆலையை நிறுவக் கட்டடவேலை தொடங்கினார். பெரிய அதிகாரிகள் பயணத் திட்டத்தை வகுத்துக்கொண்டு பயணங்கள் செய்வதைப்போல் வார பலனில் சொல்லியபடி காரியங்களைச் செய்துவந்தார். "வளவனாயினும் அளவறிந்து அழித்து உண்"[2] என்ற பாட்டியின் பொன்மொழியைச் சிந்தித்தார் இலர்.

அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.[3]

என்ற வள்ளுவர் வாக்கை ஓர்ந்திலர். ஓராண்டுவரை திருக்குறள் பாடம்கேட்டு அறிந்தவர்தான். என் செய்வது? பணத்தை எவ்வளவுதான் பத்திரப்படுத்தி வைத்தாலும் போகிற நேரம் வந்தால் போய்விடும் என்று சாதாரண மக்கள் பேசிவருவதையும் அறிந்தவர்தான். ஒருசமயம் திருமணம் முடிந்தபிறகு மாமனார் அடிக்கடிவந்து முகாம் அமைத்துக் கொண்டிருந்த காலத்தில் மணியக்காரர் திண்ணைக்கு என் மைத்துனர் வந்தார். 'மணியாரன்' என்று வழங்கப்பெறும் நல்லப்ப ரெட்டியார் "என்ன இராமசாமி, இப்போது வண்டி எப்படி ஓடுகின்றது?" என்று கேட்க, என் மைத்துனர் "தலைகீழாக ஓடுகின்றது!" என்றார். நான். "நிறுத்தும் விசை வண்டியில் பொருத்தப் பெற்றிருந்தால் நன்றாக இருக்கும்" என்ற ஒரு குறிப்பைத்

2. கொன்றைவேந்தன்-81
3. குறள்-479 (வலியறிதல்)

தந்து வாளா இருந்துவிட்டேன். இந்தக் குறிப்பை நல்லப்ப ரெட்டியார் புரிந்துகொண்டார். என் மைத்துனர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது' என்ற பழமொழி பொருளை இழந்துவிடுமா என்ன?

பொதுவாக, மாப்பிள்ளை மாமனார் இல்லத்திற்குப் போய் வருவதைக் கேட்டதுண்டு; கண்டதுண்டு. ஆனால் என் மைத்துனர் குடும்பத்தில் என் மைத்துனர் மாமனார் இல்லத்திற்குப் போவதே இல்லை; மாமனார்தான் அடிக்கடி "டேரா" அடித்துக்கொண்டு மருமகன் வீட்டில் தங்கிவிடுவார்; அவரது இல்லத்தரசியும் மகளுக்கு உதவுவதுபோல் கணவரைத் தொடர்ந்து வந்துவிடுவாள். போதாதற்கு இரு பிள்ளைகளும் வந்து விடுவார்கள். ஆண்டு முழுவதும் பெரும்பாலும் என் மைத்துனர் இல்லம் விருந்துக்கோலம் கொண்டிருக்கும். நான் ஏதோ ஒரு சமயம் என் மனைவியுடன் வந்து ஒன்றிரண்டு நாட்கள் தங்கும்போது நல்லப்ப ரெட்டியார் வண்டி வண்டியாகக் கதைகள் சொல்வார். அவற்றைக் கேட்கும்போது கண்ணீர் விடாத குறைதான்.

குமிழி-77

## 13. சதியின் பல்வேறு வடிவங்கள்

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த உடற்புலியைப் புழுவும் கொல்லும்;
வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார்;
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்;
கீழ்மேலாம் மேல்கீழாம் கிழக்கு மேற்காம்;
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவர், விதிவகுத்த போழ்தின் அன்றே[1]

1. பா.க. : பாஞ்சாலி சபதம்-147

விதியின் விளையாட்டை (சதி என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்) இப்படிக் காட்டுவர் பாரதியார். ஒவ்வொருவர் வாழ்விலும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நேரிடலாம்; எதிர்ப்புகள், சதிகள் முதலியவை நிகழலாம். தருமம் அழிவெய்தலாம்; சத்தியமும் பொய்யாகலாம்; பெருமைத் தவங்கள்பெயர்கெட்டு மண்ணாகலாம். மனத்தை அமைதியாக்கிக் கொண்டு இவற்றைத் தாக்குப்பிடிக்கவேண்டும். அப்பொழுது அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் தோன்றும். தெய்வச் சிந்தனையுடன் செயற்பட்டால் எல்லாம் சரியாய் விடும்.

சோதிடத்தில் பெருநம்பிக்கை கொண்டவர் தம் மருமகன் என்பதை நன்கு தெளிந்த சுப்பிரமணியம் பல்வேறு வகையில் செயற்படத் தொடங்கினார். சோதிடர் ஒருவர் எங்குத் தென்பட்டாலும் அவரை இட்டுவந்து மருமகனுக்கு அறிமுகப்படுத்தி வைப்பார். பல சோதிடங்களை இங்ஙனம் கொணர்ந்து என் மைத்துனர் சாதகம், என் சாதகம் என் மனைவியின் சாதகம், தம் மகனின் சாதகம், திருமணமான தம் மகளின் சாதகம் - இவற்றையெல்லாம் ஆராய்வதைப் பொழுதுபோக்காகக் கொள்வார்கள். சில சோதிடர்களைக் கைக்குள்போட்டுக் கொண்டு என்மைத்துனருக்கு விருப்பமானவற்றைச் சொல்லச் செய்வார். தம் எதிர்காலத் திட்டங்கள் பழுப்பதற்கு ஏற்பச் சில செய்திகளைச் சொல்லச்செய்வார். ஒவ்வொரு சோதிடரையும் ஒவ்வொரு விதமாக நெறிப்படுத்திச் செயற்படச் செய்வார். என் மைத்துனர் வெள்ளை மனிதர்; எதையும் உடனே நம்புபவர். 'வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை[2] என்ற பாட்டியின் வாக்கு என் மைத்துனர் விஷயத்தில் முற்றிலும் பொருந்தும்.

மருமகனுக்கு மகிழ்ச்சியூட்டக் கூடியது முதல் மனைவியைப் பற்றிய கேடு பயக்கும் செய்தி. என் மைத்துனரின்

---

2. கொன்றை வேந்தன்-87

சாதகத்தை ஆராயும் சோதிடர்களையெல்லாம் நக்கமுறையில் நெறிப்படுத்தி "இந்தக் கோள் அந்தக் கோளை நோக்குகின்றது. திசாபுத்தி பலன்களும் நன்முறையில் உள்ளன என்று சொல்லுவதற்கில்லை. இந்த வீட்டில் ஏதோ 'துர்மரணம்' ஏற்படும் என்பதற்கு கிரகங்களின் இருப்பு சூசகமாகக் குறிப்பிடுகின்றது. என்ன என்பதைத் திட்டமாகச் சொல்லுவதற்கில்லை" என்று சொல்ல வைப்பார். என் மைத்துனர் தாம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதனால், குழந்தையுடன் தாய் வீட்டில்வாழும் தன் முதல் மனைவி மனம் உடைந்து தன் மகன் இருப்பதையும் மறந்து தற்கொலை செய்து கொள்வாள் என்று நினைப்பார். இந்த வழியில் சிந்தனையைச் செலுத்தும் முறையில் சுப்பிரமணியம் சோதிடரிடம் குறுக்குப் பேச்சுகளை உதிர்ப்பார். சோதிடரும் கிரகங்களின் நிலையையும், தீயபலன்களைக் குறிப்பிடும் நிலையையும் உணர்த்தும் போக்கில் சோதிட நூலில் உள்ள ஒரு பாடலை இசையுடன் பாடி என் மைத்துனரின் மனம் அதில் ஈடுபடும்படி செய்வார். உடனே என் மைத்துனர் மலையாள சோதிடர் எழுதித் தந்துள்ள குறிப்பேடுகளின் உரிய பக்கங்களைப் புரட்டி அதிலுள்ள பலன்களும் இந்தச் சோதிடர் சொல்லும் பலன்களும் ஒத்து வருகின்றவா என்று சோதிக்கத் தொடங்கி விடுவார். அடிக்கடி வெவ்வேறு சோதிடர்களைக் கொணர்ந்து சிலஆண்டுகள் சோதிட ஆராய்ச்சியிலேயே காலத்தைப் போக்குவார். இந்த மயக்கத்தால்-அற்ப மகிழ்ச்சியால்-மாமனார் குடும்பத்துடன் அடிக்கடி வந்து வாரக்கணக்கில் முகாம் போடுகின்றாரே என்று சிந்திப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்து விடுவார்.

சோதிடர்களும் சுப்பிரமணியத்தின் சூழ்ச்சியை ஒருவாறு புரிந்துகொண்டு தம் கற்பனையைப் பயன்படுத்தி இவர் மகனைப்பற்றிப்(பெயர் இப்போது நினைவில் இல்லை)

பலன் சொல்லும்போது இவர் மனம் மகிழும் வண்ணம் சொல்லுவார்கள். "இவன் சாதகத்தில் கிரகங்களின் நிலை யையும் அவை ஒன்றையொன்று பார்க்கும் நிலையை நோக்கும்போது தீயபலன்களைச் சொல்வதற்கே வாய்ப் பில்லை. இஃது இராஜ அம்ச முள்ள ஒரு சாதகம் வாழ்க்கை முழுவதும் சுக ஜீவனத்தைச் சொல்லுகின்றது." என்று புகழ்ந்து பேசுவார்கள். அப்போது பையன் இரண் டாம் படிவ வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். தந்தையின் பேச்சையும் மீறி நிற்கும் இவனுடைய பேச்சு. பெரியவர்கள் நடுவிலும் வந்து அமர்ந்து கொண்டு பேசத் தொடங்குவான்.

நாமக்கல் உயர்நிலைப்பள்ளியில் முதல்படிவம் படித்துக் கொண்டிருந்தான் அவன் தமக்கையின் திருமணத்தின் போது. மூன்றாவது படிவத்திற்குமேல் படிப்பு அவனை எட்டவில்லை. என் மைத்துனர் இரண்டாம் திருமணம் ஆகி ஒன்றரையாண்டுக்குள் என் மனைவிக்குத் தாய்வீட்டு உறவு அறவே இல்லாமல் போய்விட்டது. நாங்கள் பொட்டணம் போவது-வருவது நின்றுபோனதால் இப்பையனைப் பற்றி ஒன்றும் தெரியாமல் போய்விட்டது. படிப்பை முடித்துக் கொண்டதால் ஊர் சுற்றுகின்றான் என்றும், பெரிய இடங் களில் ஏதோ சிறு களவுகள் செய்து அடிக்கடி மாட்டிக் கொள்ளுகின்றான் என்றும் செவிவழிச் செய்திகள் எங்களை எட்டும். நாங்கள் அவற்றைப் பொருட்படுத்துவதுமில்லை; மேலும் மேலும் விருப்பத்துடன் விசாரிப்பதும் இல்லை. ஒன்றிரண்டு முறை சிறைத்தண்டனை பெற்றான் என்னும் செய்தி எங்களை எட்டியது.

இச்சமயத்தில் யாரோ எப்பொழுதோ சொன்ன ஒரு சிறு கதை நினைவிற்கு வருகின்றது. ஒரு செல்வக் குடும் பத்தில் கணவன்-மனைவி மிக ஒற்றுமையாக அன்பு மிளிர வாழ்ந்து வந்தனர். அக்குடும்பத்திற்கு வேண்டிய ஒருவன்

கயவனாக மாறத் தொடங்கினான். கணவனும் மனைவியும் இவன்மீது பற்றும் பாசமும் வைத்திருந்ததால் இவன் சொல்லுவதை எல்லாம் நம்பி வந்தனர்; இவன் கயவனாக மாறியதைச் சிறிதும் ஐயம் கொள்ளாதிருந்தனர். ஒருநாள் அவன் மனைவியைத் தனியாகச் சந்தித்து "உன் கணவன் சென்ற பிறப்பில் உப்புக்குறவனாக இருந்ததாகத் தெரிகின்றது" என்றான். இவன் சோதிடமும் ஆரூடமும் அறிந்தவனாகவும் நடிப்பவனாதலால் அதை அந்தப் பெருமாட்டி நம்பினாள். "எப்படித் தெரியும்?" என்று கேட்க, "கணவன் தூங்கும்போது அவர் உள்ளங்காலை நக்கிப்பார்; உண்மை தெரியும்" என்று சொல்லி வைத்தார். இப்படியே கணவனைத் தனியாகச் சந்தித்து, "உன் மனைவி அடிக்கடி உங்களோடு 'வள்வள்' என்று விழுவதால் அவள் சென்ற பிறப்பில் நாயாக இருந்திருக்கவேண்டும்" என்றான். "இதை எப்படி அறிவது?" என்று அவர் வினவ, "நீங்கள் தூங்கும் போது உங்கள் உள்ளங்காலை அவள் நக்குவாள்; அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்." என்று சொல்லி வைத்தான்.

இருவரும் இதைச் சோதித்து அறியும் காலத்தை எதிர் பார்த்திருந்தனர். ஒருநாள் கணவனும் மனைவியும் ஒரு படுக்கையில் படுத்திருந்தனர். கணவன் சோர்வாக இருப்பதாகக் கூறி உறங்கிவிடுகின்றார்; குறட்டையொலியும் எழச் செய்கின்றார். மனைவியும் வீட்டு வேலை அதிகமிருந்ததால் அலுப்பாக இருப்பதாகக் கூறி உறங்கிவிடுகின்றாள். இருவர் செயல்களும் வெறும் நடிப்பே; சோதனை செய்யும் நோக்கத்தில் இருவரும் பாசாங்கான தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். நள்ளிரவு வந்ததும், மனைவி கணவனின் உள்ளங்காலை நக்கினாள்; உப்பு கரித்தது. "நீங்கள் சென்ற பிறப்பில் உப்புக்குறவன் என்று சோதிடம் கூறியது சரியாய்ப் போய்விட்டது. குறவனைக் கட்டிக் கொண்டது என் தலை எழுத்து" என்று மனங் கவன்றாள். கணவனும் "உன்

முன்னைய பிறப்பு நாய்ப்பிறப்பு என்று சோதிடர்சொன்னது சரியாய்ப் போய்விட்டது. இப்படி ஒரு நாயைக் கட்டிக் கொண்டது என் தலை எழுத்து'' என்று வருந்தினாள். அன்று முதல் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்ந்தனர்; என்றுமே ஒன்று சேரவில்லை. இஃது ஒரு கதை; ஆனால் இத்தகைய கதையைப் போன்ற நிகழ்ச்சி என் மனைவியின் பிறந்த வீட்டில் நிகழ்ந்தது. இதனை அடுத்த குமிழியில் விளக்குவேன்.

சோதிட ஆராய்ச்சி நடைபெற்றபோது என் சாதகக் குறிப்பு தரப்பெற்றதாம். இதன்படி (1) எனக்கு மக்கட் பேறு இல்லை, (2) எனக்கு முப்பத்தெட்டு வயதில் ஆயுள் முடிகின்றது, (3) இரண்டாவது திருமணம் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை என்று சோதிடரைச் சொல்ல வைத்தார்கள். அடுத்து என் மனைவியின் சாதகக் குறிப்பைத் தந்து (1) இந்தச் சாதக ருக்குப் புத்திரப் பேறு இல்லை (2) இன்னும் பதினைந்து ஆண்டுகளில் (ஆராய்ந்த ஆண்டு 1943) கைம்பெண் நிலை தென்படுகின்றது என்று சொல்லி வைத்தார்கள். பல சோதிடர்களைக் கொண்டு இந்தப் போக்கிலேயே சொல்ல வைத்தார்கள். சோதிடப் பைத்தியருக்கு இது போதாதா என்ன? என் மைத்துனர் இவற்றை முற்றிலும் நம்பிவிட்டார்; அவரது பெற்றோர்களையும் நம்ப வைத்துவிட்டார். என் மைத்துனர் இரண்டாவது திருமணம் ஆகி ஓராண்டிற்குமேல் உறவு தொடர்ந்திருந்ததால், பேச்சு வாக்கில் இக்கருத்து களை சிறிது சிறிதாக உதிர்த்தார்.

கிறிஸ்துமஸ் விடுமுறை என நினைக்கின்றேன்; டிசம்பர்-சனவரி விடுமுறையில் (1943) என் மனைவியின் வற்புறுத்த லின்பேரில் பொட்டணம் சென்றோம். நாங்கள் சென்ற போது சுப்பிரமணியமும் அங்கு வந்தார். நாங்கள் தங்கி

யிருந்த பத்து நாட்களும் அவரும் தங்கியிருந்தார். நாடோறும் விருந்து உபசாரங்களுக்குக் குறைவில்லை. இந்த சமயத்தில்தான் ஒருநாள் மணியக்காரர் திண்ணையில் நல்லப்பரெட்டியார் "என்ன இராமசாமி, இப்போது வண்டி எப்படி ஓடுகின்றது?" (குமிழி-75) என்ற கேள்வியை எழுப் பியதாக நினைவு.

இந்த விடுமுறையில் என் மனைவி பொட்டணம் செல்வ தற்குக் காரணம் என்ன? தன் பெற்றோர் தனக்குத் தருவ தாகப் பிரகடனம் செய்திருந்த பத்தாயிரம் ரூபாயை எப்படி யாவது வாங்கி வந்துவிடவேண்டும் என்பது திட்டம். பத்து நாட்கள் இதற்காக முயன்றும் பயன் இல்லை. இப்போது தாய் தந்தையர்கள் கொடுத்துவிடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். என் மைத்துனர் சிறிதும் அசையவில்லை. இரண்டாண்டுகட்கு முன்னர் துறையூரில் தனிக்குடும்பம் வைக்கும்போது "தங்கையின் கணக்கைத் தீர்த்துவிடலாம்" என்று என் மைத்துனர் சொன்னபோது அவர் பெற்றோர்கள், "அதற்கு இப்போது என்ன அவசரம்? புத்திர பாக்கியம் ஏற்படட்டும். அப்போது தந்துவிடலாம்" என்று சொல்லித் தடுத்தார்கள். இப்போது அவர்கள் 'தந்து விடலாம்' என்றபோது என் மைத்துனர் ஏதேதோ சொல் லிக் கொண்டு காலம் போக்கினார். "என் மனைவி இலவு காத்த கிளி போலாவாள்" என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. சுப்பிரமணியம் வீட்டுப் பெண்ணை மணந்த பிறகு 'இப்பணம் தனக்குக் கிடைப்பது கஷ்டம்' என்று நினைத்ததுதான் என் மனைவி பிறந்தகத்திற்கு வந்திருக் கின்றாள் என்பதை அறிந்தேன். அப்போதும் சரி, இப்போதும் சரி என் மாமனார் வீட்டுப் பணத்தைப் பற்றி ஆசை வைத்ததில்லை. 'சொத்து, சுகம்' என்று அப்போது என் மனம் எண்ணவில்லை. 'என கடன் பணி செய்து

கிடப்பதே' என்ற உயர் எண்ணம் என்னை ஆட்டிப் படைத்ததால் பள்ளி முன்னேற்றத்திலேயே என் கவனமெல் லாம் சென்றது.

பத்துநாள் விடுமுறை நெருங்கிக் கொண்டிருந்தது. நானும் பொறுமை இழந்து என் மைத்துனரிடம் ''ஏதாவது வழி செய்து எங்களை அனுப்பிவிடுங்கள்'' என்றேன். அவர் ''வக்கீலைக் கலந்து யோசித்துதான் செய்யவேண்டும்'' என்றார். ''இதில் சட்ட நுணுக்கம் என்ன வேண்டியிருக் கின்றது? ரொக்கத்தைக் கொடுத்தனுப்புவதற்கு வக்கீல் எதற்கு?'' என்றேன். ''மாமனாரே நீதிபதிபோல்—பெரிய வழக்குரைஞர் போல்—பக்கத்திலிருக்க—அதுவும் இப்போது பொட்டணத்திலே இருக்க—நாமக்கல் பயணம் எதற்கு?'' என்ற எண்ணம் வெளிக்கிளம்ப இருந்தது; அப்படியே அடக்கிக் கொண்டு மௌனமானேன். ஆனால் ''இவர்கள் வீட்டுச் சீதனப் பணம் கருச்சிதைவு கதைதான்; அல்லது ஆயுதப் பிரசவம்தான்'' என்று மனத்தில் தெளிவாகத் தெரிந்தது.

என் மைத்துனர் என் மனைவியிடம் ''உன் அம்மா பேரில் ரூ. 1700/- ரூ. 500/-க்கு உள்ள இரண்டு புரோநோட்டு களையும் முதலில் மேடோவர் வாங்கு; நான் தருவதை உன்னிடம் இருப்பதாக நினைத்துக் கொள்.'' என்று கூற, அவர் சொன்னபடி என்தாயை வற்புறுத்தி இச்செயலை ஒரே நாளில் நிறைவேற்றிக் கொண்டாள். ஆனால் போடி நாயக்கன்பட்டி (1) மிட்டாதார் பொன்னுசாமி ரெட்டி யார் (2) அவர் தம்பி கிருஷ்ணராஜு ரெட்டியார் (3) அவ் வூரிலுள்ள இராமநாதன் இவர்கள் என்மாமியாருக்குஎழுதித் தந்துள்ள முறையே ரூ. 3000/- ரூ. 1000/- ரூ. 1000/- என்ற தொகைகளுக்குரிய புரோநோட்டுகளைப் பற்றிப் பேச்சே எழவில்லை. அந்த நோட்டுகள் என் மைத்துனரிடம்

இருந்தன. நான் துறையூரில் புதுக்குடும்பம் வைப்பதற்கு இரண்டு மூன்று மாதங்கட்கு முன்னர்தான் இந்தப் புரோ நோட்டுகள் ஏற்பட்டன.

இந்த மூவரும் நான் பொட்டணத்திலிருந்தபோது பொட்டணம் வந்து இத்தொகைகளைக் கடனாகப் பெற்றுக் கொண்டு சென்றனர். என் மனைவிக்குச் சீதனமாகச் சேர வேண்டிய ரூ.10,000/-இல் ரூ. 5,000/-தன் தாய் பேரில் இருக்கட்டும்; தாய்க்குப் பிறகு இது மகளுக்குத் தானே சேரும் என்று கருதி இந்த ஏற்பாடு செய்யப்பெற்றது. இந்த மூன்று புரோ நோட்டுகளும் என் மைத்துனர் கைவசம் இருந்தன. இவற்றைப்பற்றி என் மைத்துனரும் பேசவில்லை; என் மனைவியும் பேச்செடுக்கவில்லை. "ஜமீந்தாரிடம் இருக்கும் பணம் தம் கையகத்தது" என்று எண்ணிக்கொண்டு வாளா இருந்துவிட்டார்கள் போலும்! என் மைத்துனரின் 'கபட நாடகத்தை' அப்போது நான் புரிந்துகொள்ளவில்லை. 'இதில் சூழ்ச்சி ஏதோ இருக்கின்றது' என்பது மட்டிலும் எனக்குத் தெரிந்தது. இருந்தும் நான் இதைப் பற்றி ஒன்றும் பேசாது வாய்மூடி மௌனமானேன்.

எங்கள் திருமணத்திற்குமுன் (1936க்கு முன்) ஏதோ ஒரு குடும்பத்தில் கொடுத்த ஒரு கடனுக்கு ரூ 1000/-க்கு ஒரு புன்செய் காடு (சுமார் பதினாறு ஏக்கர்) என் மனைவியின் பேருக்கு ஏலம் எடுத்து வைத்திருந்தார்கள் என் மாமனார் வீட்டார். அஃது அந்தச் சமயம் (1943) ரூ. 5000/-க்குமதிப்பு இருந்தது. இதை மனத்தில் எண்ணிக் கொண்டு ரூ. 5000/-க்குப் புரோ நோட்டுகளும் ரூ 5000/- மதிப்புள்ள காடும் தன் தங்கைக்கு ரூ 10000/-க்கு ஈடுசெய்யப் பெற்று விட்டது என்று என் மைத்துனர் கருதியிருக்கலாம் என்று என் மனத்திற்குப்பட்டது. ஆனால் அன்று முதல் இன்று வரை (1989) வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

இவற்றைத் தவிர, சுமார் இரண்டு ஏக்கர் அளவும் ரூ 2000/-மும் மதிப்புள்ள ஆலத்துடையாம் பட்டியிலுள்ள ஒரு நஞ்சைநிலம் என் மாமியார் பேரில் ஏலம் எடுக்கப் பெற்றிருந்தது. இதையும் இந்தச் சமயத்தில் ஒருவரும் பேச வில்லை. இன்னும் சுப்பிரமணியத்தின் சதித் திட்டங்கள் செயற்படவில்லை என்பது மட்டிலும் எனக்குப் புரிந்தது. தவிர, இந்த விவரங்களையெல்லாம் என் மைத்துனர் தம் மாமனாருக்குச் சொல்லியிருக்க முடியாது. இன்னும் அவர் மாமனாரிடம் ''எடுப்பார் கைப்பிள்ளை'' யாகவில்லை. அப்படி ஆக்கிக் கொள்ளவும் அவர் கனவிலும் கருதியிருக்க மாட்டார்; என் மைத்துனருக்கும் அப்படித் தன்னை ஒருவரும் ஆக்க முடியாது என்ற தன்னம்பிக்கை இருந்தது. இதனை நான் அறிந்தவாறே, சுப்பிரமணியமும் அறிந் திருப்பார்.

இவற்றைத் தவிர சுமார் 24 சவரன் எடையுள்ள தங்க ஒட்டியானம் ஒன்றும், 36 சவரன் எடையுள்ள காசுமாலை ஒன்றும் என் மைத்துனர் வீட்டிலேயே இருந்து வந்தன. என் மனைவித் திருமேனியில் நாற்பது சவரன் மதிப்புள்ள நகை களும், என் மாமியார் திருவுடம்பில் முப்பது சவரன் மதிப் புள்ள நகைகளும் இருந்து வந்தன. 1941 செப்டம்பரில் என் ஒன்றுவிட்ட தம்பியின் திருமணத்தின் பொருட்டு ஒட்டி யாணமும் காசுமாலையும் எங்களை வந்தடைந்தன. என் மைத்துனர் திருமணத்தின்போதும் அவை எங்களிடமே இருந்தன. பாதுகாப்பின் பொருட்டுக் கோட்டாத்தூரில் நம்பிக்கையுள்ள ஒரு செல்வர் வீட்டில் வைத்திருந்தோம். என் மைத்துனர் திருமணத்தின்போதுகூட அவற்றைப் பயன் படுத்தவில்லை. ஆக நூறு சவரன் மதிப்புள்ள சீதனமாக வரவேண்டிய நகைகள் எங்கள் வசத்திற்கு வந்துவிட்டன. ரூ 2200/- மதிப்புள்ள புரோநோட்டுகளும் எங்களை

வந்தடைந்தன. இனிமேல் 'முருகன் திருவிளையாடல்கள்' போல் சுப்பிரமணியத்தின் 'திருவிளையாடல்கள்' —சூழ்ச்சிச் செயல்கள் தொடங்கப் போகின்றன.

குமிழி—78

## 14. சதியின் விசுவரூபம்

ஆகுவ தாகுங் காலத்து
 அழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று
 போற்றினும் போதல் செய்யும்.[1]

என்ற கம்பன் வாக்கு இக்குமிழிக்கு முன் தலை காட்டுகின்றது. 'காலத்தில் ஆக வேண்டியது ஆகியே தீரும்; அழிய வேண்டியதும் அழிந்து சிதறிப் போகும். அழிதன்மாலைத்தாகிய அதனை அருகில் நின்று பாதுகாத்தாலும் அது போயே தீரும்'—இந்த மாபெரும் உண்மையைக் கும்பகருணன் வீடணனுக்கு எடுத்துக் காட்டுகின்றான். இந்த உண்மை என் மைத்துனர் குடும்பத்திற்கு முற்றிலும் பொருந்துவதை உணர்ந்ததால் குமிழி எழுவதற்கு முன் முந்திரிக் கொட்டைபோல் முன்னர் எழுந்துவிட்டது இப்பாடல்.

என் மைத்துனரின் பலஹீனம் ஒன்று, சோதிடப் பைத்தியம்; மற்றொன்று, நீதிமன்ற வழக்குகளில் பங்கு கொள்வது; மூன்றாவது, முப்பத்தைந்து வயது வரையிலும் குடும்பப் பொறுப்பு தரப்பெறாமையால் ஏற்பட்ட விளைவுகள். எலி கருவாட்டின்மீது கொண்ட ஆர்வத்தால் பொறியில் மாட்டிக் கொள்வது போலவும், தூண்டிலிலுள்ள நாக்குப்பூச்சியின்மீது கொண்ட ஆசையால் மீன் தூண்டு

1. கம்ப. யுத்த. கும்பகருணன்வதை-166.

வில் சிக்கிக் கொள்வது போலவும் என் மைத்துனர் மாமனார் வழக்குகள் பற்றிக் கூறிய கதைகளால் மயங்கி விட்டார். இந்த மயக்கம் பரம்பரையாக—மூன்று நான்கு தலைமுறைகளில் திரட்டிய செல்வம்—ஒரு தலைமுறைக்கும் குறைவான காலத்தில் அழிந்தொழிந்தது.

'கரைப்பார் கரைத்தால் கல்லும்கரையும்' என்பார்கள். இராமாயணத்தில் கூனியும், மகாபாரதத்தில் சகுனியும் முறையே கைகேயியின் மனத்தையும், துரியோதனனின் மனத்தையும் நேர்முறையில் அறவுரை கூறிக் கெடுத்தார்கள்' கைகேயி கேட்காமலேயே மந்தரை அறவுரை வழங்கினாள்; துரியோதனன் பொறாமையினால் தனக்கு நேரிட்ட துன்பங் களைச் சொன்ன பிறகுதான் சகுனி தலையிடுகின்றான். இங்கு என் மைத்துனரின் உளப்பாங்கையும் மனப்போக்கை யும் நன்கறிந்த சுப்பிரமணியம் நேரடியாக எந்த அறவுரை களையும் வழங்குவதில்லை. தாம் கேட்ட வழக்குகளையும் நேரில் கண்ட வழக்குகளையும் கதைகள் போல் சோடித்து வழங்குவார். அவற்றில் தம் கைங்கரியம் ஏதாவது இருந்தால் அதைப் பெருக்கிக் காட்டுவார். இவை யெல்லாம் ஓமியோபதிக் குளிகைகள்போல் என் மைத்துன ருக்கு மிக இனிப்பாக இருக்கும். தவிர, இவை சிறந்த கருத் தேற்றங்களாக (Suggestions) அமைந்து அவர் மனத்தைச் சிந்திக்கவும் செய்யும்; செயலில் இறங்கவும் செய்யும். சொல்லுவோர்மீது அதிக நம்பிக்கையும் பற்றும் பாசமும் வைத்திருந்தால், கருத்தேற்றங்கள் அற்புதமாகச் செயற்படும் என்பது எல்லோரும் நன்கறிந்த ஓர் உளவியல் உண்மை.

நல்ல எண்ணத்தோடு பல நல்ல வழக்குரைஞர்களோடு கலந்தாலோசித்து சொத்து அழியக் கூடாதென்று சிறந்த முறையில் தயாரித்த இறுதி விருப்ப ஆவணத்தை (will) சுப்பிரமணியத்தின் கருத்தேற்றங்கள் ஒரு நொடியில் சிதைந்

தெறிந்தன. இச்செயலே பரம்பரையாகத் திரட்டிய செல்வம் அழிவதற்கு ஓர் உற்பாதம்போல் அமைந்தது. இந்தக் குமிழிகளின் முதற்பகுதியில் (குமிழி-57) பாட்டியின் மனத்தைப் பணத்தாசைகாட்டி எப்படி எப்படியெல்லாம் என் மைத்துனர் மாற்றி வந்தார் என்ற விவரங்கள் வெளி வந்துள்ளன. பாட்டிக்கு வயது ஏற ஏற நினைவு தடுமாறியது; ஒரு மணித்துளியில் சொன்னது அடுத்த மணித்துளியிலே மறந்துவிடும். கிட்டத்தட்ட மனமே செயற்படாத நிலை வந்துவிட்டது. இந்த நிலையை நன்கு பயன்படுத்தி சார்பதிவாளருக்குப் பெருந்தொகை கையூட்டு செய்து இல்லத்திற்கு மகிழ்வுந்தில் வர ஏற்பாடு செய்து இரண்டு ஆவணங்களைப் (Documents) பதிவு செய்யச் செய்தார் கைகேயி பெற்ற இருவரங்களால் தசரதன் மறைந்து பதினான்கு ஆண்டுகள் அரசனில்லாது தவித்தது அயோத்தி அரசு. அதன் பிறகு இராமன் ஆண்ட விவரங்களை நாம் இராமாயணத்தால் அறியக்கூடவில்லை. ஆனால் புதியனவாக ஏற்படுத்தப்பெற்ற இரண்டு ஆவணங்கள் என் மைத்துனரின் பெருஞ்செல்வம் அழியவும், அவர்தம் இறுதி நாட்களை வறுமையாலும் கவலைகளாலும் துக்கப்பட்டு மாளவும் காரணமாக அமைந்தன.

கூத்தாட் டவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்றே[2]

என்று செல்வ நிலையாமையையும்,

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பிற[3]

2. குறள்-332
3. ஷை.-337

என்று யாக்கை நிலையாமையையும் கூறுவார் வள்ளுவப் பெருந்தகை. இரண்டாவது குறள் அறிவில்லாதாரின் இயல்பின்மேல் வைத்துக் கூறப்பெற்றுள்ளது. பலவாய நினைவுகள் இன்னவை என்பதை, "பொறிகளால் நுகரப் படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தமது முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனான் நட்டாரையாக்கு மாறும், நள்ளாரை யழிக்குமாறும் தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின"[4] என்று விளக்குவர் பரிமேலழகர். இந்தப் பலவாய நினைவுகளை ஔவைப் பாட்டியும்

உண்பது நாழி;
உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி
நினைந்தெண்ணுவன.[5]

என்று விளக்குவர். இவ்வாறுதான் தம் மருமகள் வீட்டுச் செல்வத்தை நுகரலாம் என்று சுப்பிரமணியம் கருதினாரா என்று என்மனம் அப்போது எண்ணாவிட்டாலும் இப்போது சிந்திக்கின்றது, இதனால்தான் அடியிற்கண்ட அடாத செயல்களில் வெள்ளைமனமுள்ள என் மைத்துனரை இறங்கச் செய்தார். சுப்பிரமணியம் நேரடியாக எதையும் சொல்வதில்லை; குறிப்பாகத்தான் சொல்வார். சொத்து விவகாரமான விஷயமாதலால் அக்குறிப்பு என் மைத்துனர் உள்ளத்தில் விதை நடுவதுபோல் பக்குவமாக அமையும். அஃது அங்குரித்து சிறு செடியாகி சில நாட்களில் பெரிய மரமாகவே வளர்ந்துவிடும், பிறகு என் மைத்துனர் தாமே

4. குறள்-337 இன் உரை.
5. நல்வழி-28

யாரொருவர் யோசனையுமின்றிச் செயற்படுவதுபோல் செயற்படுவார். மாமனாரைத் தான் யோசனைக்கு அழைப்பதுபோல் செயல் நடைபெறும். செகப்பிரியரின் ஒதெல்லோவின் நாடகத்தில் வரும் இயாகோ என்ற போக்கிரி (Villain) கூட சுப்பிரமணியத்திடம் பிச்சை வாங்க வேண்டும்.

(1) ஓர் இறுதி விருப்பம் ஆவணம் (will) பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா? அந்த ஆவணத்தைத் தள்ளுபடி செய்து சொத்து முழுவதையும் தானசாசனமாக, (Gift deed) எழுதிக் கொண்டார் என் மைத்துனர்.

(2) தன் தாயாருக்குச் சொத்தை அநுபவிக்கும் உரிமை இருந்தாலும் இருக்கலாம்; அந்த அம்மாள் யார் பேச்சை யாவது கேட்டுக்கொண்டு வழக்குத் தொடுத்தாலும் தொடுக்கலாம். இதை முன்னதாகவே நன்றாகச் சிந்தித்து வருமானத்தைத் தம் மகனுக்கு விட்டுக் கொடுக்கும் ஆவணம் (Surrender deed) ஒன்றை எழுதி வாங்கிக் கொண்டார்.

பாட்டிக்கும் எழுதிக் கொடுத்தது என்ன என்பது தெரியாது; சொன்னாலும் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் இல்லை; மனம் மிகவும் தளர்ந்து விட்டது. தன் தாயாருக்கும் எதை எதையோ மனத்தை மாற்றி கைரேகை பெற்றுக் கொண்டார். சார்பதிவாளர் (Sub-Registrar) வீட்டிற்கே வந்து பதிவு செய்ததால், எல்லாம் எளிதாக முடிந்தன.

ஊரில் விவரம் அறிந்த ஒரு சிலர் மட்டிலும் சுப்பிரமணியம் வீட்டில் சம்பந்தம் ஏற்பட்ட பிறகு என் மைத்துனரின் நடவடிக்கைகள் மாறிப் போவதைக் கண்டனர். சுப்பிரமணியத்தின் உறவு குடும்பத்தைக் கெடுக்கும் கோடறிக்காம்பு என்பதைத் தெளிவாகவே அறிந்திருந்தனர். ஆதலால் குடும்பத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சி

களையும் உன்னிப்பாகக் கவனித்தனர்; கூர்ந்து நோக்கினர். இதனால் எச் செயல் இரகசியமாக நடைபெற்றாலும் ஒன்றிரண்டு நாட்களில் அஃது அம்பலமாகி விடும். சார் பதிவாளர் என் மைத்துனர் இல்லத்திற்கு வந்ததும், இல்லத்தில் இரண்டு ஆவணங்கள் பதிவான விவரமும் ஒன்றிரண்டு நாட்களில் எல்லோருக்கும் தெரிந்து விட்டன.

என் மாமியாருக்கு இப்போதுதான் விவரம் தெரிந்தது. தன்னைப் பிச்சைக்காரியின் நிலைக்குக் கபடமாகக் கொண்டு வந்து விட்டார்களே என்ற வருத்தமும் கவலையும் மனத்தை வாட்டின. ஏதோ கலாட்டா செய்து விட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டார்கள். அந்த ஊரில் தூரத்து உறவாக இருக்கும் இராமசாமி ரெட்டியார் வீட்டில் தங்கியிருந்தார்கள். இராமசாமி ரெட்டியார் என்றால் பெரும்பாலோருக்குத் தெரியாது. இவரோடு பிறந்தவர்—மூத்தவர்—முத்துரெட்டியார். இருவரும் உடல் பருமனுடன் சற்றுக் குட்டையாகவும் இருந்தமையால் ஊர்ப் பெருமக்கள் அவர்களைக் 'குண்டுத் தம்புகள்' என்று குறிப் பிடுவது வழக்கம். நேரில் காணும் போது 'பெரியகுண்டு' 'சின்ன குண்டு' என்று வழங்குவர். படர்க்கையில் பேசும் போது பெரிய குண்டன், சின்ன குண்டன் என்றே குறிப்பிடு வார்கள்.

மூத்தவர் மூன்று கல்தொலைவிலுள்ள தோட்டமே கதி என்று பெரும்பாலும் அங்கேயே கிடப்பார்; ஊர்ப்பக்கம் அவரை அடிக்கடிக் காண முடியாது. நல்ல உழைப்பாளி; பெரியபண்ணை; நல்ல வருமானமும் இருந்தது. நான் பொட்டணத்தில் இருந்தபோது அவருடைய மக்கள் நால்வரில் இருவர் வயல் வேலைக்கு உதவும் வகையில் வளர்ந்திருந்தனர். ஏனைய இருவர் சிறு பிள்ளைகள் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தனர்.

இவருக்குப் பெண் குழந்தைஇல்லை. அண்ணனும் தம்பியும் படிக்கவில்லை; கையெழுத்து மட்டிலும் போடக் கூடிய வர்கள்.

சின்னகுண்டு என்பவருக்கு இரண்டு பெண்குழந்தைகள்; இவருக்கு ஆண் வாரிசு இல்லை. புன் செய்நிலம் அதிகமாக வும், நன்செய் நிலம் குறைவாகவும் இருந்தது, இவர் நிலத்தை அதிகமாகக் கவனிப்பதில்லை; இவருடைய துணைவியார் அனைத்தையும் கவனித்துக் கொள்வார். இவர் ஊர் விவகாரம்—நீதிமன்ற வழக்குகள்—இவற்றில் கவனம் செலுத்துவார். படிப்பு அதிகம் இல்லாவிடினும் நீதி மன்றவழக்குகள், சட்ட நுணுக்கங்கள் இவற்றைக் கேள்வி வாயிலாகவே நன்கு அறிந்து கொண்டிருந்தார். இவரிடம் பேச்சு கொடுத்தால் போதும். நீதிமன்றச் செய்திகளை உதிர்ப்பார். இவரைக் கண்டாலே ஊர்மக்களுக்கு அச்சம். எதிலாவது மாட்ட வைத்துவிடுவார் என்று பேசிக் கொள் வதை நான் கேள்விப் பட்டதுண்டு. ஆனால் நான் சிறிது பழகியவரை நல்லவராகவே காணப்பட்டார். வீண்வம்பு கட்குப் போவதில்லை. யாராவது சிக்கலில் மாட்டிக் கொண்டால் அவர்கள் நீதிமன்றங்கட்குப் போக உதவுவதற் கும் வழக்குரைஞர்களை ஏற்படுத்தி வழக்குகளை நடத்துவ தற்கும் உதவுவார். இதனால் அவருக்கு நாமக்கல், சேலம் போன்ற இடங்கட்குப் பிறருக்கு உதவும் பொருட்டு அடிக்கடிபயணங்கள் இருக்கும். இவற்றைக் கொண்டே பாமர மக்கள் இவரைக்கண்டு அஞ்சுவார்கள்.

என் மாமியார் சின்ன குண்டன் வீட்டில் தங்கியிருந்த தைக் கண்டு என் மைத்துனர், மாமனார் மிகவும் அஞ்சினார் கள். ஏதாவது வழக்கில் தங்களை இழுக்கக் கூடும். என்று அஞ்சினார்கள். சுப்பிரமணியத்தைக் கலந்து இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசித்து வந்தார்கள்.

இந்தக் குமிழியில் வெளிவந்த செய்திகள் யாவும் சுமார் நாற்பதுகல் தொலைவில் உள்ள துறையூரில் பள்ளிப் பணி களில் ஈடுபட்டிருந்த எனக்கு எட்டின. நாங்களும் அவசரப் பட்டு மாமியாரைக் கூட்டிவந்து விடவேண்டும் என்று முயல வில்லை. தகவல்களும் வெவ்வேறு வடிவங்களில் சிறுகச் சிறுக எங்களை எட்டியதால் எங்கள் மனம் இதில் அதிகமாக ஈடுபடவில்லை. இச்சமயத்தில் பள்ளி முன்னேற்றம் பற்றிய பணிகள் அதிகம் இருந்தபடியால் அவற்றிலேயே என் மனம் அதிகமாக ஈடுபட்டும் செயற்பட்டும் இருந்தது. பொட்டணத்திலிருந்து வந்த செய்திகள் எங்களை அதிகம் தாக்கவில்லை; கலக்கவும் இல்லை.

குமிழி —77

# 15. நான்காம்படிவம்-சென்னைப்பயணம்

ஆண்டு இறுதியில் நடைபெறும் தேர்வுகள் முடிந்ததும் பள்ளிகட்கு விடுமுறை அளிக்கப் பெறுகின்றது. ஆசிரியர்கள் விடைத்தாள்களைத் திருத்தித்தந்து மாணாக்கர்களை மேல் வகுப்பிற்கு மாற்றும் வரையிலும் பொறுப்புள்ளவர்கள். தலைமையாசிரியருக்கு இதற்கு மேலும் பொறுப்பு உண்டு. ஆண்டுத்தேர்வுகள் முடிந்து நான்கு வாரத்திற்குள் (1) மாணாக்கர்களை மேல்வகுப்புகட்கு மாற்றல் (2) வரவு-செலவு அறிக்கை ஜூன் மாதத்தில் அனுப்புதல் (3) புள்ளி-விவர அறிக்கைகள் ஜூலைக்குள் அனுப்புதல் போன்ற பணிகள்-பொறுப்புகள் உண்டு. மே திங்கள் முதல்வாரத் திற்குள் முதற்பணியை முடித்தேன்; இரண்டாவது பணியைக் கணக்குத் தணிக்கையாளரைக் கொண்டு முடித்து அறிக்கைகளைத் தட்டச்சு செய்யும் பொறுப்பில் விட்டு உரியகாலத்தில் எனக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தேன். மூன்றாவது பணியை ஜூனில் தொடங்கலாம் என்று திட்ட

மிட்டுச் சென்னைப் பயணத்திற்கு ஆயத்தமானேன். ரூ 60/- தாளாளரிடம் பெற்றுச் சென்னைசென்றேன்; மயிலாப்பூரில் பன்மொழிப் புலவர் இல்லத்தில் தங்கி நடவடிக்கைகளைக் கவனித்தேன். சென்னை செல்லுவதற்குமுன் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ளாட்சித் துறையின்கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளைக் கவனிக்கும் பகுதியின் தலைவர் வி.எஸ், இராமச்சந்திர அய்யருக்கு என் குருநாதர் திரு. **கே. இராமச்சந்திரஅய்யரிடமிருந்து** (தலைமையாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, குளித்தலை) ஒரு பரிந்துரைக் கடிதத்தை எய்ப்பினில் வைப்பாக இருக்கட்டும் என வாங்கி வைத்துக் கொண்டிருந்தேன்.

**சி. சிங்காரவேலு முதலியார்** சைதாப்பேட்டை மாவட்டக் கல்வி அதிகாரியின் தனி அலுவலராகப் (Personal Assistant) பணியாற்றி வந்தார். சென்னை வந்தவுடன். அவரைச் சந்தித்து அவரை இட்டுக் கொண்டு கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்று நான்காம் படிவம் திறக்கும் நிலைபற்றிக் கவனித்ததில் கோவையி லிருந்து வி. ஆர். அரங்கநாதமுதலியார் பரிந்துரைக்காதது மட்டுமின்றிக் கடுமையாகவும் எழுதியது தெரிந்தது. சிங்கார வேலு முதலியாரும், "வி.ஆர்.ஆர். எழுதியவற்றை" எவராலும் மாற்றமுடியாது. அலுவலகத்தில் அதைப் புறக் கணித்துக் குறிப்பு வைக்க எவருக்கும் துணிவு இருக்காது. இயக்குநர் ஆர்.எம். ஸ்ட்ராத்தம் துரையும் முதலியார் பரிந்துரைக்கு விரோதமாகச் செய்யமாட்டார். என்ன செய்வது?இறைவன் விட்டவழி இதுதான்"என்று சொல்லித் தம் இயலாமையைக் கூறிவிட்டார்.

நான் சிங்காரவேலு முதலியாரிடம், "ஐயா, நான்காம் பாரம் திறப்பதற்கு மறுத்துவிடும் ஆணை எங்கள் தாளாளருக்குப் போகாமல் என் கையில் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள். அதற்குமேல் இறைவன் துணையால் நான் முயல்

கின்றேன்.'' என்று கேட்டுக் கொண்டேன். அவரும் உரிய பகுதியின் தலைவரை எனக்கு அறிமுகம் செய்து ஆணையை என்னிடம் தருமாறு வேண்டினார். உரிய பகுதியின் தலைவரும் இதற்கு ஒருவாரம் தவணை சொன்னார்.

இதற்கிடையில் கே. இராமச்சந்திர அய்யர் தந்த பரிந்துரைக் கடிதத்துடன் வி. எஸ். இராமச்சந்திர அய்யரைச் சந்தித்து அவரிடம் நல்ல உறவு கொண்டேன். மேற்குறிப்பிட்ட மறுப்பு-ஆணை என் கைக்குக் கிடைப்பதற்கும் உதவினார். அந்தப் பகுதியில் அஞ்சலில் கடிதம் அனுப்புபவரை அழைத்து மேற்படி ஆணையைத் தன்னிடம் தருமாறு கேட்டுக் கொண்டார். அங்ஙனமே அங்கும் அந்த ஆணையை இவரிடம் தர நான் அதைக் கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்டேன். இராமச்சந்திர அய்யர் இந்தப் பிரச்சினையை சமாளிக்கும் முறையைப் பற்றிச் சில நாட்கள் சிந்திக்கலானார்.

வி. எஸ். இராமச்சந்திர அய்யர் மிக நல்லவர். யாருக்கும் உதவுபவர். 'என் கடன் பணிசெய்துகிடப்பதே' என்ற ஆன்றோர் வாக்குக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தனர். நான் அவரிடம் பதினைந்து நாட்கள் மிக நெருக்கமாகப் பழகினபோது பல நல்ல அருங்குணங்களை எல்லாம் அறிந்து கொள்ள வாய்ப்புகிடைத்தது. இந்தப் பதினைந்து நாட்களில் மாநிலங்கள் பல இடங்களிலிருந்து பல தலைமைபாசிரியர்கள் வந்து திரு. இராமச்சந்திர அய்யரைச் சந்தித்துத் தங்கள் சங்கடங்களைத் தீர்த்துக் கொண்டதையும் வேறு பல ஆக்க வேலைபற்றிய யோசனைகளை பெற்றுக்கொண்டு செல்வதையும் கண்டபிறகு இராமச்சந்திர அய்யரின் சிறந்த தொண்டுள்ளத்தை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அவர்மீது நான் கொண்டிருந்த மதிப்பும் உயர்ந்தது.

நான் சென்னையிலிருந்தபோது பன்மொழிப் புலவர் வே வேங்கட்ராஜுலு ரெட்டியார் இல்லத்தில் (13, வடசூர்

செல்வ விநாயகர் கோவில் தெரு, மயிலாப்பூர்) தங்கியிருந்தேன். திரு வி.எஸ். இராமச்சந்திர அய்யர் திருவல்லிக்கேணி பெல்ஸ் சாலையிலுள்ள ஒரு வீட்டுமாடியிலுள்ள பகுதியில் தங்கி இருந்தார். அப்போது உணவு பங்கீடு நடைமுறையில் இருந்தது. உணவு விடுதியில் ஏதோ நல்ல முறையில் சிற்றுண்டி கிடைத்தது. உணவு சரியாக இல்லை. நான் நாடோறும் கல்வித்துறை அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியவனாக இருந்தபடியால் அங்குள்ள உணவு விடுதியில் சிற்றுண்டி மட்டிலும்தான் கிடைத்தது. ஒருநாள் இராமச்சந்திர அய்யர் என்னிடம், ''மிஸ்டர் ரெட்டியார். சென்னையில் இருக்கும்வரை என் வீட்டிலே தங்கலாம்; உணவும் இங்கேயே கொள்ளலாம். வெளியில் உணவு கொண்டால் உங்கள் உடல்நிலை கெடும்'' என்றுகூறி தன் வீட்டிலேயே என்னைத் தங்குமாறு பணிக்க நானும் மயிலாப்பூரிலிருந்து திருவல்லிக்கேணிக்கு வந்துவிட்டேன்.

காலையில் ஆறு மணிக்கு காஃபி தருவார். அதை அருந்தியவுடன் வெளிக்கிளம்பிவிடுவேன். அரைமணி நேரத்தில் ஒருரூபாய்க்குக் காய்கறிகள் வாங்கிவருவேன். இப்போது (ஆகஸ்டு-1989) பத்து ரூபாய்க்கு வாங்கினாலும் அவ்வளவு காய்கறிகள் இரா. நான் வாங்கிவரும் காய்கறிகள் இரண்டு நாட்களுக்குப் போதுமானவைகளாக இருக்கும். நான் தங்கியிருந்த 15 நாட்களும் இப்படியே காய்கறிகள் வாங்கிவரும் பணியை மேற்கொண்டிருந்தேன். என்னைத் தன் மகன் போல் பாவித்து அன்புடன் கவனித்துக் கொண்டார். அவரே ஆடைகளைத் துவைத்து உலரவைப்பார்; பிறகு பூசையில் இறங்கிவிடுவார். நான் காய்கறிகளுடன் வரும்போது பூசையில் இருப்பார். நானும் நீராட்டத்தை முடித்துக்கொண்டு அலுவலகம் செல்லத் தயாராகிவிடுவேன். சிறந்த வைதிகராயிருந்தாலும் என்னைத் தன் அருகிலிருந்து உணவு கொள்ளுமாறு செய்வார். இலை எடுப்பதற்கும் அனுமதியார். இதைத்

தம் துணைவியாரையே செய்யச் சொல்வார். அந்த அம்மை யாரும் மனமுவந்து அதைச் செய்வார்கள். நாள்தோறும் அவருடனேயே கல்வி இயக்குநர் அலுவலகம் போய்வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

ஒன்றிரண்டு நாட்களில் நான்காம் படிவம் திறக்க மறுத்த ஆணையை மறு ஆய்வு செய்து புதிய ஆணை பிறப்பிக்கக் கோரி ஓர் அழகிய விண்ணப்பத்தை நன்முறையில் தயார் செய்து நான்கு படிகளைத் தட்டச்சு செய்ய ஏற்பாடு செய்தார். அதில் தாளாளருக்குப் பதிலாக என்னையே கையெழுத்திடச் செய்தார். முதற்படி (1) திருச்சிமாவட்டக் கல்வி அதிகாரி (2) கோவை மண்டலக் கல்வி அதிகாரி ஆகியோர் மூலம், சென்னைக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப் பெற்றது. அடுத்து. விண்ணப்பத்தின் இரண்டாவது படி கோவைக்கும், மூன்றாவது சென்னைக் கல்வி இயக்குநருக்கு மாக—நேராக—அனுப்பப் பெற்றன.

கல்வி இயக்குநருக்கு நேராக அனுப்பப்பெற்ற விண்ணப் பத்தின் நகலைக் கொண்டே விரைவில் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்பது இராமச்சந்திர அய்யரின் திட்டம். தனியார் பள்ளிகளைப்பற்றிக் கவனிக்கும் அலுவலகப் பகுதியில் பணியாற்றும் எழுத்தர், தலைமை எழுத்தர் இவர் களிடம் தொடர்புகொண்டு உரிய முறைகளில் விண்ணப்ப நகலின்மீது நல்ல பரிந்துரைக் குறிப்புகளை எழுதச்செய்தார். அவசரப்படாமல் நான்கு ஐந்து நாட்கள் அலுவலகத்திலேயே இதைச் சுற்றச் செய்து இயக்குநரின் தனி எழுத்தர் (இவர் வயோதிக வைணவர்)மூலம் கோப்பில் இயக்குநரின் கையெழுத்துப் பெறவேண்டும் என்பது ஒரு முயற்சி. இயக்குநர் பெரும்பாலும் பொஸட்டோ விடுதியில் (இப்போது அந்த இடத்தில் கனினிமேராவிடுதி உள்ளது.) தங்குவது வழக்கம். முக்கியமான கோப்புகளை இயக்குநர்

அங்குத்தான் பார்ப்பது, அவற்றின்மீது ஆணை பிறப்பிப்பது என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில்தான் எங்கள் கோப்பின்மீது ஆணை பிறப்பிக்கப்பெற்றது. இந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் எனக்குத் தெரிவித்தார் இராமச்சந்திர அய்யர். ஒன்றிரண்டு நாட்களில் ஆணையும் எனக்குக் கிடைக்கச் செய்தார்; நானே கையெழுத்து போட்டுப் பெற்றுக்கொண்டேன்.

இந்த மகிழ்ச்சிச் செய்தியை சின்னதுரைக்குத் தந்தி மூலம் தெரிவித்துவிட்டு ஒன்றிரண்டு நாட்கள் சென்னையில் தங்கிவிட்டேன். உமாபதி ரெட்டியார், P. மாதுர்பூதம், T.S. இராமய்யா இவர்கட்குக் கடிதங்கள் எழுதித் துறையூரிலுள்ள மூன்று சினிமாகொட்டகை உரிமையாளர்களிடம் தொடர்புகொண்டு ஜூன் முதல் நான்காவது படிவம் திறக்கப்படுகிறது என்ற செய்தியை விளம்பரப் படுத்த ஏற்பாடு செய்தேன்; பத்து நாட்கள் தொடர்ந்து இந்த விளம்பரம் வந்துகொண்டிருந்தது. நழுவம் (Slide) எழுதுதல் முதல் விளம்பரம் போடுதல்வரை அன்பு தானமாகவும் பெறச் செய்தேன். சினிமாகொட்டகையாளர்களும் மிக உவப்புடன் இந்தக் கைங்கரியத்தைச் செய்து மகிழ்ந்தனர். இரண்டு நாட்கள் கழித்து துறையூர் திரும்பினேன். சின்னதுரை கொடுத்த ரூ. 60/-க்கும் விரிவான கணக்குகளைக் காட்டினேன். இப்போதும் ரூ. 1.6.0 மீதி இருந்தது.

நான் சென்னையில் தங்கியிருந்த இடம் வாடகையின்றி அமைந்தது. ஒருநாளில் ஒருமுறை உணவு இராமச்சந்திர அய்யர் வீட்டில் பெற்றேன். இன்னும் ஒரு நாற்பது ரூபாய்ச் செலவு பலவிதங்களில் இனாமாகவே நடைபெற்றது. இவற்றையெல்லாம் துரைக்குத் தெரிவித்தேன். எதைப்பற்றி மகிழாவிட்டாலும் சிக்கனத்துடன் செயலாற்றியதையாவது உள்ளூர மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதை அறிவேன்.

பதினைந்து நாட்கள் இராமச்சந்திர அய்யர் வீட்டில் தங்கியிருக்கும்போது அவர் குடும்பநிலை, அன்றாட வாழ்க்கையைச் சிரமத்துடன் நடத்தியதுபோன்ற விவரங் களை அறிந்தேன். கைத்தறி வேட்டியை உடுத்துபவராகவும் அதைத் தானே குழாயில் துவைத்து உலர்த்திவந்ததையும் அறிந்தேன். சட்டை, கோட், அங்கவஸ்திரம் —இவை மட்டிலும் லாண்டரிக்குப்போட்டு வாங்கப்படுபவை, இடுப்பு வேட்டிமட்டிலும் நீர்க்காவி ஏறி இருக்கும். இவருக்கு ஏதாவது அன்பளிப்பு செய்யவேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டிருந்தேன், என் ரூ 40/- மாத ஊதியத்தில் எதைத்தான் செய்யமுடியும்? 100க்கு 80 நம்பரில் நெய்யப் பெற்ற சிவராயர்கரைபோட்டு கைத்தறி வேட்டிகள் ஆறு சோடி அனுப்பலாம்என நினைத்து துரையிடம் சொன்னேன். அவரும் தன் அமைச்சர் இலிங்கையர் மூலம் 6 கோடி வேட்டி கள் கிடைக்கச் செய்தார். இந்த வேட்டிகளுக்குத் துறையூரும் தாத்தய்யங்கார் பேட்டையும் பெயர்போனவை, வேட்டிகள் தாத்தய்யங்கார் பேட்டையிலிருந்துதான்வந்தன. இவற்றைப் பார்சல்மூலம் இராமச்சந்திர அய்யர் துணைவி யார் பேருக்கு அனுப்பிவைத்தேன். இராமச்சந்திர அய்யர் எதையும் ஏற்றுக்கொள்ளார் என்பதை நான் நன்கு பழகியதால் அறிந்திருந்தேன். கைச்சுத்தமான ஓர் அலுவலரை அக்காலத்தில் கண்டது வியப்பினும் வியப்பாக இருந்தது. அன்றைய நிலையில் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டம்வரை அன்றாடம் நடைபெற்றுவரும் கையூட்டுக் கூத்துகளை நினைக்கும்போது இராமச்சந்திர அய்யரின் நல் தொண்டு இமயமலை அளவு உயர்ந்துகாணப்பெறுகின்றது மக்களாட்சி முறையில் இன்று நடைபெறும் அக்கிரமங்கள், அடாவடித் தனங்கள் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கும் இறைவன் ஏன் கண்மூடி மௌனியாக இருக் கின்றானோ என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை,

குமிழி—80

# 16. மாணாக்கர் நன்மைக்கான நற்செயல்கள்

கல்விப் பணியை ஏற்றுக் கொண்ட நாள்முதல் கல்வியைப் பற்றிய சிந்தனையிலேயே ஊறிக் கிடப்பேன். ஏழைச் சிறுவர்களை எப்படி முன்னேற்றுவது என்ற சிந்தனையே எப்போதும் என் மனத்தில் மீதூர்ந்து நிற்கும். பாரதியாரின் பாடல்கள் என் உணர்ச்சியைத் தூண்டுவனவாக அமையும்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
    இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
    ஆல யம்பதி னாயிரம் நாட்டல்:
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
    பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
    ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.[1]

என்ற பாடல் அடிக்கடி என் சிந்தனையில் முகிழ்த்துக் கொண்டிருக்கும். குறிப்பாக,

ஆங்கோர் ஏழைக்
    கெழுத்தறி வித்தல்

என்ற அடி என்னைக் கிளர்ந்தெழச் செய்யும்.

சென்னை கல்வித்துறை விதிகளில் (92 MER) 92ஆம் விதியின்கீழ் சம்பளச் சலுகை பெறவேண்டிய சாதிகளின் பெயர்கள் உள்ளன. இந்தச் சாதிகள் Scheeduled Castes, Scheduled Tribes, Backward Classes என்ற மூன்று பிரிவு

1. பா. பா : தோத்திரப் - வெள்ளைத்தாமரை - 9.

களில் சாதியினர் உண்மையிலேயே ஏழைகளாக இருந்தனர். இவர்கட்குக் கட்டணம் விதிவிலக்கு. மூன்றாவது பிரிவில் உள்ளவர்களில் ஏழைகளும் இருந்தனர்; செல்வர்களும் இருந்தனர். அக்காலத்தில் நெசவாளர்கள் (பெரும்பாலும் செங்குந்தர்கள், தேவாங்க வகுப்பினர்) இவர்கட்கு நல்ல வருவாய் இருந்ததை நான் நன்கு அறிவேன். பெரும்பாலும் இந்தச் சாதியினர் துறையூர், தாத்தையங்கார் பேட்டை, மேட்டுப்பாளையம் இவ்விடங்களில் அதிகமாக இருந்தனர்; துறையூரில் மட்டிலும் தேவாங்கர்கள் அதிகமாக இருந்தனர். இவர்களில் பலர் வருமானவரி, விற்பனைவரி ஆயிரக் கணக்கில் செலுத்துபவர்களும் வட்ட ஆட்சியாளர்(Tasildar) சான்றிதழ்கள் பெற்று அரைக் கட்டணச் சலுகை பெற்றுக் கொண்டனர். பத்மசாலியர் வகுப்பைச் சார்ந்தவர்கள் நல்ல நிலையில் இல்லை. இவர்கள் பிள்ளைகள் அரைக் கட்டணச் சலுகை பெற்றது நியாயமாக இருந்தது.

இவர்களைத் தவிர துறையூர்ப் பகுதியில் ரெட்டியார்கள், (தமிழ்ச்) செட்டியார்கள், ஆரிய வைசியர்கள், பிராமணர்கள், வேளாளர்களில் சில பிரிவினர் பரம ஏழைகளாக இருந்தாலும் கட்டணச் சலுகை பெற வாய்ப்பே இல்லாதிருந்தனர். இவர்களில் திறமையான மாணாக்கர்கள் கூட எந்தச் சலுகையும் பெற வாய்ப்பில்லாதது எனக்கு மிகவும் வருத்தத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. சென்னைக் கல்வித்துறை மானியம் பற்றிய விதிகளில் 32-வது பிரிவின்படி (32 Grant-in-code) பள்ளிக் கட்டண வருவாயில் 10 சதவிகிதம் கட்டணச் சலுகை வழங்கலாம். இதைப் பயன்படுத்திச் சலுகை வழங்கினால் பள்ளிக்கும் நல்ல பெயர் கிடைக்கும் ஏழை மாணவர்களும் பயன்அடைவார்கள் என்று தாளாளர் சின்னதுரை முன்திட்டம் வைத்து இசைவு தருமாறுவேண்டினேன். அவர் மனம் இரங்கி 5சதவிகிதம்சலுகை

வழங்க ஒப்புக் கொண்டார். ஆனால் தேர்வுகள் வைத்து அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள்தாம் இச் சலுகையைப் பெறமுடியும்.

ஒரு வகுப்பில் நாற்பது மாணவர்கள் இருப்பின் இரண்டு பேர்களின் கட்டணத்தை இவ்வாறு செலவு செய்யலாம். நான் முழுக் கட்டணச் சலுகை ஒருவரும் அரைக்கட்டணச் சலுகை இருவரும் பெறலாம் என்ற திட்டத்தை வகுத்துக் கொண்டு நிர்வாகத்தின் இசைவு பெற்று தேர்வுகளை நடத்தி சலுகைகள் வழங்குவதைச் செயற்படுத்தினேன்.

இந்த மாணவர்கட்கு இன்னும் ஏதாவது செய்யலாமா என்று என்மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆறு வகுப்புகளுக்கும் இப்படிச் சலுகைகள் வழங்க ஏற்பாடு செய்ய எண்ணினேன். துறையூரிலும் சுற்றுப்புறச் சிற்றூர்களில் சாதிவேற்றுமை பாராமல் செல்வர்களை நாடினேன். பலர் முன் வந்ததைக் கண்டு வியந்தேன். அவர்களைப் பள்ளிக்கு வரவழைத்து தேர்வு எழுதி வெற்றிபெற்ற சில மாணவர்களை அவர்கட்குக் காட்டி முழுச் சலுகை அரைச் சலுகை தருமாறு வேண்டினேன். அவர்கள் யாவரும் ஒன்பது மாதக் கட்டணங்களையும் முன்னதாகவே செலுத்தி மகிழ்ந்தனர்.

இதுதவிர, வகுப்புகளில் முதல், இரண்டாவதாகச் தேர்ச்சி அடைந்தவர்கட்குப் பரிசுத் திட்டங்களை ஏற்படுத்தி முதல் பரிசு ரூ 10/-ம் இரண்டாம் பரிசு ரூ 5/-ம் தர விழைந்தேன். இவை பள்ளி ஆண்டுவிழாவன்று வழங்கப் பெறும். இதற்கும் செல்வர்களை நாடி நிரந்தரமாக ஏற்பாடுகள் செய்தேன். ஆண்டுவிழா நடைபெறுவதற்கு ஒரு திங்களுக்கு முன்னர் இவற்றிற்கான தொகைகளை அனுப்பி விடுவார்கள். நிர்வாகம் இத்திட்டத்தில் தன் பொறுப்பில் செய்ய ஒருப்படாததால் இந்த ஏற்பாடுகள் செய்தேன். நான் துறையூரில் பள்ளிப் பொறுப்பில் இருந்தவரை (1941-

1950) இத்திட்டம் நன்கு செயற்பட்டு வந்தது. ஒருவர் ஆறாம் வகுப்பு (முதல் படிவம்) மாணவருக்குச் சலுகை தர இசைந்தால் அவர் அந்த மாணவர் பதினொன்றாவது வகுப்பு (ஆறாம் படிவம்) முடிக்கும்வரை இந்தச் சலுகைக் குரிய செலவையும் ஏற்றுக் கொண்டிருந்தார். இப்படி ஏழை மாணவர்க்கு உதவி செய்ய எம்பெருமான் என்னைக் கருவி யாக வைத்ததை இன்றும் நினைத்துப் பார்த்து மகிழ் கின்றேன்: பெருமிதம் அடைகின்றேன்.

> அன்பர்பணி செய்யஎனை
> ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந்து
> எய்தும்; பராபரமே.[2]

என்ற தாயுமானவரின் திருவாக்கை நினைந்து நினைந்து உருகுகின்றேன். இங்ஙனம என்னை நல்வழிப்படுத்தின இறைவனின் கருணைத் திறத்தை எண்ணி எண்ணிப் போற்றுகின்றேன். இதனால் முற்போக்கு சாதியினரைச் சார்ந்த பல ஏழை மாணாக்கர்கள தம் கல்வியைச் சலுகை யினால் தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இன்றைய நிலைவேறு. பொதுவாக எல்லோருமே கட்டணமின்றி உயர்நிலைப்பள்ளிக் கல்வியைப் பெறு கின்றனர். 1962 வரையில் ஒருசிறு முற்போக்கு பகுதியினர் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. பெருந்தலைவர்— மக்கள் நிலையை நன்கு அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் **காமராசர்** ஆட்சியில் இவர்கட்கும் சலுகை ஏற்பட்டது. அவர் ஆட்சிக் காலத்தில் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் சில சிறப்புக் கட்டணங்களைத்தவிர கல்வி பெறுவதற்கென கட்டணம் செலுத்தத் தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டது. முற்போக்கு சாதியைச் சார்ந்த பெற்றோர்களின்

2. தா. பா: பராபரக்கண்ணி-155

வாய்கள் இன்றும் அப்பெருமகனை வாழ்த்திக் கொண்டே இருக்கும். இந்தச் சமயத்தில் (1962) நான் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது 'இளைஞர் வானொலி'[3] என்ற எனது அறிவியல் நூல் வெளிவந்தது. 'எல்லோருக்கும் இலவசக் கல்வி' என்ற அறிவிப்பு முதலமைச்சர் செய்ததைக் கேட்ட வுடன் என் உள்ளம் பெருமகிழ்ச்சியுற்றது. இம்மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக,

பயிர்காக்கும் உழவனென உயிர்கள் காக்கும்
பான்மையிலே முதலமைச்சர்; வறியர் தாமும்
மயல்போக்கும் கல்வியினால் மேன்மை பெற்று
வாழ்வுபெற வழியமைத்தோன்; பாரதத்தை
உயர்வாக்க உழைப்பதிலே முதன்மைத் தொண்டர்;
ஒருநலமும் தாம்நாடார் காமராசர்
பெயர்வாழ்த்தி அவர்பிறந்த நன்னாள் வாழ்த்திப்
பெரிதுவந்து படைக்கின்றேன் இந்த நூலை.

என் பாடல்மூலம் இந்த நூலை ஏழை பங்காளர் காமராசருக்கு அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இக்காலத்தில் சென்னை மாநிலக் கல்வி இயக்குநராக இருந்தவர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு ஆவார். இத்திருப்பணியில் இவருக்கும் பெரும்பங்கு உண்டு என்பதை நாம் அறிதல் வேண்டும்.

காமராசர் இலவசக் கல்வி ஏற்படுத்திய ஓராண்டிற்குள் இன்னொரு நல்ல திட்டம் உருவாகி செயற்படுத்தப் பெற்றது சுந்தரவடிவேலு அவர்களால். இதுதான் நண் பகல் இலவச உணவுத்திட்டம்—சீருடைத் திட்டம். இத் தகைய திட்டங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாகச் செயற்பட்டது என்ற பெருமை தமிழகத்

3. கழக வெளியீடு.

திற்கு உண்டு; தமிழக வரலாற்றில் முக்கிய இடம்பெற வேண்டியதொன்று இது. நாடாளுமன்றத்திலும் இத்திட்டங்கள் ஒரு மனதாகப் பாராட்டப்பெற்றன. இக்காலத்தில் 'அதிசய மின்னணு'[4] என்ற என் நூல் வெளிவந்தது. என் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் போக்கில் இந்த நூலைச் சுந்தர வடிவேலு அவர்கட்கு,

நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்
நல்லிளங் கோவுயர் கபிலன்
கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்
குலவிய செந்தமிழ்த் தாயின்
பற்றுறு வயிற்றில் திருவொடு தங்கிப்
பண்பொடு தோன்றிய செல்வர்
கற்றவர்க் கினியர்; சுந்தர வடிவேல்
கண்ணியர்க் குரியதிந் நூலே.

என்ற பாடல்மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். துறையூர் வாழ்வில் உள்ள நிகழ்ச்சிகள் குமிழியிடும்போது பின்னர் எழுந்த நிகழ்ச்சிகள் மாணாக்கர் முன்னேற்றம் பற்றியே இருந்ததால் அவையும் ஈண்டு இடம் பெற்றன.

பொதுவாக மாணாக்கர்கள் கல்வி பெறுவதில் பிற்போக்குத் தன்மை (Backwardness) ஏற்படுவதற்கு அவர்கள் வாழும் இல்லத்தின் சூழ்நிலையே காரணமாகும் என்பதைக் கல்விப் பணியில் ஈடுபட்டிருப்பவர் நன்கு அறிவர். செல்வர்கள் வீட்டில் நல்ல சூழ்நிலை அமைந்திருப்பினும் அவர்களது கோலாகலமான வாழ்க்கை முறைகள், சதா வானொலியை இயங்கிக் கொண்டிருக்கச் செய்தல், பார்வையாளர்கள் அடிக்கடி வருதல் போன்றவை கல்விக்கேற்ற சூழ்நிலையைக் கெடுப்பதாக அமைந்துவிடுகின்றன. பெற்றோர்கள் கற்றவர்களாக இருப்பினும் அவர்கள் தம் குழந்தைகளைக் கவனிப்பதற்கு நேரம் இருப்பதில்லை. ஆனால்,

4. கழக வெளியீடு.

அவர்கள் தனி ஆசிரியர்களை அமர்த்திக் கவனிக்கச் செய்வதால் ஓரளவு பிற்போக்குத் தன்மை குறைந்து விடுகின்றது. ஏழைகள் வீட்டில் படிப்பதற்கேற்ற சூழ்நிலையே சிறிதும் இல்லையென்றே சொல்லலாம். இடச்சுருக்கம், படுப்பதற்கே வசதியின்மை, அதிகமான குழந்தைகள், அன்றாட வாழ்விற்கே போதாதவருவாய், மண்ணெண்ணெய் விளக்குகளைக் கூட வைத்துக் கொள்ள இயலாமை, தந்தையின் குடியால் பெற்றோர்களிடையே ஓயாத சச்சரவுகள்—இவை போன்றவை படிப்பதற்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்கும். இதனால் ஏழை மாணாக்கர்கள் படிப்பதற்கு வசதியின்றித் தவிர்ப்பதைக் கண்டுள்ளேன். என்ன செய்வது? எத்தனையோ விதமாகச் செயற்பட்டு மாணக்கர்கட்கு வசதி பண்ணிக் கொடுக்க நினைப்பேன். என்னுடைய ஏழ்மைநிலை, பள்ளி நிர்வாகம் இதில் கருத்து கொள்ளாமை போன்ற நிலைமைகளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. எனினும் இது பற்றிய கருத்து மனத்தில் நெருடிக் கொண்டே இருந்தது.

நான்காவது பாரம் தொடங்கப் பெற்றதும் இரண்டு திங்களுக்குள் கொட்டகைகள் போட்டு இரண்டு வகுப்புகட்கு இடவசதி செய்யப் பெற்றது. அடுத்த ஆண்டு இவற்றிற்கு எதிராகத் தெருவைத் தாண்டி மேலும் இரண்டு வகுப்புகட்கு இடவசதி செய்யப் பெற்றது. இதையெல்லாம் எதிர்பார்த்து மாணாக்கர்கட்கு இருக்கை வசதிகட்கு இரண்டுபேர் உட்காரும் சாய்வு மேசைகள் 120 செய்யப்பெற்றன என்பதாக நினைவு. கட்டணங்கள் மூலம் நல்ல வருவாய்; ஆசிரியர்கட்கோ ஊதியக் குறைவு. இருக்கை வசதிகட்கு மானியமும் கிடைத்தது. இது பெற யான் சிரமப்பட்டதும் அலைந்ததும் அந்த ஆண்டவனே அறிவான். மேல் வகுப்பு மாணாக்கட்கு இரவில் படிப்பதற்கு முதலில் போட்ட இரண்டு வகுப்புக்குரிய கொட்டகைகளில் தற்காலிகமாக மின்விளக்குகள்

பொருத்தச் செய்து வசதி செய்து கொடுத்தேன். மேல் வகுப்பு மாணவர்கள் மட்டும் வீட்டில் வசதியில்லாதவர்கள் இங்கு வந்து படிக்கலாம் என்று அறிவித்தேன். இந்த வசதியைப் பத்து, பதினைந்து மாணவர்கள் பயன் படுத்திக் கொண்டனர். பள்ளியிறுதித் தேர்வு செல்லும் மாணாக்கர் களை மட்டிலும் இரவில் தங்கிப் படிக்கும் போது அவர்கட்கு ஏற்படும் ஐயங்களை அவ்வப் போது அகற்றுவேன். என்சிறிய இல்லமும் பள்ளியின் ஒருபகுதியாக இருந்தமையால் இவர் களைக் கவனிப்பது எனக்கு எளிதாக இருந்தது. துறையூரில், இருந்தவரையில்எனக்கு மக்கட் பேறும் ஏற்படாததால், குடும் பப்பிரச்சினைகள் அதிகமாக இல்லை.[5] என்கவனம் முழுவதும் பள்ளிவளர்ச்சிக்கும் மாணவர்கள் முன்னேற்றத்திற்குமே பயன் பட்டது. நாட்டுப் புறத்திலிருந்துவரும் பெற்றோர்கள் என் மக்கட் பேறுபற்றி விசாரிக்கும் பொழுது, "பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவருமே என் பிள்ளைகள்" என்று பெருமிதமாகச் சொல்லிக் கொள்வேன். அவர்களும் என் பரந்த எண்ணத்தைப் பாராட்டுவார்கள், ஆயினும் என் குரலில் அடிநாதமாக ஒலிக்கும் நுண்ணிய ஏக்கத்தையும் கண்டு கொள்வார்கள்; விரைவில் மக்கட்பேறு ஏற்படும் என்று வாழ்த்தவும் செய்வார்கள்.

இரவில் பள்ளிக்கு வரும் மாணாக்கர் 8 மணிக்கே வந்து விடுவார்கள்; 10 மணிவரையில் படிப்பார்கள். நான் 10 மணி வரையில் அவர்களைக் கவனிப்பேன். அதற்குமேலும் ஒரு சிலர் படிப்பார்கள்; ஆசிரியர்கள் தரும் வீட்டு—வேலையை யும் (Home-work) செய்வார்கள். இந்நிலையில் தான் அவர் கட்கு ஏற்படும் ஐயங்களைப் போக்குவேன். சில மாணவர் விடியற்காலை நாலரை, ஐந்து மணிக்கு எழுந்து படிப்பர்.

---

5. 1936—இல்லை; 1949 இல்தான் மக்கட்பேறு ஏற் பட்டது.

அப்பொழுதும் தேவையானால் ஏற்ற பெற்றி அவர்கட்கு உதவுவேன். 1945 ஆம் ஆண்டு தொடங்கி 1950 மார்ச்சு முடிய நான் துறையூரில் இருந்தவரையில் இங்ஙனம் உதவி வந்தேன். இந்நிகழ்ச்சிகள் யாவும் இப்போது நினைவில் எழுந்து குமிழிகளாக வெளிப்படுகின்றன. இப்போதெல்லாம் **'என் கடன் பணி செய்து கிடப்பதே'**[6] என்ற அப்பர் பெருமானின் வாக்கு நினைவிலிருந்து கொண்டே இருக்கும்.

**குமிழி – 81**

# 17. சுப்பிரமணியத்தின் திருவிளையாடல்கள்

என் மைத்துனரின் தாயாரைப்பற்றிய சிந்தனை: ''புரோநோட்டுகள் மகளிடம் போய்விட்டன. சர்ரண்டர் பத்திரமும் எழுதியாய்விட்டது; வருமானத்தையும் கேட்க வழி இல்லை. கிட்டத்தட்ட பல்லைப்பிடுங்கிய பாம்புதான்'' என்று மகிழ்ச்சியுடன் சிந்தித்திருக்க வேண்டும். ஆயினும் சூழ்ச்சியால் நிறைவேற்றப் படக்கூடிய காரியங்கள் இன்னும் உள்ளன. அவற்றையும் நிறைவேற்ற யோசித்துக் கொண்டிருந்தனர்.

(1) என்மானனார் வீடு பத்து மனை பரப்பளவு (10X24,00= ச.செ) இருக்கும். அதில் அரைமனை அளவு அண்மையில் தான் வாங்கப்பட்டது. அது வாங்கப் பட்டதால்தான் வீடு சதுரமான பரப்புக்குள் அமைந்தது. இதில்தான் உறை கிணறும வெட்டப்பட்டது. சரியான ஊற்று இல்லை. பொட்டணத்திலேயே எல்லாக் கிணறுகளும் இதே நிலை தான். இந்த மனையையும் வாங்கும்போது ஏதாவது சிக்கல் இருக்கக் கூடும் என ஐயங் கொண்டு தன் தாயார்

---

6. அப்பர் தேவாரம் ; 5.19;9

பேரிலேயே கிரயப்பத்திரம் ஏற்படுத்தி இருந்தார். இதைத் தன் தாயார் யாராவது ஒரு போக்கிரிக்கு விற்று வேடிக்கை பார்த்தாலும் பார்க்கலாம் என்ற அச்சம் என் மைத்துனர் மனத்தில் இருந்து கொண்டிருந்தது (இது தன் பேரில் தான் உள்ளது என்பதே என் மாமியாருக்குத் தெரியாது). இருந்தாலும் சின்ன குண்டு இதைத் தெரிந்து கொண்டு தன் தாயாரைத் தூண்டிவிடக் கூடுமல்லவா? இந்த அச்சம் இருந்து கொண்டுதான் இருந்தது என் மைத்துனர் மனத்தில். அவருக்கு அரங்கசாமி ரெட்டியார் என்ற உறவினர் ஒருவர் அள்ளூரில் இருந்தார். அவர்மூலம் தன் அன்னையை இணங்க வைத்து தன் பேருக்குக் கிரயம் வாங்கிவிடலாம் என்ற திட்டம் உருவாகியது. சுப்பிரமணியத்திடம் கலந்த பிறகுதான் இந்த எண்ணமே உதித்திருக்க வேண்டும் ரூபாய் 2000/- என்று விலையை அறுதியிட்டு ரூ 1500/- நேரில் பெற்றுக் கொண்டதாகவும் ரூ 500/- சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்வதாகவும் பத்திரம் எழுதப் பெற்றது. பத்திரம் பதிவாகி பணத்துடன் தன் அன்னையார் அலுவலகத்தை விட்டு வெளியில் வந்து ஊர்திரும்பும் போது இந்தப் பணத்தைப் பிடுங்கிக் கொள்ளலாம் என்பது சதித் திட்டம். இஃது எப்படியோ அம்பலமாகி அரங்கசாமி ரெட்டியார் காதிற்கும் எட்டிவிட்டது. உடனே அவர் என் மாமியாரிடம் இந்தப் பணத்தை வாங்கியதும் சார் பதிவாளர் எதிரிலேயே இச்சதித்திட்டத்தை வெளியிட்டுப் பணத்தைத் தன்னிடம் தந்து விடுமாறும் தான் ஊர் திரும்பியதும் தந்து விடுவதாகவும் சொல்லி ஏற்பாடுகள் செய்து கொண்டார்.

பத்திரம் பதிவாகி பணத்தைச் சார்பதிவாளர் தன்னிடம் தந்ததும், என் மாமியார் சார்பதிவாளரை நோக்கி, "ஐயா, இந்தப் பணத்தை நான் அலுவலகத்தை விட்டு வெளி வந்ததும் என் மகன் பிடுங்கிக் கொள்வதாகத் திட்டமாம். ஆதலால் இந்தப் பணத்தை (ரூ 500/-) சாட்சி

யாக வந்த அரங்கசாமி ரெட்டியாரிடம் உங்கள் எதிரில் தந்து விடுகின்றேன். ஊரை அடைந்ததும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுகின்றேன்'' என்று சொல்லி அவரிடம் கொடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு தன் மகன்மீது வழக்குத் தொடுத்து சர்ரண்டர் பத்திரத்தைச் செல்லாமல் அடித்து விடலாம் என்பது என் மாமியாரின் திட்டம்; குண்டு தம்பு யோசனை இதுவாக இருக்கலாம். இந்தப்பணத்தையும் தான் பிடுங்கிக் கொண்டால் அம்மா ஆட்டம் அடங்கிவிடும் என்பது என் மைத்துனரின் திட்டம். ஆனால் இறைவனது திட்டம் வேறு விதமாக இருந்தது. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்குமல்லவா?

எல்லோரும் சேந்தமங்கலத்திலிருந்து (சார்பதிவாளர் அலுவலகம் உள்ள ஊர்) வண்டியில் பொட்டணம் திரும்பும் போது, அரங்கசாமி ரெட்டியார் என் மாமியாரை நோக்கி, ''அக்கா, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் அதைப் பார்த்துக் கொண்டு பின்னர் வருகின்றேன். நீங்கள் வண்டியில் போங்கள்'' என்று கூறி பின் தங்கி விட்டார். தங்கினவர் 'இந்தப் பணம் போக வேண்டிய இடம் துறையூர்' என்று நினைத்துக் கொண்டு சேந்தமங்கலத்தி லிருந்து பேருந்து ஏறி நாமக்கல் வந்து, நாமக்கல்லிலிருந்து மற்றொரு பேருந்து ஏறி இரவு ஏழரை மணிக்குத் துறையூர் வந்து பணத்தை விவரம் சொல்லி என் மனைவியிடம் சேர்ப் பித்தார். சீதனத்தில் ஒரு பகுதி இப்படி எங்களை வந்தடைந்தது.

(2) சின்னகுண்டுத் தம்புவுக்கு பொட்டணத்தில் ஊருக் குக் கிழக்கே நஞ்செய் நிலம் இருந்தது. அதில் இரண்டு ஏக்கரில் குச்சிவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்திருந்தார். நூறடிக்குக்கு மேல் ஆழத்திலிருந்து கபிலையைக் கொண்டு தான் நீர் இறைத்துப் பாய்ச்சவேண்டும். கிழங்கு முக்கால் தரத்தில் விளைந்திருந்தது. ''இந்தக் குண்டன் தானே தன் அன்னையாருக்குப் புகலிடம் தருகின்றான், இவனுக்குப்

பாடம் கற்பிக்கவேண்டும்'' என்று சுப்பிரமணியம் என் மைத்துனருக்கு உபதேசம் செய்ய, அதற்கு என் மைத்துனரும் ஒப்புக்கொண்டார். சிவநாய்க்கன் பட்டியிலிருந்து (சுப்பிர மணியம் ஊர்) இரவோடு இரவாக இருபத்தைந்து கூலியாட் களைக் கொண்டு வந்து குண்டுதம்பு வயலில் நீர் பாய்ச்சப் பெற்று முக்கால் தரத்தில் விளைந்துள்ள குச்சி வள்ளிக் குச்சி களைப் பிடுங்கி எறிந்துவிட்டனர். மறுநாள் காலையில் குண்டுத்தம்பு வந்து நிலத்தைப் பார்வை இடும்போது இக் கோரக் காட்சியைக் கண்டார்; துடிதுடித்துப் போனார். ஊர்ப் பெருமக்களைக் கொண்டு வந்து காட்டினார். என் மாமியாரையும் இட்டுக் கொண்டுவந்து காட்டினார். பாடு படும் விவசாயிதான்—உழைப்பாளிதான்—இக்கொடுமையை நன்கு உணரமுடியும். கையில் நாலாயிரம் ரூபாய் வைத்தி ருந்து அதைத் தவறவிட்டவர் மனம் நோவதைவிட இக் கோரக் காட்சியைக் காண்பவர்கள் யாவரும் ஆயிரம் மடங்கு மனம் நொந்து போயிருக்கவேண்டும். இதைச் செய்தவர் யார் என்பதை மெய்ப்பிக்க முடியாவிடினும் இது ''சுப்பிர மணியம்— இராமசாமி இருவரின் சதி'' என்பதை எல்லோரும் உணர்ந்தனர். உணர்ந்து என்ன பயன்? 'படு பாவிப்பயல்கள்!' என்று சபித்தனர்; அவ்வளவுதான்!

இதனைக் கண்டு கண்கலங்கிய என் மாமியார் இல்லம் அடைந்ததும் தன் கழுத்திலிருந்த பதிநான்கு சவரன் எடை யுள்ள நான்கு வடம் சங்கிலியைக் கழற்றிக் குண்டுத் தம்பு விடம் தந்து, ''இந்த சங்கிலியை விற்று, வழக்குத்தொடுத்து என் மகனையும் சுப்பிரமணியத்தையும் கம்பி எண்ண வை'' என்று பொங்கி எழும் சினத்துடன் கூறித் தந்தார். சின்ன குண்டுத் தம்பு அதை விற்பதற்காக குறுக்கு வழியில் நாமக் கல்லுக்கு நடந்தார். (6 கல் தொலைவு—பேருந்து வசதி இல்லை; அவருக்கு மிதிவண்டியும் ஏறத்தெரியாது). இச் செய்தி கோடை காலத்துக் காற்றில் தீ பரவுவது போல்

ஊரெங்கும் தெரிந்துவிட்டது. சுப்பிரமணியம் அப்போது பொட்டணத்தில்தான் இருந்திருக்கவேண்டும். அவர் யோசனைப்படித் தடியும் கம்புமாக அடியாட்கள் குண்டுத் தம்புவைத் துரத்திக்கொண்டு பின் தொடர்ந்தனர். வேடிக்கைப் பார்க்கும்-ஆண்கள்-பெண்கள் உட்பட-கூட்டமும் சாவகாசமாக நடந்து சென்றது. அந்த ஊர்ப் பெரியவர் செல்வர்,வயதுமுதிர்ந்ததிரு.பொன்னமரெட்டியாரும்தடியை ஊன்றிக்கொண்டு எல்லோருக்கும் பின்னால் மெதுவாக நடந்து போய்க்கொண்டிருந்தார். குண்டுத்தம்பு 2 கல் நடந்துவிட்டார். பின்னால் தடியும் கம்புமாகத் தன்னைத் துரத்திவரும் கூட்டத்தைக் கண்டு கையில் தாளில் சுற்றி வைத்திருந்த சங்கிலியைக் கூட்டத்தை நோக்கித் தூக்கி எறிந்துவிட்டு ஒட்டம் பிடித்து அருகிலுள்ள ஊர் கிராம முனிசீப் (செல்வாக்குள்ள கவுண்டர்) வீட்டில் சரண் புகுந்து விட்டார். கவுண்டரும் 'அபயம்' வழங்கினார்.

பின்தொடர்ந்து ஓடிய கூட்டத்தில் ஒருவர் அந்தச் சங்கிலியை எடுத்துக்கொண்டார். இவர் பொது மனிதர். இவரைச் சங்கிலியைத் தருமாறு என் மைத்துனரோ, சுப்பிர மணியமோ வற்புறுத்தவில்லை. ஊருக்குப் போய்ப் பார்த் துக் கொள்ளலாம் என்று கருதி விட்டு வைத்தனர் போலும். ஆனால் அந்த 'நல்லவர்' (வல்லவரும் கூட) அந்தச் சங்கிலியைப் பின்னால் நடந்து வந்துக் கொண்டிருந்த திரு. பொன்னம்மரெட்டியாரிடம் சேர்த்துவிட்டார். இனி சங்கி லிக்குப் பாதுகாப்புதான்என்று என்மைத்துனர் முதலியோரும் வாளா இருந்துவிட்டனர். அடுத்தநாள் என் மைத்துனர் பொன்னம ரெட்டியார் இல்லம் சென்று, 'சங்கிலியைத் தாருங்கள்' என்று கேட்க, அவர் "எந்தச் சங்கிலி?' என்று வினவ, 'என் தாயார் சங்கிலி' என்று பதிலிறுக்க, "நீ என்னிடம் கொடுத்தாயா கேட்பதற்கு?' என்று மறுத்துவிட அவரும் வாளா வீட்டிற்குத் திரும்பினார்.

அடுத்து என் மாமனார் சென்றார். இருவரும் ஒத்த வயதுடையவர்கள்; நண்பர்கள். 'சங்கிலியைத் தாருங்கள்' என்று கேட்க, 'எந்தச் சங்கிலி?' என்று திருப்பிக் கேட்க, 'என் மனைவியின் சங்கிலி' என்று சொல்ல, "அதனை உங்களிடம் தர முடியாது. நீங்கள் அதை என்னிடம் தர வில்லை. உங்கட்குக் கேட்பதற்கே உரிமை இல்லை. அது போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடும்" என்று மறுத்துவிட்டார். என் மாமியார் சென்று அதனைக் கேட்கவில்லை. தன் மகன், கணவன் இவர்கட்குத் தந்த மறுமொழிதான் தனக்கும் வரும் என்று வாளா இருந்து விட்டார் போலும்! மூன்றாம்நாள் திரு அரங்கசாமிரெட்டி யாரைக் கூப்பிட்டு, "நீ துறையூரில் ரூ. 500-ஐக் கொண்டு போய் சேர்த்தாயலவா? அப்படியே இந்தச் சங்கிலியையும் எடுத்துச் சென்று மகளிடம் சேர்த்துவிடு" என்று சொல்ல, அவரும் மகிழ்ச்சியுடன் சங்கிலியை எங்களிடம் சேர்த்து விட்டார்.

(3) என் மாமியார் குண்டுத் தம்புவை அழைத்துக் கொண்டு போடிநாய்க்கன்பட்டி சென்று மிட்டாதார்கள் இருவரைவும், மூன்றாம் மனிதர் இராமநாதனையும் தனக் குரிய ரூ. 5000- யும் தன்னிடம் தருமாறும், தான் அத் தொகைக்கு ரசீது தந்துவிடுவதாகவும் சொல்லிக் கேட்டார். 'புரோநோட்டு உங்கள் பேரில்தான் உள்ளது என்பது தெரியும். பணத்தை உங்களிடம் தர முடியாது. நோட்டீஸ் அனுப்புங்கள். பிறகு பார்க்கலாம்' என்று சொல்லி விட்டனர். உடனே யாரையோ பிடித்து நோட்டீஸ் எழுதி பதிவு அஞ்சலில் அனுப்பிவைத்தார் என் மாமியார். மிட்டா தார் குடும்பத்திற்குச் சுப்பிரமணியம் மிகவும் வேண்டியவர். அவருக்கு நோட்டீஸ் அனுப்பிய செய்திஎட்டியது. என் மைத் துனரும் சுப்பிரமணியமும் சேர்ந்து சென்று மிட்டாதாரர் களை நோட்டீஸ் வாங்கிகொள்ளவேண்டா என்று தடுத்து

விட்டனர்; மிட்டாதார்களும் நோட்டீஸ்களை வாங்கிக் கொள்ளாததால்' அவை திரும்பி அனுப்பியவருக்கே வந்து சேர்ந்துவிட்டன.

எப்படியாவது பணம் தேடி சுப்பிரமணியத்தையும் தன் மகளையும் நீதிமன்றத்திற்கு இழுத்து தண்டனை வாங்கி வைக்கவேண்டும் என்று 'தாயுள்ளம்' அலைந்தது. என் மாமியார் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் பணத்தின் மீது இருந்த பாசத்தைப்போல் பிள்ளைகள்மீதோ, தந்தையார்மீதோ, தாயார்மீதோ இல்லை. என் மாமனார் கொத்தடிமையைவிடக் கேவலமாக நடந்து கொண்டே தன் எழுபதிற்கு மேற்பட்ட வாழ்க்கையைக் கழித்துவிட்டார். அவரது மாமியாரோ தன்னுடைய பணத்தை யாருக்கும் தராமல் தன் தொண்ணூறுவயதையும் கழித்துவிட்டார். என் மாமியாரும் எதுவும் அறியாமல் கால்நடைபோல் இருந்து கொண்டே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். எந்தவித உரிமையும் தரப்பெறாமல், குடும்பத்தில் பணவிஷயத்தில் எந்தவித பொறுப்பும் தரப் பெறாமல் 35 அகவைக்குமேல், எல்லோரும் அடங்கிய நிலையில், பணத்தின் பொறுப்பு தனக்கு வந்ததால், அதன் அருமை தெரியாமல், என் மைத்துனர் அதை வைத்துக் கொண்டு விளையாடுகின்றார். நல்ல உள்ளம் படைத்தவர் என்ற என் நம்பிக்கைக்குப் பாத்திரரானாலும், தான் என்னுடைய படிப்பின் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லித் தன் தங்கையை எனக்குக் கட்டிவைத்துப் பின்னர் ஏமாற்றியது, ஓர் இலட்சம் வரையில் தண்டவாளப் பெட்டியிலிருந்தும் குடும்பவாக்கின்படி ஒரு பத்தாயிரம் தன் தங்கையிடம் தந்து தன் பொறுப்பை விலக்கிக் கொள்ளாமை— இவற்றால் அவர் நன்கு 'கபடநாடகம்' ஆடுகின்றார் என்பதை தன் நடவடிக்கையினால் மெய்ப்பித்துவிட்டார். தன்னையறியாமல் மாமனாரின் கைப்பாவையாகிவிட்டார்.

அவரும் தன் மருமகனைத் தோற்பாவைபோல் ஆட்டி வைக்கின்றார். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழி பொய்க்குமா? வினைவிதைத்தவன் வினையைத்தானே அறுக்க முடியும்?

குமிழி—82

## 18. வழக்குத் தொடர்கள்

என் மாமியார் தாய்வழியாகத் தமக்குச் சட்டப்படிச் சேரவேண்டிய சொத்துகளை நரிதின்ற கோழியாக்கி தெருவில் நின்று உண்பதற்கும் உறைவிடத்திற்கும் பிறர் உதவியை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பெற்றதைக் கேட்டு என் மனைவியால் வாளா இருக்கமுடியவில்லை. பெற்ற வயிறு தவிப்பதை யாரால் சகிக்க முடியும்? எப்படியும் அவர்களைத் துறையூருக்குக் கூட்டி வந்துவிடவேண்டும் என்று துடிதுடித்தாள். என்னால் அந்த ஊருக்குப் (பொட்டணத்திற்குப்) போகமுடியாது என்று கூறிவிட்டேன்; தன்னாலும் போகமுடியாது என்பதை உணர்கின்றாள். எப்படி இட்டுக் கொண்டு வருவது என்று சிந்தித்ததில் எனக்கு ஒரு வழி தோன்றியது.

பொட்டணத்தில் வீரமரெட்டியார் என்பவர் ஒருவர்; பொன்னமரெட்டியார் என்பவரின் மருமகன். நல்லிப் பாளையத்தைச் சேர்ந்த இவர் தம்முடைய சொத்துகளையெல்லாம் பிரித்துக்கொள்ள வகையின்றித் தம்முடைய மாமனார் வீட்டிற்கே குடிபுகுந்துவிட்டார். தம் மனைவி தம் மாமனாருக்கு ஒரே பெண்; இலட்சத்திற்கு மேல் சொத்து மதிப்புடைய குடும்பத்தின் ஒரே வாரிசு. இவர் தம்முடைய வேலையைச் சிறிதும் கவனியாவிட்டாலும் தம்முடைய யோசனையையும் தாம் அநுபவத்தால் பெற்ற நுண்ணறிவையும் பிறர் நலனுக்கு வழங்குவதில் ஒரு ரிப்வான் விங்கில். என் மாமியாரைத் துறையூருக்கு இட்டுவந்து எங்கள் பாது

காப்பில் விடுமாறு கடிதம் எழுதினேன் என்பதாகவும் அவரும் மனமுவந்து தள்ளாத நிலையிலுள்ள என் மாமி யாரை இட்டு வந்து எங்கள் வசத்தில் ஒப்படைத்தார் என்ப தாகவும் என் நினைவு.

வந்தவரால் வாளா இருக்க முடியவில்லை. ஏமாளித் தனமாக சர்ரண்டர் பத்திரத்தை எழுதித் தந்துவிட்டு தும்பைத் தெறித்துவிட்டதால் அங்குமிங்கும் ஓடும் கன்றுக் குட்டியைப் பிடிக்க முயல்வாரைப்போல் மிட்டதார்கள்மீது எப்படியாவது வழக்கு தொடுத்து 4000/-ஐ வசூல் செய்ய வேண்டும் என்றுஎன்னை வற்புறுத்தினார்கள். புரோநோட்டு கள் என் மைத்துனர் வசத்தில் உள்ளன; என் மாமியார்மீது தான் புரோநோட்டுகள் உள்ளன என்பதை நான் நன்கு அறிவேன் அவற்றில் நான் சாட்சிக் கையெழுத்து போட் டிருப்பதால். புரோநோட்டுகள் இல்லாமல் வீண் வழக்குகள் தொடுக்க என் மனம் ஒருப்படவில்லை; வழக்குகள் தொடுத் தால் பயன்படாது என்று கூறி மறுத்துவிட்டேன்.

வீரம ரெட்டியாரைக் கொண்டு என் மாமியார் எப்படி யாவது என்னை வழக்கு தொடுப்பதற்கு இணங்க வைக்க முயன்றார்கள்; படாதபாடுபட்டார்கள். வீரம ரெட்டியார் உலகியலை நன்கு அறிந்தவர்; என் மாமியாரின் மனநிலை யையும் நன்கு அறிந்தவர். 'பணம் கிடைத்தால் இந்த அம்மாவால் வாளா இருக்கமுடியாது. குண்டுத் தம்புவோடு சேர்ந்துகொண்டு ஏதாவது செய்வார்' என்று நினைத்தார். வீரமரெட்டியார் தானாக யோசனைசெய்து கூறியது; "அம்மா, நான் உன் மருமகனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் ஒத்துக்கொள்வார் என்பது எனக்குத் தெரியவில்லை. புரோநோட்டுகள் இல்லாமல் வழக்குத் தொடுத்தால், வெற்றி கிடைக்காது என்று நினைக்கின்றார்.

தோற்றுவிட்டால் தன் மானம், மரியாதை, பெருமைஎல்லாம் பறிபோகும் என்று நினைக்கின்றார். தோற்றுவிட்டால் செலவுத்தொகை பிரதிவாதிகட்குத் தரும்படி நேரிடும். இது மானக்கேடான செயல் என்றும் கருதுகின்றார். உங்கள்மீது சொத்து இல்லையென்றால், உங்களை ஒன்றும் செய்ய முடியாது. பெண்களுக்கு சிறைவாசம் இல்லை. உங்கள் பேரில் ஆலத்துடையாம்பட்டியில் இரண்டு ஏக்கர் நிலம் இருக்கின்றதே என்று கவலைப்படுகின்றார்'' என்று.

உடனே என் மாமியார், ''என்ன செய்யலாம்? யோசனை கூறுங்கள்!' என்றுகேட்க, வீரமரெட்டியார், ''ஒன்று சொல்லுகின்றேன், கேட்பீர்களா? உங்கள்பேரில் உள்ள இரண்டு ஏக்கர் நிலத்தையும் உங்கள் மகள்பேருக்கு நிபந்தனை இல்லாத ஒப்பந்த பத்திரம் ((Unconditional Settlement) எழுதிப் பதிவு செய்துவிடுங்கள். இப்பொழுது உங்கள்மீது சொத்து இல்லையாதலால் வழக்குதோற்றாலும் உங்களைத் தீர்ப்பு ஒன்றும் செய்யமுடியாது.'' என்று கூற, என் மாமியாரும் இவரது யோசனைப்படிச் செய்வதாக ஒப்புக்கொண்டு பத்திரமும் எழுதி உப்பிலியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்து தந்துவிட்டார்.

''இனி இந்தஅம்மாள் சபலத்தால் மனம் மாற முடியாது. குண்டுத்தம்புவும் இவர் வழிக்கு வாரார். நீங்கள் வக்கீலைக் கலந்து மிட்டாதார்கள்மீது வழக்குத் தொடரலாம் என்று சொல்லி அதற்கு ஆவன செய்யலாம்'' என்று கூறி விடை பெற்றுச்சென்றார் வீரமரெட்டியார்.என மனம் செயற்படத் தொடங்கியது. என் நண்பர் வக்கில் P. அரங்கசாமி ரெட்டியாரைக் கலந்தேன். அவரும், ''நான் முதலில் என். பொன்னுசாமி ரெட்டியாருக்கும் அவர் தம்பி என். கிருஷ்ண ராஜு ரெட்டியாருக்கும் நோட்டீஸ் அனுப்புகிறேன். அவர்கள் கட்டாயம் பதில் நோட்டீஸ் அனுப்புவார்கள். அவர்கள்

தரும் பதிலைக் கொண்டு மேல்நடவடிக்கைகள் எடுக்கலாம்'' என்று கூறி இருவருக்கும் நோட்டீசுகள் அனுப்பினார். இராமநாதன் என்பவரை இந்த வழக்கிலிருந்து விலக்கி விட்டோம்.

பதினைந்து நாட்களில் அண்ணனும் தம்பியும் துரைசாமி அய்யர் என்ற வக்கீலைக் கலந்து (இவரைத் துரை வக்கீல் என்று பொதுமக்கள் வழங்குவார்கள்) பதில் நோட்டீசுகளை அனுப்பினார்கள். அவற்றில் ''நாங்கள் பெரியம்மாவிடம் எந்தத் தொகையும் வாங்கவில்லை; புரோநோட்டுகளும் எழுதித் தரவில்லை. அந்த அம்மாளுக்கும் மகனுக்கும் ஏதோ தகராறு நடைபெற்றது. அதைப் பைசல்செய்து தீர்த்து வைக்குமாறு எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் 'எங்களால் இது செய்ய இயலாது' என்று சொல்லிவிட்டோம். இதனால் எங்கள்மீது சினம்கொண்டு அநியாயமாக நோட்டீசு அனுப்பியுள்ளார்கள். ஏதாவது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாலும் அது எங்களைக் கட்டுப்படுத்தாது' என்று சொல்லிவிட்டார்கள்.

(1) இந்தப் பதில் நோட்டீசைக் கண்டு ''சிறிது பிடி உள்ளது; நீங்கள் நாமக்கல்லில் உள்ள நல்ல வக்கீலைக் கலந்து வழக்கு தொடரலாம்'' என்று சொன்னார் வக்கீல் அரங்கசாமி ரெட்டியார். நான் செலவுக்குப் பணம் எடுத்துக் கொண்டு நாமக்கல் சென்று யோக்கியமான வக்கீல் என்று பெயர்பெற்ற கே. வீரராகவ அய்யங்கார் என்ற பிளீடரைக் கலந்தேன். இவர் நல்ல செல்வர். அந்தக் காலத்தில் மெட்ரிக் வரையில்தான் படித்தவர்; வழக்கறிஞர் தொழிலைத் திறம்படச் செய்துவந்தார். யோக்கியதைக்குப் பேர்போனவர். இவரைக் கலந்ததில் 'வழக்கு தொடரலாம்' என்று சொன்னார். முதலில் பொன்னுசாமி ரெட்டியார் பேரில் உள்ள ரூ. 3000/-க்கு வழக்குத் தொடர்ந்தோம்.

வட்டி முழுவதையும் அசலில் ரூ. 10/-ம் தள்ளி நாமக்கல் மாவட்ட நீதிமன்றத்தின் சட்டவரம்பை (Jurisdiction) ஏற் படுத்திக் கொண்டு பிராது எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம். "இதற்கு அவர் (பிரதிவாதி) தாக்கல் செய்யும் எழுத்து வாக்குமூலத்தைக் (Written statement) கண்டு அடுத்த புரோநோட்டுபற்றி யோசிப்போம்" என்று அன்பாகச் சொன்னார்கள். செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டுத் துறையூர் திரும்பினேன்.

ஒருசில நாட்களில் பொன்னுசாமி ரெட்டியார்மீது பிராது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பெற்றது. அவரும் துறை வக்கிலை அமர்த்திப் பதினைந்து நாட்களில் எழுத்து வாக்குமூலத்தைத் தாக்கல் செய்தார். இதைப்,பரிசீலனை செய்து வீரராகவ அய்யங்கார், "பிடிகொடுத்துவிட்டார்கள். இரண்டாவது புரோநோட்டின்மீதும் வழக்குத்தொடரலாம். தொடரத்தான் வேண்டும். காலம்தாழ்த்தித் தொடர்ந்தால் நமக்குப் பாதகமாகவும் முடியலாம். உடனே புறப்பட்டு வருக" என்று கடிதம் எழுதினார்கள். நானும் ஒரு சனிக் கிழமையன்று நாமக்கல் சென்று இரண்டாவது நோட்டு எழுதித் தந்த கிருஷ்ணராஜு ரெட்டியாரின்மீது வழக்குத் தொடர ஏற்பாடு செய்தேன். முறைப்படி பிராது நீதிமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டது. இதில் நம்பர் விழுந்ததும். இரண்டு வழக்குகளும் ஒரே தேதியில் விசாரணைக்கு வரு மாறும் கோரப்பட்டது.

(2) துறையூரிலிருந்து வக்கீல் அரங்கசாமி ரெட்டியார் மூலம் (1) என் மாமனார் ஆ. பெத்து ரெட்டியாருக்கும் (2) என் மைத்துனர் ஆ. பெ. இராமசாமி ரெட்டியாருக்கும் பிழைப்புக்கான தேவைகள் கோரி தம் கணவருக்கும் மகனுக்குமாக நோட்டீசுகளை அனுப்பினார் என் மாமியார். அவற்றில் முதலில் காப்பு ஆவணம் ஏற்பட்டதும், பின்னர்

அதனைத் தள்ளுபடி செய்து தானசாசனம் ஏற்பட்டதும். பொறுப்பு ஒப்படைப்பு சாசனம் ஏமாற்றி வாங்கப்பட்டது மான செய்திகள் யாவும் கூறப்பெற்றன. அவர்களிடமிருந்து பதில் நோட்டீசுகள் பெற்றதும் வாழ்க்கைத் தேவைப் பிராது துறையூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பெற்றது. இந்த வழக்கு தொடர்ந்து இரண்டாண்டுகள் நடைபெற்றது.

(2) என் மனைவிபேரில் உள்ள 16ஏக்கர் புன்செய்காட்டுக்கு மூன்றாண்டு குத்தகை ரூ. 900/- பாக்கி; இதனை உடனே செலுத்தவேண்டும் என்று வீரராகவ அய்யங்கார் மூலம் என் மாமனாருக்கும் மைத்துனருக்கும் நோட்டீஸ் அனுப் பினாள் என் மனைவி. இதற்குப் பதில் நோட்டீசில் "நான் உங்கள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளவும் இல்லை; எந்தப் பாக்கியும் தரவேண்டியதில்லை" என்று தெரிவிக்கப் பெற்றது. அப்போது அந்தக் காட்டில் சோளமும் எள்ளும் அறுவடைக்குத் தயாராக இருந்தது. மகசூலின் அக்கால மதிப்பு ரூ. 1000/- இருக்கும். சின்ன குண்டுத்தம்பு ரூ. 3/- கூலி வீதம் 100 ஆட்களைவிட்டு இரவோடு இரவாக அறுவடை செய்ய ஏற்பாடு செய்துவிட்டு துறையூர்வந்து சேர்ந்தார். நானும் அவரும் முதல் பேருந்தில் அதிகாலையில் கிளம்பி காலை 7-30 சுமாருக்குக் காட்டை அடைந்தோம். நாமக்கல் தாண்டி சேலம்போகும் சாலையில் 2 கல் தொலைவு கடந்து காட்டை அடையவேண்டும். நாங்கள் காட்டை அடைந்ததும் அங்கிருந்த பெரிய குண்டுத்தம்பு தம் தம்பியை நோக்கி, "தம்பி. நீ இராமசாமி, சுப்பிரமணியம் கண்ணில்படாமல் மறைந்து கொள்க. நின்னைத் தாக்கி னாலும் தாக்கலாம்" என்று கூற அவரும் மறை வாகவே இருந்துகொண்டார். சோளம், எள்ளுச்செடி இரவோடு இரவாக அறுவடை செய்யப்பெறுவதை அறிந்து என் மைத்துனர் இராமசாமி ரெட்டியார் தன் மாமனார்

சுப்பிரமணியத்துடனும் வேறு சிலருடனும் அந்தக் காட்டிற்கு வந்திருந்தனர். பக்கத்து ஊர் கிராம முனிசீப்பு தலைமையில் இந்த அறுவடைக்கு ஏற்பாடு செய்திருந்தமையால், அந்தக் கிராம முனிசீப்பும் 100 ஆட்களும் கும்பலாகக்கூடியிருந்தனர்• அறுவடையும் முடிந்து சோளத்தட்டை கதிர்களுடனும்• எள்ளு செடியும் தனித்தனியாகக் கட்டப் பெற்று வரிசையாக வைக்கப் பெற்றிருந்தன,

நான் முனிசீப் இருந்த இடத்திற்குச் சென்றேன். அவர் அன்பாகப் பேசினார். "உங்களுக்குள் தகராறு எதற்கு? சுமுகமாகத் தீர்த்துக் கொள்வது நல்லது" என்ற தொனியில் பேசலானார். தொலைவிலிருந்த பெரிய குண்டுத்தம்பு "முனிசீப்பு பீ தின்றுவிட்டான்(கையூட்டு வாங்கிவிட்டான்); வேறுபோக்கில் பேசுவான். விழிப்பாக நடந்து கொள்ளுங் கள்" என்று என்னை எச்சரித்தார். முனிசீப்பு பேச்சிலிருந்தும் நிலைமையைப் புரிந்துகொண்டேன். நான் முனிசீப்பிடம் சொன்னது: "தங்கள் உதவிக்கு மிகவும் நன்றி. இரவில் மிகவும் சிரமப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் சொல்லுவதுபோல சுமுகமாகப் போவதுதான் சரி. நானும் இப்படி நினைத்து தான் துறையூரிலிருந்து வந்தேன். ஆட்களின் சம்பளம் ரூ. 300/-யும் என் மைத்துனரிடம் வாங்கிக் கொள்ளுங்கள். மகசூலை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள். மீண்டும் நன்றி" என்று சொல்லிக்கொண்டு முனிசீப்பிடமிருந்து விடை பெற்றேன். பின்னர் இரண்டு தம்புகளிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டே வந்த வழியே திரும்பி நாமக்கல் வந்து சிற்றுண்டி உண்டு துறையூர் திரும்பினேன். இது ஒருவகை அநுபவம்.

இந்த 16 ஏக்கர் நிலத்தையும் என் மைத்துனருக்கே கிரயம் எழுதிக் கொடுத்து விட உத்தேசித்தோம். அரங்க சாமி ரெட்டியார் மூலம் இந்த ஏற்பாடு நடந்தது. ரூ12,50/-

மேல் தர முடியாது என்று சொல்லிவிட்டாலும், அவருக்கே அத்தொகைக்குக் கிரயம் எழுதித்தந்து சேந்தமங்கலத்தில் பதிவு செய்து தொகையைச் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டு துறையூர் திரும்பினோம். பாசம், உறவு, முதலியவை எல்லாம் பணத்திற்கு முன் தவிடு பணத்தைப் பொடியானதை நினைத்துக் கொண்டேன்.

(4) என் மைத்துனரின் முதல் மனைவி இராஜாம்பாள் இதுகாறும் (சுமார் 10 ஆண்டுகள்) வாளா இருந்துவிட்டு என் மைத்துனர் பேரில் தான சாசனம்மூலம் சொத்துகள் வந்தன என்பதைத் தெரிந்து கொண்டு அவர்கட்குப் பெண் எடுத்ததுமூலம் உறவும் எங்கட்கு நீண்டகால உறவும் உடைய முத்தியாலுரெட்டியார் (பவித்திரம்) என்ற பெரியவரின் உதவி கொண்டு வாழ்க்கைத் தேவைப்(Maintenance) பிராது ஒன்றை நாமக்கல் மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார்கள். இந்த வழக்கு இரண்டு ஆண்டுகள் நடைபெற்றது.

இதுகாறும் ஆகூழ் இருந்தமையால் சொத்து பெருகிக் கொண்டே வந்தது என் மைத்துனர் குடும்பத்தில். இப்போது போகூழ் வரத் தொடங்கி விட்டது. இதற்கு உற்பாதமாக ஏற்பட்டவை மூன்று நிகழ்ச்சிகள்.

(1) பெண்கள் வழியாக வந்த சொத்தின் ஒரு பகுதியைப் பிரித்துத் தன் தங்கைக்குக் கொடுத்திருக்கலாம். தன் தங்கையைச் சொந்தக்காரன் தலையில் கட்டிவிட்டால் அவனை ஏமாற்றிவிடலாம் என்று திட்டம் போட்டுத் தன் தங்கையை எனக்கு மணம் புரிவித்து ஏமாற்றியமை. இஃது ஒரு பெண் பாவம்.

(2) ஏழாண்டுகள் முதல் மனைவியுடன் சச்சரவுடன் வாழ்ந்தாலும் புத்திரப் பேறு ஏற்பட்ட பிறகு மனைவியை

யும் மகனையும் ஒதுக்கிவைத்தமை. இவள் துர்மரணத்திற்கு ஆளாவாள் என்று எதிர்பார்த்தமை. சுப்பிரமணியம் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினது போல சோதிடர்களைக் கொண்டு இந்த மரணத்தை உறுதிப்படுத்தினமை. இஃதும் ஒரு மாபெரும் பெண் பாவம்.

(3) நீதிமன்றமே கதி; குடும்பங்களைத் தூண்டிவிட்டு வழக்குகளை ஏற்படுத்தி இதையே தன் பிழைப்பிற்கு வருவாயாகக் கொண்டு வாழும் சுப்பிரமணியத்து வீட்டில் பெண் எடுத்தமை.

இந்த மூன்று காரணங்களால் பல்வேறு விபரீதங்கள் இளைத்து மன அமைதி சிறிதுமின்றி சொத்துகளை எல்லாம் இழந்து, நோயினால் பல்வேறு இன்னல்களை அநுபவித்து, ஐந்து பிள்ளைகளை (நான்கு பெண்கள்+ஒரு பையன்) விட்டு இரண்டாம் மனைவியும் இறக்க நேர்ந்து விட்ட நிலைமைகளை இறுதிக் காலத்திலாவது நினைத்துப் பார்த்து மனம் வருந்தி இருக்க வேண்டும். என் மைத்துனர் பொல்லாதவர் அல்லர். தீயவர் உறவால் இவற்றை எல்லாம் அநுபவிக்க நேர்ந்தது.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி.[1]

என்ற பாடலை நினைந்த வண்ணம் இக்குமிழியும் நிறைவு பெறுகின்றது.

---

1. அறநெறிச்சாரம்-51

குமிழி—83

# 19. வழக்கு முடிவுகள்

(1) மிட்டாதாரர்கள்மீது வழக்குகள் தொடர்ந்தாலும், சுமுகமாகப் பைசல் செய்து நீதிமன்றததிற்கு வெளியே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே என்னிடம் மேலோங்கி நின்றது. துறையூர், நாமக்கல் பக்கச் சுற்றுப்புற ஊர்களில் திருமணம், பெரியகாரியம் (இறப்பு) முதலிய நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் ஒதுக்குவதில்லை' அங்குப்போகும் போதெல்லாம் திரு பொன்னுசாமி ரெட்டியாரையோ அவர் சட்டகர் எரகுடி அரங்கசாமி ரெட்டியாரையோ (பெரிய மனிதர்; மாவட்ட வாரியத் தலைவராக இருந்தவர்) சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். அப்போதெல்லாம் பைசல் விஷயத்தை அவர்கள்முன் வைப்பேன். பொன்னுசாமி ரெட்டியார் கூறுவார்: "என்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. சுப்பிரமணியத்திற்கு எங்கள் குடும்பவிஷயங்கள் எல்லாம் நன்கு தெரியும். நான் இந்த வழக்குகள்பற்றி ஏதாவது சுமுகமாகச் செய்தால் அவர் விரோதம் ஏற்படும். எங்கள் குடும்பத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்துவார், தயவுசெய்து மன்னியுங்கள்" என்று சொல்லி விடுவார். எரகுடி அரங்கசாமி ரெட்டியாரை இதில் தலையிட்டுச் தம் சட்டகரை ஒருவழிக்குக் கொணருமாறு கேட்டால், "பாருங்கள் உலகம் தெரியாத அப்பாவிகள். அவர்கட்குச் சொந்தப் புத்தியும் இல்லை. நல்லவர்கள் யோசனையையும் கேட்கமாட்டார்கள். வழக்குகளைத் தொடர்ந்து நடத்துங்கள். அவமானப்படட்டும்" என்று சொல்லிவிடுவார். இதற்காகப் பல வாய்தாக்கள் வாங்கிக் கொண்டு வழக்கை விசாரணைக்குக் கொண்டு வராமல்இருந்தேன், "கொடிறும் பேதையும் கொண்டதுவிடா" என்ற பழமொழி இவர்கள் விஷயத்தில் முற்றிலும் பொருந்திற்று.

வழக்குகள் விசாரணைக்கு வந்தன. மிட்டாதார்கள் இளிக்கூண்டு ஏறும் நிலையும் வந்தது. இந்த நாளைத் தெரிந்து கொண்டு அக்கம்பக்க ஊர்களிலிருந்து சுமார் 20 பேர்களுக்குமேல் வேடிக்கை பார்ப்பதற்காகவே நாமக்கல் வந்து சேர்ந்தனர். இவர்கள் ஒருவரையும் நான் அறியேன். என்னை அவர்கள் பார்க்காவிட்டாலும் நான் வகிக்கும் பொறுப்புள்ள பதவியால் எல்லோரும் என்னைப்பற்றி அறிந்திருந்தனர். விசாரணையன்று என் மாமியாரை நல்ல பட்டாடை உடுத்தச் செய்து நகைகளை அணியச்செய்து கர்ப்பூரச் சுடரை அவித்து சத்தியம் கேட்கத் தயாராக்கி னேன். வக்கீல், "இந்த ஏற்பாடு வேண்டா. சத்தியத்தை வற்புறுத்த முடியாது" என்றார். "இதில் முயல்வோம். அவர்கள் ஒருப்படாவிட்டால் வழக்குகளை முறைப்படித் தொடர்வோம்"என்றேன். "என்னரெட்டியார், சிறுபிள்ளை போல், பள்ளி மாணவன் போல், உலகம் தெரியாதவராக இருக்கிறீர்களே" என்றார் வீரராகவ அய்யங்கார் தந்தை பாசத்துடன். நான் "நீங்கள் என்னை நன்றாக எடை போட்டீர்கள். உண்மையில் கள்ளம் கபடம் அற்ற மாணவன் தான். உலகச்சாயம் இன்னும் என் மீது படியவில்லை, தில்லு முல்லும் செய்யத் தெரியாது. யாராவது அதனை மேற் கொண்டால் அதனை அறிந்து கொள்ளும் திறனும் எனக்கு இல்லை. தந்தைபோல் அறிவுரை கூறுகின்றீர்கள். இதற்கு மிகவும் நன்றி. என் வழிக்கும் சிறிது இடம் தாருங்கள். இது இறைவன் விட்டவழியாகவும் இருக்கட்டும்"என்றேன் நான், "சரி; பெருமாள்மீது பாரம் போட்டுச் செயற்படுகின்றீர்கள். நடக்கட்டும்" என்று பச்சைக்கொடி காட்டினார்,

அந்தப் பக்கத்தில் இது வரலாற்றுப் புகழ் பெற்ற வழக்காதலால் வேடிக்கை பார்ப்போர் கூட்டம் அதிகமாகத் திரண்டிருந்தது. சுப்பிரமணியம், என் மைத்துனர் இவர் களைச் சார்ந்தவர்கள் எண்ணிக்கையில் சற்று அதிகமாகவே

வந்திருந்தனர். 2 பலம் கர்ப்பூரம், தீப்பெட்டி, ரூ 500/- அடங்கிய காகிதஉறை இவற்றுடன் என் மாமியாரைக் கிளிக் கூண்டு ஏறச்செய்தேன். "ஐயா, நீதிபதியவர்களே, 'என் குலதெய்வம் சாட்சியாக நான் இந்த அம்மாளிடம் கைநீட்டிக் கடன் வாங்க வில்லை' என்று சொல்லி எரியும் கர்ப்பூரத்தை அவித்து விட்டால் போதும். நான் என்னுடைய வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். கோர்ட்டார் பிரதிவாதிகட்கு ஏதாவது செலவுத் தொகை கட்ட வேண்டும் என்று சொன்னால் இதோ ரூ 500/- இந்த இந்த உறையில் உள்ளது" என்று சொல்லும்போது சுப்பிரமணியத்துடன் வந்திருந்த கூட்டம் கண்ணில் படவே, "சுவாமி இந்த துரியோதனாதியர்கள் கூட்டம்தான் என் குடும்பத்தைக் கெடுத்தது. பாவி என் சம்பந்தி சுப்பிரமணியம் நாசமாகப் போகட்டும்" என்று நாதளுதளுக்க உணர்ச்சிமீதூர்ந்து பேசி நீதிமன்றத்தில் அழுதுவிட்டார்.

பாரதத்தில் கண்ணன் தூது சென்றபோது அவை எப்படி உணர்ச்சி பொங்க இருந்ததோ அப்படி இருந்தது நீதிமன்றம். 'துரியோதனாதியர் கூட்டம்' என்று கைகாட்டிச் சுட்டியுரைத்தபோது சுப்பிரமணியம் உட்பட அவரைச் சார்ந்தவர்கள் யாவரும் திடீரெனக் கலைந்தனர். இதனை நீதிபதி நன்கு பார்த்துக் கொண்டார். உடனே நீதிபதி பிரதிவாதிகள் ஆகிய பொன்னுசாமி ரெட்டியார், கிருஷ்ணராஜு ரெட்டியார் ஆகிய இருவரையும் முன்னர் பிரசன்னமாகுமாறு செய்து, "அம்மையார் சவாலை ஏற்கின்றீர்களா? சத்தியம் செய்வீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "நாங்கள் சத்தியம் செய்து தரமாட்டோம். நாங்கள் பணம் வாங்கவில்லை. மகனுக்கும் தாயாருக்கும் தகராறு. அந்தத் தகராறைத் தீர்த்து வைக்குமாறு எங்களை வேண்டினார்கள். நாங்கள் மறுக்கவே, எங்கள்மீது அபாண்டமாகப் பழிசுமத்தித் தொல்லை தருகின்றார்கள்,

எங்களிடமே பணம் தேவைக்கு மேல் உள்ளது. நாங்கள் கடன்வாங்க அவசியமேஇல்லை. அதுவும் இந்த அம்மாளைத் தேடிப்போய் வாங்க வேண்டிய அவசியமில்லை, வழக்கை விசாரணைக்கு வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டார்கள். இது ஒரு சனிக்கிழமை நடந்தது. நீதிபதி திங்களன்று வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக வாய்தா போட்டுவிட்டார்.

வேடிக்கை பார்க்க வந்தவர்களில் மிட்டாதார்களுக்கு விரோதிகளாக இருப்பவர்கள் என்னிடம் வந்து, ''மிட்டா தார்கள் கடன்காரர்கள். ரூ 100,-ரூ 50/-ஆகக் கூடப் பலரிடம் வாங்கியுள்ளார்கள். யாரிடம் வாங்கலாம் என்று சதா எதிர் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்'' என்று கூறி யார் யாரிடம் எவ்வளவு வாங்கியிருக்கின்றனர் என்பதற்குக் கொடுத்தவர் களின் பெயர் முகவரியுடன் ஒரு பட்டியலையும் தந்தார்கள். அதில் நாமக்கல்லிலுள்ள ஒரு வட்டிக்கடையின் பெயரும் இருந்தது. நான் அவர்களை (சுமார் 20 பேர்) உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி, காப்பி அருந்தச் சொல்லி மாலை ஆறு மணி சினிமாவுக்கும் டிக்கெட் வாங்கித் தந்து பார்த்துவிட்டு ஊர் போய்ச் சேருமாறு சொல்லி அனுப்பினேன். ''திங்களன்று வரட்டுமா?'' என்று கேட்க, அதற்கு நான், ''அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டாலும், நடைபெறும் என்று சொல்ல முடியாது. வாய்தாதான் விழும்'' என்று சொல்லி அனுப்பி விட்டேன்,

வக்கீல் வீரராகவ அய்யங்காருடன் கலந்து நாமக்கல் வட்டிக்கடையியில் உள்ள பொன்னுசாமி ரெட்டியாரின் கடன் விவரங்களைத் தெரிந்து கொண்டால் விசாரணைக்கு அனுகூலமாக இருக்குமா என்று கேட்க, அவரும் தன் வீட்டிற்கருகிலேயே அந்தக் கடை இருப்பதாகக் கூறி

தம்முடைய எழுத்தரை இதில் உதவும்படி பணித்தார். எழுத்தரும் "பட்டணத்து எருமைகளைக் கன்றில்லாமல் கொஞ்சம் பிண்ணாக்கு நீர் கலந்த தவிட்டைக் காட்டிப் பால் கறப்பதைப் போல ஒரு பத்து ரூபாயை பொறுப்பாள ருக்குக் காட்டி விஷயங்களைக் கறந்துவிடலாம்" என்று கூறினார். சனியன்று மாலை 6 மணி சுமாருக்கு எழுத்த ருடன் வட்டிக்கடைக்குச் சென்றேன். எழுத்தர் என்னை அந்த வட்டிக்கடைஏஜண்டு அய்யங்காருக்கு அறிமுகம்செய்து வைத்தார். நான் அய்யங்காரிடம் "ஒன்றும் இல்லை ஐயா, போடி நாய்க்கன்படி பொன்னுசாமிரெட்டியாருக்கு நம் கடையில் பற்று-வரவு ஏதாவது இருக்கின்றதா? மாவட்ட நீதிமன்றத்தில் ரூ. 4000/-கடனுக்கு அவர் பேரிலும் அவர் தம்பி கிருஷ்ணராஜு பேரிலும் ஒரு வழக்கு தொடரப் பெற்றிருக்கின்றது. விசாரணையில் இந்தத் தகவல் தேவைப்படும் என்று வக்கீல் சொன்னார். அதற்காகத்தான் தங்களிடம் யான் வந்தது" என்று சொன்னேன்.

இச்சமயத்தில் என்னுடன் வந்த வீரராகவ அய்யங் காரின் எழுத்தர் ரூ. 10 ஐ மெதுவாக எடுத்து பாயின்மீது வைத்தார். இந்த மாதிரி வட்டிக்கடையில், செட்டிநாட்டில் உள்ள மாதிரி, யார் வந்தாலும் தரையில் பாயின்மீதுதான் உட்கார வேண்டும். ஏஜண்டுக்கு முன்னர் பள்ளிப் பிள்ளை கள் படிக்கும் சிறிய மேசைபோல் ஒரு சாய்வு மேசை தான் பயன்படுத்துவது; அவரும் கீழேதான் அமர்ந் திருப்பார். இந்தப் பத்து ரூபாய் தாளைக் கடைக்கண்ணால் பார்த்தார் ஏஜண்டு. "பரவா இல்லை; பரவா இல்லை" என்று சொல்லிக்கொண்டே ஏஜண்டு எங்களுடன் பேசிக் கொண்டே இருந்தார். பேச்சில், "ஆம்; உண்மையே. பொன்னுசாமி ரெட்டியாருக்கு எங்களிடம் பற்று-வரவுக் கணக்கு உள்ளது. ஏதோ கள்ளுக்கடைக் குத்தகை எடுப்ப தற்காக (புரோநோட்டில் கண்டது) 26ஆயிரம் 15 சதவிகிதம்

வட்டியில் வாங்கியதாக நினைவு. இந்த நோட்டில் பொன்னுசாமி ரெட்டியாருடன் வேறு ஐவர் சேர்ந்து கூட்டாகக் கை எழுத்திட்டிருப்பதாகவும் நினைவு''என்றார்.

உடனே நான், ''அது சரி; இந்தப் புரோநோட்டுக் கணக்கு பேரேட்டில் தாக்கல் செய்யப்பெற்றுள்ளதா? இது வருமான வரிக் கணக்கில் காட்டப்பெற்றுள்ளதா? பேரேடும் புரோநோட்டும் வருமானவரி அலுவலகத்திற்கு அனுப்பப் பெற்று இரண்டிலும் வருமானவரி அலுவலக ரப்பர் முத்திரை விழுந்திருக்கின்றதா?'' என்றெல்லாம் கேட்டேன். பத்து ரூபாய்த் தாளின்மீது ஏஜண்டு ஒரு கண் வைத்து தன் ஆசையைப் புலப்படுத்தியதால் இவற்றையெல்லாம் கேட்கும் துணிவு வந்தது எனக்கு. என்னுடன் வந்த எழுத்தருக்கும் என் துணிவு வந்தது. இவர் பனங்காட்டு நரி; தந்திரமாகச் செயற்படுவார். எத்தனை வழக்குகளில் அநுபவப்பட்டிருப் பார்? ''ஐயா, ஒரு சிறு வேண்டுகோள். இந்த இரண்டிலும் முத்திரை விழுந்திருப்பதைத் தம் கண்களால் காண விரும்பு கின்றார் நம் ரெட்டியார்'' என்று குறுக்கிட்டுப் பேசினார். உடனே ஏஜண்டும் இந்த இரண்டையும் எடுத்துக் காட்டி னார்; பதியப்பெற்றுள்ள பேரேட்டுப் பக்கத்தையும் பிரித்துக் காட்டினார். நாங்கள் ஏஜெண்டிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினோம்—எழுத்தர் வைத்த பத்து ரூபாய்த் தாளை எடுக்காமல். கையூட்டு செய்யும் அற்புதப் பணியை நேரில் கண்டேன்.

திங்களன்று முதல் வேலையாக வட்டிக்கடை ஏஜண்டு கணக்குகளுடன் நீதிமன்றத்திற்குச் சாட்சியாக வருமாறு பயணப்படி கட்டி அவசரமாக ஆள் (அமீனா) அனுப்பப் பெற்றது; இதன்படி ஏஜண்டு செவ்வாயன்று நீதிமன்றத்திற்கு வந்தார். கிளிக்கூண்டில் ஏற்றி அவரிடம் கறக்கவேண்டிய செய்திகளை எல்லாம் அற்புதமாகக் கறந்தார் வக்கீல்.

அடுத்து நான் கூண்டில் ஏறி இந்தப் புரோநோட்டுகள் பற்றி நான் அறிந்ததைத் தெளிவாக எடுத்துரைத்தேன். பின்னர் பொன்னுசாமிரெட்டியாரும் கிருஷ்ணராஜு ரெட்டியாரும் கூண்டில் ஏறினார்கள். கள்ளுக்கடைக்குக் கடன் வாங்கின புரோநோட்டின் மீது ஏராளமான குறுக்குக் கேள்விகள்; தம்மிடம் தகராறு தீர்த்துவைக்குமாறு பெரியம்மாள் (என் மாமியார்) வந்தது பற்றிச் சரமாரி யான கேள்விகள் கேட்கப்பட்டு திணற அடிக்கப் பெற்றார். இதன்பிறகு என் மைத்துனர் கூண்டேறினார். புரோ நோட்டுகள் அவரிடம் இருப்பதுபற்றி விசாரணை. இவற்றின் சாரம்: ''பொன்னுசாமி ரெட்டியாருக்கு எப்போதும் பணத்தேவை இருக்கும். கடன்வாங்க அவரது திருக்கரங்கள் நீட்டியபடியே இருக்கும். கைமாற்றுக் கடன்கள் ஏராளம். பெரியம்மாளிடம் வாங்கின கடன் உண்மையே; அவர் பேருக்கு நோட்டு எழுதித் தந்ததும் உண்மை. தகராறு தீர்த்துவைக்குமாறு பெரியம்மாள் பொன்னுசாமி ரெட்டி யாரிடம் அணுகியதாகக் கூறியது அபாண்டக் கற்பனை. இந்தப் பைசலில் தாம் தலையிடாததால் பெரியம்மாள் தம் மீது கோபங்கொண்டு இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார் என்று கூறுவது அப்பட்டமான சோடிப்பு.''

பதினைந்து நாட்களில் இந்த வழக்கின் தீர்ப்பு கூறப் பெற்றது. இதன் சுருக்கம்: ''இந்தக் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றது உண்மை. குடும்பத்தில் தாய்-மகன் தகராறி னால் இந்த வழக்கு ஏற்பட்டது. பரம்பரையாகத் தாய் மூலம் பெற வேண்டிய சொத்துகளை அநியாயமாக எழுதி வாங்கிக்கொண்டு இராமசாமி ரெட்டியார் தன் தாயைத் தெருவில் விட்டுவிட்டார். தன் தாய் பேரில் உள்ள புரோ நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு இந்த 4000 யும் அபகரிக்கப் பார்க்கின்றார். இந்த நிலையில் ரூ. 4000 மும் வட்டி செலவு தொகைகளுடன் பெரியம்மாளைச் சேர

வேண்டியது; இரண்டு புரோநோட்டுகளையும் இராமசாமி ரெட்டியார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது'' என்பது. சையூட்டு தந்து பழக்கப்பட்ட என் மைத்துனர் இது கையூட்டினால் வழங்கப்பெற்ற தீர்ப்பு என நினைத்து மாவட்ட நீதிமன்றத்துக்குப் போக நாமக்கல் மன்றத்தை அனுமதி கேட்க, பணத்தைக் கட்டிவிட்டு அப்பீல் செய்ய லாம் என்று அனுமதி தந்தது நீதிமன்றம்.

சேலம் நீதிமன்றத்தில் அப்பீல்செய்தனர் பொன்னுசாமி ரெட்டியார் வகையறா. நான் வீரராகவ அய்யங்கார் பரிந் துரை பேரில் எம்.எஸ். விசயராகவாச்சாரியரை வக்கீலாக அமர்த்தினேன். பொன்னுசாமி ரெட்டியார் வகையறா எஸ்.விசயம்என்பாரை அமர்த்தினார்கள். இவர்கள்இருவரும் மாமன் மைத்துனர் முறையினர்; அக்காலத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள். இங்கும் வழக்கு எனக்குச் சாதகமாயிற்று. பின்னர் சேந்தமங்கலத்தில் ஓர் இஸ்லாமிய நாட்டு மருத்துவ ரின் துணைகொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய முயன்றனர். இரண்டாவது அப்பீலுக்கு இடம் இல்லை என்று கூறி வழக்கு தொடுக்க அனுமதி இல்லாமல் போய்விட்டது. சேலத்தில் நான் அமர்த்திய வக்கீல் வருமானவரியைத் தவிர்ப்பதற்காக ரூ250 பீஸ்வாங்கி கொண்டு ரூ 100 க்குத்தான் சான்றிதழ் வழங்கினது டிக்ரியிலிருந்து அறிந்தேன். இப்படிக் கட்சிக்காரர்கள் வழக்கறிஞர்களால் ஏமாற்றப்பெறுகின்றனர். நாட்டுப் புறத்து மக்களுக்கு நீதிமன்றத்தில், வக்கீல் அலுவலகத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதே தெரிவதில்லை. கேட்கும் போதெல்லாம் காமதேனுபோல் பீஸ் தந்து கொண்டே இருக்கின்றனர். என் தாயார் தொடுத்த வழக் கொன்றின் கட்டுவாங்கத் துறையூர் வக்கீல் அலுவலகத்திற்கு சென்றபோது வக்கீல்''ஏதாவது பீஸ்பாக்கி இருந்தால் அதை வாங்கிக்கொண்டு கட்டைத் தருமாறு பணித்தார்எழுத்தரை

எழுத்தர் நடேசன் என்பவர் துறையூரில் நான் (1930-31) எட்டாம் வகுப்பு படித்தபோது இவர் 7-வது வகுப்பு படித்தார். அவர் "ஐம்பது ரூபாய் அதிகப்பற்று உள்ளது" என்று கூறிக் கட்டை என்னிடம் தந்தார். இப்படி எத்தனையோ கட்சிக்காரர்கள் அதிகப் பணம் தந்து ஏமாறுகின்றனர்.

(2) என் மாமியார் துறையூர் நீதிமன்றத்தில் தொடுத்த வாழ்க்கைத் தேவை வழக்கில் ஆண்டொன்றுக்கு ரூ 360 தருமாறும் செலவுத் தொகையும் தருமாறும் தீர்ப்பு வழங்கப் பெற்றது. 1944 லிருந்து 1952 வரையில் என் மாமியார் என்னோடு தங்கியிருந்த காலம் வரையில் (8 ஆண்டுகாலம்) 360 பெற்றனர். அதன் பிறகு மகனுடன் சேர்ந்து விட்டதால் இது நின்றது.

(3) நாமக்கல் நீதிமன்றத்தில் என் மைத்துனரின் முதல் மனைவி தொடுத்த வாழ்க்கைத் தேவை வழக்கில் ஆண்டொன்றுக்கு ரூ. 420 தருமாறு தீர்ப்பு ஆயிற்று. இத்தொகையை 1944 முதல் 1978 வரையில் (34 ஆண்டுகள்) பெற்று வந்தார். அதன்பிறகு ரூ 4000 தந்து என் மைத்துனர் ஆண்டுதோறும் தரும் பொறுப்பினின்று தம்மை விடுவித்துக் கொண்டார். முதல் மனைவியும் 1980 ல் காலகதி அடைந்து விட்டார்கள்.

K. வீரராகவ அய்யங்கார்: இவரைப் பற்றிச் சில சொற்கள். நான் 1944 இல் இந்த வழக்கை நடத்தினபோதே இவர் அறுபதிற்கு மேற்பட்ட அகவையை யுடையவர். 1963இல் இவரது பேரர் (மகள் வயிற்றுப் பேரர்) திருப்பதிக்கு வந்தபோது (இவரும் வழக்கறிஞர்) பெரியவர் திருநாடு அலங்கரித்துவிட்டார். எனக்கு நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்களிடம் பழக்கம் உண்டு. ஒரு சிலரே தொழிலில்

தம் நேர்மையாலும் திறமையாலும் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் இவர். தந்தை தனயனிடம் வைத்திருக்கும் பாசத்தைப் போல என்னிடம் வைத்திருந்தவர். சிறந்த திருமால் பக்தர். பெரும்பாலும் நான் வழக்குவிஷயமாகப் போகும்போதெல்லாம் இவர்என்னுடன் ஒக்க உட்கார்ந்து உண்ணாவிடினும் என்னைத் தன் இல்லத்தில் உண்ணும்படி வற்புறுத்தியவர். நான் உண்ணும் போது அருகில் அமர்ந்து விசாரிப்பார்.

எப்பொழுது நாமக்கல் வந்தாலும் சனிக்கிழமை காலை 5, 6 மணிக்குக் கிளம்பும் பேருந்தில்தான் வருவேன். பேருந்து பவித்திரம் ஏரிக்கரையின் வழியாகத்தான்வரும். சாலையின் மீது கந்தசாமி என்ற பெட்டிக்கடைக்காரர் வாணிகம் செய்து வந்தார். இவருக்கு நற்பெயர் உண்டு; பெரும் புகழுடன் திகழ்ந்தார். இவருடைய திருக்குமாரன் துறையூரில் படித்தான்; நாள்தோறும் பேருந்தில் வந்து பேருந்திலேயே திரும்புவான் (20 கல் தொலை). பவித்திரத்தில் சந்தை நடைபெறுவது புதன் கிழமையில், கொல்லி மலை வாழைப்பழம் பேர்போனது. ஒரு தாரில் 100 அல்லது 105 பழம் இருக்கும். காயாக இருக்கும்போது வாழை மட்டைகளால் மூடப்பெற்று மலையிலிருந்து இறங்கும். மூடப் பெற்றுள்ள பாங்கே கலையுணர்வைத் தூண்டக்கூடியது. விலை ரூ 5/- அல்லது ரூ 6/-க்கு மேல் போகாது.

சனிக்கிழமை நாமக்கல் பயணம் நேரிட்டால் செவ்வாயன்றே ஒரு தார் பழம் வாங்கி வைக்குமாறு கந்தசாமிக்கு அவருடைய மகன் மூலம் தகவல் அனுப்புவேன். அவர் தயாராக வைத்திருப்பார். சனிக்கிழமை அத்தாரை என்னிடம் சேர்ப்பார்; விலையைத் தந்து விடுவேன். இந்தத் தாரைத் திரு. வீரராகவ அய்யங்கார் வீட்டில் சேர்ப்பேன். அவர் மிக அன்பாக வாங்கிக் கொண்டு விலையைத் தர முயல்வார்; மறுத்து விடுவேன். இப்படியாக நாமக்கல்லில் வழக்கு

நடைபெறும்போது வக்கீலுக்குப் பத்துத் தார்களாவது தந்திருப்பேன். இச்செயல் இன்றும் (1989) நினைவில் பசுமையாக உள்ளது. வழக்கிலும் செலவுக்குமேல் சிறிதும் வாங்கிக் கொள்ளமாட்டார். கட்சிக்காரர்கள் கஷ்ட – நஷ்டங்களை நன்கு உணர்ந்த வழக்கறிஞர் இவர். இறையருள்தான் இத்தகைய நல்லோரிடம் தொடர்பு கொள்ளச் செய்தது என்றே நினைக்கின்றேன்.

குமிழி—84

## 20. ஆலத்துடையாம்பட்டிச் சொத்து

என் மாமியார் மூலம் என் மனைவிக்கு வந்த நில விவரத்தைக் குறிப்பிட்டு திரு. மு. கிருஷ்ணசாமி ரெட்டியாருக்கு எழுதினேன். இவர் என் மனைவியின் அத்தை மகன். சிறுவயதில் இவரும் இவர் தமையன் மு. பெருமாள் ரெட்டியாரும் இளம்பிள்ளைவாதம் என்ற நோயால் தாக்கப் பெற்றுச் சரியாக நடக்க முடியாதவர்கள்; சற்றுத் தாங்கித் தாங்கி நடப்பவர்கள். பெரியவருக்குத்தான் நோயின் கொடுமை அதிகம். இவர் மாணியாகவே வாழ்ந்து திருநாடு அலங்கரித்தவர். திருத்தம்பியார் சற்று நன்றாகவே நடப்பார். முப்பத்தைந்து அகவைக்குமேல் திருமணம் புரிந்து கொண்டவர்; திருமகன் ஒருவன் பிறந்து ஐந்தாண்டு எட்டுவதற்குமுன் பாலாரிஷ்ட்டத்தால் இறைவன் திருவடியை அடைந்து விட்டான். எண்பதற்குமேல் இன்னும் இவரும் இவர் துணைவியார் பொன்னம்மாளும் ரெட்டியார்பட்டியில் குடியேறி அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

என் மைத்துனருக்குச் சொந்தமான வளமான மஞ்சள் மேட்டு நிலங்கள் இவர்மூலம் குத்தகைக்கு விடப்பெற்று நிர்வகிக்கப்பெற்று வந்தன. வானம் பொய்ப்பினும்

கொல்லிமலையில் எப்படியோ மழைபெய்து ஆலத்துடையாம் பட்டியில் இரண்டு ஏரிகளும் நிரம்பிவிடும். பயிர்கள் வளர்ச்சிக்கும் நெல் விளைச்சலுக்கும் குறைவில்லை. 150 மூட்டை நெல் குத்தகை தவறாது வந்துவிடும். பல்லாண்டுகளாக இந்த நிலங்களை நிர்வகித்து வந்தார். இனி, 'ஓரம்பு வயல்' இரண்டு ஏக்கர் குத்தகை எங்களைச் சேரவேண்டியது என்று எழுதினேன் இவருக்கு. 1946-47 முதல் 27 மூட்டை குத்தகை எங்கட்கு வந்து கொண்டிருந்தது. பெரும்பாலும் இதனைச் சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்துவதில்லை. விற்றுவிடுவோம். ஆண்டு ஒன்றுக்கு 300/-வருமானம் வந்து கொண்டிருந்தது.

இந்த வயலுக்குச் சிலசமயம் ஆற்றுப்பாசனம் இருக்கும். ஆனால் கிணற்று நீரை நம்பித்தான் சாகுபடி நடைபெற வேண்டும். தண்ணீருக்குக் குறை இராது. எவரும் இந்த நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக் கொள்ளத் தயங்கார். இந்த நிலத்திற்கு உரிய தனிக் கிணற்றின் நாற்புறக் கல்கட்டு இடிந்து சரிந்து விட்டது; இதனால் தண்ணீரின் அளவு குறைந்தது. இதை வந்து பார்க்குமாறு திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் எழுதினார். துறையூரிலிருந்தபோது ஒரு சனி - ஞாயிறு சென்று பார்க்கத் திட்டமிட்டு ஆலத்துடையாம் பட்டி சென்றேன். சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த ஊருக்கு அக்காலத்தில் பேருந்து வசதிகள் இல்லை. மிதி வண்டியில்தான் நான் சென்று வருவது வழக்கம்.

இந்த 'ஓரம்பு வயல்' ஊரிலிருந்து மூன்று கல் தொலைவிலிருந்தது. நான் மிதி வண்டியில் செல்ல முடியுமாயினும், கிருஷ்ணசாமி ரெட்டியாரால் அவ்வளவு தொலைவு நடந்து சென்று திரும்ப முடியாது. இதனால் ஓர் ஒற்றை மாட்டு வண்டி ஏற்பாடு செய்யப்பெற்றது. மூர்க்கத்தனமான இளங்

காளைகளை வண்டியில் பூட்டினர். நாங்கள் இருவரும் வேறோர் அன்பரும் வண்டியில் ஏறிக் கொண்டோம். கிருஷ்ணசாமி ரெட்டியார் வண்டியின் பின்புறம் அமர்ந்தார். வண்டி கிளம்பியதும் காளை மூர்க்கத்தனமாக வண்டியை இழுத்துக் கொண்டு ஓடியது. எங்கள் கவனம் காளையின் மீது இருந்தமையால் பின்புறம் உட்கார்ந்திருந்த கிருஷ்ண சாமி ரெட்டியாரைக் கவனிக்கவில்லை. வண்டி சென்ற வேகத்தில் எப்படியோ கீழே விழுந்து விட்டார். 50 அடி சென்றதும் விழுந்தது தெரிந்தது. விழுந்த வேகத்தின் அதிர்ச்சியில் ஒரு காலின் முழங்கால் எலும்பு முறிந்து விட்டது. எல்லோரும் துக்கத்தில் ஆழ்ந்தோம். 'பாவம், வீட்டில் இருந்திருக்கலாம். தானே கிணற்றைக் காட்டி நிலைமையை விளக்கலாம் என்றும், புதுச் சொத்து பற்றி விளக்கலாம் என்று நினைத்து வந்தவருக்கு இந்தக் கதி நேர்ந்து விட்டதே! ஏற்கெனவே இளம்பிள்ளை வாதத்தால் தாக்குண்டிருந்த காலுக்கு 'எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டதே' என்று மிகமிக வருந்தினேன். மேலும், சிக்க லாகாமால் எனக்குத் தெரிந்த அளவு முதலுதவி செய்து எலும்புகள் நழுவாமல் நன்கு கட்டி விட்டேன்.

வேறோர் இரட்டை மாட்டு வண்டிக்கு ஏற்பாடு செய்து சுமார் ஆறு கல் தொலைவிலுள்ள ஈச்சம்பட்டிக்கு இவரைக் கொண்டு சென்றேன். மாலை நான்கு மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். நுட மருத்துவர் காலைச் சோதித்து 'சாதாரணமுறிவுதான், பயம் இல்லை' என்று சொன்னதும், பாதுகாப்பாகக் கொணர்ந்தது சிறப்பு என்றும் கூறி எங்கள் கவலையைப் போக்கினார். அங்குத் தெரிந்த உறவினர் இல்லத்தில் தங்க ஏற்பாடு செய்யப் பெற்றது. 10 நாட்கள் அங்கு தங்கி இருக்க வேண்டும் என்று மருத்துவர் சொல்லி விட்டார். இரண்டு மாதம் நடக்கக் கூடாது என்றும் எச்சரித்தார். மூன்று மாதத்தில் நன்கு நடக்கும் நிலை வந்து

விட்டது. இப்பொழுது 85 அகவையைத் தாண்டிவிட்டதால் கோலூன்றி நடக்கின்றார். இவரைவிடச் சுமார் 20 வயது குறைவுடைய இவரது துணைவிக்குக் கண் பார்வை போய் விட்டது. தன்னை முதுமைக் காலத்தில் கவனிக்க வேண்டிய நிலைமாறி தான் துணைவியைக் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது கர்ம பலன் என்றே சொல்ல வேண்டும். சொத்து முழுவதையும் (சுமார் 20 ஆயிரம் மதிப்புடையது) நெருங்கிய உறவினரிடம் தந்து விட்டார். அவர்கள் இவரை நன்கு கவனித்து அன்புடனும் பாசத்துடனும் பராமரிக்கின்றனர். சில ஆண்டுகட்கு முன்னர் இவர் மனைவியும் இறந்து விட்டாள்.

ஒரு திங்கள் கழித்து மீண்டும் ஆலத்துடையாம்பட்டி சென்று நிலத்தைப் பார்வை இட்டேன். இருந்த கற்களை யும் புதியனவாக வாங்கிய கற்களையும் கொண்டு சிமைக் காரை (Cement)யைப் பயன்படுத்திப் பலமாக நாற்புறக் கல் கட்டையும் கட்டி விட்டேன். இனி கல்கட்டு சரிந்து விழாது. 1200/- செலவு ஆயிற்று என்பதாக நினைவு. இப்பொழுது இதே பணியைச் செய்ய வேண்டுமானால் 10 ஆயிரத்திற்கு மேலாகும். இந்த நிலத்தை 1976இல் பதினாறு ஆயிரத்திற்கு விற்றுவிட்டோம். குத்தகை நெல் அளவில் மாறுபாடு இல்லையாயினும் 1946இல் ரூ 300/- வீதம் வந்த குத்தகை படிப்படியாக பணவீக்கத்தினால் மதிப்பு அதிகமாகி 1970க்கு மேல் ரூ 2500-ஐ எட்டி ரூ 2800 வரையிலும் கிடைத்தது.

குமிழி –85

# 21. வக்கீல் அரங்கசாமி ரெட்டியார்

P. அரங்கசாமி ரெட்டியார் என் கல்லூரி வாழ்வி லிருந்தே அறிமுகமாகி நெருங்கிய நண்பரானவர். என்னுடைய தலைஎழுத்துப்படி ஆசிரியப் பணியில் அமர்ந்தேன். இறுதி வரை கற்புடைய மனைவி 'கணவனே தெய்வம்' என்று நம்பி வாழ்வதைப்போல், நானும் மேற்கொண்ட பணியை தெய்வப் பணியாகவே கருதி ஓய்வு பெறும் வரையில் இதே பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். 'வக்கற்றவனுக்கு வாத்தி' என்பது உலகப் பழமொழி. தெலுங்கிலும். 'இன்சிபெட்டின வாரிக்கு இஞ்சினீயரிங் டிபார்ட்மெண்டு; ஏமி லேதிவாரிக்கி எட்யூகேஷன் டிபார்ட்மெண்டு' (கொடுத்து வைத்தவனுக்குப் பொறியியல்துறை; ஒன்றுமில்லாதவனுக்கு உபாத்திமைத் துறை) என்பது தெலுங்கு நாட்டில் வழக்கிலுள்ள பழமொழி. இறையருளால் வாழ்விலும் தாழ்விலும் மனம் தளராமல், சோர்வுறாமல்என்னால்இயன்றவரை இப்பணியை மனநிறை வுடன் தெய்வப் பணியாகவே கருதி வந்திருக்கின்றேன். எந்த நிலையிலும் பணியே என் குறிக்கோளாக இருந்ததேயன்றி பணம் அன்று என்பதை இன்று நினைவு கூர்கின்றேன். ஓய்வு பெற்றபிறகு என்னை வளர்த்த தமிழன்னையின் மேன்மைக் கும் பெருமைக்குமாக உழைத்து வருகின்றேன் என்பதற்கு என் பலதுறை நூல்களைப் படிப்போரே சான்றாளர்களாவர்.

P. அரங்கசாமி ரெட்டியார் 1941இல் ஜூன் மாதத்தில் (நான் பணியேற்ற அதே ஆண்டு, அதே மாதம்) வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். ஓராண்டுத் திருச்சி கணபதி அய்யரிடம் தொழில் பழகிக் கொண்டார். மிகுபுகழ் கணபதி அய்யரிடம் பழகியதால் சட்ட நுணுக்கம், வழக்குகளை நீதிபதிகட்கு முன் பேசும் சாதுர்யம் நேர்மை முதலியவை

தாமாக அரங்கசாமி ரெட்டியாரிடம் அமைந்தன. பள்ளியில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகட்கும் தவறாமல் வருபவர் இவர் ஒருவரே. பலமுறை மாணவர் கூட்டத்தில் பேசியும் பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு எனக்கு உறுதுணையாக இருந்து வந்தவர்.

இவரது இல்வாழ்க்கையை இறைவன் சரியாக அமைக்க வில்லை. செந்தாரப்பட்டியில் நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் குடும்ப வாழ்க்கையைத் தொடங்கினார். ஆறு, ஏழு ஆண்டுகள் தாம் இவருடைய இல்வாழ்க்கை சீரும் சிறப்புமாக நடைபெற்றது, தசரதனுக்கு நான்கு குமாரர்கள் தோன்றியதுபோல், இவருக்கும் நான்கு திருக்குமாரர்கள் தோன்றினார்கள்; துணைவியார் திருநாட்டை அலங்கரித்து விட்டார்கள் இந்த நான்கு பிள்ளைகளும் அன்னையின் அரவணைப் பின்றி மாணாக்கர் விடுதியிலேயே தங்கிக் கல்விக்கற்க நேர்ந்தது. விடுமுறையில்தான் தாயைப்பெற்ற பாட்டியுடன் திருச்சியில் தங்குவார்கள். இரண்டாவது தாரமாக ஒரு பெண்ணை மணக்க வாய்ப்பு இருந்தும் பிள்ளைகளின் நலனுக்காக மாணி வாழ்க்கையை மேற்கொண்டு வாழ் நாளைப் போக்கினார். இஃது ஓர் ஒப்பற்ற தியாகம்.

மாணவராக இருந்தபோதே நானும் கல்லூரித் தோழன் என்ற முறையில் மிக நெருக்கமாகப் பழகியுள்ளேன். நேர்மை யுடன் நடந்து கொள்வார். அடிக்கடி கோபப்படுவார்; அந்தக் கோபம் எதிரிகட்கு நன்மை பயப்பதாகவே இருக்கும். உண்மையைப் புரிந்து கொள்ளாதபோது இந்தக் கோபம் தோன்றும். பின்னர் அவரே அன்புடன் அவர்களை அணைத்துக் கொள்வார். இவருடன் நெருங்கிப் பழகும் அனைவரும் இவர் கோபத்தைப் பொருட்படுத்தமாட்டார் கள்; அஃது அன்பின் விளைவாக எழுந்த கோபம் என்று கருதுவார்கள்.

எனக்கு நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் பழக்கமானவர்கள். ஆனால் தொழிலில் நேர்மையுடன் நடந்து கொள்ளும் இவரைப்போல் மற்றொருவரைக் காண்டல் அரிது. எழுத்தருக்கு மாதச் சம்பளமாக ரூ. 30 உம் ஒரு கலம் நெல்லும் தந்தார். எந்த வழக்கறிஞர் அலுவலகத்திலும் ரூ. 10க்கு மேல் மாதச் சம்பளம் தருவதில்லை. இவர் அலுவலக எழுத்தருக்குப் பல்வேறுவித எழுத்து வகைகட்கு (வழக்கு பிராது, டிக்ரி நிறைவேற்றல் மனு, சாட்சி சம்மன் அனுப்புதல் போன்றவை) 'இவ்வளவுதான் வாங்க வேண்டும்; இதற்குமேல் கட்சிக்காரர்களைத் தொந்தரவு செய்து அதிகமாக வாங்கக் கூடாது' என்பது இவர்தம் கட்டளை. அக்காலத்தில் இவர் தந்த சம்பளம் அரசு அலுவலகத்தில் எழுத்தருக்குக் கிடைத்த சம்பளத்திற்குச் சமமாகும். வக்கீல் அலுவலக எழுத்தர்கட்கு எட்டாவது (மூன்றாவது படிவம்) படித்திருந்தால் போதும். ஐந்தாவதுவரை படித்தவர்களே பெரும்பாலோர் இப்பணிகளை அநுபவத்தால் செய்து வந்தனர். வேறு வக்கீல் அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கு இந்தவித நிபந்தனைகள் இல்லை. கட்சிக்காரர்களிடம் 'கறக்கிறவரை கறந்து கொள்ளலாம்.'

தொடக்கக் காலத்தில் சில ஆண்டுகள் நீதிமன்றத்திற்கு வந்துபோக மிதிவண்டிதான் இவருக்கு ஊர்தியாக இருந்தது. டென்னிஸ் விளையாடுவதற்கும் போய்வர இதே வாகனந்தான் பயன்பட்டது. நான்கைந்து ஆண்டுகள் கழிந்ததும் பன்னிரண்டு ஆயிரத்திற்கு 'ஹில்மென்' (Hilman) என்ற மகிழ்வுந்து (Pleasure car) வாங்கி அதைத்தான் வாகனமாகப் பயன்படுத்தினார். துறையூரில் யாரோ ஓர் அம்மையாருக்கு இந்த மகிழ்வுந்து பரிசுச்சீட்டில் முதல் பரிசாக விழுந்தது; அதை விலைகொடுத்து வாங்கிக் கொண்டார்.

துறையூரில் 17 வழக்கறிஞர்களில் M.R. இராசகோபால் பிள்ளை, P. அரங்கசாமி ரெட்டியார், P. M. வேங்கடாசல துரை இவர்களைத்தவிர எல்லோரும் பிராமணர்கள். நான் சாதிக்கு அப்பாற்பட்டவன் என்பதை அக்காலத்தாரும் இக் காலத்தாரும் நன்கு அறிவார்கள். எங்கள்குல வைணவப் பெரியார் பெ. இராமாநுச ரெட்டியார்,

தன்னிலைமை தானறியாத் தன்மை யாளன்
சாதிவெறி சமயவெறி சற்று மில்லான்
துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்
தூயதிருக் கச்சிநகர் அண்ணங் கரராம்
மன்னியவா சாரியரின் மலர்த்தாள் போற்றி
வைணவத்தின் வளமனைத்தும் உணரப்பெற்றோன்[1]

என்று கூறியிருப்பதே இதற்குச் சான்றாக அமையும். அரங்க சாமி ரெட்டியாரும் இந்தகையலரே. நாங்கள் எல்லோ ரிடமும் நன்கு மனம் விட்டுப் பழகுவோம். வெளிப்படை யாகத் தெரியாவிடினும் உள்ளுக்குள் பிராமணர்களில் பலர் எங்கள்மீது வெறுப்புக் கொண்டிருந்தனர் என்பது பல நிகழ்ச்சிகளால் தெளிவாகும். ஆயினும், எங்கள் இரு வருக்கும் பிராமண நண்பர்கள் உண்டு. அதிலும் பிராமணர் களில் வைணவர்கள்தான் நான் மாணாக்கனாக இருந்தது முதல் இன்றுவரை நெருக்கமானவர்களாக இருந்து வருகின்றனர். என்மக்கள் இருவருக்கும் வைணவ நண்பர்கள் தாம் உள்ளனர். 'உலகளந்தான் திருவடிச்சார்பு அன்றும் இன்றும்' இருந்து வருவதே இதற்குக் காரணமாகுமோ?

அரங்கசாமி ரெட்டியார் தொழில் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே கணிசமான அளவுக்குத் தொழிலில்

1. டாக்டர் ந. சுப்புரெட்டியார் மணிவிழாமலர் (1977) பக். 25.

வருவாய் இருந்தது. வருமானவரி கட்டத் தொடங்கினார். துறையூரில் வழக்கறிஞர்களில் யாரும் அதுகாறும் வருமான வரி கட்டியதில்லை. அரங்கசாமி ரெட்டியார் கட்டியவுடன் எல்லா வழக்கறிஞர்கட்கும் வருமானத்துறையினர் வரவு—செலவு கணக்குத் தருமாறு அறிக்கை (Notice) அனுப்பினர். இஃது எல்லோருக்கும் சிறிது தலைவலியைத் தந்தது. உள்ளுக்குள் மனம் குமுறினர். அரங்கசாமி ரெட்டியார் வருமானவரி கட்டியதால் ஏற்பட்ட விளைவுதான் இது என்ற முடிவுக்கும் வந்தனர். ஒருசிலர் வெளிப்படையாகவே, 'எதற்கு இத்தலைவலியை வருவித்துக் கொண்டீர்கள்?' என்று கேட்டனராம். அதற்கு இவர், 'எதிர்பாராமல் நெஞ்சுவலி வருவதைத் தடுக்கும் பொருட்டுதான்' என்று மறுமொழி தந்ததாக ஒரு சமயம் என்னிடம் சொன்னதாக நினைவு.

தொழிலில் நல்ல பேர், நல்ல வருமானம் வருவதைக் கேள்வியுற்றார் மாவட்ட முனிசீப்பு ஒருவர் (1950-51). இவர் பிராமணர். போர்த்துறையிலிருந்து வந்தவர். இராமாநுசம் என்ற பெயரையுடையவர் என்பதாக நினைவு. அரங்கசாமி ரெட்டியாரைப் 'பிராமணவிரோதி' என்று தவறாகக் கருதிக் கொண்டு இவர் வாதிக்கும் வழக்குகளைக் கெடுக்கத் திட்டமிட்டார். அந்தக் காலத்தில் சாட்சிகளின் விசாரணை தமிழில்தான் நடைபெறும். ஆனால் நீதிபதி சாட்சிகள் சொல்லும் வாக்குமூலத்தை ஆங்கிலத்தில்தான் பதிவு செய்வது வழக்கத்தில் இருந்து வந்தது. ஆனால் தலைமை எழுத்தர் வாக்குமூலம் ஆங்கிலத்திருப்பதைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லி அது சரியாக இருந்தது என்பதாக எழுதிச் சாட்சியிடம் கையெழுத்து வாங்குவது வழக்கம். இப்படிச் செய்தால்தான் வாக்குமூலம் செல்லும். ஒரு சாட்சியின் வாக்குமூலத்தைச் சரியாக எழுதவில்லை என்பதைக் கண்டு கொண்டார் ரெட்டியார். சாட்சியிடம் கையெழுத்துப் போடாதே' என்று சொல்லிவிட்டார். சாட்சியும் "நான்

சொன்னபடி நீதிபதி பதியவில்லை. ஆதலால் கையெழுத்துப் போடமாட்டேன்'' என்று சொல்லி விட்டார். இப்படித் தவறாக வாக்குமூலத்தைப் பதிவு செய்தோ அல்லது முக்கிய மானவற்றை நீக்கிப் பதிவு செய்தோ வாக்குமூலத்தைத் தயாரித்துவிட்டால் இதைக்கொண்டு தீர்ப்பைப் பாதகமாகச் சொல்லுவது எளிது. முனிசீப்பு தான் இவ்வாறு பல வழக்கு களைக் கெடுத்தால், கட்சிக்காரர்கள் அரங்கசாமி ரெட்டி யாரிடம் போகார்; அவர் தொழில் பாதிக்கப்படும் என்று திட்டமிட்டிருந்ததைக் கண்டு கொண்டதால் அரங்கசாமி ரெட்டியார் சாட்சி வாக்குமூலத்தில் கையெழுத்துப் போடா மலிருக்கத் திட்டமிட்டார்.

இந்த விஷயம்பற்றி மன்றத்தில் முனிசீப்பிற்கும் அரங்க சாமி ரெட்டியாருக்கும் பலத்த வாக்குவாதம் நடை பெற்றது. அரங்கசாமி ரெட்டியார் நீதிபதி வாக்குமூலத் தைச் சரியாகப் பதியாததைக் குறித்து வன்மையாக எதிர்த்துப் பேசினார். முனிசீப்பு சினங்கொண்டார்; மதியை இழந்தார். அரங்கசாமி ரெட்டியாரை ''வெளியே நட'' (Get out) என்று கூறிவிட்டார். முனிசீப்பு இவ்வாறு பொது மனிதரிடம் நடந்து கொண்டது தவறு; பெருந்தவறு. அன்று மாலையே வக்கீல் சங்கம் (Bar Association) கூடி முனிசீப் பின் அடாத செயலைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி மாவட்டச் சங்கத்திற்கு அனுப்பியது. மாவட்டச் சங்கமும் கூடி இத்தீர்மானத்தை நிறைவேற்றி உயர்நீதிமன்ற வக்கீல் சங்கத்திற்கு அனுப்பி வைத்தது. சென்னை சங்கமும் முனிசீப்பின் அடாத செயலை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பியது; முன்சீப்பிற்குத் தண்டனை வழங் கவும் பரிந்துரைத்தது. இதில் விரைவான முடிவு ஏற்பட வில்லை. பிராமணர்கள் ஒன்று திரண்டு முனிசீபபைக் காப்பாற்ற நினைத்தனர்.

'வெளியே நட' என்று முனிசீப்பு சொன்ன நாளிலிருந்து சுமார் ஓராண்டு அரங்கசாமி ரெட்டியார் துறையூர் நீதிமன்றத்திற்குப் போவதைத் தவிர்த்தார். உயர்நீதி மன்றம் நீதிவழங்க மெத்தனமாக இருந்ததால், அரங்கசாமி ரெட்டியார் இருபத்தையாயிரத்திற்கு (ஓராண்டுத் தொழில் வருமானம்) திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஒருவழக்கு தொடுத்தார்; முனிசீப்புக்கு அறிவிப்பு (Notice) அனுப்பிய பிறகே இந்த வழக்கு தொடுக்கப்பெற்றது. முனிசீப்புக்குக் கதிகலங்கியது. தாம் தவறாக இவருடன் மோதிக் கொண்டது பற்றி மிகவும் வருந்தியதாகக் கேள்வி. அரசியல் கலப்பு அதிகம் இல்லாத காலத்தில் இந்நிகழ்ச்சி நடை பெற்றது. இன்றைய நிலையில் நிர்வாகத்தில், நீதிவழங்கு வதில் அரசியல் தாண்டவமாடுகின்ற நிலையில் நீதித்துறை யிலும் நிர்வாகத்துறையிலும் என்னென்ன நடைபெறு கின்றனவோ? இவற்றையெல்லாம் கண்மூடி மௌனியாகிக் கவனித்துக் கொண்டிருக்கும் இறைவனது குறுக்கீட்டால் தான் 'கதிமோட்சம்' ஏற்படவேண்டும். திக்கற்றவர்கட்குத் தெய்வம்தானே துணை?

பிராமண வழக்கறிஞர்களில் சிலர் முனிசீப்புமீது கருணை கொண்டு 25 ஆயிரத்திற்குத் தொடுக்கப் பெற்ற வழக்கைத் திரும்பப் பெறுமாறு அரங்கசாமி ரெட்டியாரை வேண்டினர். சில மாதங்கள் கழித்து வழக்கைத் தொடராது திரும்பப் பெற்றார் அரங்கசாமி ரெட்டியார். முனிசீப்புக்கு இதில் கிடைத்த தண்டனை அவர் சம்பளத்தில் மூன்று ஆண்டுகட்கு படி ஏற்றம் (Increment) இல்லை என்பது. ஒரு பெரிய அதிகாரிக்கு இதுவே பெரிய தண்டனையாகும்.

இந்த முனிசீப்பு ஓர் அமீனாவுடன் தவறாக மோதி அவமானப்பட்டார். ஒவ்வொரு மாதத்திற்கும் முனிசீப்பு வீட்டுக்கு ஓர் அமீனா காவலாக இருப்பது வழக்கம். கோடை விடுமுறையில் எல்லா முனிசீப்பும் அவரவர் ஊருக்குப்போய்

விடுவர். ஆனால் இராமாநுசம் இங்கேயே தங்கியிருந்தார். ஓர் அமீனாவை காவல் வேலைக்குப் போட்டார்; அவர் மறுத்தார். ஏதோ காரணம் காட்டி அமீனாவைப் பதவி நீக்கம் செய்தார். அமீனா உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, வென்று, மீண்டும் பதவியில் வந்து சேர்ந்தார். முனிசிப்பின் மரியாதை மலையேறிவிட்டது. அவர் மாற்றல் இல்லாமல் துறையூரிலேயே பணியாற்றியது பரிதாபமாக இருந்தது.

**சாட்சிகள் :** நீதிமன்றங்களில் சாட்சிகள் நடந்து கொள்வதைப்பற்றி வக்கீல் அரங்கசாமி ரெட்டியார் எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் தருவார். ஒரு சமயம் அதிகாலையில் 4½ மணிக்குத் தம் வீட்டுக்கு வந்து போகுமாறு பணித்தார். நானும் அங்ஙனமே சென்றேன்; நான் நீதிமன்றத்திற்கு எதிரிலுள்ள பள்ளியில் ஒரு சிறு இல்லத்தில் குடியிருந்தேன். கிட்டத்தட்ட ஆறு ஃபர்லாங் போய்வர வேண்டும். என்னுடைய ஊர்தி மிதிவண்டிதான். நான் சென்றபொழுது எதிர்க்கட்சிக்குச் சாட்சியாக கிளிக் கூண்டில் ஏறுபவரிடம் அரங்கசாமி ரெட்டியார் பேசிக்கொண்டிருந்தார். இவர் என் பள்ளிக்கருகிலுள்ள வக்கீலால் வழக்காடும் எதிர்க்கட்சியினருக்கு முதல்நாள் இரவு 7-8 மணிக்கு அடுத்த நாள் கூண்டில் சொல்லவேண்டியவை பற்றிப் பாடம் சொல்லப்பெற்றவர். இவரை நோக்கி, "உங்கள் வக்கீல் உனக்கு நீ நாளை சொல்லவேண்டியவை பற்றி என்னென்ன சொல்லிக் கொடுத்தார்?" என்று கேட்க, அவரும் அவற்றை விவரமாக ஒப்புவித்தார். "சரி; நீ அப்படியே சொல்லிவிடு. நான் உன்னை குறுக்கு விசாரணை செய்யும்போது இன்னின்ன கேள்விகள் கேட்பேன்; அவற்றிற்கு இப்படிப் பதில் சொல்லவேண்டும்" என்று பாடம் புகட்டினார். முதல் விசாரணையில் தரும் வாக்கு மூலத்தைக் குறுக்கு விசாரணையில் உடைத்தெறிவதற்கு இத்

திட்டம். இங்ஙனம் எதிர்க்கட்சியின் சாட்சியை இரகசியமாகக் கொண்டு வந்து நிறுத்தியது தம் கட்சிக் காரர். “பார்த்தாயா சுப்பு? இப்படித்தான் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெறுகின்றன என்றார். சாட்சி சொல்லு வதையே தொழிலாகக் கொண்டு பல சாட்சிகள் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் உள்ளனர். ஒரு சமயம் என் பள்ளிக்கு உள்ளூர் மாவட்ட நீதிபதி (District Munsif) ஓர் இலக்கியக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வந்திருந்தபோது இத்தகைய சாட்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டது நினைவிற்கு வந்தது. குறுக்கு விசாரணையில் உண்மையை வாங்க முடியாத சாட்சிகளும் உள்ளனர். இதிலிருந்து ‘‘சாட்சிக் காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது மேல்’’ என்ற ‘உலக வசனத்தின்’ பொருள் எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று. இருவரும் நீதிமன்றத் திற்கு வெளியே உடன்பாடு செய்துகொள்வதே சிறந்தது என்பதும் தெளிவாயிற்று. எல்லாவித வழக்குகட்கும் இந்தப் படிப்பினை பொருந்தாது. இயன்றவரை நீதிமன்றத்திற்குப் போகாதிருப்பது மேல் என்ற படிப்பினையைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான் நான் கண்ட உண்மை. நடை முறையில் இது சாத்தியப்படுவதில்லை.

**சுவையான வழக்கு :** துறையூருக்கு அருகிலுள்ள உப்பிலிய புரத்தில் இராமசாமி ரெட்டியார் என்ற ஒருவர் இருந்தார். இவரைப் பொதுவாக மக்கள் குறிப்பிடும் போது **‘குரங்கு ரெட்டி’** என்றுதான் சொல்லுவார்கள். இஃது அவருக்கும் தெரியும். இவர் மாந்தோட்டம் வைத்திருந்தார். பல நல்ல உயர்ந்த ரக மாம்பழங்கள் இவர் தோட்டத்திலிருந்து சந்தைக்கு வரும். இந்தப் பழங்கள் காரணமாக இவர் புகழ்பெற்றிருந்தார். ஆனால் இவர் ஒரு **‘சிடுமூஞ்சி’**; எளிதில் கோபத்திற்கு உள்ளாவார். இதே ஊரில் குமரப்ப கவுண்டன் என்பவர் ஒருவர். இவரைக் **‘கரடிக் கவுண்டன்’**

என்று பொதுமக்கள் குறிப்பிடுவது வழக்கம். இது கவுண்டனுக்கும் தெரியும். இராமசாமி ரெட்டியாருக்கும் குமரப்பக் கவுண்டனுக்கும் அடிக்கடி தகராறு நேரிடும். இராமசாமி ரெட்டியார் தம்மைக் குமரப்பக் கவுண்டன் 'குரங்கு ரெட்டி' என்று அடிக்கடி இழித்துக் கூறுவதால் தன் மானம் பறிபோவதாகக் கூறி ரூ 2000/- க்கு 'மானநட்டம்' கோரி துறையூர் மாவட்ட முனிசீப் மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். குமரப்ப கவுண்டனுக்கு வக்கீல் அரங்கசாமி ரெட்டியார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இராமசாமி ரெட்டியார் (குறுக்கு விசாரணையில்) கூறியது; "என் பெயர் இராமசாமி ரெட்டியார். சிலர் என்னை 'குரங்கு ரெட்டி' என்றும் குறிப்பிடுவார்கள் என்பதாகக்கேள்வி. அவர்கள் யாவர் என்பதையும் தெரிந்து கொள்வேன். அவர்கள்மீது யான் வழக்குத் தொடுக்கவில்லை. ஆளை அடையாளம் தெரிந்து கொள்வதாகக் குறிப்பிட்டிருப்பார்கள் என்று சும்மா இருந்துவிட்டேன்.'

குமரப்பக்கவுண்டன் (முதல் விசாரணையில்) : "என் பெயர் குமரப்பக் கவுண்டன். என்னைக் கரடிக் கவுண்டன் என்றும் சிலர் அழைப்பார்கள். இதனால் எனக்குக் கோபம் வருவதில்லை. கோபம் கொள்வதற்கு இதில் என்ன இருக்கின்றது? அடையாளம் நன்கு தெரிவதற்கு என்னை அப்படி வழங்குகின்றனர் என்று நினைத்துக் கொள்வேன். இராமசாமி ரெட்டியாரையும் மனத்தில் எந்தவிதக் கெட்ட எண்ணமும் இன்றி குரங்கு ரெட்டியார் என்று குறிப்பிட்டிருப்பேன். இதில் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி "வழக்கில் ஒன்றும் இல்லை" என்று கூறித் தள்ளுபடி செய்தார். இது மிகவும் சுவையான வழக்கு என்பதால் ஈண்டுக் குறிப்பிட்டேன்.

**1952 பொதுத்தேர்தல் :** பதினோர் ஆண்டு வக்கீல் வாழ்வில் பொது மக்களிடம் நல்ல பேர் வாங்கிவிட்டார். சாதிவெறி இல்லாமல் எல்லாச் சாதியாரிடமும் நன்கு பழகி புகழ் பெற்றிருந்தார். தந்தை பெரியாரிடம் நெருக்கமாகப் பழகுபவர்; இதனால் மூடப்பழக்கங்களைக் கடிவதில் பெரியாருக்குத் துணையாக இருந்தார். அக்காலத்தில் திருச்சி (தென்னூர்) வேதாசலம் பிள்ளையவர்களும் இத்தகையவரே. இவரிடமும் நன்கு பழகியுள்ளேன். (மாணவராக இருந்தது முதல்) இவரும் அரங்கசாமி ரெட்டியாருக்கு நெருங்கிய நண்பர். இங்ஙனம் துறையூர், பெரம்பலூர், இலால்குடி, முசிறி வட்டாரங்களில் பெரும் புகழுடன் திகழ்ந்த அரங்கசாமிரெட்டியார் சட்டமன்ற பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். இவர் காலத்தில் பல்வேறு சமூகப் பிரச்சினையைத் தீர்மானங்கள் மூலமாகவும் கேள்விகள் மூலமாகவும் அரசுக் கவனத்திற்குக் கொணர்ந்து அவற்றிற்குத் தீர்வு கண்டார். அவற்றையெல்லாம் இப்போது நினைவு கூர முடியவில்லை. பெரும்பாலும் கோவாப்பரேட்டிவ் நிறுவனங்களிலுள்ள ஊழல்களை அம்பலப்படுத்தினார் என்பது மட்டிலும் நினைவுகூர முடிகின்றது. நம் அருமை மிகு இராஜாஜி முதல் அமைச்சராக இருந்தமையால் பெரும்பாலான பிரச்சினைகட்கு உடனுக்குடன் தீர்வு காண முடிந்தது என்பதைப் பெருமையுடன் சொல்லிச் சொல்லி மகிழ்வார். 1950க்கு மேல் திருச்சியில் தில்லை நகரில் சொந்த வீடு அமைத்துக் கொண்டு வக்கீல் தொழிலைத் திருச்சியிலும் துறையூரிலுமாக வைத்துக் கொண்டார். துறையூர் இல்லத்தில் அவர் அன்னையார் மட்டிலும் தனியாக இருந்து வந்தார்கள். பிள்ளைகள் நால்வரும் மாணாக்கர்விடுதிகளில் தங்கியே தங்கள் கல்வியை முடித்துக் கொண்டார்கள். எல்லோருமே பட்டப்படிப்பை முடித்துக்

கொண்டவர்கள். மூவர் சட்டப்படிப்பையும் முடித்தனர். ஒருவர் ஆங்கிலத்தில் முதுகலையிலும் தேர்ந்தார். இவர்களில் ஒருவர் (R.இராமராஜ்) அரசு வக்கீலாக இருந்தபோது தந்தையார் வாழ்ந்த காலத்திலேயே, திருநாட்டை அலங்கரித்துவிட்டார். இப்போது மூவரும் நல்ல நிலையில் உள்ளனர். ஒருவர் அமெரிக்காவில் பெரிய பதவியில் உள்ளார். மூத்தவர் திருச்சியில் பேருந்து அதிபராகத் தொழில் நடத்துகின்றார். நான்காவது பிள்ளை இந்திய போலீஸ் தொண்டில் (IPS) பணியாற்றி வருகின்றார்.

இவர் சட்டசபை உறுப்பினராக இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் ஒன்றைமட்டிலும் நினைவு கூர முடிகின்றது. துறையூருக்கு நான்கு கல் தொலைவிலுள்ளது சிக்கத்தப்பூர் என்ற சிற்றூர்; துறையூர்-ஆத்தூர் சாலையின் மீதுள்ளது. அக்காலத்தில் சாதி-இந்துக்களுக்கும் (பெரும்பாலானவர்கள் ரெட்டியார்கள்) வேளாண்மைத் தொழில் சம்பந்தமாக அரிசனங்களுக்கும் அடிக்கடி மோதல் இருந்தது. அரிசனங்கள் சார்பில் செக்காடுபவர் (Oil monger) ஒருவர் தரகர்போல் இருந்து கொண்டு காவல் துறைக்கும் கையூட்டு செய்தும், தான் அரிசனங்களை அட்டை போல் உறிஞ்சியும் பிழைப்பை நடத்தி வந்ததால் இரு தரப்பினருக்கும் எந்தவித உடன்பாடும் ஏற்படாமல் இருந்து வந்தது. அரங்கசாமிரெட்டியார் (அப்போது சட்டமன்ற உறுப்பினர்) இருவரையும் ஒன்று கூட்டி ஒரு சுகமான உடன்பாடு செய்ய முயன்று வந்தார். அப்போது மாவட்டக் காவல் துறைத் தலைவராக (DSP) இருந்தவர் இதை விரும்பவில்லை. தம் மாமூல் வருமானம் இதனால் பாதிக்கப்படும் அல்லவா?

எப்படியாவது சட்டமன்ற உறுப்பினரைக் குற்றம் சாட்டி உள்ளுக்குத் தள்ளத் திட்டம் போட்டிருந்தார் காவல் அதிகாரி, இதை அரங்கசாமி ரெட்டியாரும்

எப்படியோ அறிந்து கொண்டார். இந்தக் காவல் துறைத் தலைவர்மீது பொதுமக்களால் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகள் ஏராளமாக இருந்தன. கையூட்டு, பெண்கள் நேசம், அடாவடித்தனமான செயல்கள், அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துதல் போன்றவை சில. இவற்றுள் தலையாய செயல் ஓர் துணை ஆய்வாளரின் (Sub-Inspector) துணைவியாரைக் கெடுக்க முயன்றது. புதியவராகத் துறையில் சேர்ந்த இவரை ஒரு பந்தோபஸ்து வேலையாக தொலைவிடத்திற்கு அனுப்பிவிட்டு இலால்குடிக்கருகிலுள்ள வாளாடி (?) என்ற சிற்றூரில் தந்தையாருடன் இருந்துவந்த அவர் துணைவியை நெருங்க முயன்றதில் அவர்தம் தோட்டத்து வேலையாட்கள் நையப் புடைத்துப் பாடங் கற்பித்தனர். மேலிடத்திற்கும் புகார் செய்தனர். இந்தப் பாடம் இவருக்குப் போதவில்லை.

ஒருநாள் அரங்கசாமி ரெட்டியாருக்கு ஒரு சிறு துண்டுத் தாள் கிடைத்தது. அஃது ஒரு காவல்துறை சேவகனால் தான் கிடைத்தது. அதில் மாவட்டக் காவல்துறைத் தலைவர் (DSP) 'ஏதோ ஒரு காரணம் காட்டி சட்டமன்ற உறுப்பினரைக் கட்டுப்படுத்தி உள்ளே தள்ளு' என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். அது வட்ட ஆய்வாளர் கைக்குப் போக வேண்டியது; தவறியதுபோல் காட்டிக் காவல் துறையினர் இவர் கைக்குக் கிட்டச் செய்தனர். மாவட்டக் காவல் துறையினர் பெரும்பாலோர் தம் தலைவரின் அடாத செயல்களை, தான்தோன்றித்தனமான போக்கை, விரும்பவில்லை. ஆதலால் அரங்கசாமி ரெட்டியாரைக் கருவியாகக் கொண்டு தான் இவரை ஒழித்துக் கட்டவேண்டும் என்று கருதித் துண்டுக் காகிதத்தை இவர் கைக்குக் கிட்டச்செய்தனர்.

மாலை நாலரை மணி சுமாருக்கு டென்னிஸ் விளையாடுவதற்குப் போய் கொண்டிருந்த சமயத்தில்தான் இக்காகிதம்

கிடைத்தது. உடனே மகிழ்வுந்தை வீட்டிற்குத் திருப்பிக் கொண்டு வந்து மூன்று நான்கு நாட்களுக்குத் தேவையான ஆடைகளை எடுத்துக் கொண்டு திருச்சி சென்று அன்றிரவே சென்னை செல்லும் இருப்பூர்தியில் ஏறி மறுநாள் சென்னை வந்தடைந்தார். காவல்துறைப் பெருந்தலைவரைச் சந்தித்து விஷயத்தை விளக்கி விண்ணப்பம் செய்தார். சட்டமன்ற உறுப்பினரல்லவா? எந்தவிதத் தடையுமின்றி மாவட்டக் காவல்துறைத் தலைவரைத் (DSP) தற்காலிக வேலை நீக்கம் செய்தார் பெருந் தலைவர். மாவட்டக் காவல்துறைத் தலைவர் இராவண வீழ்ச்சியை யடைந்தார். இராவணன் வீழ்ச்சியைக் கம்பநாடன்,

அரக்கர் பாவமும் அல்லவர்
இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள்
தூமொழி மடமான்
இரக்க மின்மையும்[2]

என்று காரணம் காட்டி விளக்குவான். 'சனகி எனும் பெரு நஞ்சு உன்னைக், கண்ணாலே போக்கியதே உயிர் நீயும் களப் பட்டயோ'[3] என்று இராவணன் மாண்ட செய்தியை நினைந்து மண்டோதிரி புலம்புவாள். இந்த நிலையை மாவட்டக் காவல்துறைத் தலைவருடைய நிலைக்கு ஒப்பிட லாம். சீதையைத் தொடாமலேயே மடிந்தான் இராவணன். உதவி ஆய்வாளரின் துணைவிமேல் வைத்த ஆசையே அரங்க சாமி ரெட்டியாரின் செயற்பாட்டாக நின்று பதவிநீக்கத் திற்குக் காரணமாயிற்று.

நான் அப்பொழுது காரைக்குடியில் பணியாற்றி வந்தேன். சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பின

2. அயோத். மந்தை சூழ்ச்சி-78
3; யுத்த - இராவணன்வதை-220

ராகவும் இருந்தேன். இந்தப் பேரவைக் கூட்டத்திற்கு வந்த போது அரங்கசாமி ரெட்டியாரை சட்டமன்ற உறுப்பினர் உணவுவிடுதியில் சந்தித்தேன். அப்போது பதவி நீக்கம் செய்யப்பெற்ற மாவட்டக் காவல் துறைத் தலைவரும் அந்த விடுதிப் பக்கம் இன்னொரு நண்பருடன் யாரையோ பார்க்க அலைந்து கொண்டிருந்தார். அரங்கசாமி ரெட்டியாரும் நானும் தாழ்வாரத்தில் கைப்பிடிச்சுவர் அருகில் நின்று கொண்டிருந்தபோது அரங்கசாமி ரெட்டியாரை மாவட்டக் காவல்துறைத் தலைவர் தம் நண்பருக்குச் சுட்டிக் காட்டினார். அரங்கசாமி ரெட்டியாரும் அவரை எனக்குக் காட்டினார். ஆணவம் அடங்கிய நிலையில் அவரைக் கண்டேன். இரக்கப்பட்டேன். 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாகத் தென்பட்டார் காவல்துறை அதிகாரி.

இந்த அரங்கசாமி ரெட்டியார் இன்று இல்லை. 1983 ஆண்டிறுதியில் திருநாடு அலங்கரித்து விட்டார்.

நெருநல் உளன்ஒருவன்
இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்
வுலகு[4].

என்ற குறளுக்கு எல்லோர்போல் இவரும் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார். நிலையாமையை நிலைத்து நின்று காட்டும் வள்ளுவர் பெருமானின் மணியான வாக்காகும் இது.

---

4. குறள் — 336

குமிழி – 86

# 22. நிலச் சீர்திருத்தம்

பள்ளிக்கெனப் பத்து ஏக்கர் நிலம் வாங்கப் பட்டதை நான் முன்னர்க் குறிப்பிட்டேன் அல்லவா? இந்த நிலம் தென்-வடல் நீளமாகவும், கீழ்-மேல் சற்று நீளக்குறை வாகவும் இருந்தது. சாலையிலிருந்து இந்த நிலத்திற்கு வருவது குறுக்குவழிதான். நான் துறையூரிலிருந்தவரை (ஜுன் 1950) இந்த நிலப்பகுதிக்கு நேரான வழி குறிக்கப் பெறவில்லை. பல்வேறு சமயங்கள் இறைவனை அடையப் பல்வேறு வழிகளைக் காட்டுவனபோல், பலரும் இப்பகுதிக்கு வருவதற்கு பல வழிகளை ஏற்படுத்திக் கொண்டனர். இப்போது (செப்டம்பர் 1989) பல ஆண்டுகட்கு முன்னரே வழி அறுதி செய்யப் பெற்றிருப்பதை அறிகின்றேன்.

இந்த நிலத்தின் வடபுறம், மேற்புறம் கட்டாந்தரை போல் அமைந்திருந்தன. கீழ்ப்புறமும் தென்புறமும் வேளாண்மைக்குகந்த நிலமாக இருந்தன. இந்த நிலத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. மேல் புறம் சாலைக்கு அருகிலிருந்ததால் அப்பகுதியில் பின்னர் பள்ளிக்கு அடைய வேண்டிய நிரந்தரக் கட்டடத்திற்கென ஒதுக்கத் தீர்மானித்தேன். இத்திட்டத்தில் நிலத்தின் மேற்புறமாகக் கட்டடம் அமைந்தால், கட்டடத்திற்குப் பின் புறமாக ஆடுகளம் (Play-ground) அமையும். இத்திட்டத்தைத் தாளாளர் சின்னதுரை முன் வைத்தேன். அவரும் திட்டத்தை ஒப்புக் கொண்டார். இனி செயற்பட வேண்டியது என் பொறுப்பில் வந்தது, வடப்புறப் பகுதியின் கீழ்க்கோடியில் கூடைப்பந்து ஆடுகளனுக்காகவும், அதன் அருகில் பூப்பந்து ஆடுவதற்கு இரண்டு களன்களுக் காகவும் நிலத்தை ஒதுக்கிக் கொண்டேன்.

கூடைப்பந்து ஆடுகளன் அமைப்பதில்தான் சிரமம் அதிகம்; செலவும் அதிகம். இரண்டு தடித்த இரும்புக் குழாய்களைப் பலமான அடிப்படையுடன் நட்டு கூடைப்பந்து ஆடுவதற்கென்ற இருப்புவளையங்கள், நூல்வலைகளுடன் கூடிய அமைப்புகள் பொருத்தப் பெற்றன. ஆடுகளனுக்கு மணற்பாங்கான செம்மண் கலந்த சரளைகளைப் பரப்பச் செய்து தரை கெட்டிப் படுத்தப் பெற்றது. இந்த ஆடுகளன் மிகச் சிறப்பாக அமைந்தது. இதன் அருகிலேயே வளைப் பந்து (Ring tennis) ஆடுகளன்கள் இரண்டு அமைக்கப் பெற்றன. இதற்கும் கெட்டியான அடிப்படையில் கனம் குறைந்த நான்கு துத்தநாகக் குழாய்கள் பொருத்தப் பெற்று ஆடுகளன்கள் அமைக்கப் பெற்றன. இவற்றிற்கு அதிகச் செலவு இல்லை.

புதிதாக அமைய வேண்டிய கட்டடத்திற்குக் கீழ்புறம் உதைபந்து ஆடுகளன் அமைக்கப்பெற்றது தற்காலிகமாக. இதைச் சுற்றி ஓட்டப் பந்தயங்கள் நடைபெறுவதற்கு இடங்கள் ஒதுக்கப் பெற்றன. உதைபந்து ஆடுகளனுக்கு மேற்புறம் ஓரமாக வரிசையாகத் தூங்குமூஞ்சி மரங்களை விருத்தி செய்யும் நோக்குடன் நானே என் கையாலேயே பல செடிகளை நட்டுப் பராமரித்து வந்தேன். முதல் வேலையாகக் கிணறு வெட்டி உருளை போட்டுவிட்ட படியால் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. முத்துசாமியும் விளையாட்டுத் துறைக்கென நியமிக்கப் பெற்ற பையனும் செடிகட்குத் தண்ணீர் ஊற்றி நன்கு வளர்த்தனர்.

இடம் வாங்கின மறு ஆண்டே மூன்று வகுப்புகட்கென்று ஒரு நீண்ட ஓட்டுவில்லைக் கட்டடம் எழுப்பப் பெற்றது. மூங்கில் தட்டிகளால் மூன்று அறைகளாகத் தடுக்கப் பெற்று மூன்று வகுப்புகள் நடைபெற்றன. பெரிய கூட்டம் நடைபெறும் போது தட்டிகள் நீக்கப் பெற்றுப் பெரிய சொற்

பொழிவு மண்டபமாக்கப் பெறும். ஆண்டு விழாவைத் தவிர அடிக்கடி நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்கள் இங்குத்தான் வழக்கமாக நடைபெற்று வந்தன.

நாளடைவில் மாணாக்கர் தொகை பெருகிக் கொண்டே வந்தமையால் அடுத்த ஆண்டே இக்கட்டடத்திற்கு அருகிலேயே தென்புறம் சுமார் 150 அடிக்கு அப்பால் மீண்டும் ஒரு நீண்ட ஓட்டுவில்லைக் கட்டடம் எழுப்பப் பெற்றது. இதிலும் மூன்று வகுப்புக்கட் கென்று வசதிகள் செய்யப் பெற்றன. இந்த இரண்டு கட்டடங்கள் நிறுவப் பெற்றபிறகு ஒன்று, இரண்டு, மூன்று கீழ்ப்படிவ வகுப்புகள் இந்தக்கட்டடங்கட்கு மாற்றப் பெற்றன. இக்கட்டடங்கள், வகுப்புகள் மேற்பார்வைப் பொறுப்பு திரு T. S. இராமய்யா அவர்களிடம் விடப் பெற்றது. இப்பொறுப்பை அவர் திறம் பட நடத்தி வந்ததை இன்றும் நினைவு கூர்கிறேன். இடை இடையே ஓய்வு கிடைக்கும்போது நானும் இங்கு அடிக்கடி வந்து போவதுண்டு.

மேல் கீழ் வகுப்புகள் இரண்டு இடங்களில் இருக்கும் போது நடைமுறைத் தொல்லைகள் அதிகமாக இருந்தன. எழுத்தர் அலுவலகம் பழைய கட்டடத்திலேயே இருந்தமை யால் மாணாக்கர்கள் கட்டணங்களைச் செலுத்துவதில் மிகச் சிரமப்பட்டனர். இதனால் இரண்டாவதாக நியமிக்கப் பெற்ற எழுத்தர் முற்பகலில் நாடோறும் புதிய கட்டடங் கட்கு வந்து வசூல் செய்ய ஏற்பாடு செய்யப் பெற்றது. இதனால் சிரமம் சற்றுக் குறைந்தது. உடனுக்குடன் பற்றுச் சீட்டு கொடுப்பதில் சங்கடம் ஏற்பட்டது. வகுப்பு வாரியாகத் தனித்தாளில் எழுதி வசூல் செய்வார். பணத்தைச் சரி பார்த்து எடுத்துக் கொண்டு பழைய கட்டடங்கட்கு வந்து பற்றுச் சீட்டுகள் (வகுப்புவாரியாகப்) போட்டு பிற்பகலில் ஆள் மூலமாக அனுப்பி வைப்பார். இந்த ஏற்பாட்டில்

மாணாக்கர்களின் சிரமம் குறைந்தாலும் எழுத்தருக்குச் சிரமம் ஏற்பட்டது; எப்படியாவது தொகையில் குறைவு ஏற்பட்டால் அவர்தானே பொறுப்பு? ஆகவே அவர் மிக விழிப்புடன் செயற்பட வேண்டியிருந்தது.

குமிழி—87

## 23. மாணவர் இல்லம்—தோற்றம்

முசிறிக் கழக உயர்நிலைப் பள்ளியைத் தவிர துறையூரைச் சுற்றிலுமுள்ள ஊர்களில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமையால், எல்லோரும் துறையூர்ப் பள்ளியையே நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. 4 கல் தொலைவிலுள்ளவர்கள் கூட நடந்தோ, மிதிவண்டியிலோ வந்து சேர்ந்து பயின்றனர். அக்காலத்தில் சில ஊர்களை இணைக்கும் பாதைகள் சரியாக இல்லை. மழைக்காலத்தில் மிதிவண்டிகள் செல்ல முடியாத நிலை. இவ்வூர்களிலிருந்து வரும் மாணவர்கட்குத் தங்க இடமும் உணவு வசதியும் இருந்தால் நலம் என்று உணர்ந்தேன். அந்தந்த ஊர்களிலுள்ள பெற்றோர்களும் இதை உணர்ந்தனர். நானும் திரு.வி.சி. கிருஷ்ணசாமி ரெட்டியாரும் இதைப்பற்றிப் பல நாட்கள் யோசித்து 'மாணவர் இல்லம்' ஒன்று தொடங்கலாம் என்ற முடிவுக்கு வந்தோம். பள்ளி நிர்வாகம் இதைப் பற்றிக் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. என்றாலும் இல்லம் தொடங்குவதற்கு இசைவு பெற்றேன். ஒரு பெரிய அமைப்பில் என்றுமே தலை இருக்க வால் ஆடக்கூடாது என்பது என் உள்ளுணர்வு காட்டும்வழி.

மாணவர் இல்லம் தொடங்கினால் அதனைப் பொறுப்பேற்று நடத்த நல்ல தொண்டுள்ளம் படைத்த ஆசிரியர் ஒருவர் வேண்டுமல்லவா? வளர்ச்சி பெற்று வரும் பள்ளியின்

பல்வேறு பொறுப்புகள் என் தலைமீது இருந்தமையால் இப்பொறுப்பை நான் ஏற்க முடியாத நிலையிலிருந்தேன். திரு. வி.சி. கிருஷ்ணசாமி ரெட்டியார் இந்தப் பளுவை ஏற்க மனமுவந்து முன் வந்தார்; இப்பிரச்சினை ஒருவாறு தீர்ந்தது. துறையூர் பாலக்கரை இச்சிமரத்தடியில் ஒரு வீடு காலியாக இருந்தது. அது சமையல் செய்யவும். 40 மாணாக் கர்கள் வரை தங்கவும் வசதியாக இருந்தது. அதனை வாடகைக்கு உறுதிசெய்யலாம் எனத்தீர்மானிக்கப்பெற்றது.

இனி சமையல்காரன் ஒருவன் வேண்டுமே. அதற்குச் சித்திரைப் பட்டியில் (துறையூருக்கு 2 கல் தொலைவிலுள்ள ஊர்) உள்ள ஓர் இளைஞனை ('தம்பு' என்று வழங்கப் பெறுவர்) நியமித்துக் கொள்ளலாம் என உறுதி செய்து கொண்டோம்.

சமையல் பாத்திரங்கள் வாங்க வேண்டுமே. இதில் நல்ல அநுபவம் உள்ளவர் திரு உமாபதி ரெட்டியார். அவரைக் கலந்து யோசித்ததில் ரூ. 1000 தேவைப்படலாம் என்றார். இதற்கு வழி? சுற்றுப்புற ஊர்களில் உள்ள சில செல்வர் களிடம் நன்கொடை வாங்குவதெனத் தீர்மானித்தோம். இதில் திரு உமாபதி ரெட்டியார், திரு. வி. சி. கிருஷ்ணசாமி ரெட்டியார், நான் ஆகிய மூவரும் பலரை அணுகியதில் ரூ. 50/-, ரூ. 25/-க்கு குறையாமல் வழங்கினர். இங்ஙனம் ரூ. 500/- வசூலாகியது என்பதாக நினைவு.

திரு உமாபதி ரெட்டியாரையே சாமான்கள் வாங்கி வரும்படித் திருச்சிக்கு அனுப்பினேன். திரு. எஸ் சப்தரிஷி ரெட்டியார் என்ற தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர் எனக்கும் திரு உமாபதி ரெட்டியாருக்கும் உறவினர். ஏதோ ஒருகாரியமாக அவர் துறையூருக்கு வந்திருந்தார். அவரையும் திரு உமாபதிரெட்டியாருக்குத் துணையாகத் திருச்சிபோய்

வரும்படி வேண்டினேன்; இவரும் இதற்கு ஒப்புக்கொண் டார். இவரும் சமையல் பாத்திரங்கள் வாங்குவதில் நல்ல அநுபவம் உள்ளவர்.

இவர்கள் இருவரும் திருச்சி சென்றனர். அக்காலத்தில் திருச்சிப் பேருந்துநிலையம் சின்னையா பிள்ளை சத்திரத் திற்கருகிலுள்ள பட்டர்வொர்த் சாலையில் இருந்தது. இருவரும் அரட்டை அடிப்பதில் கைதேர்ந்தவர்கள். தமாஷாகப் பேசிக்கொண்டே பேருந்தைவிட்டு இறங்கி ஒரு பெட்டிக்கடையில் சிறுசுருட்டு, வெற்றிலைபாக்கு வாங்கினர். இவர்களுள் திரு சப்தரிஷி ரெட்டியார் விடாமல் புகைப்பவர், திரு உமாபதி ரெட்டியார் ஓயாமல் வெற்றிலை பாக்கு மெல்லுபவர். இவற்றைச் செய்துகொண்டும் பேசிக் கொண்டும் நின்றவர்கள் 1000/- கொண்ட தோலாலான கைப்பையைப் பெட்டிக்கடையில் வைத்தனர். வைத்தவர் கள் அதை எடுக்க மறந்து பேசிக்கொண்டே போய்விட்டனர். 15 நிமிடம் கழித்து தோல்பையைக் காணாது விழித்தனர். பெட்டிக்கடையில்தான் வைத்திருக்கவேண்டும் என்ற நினைவுடன் பெட்டிக்கடையில் வந்து கேட்க, கடைக்காரன் தனக்கு ஒன்றுந் தெரியாது என்று கையை விரித்து விட்டான்.

இருவருக்கும் திகில் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் தம்பித்து நின்றனர். ஆயினும், உமாபதி ரெட்டியார் கடைக்காரனையும் கடையையும் நோட்டம் விட்டார். கடைக்காரனது இடதுபக்கத்தில் ஒருபிள்ளையார் படம் சாய்வான நிலையில் மாட்டப்பெற்றிருந்தது. கடைக் காரன் 'திருட்டுவிழி' விழித்தான். வாளா நின்றுகொண்டி ருந்த சப்தரிஷி ரெட்டியார்கண்ணில் பிள்ளையார் படத்தின் பின்புறமாக வைக்கப்பெற்றிருந்த தோல்பை தென்பட்டு விட்டது. 'இதோ பை பிள்ளையார் படத்தின் பின்புறத்தில்'

என்று சொல்லிக்கொண்டே வேகமாகப் பையை எடுத்துக் கொண்டார். பையில் வைக்கப்பெற்றிருந்த பணம் அப்படியே இருந்தது. எப்படியோ கடைக்காரனது செயலை பிள்ளையார் காட்டிக் கொடுத்துவிட்டார்! இவர் சாதாரண பிள்ளையார் அல்லர்; உச்சிப்பிள்ளையார். குன்றின்மேலி ருந்து கொண்டு 'எது எங்கே நடக்கின்றது?' என்று நோட்டம் விடுபவர் அல்லவா? இருவரும் மகிழ்ச்சியுடன் திரும்பினர். கடைக்காரன் முகத்தில் ஈ ஆடவில்லை!

இருவரும் கடைத்தெரு சென்று தேவையான சாமான் களை வாங்கிக் கோணிப்பைகளில் போட்டுக் கட்டிக்கொண்டு துறையூர் திரும்பினர். ஒன்றிரண்டு நாட்களில் தேவை யான பாத்திரங்கட்கு ஈயம் பூசப்பெற்றது ரூ. 50/- மாத வாடகைக்கு வீடு பேசப்பெற்றது. தம்பு மாதச் சம்பளம் ரூ. 25/க்கு ஒப்புக்கொண்டான். பாத்திரங்கள் தேய்க்கவும் அறைகள் பெருக்கவும் ரூ. 15/- ரூபாயில் ஆயா ஒருத்தி நியமிக்கப்பெற்றாள். ஒரே வாரத்தில் 'மாணவர் இல்லம்' செயற்படத் தொடங்கியது. தொடக்கத்திலேயே முப்பது மாணவர்கள் சேர்ந்துவிட்டனர். இது அக்காலத்தில் எங்கட்குப் பெரிய சாதனை. எல்லாப் பொறுப்புகளையும் திரு. வி. சி. கிருஷ்ணசாமி ரெட்டியார் தன்மீது சுமத்திக் கொண்டு மிகத் திறம்பட நடத்தி வந்தார். மாணவர்களின் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் பாதுகாப்பாக உள்ளனர் என்று மகிழ்ந்தனர்.

நீந்தத் தெரிந்தவர்கள் ஏரிக்கரை அருகிலுள்ள கிணறு களில் நீராடிவிட்டுக் காலை ஏழுமணிக்குள் திரும்பிவிட வேண்டும். நீந்தத் தெரியாத சிறுவர்கள் இல்லத்திலேயே நீர் இறைத்துக் குளிக்கவேண்டும், குளியல் ஏழுமணிக்குள் முடியவேண்டும் என்ற நிபந்தனைகள் விதிக்கப் பெற்றன. ஏழரை மணியிலிருந்து 9.15 வரையில் படிக்கவேண்டும், வீட்டு வேலைகள் செய்யவேண்டும் என்று திட்டமிடப்

பெற்றது. 8 மணிக்குச் சிற்றுண்டி; காஃபி. பகல் 1-30 மணிக்கு உணவு. இட்டலி, தோசை, இடியாப்பம், பூரி-கிழங்கு இவை மாறி மாறி சிற்றுண்டிகளாக அமைந்தன. மதிய உணவு பருப்பு, சாம்பார், ரசம், மோர், ஒரு கறியுடன் தரப்பெற்றது. இரவு 7-30க்கு உணவு. எட்டு மணியிலிருந்து 9-30 மணி வரை படிக்கவேண்டும். படிக்கும் நேரங்களில் அமைதி நிலவவேண்டும். காலையிலும் மாலையிலும் வி.சி. கிருஷ்ணசாமி ரெட்டியார் தவறாது வந்து பார்வை யிடுவார். மேல்வகுப்பு மாணவர் உதவியால் நாள்தோறும் தரப்பெறும் அரிசி, பருப்பு முதலியவற்றிற்குக் கணக்கு வைக்கப்பெற்றது. வாரம் இருமுறை காய்கள் வாங்கப் பெற்றன. இவற்றிற்கெல்லாம் சரியான முறையில் கணக்கு வைத்துக்கொண்டிருந்தார். ஒன்றிரண்டு மேல் வகுப்பு மாணவர்களுக்கும் கணக்கு வைத்துக்கொள்ளும் முறை காட்டப்பெற்றது. மாதச் செலவு ஒவ்வொருவருக்கும் ரூ. 10/- க்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ளப்பெற்றது. ஏழை மாணவர்களும் தாங்கவேண்டுமல்லவா? நானும் வாரத்திற்கு இருமுறை வாய்ப்பு கிடைக்கும்போது வந்து பார்வையிடுவேன். 'மாணவர் இல்லம்' உண்மையாகவே 'விடுதி'போலில்லாமல் 'இல்லம்' போலவே இயங்கி வருவதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்.

குமிழி —88

## 24. திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகம்

**1945** என நினைக்கின்றேன். திருச்சி மாவட்டத் தமிழாசிரியர்கள் ஒன்று கூடும் அமைப்பு ஒன்றைத் தோற்று விக்கவேண்டும் என்ற எண்ணம் தமிழாசிரியர்களிடம் பரவ லாக இருந்து வந்தது. நான் திருச்சி மாவட்டத்தில் வித்துவான் பட்டம்பெற்ற முதல் தலைமையாசிரியராக

லாலும், இளமைத் துடிக்குடன் காணப்படுவதாலும், பெரும் பாலான தமிழாசிரியர்கள் என்னை நன்கு மதிப்பதாலும் என்னைத் தலைவனாக ஏற்படுத்தும் முறையில் ஓர் அமைப்பைக் கருதினார்கள் தமிழாசிரியர்கள்.

இதில் பெருமுயற்சி எடுத்துத் தமிழாசிரியர்களின் கூட்ட மொன்றைக் கூட்டினவர் இலால்குடி திரு. ப. அரங்கசாமி. முதல் கூட்டம் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி லாலி மண்டபத்தில் நடைபெற்றது. பலரும் கலந்து உரையாடி 'திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். இக்கழகத்திற்கு என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தனர். லால்குடி திரு. ப. அரங்க சாமி, பொன்னையா உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் (பெயர் நினைவுஇல்லை) ஆகியோரைச் செயலாளர்களாகவும் வேறு திரு. V. C. கிருட்டிணசாமி (எங்கள் பள்ளித் தமிழா சிரியர் உட்பட) எழுவரை ஆட்சிக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுத்தனர். மாவட்டத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலுமுள்ள தமிழாசிரியர்கள் பெயர்கள் முகவரியுடன் தொகுக்கப்பெற்று அவர்கட்கு இம்முடிவு தெரிவிக்கப் பெற்றது. நான் தலைவனாக இருந்தவரை தமிழாசிரியர் கழகம் மிகச் சுறுசுறுப்பாக இயங்கினமைக்கு திரு. ப. அரங்க சாமியும் பொன்னையா உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரும் முக்கிய காரணமானவர்கள், இக்கழகம் ஆற்றிய பணி பள்ளியிறுதி வகுப்பு மாணவர்கட்கு மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னைமாணவர் மன்றம் நடத்திவரும் பொதுத் தேர்வுபோல் ஒன்றை நடத்தி வெற்றிபெற்ற மாணவர் கட்குச் சான்றிதழ்களை வழங்கியதாகும்.

இத்திட்டத்தை எல்லாத் தமிழாசிரியர்களின் முன்னர் வைத்து அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் எல்லோரும் ஒத்துழைப்பு நல்கியதால் திட்டம் நான்கு ஐந்து

ஆண்டுகள் நன்முறையில் செயற்பட்டது. பொன்னையா உயர்நிலைப்பள்ளிதான் இக்கழகத்தின் செயலகமாக இயங்கியது.

பள்ளியிறுதித் தேர்வுக்குரிய பாடநூல்களே இத்தேர்வுக்குரிய பாட நூல்களாக அமைந்தன. இரண்டு வினாத்தாள்களில், மொழி பெயர்ப்புக்கான வினாவிற்குப் பதிலாக 'பா நயம் வியத்தல்' என்ற வினா அமைக்கப்பெற்றது. முதலாண்டு தேர்வு நடப்பதற்குமுன் நடப்பு ஆண்டிற்கு முதலாண்டு பாடநூல்களாக அமைந்தவற்றில் மாதிரி வினாத்தாள்கள் குறிக்கப்பெற்று அச்சிடப்பெற்று எல்லாப் பள்ளித் தலைமையாசிரியர்கட்கும் அனுப்பப்பெற்று இத் திட்டமும் அவர்கட்குத் தெரிவிக்கப்பெற்றது. இப்பணியில் தமிழாசிரியர்கள் பொறுப்பேற்றுச் செயற்பட்டாலும் தேர்வுகள் நடத்துதல், தேர்வு மனுக்களை ஒன்று சேர்த்து கழகச் செயலகத்துக்கு அனுப்புதல், தேர்வின் விடைத்தாள்களைத் தேர்வாளர்கட்கு நேரே அனுப்புதல் போன்ற பொறுப்புகளை தலைமையாசிரியர் ஏற்று செயற்பட்டால்தானே இத்திட்டம் பெருமையுடனும் பொலிவுடனும் செயற்படும்?

ஒவ்வொரு ஆண்டும் தேர்வு விண்ணப்பப் பாரங்கள் செப்டம்பரில் எல்லாப் பள்ளிகட்கும் அனுப்பப்பெறும். அந்தந்தப் பள்ளித் தமிழாசிரியர்கள் பாரங்களை நிரப்பச் செய்து ரூ 2/- கட்டணத்துடன் தலைமையாசிரியரிடம் தருவார்; அவற்றைப் பொன்னையா உயர்நிலைப் பள்ளியிலுள்ள செயலகத்துக்கு அனுப்புவார். டிசம்பர் முதல் வாரத்திற்குள் இவை தொகுக்கப்பெற்று தேர்வு எழுதும் மாணவர்களின் தொகை அறுதியிடப்பெறும். அநுபவம் மிக்க தமிழாசியார்கள் இருவர் வினாத்தாள்கள் குறிப்பர். இவை அச்சிடப்பெற்று ஒவ்வொரு பள்ளிக்கும் பிப்பிரவரியில் அனுப்பப்பெறும். பிப்பிரவரி இறுதிக்குள் தேர்வுகள்

நடத்தப்பெறும். ஜூன் மாதத்திற்குள் இவற்றின் விடைத்தாள்கள் திருத்தம் செய்யப்பெற்று மதிப்பெண்களும் விடைத்தாள்களும் செயலகத்திற்கு வந்துசேரும். பள்ளிவாரியாக மதிப்பெண்கள் பதிவேட்டில் பதியப்பெறும். 60 %க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் முதல் வகுப்பிலும், 50%க்கு மேல் பெற்றவர்கள் இரண்டாம் வகுப்பிலும் 40%க்குமேல் பெற்றவர்கள் மூன்றாம் வகுப்பிலும் தேறியதாகக் கொள்ளப் பெற்றுச்சான்றிதழ்கள் தயாரிக்கப்பெற்று அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கட்கு அனுப்பப்பெறும். தமிழாசிரியர்கள் மாணவர்கட்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்.

1950 வரையிலும் (அதாவது நான் காரைக்குடிக்குப் போகும் வரையிலும்) என் தலைமையில் இத்திட்டம் நன்கு செயற்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் என் கையொப்பத்திலும் செயலர் கையொப்பத்திலும் சான்றிதழ்கள் பெற்றனர். இதைத் திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகம் தெய்வப் பணியெனக்கருதிச் செயற்பட்டது. எனக்கு பிறகு திரு. அய்யம் பெருமாள் கோனார் இப்பொறுப்பை யேற்றுச் சில ஆண்டுகள் திறம்பட நடத்தினார். பின்னர் இத்திட்டம் செயற்படாது நின்றுபோயிற்று.

குமிழி—89

## 25. பள்ளியில் சிறப்புச் சொற்பொழிவுகள்

துறையூரில் பணியாற்றிய காலத்தில் பள்ளியில் **'மாணவர் இலக்கியக் கழகம்'** என்ற ஒன்றை நிறுவி அதன் ஆதரவில், வழக்கமாக நடைபெறும் அவர்கள் பேசுவதைத் தவிர, பல சிறப்புக் கூட்டங்களை ஏற்படுத்திப் பல பேரறிஞர்களை வரவழைத்து அவர்களால் பல இலக்கியங்களை

மாணாக்கர்கட்கு அறிமுகம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். பெரும்பாலும் இக்கூட்டத்திற்கு உள்ளூர் மாவட்ட நீதிபதிகள் தலைவர்களாக அமைவார்கள் அப்படி அமைந்தவர்களில் திருவாளர்களான சாரங்கபாணி, பழநிசாமிக்கவுண்டர், தஜமூல் ஹுசேன், சுந்தரராம அய்யர், இராமநுஜம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அக்காலத்தில் தமிழ் ஆர்வலர், **கே. எஸ். முத்துவேல் பிள்ளை** என்பவர் இலங்கைத் தொழிலாளர் ஆணையத்திற்கு (Ceylon Labour Commission) ஏஜண்டாக இருந்தார். அவரையும் என்னுடன் பயின்று துறையூரில் வழக்குரைஞராக இருந்த **பா. அரங்கசாமி ரெட்டியாரையும்** அடிக்கடிப் பயன்படுத்திக் கொள்வதுண்டு. வெளியூரிலிருந்து அடிக்கடி வந்து பல்வேறு கூட்டங்களில் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர்களில் **லால்குடி நடேச முதலியார், வீ. உலக ஊழியர், பு. ரா. புருடோத்தம நாயுடு, அ. சாம்பசிவ ரெட்டியார், சி. இலக்குவனார்** இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பாவேந்தர் **பாரதிதாசன்** அவர்களும் என் வீட்டில் ஒரு வாரம் தங்கி இருந்தார்கள். **பேரறிஞர் அண்ணா** அவர்களும் ஒருமுறை என் பள்ளிக்கு வந்து அக்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேசிய **'ஆற்றோரம்'** என்ற தலைப்பி லேயே பேசினார். துறையூர்ப் பெருமக்கள் பெருந்திரளாக வந்து கூடி அண்ணாவைக் கௌரவித்ததுடன் பேச்சில் திளைத்து மகிழ்ந்தார்கள்.

அடிக்கடி வருபவர் **வீ. உலக ஊழியனார்** அவர்கள். நாமக்கல் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய போதும், சேலம் நகராண்மைக் கழகக் கல்லூரியில் திரு. இராமசாமிக் கவுண்டர் முதல்வராக இருந்த காலத்தில் பணியாற்றிய போதும் இவரை அடிக்கடி வரவழைத்துப் பேச வாய்ப்புகள் தந்தேன். இவருடைய வெண்கலக் குரலையும், பாடல்களை

இசையாகப் பாடுவதையும் மாணாக்கர்களும் ஊர்ப் பெரு மக்களும் அதிகமாக விரும்பிச் சுவைப்பார்கள். இதனால் இவரைக் கொண்டு மாலை நேரங்களில் ஒலிபெருக்கி அமைப் புடன் பொதுமக்களுக்கென்று பலமுறை இலக்கியச் சொற் பொழிவுகளை அமைப்பதுண்டு. அச்சிட்டு சிறு அறிவிப்பு களைக் கடைத்தெருவிலும் பிற இடங்களிலும் பரப்புவதால் பெருங்கூட்டம் திரளும். பெரும்பாலும் உலக ஊழியரின் பேச்சு கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள் இவற்றையொட்டியே அமையும்.

ஒரு சமயம் துறையூர் இச்சி மரத்தடியில் பேசியபேச்சு இன்னும் என் மனத்தில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. நாற்பது ஆண்டுகட்கு முன்னர் பேசிய பேச்சு இன்னும் பசுமையாக என் நினைவிலுள்ளது. கம்பராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதனிடம் முன்னர் தருவதாகக் கூறிய இரண்டு வரங்களைக் கேட்கின்றாள் கைகேயி. எப்போது கேட்கின்றாள்? இராமனுக்கு முடிசூட்ட உறுதி செய்யப் பெற்றபோது.

ஏய வரங்கள் இரண்டின்
  ஒன்றி னால்என்
சேயுல காள்வது; சீதை
  கேள்வன் ஒன்றால்
போய்வன மாள்வது[1]

என்பது அவள் கேட்டவரங்கள். கைகேயின் அந்தப்புரம் சோகக்களை தட்டுகின்றது. எவ்வளவோ அரசன் மன்றாடி யும் கைகேயி பிடிவாதத்தை விடுபவளாக இல்லை. அரசன் அவள் காலில் விழுந்து கெஞ்சியும் அவளது மனம் இரங்க வில்லை. அந்தப்புரத்தின் சூழ்நிலை பயங்கரமாக இருந்தது. இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தைக் கவிஞர் கூறும்

1. அயோ. கைகேயி சூழ்வினை-10

போது நம் மனமும் துக்கத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. விடியற் காலை வருகின்றது. கைகேயியை அரசன் திருமணம் செய்து கொண்ட நாள்முதல் சக்கரவர்த்திக்கும் இவளுக்கும் உடல் வேறு, உயிர் ஒன்று என்று சொல்லுமாறு இருவரும் மன மொத்து ஒருவரே நிலைந்து செய்தாற்போன்ற பல செயல் கள் நடைபெற்று வந்தன. ஆனால் இன்று கணவன் துன்பம் எய்த, கைகேயி இரக்கமற்ற வன்நெஞ்ச முடையவளாகின் றாள். இதனைக் கண்ட இரவாகிய நங்கை ஆடவர் முன் நிற்கவும் நாணமுற்றவள்போல் ஏகுகின்றாள். இவ்வாறு இரவு கழிதலைக் கூறும் கவிஞர், '**கோழி கூவினால் விடியும்**' என்று உலகோர் நம்பும் மரபையொட்டி கோழி கூவுதலை வருணிக்கின்றார். இதுதான் வருணனை:

> எண்த ரும்கடை சென்ற யாமம்
> இயம்பு கின்றன; ஏழையால்
> வண்டு தங்கிய தொங்கல் மார்பன்
> மயங்கி விம்மிய வாறெலாம்
> கண்டு நெஞ்சு கலங்கி, அஞ்சிறை
> யான காமர் துணைக்கரம்
> (கொண்டு தம்வயிறு) எற்றி எற்றி
> விழிப்ப போன்றன கோழியே[2]

[எண் தரும் - எண்ணப்படுகின்ற: யாமம் - (கடை) யாமம்; ஏழை - கைகேயி: தொங்கல் - மாலை; மயங்கி - மதி மயங்கி; விம்மிய - புலம்பிய; அம் சிறை - அழகிய சிறகு; காமர் - அழகிய; துணை கரம் - இரண்டு கைகள்; எற்றி எற்றி - பலமுறை அடித்துக்கொண்டு; விளிப்ப போன்றன - அழுவனவொத்தன.]

கடையாமத்தில் கோழிகள் கூவுகின்றன. கோழிகள் கூவும் போது இறக்கைகளை வயிற்றில் அடித்துக் கொள்வனபோல்

2. மேற்படி, மேற்படி. 47.

அடித்துக் கொண்டுதான் கூவும். இது கோழிகளின் தன்மை; இயல்பு. இந்த இயல்பான நிகழ்ச்சியைக் கவிஞர் தம் குறிப்பை ஏற்றிக் கூறுகின்றார். துக்கம் வருங்கால் துக்கப் படும் பெண்கள் கைகளால் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்புவதைக் கண்டிருக்கின்றோம். இரவு முழுவதும் சக்கரவர்த்தி ஒரு பெண்ணால் மதி திகைத்துப் புலம்பியவற்றையெல்லாம் கண்ணாரக் கண்ட கோழிகள் அத்துயரத்தை ஆற்றமாட்டாமல் தமது இறகுகளாகிய கை களால் வயிற்றில் அறைந்துகொண்டு அழுவனவற்றை யொத்தன என்கின்றார். இக்காட்சியைத் தமக்கே உரிய ''கணீர்'' என்று ஒலிக்கும் குரலில் கேட்போர் மனத்தில் நன்கு பதியும் வண்ணம் வருணித்தார் உலக ஊழியர். கம்பன் கவிதையில் பொதிந்த காட்சியை ஊழியர் திரும்பப் படைக்கின்றார். தம் முன்னின்று கேட்போரை தசரதன் காலத்திற்குக் கற்பனையில் போகச் செய்கின்றார்; கைகேயிக் கும் தசரதனுக்கும் இடையே நேரிட்ட வாக்குவாதங்களை யெல்லாம் கேட்போரைக் காணச் செய்து கோழி கூவுதலுக்கு வருகின்றார்.

பாடலை இசையுடன் பாடுகின்றார்; சந்திபிரித்துப் பாடுகின்றார் 'சென்றயாமம் இயம்புகின்றன கோழிகள்' என்ற தொடருக்கு அழுத்தம் கொடுத்து இரக்கத்தொனி புலப்படுமாறு பாடுகின்றார். 'வண்டு தங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மியவாறெலாம்' என்ற தொடருக்கு அழுத்தம் கொடுத்துப் பாடும்போது கைகேயியின் அந்தப் புரத்துக் காட்சியைத் திரும்பப் படைத்துக் காட்டுகின்றார். கேட்போர் யாவரையும் கண்கலங்க வைத்துவிடுகின்றார். 'கண்டு நெஞ்சு கலங்கி அஞ்சிறை யான காமர் துணைக்கரம்' என்ற தொடருக்கு அழுத்தம் தந்து பாடும்போது விடியற் காலத்துக் கோழிகளைக் காட்டிவிடுகின்றார். 'காமர் துணைக் கரம்' கொண்டு தம் வயிறு எற்றி எற்றி விளிப்ப போன்றன'

என்ற தொடருக்கு அழுத்தம் தந்து பாடும்போது கோழிகள் கூவுவதை நேரில் பார்ப்பதுபோல் காட்டித் தம் சொற்பொழிவைக் கேட்போரை அழவைத்து விடுகின்றார். திரும்பவும் பாடலை ஒரு முறைக்கு இருமுறை உருக்கத்துடன் பாடி கேட்போரை அயோத்தியில் கைகேயியின் அந்தப் புரத்தில் கொண்டு நிறுத்திவிடுகின்றார். அப்போது என் கண்ணில் கண்ணீர் வடிந்தது. இப்போது இதை எழுதும்போதும் கண்கள் குளமாகின்றன.

கோழி கூவும் காட்சியை நளவெண்பாவிலிருந்தும் எடுத்துக்காட்டி ஒப்பிடுவது சிந்தனைக்குப் பெருவிருந்தாக அமையும். கலியின் செய்கையால் நளன் அநுபவித்த தொல்லைகள் சொல்லிமுடியா. நளனும் தமயந்தியும் கானகத்தில் அநுபவித்த தொல்லைகள் கல்நெஞ்சரையும் கரையச் செய்யும். இருவரும் ஓராடையுடன் சேர்ந்து உறங்கும் போது நளன் விழித்துப் பாதி ஆடையைக் கிழித்து உடுத்திக்கொண்டு பிரிந்து விடுகின்றான். துயிலெழுந்த தமயந்தி நளனைக் காணாமல் வருந்துகின்றாள்.

வான்முகிலும் மின்னும்
வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானும் குழலும்
தனிவீழ்ந்தாள்.[3]

[முகில் . மேகம்; குழல் - கூந்தல்]

எழுகின்றாள்; தலையிலடித்துக் கொள்ளுகின்றாள்; மீண்டும் வீழ்கின்றாள். முகில் தமயந்தியின் கூந்தலுக்கும் மின்னல் அவள் உடலுக்கும் உவமைகளாக அமைகின்றன. இரவு முழுவதும் இப்படித் தொல்லைப்படும் காட்சியை வருணித்த புகழேந்தி பொழுது புலரும் காட்சியைக் காட்டுகின்றார்.

3. நளவெண்பா-282

தையல் 'துயர்க்குத் தரியாது தன் சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் வெய்யோனை
வாவுபரித் தேர்ஏறி வாவென் றழைப்பதுபோல்
கூவினவே கோழிக் குலம்[4]

[தையல்-பெண்; வெய்யோன்-பகலவன்; வாவுபரி-தாவும்குதிரை].

இப்பாடலைப் பன்முறை பாடிப் பாடிக் கேட்போரை அநுபவிக்கச் செய்வார். இரவு பூராவும் துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் நளன்—தமயந்தியைக் காணும் நாமும் துன்பத்தில் ஆழ்ந்து விடுகின்றோம். இத்துன்பத்திற்கு விடுதலை வருவது போல் கதிரவன் தோன்றுகின்றான். கோழிக்குலம் அவனை விரைவில் வருமாறு கூவி அழைக்கின்றது. இரண்டிலும் சூழ்நிலைகளை விளக்கி விடியலை ஒப்பிட்டுக் காட்டும்போது சொற்பொழிவைக் கேட்போர் எல்லையற்ற இலக்கிய இன்பத்தில் திளைக்கின்றார்கள். இச்சொற்பொழிவை அநுபவித்தது இக்குமிழியில் வெளிப்படுகின்றது.

இலால்குடி நடேச முதலியார் **'கங்கை வேடனும், காளத்தி வேடனும்'** என்ற தலைப்பில் குகப் பெருமானையும் கண்ணப்ப நாயனாரையும் ஒப்பிட்டுக் காட்டி மாணாக்கர்களை மகிழ்வித்ததும் **'இலக்கிய இன்பம்'** என்ற தலைப்பில் பேசி மாணாக்கர்களை இலக்கிய இன்பத்தில் திளைக்க வைத்தது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. **சி. இலக்குவனார்** (அப்பொழுது திருவையாற்று அரசர் தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தவர், மாணவர் உலகத்தில் மிகப் புகழுடன் திகழ்ந்தார். அவரை ஒரு சிறப்புச் சொற்பொழிவுக்கு அழைத்திருந்தேன். அவர் **'இளைஞர் எழுச்சி'** என்ற தலைப்பில் பேசினார். இளைஞர்கள் மிக்க அடக்கத்துடன் இருந்து கல்விகற்றுப் பெருமை

4. நளவெண்பா 283

அடையவேண்டும் என்ற கருத்தைக் கருவாக வைத்துக் கொண்டு இலக்கியங்களிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் தந்து இலக்கிய இன்பத்தை ஊட்டினார். ஊர்ப்பெரு மக்களும், சுற்றுப்புற ஊர்களிலிருந்து சிலரும் இவர் பேச்சைக் கேட்க வந்திருந்தனர்.

அக்காலத்தில் யான் புலவர் (வித்துவான்) தேர்வுக்குப் படித்துத் தனிப்பட்ட முறையில் தேர்வு எழுத முயன்று கொண்டிருந்தேன். தொல்காப்பிய சேனாவரையம் (சொல்) பாடமாக இருந்தது. இதில் ஏற்படும் ஐயங்களை அகற்றிக் கொள்ளும் பொருட்டு வார விடுமுறை நாட்களில் அடிக்கடித் திருவையாறு போய்வந்து கொண்டிருந்தேன். சேனா வரையம் பாடம் சொல்லுவதில் பெரும்புகழ் பெற்றிருந் தவர் பு. ரா. புருடோத்தம நாயுடு அவர்கள், இந்தச் சமயத் தில்தான் இலக்குவனார் தொடர்பு ஏற்பட்டது. எனக்குத் தன் இல்லத்தில் அருமையான விருந்தும் அளித்தார். அப் போதுதான் துறையூரில் வந்து பேசுமாறு அழைத்தேன்; அவரும் ஒப்புக்கொண்டு துறையூர் வந்து சிறந்த சொற்பொழிவாற்றிப் பெரும்புகழ் நிறுத்தித் திருவையாறு திரும்பினார்.

திரு நாயுடு அவர்கள் தொல்காப்பியத்தில் எனக்கு ஏற்பட்ட பல ஐயங்களை (மாணவன் என்ற முறையில் எழுந்த ஐயங்கள்) அகற்றிய முறை இன்றும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது. நன்னூலில் பாடம் சொல்லும் முறையைப் பவணந்தியார்,

> ஈதல் இயல்பே இயம்பும் காலை
> ...... ...... ...... ......
> உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து

கொள்வோன் கொள்வகை அறிந்து அவன்
கோட்டமில் மனத்தின் நூல் உளங்கொளக்
கொடுத்தல் என்ப.[5]

என்று கூறுவர். இந்த முறையை நான் பயிற்சிக் கல்லூரியில் பயின்றபோது ஆங்கிலத்தில் படித்தேன். தலைமையாசிரியர் பொறுப்பு வந்தபொழுது இக்கருத்துகளை நடைமுறைப் படுத்தவும் முயன்றுள்ளேன். நாயுடு அவர்களும் விருந்து அளித்தார்கள். இவரையும் துறையூருக்கு வந்து ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுமாறு வேண்டினேன். ஏதோ ஆழ்வார் களைப் பற்றிப் பேசியதாக நினைவு. இவர் உயர்நிலைப் பள்ளி மாணவர் நிலைக்கு இறங்கிப் பேச முடியாமையை அறிந்தேன்.

பாவேந்தர் பள்ளியில் மாணாக்கர்கட்கேற்றவாறு சுவை யுடன் பேசினார். கவிதை இயற்றுவதில் பல அநுபவங் களைச் சுவையுடன் எடுத்துக்காட்டிக் கேட்போரை அநு பவிக்கச் செய்தார். அக்காலத்தில் (1940—50) பாரதியார் போன்றவர்களின் தற்காலக் கவிதைகளைப் புலவர்கள் அதிகமாக மதிப்பதில்லை. பெரும்பான்மையான புலவர்கள் பத்தாம் பசலிகளாக இருந்தனர். பண்டைய இலக்கியங்கள், பிற்காலக் காவியங்கள், சிற்றிலக்கியங்கள்—இவைதாம் கவிதைகள் என்று எண்ணியிருந்தனர். கிணற்றுத் தவளை களாக இருந்தவர்கள் குளத்தையும் பார்க்க முடியவில்லை; ஏரிக்கும் வரமுடியவில்லை. கடலுக்கு இவர்கள் எப்படி வரப்போகின்றார்கள்? இந்தக் குறையைப் பாவேந்தர் நாசூக்காக எடுத்துக் காட்டினார். அவர் குறிப்பிட்ட நிகழ்ச்சி யொன்று இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது.

ஒரு சமயம் பாண்டிச்சேரியில் ஒரு பெரிய இலக்கியக் கூட்டம் நடைபெற்றதாம். யாரோ ஒரு பெரும் புலவர்

5. நன்னூல்-நூற்பா. 36.

(பெயர் சொன்னார்; நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை) பேச்சில் இடைப்பிறவரலாக, "இக்காலத்தில் கவிஞர்கள் என்று தாமே விலாசம் போட்டுக் கொள்பவர்கள் என்ன பாடு கின்றார்கள்? இவர்கள் பாடுவதும் பாட்டா? 'வெள்ளைக் காரப் பணம் சின்னப்பணம், வேடிக்கைப் பார்க்குதாம் வெள்ளிப்பணம்' என்று வெள்ளைப்பாட்டுதான் பாடுவார் கள். இவற்றில் கருத்தும் இருக்காது; தமிழும் இருக்காது" என்று பேசினாராம். நம் மக்கள்தாம் இருக்கின்றார்களே, கைதட்டுவதற்கு? யாரோ ஒரு சிலர் எதற்காகவோ கை தட்ட, கூட்டத்தில் பெரும்பாலோர் செம்மறி ஆட்டு மனப் பான்மையுடன் கைதட்டி விடுவார்கள். அக்கூட்டத்திற் பாரதிதாசனும் போயிருந்தாராம். எங்கோ ஒரு மூலையில் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்திருந்தாராம்.

மக்கள் கைதட்டலைக் கேட்டவர் மனம் பொறுக்காமல் கூட்டத் தலைவருக்கு "எனக்குப் பத்து மணித்துளிகள் பேச அநுமதி அளிக்க வேண்டுகிறேன்—பாரதிதாசன்" என்ற சீட்டை அனுப்பினாராம். கூட்டத் தலைவர் இவரை அநுமதித்தால் ஏதாவது குழப்பம் நேரிடும் என்று அஞ்சி அநுமதிக்க மறுத்து விட்டாராம். "எங்கள் பாரதி தாசனைப் பேசவிடாவிட்டால் நாங்கள் கூட்டம் தொடர்ந்து நடைபெற அநுமதியோம்" என்ற கூக்குரல் எழுப்பி பெரும் பாலோர் எழுந்து விட்டனராம். கூட்டத் தலைவர் பின்னர் அநுமதி அளித்தாராம். பாவேந்தர் பேசியது, "எங்கள் வீடு ஈசுவரன் கோயில் அருகில் உள்ளது. ஒருநாள் சிறுவன் ஒருவன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். பட்டத்திற்கு 'வால்' போதாததால் அது சரியாகப் பறக்கவில்லை. உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அந்தக் காலத்தில் அரைக்கால் சட்டையெல்லாம் அதிகமாக இல்லை. அச்சிறுவன் கோவணம்தான் கட்டியிருந்தான். தன் கோவணத்தை அவிழ்த்து அதை இரண்டு மூன்றாக நீட்ட

வாக்கில் கிழித்துப் பட்டத்து வாலில் கட்டினான். பட்டம் நன்றாகப் பறந்தது. அஃது ஆடி ஆடிப் பறந்து கொண்டே சென்று ஈசுவரன் கோயில் விமானத்திலுள்ள தங்கக் கலசத்தில் சுற்றிக் கொண்டது. பையனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தன் கோவணம் ஈசுவரன் கோயில் தங்கக் கலசத்தைச் சுற்றிக் கொண்டதைக் கண்டு மகிழ்ந்தானாம். இத்துடன் இந்நிகழ்ச்சியை நிறுத்திக் கொண்டு கவிஞர் இக்காலப் புலவர் நிலைக்கு வருகின்றார்.

"மதிப்பிற்குரிய இன்றைய பேச்சாளர் இக்காலக் கவிஞரைத் தாக்கிப் பேசினார். வெள்ளைப் பாட்டுப் பாடுவதாகச் சாடினார். இவர் சான்றாகக் காட்டின பாடலிலுள்ள 'சின்னப்பணம்' என்பதற்குதான் இவருக்குப் பொருள் தெரியுமா?[6] 'சின்னப்பணம்' என்பது 'சிறிய பணம்' என்ற பொருள் அல்ல. சின்னம் (அடையாளம்) பொறித்த பணம் என்பது பொருள். இந்தப் பொருள்தான் அவர் அறிவாரா? அவருக்குப் பாடவும் தெரியாது. ஏதாவது ஒரு நூலை (எ.டு. பெரிய புராணம், கந்த புராணம்) அச்சிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில சொற்களுக்குப் பொருள் எழுதி அவற்றை அடிக்குறிப்பாக அமைப்பார். முதல் பக்கத்தில்—நூலின் பெயர் போடும் பக்கத்தில்— "அருணாசல புராணம் அடிக்குறிப்பு அண்ணாமலைப்

6. அக்காலத்தில் ஒருபணம் (இரண்டணா), நான்கணா (கால் ரூபாய்), எட்டணா, (அரை ரூபாய்), ஒரு ரூபாய் நாணயங்கள் சுத்த வெள்ளியினாலும் அதற்குக் கீழுள்ள ஒரு அணாநாணயம் ஏதோ ஒரு கலப்பு உலோகத்தாலும், அரையணா, காலணா, ஒரு காசு (ஆரைபைசா) நாணயங்கள் எல்லாம் தாமிரத்தாலும் ஆனவை. ஒரு ரூபாய் நாணயத்தை (ஏழாம எட்வர்ட் அடையாளம் போட்டது) உருக்கினால் அரைரூபாய் மதிப்புடையது. சிலர் இந்த நாணயத்தை வெள்ளிக்காகவே சேர்த்து வைப்பதும் உண்டு.

பிள்ளை'' என்று போட்டுக் கொண்டு தானும் ஒரு சாதனை புரிந்து விட்டதாகத் தமக்குள்ளே மகிழ்வார். பெரும் புலவர் படைத்த நூலில் தமது பெயரும் சேர்ந்து விட்டதைக் கண்டு மகிழ்வார். இவர் மகிழ்ச்சி எப்படிப்பட்டது? பட்டம் விட்ட சிறுவன் தனது கோவணம்ஈசுவரன்கோயில் தங்கக் கலசத்தில் சுற்றிக் கொண்டதால் பெற்ற மகிழ்ச்சிபோன்றது'' என்று சொல்லி முடித்தாராம் பலத்த கைத்தட்டல் கிடைத்ததாம். முன்னர் தட்டப்பெற்ற கைத்தட்டலைப்போல் பன்மடங்கு ஒலித்ததாம். தலைவருக்கும் பேச்சாளருக்கும் முகத்தில் ஈ ஆட வில்லையாம். நகைச்சுவைமிக்க இந்த நிகழ்ச்சியைத் துறை யூரில் மாணவர்கள், பொதுமக்கள் நடுவே அவிழ்த்துவிட்டு இங்கும் கைதட்டலைப் பெற்றார்.

அந்தக் காலத்தில் '**காலசக்கரம்**' என்ற ஒரு திங்கள் ஏடு கோவையிலிருந்து வெளிவந்தது. அதன் ஆசிரியர் பெரிய சாமித் தூரன் என்பதாக நினைவு. அதில் 'செந்தமிழ்த்தீனி' என்ற தலைப்பில் கட்டுரையொன்று வரைந்திருந்தேன். இந்தக் கட்டுரையின் கரு பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' என்ற கவிதை நூலிலிருந்து எடுக்கப்பெற்ற,

> கட்டுக்குள் அடங்கா தாடிக்
> களித்திடும் தனது செல்வச்
> சிட்டுக்கள் சுவடிக் குள்ளே
> செந்தமிழ்த் தீனி உண்ண
> விட்டுப்பின் அடுக்க ளைக்குள்
> அமுதத்தை விளைவு செய்தாள்.[7]

என்ற பகுதிதான். இக்கட்டுரையின் சில பகுதிகள்:

''மாலை வேளை. ஒரு சிறிய முற்றம். முற்றத்தில் கோழிக் குஞ்சுகட்கும் புறாக்குஞ்சுகட்கும் 'தீனி' போடப்படு

7. **கவிஞன் உள்ளம்** (1949) என்ற என் முதல் நூலில் இறுதிக் கட்டுரையாகச் சேர்ந்துள்ளது.

கின்றது. பெண்ணொருத்தி சோளம், கம்பு போன்ற தானி யங்களை முற்றத்தில் இறைத்துச் 'சிட்டுகளைக்' கூட்டி லிருந்து திறந்து விடுகின்றாள்.

சிட்டுகளை அடக்குவது மிகக் கடினம். கூடுகளைத் திறந்து விட்டால் அவை ஒழுங்காக முற்றத்துக்கு வந்து சேரா. அங்குமிங்கும் களிப்புடன் ஓடி விளையாடும்.......... மடக்கி ஒன்று சேர்த்து முற்றத்துக்குக் கொண்டுவந்து சேர்ப்பது ஒரு பெரிய வேலை.

மாலை நேரத்தில் கடற்கரை உலா. இது முடிந்து வீடு திரும்பியதும் இல்லத்தரசி விளக்கேற்றி வீட்டிற்குள் நறும் புகை எழுப்புகின்றாள். விளக்கருகே குழந்தைகளை உட்கார வைத்துப் படிக்கச் செய்கின்றாள். பிள்ளைகளைப் படிக்கச் செய்வது பெரிய வேலை. விளக்கருகில் உட்கார வைத்தால் போதும் என்றிருக்கும். பிள்ளைகள் சுவடிகளை எடுத்துக் கொண்டு 'ஆனா, ஆவென்னா......சானா, சாவென்னா' என்று பெரிய குரலுடன் படிக்கத் தொடங்குகின்றனர். இந்த 'இரைச்சல்' இன்பத்தைப் பருகிக் கொண்டே இரவு உணவை அமைக்கின்றாள் அவர்தம் அன்னையார்.

குழந்தைகள் அரைவகுப்பில் (முதல் வகுப்புக்குக் கீழ் வகுப்பு) படிக்கின்றனர்; எழுத்துகளையே சரிவர அறியார். இவர்கள் எங்ஙனம் சொற்களையும் சொற்றொடர்களையும் படிக்கப் போகின்றார்கள்? எழுத்துகளையே தப்பும் தவறு மாக உளறிக் கொட்டுகின்றனர். அஃது அவளுக்கு மழலைச் சொல்போல் இன்பம் தருகின்றது. சுவடியிலுள்ள 'செந் தமிழ்த் தீனியை' வெகு பிரியமாக உண்கின்றனர் என்று நினைக்கின்றாள்.

x x x

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் கவிஞர் உள்ளத்தில் ஒன்று சேர்ந்து ஒரு கவிதையாக (மேற்காட்டியது) உருவெடுக் கின்றது. சிட்டுகளுக்குத் தீனியிட்ட சேடியின் செயலும், பிள்ளைகட்குச் செந்தமிழ்த் தீனியிட்ட குடும்பத் தலைவியின் செயலும் ஒன்று சேர்ந்து 'பாலொடு தேன் கலந்தது போல்' சுவை மிகுந்து ஓர் அழகான சொல்லோவியமாக வெளிப்படு கின்றது''.

பாவேந்தர் இந்தக் கட்டுரையைக் கண்டு மகிழ்ந்தார். "ரெட்டியார் ஐயா, நான் கவிதையை எழுதும்போதுகூட இப்படியெல்லாம் நினைக்கவில்லை. கவிதையின் உயிரைக் கண்டு விட்டீர்கள்; கவிஞனின் உள்ளத்தையும் கண்டு விட்டீர் கள்!'' என்று சொல்லிக்கொண்டே என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். மாலை நேரங்களில் நடையிலேயே பல இடங் கட்குச் சென்று வருவோம். பல பொருள்களைப் பற்றிப் பேசிக்கொண்டே செல்வோம். சமுதாய சீர்திருத்தம் பற்றிப் பல திட்டங்களைச் சொல்வார். அவையெல்லாம் பயங்கர மானவை; நம் நாட்டுச் சூழலுக்குச் சிறிதும் ஒவ்வாதவை; பொதுவுடைமைப் போக்குடையவை. அவற்றை ஈண்டு எடுத்துக் காட்டக்கூட என் கை கூசுகின்றது.

குமிழி-90

## 26. பள்ளி விழாக்கள்

புதிதாகத் தொடங்கப்பெற்ற பள்ளியாதலால் விழாக் களை நடத்துவதற்குத் தகுந்த இடவசதி இல்லை. ஏதோ அப்போதைய ஏற்பாடுகளாகக் கொட்டகைகள் போட்டுக் கொண்டு இவ்விழாக்களை நடத்த வேண்டியதாயிற்று. வகுப்புகளில் மாணாக்கர் இலக்கியக்கழகங்களில் சிறுஅளருல் உள்ளூர்ப் பெரியார்களின் தலைமையில் நடத்தப்பெறும்

சிறு விழாக்களைத் தவிர, மிகப்பெரிய அளவில் நடத்தப் பெறும் விழாக்கள் இரண்டு. ஒன்று, விளையாட்டுகள் பற்றிய விழா. இரண்டு, பள்ளியில் ஆண்டுக்கொருமுறை நடத்தப்பெறும் பெருவிழா.

**விளையாட்டுகள் பற்றிய விழா :** இவ் விழா நடைபெறுவதற்கு ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற உடற் பயிற்சிக் ஆசிரியர் தேவை. இவர் உற்சாகமுள்ள இளைஞர்களாக வாய்த்து விட்டால் பருத்தி புடவையாகக் காய்த்த மாதிரி தான். நான் துறையூரில் பணியாற்றிய போது இத்தகைய ஆசிரியர்கள் கிடைக்கவே இல்லை. தொடக்கத்தில் ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்களை (Drill masters) நியமிக்க வேண்டியதாயிற்று. இவர்கட்கு உடற்பயிற்சியில் அநுபவம் உண்டே தவிர, பூப்பந்து, கூடைப்பந்து, உதைபந்து, (Foot ball), வளையப்பந்து (Ring tennis) போன்ற விளை யாட்டுகளில் ஆர்வம் அதிகம் இருப்பதில்லை. ஓட்டப் பந்தயங்கள், குண்டெறிதல், பல்வேறு வகைத் தாண்டல்கள் போன்ற விளையாட்டுகளை நடத்துவதில் பழக்கமும் இல்லை; பயிற்சியும் இல்லை. அருகிலுள்ள பெரம்பலூர், இலால்குடி, முசிறி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த ஒய்.எம்.சி.ஏ.யில் பயிற்சி பெற்ற உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களைத் துணைகொண்டு பல விளையாட்டுகளில் பயிற்சி தரப்பெற்றது. இவர்கள் மூலம் கருத்துகளைப் பெற்று ஓய்வுபெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்களைக்கொண்டே 'அசுவமேதயாகம்' செய்தது இன்றும் என் மனத்தில் பசுமை யாகவே உள்ளது. ஓய்வுபெற்ற ஆசிரியர்களாகப் பணி யாற்றியவர்கள் இரண்டு 'ராவ்ஜிக்கள்'; மாத்துவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் இரண்டாண்டுகள் பணியாற்றிய தாக நினைவு. இவர்களைத் தவிர போர்த்துறையில் பணி யாற்றித் திரும்பிய கிருட்டிணசாமி என்ற இளைஞர் ஒருவர் ஓராண்டு பணியாற்றினார். இவர்கள் காலத்தில் பெரம்பலூ

ரில் பணியாற்றிய B. நாராயணசாமி, முசிறியில் பணியாற்றிய எஸ். மருதமுத்து (இவர் பள்ளியில் வகுப்புத் தோழர்) இவர்களை வரவழைத்து இவர்கள் துணைகொண்டு ஆட்டப் போட்டி விழா ((Sports Day) பெருமளவில் நடத்தினேன். மிகவும் சிரமப்பட்டு B. நாராயணசாமியை ஓராண்டு விடுமுறைபெறச் செய்து தற்காலிகமாக நியமனம் செய்துகொண்டேன். அவரும் தனியார் பள்ளியில் தன் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்பு இருக்கும் என்று வந்து சேர்ந்தார். சட்டப்படி கிடைக்க வேண்டிய ஊதியம் இல்லை. வேறு ஆசிரியர்கள் குறைவான ஊதியத்திலிருக்கும்போது இவருக்கு மட்டிலும் உரிய ஊதியம் எப்படிக் கிடைக்கும்? நிர்வாகம் தர மறுத்ததால் ஓராண்டிலே பணியிலிருந்து தம்மைக் கழற்றிக் கொண்டுவிட்டார்.

பெருமுயற்சியுடன் நிர்வாகத்தின் இசைவு பெற்று பள்ளிச் செலவில் ஒய்.எம்.சி.ஏயில் பயிற்சி பெறுவதற்கு எஸ். தியாகராசன் (இளங்கலைப் பட்டம் பெற்றவர்) எல். மாணிக்கம் (இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றியவர்) இரண்டாண்டுகளில் அனுப்பிவைத்தேன். ஒவ்வொருவரிடமும் ஐந்தாண்டுகள் பணிபுரியவேண்டும்; இக்காலத்தில் எப்பொழுது விலக நேர்ந்தாலும் ரூ. 1000/-திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பந்தமும் எழுதி வாங்கிக்கொண்டேன். இவர்கட்கும் சரியான ஊதியம் கிடைக்கவில்லை. இவர்கட்குத் தந்தால் ஏனையோருக்கும் தரவேண்டுமல்லவா? உலகமே தலைகீழாக மாறினாலும் ஊதியத்தை உயர்த்துவதில் (விதிப்படி தருவதில்) பள்ளி ஆட்சியாளர் அசைந்து கொடுப்பதில்லை. அக்காலத்தில் உணவு பங்கீட்டு முறை நடைமுறையிலிருந்தது. அரிசி, சருக்கரை, துணி முதலிய பொருள்கள் அளவுடன்தான் கிடைத்தன. இந்த முறை எங்கள் பள்ளி ஆட்சியாளருக்கு அகத்தெழுச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டும்போல் தோன்றுகின்றது. இதனால்தான் விதிப்படி தரவேண்டிய

ஊதியத்தையும் 70 அல்லது 75 சதவிகிதத்திற்குக் குறைத்தே தரப்பெற்றது. வேலையில்லாத் திண்டாண்டத்தையும் ஆசிரியர்கள் வறுமையையுங் காரணமாக வைத்துக்கொண்டு நிர்வாகம் இயங்கியது.

ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் எல். மாணிக்கம் ரூ. 1000/- செலுத்தித் தம்மைப் பணியிலிருந்து கழற்றிக் கொண்டுவிட்டார். இவருக்கு வைரிசெட்டிப் பாளையப் பள்ளி நிர்வாகம் ரூ. 1000/- வழங்கி ஊதியத்திலும் பத்து ரூபாய் அதிகமாகத் தந்து இவரைத் தம் பள்ளியில் நியமித்துக் கொண்டது. இங்ஙனமே எஸ். தியாகராசனுக்கு ரூ. 1000/- தந்து, உயர்ந்த ஊதியமும் தந்து திருச்சி ஜமால் முகம்மது கல்லூரிநிர்வாகம் அவரைத் தம்கல்லூரிக்கு இழுத்துக் கொண்டுவிட்டது. இதில் எனக்கும் நிர்வாகத்திற்கும் பெருத்த ஏமாற்றம்.

இந்த இடத்தில் நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்று இக்காலத்தில் உலகமெங்கும் பேசப்பெறுகின்றது. இப்படிப்பட்ட பிரிவுகள் நிரந்தரமானவை அல்ல. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இந்தப் பிரிவு அமைந்து கிடக்கின்றது. ஊதியத்திற்காகப் போராடுவோர் தம்மைத் தொழிலாளர்கள் எனக் கருதுகின்றனர். இவர்களே சலவைக் கூலியும் முடி திருத்தும் கூலியும் உயரும்போது சங்கடப் படுகின்றனர். மனம் ஒப்பித்தர மறுக்கின்றனர். இந்தத் தொழிலாளர்களில் சிலர் கடும் உழைப்பில் பொருளாதார நிலையில் உயர்ந்து தனியாகத் தொழிலைத் தொடங்கும் போது, பலருக்கு வேலை வாய்ப்புத் தரும் நிலைக்கு வரும் போது முதலாளி நிலையை அடைகின்றனர்; இப்போது தம் கீழ் பணியாற்றும் தொழிலாளருக்குச் சரியான ஊதியம்

வழங்க மனம் வருவதில்லை. இப்படி மக்கட் கூட்டம் பண ஆசையாலும் (அது வாழ்க்கைக்குப் போதாத நிலையிலும்) போராட்டம் நடத்துகின்றனர். பணம் அதிகமாகக் கிடைக்கும்போது ஊதாரித்தனமாகச் செலவழிக்கின்றனர். தாம் வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் அநுபவிப்பதாக ஒரு மாயத்தில் மயங்குகின்றனர். எல்லாவற்றையும் அடிப் படைத் தேவைகளாகக் கருதி மயங்குகின்றனர். எல்லோரும் சிந்தனையின்றியே இயங்குகின்றனர், அல்லது தவறாகவே சிந்திக்கின்றனர் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

**உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டி ஆண்டு விழா:** ஒன்றிரண்டு ஆண்டுகள் மிகச் சிறிய அளவில் நடைபெற்றது. ஆடுகளன் வசதி இல்லாததால், புதிதாக இடம் வாங்கப் பெற்ற பிறகு பெரிய அளவில் ஏற்பாடு நடைபெற செய்யப் பெற்றது. 100 மீட்டர், 200 மீட்டர், 500 மீட்டர் ஓட்டங்கள், குண்டெறிதல், ஈட்டி எறிதல், முதலியவற்றில் போட்டிகள் நடைபெற்றன. பூப்பந்து, கூடைப்பந்து, வளையப்பந்து, கால்பந்து, வளையடிப்பந்து (Hockey), போன்ற விளை யாட்டுகளிலும் போட்டிகள் நடைபெறுகின்றன. பெரும் பாலும் இந்த விளையாட்டுப் போட்டிகள் பிப்பிரவரி மாதங் களில்தான் நடைபெற்றன. ஆடுகளனில் மேற்குப் புறத்தி லிருந்து கடுமையான வெயில் இருந்ததால், சுமார் 60 அடி நீளம், 10 அடி அகலம் அளவில் சாய்வாகக் கொட்டகைகள் போட்டு ஆசிரியர்கள், விருந்தினர்கள் அமர ஏற்பாடு செய்யப் பெற்றது. அவ்வப்போது விளையாட்டு முடிவுகள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கவும், அறிவிப்புப் பலகையில் (Score Board) எழுதுவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. நிதிவசதிக் குறைவு இருந்தாலும், ஆசிரியர் மாணாக்கர்களின் உற்சாகத் திற்குக் குறைவில்லாததால் அனைத்தும் சிறப்பாகவே நடை பெற்றன.

தாராளமாகவே பரிசுத் திட்டங்கள் இருந்தன. பள்ளி நூல்கள் விற்பனையில் ரூ. 300/- ரூ. 400/- அளவு கிடைக்கும் இலாபத்தில் பாதி விளையாட்டுப் போட்டிகளில் தரப் பெறும் பரிசுப் பொருள்களை வாங்குவதற்குச் செலவிடப் பெற்றது. விளையாட்டுகளுக்காகத் தண்டப்பெறும் நிதியி லிருந்து பரிசுப் பொருள்கள் வாங்கப் பெறுவதில்லை. போட்டிகள் நடத்த ஒரு குறிப்பிட்ட அளவு தொகை செலவிடப் பெற்றது. சில செல்வர்களிடம் நிதி பெற்று அவர்கள் பெயரில் சுழல் கோப்பைகள் (Rolling Cups) சுழல் கேடயங்கள் (Rolling Shields) அமைக்கப் பெற்றன. இன்று நகர்ப்புறக் கல்லூரிகளில் நடைபெறும் விழாக்கள்போல் சுமார் ஐம்பது ஆண்டுகட்குமேல் சிற்றூர்களில் நடத்தியதை இன்று (40 ஆண்டுகட்குப் பிறகு) நினைவு கூர்ந்து பெருமிதம் கொள்ளுகின்றேன். என்னுடைய உழைப்பு முழுவதும் பள்ளி முன்னேற்றத்திலேயே கழிந்ததை நினைவு கூர்ந்து களிப் படைகின்றேன். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு ஆட்படுத்தப்பெறுவதற்குக் காரணமாக இருந்த திருவருளை நினைந்து போற்று கின்றேன்.

**பள்ளி ஆண்டுவிழா :** முதல் இரண்டாண்டுகள் 'ஆண்டு விழா' என்ற பெயரில் ஒன்றும் நடைபெறவில்லை. வகுப்புகள் நடைபெறுவதற்கே இடவசதிகள் இல்லை; வகுப்புகளில் மாணவர்கள் அமர்வதற்கு இருக்கை வசதிகளும் இல்லை. இவற்றைச் சரிப்படுத்தவே என் காலமும் உழைப்பும் செல வழிந்தது. ஆகவே, விழாவைப்பற்றிச் சிந்திக்கவே நேரம் இல்லாது போயிற்று. சிற்றூரில் 'கஞ்சப் பிரபுக்களால்' தொடங்கப்பெற்ற புதிய பள்ளியில் பல பிரச்சினைகள். இவற்றைச் சமாளிக்கும் பொறுப்பு என் தலைமீது இருந்தது. இவ்வளவு சுமையும் தாங்க வேண்டியிருந்ததால்தான் என்னைத் 'தலைமை ஆசிரியர்' என்று அழைத்தனரோ என்று கூட நினைக்கத் தோன்றுகின்றது.

1943-44இல்தான் மூன்றாம் ஆண்டுவிழா முதன் முதலாகக் கொண்டாட வேண்டும் என நினைத்தேன். தக்கார் ஒருவர் தலைமையில் நடைபெற வேண்டும் என நினைத்தேன். அக்காலத்தில் குளித்தலை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் திரு. T. C சகந்நாத ரெட்டியார் என்பவர். நான் திருச்சியில் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது இலால்குடியில் பணி யாற்றினவர். இவர் மூலம் முயன்று தவத்திரு சித்பவாநந்த அடிகளை அழைத்தேன். அவர் கருணை கூர்ந்து ஒப்புக் கொண்டார் அக்காலத்தில் திருப்பராய்த்துறையில் இப் போதிருப்பது போன்ற இராமகிருஷ்ண தபோவனம் விவேகானந்த வித்தியாவனம் இல்லை. ஒரு சிறு குடிலை அமைத்துக் கொண்டு திருவுள்ளத்தில் இத்தகைய இரண்டு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று கருதிக்கொண்டு இருக்கவேண்டும். அக்காலத்தில் திருச்சி இ.ஆர். உயர்நிலைப் பள்ளியில் வாரந்தோறும் கீதைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார்: இவை அறிஞர்உலகத்தையும் ஆத்திக உலகத்தையும் கவர்ந்தன. திரு. சகந்நாத ரெட்டியார் இவற்றைக் குழித்தலையிலிருந்து வந்துகேட்டுப் பெரும் பயனை அடைந்தவர்.

அடிகள் ஆண்டு விழாவில் தலைமை தாங்கி நிகழ்த்திய உரை என்னை விவேகாநந்த அடிகளேமீண்டும் பிறவி எடுத்து பேசுவது போலிருந்தது. அன்றுமுதல் அவர் இறைவன் திருவடி நிழலை அடைந்தவரை அவர் எனக்கு விவேகாநந்த ராகவே காட்சியளித்தார். துறையூரிலிருந்த போதும் காரைக் குடியிலிருந்த போதும் ஆண்டுக்கு ஓரிருமுறை அடிகளைச் சேவித்து ஆசிபெற்று வந்தேன். அவரது அருட்கண் நோக்கால் பெற்ற பயனை இந்தக் குமிழியில் வெளியிட முடியாது; சொற்களால்விளக்க முடியாது. இந்த விழாவை

அடுத்து ஐந்து விழாக்கள் நடைபெற்றன. எல்லாம் மிகப் பெரிய அளவில் நடைபெற்றன. எல்லாவற்றையும் நினைவு கூர முடியவில்லை.

**டாக்டர் T.S.S. ராஜன்;** ஒரு விழாவுக்கு டாக்டர் T.S.S. ராஜன் (நலவாழ்வியல் அமைச்சராக இருந்தவர்) தலைமை யேற்றார். அக்காலத்தில் திரு. ஈய்ங்கோய் மலையில் வாசம். நேரில் சென்று வருவதை உறுதி செய்து கொண்டேன். டாக்டர் மிக சுவையுடன் உரையாடுபவர். இவரிடம் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது. அரசியல், சமூக இயல், நாட்டு நடப்புகள் போன்றவற்றில் ஏராளமான செய்திகளை அள்ளி வீசுவார். வீட்டில் அரிசனங்களைத்தான் வேலைக்கு வைத்திருந்தார். உணவு முறைகள், பரிமாறும் முறைகள் மேனாட்டு முறை உணவு விடுதிகளில் இருப்பது போல் இருந்தது. நல்ல பிசுகோத்துகள், ரொட்டித் துண்டு கள், உயர்ந்த அய்யங்கார் காஃபி இவற்றை ஒரு அரிசன சமையற்காரன் தான் பரிமாறினான். காவிரி நீரைத் தேக்கி ஒரு வாய்க்கால் வழியாகத் தம் பண்ணைக்குக் கொண்டு சென்று பண்ணையை மிகச் செழிப்புடையதாகச் செய் திருந்தார். பொட்டல் நிலத்தை வாங்கித் திருத்தம் செய்து வளமாக்கப்பெற்ற நல்ல பண்ணை இது. நெல்லும் வாழை யும் பயிரிடப் பெற்றிருந்தன. நிலத்தைச் சுற்றிக் காட்டி னார். இந்த விழாவுக்குப் பன்மொழிப் புலவர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியார் வந்திருந்தார். "கம்பனில் புதுமை" என்ற தலைப்பில் பேசியது நினைவில் உள்ளது. கம்பனில் புதுமையான பல இடங்களைக் காட்டி மகிழ்வித்தார். ஓரிடம் நினைவிற்கு வருகின்றது.

இராவணன் சீதாப்பிராட்டியைப் பற்றிக் கொண்டு தேரோடு போம்போது இரிசியமுகபர்வதத்தருகில் பிராட்டி தன் அணிகலன்களைக் கழற்றி எறிய, அவற்றை அங்கிருந்த வானரவீரர்கள் கண்டு பொறுக்கிச் சேமித்து வைத்திருந்த செய்தியைக் கம்ப நாடன்,

உழைவரின் உணர்த்துவது
உளதென்று உன்னியோ
குழைபொரு கண்ணினாள்
குறித்தது ஓர்கிலம்
மழைபொரு கண்ணிணை
வாரி யோடுதன்
இழைபொதிந்து இட்டனன்
யாங்கள் ஏற்றனம்[1]

[உழைவர் - தூதர்; உன்னி - கருதி; குழை - காதணி; பொரு - மோதுகின்ற; குறித்தது - கருதியது; இழை - ஆரணம்; வாரி - நீர்]

வைத்தனம் இவ்வழி
வள்ளல்! நின்வயின்
உய்த்தனன் தந்தபோது
உணர்த்தி யாலெனாக்
கைத்தலத்து அன்னவை
கொணர்ந்து காட்டினன்
நெய்தலைப் பால்கலந்
தனைய நேயத்தான்.[2]

[வைத்தனம் - பத்திரமாக வைத்திருக்கின்றோம்; இவ்வழி - இப்பொழுது; நினவயின் - உன்பக்கல்; உய்த்

1. கிட்கிந்தை - கலங்காண்-2- வனவாசம் புறப்பட்ட போது இராமபிரான் சொன்னப்படி தனது அணி கலன்கள் பெரும்பாலனவற்றை அந்தணர்க்குத் தானம் செய்துவிட்டு வந்த பிராட்டி, பிறகு வனத்தில் அத்திரி முனிவரின் ஆசிரமத்தில் அவர் பத்தினியான அநுசூயாதேவி அளித்த அணிகலன் களை அதுமுதல் அணிந்து கொண்டிருந்தனள் என்பது ஈண்டு அறியத் தக்கது.

2. ஷை. ஷை, 3.

தனன் தந்தபோது-கொணர்ந்து காட்டும்பொழுது, எனா - என்று சொல்லி; நெய்த்தலை - நெய்யுடன்; நேயம் - நட்பு]

இந்த அணிகலன்களைச் சுக்கிரீவன் இராமபிரானிடம் தர, அவற்றைக் கண்டு அவன், தன் தேவியின் அணிகலன்களே எனத் தேர்ந்து அடைந்த நிலையை அற்புதமாக வருணிப்பன்[3].

இந்த அணிகலன்களைப்பற்றிய அரிய தமிழ்ச் செய்தியொன்று முற்காலத்தே வழக்கிலிருந்ததென்பது புறநானூற்றால் அறியப்பெறுகின்றது. வறியரான புலவர் ஒருவர் தம் குடும்பத்துடன் சென்று வள்ளலான சோழன் ஒருவனைக் கண்டு அவனாற் பெரிதும் உபசரிக்கப் பெறுகின்றார். வள்ளல் புலவருக்கு அணிகலன் முதலிய பரிசுகளை நல்குகின்றான். அந்த அணிகலன்களை முறை தெரியாமல் அவ் எளிய புலவரின் குடும்பத்தார் தம் உறுப்புகளில் மாறி அணிய, இது அரசவைகளில் இருந்தோரிடம் பெருநகையை விளைவிக்கின்றது. இதைப் புலவரே கூறுகின்றார்:

தென்பரதவர்............ ..... ...
.......... ...................... . ... ...
எஞ்சா மரபில் வஞ்சிபாட,
எமக்கென வகுத்த வல்ல; மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்

3. ஷெ. ஷெ. 4-17. காண்க.

கடுந்தே றிராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
துறாஅ அருநகை யினிதுபெற் றிகுமே.[4]

[எஞ்சா - வலிகுன்றாத; மரபு - முறை; வகுத்தவல்ல - செயற்படாததான; அருங்கல - பெறற்கரிய அணிகலன்; வெறுக்கை - செல்வம்; விரல் செறி மரபின் - விரலில் அணியத் தருவன; செவித் தொடக்குநர் - காதில் அணிபவர்; செவித் தொடர் மரபின - காதில் அணிபவை; விரல் செறிக்குநர். விரலில் அணிபவர்; அரைக்கமை மரபின - இடுப்பில் அணிபவை; மிடற்று யாக்குநர் - கழுத்தில் அணிபவர்; மிடற்றமை மரபின - கழுத்தில் அணிபவை; அரைக்கு யாக்குநர் - இடையில் கட்டிக் கொள்பவர்; அரக்கன் - இராவணன்; நிலம்சேர் மதர் - நிலத்தில் வீழ்ந்த; பெருங்கிளை - பெரிய சுற்றம்; எவ்வம்-துன்பம்; அறாஅ-நீங்காத; அருநகை - அரிய மகிழ்ச்சி]

பிராட்டி இடைவழியில் கழற்றி எறிந்த அணிகலன்களை வானரர் கண்டெடுத்து அவற்றை அணியும் முறை அறியாமல் விரலணிகளைச் செவியிலும், செவியணிகளை விரலிலும், அரையணிகளைக் கழுத்திலும், கழுத்தணிகளை இடுப்பிலுமாக மாறியணிந்தனர் என்ற இராமாயணச் செய்தியை உவமைப்படுத்தியிருப்பதைக் காணலாம். இதனால் குரங்குக் கூட்டங்கள் அவ்வணிகலன்களைக் கண்டெடுத்தன என்பது, அவற்றைப் பிறர் பரிகாசிக்கும்படி மாறி அணிந்து கொண்டன என்பதும் தமிழ் நாட்டில் வழங்கின பழைய வரலாற்று வழக்காகவே தெரிகின்றது.

4. புறம் - 378.

பன்மொழிப் புலவர் காட்டிய இன்னொரு பாடல் :

கொற்றவர்க் காண்டு காட்டிக்
கொடுத்தலோ தடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற் பாற்றோ
உயிர்நிலை பிறிதும் உண்டோ?
இன்றைநாள் அளவும் அன்னாய்
அன்றுநீ இழிந்து நீத்த
மற்றைநல் அணிகள் காண உன்
மங்கலம் காத்த மன்னோ[5]

[கொற்றவன் - இராமன்; அடுத்த தன்மை - ஏற்பட்ட நிலை; பெற்றி - வகை; உயிர் நிலை - உயிர் உடலில் இருத்தல்; இழித்து - கழற்றி; நீத்த - எறிந்த; மங்கலம் - மங்கலநாண்; காத்த - காப்பாற்றின.]

அநுமன் சீதையிடம் தான் வந்த வரலாற்றைக் கூறியதாக அமைந்தது. மங்கல நாண் உள்ளபோதுதான் மகளிர் மற்றைய அணிகளை அணியும் உரிமை பெறுவர். மங்கல நாண் தான் மற்றைய அணிகளைக் காத்தற்குரியது. ஆனால், மங்கள நாணை மற்றைய அணிகள் காத்தன. இவை இல்லாவிடில் இராமபிரான் இறந்துபட்டிருப்பன் என்பதை வாயினால் சொல்லக் கூசி 'உன் மங்கலம் காத்த' என்று வேறு வகையிற் கூறினான் கம்பநாடன். இது ஒரு புதுமை. இப்படிப் பல எடுத்துக் காட்டுகள் காட்டி அற்புத மாகப் பேசினார் பன்மொழிப் புலவர். ஆனால் இந்த ஆராய்ச்சிப் பேச்சு கூட்டத்தில் எடுபடவில்லை.

அப்போது **'செங்குட்டுவன்'** பற்றிய நாடகம் (எங்கள் தமிழாசிரியர் வீ.சி. கிருஷ்ணசாமி எழுதியது - பாட்டுகள் உட்பட) நடைபெற்றது. அப்போது செங்குட்டுவனாக நடித்த **T.P. இராமசாமி** என்ற மாணவன் எல்லோருடைய

5. சுந்தர. உருக்காட்டு- 35.

மனத்தையும் கவர்ந்தான். நவாப் இராசமாணிக்கம் நாடகக் கம்பெனியில் பயிற்சி பெற்ற சிறுவர்கள்போல் நடித்தான். நாடகம் எழுதுவது, பாடல்கள் எழுதுவது, மாணவர்கட்கு நடிப்புப் பயிற்சி தருவது ஆகியவற்றில் மிக அற்புதமாகச் செயற்பட்ட தமிழாசிரியர் எங்கள் ஆசிரியர் குழுவில் இருந்தது பள்ளியின் நற்பேர் பெறுவதற்குக் காரணமாக இருந்தது. பாடம் சொல்லுவதிலும் மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார். மொத்தத்தில் அந்த ஆண்டு ஆண்டுவிழா மிகச் சிறப்பாக இருந்தது. டாக்டர் ராஜன் விழாவை மிகவும் பாராட்டி வாழ்த்து கூறி விடை பெற்றார். கையில் மகிழ்ந்வுந்து (Pleasure car) இருந்ததால் கடிதெனப் பிரிந்து சென்றார். ஒரு மணி நேரத்தில் திரு ஈய்ங்கோய் மலையைச் சென்று சேரமுடியும்.

பன்மொழிப் புலவர் ரெட்டியாரை இரண்டு மூன்று நாள் தங்க வைத்து விட்டேன். ஊருக்குள் - தொடக்க நிலை உயர்நிலைப் பள்ளியில் - பொது மக்களுக்காக ஒரு கூட்டம் ஏற்படுத்தினேன். 100 பேர்வரை கூடினார்கள். **'சிந்தாமணி'** என்ற தலைப்பில் சுவைகள் பற்றிப் பேசினார். இதுவும் ஆராய்ச்சிப் போக்கில்தான் அமைந்தது. வட மொழிக் கருத்துகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு சுவைகள், அவை தோன்றும் முறை, அவை கேட்போர் மனத்தில் நிலைபெறும் பாங்கு ஆகியவற்றை மிக அற்புத மாக விளக்கினாலும் சின்ன ஊரில் இலக்கியப் பேச்சுக் கேட்டுச் சுவைக்கும் பழக்கம் இல்லாதவர்கட்கு இதுவும் **'எட்டாப்பழமாகவே'** அமைந்துவிட்டது.

அந்தக் காலத்தில் துறையூரில் மிகச் செல்வாக்குடனும் பெரும் புகழுடனும் திகழ்ந்தவர் திரு **R. கிருட்டிணசாமி ரெட்டியார்**. தம்முடைய அருங்குணங்களாலும் பரோபகார சிந்தையாலும் பலர் இவரை விரும்பிப் புகழ்வார்கள். பன்

மொழிப் புலவருக்கு இவர் அய்யங்கார் சுவாமி ஒருவரால் வைணவ முறையில் அறுசுவை உண்டி தயார் செய்யச் செய்து நெல் அரைக்கும் ஆலையில் உள்ள ஒரு பெரிய மண்டபத்தில் விருந்தோம்பினார். ஊரில் முக்கியமானவர்கள் துறையூருக்கருகிலுள்ள சிற்றூர்களிலுள்ள ரெட்டியார் பிரமுகர்கள் இவர்களையும் அழைத்திருந்தார். இது மிகவும் மகிழ்ச்சிகரமான கூட்டமாக இருந்தது. எல்லோருடனும் பன்மொழிப் புலவர் கலந்துரையாடிய தமிழ் விருந்துக்குப் பிறகு உண்ணும் விருந்தில் கலந்து கொண்டனர். அக்கார அடிசில், புளியோதரை, தேங்காய்ச்சாதம், ததியோதனம், சில பொரியல்கள், உருளைக் கிழங்கு வறுகல், திருக்கன்ன வமுது (பாயசம்) உண்டதாக நினைவு. மூன்று நாள் துறையூரில் என் இல்லத்தில் தங்கி விடைபெற்றுத் திரு அரங்கம் சென்றார் பன்மொழிப் புலவர்.

இன்னொரு ஆண்டுவிழாவில் திருச்சி **கயிலை அனந்தர்** (திரு. சோமசுந்தரம் பிள்ளை - குற்ற வழக்கியல் வக்கீல்) தலைமை வகித்தார். இவர் நல்ல தமிழ் ஆர்வலர். நான் திருச்சியில் கல்லூரியில் பயின்றபோதே இவருடன் நன்கு பழகியுள்ளேன் (மாணவ நிலையில்). இந்த விழாவில் **டாக்டர் மு. வரதராசனார்** சிறப்புச் சொற்பொழிவாளராக வந்திருந்தார். பெரும்பாலும் இவர் அதிகமாகச் சொற்பொழிவுக்கு விரும்பிச் செல்வதில்லை. நான் ஒரு முறை சென்னை சென்றிருந்தபோது டாக்டர் மு.வ. அவர்களை அழைத்திருந்தேன். பிறகு வற்புறுத்தி எழுதியதால் ஒப்புக் கொண்டு எங்களைப் பெருமைப் படுத்தினார். விழாவில் மு.வ. வுக்காகப் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. பேச்சு எடுப்பாக இருந்தது; இலக்கியப் பேச்சுதான்; எதைப் பற்றிப் பேசினார் என்பதை நினைவுகூர முடியவில்லை.

திருச்சியிலிருந்து துறையூருக்கு வர வழி தெரியாமல் தொல்லைப் படுவார் என்று கருதி ஒருவித ஏற்பாடு செய்

திருந்தேன். அதிகாலையில் 5½ மணிக்கு வரும் விரைவு இருப்பூர்தி வண்டியில் திருச்சி வந்து மேல் வகுப்புப் பயணி கள் தங்கும் துறையில் காலைக் கடன்களையும் நீராடலை யும் முடித்துக் கொண்டு தயாராக இருக்கும்படியும், நான் ஒரு மாணாக்கனை அனுப்புவதாகவும் எழுதியிருந்தேன். அப்போது எங்கள் பள்ளியில் 9-வது வகுப்பில் (ஐந்தாம் படிவம்) **சீனி. இராச மாணிக்கம்** என்ற மாணவன் இருந் தான்; பொதுத் தொண்டில் விருப்பார்வமாக இருப்பான். 'வெட்டிக் கொண்டுவா' என்றால் 'கட்டிக் கொண்டு வந்து' விடுவான். இவனுக்கு டாக்டர் மு.வ. வைத் தெரியாது. ஒரு யுக்தி செய்தேன். அக்காலத்தில் சென்னையில் நடைபெற்ற மாகாணத் தமிழ் ஆசிரியர் மாநாட்டு அறிக்கையின் ஒருபடி என்னிடம் இருந்தது. அட்டையின் முன்பக்கத்தில் **ரா பி. சேதுப் பிள்ளை, டாக்டர்** மு.வ. சேர்ந்திருக்கும் படம் ஒன்றிருந்தது. இராச மாணிக்கத்துக்கு மு வவை அடை யாளம் காட்டி அனுப்பியிருந்தேன். அவனும் மணவாளன் ஓட்டுநராக இருந்த பேருந்தில் வசதியாகக் கொண்டு வந்து சேர்த்தான். அன்றிரவே திரும்புவதற்கும் இட ஒதுக்கீடு செய்து கொண்டுவந்திருந்தார். விழாவின் இறுதி கட்டத் தில் (நாடகம் தொடங்குவதற்கு முன்) இரவு உணவை முடிக்கச் செய்து மணவாளன் பேருந்தில் 'முன் இடத்தில்' அமரச் செய்து இருப்பூர்தி நிலையத்திலேயே கொண்டு சேர்க்கும்படி ஏற்பாடு செய்தேன். அவரும் இருப்பூர்தியில் ஏற்றிவிடும் பொறுப்பு வரையிலும் ஏற்று அதைத் திறம்படச் செய்தார். திரு. மணவாளன் நற்குணம் படைத்தவர். (இன்று 14-11-89 இல்) அவர் இல்லை. துறையூர் ஆசிரியர் பெரும்பாலோரிடம் நன்கு பழகுபவர், மாணாக்கர்கட்குப் பல உதவிகள் செய்பவர். என்மீதும் எங்கள் பள்ளி மீதும் அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர்.

இரண்டு ஆண்டு விழாக்களுக்கு நாமக்கல் கழக உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு P.R. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும் அவருக்கு வலக்கைபோல விளங்கிய சதாசிவம் என்ற ஆசிரியரும் வந்து சிறப்பித்தார்கள். அடியேனும் நாமக்கல் பள்ளி ஆண்டுவிழாக்களில் கலந்து கொள்வதுண்டு. திரு. சுப்பிரமணியப் பிள்ளையும் நானும் அக்காலத்தில் பைத்தியக்காரர்களாக இருந்தோம். பள்ளியைச் சொந்த நிறுவனமாகக் கருதி உழைத்தோம். இதை அக்காலத்தில் எங்கள் மாணவர்களாக இருந்தவர்கள் நினைவுகூர்வார்கள்.

இந்த விழாக்களுக்கு எல்லா வழக்கறிஞர்கள் மாவட்ட முனிசிப், தாசில்தார், சார்பதிவாளர் (Sub-Registrar), ஓவர்சியர், இவர்கள் எல்லோருக்கும் விழா அழைப்புகளை அனுப்பி வைத்துக் கொண்டிருந்தேன். விழாக்கள் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பெறும். இவர்களுள் சில வழக்கறிஞர்களின் பிள்ளைகள் பள்ளியில் படித்தனர். நானிருந்தவரை பெரும்பாலும் அரசுப் பணிகளில் இருந்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் படித்ததாக நினைவு இல்லை. திரு சுந்தரராம அய்யரின் மகள் மட்டிலும் முதல், இரண்டாம் படிவங்களில் படித்ததாக நினைவு. இவர் மட்டிலும் விழாக்களுக்கு வருகை புரிவதுண்டு. பள்ளிக்கு எதிர் வரிசையில் உள்ள இரண்டு வீடுகட்கு உரிய வழக்கறிஞர்கள் நான் இருந்தவரை ஒரு விழாவிற்குக் கூட வரவில்லை. பள்ளிக்கு அருகிலுள்ள சிவராமகிருஷ்ண அய்யர் மட்டிலும் வருவார். பி. அரங்கசாமி ரெட்டியார் வருகை புரிவதில் தவறுவதில்லை. எங்கள் பள்ளித் தாளாளர் பி.எம். வேங்கடாசலதுரை மட்டிலும் தவறாது 'பிரசன்னமாக' இருப்பார். 'பிரசன்ன முத்து வேங்கடாசல துரை' அல்லவா? பள்ளித் தாளாளரும் இவர்தானே. M.R. இராசகோபால் பிள்ளையை ஒரு

சமயம் பார்த்தபோது 'விழாக்களுக்கு ஒரு தடவை கூட வரவில்லையே? ஏன்?' என்று கேட்டேன். 'உங்கள் துறையும் நானும் எதிரிகள். அவரிடம் பேசுவதில்லை. அவர் முகத்தில் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க விருப்பமில்லை. நீங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள் என்பதை அறிவேன்' என்றார். மூன்றாண்டுகள் பார்த்தேன்; வராதவர்களின் பெயர்களைப் பதிவேட்டிலிருந்தே நீக்கிவிட்டேன். 'வீண் சிரமம் வேண்டாம்' என்பது என் கொள்கையேயன்றி அனுப்பாதது வெறுப்பாலன்று. வழக்கறிஞர்கள் (பிராமணர்கள்) இருவர் வீட்டில் நடைபெற்ற திருமணத்திற்கு அழைப்பு அனுப்பி இருந்தனர். சென்று வந்தேன். அவர்கள் ஒன்பது ஆண்டுகளில் ஓராண்டில் கூட வாராதது வருத்தம்தான். பெற்றோர்கள் என்ற முறையிலாவது வந்திருக்கலாம். அதையும் கருத்தில் கொள்ளாதிருந்தது தான் வியப்பு. இந்தப் பள்ளியில் ஓர் பிராமண இளைஞன் தலைமையாசிரியனாக இருந்திருந்தால், பெரும்பாலோர் வந்திருப்பர் என்பது என் கணிப்பு. இந்த உட்கிடக்கையையெல்லாம் நன்கறிந்த தந்தை பெரியார் நீண்ட காலம் வாழ்ந்திருந்து இந்த அக்ரகாரக் கோட்டையைத் தகர்த்தெறிய வேண்டும் என்று அப்போது நினைத்துக் கொண்டேன். இன்றைய நிலை வேறு. பிராமண இளைஞர்களில் பெரும்பாலோர் நன்கு கலந்து பழகுகின்றனர். வெளித் தோற்றத்திலாவது நன்றாகப் பழகுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

குமிழி—91

## 27. சித்பவானந்த அடிகள்

**1940**-வாக்கில் சித்பவானந்த அடிகள் பெரிய நாய்க்கன் பாளையத்தில் தொடங்கிய பணியைத் துறந்து திருச்சியருகேவுள்ள திருப்பராய்த்துறையில் தம் தவப்பணி

யைத் தொடங்கியதாக நினைவு. சிறிது காலம் வாரந்தோறும் இ.ஆர். உயர்நிலைப் பள்ளியில் நிகழ்த்திய கீதைப் பேருரையும் சிறிது காலம் திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் தாயுமான அடிகளின் பாடல் விளக்கமும் அடிகளை மக்கட்கு நன்முறையில் அடிமைப்படுத்தின.

அடிகளார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். திரு. சி. சுப்பிரமணியத்தின் சிற்றப்பா. மாநிலக்கல்லூரியில் இளங்கலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது மேனாட்டு முறையில் உடுத்திக் கொண்டிருப்பவராம்; பழக்க வழக்கங்களும் மேனாட்டு பாணியிலேயே அமைந்திருந்தனவாம். ஒருசமயம் கல்கத்தா இராமகிருஷ்ண மடத்திலிருந்து வந்த துறவியொருவரின் சொற்பொழிவைக் கேட்டு, மனம் மாறி, கல்வியையும் நடுவிலேயே விட்டுத் துறவுக் கோலத்தை மேற்கொண்டதாகச் சொல்வார்கள். கல்கத்தாவில் இருந்த போது இவருடைய பாட்டனார் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையில் இருப்பதைத் தெரிவித்தார்களாம். இவர் துறவிக்கு எந்தவித பந்த பாசமும் இல்லையென்று சொல்லிவிட்டுப் பாட்டனாரைப் பார்க்க வரவில்லையாம்.

இவர் திருப்பராய்த்துறையில் இராமகிருஷ்ண தபோவனத்தையும், விவேகாநந்த வித்தியாவனத்தையும் நிறுவியது திருச்சி மாவட்ட மக்கள் செய்த தவப்பயன். திருப்பராய்த்துறை சம்பந்தர் (1.135), நாவுக்கரசர் (5. 30) இவர்களின் பாடல் பெற்ற தலம். அகண்டகாவிரியின் தென்கரையில் இயற்கைச் சூழலில் அமைந்த அற்புதமான இடம். இருப்பூர்தி வழியில் அமைந்த இடம். தொடக்கக் காலத்தில் எலமனூர் நிலையத்தில் இறங்கி 2 பர்லாங் நடந்து வர வேண்டிய நிலை. பின்னர் திருப்பராய்த்துறையே இருப்பூர்தி வண்டிகள் நிற்கும் இடமாயிற்று. எல்லாம் அடிகளாரின் திருப்பணியேயாகும்.

முதன்முதலாகச் சிறியகுடிலை அமைத்துக் கொண்டு தொடங்கப் பெற்ற இராமகிருஷ்ண தபோவனம் மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது. இதன் ஆதரவில் தொடங்கப் பெற்ற விவேகாந்தர் வித்தியாவனம் (உயர்நிலைப்பள்ளி) சுமார் ஐம்பது ஆண்டுக் காலமாகச் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றது. தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து வரும் சிறுவர்கள் இங்குக் கல்வி பெற்று நல்லொழுக்க முள்ளவர்களாகத் திகழ்கின்றனர். 1943-இல் துறையூர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் அடிகள் பங்கு பெற்றதி லிருந்து அடியேன் அடிகளின் திருவருளுக்குப் பாத்திர மானேன். அடிகளார் தமிழகமெங்கும் நடத்தி வந்த மூன்று நாள் அந்தர்யோகத்தினால் தமிழகத்தில் எண்ணற்ற சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் ஆன்மிகத் துறையில் நாட்டமுடையவர்களாயினர்.

நான் துறையூரில் பணியாற்றியபோது—1945- என நினைக்கின்றேன் - தபோவனத்தில் நடைபெற்ற மாணவர்க் கென நடத்தப்பெற்ற அந்தர்யோகத்தில் மூன்று மாணவர் களைப் பங்கு கொள்ளச் செய்தேன்; அடியேனும் பங்கு கொண்டேன்; அன்றுமுதல் அடிகளாரின் திருவருள் என்மீது பாய்ந்து வருகின்றது. ஒரு சமயம் அடிகளார் என்னிடம் சொன்னது: 'ரெட்டியார், உங்கட்கு மனநிலை சரியாக இல்லை என்ற நிலை ஏற்பட்டால் நீங்கள் தபோவனத்தில் வந்து 15 நாட்கள் தங்கிப் போகலாம்' என்று, அடிகளாரின் திருவருளால் இன்றுவரை (1989) என் மனநிலை கெட வில்லை: நானும் அங்கு 15 நாட்கள் தங்கவும் இல்லை. ஆயினும் திருப்பதி சென்றபிறகும் கூட திருச்சிப் பக்கம் வரும்போது அடிகளாரைச் சந்தித்து அவர்தம் ஆசிபெறு வதில் தவறுவதில்லை. அந்தர்யோகத்தின் போது 'கேள்வி-நேரத்தில்' அடிகளாரை வினவிய வினாவும் அவர் அளித்த விடையும் இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.

**வினா :** சுவாமி, அத்வைதம், துவைதம், விசிட்டாத் வைதம் இவற்றிற்குள்ள வேறுபாடு என்ன?

**விடை :** இந்த வினாவை விவேகாநந்தரே இராமகிருஷ்ண ரிடம் கேட்டார். அவர் தந்த விடையையே இப் போது தருகின்றேன். தத்துவ நிலையில் அறிந்து கொள்ள வேண்டுமானால் தத்துவ ஆராய்ச்சி வேண்டும். சுருக்கமாகச் சீவான்மாவிற்கும் பரமான் மாவிற்குமுள்ள உறவுபற்றி இம்மூன்று தத்துவங்களி லும் கூறப்பெறுள்ளதை மட்டிலும் கூறுகின்றேன்.

ஒருவர் தொலைதூரப் பயணத்தின்போது 'கட்டமுது' எடுத்துச் செல்லுகின்றார். இங்கு இரண்டு பொருள்கள் (Entities) உள்ளன. ஒன்று, எடுத்துச் செல்பவர்: மற்றொன்று, கட்டமுது ஆளைப் பரமான்வாகவும், கட்டமுதைச் சீவான்மா வாகவும் கொள்க. இரண்டும் தனித் தனியாக இருப்பது **துவைதம்** (துவைதம்-இரண்டு) சில கல் தொலைவு நடந்து செல்லும்போது அவருக்குப் பசி வருகின்றது. கட்டமுதை உண்கின்றார். கட்டமுது அவர்வயிற்றை அடைகின்றது. இப்போதும் இரண்டும் தனித்தனியாகவே உள்ளன. நிலையில் தான் வேறுபாடு. இது **விசிட்டாத்வைதம்.** இன்னும் சிறிது தூரம் நடந்து செல்லும்போது கட்டமுது செரிமானம் ஆகிவிடுகின்றது; கட்டமுதின் உருவம் இல்லை. அஃது ஆளின் உடலில் ஐக்கியமாகி விடுகின்றது. இது **அத்வைதம்.** இங்கு சீவான்மா, பரமான்மா என்ற வேறுபாடே இல்லை.

திருப்பதி சென்ற பிறகு தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது அடிகளார் தந்த விளக்கம் என் ஆராய்ச்சிக்கு உந்து விசையாக—அடிப்படையாக—இருந்து உதவி வருகின்றது. நான் அந்தர்யோகத்திற்குச் சென்றிருந்தபோது பள்ளியைச்

சுற்றிப் பார்த்தேன். இதன் தலைமையாசிரியர் இராம கிருஷ்ணன் என்னோடு இருந்து எல்லாவற்றையும் காண்பித்தார்.

பள்ளிக் கட்டடங்கள் படுக்கையில் அமைந்துள்ளன. சுமார் ஆறு அடி மேடையின்மீது இரும்புத் தூண்கள் நாட்டப்பெற்று அவற்றின் மீது அஸ்பெஸ்டாஸ் தகரங்களால் வேயப்பெற்றுள்ளன. மாணாக்கர் இருக்கைகள், ஆசிரியர் இருக்கை, கருப்பலகை அமைப்பு இவை முறைப்படி நன்கு அமைந்துள்ளன. இப்படித் தனித் தனியே 25 அடி தூரங்களில் வகுப்பறைகள் உள்ளன. வெள்ளக்காலங்களில் வெள்ளம் வகுப்பறைக்குள் நுழைந்து வெளியேறும். அப்போது ஒன்றிரண்டு வாரங்கள் பள்ளிக்கு விடுமுறை. இந்தப் படுகையில் காய்கறித் தோட்டங்கள்; மாணவர் விடுதிக்கு வேண்டியவை இங்குக் கிடைக்கும். போதாதவற்றிற்கு மட்டிலும் திருச்சியிலிருந்து தருவிக்கப்பெறும். நீச்சல்குளம் ஒன்று படுகையிலேயே அமைக்கப்பெற்றுள்ளது. மாணவர்கட்கு நீந்தத் தெரிய வேண்டும்; இதில் பயிற்சி அளிக்கப்பெறும்; நீச்சல் குளத்தைச் சுற்றியுள்ள மேடைகளில் குழாய் அமைப்புகள். சோப்பு போட்டு துணிகளை இவற்றில்தான் தோய்த்துக் கொள்ளவேண்டும். படுகையில் ஒரிடத்தில் 20,30 பேர்கட்கென்று வரிசையாக இரண்டு வரிசைகளில் கழிப்பிடங்கள்; தனித்தனியாகத் தடுப்புச்சுவர்களுடன் கூடியவை. வெளியிலிருந்து தண்ணீர் ஊற்றிவிட்டால் மலங்கள் அடித்துக் கொண்டுபோய் கழிப்பிடம் தூய்மையாய்விடும்.

**உணவு விடுதி :** கைக்குத்தல் அரிசியில் உணவு தயாரிக்கப் பெறுகின்றது. இந்தஅரிசி மர எந்திரத்தைச் சுழற்றுவதால் தயாரிக்கப் பெறும் அரிசி. இட்டிலி, தோசை இவற்றிற்குப் புழுங்கலரிசியும் இப்படியே தயாரிக்கப் பெறுகின்றது. இவற்றிற்கு மாவு அரைக்கப்பெறும் இயந்திரங்கள் உள்ளன.

மாணாக்கர்கள் தட்டில்தான் உண்பர்; உண்டபின் தட்டு களைஅவரவர்களே தூய்மை செய்து, இவற்றிற்கென ஒதுககப் பெற்ற அறையில் உள்ள நிலை தாங்கியில் (Stand) வரிசையாக அவரவர் பெயர்கள் பொறிக்கப் பெற்றுள்ள இடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உணவு பரிமாறு வதற்கென்று சிறு சிறு மாணவர் அணிகள் (Squads) பிரிக்கப் பெற்று செயற்படுகின்றன. வாரத்திற்கு ஓரணிவீதம் இப் பணியை மேற் கொள்ளும். காலை, நண்பகல், மாலை, இரவு என்ற வேளைகட்குத் தனித்தனி அணி உண்டு.

எல்லோருக்கும் இரவு உணவுடன் பால் அருந்துவது கட்டாயமாக உள்ளது. மோருக்குப் பதிலாக இளஞ்சூடான சர்க்கரை கலந்த பால் பரிமாறப்பெறும். உணவு உண்ணத் தொடங்கும்போது மந்திரம் சொல்லித்தான் உண்ண வேண்டும் என்பது விதி. எல்லோரும் உண்டபின்னரே எழுந் திருத்தல் வேண்டும். அநுமன்மீதுள்ள ஒரு சிறு தோத்திரம் சொல்லி மிக்க மகிழ்ச்சியுடன் எழுந்திருப்பதே பார்ப்பதற்கும் கேட்பதற்கும் கவர்ச்சிகரமாக இருக்கும். நாம் சிறுவர்களாக இருந்தபோது இத்தகைய பள்ளியும் விடுதியும் இல்லையே என்ற ஏக்கம் இருப்பதை உணர்கின்றோம். சோற்றில் கஞ்சி வடிப்பதில்லை. இத்தனை அங்குல உயரம் இருந்தால் அரிசி ஒரே சீராக வேகும் என்று கணக்கிடம் பெற்ற பெரிய போவணிகளில் அரிசி போடப் பெற்று வேகவைக்கப் பெறும். உணவு தயாரிக்கப்பெறும் அடுப்பில் போவணி வைக்கப் பெற்றால் சரியாகப் பொருந்துமாறு இரும்புப்பட்டைகளா லான வளையங்கள் பொருத்தப் பெற்ற அடுப்புகள் இவை. அனல் வெளியில் தாவி வெப்பம் வீணாகாதவாறு அமைப்பு களையுடையவை. சவுக்குக் கட்டைகளை அரைசாண், முக்கால்சாண் அளவுகளில் அறுக்கப் பெற்று அடுப்புக்குள் தள்ளி இரும்புத் தகட்டாலான மூடியால் மூடப்பெறும். இதனால் அனல் வீணாவதில்லை.

காஃபி, தேநீர் போன்ற பானங்கள் வழங்கப்படுதல் இல்லை. அவற்றிற்குப் பதிலாக மால்ட்கலந்தபால் பானமாக வழங்கப்பெறும். காலைச் சிற்றுண்டியுடனும், மாலை சிற்றுண்டியாக வழங்கப்பெறும் சுண்டலுடனும் (பச்சைப் பயறு, தட்டைப்பயறு, கொண்டைக் கடலை, மொச்சை போன்றவை) இப்பானம் வழங்கப்பெறும். வெளியில் எதையும் வாங்கித் தின்னக் கூடாது என்பது விதி, ஏதாவது, நோய் தொற்றினால் அதன் மூலத்தைக் கண்டறிய முடியாது என்பதற்காகத்தான் இந்த விதி. ஆனால், சிறுவர்கள் துட்டு கொடுத்து வாங்கி உண்ண வேண்டும் என்று விரும்புவது இயல்பு. அதனால்தான் அடிகள் பெற்றோர்கள் தம் சிறுவர் களிடம் பைப்பணமாக (Pocket money) எதுவும் தரக் கூடாது என்று சொல்லியிருந்தாலும் அந்தக் காலத்தில் வாரம் ரூ 2/- வீதம் வைத்துக் கொள்ள அனுமதித்தார். இவர்கள் வாங்கி உண்பதற்காக சாக்லட், மிளகு மிட்டாய் போன்ற இக்காலப் பொருள்கள் கிடைக்குமாறு தபோவனத் திற்குள்ளே ஒருகடை திறந்து வைக்க ஏற்பாடு செய்தார். இது ஒரு சாமியார் பொறுப்பில் விட்டு வைத்தார். உணவு விடுதியில் உணவு தயாரிக்கும் முறை ஒரு சாமியாரின் பொறுப்பிலிருந்தது.

தபோவனம், உணவுவிடுதிக்குப் பால் வேண்டுமல்லவா? காங்கேயம், ஜெர்ஸி, சீமைப்பசு மாடுகள் 30 வரை பராமரிக் கப் பெற்றுவந்தன. இவற்றைக் குளிப்பாட்டுவது, உயர்ந்த வகைத் தீவனங்கள் தருவது, பச்சைப்புல் போன்றவற்றை இடுவது போன்ற பொறுப்புகள் ஒரு சாமியார் கவனித்து வந்தார். காய்கறித் தோட்டம் ஒருவர் பொறுப்பிலும். நீச்சல் குளத்தைக் கவனிப்பது ஒருவர் பொறுப்பிலும், உணவு தயாரிப்பதற்கு வேண்டிய மாவு முதலியவை தயாரிப்பது ஒருவர் பொறுப்பிலுமாக இருந்து வருகின்றது, ஒவ்வொருவர் திறமைக்கேற்ப பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப் பெற்றிருந்தன.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்;[1]

என்ற குறட்பாவிற்கு எடுத்துக்காட்டு அடிகள் என்று கூறின் அது மிகையன்று.

**ஒழுங்குமுறை:** மாணவர்களிடம் ஒழுங்கு முறையை வளர்ப்பதில் அடிகளார் கண்ணும் கருத்துமாக இருந்தார். அதிகாலையில் எழுந்து படித்தல், ஆற்றிற்குச் சென்று நீராடுதல், சிற்றுண்டி அருந்தல், ஆசிரியர்கள் தந்த வீட்டு வேலைகளைக் கவனித்தல், பள்ளிக்குப் போதல் - இவற்றிற் கெல்லாம் காலவரையறை வகுக்கப் பெற்று அதன்படி மாணாக்கர்கள் நடந்து வந்தனர். சிற்றுண்டி முதலிய வற்றை முடித்துக் கொண்டு வீட்டு வேலை செய்யாதவர்கள் பொது மண்டபத்திற்கு முற்பகல் 8-30க்கு வந்து செய்ய வேண்டும். செய்வதில் சிரமம் இருப்பின் இதைக் கவனித்து உதவுவதற்கென்றே சில ஆசிரியர்கள் அந்த நேரத்திற்கு வருவர்: இம்முறையை 'மேற்பார்வைப் படிப்பு' (Supervised Study) என்ற முறையை ஒத்ததாகக் கொள்ளலாம். சிலருக்குச் சில பாடங்களில் பிற்போக்கு நிலை ஏற்பட்டிருந் தால் அவர்கட்குத் தனியாகக் கவனிக்கவும் ஏற்பாடு உண்டு. இதற்கென்று ஓரளவு கட்டணம் ஆசிரியர்கட்குத் தரப் பெறும்.

9-30 மணியிலிருந்து மாணவர்கள் பள்ளியை நோக்கிச் செல்வர். ஒவ்வொருவரும் அடிகள் இருக்கும் அறைக்குச் சென்று அவரைப் பார்த்த பிறகுதான் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற முறையும் உண்டு. அடிகள் ஒவ்வொரு வரையும் கவனிப்பார்; ஆடையில் தூய்மை, சட்டையில் பொத்தான்கள் பொருத்தப் பெற்றுள்ளனவா, நெற்றியில் விபூதி, குங்குமம், சந்தனம் ஏதாவதொன்று இடப்

1. குறள் - 517 (தெரிந்துவினையாடல்)

பெற்றுள்ளனரா என்று கவனிப்பார். சத்துக் குறைவுள்ளவர்கட்கு சத்துள்ள மாத்திரை, இலேகியம் முதலியவை அடிகளாலேயே தரப்பெறும். கீழ்வகுப்பு மாணவர்களாக இருப்பின் அவரே அவர்கள் வாயில் போட்டு மகிழ்வார். இவ்வாறு மாணவர்கள் அடிகளாரைப் பார்த்துச் செல்வது 'மெய்காட்டி' என்ற பெயரில் வழங்கப் பெற்று வருகின்றது.

1945-இல் நான் அந்தர் யோகத்திற்காகச் சென்றிருந்த போது தபோவனப் பொறுப்புகளையும் கவனித்துக் கொள்வதற்கு 12 பேர்களை நியமித்து இருந்தார். அப்போது இவர்கள் வெள்ளாடை உடுத்திய தொண்டர்கள். அப்போது இரண்டாண்டுகட்கு முன்னர் மாணவர்கள் அந்தர் யோகத்தில் பங்கு பெற்றவர்களில் இருவர் இலால்குடி உயர்நிலைப் பள்ளியில் படித்தவர்கள். ஒருவர் பெயர் ராமுடு; மற்றொருவர் கிட்டு (?), இவர்கள் ஒன்றுவிட்ட சகோதரர்கள். இவர்கள் தமக்குரிய சொத்தின் பங்கைத் தபோவனத்தில் செலுத்திவிட்டுத் துறவிகளாகும் நோக்கத்துடன் வந்து சேர்ந்தவர்கள். ராமுடு தபோவன அலுவலக மேலாளர் பொறுப்பில் இருந்தார்; கிட்டு மாணவர்கட்கு வேண்டும் பொருள்களை விற்கும் கடையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

**நினைவில் உள்ள சில நிகழ்ச்சிகள்:** தபோவன வாழ்க்கையை நினைக்கும்போது சில நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன.

(1) தொடக்கக் காலத்தில் விடுதி மாணவர்களைத் தவிர ஊர் மாணவர்கள், பக்க ஊர் மாணவர்கள் சேர்ந்து படித்தனர். இது மாணவர் ஒழுங்குமுறைக்குச் சிரமமாக இருந்தது. இதனால் திருப்பாராய்த் துறை (ஊரில்) இத்தகைய மாணவர்க்கெனத் தனிப் பள்ளியைத் தொடங்

இனர். பி.எஸ்சியில் என் வகுப்புத் தோழராக இருந்த சண்முகம் என்பவர் இப்பள்ளியின் தலைமையாசிரியராக இருந்தார்.

(2) ஒரு சமயம் 4, 5, 6ஆம் படிவங்களில் பிரச்சினை எழுவதால் மகளிர் கலந்து படிக்கும் முறையை நீக்க நினைத்தார். ஓரளவு குடியரசு முறையை மேற்கொள்ளும் அடிகளார் மேல் வகுப்பு மாணவர்கள் குழுவில் இப் பிரச்சினையை வைத்து அவர்கள் கருத்துகளைக் கேட்டார். எவரும் துணிவாகக் கூறலாம் என்றும் உரிமை கொடுத்தார். ஒரு மாணாக்கன் எழுந்து ''மகளிர் ஒன்று சேர்ந்து படிப்பதால் சிலர் மனம் தவறான சிந்தனையில் இறங்கும். இதற்கு வழியமைத்து விட்டு எங்கள்மேல் குற்றப் பத்திரிகை வாசிப்பதைவிட மகளிர் கலந்து படிக்கும் முறையை அறவே நீக்குதல் நன்று'' என்று சொல்ல, எல்லோரும் ஒருமனதாக ஒப்புக் கொண்டனர். அடுத்த ஆண்டே ஆடவர்-மகளிர் கலந்து படிக்கும் முறை நீக்கப் பெற்றது.

(3) ஒரு சமயம் கழிப்பறைக்கு நீர் ஊற்றுவதை மாணாக்கர்கள் மறுத்தனர். அடிகளார் இதற்கு ஆள் போட்டுச் செய்யத் தெரியாதவர் அல்லர். முறையாகவுள்ள இதில் ஒரு மாணவருக்கு 4, 5 தடவை வரும். அடிகள் ''மாணவர்களை நோக்கி'' நீங்கள் செல்வர் வீட்டுப் பிள்ளைகள். இப்பணியைச் செய்தல் நன்றன்று. நான் துறவி; எனக்கு உயர்ந்தது, தாழ்ந்தது என்ற வேறுபாடு இல்லை. இப்பணியை நானே செய்கின்றேன்'' என்று கூறி பணியில் இறங்கினார். மாணாக்கர்கள் அழாத குறையாக அடிகளாரை விலக்கித் தாமே செய்யத் தொடங்கினர்.

(4) விடுதி மாணவர்க்கு உடற் பயிற்சி அவசியம் என்ற கட்டாயம் இருந்தது. சுமார் 500 மாணவர்கள் ஒரே சமயம்

உடற்பயிற்சி செய்வதற்கேற்ப தூண்களில்லாமல் அஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு வேயப்பெற்ற ஒரு பெரிய கொட்டகை போட்டார். மழை காலத்திலும் உடற்பயிற்சி, செய்வது கட்டாயமாக இருந்தது. உடற்பயிற்சி ஆசிரியர் இதைக் கவனித்து வந்தார்.

(5) ஒரு சமயம் அந்தர்யோகத்திற்கு ஆறு வயது சிறுவன் ஒருவன் வந்திருந்தான். இவன் முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜாவின் பேரன். வேடிக்கையாகப் பேசுவான். ஆற்றில் நீராடும்போது அடிகளார் முதுகின்மீது கூட ஏறி விளையாடுவான்; சிறு பிள்ளைகட்குத் தம் இச்சையாக விளையாடும் உரிமை இருந்தது. நான் இப் பையனை, ''தம்பீ, உன் தாத்தா ராஜா வேலையை விட்டு ஏன் மந்திரி வேலைக்கு வந்தார்?'' என்று கேட்டேன். உடனே அவன், ''ஐயா, ராஜாவுக்கு யோசனைகள் கூறுபவர் மந்திரிதானே. இதிலிருந்து மந்திரீதானே உயர்ந்தவர். இதனால்தான் என் தாத்தா மந்திரியானார்'' என்று பதிலிறுத்தான். பையனுக்கு ராஜா, மந்திரி, அரசு முறைபற்றித் தெரியாமலிருப்பினும் அவனுடைய சாதுர்யமான பதில் என்னை வியக்க வைத்தது.

1966-ஏப்ரல் மாதம் என் இளைய மகனைப் பள்ளியில் சேர்க்கும் விஷயமாக அடிகளாரைப் பார்க்கச் சென்றிருந்த பொழுது அப்பொழுது தபோவனத்தில் பணியாற்றிய 12 பேருக்கும் கல்லாடை தரப்பெற்றுத் துறவிகள் கோலத்தில் இருந்தனர். அப்போது ராமுடு என்பவர் 'சாந்நாநந்தா' என்ற பெயரில் விளங்கினார். அப்பொழுதும் அலுவலக மேலாளர் பொறுப்பும் அவரிடம்தான் இருந்தது. நான் திருப்பதியிலிருந்தபோதும் (1976), சென்னைக்கு வந்த பிறகும் (1980 என்பதாக நினைவு) இவரைத் தலைமைச் செயலகத்தில் சந்திக்கும் பேறு ஏற்பட்டது. இருவரும்

சிற்றுண்டி சாலையில் சிற்றுண்டி, காஃபி கொண்டோம். இன்று (நவம்பர்-1989) அடிகளும் இல்லை; சாந்தாநந்தாவும் இல்லை. அடிகள் சில ஆண்டுகட்குமுன் தான் இறைவன் திருவடிப் பேறு அடைந்தார்கள்; சாந்தாநந்தா ஏழு ஆண்டு கட்கு முன் திருநாடு அலங்கரித்தார். அடிகளை 1966-க்குப் பிறகு (ஓர் இருபதாண்டுக் காலம்) சந்தித்து ஆசி பெறும் பேறு பெறவில்லை.

*பொருளுடை யோரைச் செயலினும்*
*வீரரைப் போர்க்களத்தும்*
*தெருள்உடை யோரை முகத்தினும்*
*தேர்ந்து தெளிவதுபோல்*
*அருள்உடை யோரைத் தவத்தில்*
*குணத்தில் அருளில் அன்பில்*
*இருள்அறு சொல்லினும் காணத்*
*தகும்கச்சி ஏகம்பனே.*[1]

— பட்டினத்தார்

**குமிழி—92**

## 28. மூன்று மாநாடுகள்

நான் துறையூரில் பணியாற்றியபோது தமிழகத்தி லுள்ள தமிழறிஞர்களையெல்லாம் பள்ளிக்கழைத்து பேசச் செய்து மாணவர்க்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்ற பேரவா என்னிடம் நிரந்தரமாகவே குடிகொண்டிருந் தது. எப்படியோ அண்மையிலிருந்தவர்களை வரவழைக்க முடிந்தது; தொலைவிலிருந்து டாக்டர் மு.வ. (அக்காலத்தில் அவர் டாக்டர் இல்லை) பன்மொழிப் புலவர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியார் இவர்கள் சென்னையிலிருந்து வந்து

1. திருஏகம்ப மாலை-15

போனார்கள். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை இவர்கட்கு எழுதினேன். அவர்கள் கேட்ட பயணப்படி, பேச்சுப்படி இவற்றைத் தருவதற்கு எங்கட்கு நிதிவசதி இல்லாததால் இம்முயற்சியைக் கைவிட வேண்டிய தாயிற்று. பல்லாவரம் மறைமலை அடிகளாருக்கும் எழுதி அவர்கள் கேட்ட தொகை எங்கள் நிதிவசதிக்கு அப்பாற் பட்டிருந்ததால் இம்முயற்சி என் சிந்தனையிலிருந்தே அகன்றது. கலைமகளாகிய மருமகள் வருவதற்கு மாமியா ராகிய திருமகள் நிரந்தரத் தடையாகவே இருந்துவிட்டாள்.

**திருக்குறள் மாநாடு :** அக்காலத்தில் திருச்சி மாவட்டக் கோவாப்பரேட்டிவ் வங்கிச் செயலாளர் ஜி. **வரதராஜப் பிள்ளை** திருக்குறளில் மிக்க ஈடுபாடு கொண்டு திருக்குறள் கருத்துகளைப் பரப்பி வந்தார். இவர் இலால்குடியைச் சேர்ந்தவர். **வள்ளல் பரமசிவம் பிள்ளை** யவர்களின் அண்ணனின் திருமகனார். திருக்குறள் பணியில் ஒல்லும் வகையெல்லாம் பிள்ளைக்கு உதவிசெய்தவர் இலால்குடிக் கழக உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்த **திரு. நடேச முதலியார்**. பிள்ளையவர்கள் திருக்குறள் பற்றி வெளியிட்ட ஓரிரு நூலுக்கும் சிரமதானம் வழங்கிய வர். திருச்சி மாவட்டத்தில் முக்கியமான சில ஊர்களில் திருக்குறள் மாநாடுகள் நடத்திப் பெரும்பணி புரிந்து வந்தார் திரு. வரதராஜப் பிள்ளை. இத்தகைய மாநாடு ஒன்று துறையூரிலும் நடைபெற்றது. இதனை அமைத்து நடத்தும் பொறுப்பு என்னிடம் வந்தது. பெரிய கூட்டங்கள் நடை பெறுவதற்குத் துறையூரில் பெரிய மண்டபங்கள் இல்லை ஊருக்குள்தான் மாநாடு நடைபெற்றாக வேண்டும். துறையூர் ஜமீந்தார் அரண்மனையின் கீழ்ப்புரம் அகலமான இடம் இருந்தது. நடுவில் பேருந்துகள் செல்லும் சாலை அமைந்திருந்தது. மாநாட்டை மாலை 5 மணிக்கு வைத்துக்

கொண்டதால், இந்த இடத்தை நன்கு தூய்மை செய்து புது மணல் பரப்பி இயன்றவரை இருக்கை வசதிகள் செய்தேன். பேருந்துகள் சற்றுக் கீழ்புறமாக ஒதுங்கிச் செல்லவும் காவல் துறையினரின் உதவியால் ஏற்பாடுகள் செய்தேன். இலால்குடி நடேச முதலியார் பேசினார்; வேறு சிலரும் பேசினார்கள். இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **பூ. ஆலால சுந்தரம் செட்டியார்.** நல்ல புலமை மிக்க செட்டியாரின் பேச்சைக் கேட்டுத் துறையூர் மக்கள் மகிழ்ந்தனர். புலமைக்கு மேலாக செட்டியார் மக்களிடம் அன்போடு பழகிய முறையும், அவருடைய உயர்ந்த பண்பாடும் என்னை மிகவும் ஈர்த்தன. துறையூரை விட்டுக் காரைக்குடி சென்ற பிறகு ஒரு பத்தாண்டுகள் இவர் தொடர்பு அறுந்தது. 1960இல் திருப்பதி வந்த பிறகு செட்டியாரின் தொடர்பு வந்தது. பல்கலைக் கழகப் பாடநூல் குழுவில் உறுப்பினராக இருந்தமையால் அடிக்கடி வந்து போகும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது. நானும் தேர்வுக் குழு கூட்டத்திற்கு சென்னைக்கு வந்து போனேன். இக் கூட்டம் செட்டியாரின் இல்லத்திலேயே நடைபெறும். இன்முகத்துடன் விருந்தோம்பும் இல்லத்தரசியின் பண்பும், அன்புடனும் மரியாதையுடனும் பழகும் செட்டியார் மக்களின் போக்கும் என்னை மிகவும் கவர்ந்தன 'குலத்தளவே ஆகும் குணம்' என்பது ஆன்றோர் வாக்கல்லவா?

**திருச்சி மாவட்ட ஆசிரியர் மாநாடு :** இது ஒரு முறை துறையூரில் நடைபெற்றது. துறையூர் சினிமாக் கொட்டகையில் இடம்பெற முடிந்ததால் முற்பகல் பிற்பகல் நிகழ்ச்சிகள் அருமையாக நடைபெற்றன. சென்னையிலிருந்து பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. **அ. மு. பரமசிவானந்தம்,** திரு. **அன்பு கணபதி** இவர்கள் வந்திருந்தார்கள். இந்த மாநாடு நடைபெறுவதற்கு வேண்டிய வசதிகள்

செய்யும் பொறுப்பு என்னிடம் இருந்தது. ஆசிரியர் கூட்டம் திரண்டிருந்தது. இந்த இரண்டு மாநாடுகளும் நாடு விடுதலை பெறுவதற்கு முன்நடைபெற்ற மாநாடுகள். இலால்குடி கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் ப. அரங்கசாமி இம்மா நாட்டை அமைப்பதில் பெரும்பங்கு கொண்டார் என்பது இன்றும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது. இவர் ஓய்வு பெற்று இலால்குடியில் வாழ்ந்து வருகின்றார். 1965-இல் நான் ஆழ்வார்கள் மங்களாசாசனம் பெற்ற திருத்தலங்களைச் சேவித்து வரும்போது திருச்சி மாயூரம் உணவு விடுதியில் என் இளையமகனுடன் தங்கித் திரு அரங்கம், உறையூர், உத்தமர் கோயில் திருவெள்ளறை, அன்பில், திருப்பேர் நகர்(கோயிலடி-அப்பக் குடத்தான் சந்நிதி) இவற்றைச் சேவித்தேன். ஒரு நாள் பிற்பகல் அன்பில் பெருமானைச் சேவித்துவிட்டுக் கொள்ளிடத்தை நடையிலேயே கடந்து அப்பக்குடத்தானைச் சேவித்தேன், (இப்பயணம் திருப்பதியில் பணியாற்றியபோது, செப்டம்பர் விடுமுறையில் காரைக்குடி வந்தபோது நடை பெற்றது). திரும்பும்போது, திரு. ப. அரங்கசாமியைச் சந்தித்து அளவளாவினேன். பழைய நண்பர்களைப் பார்த்து அளவளாவும் பண்பு என் குருதியில் கலந்திருக்கின்றது. இதனைக் காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பேராசிரியர் பூ. அமிர்தலிங்கம் அவர்களும்,

பழந்தோழர் தமைக்கண்டு
பாசமுடன் அரவணைத்து...

என்றும்,

நண்பர்களின் மத்தியிலே
நகைத்துமகிழ் பேறுடையான்...[1]

என்றும் கூறியுள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்தப் பண்பு என்னை உந்தக் கொள்ளிடத்தைக் கடந்து

1. டாக்டர் ந. சுப்புரெட்டியார் மணிவிழா மலர் பக். 64.

லால்குடி வீதியில் நடந்து வரும்போது நானும் என் மகன் இராமகிருஷ்ணனும் (அப்போது 3-வது படிவ மாணவன்; இப்போது M. D. படித்து பெரிய டாக்டர், திரு. **ப. அரங்கசாமியின்** வீட்டை அடைந்தோம். அரைமணி நேரம் அளவளாவிய பிறகு விடைபெற்று திருச்சியில் தங்கியிருந்த விடுதியை அடைய நினைத்தேன். திரு. அரங்கசாமி ஏதாவது உணவு கொள்ளாது அனுப்ப மறுத்தார். நான் இரவில் உணவு கொள்ளாதவனாதலால் எனக்காக உப்புமா தயார் செய்தார்கள். என் மகன் உணவையும் மறுத்தான்; உப்புமா கொள்ளவும் மறுத்தான். அகாலமாகி விட்டது திருச்சியை அடைய. ஒரு விடுதியில் ஆறிப்போன இரண்டு தோசைகளை உண்ண வேண்டியதாயிற்று.

**துறையூர் வட்ட ஆசிரியர் கூட்டு இணைவு மாநாடு:** துறையூர், அதன் சுற்றுப்புற ஊர்களிலுள்ள உயர்நிலைப் பள்ளி, தொடக்க மேல்நிலைப்பள்ளி (Higher Elementary School) தொடக்கப்பள்ளி இவற்றின் ஆசிரியர்கள் ஒன்றுகூடி **துறையூர் ஆசிரியர் கூட்டு இணைப்பு** (Turaiyur Teachers Federation) என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி என்னை அதன் தலைவராக்கினார்கள். அவசியமானபோது இதன் நிர்வாகக்குழு கூடி முக்கியமான செயல்களைப் பற்றிய முடிவு எடுக்கும். அக்காலத்தில் திருச்சி மாவட்ட ஆசிரியர்களின் சங்கத் தலைவராக இருந்தவர் தேசியக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் (துணை முதல்வர்) A. **இராமய்யர்** என்பவர்.

1948 என்று நினைக்கின்றேன். சுதந்திரம் பெற்ற மறு ஆண்டு **திருச்சி மாவட்ட காங்கிரஸ் மாநாடு** திண்ணனூரில் நடைபெற்றது. இந்தச் சிறிய ஊர் திருச்சி துறையூர் நெடுஞ் சாலையில் துறையூரிலிருந்து 12வது கல் தொலைவிலுள்ள பெரமங்கலம் என்ற சிற்றூரிலிருந்து பிரியும் கிளை சாலையில் மூன்று கல் தொலைவிலுள்ளது. யாரோ ஒரு பெரிய தேச

பக்தர் விருந்தோம்புபவராக இருந்தால் இம்மாநாடு இங்கு நடைபெற்றது. அக்காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் திரு. தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், நேர்மைக்குப் பேர் போனவர்கள். தாமே பல பள்ளிகளடங்கிய ஒரு பெரிய நிறுவனத்தின் இயக்குநராக இருந்தமையால் ஆசிரியர்களின் குறைகளையும் பள்ளிகளின் அவல நிலையையும் நன்கு அறிந்தவர்.

துறையூர் ஆசிரியர் கூட்டிணைப்பு மாநாடு ஒன்றைத் திண்ணனூரில் காங்கிரஸ் மாநாடு நடைபெறும் அன்றே கூட்ட நினைத்தது துறையூர் ஆசிரியர் கூட்டு இணைப்பு. மாநாடு நடத்துவது என்றால் எவ்வளவு சிரமம் என்பதை மாநாட்டை நடத்திப் பார்ப்பவர்கட்குத்தான் தெரியும். இந்த மாநாட்டுத் தலைவராக இருப்பதற்கு பேராசிரியர் A. இராமய்யர் ஒப்புக் கொண்டார்; அடியேன் செயலாளராகப் பணியாற்றினேன். 700க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கூடும் மாநாடு அது. துறையூரிலிருந்து புறப்படும் ஆசிரியர்க்கு திண்ணனூர் வரையிலும் இரண்டு பேருந்துகள் போவதும் வருவதுமாக இருந்தன. திண்ணனூருக்கு அருகிலும் சுற்றிலும் உள்ள ஆசிரியர்கள் அவரவர்களே போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டனர்.

ஓர் இடத்தை அன்பாகப் பிடித்து 700க்கு மேற்பட்டவர்க்கு காலையில் சிற்றுண்டி காஃபி, மதிய உணவு, மாலையில் சிற்றுண்டி காஃபிக்கு சமையல் ஆட்களை நியமித்து ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அவசரமாக அங்கும் இங்கும் சென்று வருவதற்கு ஒரு வாடகைக் காரும் தயராக வைத்திருந்தோம். காலை எட்டு மணியிலிருந்து மாநாட்டுக்கு எழுந்தருளி அரைமணி நேரம் இருக்குமாறு கல்வியமைச்சரைக் கேட்க முயன்றேன். பிற்பகல் 2 மணி வரை அவரைப் பார்க்கவே அநுமதி தர மறுத்தனர். எங்கும் கதர்

உடை, கதர்குல்லாய் அணிந்த கூட்டம் திரண்டிருந்தது. அக் காலத்தில் திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த திரு. அப்பர் சுந்தர முதலியாரும் அமைச்சரைப் பார்க்கத் திண்டாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடாதலால் காங்கிரஸ் காரர்கள் சீதையைக் கண்டறிந்த அநுமன் வந்தபிறகு வானரங்கள் மதுவனத்தில் புகுந்து அட்டகாசம் செய்பவர் களைப் போல் காணப்பட்டனர். காங்கிரஸ் தொண்டர் களிடம் கூட ஆணவம் தலைக்கேறி நின்றது. பணிவோ, பண்பாடோ அவர்களிடம் காணப்பெறவில்லை. பதினெட்டு ரூபாய்க்கும் இருபது ரூபாய்க்குமான மாத ஊதியத்தில் பணி யாற்றுபவர்கள் தாமே என்று எண்ணியது அவர்கள் பேச்சில் தொனித்தது.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லோரும் இந்தியா மக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.[2]

என்ற பாடலில் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற வரியின் கருத்தைத் 'தாம் மட்டிலும் தான்' என்ற கருதிக் கொண்டிருந்த ஆணவம் தொனித்தது. 'எல்லாரும்' என்பதில் ஆசிரியர்களும் அடங்குவர் என்பது அவர் மதியில் ஒளிரவில்லை. காரணம், 'தாங்கள் தாம் சுதந்திரம் வாங்கித் தந்த மாமேதைகள்' என்று கருதிக் கொண்டிருந்தது அவர் கள் திருவாயினின்றும் 'பேசாத பேச்சாகத்' தொனித்தது. 'தாங்கள்தாம் மன்னர்கள்' என்று எண்ணிக் கொள்ளட்டும். அதைப் பட்டிமன்றம் அமைத்து மறுக்கவில்லை. 'ஆசிரியர்

2. பா. க : பாரத சமுதாயம்-4.

களும் நாட்டின் அடிப்படைத் தொண்டர்கள்' என்றாவது நினைத்து மனிதாபிமானத்துடன் மறுமொழி கூறியிருக்கலாம்; அது செய்யவில்லை. வருங்காலத்தில் தலைக்கேறி நிற்கும் இந்த ஆணவத்தால் என்னென்ன 'திருவிளையாடல்கள்' நடைபெறப் போகின்றதோ என் சிறுமனம் எண்ணத் தொடங்கியது; உடனே அதையும் மறந்தது.

எப்படியாவது அமைச்சரை மடக்கி மாநாட்டில் பேச வைக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்தது. மாநாட்டுத் தலைவர் இராமய்யரிடம் இதைத் தெரிவித்தேன். இளமைத் துடுக்கில் எதையும் செய்யக் கூடாதல்லவா? அநுபவம் மிக்க தலைவர் இருக்கும்போது வால் ஆடலாமா? திரு. இராமய்யர் என் நோக்கத்திற்குப் பச்சைக்கொடி காட்டினார். சுமார் மாலை 4½ மணிக்குக் காங்கிரஸ் மாநாடு முடிந்து தலைவர்கள் கலைந்து திரும்பத் தொடங்கினர். ஆசிரியர் மாநாடு ஒரு புளியந்தோப்பில் நடைபெற்றது. சாலையின் மேல்புறம் சுமார் 4 அடி பள்ளத்தில் இந்தத் தோப்பு இருந்தது. வாகனங்களை நகரவிடாது நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் தடுத்து நின்றனர். 'கல்வி அமைச்சர் வாழ்க' என்ற முழக்கம் விண்ணை எட்டியது. 'அமைச்சரைப் போகவிடோம்' என்ற முழக்கமும் தொடர்ந்தது. 'ஆசிரியர் மாநாட்டில்' என்ற ஒரு கூட்டம் முழங்க, மற்றொரு கூட்டம் ''அமைச்சர் பேசவேண்டும்'' என்று எதிரொலித்தது.

காங்கிரஸ் கூட்டம் தப்பித்துப் போயிற்று. அமைச்சர் அவிநாசி லிங்கம் செட்டியார் காரிலிருந்து குதித்தார்; ஆசிரியர் கூட்டத்தை நோக்கி ஓடினார். வரவேற்ற என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். மாநாட்டில் உணர்ச்சியுடன் பேசினார். எங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் அவரிடம் தந்தோம். அன்புடன் வாங்கிக் கொண்டார். புன்முறுவலுடன் ''கவனிக்கின்றேன்'' என்றார்.

'அவினாசி லிங்கம் வாழ்க' என்று முழக்கமிட்டு ஆசிரியர் மாநாடு வழியனுப்பி வைத்தது. மறுநாள் என் சொந்த ஊராகிய கோட்டாத்தூர் சென்றபோது மாமன் முறையிலுள்ள பெரியாரொருவர் 'என்ன மாப்பிள்ளை, நீயும் மந்திரியும் கட்டிப் புரண்டீர்களாமே' என்று அன்புடன் பேசினார். "ஆம், மாமா, நாங்கள் இருவருமே கல்வித் தொண்டர்கள்; தொண்டர்களிடையே வேறுபாடில்லை" என்று அமைதியாகவும் மரியாதையாகவும் மறுமொழி கூறினேன். என் வாழ்வில் 'பணிவும் மரியாதையும் இறைவனின் உபதேச மொழிகள் என்றே கருதிக் காலம் கழிக்கின்றேன்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் யாவரும் சிவப்புத் துணியில் கறுப்பு மையினால் 'ஆதரவு கோரும் ஆசிரியர்கள்' என்று அச்சிடப்பெற்ற சின்னத்தை அணிந்திருந்தனர். இதைக் கண்ணுற்ற சில காங்கிரஸ்காரர்கள் 'ஆசிரியர்கள் யாவரும் பொதுவுடைமை வாதிகளோ?' என்று ஐயப்பட்டதாக அறிந்தேன். எந்தவிதக் கட்சி வேறுபாடின்றி நாங்கள் சின்னத்தைத் தயாரித்தது கடுகுள்ளம் படைத்தவர்கட்கு எங்ஙனம் புலப்படப் போகிறது? என்று எண்ணி வாளா இருந்து விட்டேன். சிலசமயம் நூலாசிரியரின் கருத்தையறியாது உரையாசிரியர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு — தம் கொள்கையை நிலைநாட்டும் போக்கில்—உரை எழுதியிருப்பதை நினைத்துக் கொண்டேன்.

குமிழி –93

## 29. மாவட்டக் கல்வியதிகாரிகள்

நான் துறையூரில் பணியாற்றிய காலத்தில் (ஒன்பது ஆண்டுகள்) ஐந்து மாவட்டக் கல்வி அதிகாரிகளிடம் நெருங்கிப் பழக வேண்டி நேரிட்டது. அந்தக் காலத்தில்

அதிகமான பள்ளிகள் இல்லை. கழக நிர்வாகத்தின்கீழ் முசிறி, இலால்குடி, அறியலூர், குழித்தலை என்ற இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளும், உடையார் பாளையத்தில் ஒரு நடுநிலைப் பள்ளியும்தான் இருந்தன. திருச்சி நகரை நீக்கிப் பார்த்தால் காட்டுப் புத்தூரில் ஜமீந்தார் பொறுப்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், துறையூரில் ஜமீந்தார் மக்கள் பொறுப்பில் வளர்ந்து வரும் உயர்நிலைப் பள்ளியும்தான் இருந்தன. திருச்சி நகரில் (திரு. அரங்கம் உட்பட) கிறித்தவர்கள், பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார் — பொறுப்பில் சில பள்ளிகள் இருந்தன. இதனால் மாவட்டக் கல்வி அதிகாரி ஒருவரே இருந்தார். இன்றைய நிலை வேறு. ஏராளமான பள்ளிகள் தோன்றியுள்ளன. நாடு விடுதலை பெற்ற பிறகு அசுர வேகத்தில் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றியுள்ளதைக் காண்கின்றோம்.

துறையூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியனாகிய நான் ஒருவனே முப்பது வயது கூட தாண்டாத இளைஞன்; மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வந்தேன். பள்ளி நிர்வாகம் பற்றிய (தாளாளர் பொறுப்பும் சேர்த்து) எல்லாப் பொறுப்புகளும் என்னிடம் விடப் பெற்றிருந்ததால் எல்லா விதிகளையும் நன்கு அறிந்திருந்தேன். நடைமுறையில் அநுபவ வாயிலாகவும் பல விஷயங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்புகளும் கிடைத்தன. அன்று முதல் இன்று வரை எந்தப் பிரச்சினையை அணுகினாலும், எந்தத் துறையைப் படித்துப் புரிந்து கொள்ள முயன்றாலும் 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[1] என்றபடிதான் இருக்கும். இத்தனைப்

1. குறள் - 1110

பொறுப்புகளையும் கவனித்துக் கொண்டு வித்துவான், எம்.ஏ. தேர்வுகளையும் எழுதி என்னை மேல்நிலைக்குப் போகத் தகுதியாக்கிக் கொண்டேன். இவற்றில் பட்ட தொல்லைகளை ஒரு தனிக் குமிழியில் வெளியிட்டுள்ளேன்[2].

துறையூரில் பதவியேற்ற ஐந்து ஆண்டுகட்குப் பிறகு வைரிசெட்டிப் பாளையத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க வேண்டும் என்று யோசனை கேட்க திரு. **S.R. நாகரெட்டியார்** என்ற நிலக்கிழார் ஒருவர் வந்தார். துறையூரிலிருந்தபோது சுற்றுப்புற ஊர்களிலுள்ள பெரும் புள்ளிகளிடமும் பெற்றோர்களிடமும் நன்கு பழகி யிருந்தேன். இப்பழக்கத்தை என் பள்ளியின் வளர்ச்சிக்காக நன்கு பயன்படுத்திக் கொண்டேன். அவர்கள் வீட்டுத் திருமணங்கள், இறப்பு நிகழ்ச்சிகள் இவற்றிலெல்லாம் கலந்து கொண்டமையால் பலரிடம் நல்ல நெருக்கம் ஏற்பட்டது. நானும் பள்ளி விழாக்களுக்கு அழைப்பு அனுப்புவேன்; அவர்கள் வந்து சிறப்பிப்பார்கள்.

நான் பழகிய ஐந்து மாவட்டக் கல்வி அதிகாரிகள் திரு. C. இரகுநாதன், திருவனந்தபுரம் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மேனன் (பெயர் நினைவு இல்லை - காரணம், அவர் அரசராகவே நினைத்துக் கொண்டு யாரிடமும் அதிகம் பழகாதவர்), திரு. முருகேச முதலியார் (சைதாப் பேட்டையைச் சேர்ந்தவர்), திரு. சாம்பசிவம் பிள்ளை (கோவைக்கு நான்காம் படிவம் திறக்கும் ஆணை சம்பந்த மாக சென்றிருந்தபோது இவரிடம் பழக்கம் ஏற்பட்டது). திரு. அப்துல்காதர் (காட்பாடி - வேலூரைச் சேர்ந்தவர்) என்பவர்கள்; இவர்களைத் தவிர முசிறிவட்டம் பள்ளித் துணை ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. சி. சிங்காரவேலு

---

2. குமிழி - 72. (இந்நூல் பக். 52) காண்க.

முதலியார், திரு. கே. எல். பழநிசாமிப் பிள்ளை என்பவர்கள் இந்த இருவர்களைப்பற்றி முன் குமிழிகளில் குறிப்பிட்டுள்ளேன்.

இந்த மாவட்டக் கல்வி அதிகாரிகள் எங்கள் பள்ளி ஆண்டுத் தணிக்கையையொட்டி துறையூரில் ஒருவாரம் அல்லது 10 நாட்கள் முகாம் இட்டுத் தங்குவார்கள். முசிறி வட்டத்திலுள்ள எல்லாத் தொடக்க நிலைப் பள்ளிகள் பற்றிய ஆய்வுகளும் இச்சமயத்தில் மேற்கொள்ளப் பெறும். மாவட்டக் கல்வி அதிகாரிகளும் பள்ளித் துணை ஆய்வாளர் களும் அரசுப் பயண விடுதியில் தங்கிக் கொள்வார்கள். பள்ளித் துணை ஆய்வாளர்கட்கும் அவர்களுடன் வந்திருக்கும் சிப்பந்திகட்கும் மாவட்டக் கல்வி அதிகாரி கட்கும் அவருடன் வந்திருக்கும் சிப்பந்திகட்கும் எங்கள் பள்ளி நிர்வாகம் தான் விருந்தோம்பும் (உண்மை உரைத் தால் ஆசிரியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யும் தொகையிலிருந்து இச் செலவு மேற்கொள்ளப் பெறும்). இதனால் இந்த அதிகாரிகள் ஆசிரியர்களாகிய எங்கள் விருந்தினர்களாக இருந்தார்கள் என்று கொள்வதே சிறப்பாகும்.

எல்லோருமே எங்கள் பள்ளியின்மீது அன்பாகத்தான் இருந்தார்கள். பள்ளித் தணிக்கை அன்புச் சூழலில்தான் நடைபெற்றது. எல்லாப் பிரச்சினைகளையும் பரிவுடன் தான் அணுகி உதவினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அக்காலத்தில் (நாடு அடிமையாக இருந்தபோது) அரசு அதிகாரிகள் நடந்து கொள்ளும் போக்கிற்கும் இப்போது அதிகாரிகள் நடந்து கொள்ளும் போக்கிற்கும் மலையனைய வேறுபாடுகளைக் காண முடியும். அக்காலத்தில் அதிகாரிகள் மிக நேர்மையாக நடந்து கொண்டனர் என்பது என் கணிப்பு. இப்போது ஒவ்வொரு நிலையிலும் அரசு குறுக்கிடுவதால் தலைமையாசிரியர்களைக் கண்டு அஞ்சும்

மாவட்டக் கல்வி அதிகாரிகளும் உள்ளனர். விதிகளின் கீழ்க் காரியங்கள் நடைபெறுவதை விட விதிவிலக்கின் கீழ்தான் அதிகம் நடைபெறுவதை எங்கும் காணலாம். விதிப்படி நடக்கும் பள்ளிகளும் நிரம்ப உள்ளன. விதிகளை மீறும் போதுதான் அரசின் குறுக்கீடுகள் இருக்கும். ஏராளமான பள்ளிகள் தோன்றிவிட்டதால் குறுக்கீடுகள் ஆற்றில் கரைத்த புளி மாதிரி அதிகமாக வெளிப்படுவதில்லை.

அக்கால அதிகாரிகளின் போக்குகள் அவர்களின் தனிச் சிறப்புப் பண்புகள் (Idiocyncrasies) இவை நினைவுக்கு வருகின்றன. இவற்றையும் குறிப்பிடுவேன். நற்குணங் களை அதிகாரிகளின் பெயர் குறிப்பிடும்போதும் ஒவ்வாத குணங்களை பெயர் குறிப்பிடாதும் சொல்வேன். ஒருவர் இரவு உணவுக்கு (Dinner) பட்டியலே (Menu) தருவார். இது எங்கள் பொருளாதாரத் திட்டத்திற்கு ஒவ்வாது இருக்கும். உணவு விடுதிகளில் இவற்றைத் தயார் செய்வதால் பெருஞ்செலவு வரும். என்ன செய்வது? பல்லைக் கடித்துக் கொண்டு பட்டியல்படி உணவு தயாராகும். 'முகம் திரிந்து, நோக்கக் குழையும் விருந்து'[3] என்றல்லவோ வள்ளுவர் சொல்லியுள்ளார்? இவர் 'இரண்டு டசன் சாத்துக்குடி, ஒரு டஜன் ஆப்பிள், இரண்டு வீசை விதை இல்லாத திராட்சை வேண்டும்' என்று சொல்லுவார். எல்லாம் அதிகாரியின் பிரதம உதவியாள் ஆளவந்தார் மூலம்தான் சொல்லியனுப்புவார். இவையெல்லாம் துறை யூரில் அக்காலத்தில் கிடைப்பதில்லை. திருச்சியிலிருந்து வாங்கி வருதல் வேண்டும். நாடோறும் திருச்சியிலிருந்து ஆபீஸ் தபால் பெட்டியை ஓர் ஆள் கொணர்வான்; மாலையில் திருப்புவான். ஆளவந்தாரிடம் சொல்லிப்பெட்டி கொணரு பவன் மூலம் வரவழைத்துத்தருவேன். இந்தப்பழங்கள் அன்று மாலையில் திருச்சிக்குச் சென்று அதிகாரி வீட்டில் ஐக்கிய மாகிவிடும்.

---

3. குறள் - 90.

இன்னொருவர் பள்ளியில் புத்தகக் கிடங்கு (Book Depot) இருந்தால் அதைப் பார்க்க வேண்டும் என்பார்; திறந்து காட்டுவேன். பாடநூல்களைக் கம்பெனிகளிட மிருந்து வரவழைத்து மாணவர்க்குத் தரும் இடம் இது. தவிர, காகிதப் பஞ்சம் ஏற்பட்டிருந்ததால் கட்டுப்பாட்டு விலைக்குத் தாள்கள் வாங்கி மாணவர்க்குக் குறைந்த விலையில் குறிப்பேடுகள் செய்து விற்கும் பொறுப்பும் இந்த அமைப்பிடம் இருந்தது. இதை **உமாபதி ரெட்டியாரும் இராமய்யா நாயுடும்** பொறுப்பாகப் பார்த்து வந்தனர். ஜூன், ஜூலை, ஆகஸ்டு (மூன்று மாதங்கட்குத்தான்) இதில் வேலை இருக்கும் இதில் கிடைக்கும் வருவாய் (ரூபாய் 200/300/-ஐ) பள்ளிப் பிள்ளைகட்கு ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்குவதற்கும் விழாச் செலவுகட்கும் ஒதுக்கப்பெறும். நிர்வாகத்திற்கு இப்பொறுப்பு இல்லை. கணக்குகள் பொறுப்புள்ளவர்களால் சரியாக வைக்கப் பெற்றிருந்தன. இந்த அமைப்பைப் பார்வையிட்ட அதிகாரி ஆளவந்தார் மூலம் சொல்லியனுப்பி ஒவ்வொரு வகையிலும் அரை டஜன் குறிப்பேடுகட்குக் குறையாமல் பெற்றுச் செல்வார். நாங்களும் குழந்தைகள் பயன்படுத்துவதற்குத்தானே என்று மகிழ்ந்து வழங்குவோம்

இந்த அதிகாரிகளுள் மிகத் தூய்மையுடையவர் திரு, **சாம்பசிவம் பிள்ளயவர்கள்**. சுவையாக உரையாடுபவர். இந்தப் பேச்சில் எத்தனையோ பெரிய இடத்து வரலாற்றுக் குறிப்புகள் இருக்கும். இறையன்பு மிக்கவர்; தமிழ்ப்பற்று முடையவர். தமிழ் வகுப்புகளை மிக அன்புடன் பார்வை யிட்டு மகிழ்வார். பாடல்களை இசையுடன் பாடவேண்டும் என்று வற்புறுத்துவார். ஒரு சமயம், 9-வது வகுப்பு என்று நினைக்கின்றேன். ஒரு மாணவனை இறைவணக்கப் பகுதி யில் ஒரு பாடலைப் பாடுமாறு பணித்தார். வகுப்பிலேயே சுட்டிப் பயலாகிய அந்த மாணவன் திருவருட்பாவில்,

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே! எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே! அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே! பூந் தடமே! ஞானச்
செங்குமுத மலரவரும் மதியே! எல்லாம்
செய்யவல்ல கடவுளே! தேவ தேவே![4]

என்ற பாடலை இசையூட்டி மிக அற்புதமாய் பாடி எல்லோரையும் மகிழ்வித்தான். இப்படி ஒரு மாணாக்கன் இருப்பதை அன்றுதான் நானும் தமிழாசிரியரும் அறிந்தோம். அவன் பெயர் கண்ணன் என்பது; மாவட்ட நீதிமன்றத்தில் முக்கிய அலுவலராகப் பணி புரிந்து வந்த துரைராஜ் என்ற அலுவலரின் திருமகன். 'எல்லாம் செய்ய வல்ல கடவுளே! தேவ தேவே!' என்ற அடியையும் நன்றாகத்தான் பாடினான். இதற்குள் நாணப்பட்டு 'தேவ தேவே!' என்ற தொடரை இழுத்துப் பாடி நிறுத்தாமல் திடீரென்று 'வசனம்' படிப்பதுபோல் படித்து நிறுத்தினான். உடனே திரு சாம்பசிவம் பிள்ளை, 'ஏம்பா, சுவாமியைத் திடீரென்று கீழே போட்டுவிட்டாயே!' என்று நகைச்சுவையுடன் கூறி, தானே அப்பாடலை அற்புதமாகப் பாடி முடித்து மாணாக்கர்கட்கு உற்சாக மூட்டினார்.

இவ்வளவு உற்சாகமுள்ள இந்த அதிகாரிக்கு உடல் நிலை சரியாக இல்லை. செரிமானக் குறைவால் மிகச் சிரமப்பட்டார். இவருக்கு மட்டிலும் பக்குவமான இட்டலி, (காலை உணவு) பால் அனுப்புவேன். மதிய உணவுக்குக் குழைவாகச் சோறு சமைத்து அவருக்கு உகப்பான காய்கறி,

---

4. திருவருட்பா. மூன்றாம் திருமுறை-மகாதேவ மாலை-48.

கூட்டு, தயிர் இவற்றுடன் அனுப்புவேன். ஆளவந்தார் என்ற சேவகனைத் தம் மகன்போல் அன்பாக நடத்துவார். அந்தச் சேவகனும் அவரை உயிருக்குயிராய் நேசிப்பான். இந்தச் சேவகனே 4 வேளையும் என் வீட்டிலிருந்து உணவு வாங்கிச் சென்று உபசரிப்பான். ஏழை எளியவர்கள்மீதும் ஏழைத் தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்கள்மீதும் பாசமும் பரிவும் காட்டி உதவிய சாம்பசிவம் பிள்ளை பதவியிலிருக்கும் போதே, பணியாற்றிக் கொண்டிருந்த நிலையிலேயே, பரமனடி சேர்ந்தார்; சிவப்பேறு அடைந்தார். ஆளவந்தார் சொன்னது: "ஒரு நாள் பிற்பகல் கோப்புகளில்கையெழுத்துப் போட்டுக் கொண்டேயிருந்தார். அன்று மிகவும் சோர்வாகவும் காணப்பட்டார். கையெழுத்து கிறுக்கிய நிலைக்கு வந்தது. அழகாக நேராக இருக்கும் நிலை மாறிக் கொண்டே போயிற்று. கண்பார்வையும் மாறியது; கண்விழி ஒரு பக்கமாகச் சிறிது செருகியதுபோல் காணப்பட்டது. கையெழுத்துப் போடப்போட கோப்புகளை நான் வாங்கி வாங்கி வரிசையாக வைத்துக் கொண்டிருக்கும்போது இதைக் கவனித்தேன். 'என்ன எஜமான், கையெழுத்து மாறுகிறதே?' என்றேன். அவரும் 'மாறுகிறதா?' என்று என்னை விழித்து நோக்கிய நிலையில் கண்ணை மூடி விட்டார். பின்னர் திறக்கவே இல்லை. நாடியும் நின்றது; உயிர் பிரிந்தது" என்று கண்கள் குளமாகும் நிலையில் ஆளவந்தார் என்னிடம் தெரிவித்ததும் என் கண்களும் குளமாயின.

மற்றொரு மாவட்டக் கல்வி அதிகாரி ஒரு பார்ப்பனர் நிர்வாகத்திலிருந்த ஒரு பள்ளியைப் பற்றிச் சொன்னது: ஒரு பள்ளியில் மே மாதம் பிள்ளைகளை மேல்வகுப்பிற்கு மாற்றும் பட்டியல்கள் மாவட்டக் கல்வியதிகாரிக்கு அனுப்பப்பட்டு விட்டன,

அது நகரத்திலுள்ள பள்ளி. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் தமக்கை மகனோ மைத்துனர் மகனோ ஐந்தாம் படிவத்தில் நின்று விட்டான். கலைவாணர், பள்ளியின் தாளாளரையும் மாவட்டக் கல்வியதிகாரியையும் சந்தித்துத் தம் பையன் எப்படியாவது மேல்வகுப்பிற்கு மாற்றப்பட வேண்டும் என்று வேண்டினார். தாளாளர் ரூ. 5000/- பள்ளிக்கு நன்கொடையாக வழங்கினால் இது செய்யப்படும் என்றார். மாவட்டக் கல்வியதிகாரி நன்கொடை வழங்காமலிருந்தால் தாம் கவனிப்பதாகச் சொன்னார். ஆனால் ஏதோ ஒரு வகுப்பில் தவறு நேர்ந்து விட்டதாகவும், அதைச் சரிப்படுத்தி ஒரு மாணவனை மேல் வகுப்பிற்கு மாற்றவேண்டும் என்ற விண்ணப்பம் பள்ளியிலிருந்து தமக்கு வரவேண்டும் என்றார். அங்ஙனமே விண்ணப்பமும் அனுப்பப்பெற்று மாவட்ட அதிகாரி அப்பையன் எழுதிய விடைத் தாள்களையும் ஒவ்வொரு விடைத்தாளில் பெற்ற மதிப்பெண்களையும் விடைத்தாள்களுடன் வினாத் தாள்களையும் அனுப்புமாறு கேட்டு எழுதினார். தலைமையாசிரியர் விடைத்தாள்களைப் பார்க்கத் திடுக்கிட்டுப் போனார். சரியான மதிப்பெண்கள் அப்பையன் பெறவில்லை. பையனை அழைத்து வேறு விடைத்தாள்களில் வேண்டிய அளவு மதிப்பெண்கள் பெறுவதற்கேற்ற விடைகளை எழுதச் செய்து மதிப்பெண்கள் வழங்கி மாவட்டக் கல்வியதிகாரிக்கு அனுப்பப் பெற்றன. மாவட்டக் கல்வியதிகாரியும் அப்பையனின் பெயர் பட்டியலில் வெற்றிபெற்ற பெயர்களுடன் சேர்க்க அனுமதித்தார். பையன் மேல்வகுப்பிற்கு மாற்றப்பெற்றான். கலைவாணரோ பள்ளிக்கு நன்கொடை வழங்கவில்லை. நடிக மன்னர் அல்லவா? இதில் நன்றாக நாடகம் ஆடினார். இளமைத் துடுக்குடனும் நேர்மையாகவும் பணியாற்றும் எனக்கு "என்ன உலகமடா!" என்பது தெரிந்தது. ஒவ்வொரு பள்ளியிலும் என்னென்ன நடந்திருக்கக் கூடுமோ என்று என் நேர்மை மனம் விழித்துக்

கொண்டது. இந்நிகழ்ச்சி எனக்கு விழிப்பு ஏற்படச் செய்தது. இதில் மிகவும் கவனமாகவும் செயற்பட்டேன். இப்படி இறைவன் என்னை வழுக்கி வீழாபடி காத்தான்.

பிறிதொரு மாவட்டக் கல்வியதிகாரி விருந்தோம்பலில் எதையும் ஏற்றுக் கொண்டார். அவ்வளவாகத் தொந்தரவு இல்லை. ஆனால் நாடோறும் இருப்பத்தைந்து முட்டைகள் வீதம் வேண்டும் என்று சொல்லியனுப்புவர். இது தவிர' தான் ஆட்டுப்பால் பிரியர் என்றும், அதனால் வீட்டில் இரண்டு ஆடுகள் வளப்பதாகவும், அதற்குப் 10 படி செஞ் சோளம் வேண்டும் என்றும் ஆளவந்தார்மூலம் சொல்லி யனுப்புவார். மனம் கோணாது இவற்றைச் சேகரித்து அனுப்புவேன். இவர்தான் சிறந்த ஆசிரியர்கள், தலைமை யாசிரியர்கள் எனப் பேர்பெற்று ஓய்வு பெற்று எங்கள் பள்ளி யில் பணியாற்றின இரண்டு ஆசிரியர்களின் வகுப்பைப் பார்க்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். அவர்கள் மாவட்டக் கல்வியதிகாரியின் மாதிரி வகுப்பைப் பார்க்கத் தம் விருப்பம் தெரிவித்தார்கள்; நவீன முறையில் கற்பிக்கும் முறைகளைத் தெரிந்து கொள்வதில் தமக்கு அக்கறை மிக்கிருப்பதாகவும் தெரிவித்தார்கள். இதனை நான் மாவட்டக் கல்வி அதிகாரிக்குத் தெரிவிக்கவே, அவர் தமக்குக் கற்பிக்கும் பழக்கமே இல்லையென்று கூறி கையை விரித்து விட்டார்; இவர்கள் வகுப்பைப் பார்ப்பதையும் கைவிட்டார். நம்மிடமும் 'பனங்காட்டு நரிகள்' இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். இது எனக்கு ஒரு நல்ல அநுபவமாகவும் இருந்தது.

இறுதியாக ஒரு மாவட்டக் கல்வியதிகாரிக்கு சமையல் காரரை வைத்துச் சமைத்துப் போட்டோம். அவர் தங்கவுங் நளபாகம் செய்யவும் ஊருக்குள்ளிருந்த ஜமீந்தார் சத்திரம் உதவியாக இருந்தது, நன்றாக உண்டு சுகமாகக் காலம் கழித்தார். இவர் விருப்பப்படும்போது குதிரை வண்டி

வைத்துப் பள்ளிக்கு அழைத்து வருவோம். ''ஆசிரியர்கள் நன்கு படித்தவர்கள்; நன்றாகக் கற்பிப்பவர்கள். இவர்கள் வகுப்பை நான் என்ன பார்ப்பது?'' என்று கூறி வகுப்பிற்குள் நுழைந்து பார்ப்பதையே தவிர்த்துக் கொண்டார். 'இராஜ தோரணையில்' ஓர் அரைமணி நேரம் என்னிடம் உரையாடி விட்டுத் தம் இருப்பிடத்திற்குத் திரும்பி விடுவார். சமையல் வைத்ததால் சற்றுச் செலவு அதிகமாயிற்று. பள்ளித்துணை ஆய்வாளர்களையும் உணவு விடுதிகட்கு அனுப்பாமல் இவர் சமையலிலேயே உணவு கொள்ளச் செய்து விட்டேன். சிற்றுண்டிகட்கு மட்டிலும் உணவு விடுதியில் ஏற்பாடு செய்து விடுவேன். அக்காலத்தில் நடராச அய்யர் சிற்றுண்டி விடுதியும் அவர் இளைய சகோதரர் முத்து அய்யர் உணவு விடுதியும் எங்கள் விருப்பத்திற்கு ஏற்ப எங்கள் வீடுபோல் இயங்கின. முகாம் முடிந்தபிறகு இவர்கட்குச் சேரவேண்டிய தொகைகளைச் செலுத்திக் கணக்கைத் தீர்த்துக் கொள்வேன். இராமய்ய நாயுடுவின் பொறுப்பில் இதை விட்டு விட்டேன். விருந்தோம்பலில் எங்கள் பக்கத்து ரெட்டியார்கள் பேர் போனவர்கள். ஆதலால் சமையல் நடந்த ஆண்டு முழுப் பொறுப்பையும் உமாபதி ரெட்டியார் கவனித்துக் கொண்டார்.

இறையருளால் நல்ல ஆசிரியர்கள் எனக்குக் கிடைத்தமையால் மனமொத்த நிலையில் நன்கு பள்ளி நடைமுறையைக் கொண்டு செலுத்த முடிந்தது. அப்பக்கத்திலே சிறந்த பள்ளி என்று பொதுமக்களால் பாராட்டப்பெறும் அளவுக்கு எங்கள் பள்ளி இயங்கி வருவதைக் கண்டு அடிப்கடிப் பெருமிதம் கலந்த மகிழ்ச்சியில் திளைப்பதுண்டு. அடிக்கடிச் சிறுசிறு சச்சரவுகள் இருக்கும். ஒருவர்மீது ஒருவர் ஏதாவது 'கோள்கள்' சொல்லி என் மனம் கெடச் செய்யும் சந்தர்ப்பங்களும் இருக்கும். இவற்றை ஒரு காதில் வாங்கி மற்றொரு காதில் விட்டுவிடுவேன். எனக்கு அதிகமாக

உதவும் பிச்சுமணி அய்யர்பற்றியே அதிகமாகக் கோள்கள் வரும். நான் அவரை விசாரிப்பதுபோல் நடித்துப் பொருட் படுத்துவது இல்லை. இவரிடம் எல்லாவிதத் திறமைகளும் இருந்தமையால் எல்லோரும் பொறாமைப் படுகின்றனர் என்ற உண்மை எனக்குத் தெரிந்து விட்டது. இதனால் எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டு யாருடனும் காழ்ப்புக் கொள்ளாமல் என்னை இயக்கிக் கொண்டிருந் தான் என் இதய கமலத்தில் வீற்றிருக்கும் இறைவன். இந்த இறைவனே என்னைப் பலவித இடுக்கண்களில் சிக்க வைத்தும் வேடிக்கை பார்ப்பான். இதற்கேற்ற சகிப்புத் தன்மையையும் என் இயல்பாக இருக்கும்படியும் செய்த வனாதலால் 'இருவினை யொப்பு' என்ற சித்தாந்த உண்மையை எனக்கு இளம் வயதிலேயே தெளிவாகப் புலப் படவும் செய்திருந்தான்.

குமிழி-94

## 30. வளர்ப்புப் பிள்ளையின் சோகக் கதை

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே - என்முன்னே
ஆடி வருந்தேனே!

ஓடி வருகையிலே - கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடீ!
ஆடித் திரிதல்கண்டால் - உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ!

சொல்லு மழலையிலே - கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடுவாய்;

முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்.[1]

பாரதியார் கண்ணன் பாட்டு, குறிப்பாகக் 'கண்ணம்மா - என் குழந்தை' என்ற பாட்டு என்னை அடிக்கடி உருக்கும். இதை இப்போது நினைக்கும்போது குழந்தை இல்லாக் குறையின் ஏக்கம் ஒருகால் அடிமனத்தின் நாதமாக இருந்ததுதான் இப்பாட்டின்மீது அதிகப் பற்று வைப்பதற்குக் காரணமாக இருக்குமோ! என்று என் மனம் சிந்திக்கின்றது. ஆனால் பள்ளிப் பிள்ளைகள் கிட்டத்தட்ட ஏழுநூறுக்கு மேற்பட்டோரையும் என் பிள்ளைகளாகக் கொண்டிருந்ததால் இந்த ஏக்கம் எழவில்லையோ! ஆனால் வயது ஆன என் அன்னைக்குத் தன் கணவனைப் பேரனாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்குமல்லவா? என் மனைவிக்குக் கணவன்மீதுள்ள காதல் குழந்தையின் அன்பாகக் காண வேண்டும் என்ற அவா இருக்குமல்லவா? இந்த எண்ணங்கள் அப்போது என் மனத்தில் உறங்கிய நிலையில் இருந்திருக்கக் கூடும்.

ஆனால் என் மைத்துனரின் முதல் மனைவியின் குழந்தை - 1938இல் பிறந்தவன் - இப்போது 7-8 வயதுச் சிறுவனாக எருமைப்பட்டியில் - தன் பாட்டி வீட்டில் தன் தாயாருடன் - இருந்து வருவதை நினைக்கின்றேன். நான் பள்ளி வேலையில் அனைத்தையும் மறந்தாலும் என் மனைவியிடம் இவை அடிக்கடித் தோன்றுமல்லவா? இதைச் சிந்தித்துப் பார்த்தேன். கல்வி வசதி அதிகமிராத எருமைப் பட்டியிலிருந்து அச்சிறுவனைத் துறையூருக்குக் கொணர்ந்து உயர் கல்வி பெற வாய்ப்பும், நேர்க் கவனமும் தந்தால் எதிர் காலத்தில் சிறந்தவனாகத் திகழக் கூடுமே என்று கருதியது என் மனம். என் மனைவியிடம் இதைச் சொல்ல, அவளும்

1. பா.க. கண்ணன் பாட்டு - கண்ணம்மா - என் குழந்தை 2,3,8

இதற்கு ஒப்புக் கொண்டாள். மே மாதத்திலேயே இதை எருமைப் பட்டிக்கும் தெரிவித்து அவர்கள் ஒப்புதலுடன் பையனைத் துறையூருக்கு இட்டுவந்தேன். அச்சிறுவனை, என் வீட்டிலிருந்து சுமார் 4 ஃபர்லாங் தொலைவிலுள்ள ஜமீந்தார் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் மூன்றாவது வகுப்பில் சேர்த்தேன். மதியம் உணவுக்கு வீட்டிற்கு நடந்து வருவது சிரமமாக இருக்கும் என்று நான் சிறுவயதில் உணவு கொண்ட நல்லிப்பாளையம் ரெட்டியார் உணவு விடுதியில் உணவு கொள்ளவும் ஏற்பாடு செய்தேன்.

சுட்டிப் பயல். மிகக் கூரிய அறிவுடையவன். 'துருதுரு' வென்றிருப்பான். எதையும் கூர்மையாகக் கவனிப்பான். மிக்க யுக்தியுடன் செயற்படுவான். எங்கள் பள்ளியாசிரியர்களில் இருவர் அந்த உணவு விடுதியில் உணவு கொண்டனர். இதனால் அவர்கள் நண்பகலில் அவனைச் சில நிமிடங்கள் கவனித்துக் கொள்ளவும் வாய்ப்பு இருந்தது. இவர்கள் அச்சிறுவனது நற்பழக்க வழக்கங்களைப் பாராட்டிப் பேசுவர்; அவனுடைய திறமைகளை மெச்சுவர். ஒருவர் அவன் உண்ணும் முறையே தனிச் சிறப்பு வாய்ந்தது என்பார். ''சாம்பார் அல்லது தயிர் சாதம் உண்ணும்போது ஒரு கவளம் உண்டவுடன், இலையில் கலைந்திருக்கும் சோற்றை மீண்டும் இலையின் நடுவில் குவியலாகத் தள்ளி மற்றொரு கவளம் எடுத்து வாயிலிட்டுக் கொள்வான். ஒவ்வொரு கவளத்தை எடுக்கும்போதும் இலையில் குவியலாக நடுவில் தள்ளிய பிறகே அடுத்த கவளத்தை எடுப்பான். உண்ட பிறகு இலை சுத்தமாக இருக்கும். அவன் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றும்'' என்று தம்மை மறந்து பேசுவார். அடிக்கடி இப்பழக்கத்தை வியந்து போற்றுவார்.

கூட்டல், கழித்தல் கணக்குகளைச் செய்யும்போது இவன் கையாளும் யுக்தி முறைகளைக் கண்டு வியந்து போனேன்.

```
 48
 39
---
 87
---
```

என்பது கூட்டல். "ஒன்பதுடன் எட்டைக் கூட்ட 17; ஏழு போக மீதி 1; 1 உடன் 3 ஐ கூட்ட 4; 4 உடன் 4 ஐக் கூட்ட 8" இப்படிச் சொல்லிக் கொடுத்திருப்பார், ஆசிரியர். அது பையனுக்கு விளங்கவில்லைபோலும். பையன் 48 சிறுசிறு காகிதத் துண்டுகளையும் 39 துண்டுகளையும் தனித்தனியாக கிழித்து எண்ணி வைத்துக்கொண்டான். இரண்டையும் ஒன்று சேர்த்து எண்ணி 87 என்று சொன்னான். "இதையே கழித்துச் சொல்ல வேண்டுமானால் என்ன செய்வாய்?" என்று கேட்டேன். அவன் சொன்னான் 48 துண்டுகளைக் கிழித்துக் கொள்வேன். அதிலிருந்து 39 துண்டுகளை எண்ணி எடுத்து விடுவேன். மீதி இருப்பதை எண்ணி விடை சொல்லி விடுவேன்" என்றான். (பையனுக்கு ஆயிரம் வரை எண்ணத் தெரியும்). இது எல்லா வகைக் கூட்டலுக்கும் கழித்தலுக்கும் சரி வராது என்ற போதிலும், தானே கண்ட முறைக்கு வியந்து போனேன்.

வார விடுமுறை நாட்களில் பள்ளிக் கொட்டகைகளிலே விளையாடுவான். விளையாடுவதற்குப் பக்கத்து வீட்டுச் சிவராமகிருஷ்ண அய்யர் (வக்கீல்) பிள்ளைகளும் வேறு சிலரும் சேர்ந்து கொள்வார்கள். ஒருநாள் கொட்டகையின் விட்டத்தில் தொங்கிக் கொண்டு ஆடும்போது கை நழுவிப் பின்பக்கமாக விழுந்தான். கீழே இருவர் உட்காரும் சாய்வு மேசையுடன் கூடிய இருக்கைகள்; சீமைக் காரை (Cement) பாவிய கெட்டிய தரையின்மீது இவை

அமைக்கப் பெற்றிருந்தன. விழும்போது இருக்கையின்மீது விழுந்து தரையில் விழுந்தானோ, அல்லது நேராகத் தரையின்மீது விழுந்தானா என்பது தெரியவில்லை; சுமார் ஒன்பது அடி உயரத்திலிருந்து விழுந்து விட்டான். இடது கை முழங்கை மூட்டில் பலமான அடி. கையை நீட்டவும் மடக்கவும் முடியாத நிலை ஏற்பட்டது. எலும்பு முறிவு மூட்டில் ஏற்பட்டிருக்க வேண்டும்; வெளியில் இரத்த ஒழுக்கு ஒன்றும் இல்லை; காயமும் இல்லை. சிறுவர்கள் ஓடிவந்து ''ஜனகராஜன் விழுந்து விட்டான்'' என்று செய்தி தெரிவித்தனர். நான் வீட்டிலிருந்து போவதற்குமுன் அத்தெருவில் சென்றவர்கள் அச்சிறுவனை வீட்டில் கொண்டு வந்து சேர்த்தனர்.

சிறுவனைக் கண்டதும் ஒரே அதிர்ச்சி எனக்கு. மனம் சிந்திக்க மறுத்தது. அருகிலிருந்த சிலர் ''ஈச்சம்பட்டிக்குக் கொண்டு போனால் சரியாகிவிடும்; அங்குள்ள நுட மருத்துவர் (Bone-Setter) இத்தகைய சிகிச்சையில் கை தேர்ந்தவர். எத்தனையோ பேர்களைக் குணப்படுத்திப் பெரும் புகழ் பெற்றவர்'' என்று கூறினார்கள். என்னுடைய பட்டப் படிப்பும் அறிவியல் அறிவும் இதனை ஏற்கமறுத்தன. நாட்டுப் புறத்தில் இத்தகைய கைதேர்ந்தவர்கள் யாவரும் ஒன்றும் தெரியாதவர்கள் என்ற எண்ணம் என் சிந்தையில் மேலோங்கி இருந்தது. இதனால் ஈச்சம்பட்டிக்குப் போகாமல் (15 கல் தொலைவிலுள்ளது இந்த ஊர்; பேருந்து வழி; 2 கல் சாதாரண பாதை; கார் போகும்) உள்ளூரில் நல்ல பேருடன் திகழும் நாராயண அய்யர் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றேன். இங்குச் செல்லாமல் ஈச்சம்பட்டிக்குச் சென்றிருந்தால் பையன் பிழைத்திருப்பான் என்று பின்னர் எண்ணியது என் மனம். பயன்? பையனுக்கு இந்த இருள்தருமா உலகில் வாழ ஊழ் இல்லை என்று எண்ணிக் கொண்டேன்.

டாக்டர் நாராயண அய்யர் மடக்க முடியாதிருந்த கையை மிக்க பலத்துடன் நிமிர்த்தினார். பையன் துடிதுடித்துக் கதறியது இதனை எழுதும்போதும் (45 ஆண்டுகட்குப் பிறகு) கண்ணில் நீர் வடிகின்றது. அவர் சிகிச்சை செய்யும்போதுதான் அவர் இதில் ஏதும் அறியாதவர் என்பது புரிந்தது. அவர் பலங் கொண்டு நிமிர்த்தியதில் பிரதம இரத்தக் குழாய் அறுபட்டிருக்க வேண்டும் என்று என் மனம் எண்ணியது. பின்னர் உறுதிப்பட்டது. சிறிய கட்டுப் போட்டு அனுப்பினார். ஏதோ திரவம் தந்து கட்டின் மீது ஈரங்காயாமல் ஊற்றிக் கொண்டிருக்குமாறு கூறி அனுப்பினார். அப்போதே தாம் செய்தது தவறு என்பதை அவர் உள்மனம் உணர்ந்திருக்க வேண்டும். பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (பாரிஸ்காரை) போட்டோ மூங்கில் சிம்புகள் வைத்தோ கட்டாதது என்னைச் சிந்திக்க வைத்தது. வீட்டிற்கு வந்த பிறகு பையன் வலியால் துடிதுடித்து அழுதது என்னால் சகிக்க முடியவில்லை. மறுநாள் ஈச்சம்பட்டிக்கு ஆள் அனுப்பி நுடமருத்துவரையே கூட்டிவந்து பார்க்கச் செய்தேன். மருத்துவமனையில் என்ன நடந்தது? என்பது அவருக்கு எப்படித் தெரியும்? டாக்டர் கட்டிய கட்டை அவிழ்த்துவிட்டு மருந்தெண்ணெய் தடவி மூங்கில் சிம்புகள் வைத்துக் கட்டினார்; 'எலும்பு முறிவு ஏற்படவில்லை; மூட்டுப் பிசகுதான் இது' என்று சொல்லி மறுநாள் வருவதாக விடைபெற்றார். அன்று மாலை பையனுக்கு பலமான சுரங்கண்டது. வெப்பமானி தெறித்து விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு அதிக வெப்பம். பையனுக்கு ஜன்னி கண்டு உளறத் தொடங்கிவிட்டான். கையின் முன்பகுதியில் நீல நிறம் தோன்றிவிட்டது. இரத்த வோட்டம் அப்பகுதியில் நின்றதோ என்ற ஐயம் ஏற்பட்டது, திருச்சி சென்றபின் உறுதிப் பட்டது. பையனைப் பார்த்து "நான் யார்?" என்று கேட்டேன். "மாமா" என்று விடை வரும்

என எதிர்பார்த்தேன். அவன் "சுப்பு ரெட்டியார்" என்று என் பெயர் சொல்லிப் பதில் கூறினான். "இப் பிறவியில் உறவு அறுந்து விடுமோ?" என்று ஐயுற்றேன். அது பின்னர் உறுதியாயிற்று. டாக்டர் நாராயண அய்யரை வரவழைத்து பார்க்கச் செய்ததில், அவர் 'இனி இங்கு இருக்கக் கூடாது; திருச்சி காளமேகம் மருத்துவ மனைக்குக் கொண்டுபோக வேண்டும்' என்று கூறித் தானே ஓட்டிக்கொண்டு தன் காரில் கொண்டு சென்றார். மாலை ஏழு மணிக்கு டாக்டர் காளமேகம் மருத்துவமனையை அடைந்தோம். டாக்டர் காளமேகம் 'அபாயமான கேஸ்' என்று சொல்லிப் பையனைப் படுக்கையில் படுக்கவைத்துக் கையைப் பனிக்கட்டியில் (Ice) வைத்து மூடினார்; 'காலையில் முடிவு தெரியும்' என்று கூறிச் சென்றார். "நாட்டு வைத்தியர் கெடுத்தார்" என்று பழியை அவர்மீது போட்டார். டாக்டர் நாராயண அய்யரும் டாக்டர் காளமேகமும் ஒரு சில மணித்துளிகள் தனிமை யாகப் பேசிக் கொண்டனர். டாக்டர் நாராயண அய்யர் முகத்தில் சோகக்குறி காணப்பட்டது. "கெடுத்தது தான்" என்பதைக் காளமேகத்திடம் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நான் ஊகித்துக் கொண்டேன். டாக்டர் நாராயண அய்யர் என்னிடம் வருத்தத்துடன் விடைபெற்றுச் சென்றார். "பையன் பிழைக்கமாட்டான்" என்பதை டாக்டர் காளமேகம் டாக்டர் நாராயண அய்யருக்குத் தெளிவாக்கியிருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து பார்க்கையில் பையனது ஆவி பிரிந்தது. கையில் இருந்த பனிக்கட்டியைப் பிரித்துப் பார்க்கவில்லை. "காலை யில் பிரித்துப் பார்த்தால், கருமையாக இருந்த பகுதி விடுபட்டு எலும்புதான் தெரியும்" என்று டாக்டர் காளமேகம் சொல்லியிருந்தார். ஆகவே நாங்கள் அதைப் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. பிரித்துப் பார்த்தால்

'எலும்பு முறிவு இல்லை, மூட்டுப் பிசகுதான்' என்பது தெரிந்திருக்கும். தெரிந்து என்ன பயன்? விதியை நொந்து கொண்டு உடலை எருமைப் பட்டிக்குக் கொண்டு போவதில் முயற்சியை மேற்கொண்டேன்.

ஆம்புலன்ஸ் வண்டி கிடைக்க முயற்சி செய்தது பலிக்கவில்லை. உடலை எருமைப்பட்டிக்கு எடுத்துச்செல்ல வாடகை மகிழ்வுந்து (Pleasure Car) அமர்த்தினேன். அக்காலத்திலே வாடகை ரூ. 400/- கொடுக்க வேண்டியதாயிற்று. சுமார் 60 கல்தொலைவு செல்ல இந்த வாடகை. காலையில் 6 மணிக்குக் கிளம்பிய வண்டி மாலை 3 மணிக்குத் தான் எருமைப்பட்டியை வந்து அடைந்தது. வழியில் மூன்று இடத்தில் சக்கரத்திலுள்ள குழாய் வெடித்துப், பழுது பார்த்துக்கொண்டு சென்றதால் தாமதம். வண்டிக்காரன் ஒரு சேவலைப் பலி கொடுத்திருந்தால் இத்தடை நேர்ந்திருக்காது என்று கூறினான். மூடநம்பிக்கையின் ஆழத்தை இதனால் உணர முடிந்தது. பள்ளிக் கட்டடத்தை உபயோகப்படுத்துமுன் இப்படி ஒரு பலியிடாததால்தான் இறைவன் சிறுவனை 'நரபலி' வாங்கிக் கொண்டானோ என்று நினைத்துக் கொண்டேன்! மனிதனுடைய மூளை சந்தர்ப்பத்திற்கேற்ப நியாயம் கற்பித்துக் கொள்வதை நினைந்து நினைந்து சிரிக்கத் தோன்றுகின்றது.

மாலை 5 மணிக்கு உடலைப் புதைக்காமல் 'தகனம்' செய்தோம். பெரிய மனிதனுடைய அறிவு இச்சிறுவனிடம் காணப்பெற்றதால் உறவினர் இம்முறையினை மேற்கொண்டனர் போலும். மறுநாள் பால் தெளிக்கும் சடங்கு முடிந்தபிறகு பொட்டணத்திலிருந்து பையனின் தந்தை (என் மைத்துனர்) இராமசாமி ரெட்டியார் வந்தார்; துக்கக் குறி முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. என் மைத்துனருக்குத் திருமணம் ஆகி சுமார் ஏழெட்டுகள் கழித்து, அவருக்கு

மகனாகப் பிறந்தவன் ஜனகராஜன். இம்மாதிரியே எனக்குத் திருமணமாகிப் பத்தாண்டுகள் கழித்து வளர்ப்புப் பிள்ளையாக வந்து சேர்ந்தவன். இந்நிலையில் எனக்கு,

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
 மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
 எனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
 ஆருயிர்நின்று ஊச லாட
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
 கடுந்துயரம் கால வேலான்.[2]

[எண் இலா - அளவு இல்லாத; இயம்பிய - சொன்ன; மருமம் - மார்பு; புழை-துவாரம்; கனல்-கொள்ளிக் கட்டை; உள்நிலாவிய - மனத்தில் உண்டான; கண்ணிலான் - பிறவிக் குருடன்; கடுந்துயரம் - மிக்க துன்பம்]

என்ற கம்பராமாயணப் பாடல் நினைவுக்கு வந்தது. இராமனை வேள்வி செய்வதற்குத் துணையாகத் தன்னுடன் அனுப்புமாறு விசுவாமித்திரன் கேட்டபோது தயரதன் அடைந்த நிலையைக் கூறுவது இப்பாடல். சிறுவன் இறந்து மூன்றாண்டுகட்குப் பிறகு என்க்குப் புத்திரப்பேறு ஏற்பட்டது (1949). என் மைத்துனருக்கும் வரிசையாக நான்கு பெண் பிள்ளைகள் பிறந்தனர். எனக்கு இரண்டாவது மகன் காரைக்குடியில் வாய்த்தபோது (1953) என் மைத்துனருக்கும் ஆண்வாரிசு ஏற்பட்டது.

---

2. பாலகா. கையடை-11.

குமிழி—95

# 31. வைரிசெட்டிப் பாளையம்—குடிமைப் பயிற்சி முகாம்

**1948** சனவரி என்று நினைக்கின்றேன். இந்த முகாம் வைரிசெட்டிப் பாளையத்தில் நடைபெற்றது. சுதந்திரம் வந்தபிறகு திரு. தி. சு. அவினாசி லிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபொழுது இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பெற்றது. இதன் விவரங்கள் எல்லா உயர்நிலைப் பள்ளிகட்கும் அனுப்பப்பெற்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் இத்திட்டம் பற்றிய பயிற்சிகள் பயிற்சிபெறும் ஆசிரியர்கட்குத் தரப்பெற்றன. பள்ளியில் மாணாக்கர்கட்கு இப்பயிற்சி தருவதைவிட பள்ளிக்கு வெளியே இது தரப்பெற்றால் சிறக்கும் என்று கருதினேன். இதற்குப் பணச்செலவு ஆகும் அல்லவா? இது என் மனத்தை உறுத்தியது. பள்ளிச் சிறுவர்களிடம் கட்டணம் வாங்கி இதை நடத்துவது என்பது சாத்தியப் படுவதாகத் தோன்றவில்லை.

அக்காலத்தில் வைரிசெட்டிப் பாளையத்தில் வள்ளலாகத் திகழ்ந்தவர் திரு. S. R. நாகரெட்டியார் என்பவர். 96 மாணவர்கட்கும் 6 ஆசிரியர்கட்கும் 3 நாட்கள் உணவு வசதி, தங்கும் வசதிகள் இலவசமாகச்செய்து தரப்பெறுமா?'' என்று கேட்டு எழுதினேன். திரு. ரெட்டியார் அறமே வடிவெடுத்தாற் போன்றவர். அவர் மனம் விரியும் அளவிற்கு அவரிடம் செல்வம் இல்லாது போயினும் இருந்தவரைப் பிறருக்கு மனமுவந்து வழங்குபவர்; அவருக்கு நிகர் அவரே. அவர் அன்புடன் என் திட்டத்திற்கு மனமுவந்து ஒப்புதல் தெரிவித்தார்; நானே நேரில் சென்று திட்ட விவரங்களை எடுத்து வைத்து இசைவு பெற்றேன்.

படிவத்திற்குப் 16 பேர் வீதம் 6 படிவங்களில் 96 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தேன். திரு. மாதுர்பூதம், திரு. உமாபதி ரெட்டியார், திரு. இராமய்யா, திரு. வி. சி. கிருஷ்ணசாமி ரெட்டியார் (தமிழாசிரியர்), திரு. கே. பிச்சுமணி அய்யர், திரு. L. மாணிக்கம் ஆகிய அறுவரை உதவிக்குக் கூட்டிக் கொண்டேன். பள்ளி உதவியாள் முத்து சாமியையும் கூட வருமாறு பணித்தேன். ஒருநாள் இரவு உணவுக்குப் பிறகு 7 மணிக்குமேல் பேருந்துக்கு 10, 15 பேர் வீதம் அனைவரையும் கொப்பம்பட்டிக்குக் (சாலை மேலுள்ள ஊர்) கொண்டு சேர்த்தோம். அங்கிருந்து 4 ஃபர்லாங் தொலைவு நடை. வளர்பிறையில் முகாம் தேர்ந் தெடுக்கப் பெற்றதால் முன் நிலா வெளிச்சம் இருந்தது. வசதியாக வைரிசெட்டிப் பாளையம் போய்ச் சேர்ந்தோம். மாணவர்களைக் கலந்து (மேல்வகுப்பு, கீழ்வகுப்பு மாணவர் கள் என்று வேறுபாடு இல்லாமல்) 6 அணிகளாகப் பிரித்தோம். அவற்றிற்கு A, B, C, D, E, F, எனப் பெய ரிட்டோம். ஒவ்வொரு அணிக்கும் ஒரு தலைவர் 6 அணி கட்கும் ஒரு தலைவர் (House Leader-HL), மொத்த அணி கட்கும் ஒருதலைவர் (School Pupil Leader-SPL) என்று மறு நாள் காலை 7 மணிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். உடற் பயிற்சி ஆசிரியர் காலையிலும் மாலையிலும் சிறிதுநேரம் உடற்பயிற்சி தருதல், ஒவ்வொரு அணியும் தங்கும் இடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் போன்ற பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டார். இவ்வளவு பேர் களும் மூன்று நாள் குளிக்க வேண்டும். அதற்கு நாக ரெட்டியார் வீட்டருகிலுள்ள வயலில் மோட்டர் போட்டு தொட்டியில் நீர் நிரப்பிக் குளிக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. எந்தக் காரணத்தாலும் மாணவர்களைக் கிணற்றிலிறங்க வாய்ப்பு தருவதில்லை. ஒவ்வொரு அணியும் குளிப்பது, உணவு கொள்ளுவது போன்ற விவரங்களை ஆசிரியர்கள்

கவனித்துக் கொண்டனர். ஆறு அணிகட்கும் தங்கும் இடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், தாம் தூய்மையாக இருந்தல், வரிசையாகப் போய்வருதல், பேச்சு அதிகமின்றி செயற்படுதல் போன்றவற்றில் போட்டி ஏற்படுத்தி அணிகட்குப் பரிசுகள் வழங்குதல் போன்ற செயல்களை ஆசிரியர்கள் கவனித்துக் கொண்டனர். சமூக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுதல் என்பதுதான் குடிமைப் பயிற்சியின் (Citizenship Training) குறிக்கோள்.

ஒவ்வொரு நாளும் மாணவர்கள் காலை 9 மணிக்குள் குளித்து உணவை முடித்துக் கொண்டு தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு அணியையும் வரிசையாக நடத்திக் கொண்டு வந்து நிறுத்துதல் அணித் தலைவரின் பொறுப்பு. எல்லா அணிகளும் ஒழுங்காக நிறுத்தப் பெற்றுள்ளனவா என்பதைச் சரிபார்த்தல் பள்ளி மாணவத் தலைவரின் பொறுப்பு. எல்லாம் சரியாக உள்ளன என்ற செய்தியை இவர் உடற்பயிற்சி ஆசிரியருக்கு அறிவிப்பார். பிறகு தேசியக் கொடியேற்றம் நடைபெறும். கொடியேற்றும் சிறப்பான பணியை திரு S. R நாகரெட்டியார் ஏற்றுக் கொண்டார். கொடியேற்றத்திற்குப் பிறகு நாட்டு வாழ்த்து (ஜன கண மன) பாடப்பெறும்; சேர்ந்து பாடவேண்டும். இம்மாதிரி ஒழுங்கு முறைகளைக் கற்றுக்கொடுப்பதுதான் குடிமைப் பயிற்சி முகாமின் பணியாக இருந்தது. மாணாக்கர்கள் ஆசிரியர்களுடனும், ஊர்ப்பெரியவர்களுடனும், பொதுவாக எல்லோருடனும் பணிவுடனும் மரியாதையுடனும் பழகுதல் வேண்டும் என்பதும் கற்றுக் கொடுக்கப்பெற்றது; நாட்டுப்பற்றும் ஊட்டப் பெற்றது.

அணிகள் நடந்து கொள்ளும் முறைகளை உடற்பயிற்சி ஆசிரியர் அணித் தலைவர்கட்கும், பள்ளி மாணவர் தலைவருக்கும் அறிவிப்பார். இவர்கள் மற்றவர்கட்கு அறிவிப்பார்கள். ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவரும்

'தலைவருக்குக் கீழ்ப்படிதல்' என்ற பண்பு வலியுறுத்தப் பெற்றது. மூன்று நாள் பயிற்சி இந்த முறையில் நடை பெற்றது. இந்த மாணவர்களைக் கொண்டு பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி தரத் திட்டமிட்டேன். என் வாழ்நாளில் பெரும் பகுதியை மாணவர் நலனுக்கே அர்ப்பணித்து வரத் திட்டமிட்டுள்ளேன்.

அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே![1]

என்ற தாயுமானவர் காட்டிய ஒளி என் மனத்தில் சுடர்விட்டு ஒளி காட்டுகின்றது,

மூன்றாம் நாள், காலை சிற்றுண்டி முடிந்ததும் 'புளியஞ்சோலை'யில் முகாம் அமைத்தோம். மாணவர்களை நடையில் மாணவர் தலைவரின்கீழ் அடங்கிச் செல்லுமாறு அனுப்பி வைத்தேன். மாதுர்பூதம், மாணிக்கம், உமாபதி ரெட்டியார் — தாமும் நடையில் செல்வதாக மாணவர் களைத் தொடர்ந்தனர். ஒரு வண்டியில் நீர்மோர், பகல் உணவுக்கு வேண்டிய வர்க்கஅன்னங்கள், இலைக்கட்டுடனும் இதர சிறு பாத்திரங்களுடனும் அனுப்பி வைத்தார் திரு, நாகரெட்டியார். பிற்பகல் 3 மணிக்கு காஃபிக்குரிய பால், சருக்கரை, காஃபிப் பொடி முதலியவையும் இந்த வண்டி யில் சென்றன. எங்கள் பள்ளியிலிருந்து வந்த முத்துசாமி என்ற உதவியாளனையும் இந்த வண்டியில் அனுப்பி வைத்தேன்.

நானும் எஞ்சிய ஆசிரியர்களும் தனிவண்டியில் சென்றோம். திரு. நாகரெட்டியார் அவர்களையும் வருமாறு வேண்டினோம். அவரும் மனமுவந்து எங்கள் வேண்டு கோளை ஏற்று எங்களுடன் பயணமானார். 10½ மணி

1. தா-பா ; பராபரக் கண்ணி—155

சுமாருக்குப் புளியஞ்சோலையை அடைந்தோம். முதலில் எல்லோருக்கும் நீர் மோர் வழங்கப் பெற்றது. வெயிலில் நடந்து வந்த களைப்பு ஒருவாறு நீங்கியது. இந்த இடம் கொல்லி மலை அடிவாரத்தில் வைரிசெட்டிப்பாளையத்திலிருந்து சுமார் 3 கல் தொலைவில் உள்ளது. முகாமிற்கும், மகிழ்ச்சிச் செலவுக்கும் அற்புதமான இடம். இந்த இடத்தைப் பற்றிச் சில சொற்கள்: உயர்ந்தமரங்களால் சூழப்பெற்றது. மரங்களின் அடியில்பெரியனவும் சிறியனவுமான குண்டுக்கற்கள். மழைகாலத்தில்வெள்ளத்தால் உருண்டோடி வந்தவை. உருண்டு உருண்டு தேய்ந்து வழுவழுப்பான மேனியைக் கொண்டவை. இவற்றின் அடியில் ஊற்று நீர் கசிந்து ஓடிக் கொண்டிருக்கும். இவற்றின் அருகில் தனித்தனியாகப் பல அருவிகளில் ஊற்றுநீர் ஓடிக் கொண்டிருக்கும். இந்த நீரைத் தேக்கி அண்மையிலுள்ள நிலங்கட்குப் பாய்ச்சுவார்கள். குண்டுக் கற்களின்மேல் ஆயிரக்கணக்கானவர்கள் கூடலாம்; மாநாடு கூட நடத்தலாம். இலக்கியமாநாட்டிற்கு இயற்கைச் சூழல்அமைந்த இதைப்போன்ற ஓரிடத்தைக் காண்டல் அரிது. பகலவன் கதிர்கள் புக முடியாத வண்ணம் மரங்கள் அடர்ந்து நெருங்கி இருந்தன. மாணாக்கர்கள் எங்கள் கண் பார்வைக் கெட்டியவரையில் விருப்பப்படி சுற்றலாம் என்று அனுமதித்தோம். இப்பொழுதுதான் மாணாக்கர்களின் தனித் தன்மைகளைக் கண்டறிவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். 12 மணிக்கு எல்லோரையும் கூட்டி வைத்து திரு. நாக ரெட்டியாரை அவர்களுடன் அரைமணிநேரம் உரையாற்றும் படி வேண்டினோம். அவரும் தமக்கே உரிய முறையில் உரையாற்றினார்; மாணாக்கர்கள் அடக்கத்துடனும் மரியாதையுடனும் அவர் உரையைக் கேட்டு மகிழ்ந்தனர். திரு. நாக ரெட்டியார் அவர்களும் மகிழ்ந்திருக்க வேண்டும். ஒன்றிரண்டு ஆண்டுகளில் தாம் வைரிசெட்டிப் பாளையத்தில் தொடங்கப் போகும் உயர்நிலைப் பள்ளிபற்றிக்

கற்பனையில் கண்டிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு. இறைவன் திருவருளால் 1960இல் உயர்நிலைப் பள்ளியும் தொடங்கப் பெற்றது வைரி செட்டிப் பாளையத்தில்.

பன்னிரண்டரை மணிக்கு அணி அணியாக மாணவர்களை அமரச் செய்து மாணவர் அணித் தலைவர்களின் உதவியால் உணவு பரிமாறப் பெற்றது. மாணவர்கள் மகிழ்ச்சியுடன் உண்ட மனைப்புற விருந்து (Picnic) இது. குடிநீர் எங்கும் இருந்ததால் நீர் வினியோகிக்க அவசியம் ஏற்படவில்லை. உணவு பரிமாறுவதில் முத்துசாமியின் பங்கு குறிப்பிடத் தக்கது. எங்கள் பள்ளிக்கு முத்துசாமி சேவகனாக அமைந்தது பள்ளியின் தவப்பயன் என்றே சொல்லவேண்டும். இவனுடைய தந்தை பொன்னம்பலம் ஜமீந்தார் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் சேவகனாக பணிபுரிந்து வருபவன். இவனுடைய மகன் முத்துசாமி பாரதியாரின் 'கண்ணன் என் சேவகன்' போன்றவன்,

'கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன் அன்றுமுதற் கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணனால்
பெற்றுவரும் நன்மையெலாம், பேசி முடியாது.

கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் என்(பள்ளி)
வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல்
கண்டறியேன்

............ ......... ............ ............

இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்து
விட்டேன்![2]

என்று சொல்வது முற்றிலும் பொருந்தும் (ஆறாவது வரியில் 'குடும்பம்' என்பதற்குப் 'பள்ளி' என்று போடப் பெற்றது.

---

2. பா. பா ; கண்ணன் பாட்டு : கண்ணன் – என்சேவக அடி (40–56)

(குடும்பம் என்றாலும் பொருந்தும் பள்ளியையே என் குடும்பம்போல் பாவித்ததால்).

பகலுணவு முடிந்ததும் ஓய்வு. அவரவர் விருப்பப்படிச் சுற்றலாம் என்ற 'உரிமம்' (License) தரப் பெற்றது. மாலை 4 மணிக்கு எல்லோருக்கும் காஃபி வழங்கப் பெற்றது. அக்கம் பக்கத்தில் கிடைத்த விறகைக் கொண்டு மிக எளிதாக காஃபி தயாரிக்கப் பெற்றது. 4½ மணிக்கு ஊர் திரும்பினோம். ஐந்து மணிக்கு திரு. நாகரெட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டு கொப்பம்பட்டி வந்தோம். ஆத்தூரிலிருந்து துறையூர் போகும் பேருந்துகளில் மாணாக்கர்களைப் பாதுகாப்பாக ஆசிரிய ஒருவர் பொறுப்பில் அனுப்பி வைத்து இரவு எட்டு மணி சுமாருக்கு நானும் ஒன்றிரண்டு ஆசிரியர் களும் பேருந்து ஏறி வீடு வந்து சேர்ந்தோம். இந்த முகாம் இன்னும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது. என் வாழ்நாள் உள்ளவரை இஃது என் மனத்தை விட்டு நீங்காது. எங்கள் பள்ளித் துரைமார்கள் எங்கே? திரு. நாகரெட்டியார் எங்கே? முன்னவர்களின் பிசுநாறித்தனத்திற்கும் பின்னவரின் வள்ளல் தன்மைக்கும் ஏணி வைத்தும் ஏற முடியாது என்று என் மனம் இன்றும் எண்ணுகின்றது.

திரு. நாகரெட்டியார் இன்றில்லை. இரண்டாண்டுகட்கு முன்னர் (1987) திருநாடு அலங்கரித்து விட்டார். 'தன் புகழ்நிறீஇத் தாம் மாய்ந்த பெரியோர்களின்' பட்டியலில் சேர்ந்து விட்டார். நித்தியசூரிகளுடன் சேர்ந்து கொண்டார் என்று என் மனம் எண்ணுகின்றது; எண்ணி எண்ணிக் களிக்கின்றது.

**குமிழி—96**

## 32. திரு. R. கிருட்டிணசாமிரெட்டியார்(R.K)

சற்றுப் படித்தவர்களால் சிதம்பர விலாஸ் ஆர். கே. (R. K.) என்றும், எல்லோராலும் சிதம்பர விலாஸ் 'தம்பு'

என்றும் செல்லமாகவும் அன்பாகவும் வழங்கப்பெறும் திரு. ஆர். கிருட்டிணசாமி ரெட்டியார் ஓர் அபூர்வமான மனிதர்; எல்லோராலும் நல்லவர் என்று பாராட்டப் பெற்றவர். நான் துறையூரில் பணியாற்றியபோது இவர் நட்பு எனக்குக் கிடைத்தது இறைவனின் திருக்குறிப்பாகும். பண்பட்ட ஓர் எளிய உயரிய குடும்பத்தில் பிறந்து, பள்ளி கல்லூரிப் படிப்பு அதிகமில்லை என்றாலும், அவற்றை யெல்லாம் தம் அநுபவ ஞானத்தாலும், தம் ஒழுக்க சீலத் தாலும், பரந்த நோக்கத்தாலும், ஆகூழ். அவருக்கு நிறைய இருந்தமையாலும் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி 'ஒரு கோடீஸ்வரன்' என்னும் நிலைக்கு உயர்ந்தவர். இந்த உயர் நிலையிலும் 'பெருக்கத்து வேண்டும் பணிதல் (குறள்—963) என்ற வள்ளுவர் பெருமானின் அமுத மொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

ஆறாவது வகுப்பு கூடத் தாண்டாத இவர் பண்பினாலும் அடக்கத்தினாலும் திறமையினாலும் இளைஞனாகத் திகழ்ந்த இவரைச் செந்தாரப்பட்டி முனிசிப்பு முத்து ரெட்டியார் என்பவர் (இவர் பெருநிலக்கிழாரும் கூட) தமது மகிழ்வுந்தின் ஓட்டியாக மாதம் ரூ 25/= ஊதியத்தில் அமர்த்திக் கொண்டார். சில ஆண்டுகள் அப்பணியில் இருந்த போது இவர்தம் திறமை நன்கு புலனாயிற்று. தமது உறவினரும் உப்பிலியபுரத்தைச் சார்ந்தவருமான திரு. சிதம்பர ரெட்டியாருக்குச் சொந்தமான 'இராஜ கோபால் டிரான்ஸ்போர்ட்ஸ்' என்ற பேருந்துக் கம்பெனியில் மாத ஊதியம் ரூ. 50/-இல் மேலாளராக நியமனம் பெற ஏற்பாடு செய்தார் திருமுத்து ரெட்டியார். இதில் ஒரு பத்தாண்டுகள் (1936–46) இவர் பணிபுரிந்திருக்கக்கூடும். இக்காலத்தில் கம்பெனியை மிகத் திறம்பட நடத்தி வருவாயைப் பெருக்கித் தம் முதலாளியின் அன்பிற்குப் பாத்திரரானார். இக்காலத்தில் பேருந்துக் கம்பெனியின்

நுட்பங்களையும் அதன் நெளிவு சுழிவுகளையும் தெளிவுறத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தன. இவற்றை மேலும் சீர்திருத்தினார். மோட்டார் சம்பந்தமான சட்ட திட்டங்களையெல்லாம் நன்கு தெரிந்து கொண்டார். எழுத்தெண்ணிக் கற்றுக் கொண்டார் என்று கூறினும் அது மிகையன்று. இக்காலத்தில் இவர்தம் புகழ் எங்கும் பரவியது. மோட்டார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் பிறதுறை அதிகாரிகளிடத்திலும் செல்வாக்குடனும் பெரு மதிப்புடனும் திகழ்ந்தார். ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறனை வளர்த்துக் கொண்டார். பட்டதாரிகள் கூட இவர் முன் சற்றுத் தாழ்ந்து போகத்தான் வேண்டும் என்ற அளவுக்கு இவர்தம் திறமை "மிளிர்ந்தது".

இந்த உலகில் ஒருவர் நன்கு வாழ்ந்தால் அதனைக் கண்டு சிலர் பொறாமைப்படுவர்; நிலையினின்றும் தாழ்ந்து போனால் எள்ளி நகையாடுவர். இஃது உலகியற்கை. இத்தகைய கயவர்களை வள்ளுவத்தாலும் தகர்த்தெறிய முடியாது. வள்ளுவம்தான் அண்மைக் காலத்தில் விளம்பரப் பொருளாக மாறி வருகின்றதே. வாணிகத்தில் மருத்துவத்தில் வக்கீல் தொழிலில் -ஏன் ஆசிரியத்தொழிலில் கூட-பொறாமை எங்கும் தாண்டவமாடுவதைக் காணலாம். துரியோதனின் பொறாமை பாரதப் பெரும் போருக்குக் காரணமாக அமைந்து இருந்ததை நாம் அறிவோம். அந்தப் பொறாமையின் காரணமாகத்தான் அவனும் அழிந்தான்; அவன் குலமும் அழிந்தது.

இதனால்தான் வள்ளுவப் பெருந்தகையும் ஒருவன் அழிவதற்கு அவனிடம் உள்ள பொறாமையே போதும் என்றார். இங்ஙனமே கிருட்டிணசாமி ரெட்டியாரின் செல்வாக்கையும் புகழையும் கண்டு அவருடன் கம்பெனியில் பணியாற்றிய கணக்கப் பிள்ளை மிகவும் பொறாமைப்

பட்டார். இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டி முதலாளியிடம் "வத்தி" வைத்தார். இதனைக் கேள்வியுற்ற திரு ரெட்டியார் முதலாளியை அணுகி எதையும் நன்கு விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

முதலாளி சிதம்பர ரெட்டியார் (இவரைச் 'செவிட்டுத் தம்பு' என்று செல்லமாக வழங்குவர்) இதற்கு ஒருப்பட வில்லை. இப்படிச் செய்தால் கணக்கப்பிள்ளை-கம்பெனியின் அந்தரங்கங்களையெல்லாம் கைக்குள் அடக்கி வைத்திருப் பவர் - ஏதாவது மொட்டை மனு வருமானவரித் துறைக்கு அனுப்பித் தம்மை மாட்ட வைத்தல் கூடும்என்று அஞ்சினார் திரு. கிருட்டிணசாமி ரெட்டியார் சொல்லிலும் செயலிலும் நேர்மையானவர்; தூய்மையானவர். மானங் காக்கும் மாமனிதர். முதலாளி தம் கோரிக்கைக்கு மெத்தனமாக இருப்பதைக் கண்டு தம்மைப் பதவியிலிருந்து விடுவித்துக் கொள்ளக் கருதினார்; முதலாளியிடம் தம் விருப்பத்தையும் தெரிவித்தார். அதற்கு முதலாளி, "திடீரென்று நாலும் தெரிந்த நீ விலகிக் கொண்டால் கம்பெனி எப்படி நடக்கும்? ஆகவே விடுதலை தர முடியாது" என்று மறுத்து விட்டார். "அப்படியானால் ஓராண்டு காலம் தருகின்றேன். தக்க ஒருவரை நியமித்துக் கொண்டு என்னை விடுவித்துவிடுங்கள்" என்று எழுத்து மூலமாகவே வேண்டுகோள் விடுத்து வாளா இருந்து விட்டார்.

ஓராண்டு உருண்டோடியது. தம்முடைய எதிர்காலத் திட்டத்தைப் பற்றிச் சஞ்சலத்துடன் சிந்தித்துக்கொண்டிருக் கையில் திருவரங்கத்திலிருந்து முன்பின் தெரியாத சோதிடர் ஒருவர் வந்து சேர்ந்தார். 'தம்பு' என்று செல்லமாக வழங்கப்படும் கிருட்டிணசாமி ரெட்டியாரை அடிக்கடி இப்படிப் பலர் வந்து பார்ப்பர்; பலர் உதவி கோரி வருவர். அவர்கட்கு சொல்லாலும் செயலாலும் ஏதாவது உதவி செய்வது தம்புவின் இயல்பாக இருந்து வந்தது. ஏழைகளாக

இருத்தல் ஒன்றிரண்டு ரூபாய் தந்து போக வேண்டிய இடத்திற்குக் கட்டணமின்றிப் பேருந்தில் ஏற்றியனுப்புவார். இச்சிறுகாரியங்களால் கம்பெனியின் பேரும் புகழும் அதிகரிக்கும் என்பது தம்புவின் பரந்த நோக்கம். இத்தகைய நற்செயல்கள்தாம் கணக்குப் பிள்ளையை அழுக்காறு அடையச் செய்தன. 'அழுக்காறு உடையாருக்கு அது(வே) சாலும்' (குறள் - 165) என்ற வள்ளுவர் வாக்கு எப்படிக் கயமைக்கு வழிகாட்டும்?

தம்புவைப் பார்க்க வந்த சோதிடர் ஒருமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். காஃபி முதலியவை வழங்கித் திருவரங்கத்திற்குக் கட்டணமின்றி பேருந்தில் ஏற்றி அனுப்பினார். போகும் முன்னர் ஓர் இரண்டு குயர் கோடிட்ட குறிப்பேடு ஒன்று தருவிக்கச் செய்து அதை வாங்கிக் கொண்டு சென்றார்; சாதகக் குறிப்பையும் பெற்றுச் சென்றார். ஒரு சில மாதங்களில் சாதகத்தை ஆய்ந்து விரிவான விளக்கங்களுடன் எழுதி வருவதாகக் கூறிச் சென்றார். தம்பு இதை மறந்தே போய் விட்டார். ஆனால்

> பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
> வயிற்றுப் பெருமான் பொருட்டு [1]

என்று பெரியோர் கூறியவாறு சோதிடர் வயிற்றுப் பிழைப் பின்பொருட்டு ஏதோ கூறிச் சென்றார் என்ற கருத்து மட்டிலும் அவர் மனத்தில் ஊன்றிக் கிடந்தது.

x x x x

பொருள்களில் பற்றாக்குறை ஏற்படுங்கால் அரசு பல்வேறு கட்டுப்பாட்டுக் (Control) கொள்கைகளை ஏற்படுத்தும். இரண்டாம் உலகப்பெரும்போர் நடைபெற்ற போதும் அது முடிவுற்றுச் சிலகாலம் வரையிலும் உணவுப் பொருள்கட்கும் (அரிசி, சருக்கரை முதலியவை) துணி

---

1 அறநெறிச் சாரம் - 130

முதலியவற்றிற்கும் கட்டுப்பாடுகளை விதித்தது அரசு. அப்போது நம் நாட்டை ஆண்டது பிரிட்டிஷ் அரசு. துறையூரில் வணிகர் ஒருவர் மாதம் நாற்பதினாயிரம் கெஜம் துணியை இலங்கைக்கு அனுப்பும் உரிமம் (Licence) பெற்றார். ஆனால் அவர் உண்மையில் துணி வாங்கி அனுப்பும் செயலில் ஈடுபடவில்லை. இதனை யாரோ ஒரு பெரு வணிகருக்கு விற்று விட்டுத் தாம் மட்டிலும் மாதந்தோறும் ரூபாய் நாற்பதினாயிரம் பெற்றுக் கொண்டே வந்தார். பற்றாக்குறை நிலவிய சில ஆண்டுகளில் நாற்பது ஐம்பது இலட்சம் ரூபாய் அவரிடம் குவிந்தது. இப்படிப் போர்க் காலப் புதிய பணக்காரர்கள் எத்தனையோ பேர் தோன்றியதை நாம் அறிவோம்.

துறையூர் துணிக்கடை வணிகருக்கு இப்படிப் பொருள் குவித்ததைக் கண்டனர் அவர் கடைப் பணியாட்கள். குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்து வந்தவர்கள் தம் முதலாளியை அணுகித் தமக்கும் ஒரு சிறு பகுதித் தொகையைப் பிரித்து வழங்க உதவுமாறு வேண்டினர். முதலாளிக்கு மனம் வருமா? அவ்வாறு தருவதற்கு அவர் ஒருப்படவில்லை. மனிதனை ஆசைபடுத்துகின்ற பாட்டைச் சொல்லிமுடியாது. ஆசையால் முதலாளிக்குக் கணக்கில் வராத பணத்தின் ஒரு பகுதியைப் பிரித்துத் தர மனம் வரவில்லை. எப்படியாவது ஒரு சிறுபகுதியாவது தமக்குக் கிடைத்தால் தம் வறுமைத் துன்பம் ஓரளவு ஒழியும் என்று கருதினர் பணியாளர்கள். இதுவும் ஆசையின் விளைவு தானே. தம் முதலாளியின் மனநிலையை நன்கு அறிந்த அப்பணியாளர்களில் ஒருவர்-கட்டுப்பாட்டு வாணிகத்தின் தில்லு முல்லுகளை நன்கு அறிந்தவர்-சுங்கத்துறைக்கு ஒரு மொட்டைக் கடிதம் எழுதியதுடன் மேலும் மேலும் தகவல்களைத் தந்து கொண்டேயிருந்தார். எலிப்பொறியில் எலி மாட்டிக் கொண்டது போல் வசமாக வழக்கில் மாட்டிக்கொண்டார் முதலாளி. வழக்கு மெய்ப்பிக்கப் படுத்தப்

பெற்றால் பன்னிரண்டு ஆண்டுகள் கடுஞ்சிறை வாசம் கிடைக்கும் என்ற நிலை உருவாகியது. முதலாளி-தொழிலாளர்கள் உறவு சரியாக அமைந்து விட்டால், இன்று அடிக்கடி நடைபெற்றுவரும் தொழிலாளர் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் இவற்றிங்கெல்லாம் இடம் ஏது?

துணிக்கடை முதலாளி நாலும் தெரிந்த தம்புவை நெருங்கி தம் இக்கட்டான நிலையை விளக்கித் தம்மை எப்படியாவது இச் சிக்கலினின்றும் தப்புவிக்குமாறு பலவாறு வேண்டினார். பிறருக்கு உதவுவதையே ஒரு கொள்கையாகக் கொண்ட தம்பு இதில் தலையிட்டார். எங்கெங்கு எப்படியெல்லாம் யாரையெல்லாம் அணுகவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர் தம்பு. ஒரு சில இலட்சம் ரூபாய் தண்ணீர்போல் பெருக்கெடுத்து நாலாபுறமும் பாய்ந்து சென்றது. பணம் பத்து விதம்' செய்யுமல்லவா? போர் மேகம்போல் சூழ்ந்த நிலைமை ஆதவனைக் கண்ட பனி போல் விலகியது. முதலாளியின் இக்கட்டுகள் யாவும் மறைந்து புதுப் பிறவி எடுத்தது போலானார். எல்லாம் நல்லபடியாக முடிந்தது.

x x x x x

நான்கைந்து மாதங்கள்கழித்து விவரமாக எழுதியசாதகக் குறிப்புகளுடன் வந்து சேர்ந்தார் சோதிடர். அக் குறிப்புகளையெல்லாம் கவனத்துடன் படித்தார் தம்பு. குறிப்புகள் யாவும் நற்பலனையே சுட்டுவனவாக இருந்தன. அவற்றுள் ஒரு பகுதியின் சாரம்: "உங்கள் எதிர் காலம் சிறப்பாக அமையுமென்று சாதகரீதியாகத் தென்படுகின்றது. இன்னும் ஒன்றிரண்டு பேருந்துகளுக்கு அதிபதியாக இருப்பீர்கள். ஐந்தாண்டுகட்குள் இருபது பேருந்துகள் அடங்கிய ஒரு கம்பெனிக்கு முதலாளியாகத் திகழப் போகின்றீர்கள். அப்பொழுது உங்கள் புகழ் நாற்றிசையும் எட்டி மிக்க சிறப்புடன் திகழ்வீர்கள் பணப் புழக்கம் வெள்ளம்போல் புரளும்

அப்பொழுது என்னை வரவழைத்து இவ்வூர் சினிமா கொட்டகையில் எனக்கு ஒரு சிறப்புச் செய்வீர்கள். பட்டு வேட்டி, பட்டு அங்கவஸ்திரம், பட்டுச் சட்டை வெகு மதியாக வழங்குவதுடன் ஒரு பொற்கிழியும் (பண முடிப்பு) எனக்கு அளிப்பீர்கள்" இதைப் படித்த தம்புக்கு சிரிப்புதான் வந்தது. இன்னும் சில நாட்களில் வேலையும் போகப் போகின்றது. மாதம் ஊதியமாகக் கிடைத்து வந்த ரூ. 50/-ம் நின்றுபோகும். "இந்நிலையில் கம்பெனி முதலாளியா?" என்று மலைத்துப் போனார். சோதிடருக்கு காப்பி பானம் வழங்கி சிறிது வெகுமதியுடன் அனுப்பி வைத்தார்.

ஒரு சில மாதங்களில் கிருட்டிணசாமி ரெட்டியார் பணியிலிருந்து கழன்று கொள்ள வேண்டிய நாளும் வந்தது; விலகிக் கொண்டார். முதலாளி சிதம்பர ரெட்டியார் தம்புக்கு ஒரு பழைய பேருந்தை அன்பளிப்பாகத் தந்து அதனைக் கொண்டு வாழ்க்கையைப் புதிய பாதையில் அமைத்துக் கொள்ளுமாறு வாழ்த்தினர். ஆனால் தம்பு அதை ஏற்றுக் கொள்ளவில்லை, அன்றைய நிலைமையில் அதன் மதிப்பு ரூ. 1500/-ஆக இருந்தது. தம்பு சொன்னார்; "நீங்கள் உதவினமைக்கு மிகவும் நன்றி. இதனால் என் எதிர் காலத்தில் நல்லூழ் நன்றாக இருந்தால் முன்னேற்றம் அடையலாம். தீயூழ் நேரிட்டால் என் நிலைமை சீர்கெட்டு நான் அழிந்து போகவும் வாய்ப்பு ஏற்படலாம். வாழ்ந்தால் 'பெரிய மனிதர் வாழ்த்திக் கொடுத்தார். அதனால்தான் நன்றாக இருக்கின்றான்' என்று மக்கள் பேச்சுக்கு இடம் ஏற்படும். தாழ்ந்தால், 'பாவிகெட்ட எண்ணத்தால் தந்த தால் தம்பு இப்படிச் சீர்கெட்டு அழிந்தான்' என்ற பேச்சுக்கும் இடம் ஏற்படலாம். இப்படிப் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் இடம் ஏற்படவேண்டா. ஆகவே இதன்

விலையாகிய ரூ. 1500/- தந்து விடுகின்றேன்' என்று கூறி எங்கோ கடன் வாங்கித் தொகையைச் செலுத்திப் பேருந்தைப் பெற்றுக் கொண்டார்.

பெற்ற பேருந்தை நன்முறையில் பழுது பார்த்துப் புதிய வண்டிபோல் செய்தார். இரட்டை வில்விசை (Double Spring) அமைப்பைப் பொருத்தி அதிகமாக ஆட்களை ஏற்றினாலும் வண்டி தாங்கும் நிலையை அமைத்தார். உரிமம் பெற்று நாமக்கல்லுக்கும் துறையூருக்குமாக காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையுமாக ஓடிக் கொண்டிருந்தது. தாம் பணியாற்றிய முதலாளிக்கு நன்றி செலுத்தும் பாங்கில் வண்டிக்கு **'சிதம்பர விலாஸ்'** என்ற பெயரிட்டார். அக் காலத்தில் அதிக வண்டிகள் இல்லாததால் நல்ல வகுல். ஏழ்மை நீங்கிக் செழிப்புடன் திகழலானார் தம்பு.

இந்த நிலையில் சுங்க வழக்கினின்றும் தப்புவிக்கப் பெற்ற துணிக்கடை முதலாளி பல இலட்சம் இவர் பொறுப்பில் ஒப்படைத்து இலாபம் அதிகம் கிடைக்கும் தொழிலொன்றைத் தொடங்குமாறு பணித்தார். தம்புக்கு சினிமா படத் தொழில் நினைவுக்கு வந்தது. அதில் காலை வைக்கலாம் என்று கருதி ஓராண்டுக் காலம் பல்லாயிரக் கணக்காகச் செலவழித்து அத்தொழிலின் நெளிவு சுழிவுகளையெல்லாம் ஆராய்ந்தார். நடிகை, நடிகர் தொடர்பு, ஸ்டுடியோ வசதிகள், படமெடுப்போர் உதவி முதலிய விவரங்களையெல்லாம் நன்கு ஆராயலானார். தமக்கு முற்றிலும் புதிய தொழிலல்லவா?

ஒரு செயலில் இறங்குவதற்கு முன் அதைப்பற்றி நன்றாக எண்ணிப் பார்த்துத் துணியவேண்டும். துணிந்து தொடங்கி விடலாம்; பிறகு எண்ணிக் கொள்ளலாம் என்று செய்வது பெருங் குற்றமாகும்.

எண்ணித் துணிக கருமம்; துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு (467)

என்பது வள்ளுவர் வாக்கன்றோ? இன்ன வகையால் செய்தால் இதை முடிக்கலாம் என்று வழியோடு செய்யாத முயற்சி வீணாகும்; பலர் துணையாக நின்று காப்பாற்றி னாலும் அந்த முயற்சி பயன் அளிக்காது. ஆகவே எல்லா வற்றையும் முன்னமே நன்றாக எண்ணிப் பார்த்து வழி யோடு முயற்சி செய்யவேண்டும். நல்ல செயலாக இருந் தாலும் ஆராய்ந்த பிறகு தான் அதில் இறங்கவேண்டும்.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் (466)

என்ற பொய்யாமொழியும் நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

ஆர். கே. ரெட்டியார் தெய்வ பக்தி மிக்கவர்; காந்தி யடிகளிடம் பேரன்பு கொண்டவர். இயன்றவரை காந்தி யடிகளின் கொள்கைகளைக் கடைப் பிடித்தவர். கதராடை களையே அணிபவர். பாரதியார் கவிதைகளில் மிகவும் ஆழங்கால்பட்டவர். பாரதியாரின் "கண்ணன் பாட்"டில் இவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. 'கண்ணன்-என் சேவகன்' என்ற பாடலை அற்புதமாகப் பாடி நம்மை அதிலேயே மறக்கச் செய்து விடுவார். கேட்போருக்கு இன்னும் ஒரு முறை கேட்கவேண்டும் என்ற ஆசை இருக்கும். கீதையைப் படிக்காவிட்டாலும் அதன் முக்கியமான கருத்துகளின் ஒளியில் தம்மை நடத்திச் செல்பவர். திருவரங்கச் செல்வ னிடம் பேரன்பு கொண்டவர். ஆண்டுதோறும் நடை பெறும் அரங்கன் விழாவில் கணிசமான அளவுக்குத் தம் பொருளை விரயம் செய்யும் பெருமை பெற்றவர்.

x x x

சினிமாத் தொழிலின் நெளிவு சுழிவுகளையெல்லாம் ஆய்ந்த கிருட்டிணசாமி ரெட்டியார் அத்தொழிலில் தமது இயல்புக்கு ஒத்துவராது என்று கருதி அதில் இறங்காதது தெய்வத்தின் கட்டளை என்றே கருதவேண்டும். இந்த இடத்தில் கண்ணன் கீதையில் குறிப்பிடும் 'சுதர்மம்' பற்றி நினைவில் எழுகின்றது. கிருட்டிணசாமி ரெட்டியாருக்கு இயல்பாக அமைந்தது பேருந்துத் தொழில். சிறு வயதிலேயே ஒரு நிலக்கிழாருக்கு மகிழ்வுந்து ஓட்டியாகப்பணியாற்றினார். பின்னர் ஒரு பேருந்து கம்பெனியில் மேலாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். அதன் பின்னர் ஒரு பேருந்தின் அதிபதியானார். ஆகவே தொடக்கத்திலிருந்தே மோட்டார்த் தொழில் கிருட்டிணசாமி ரெட்டியாருக்குச் சுதர்மமாக அமைந்துவிட்டது. அப்படியிருக்க துணிக்கடை முதலாளி புதிய தொழில் ஒன்றைத் தொடங்குவதற்கு வகை செய்ய, தம்புக்கு மோட்டார்த் தொழில் சிறப்பற்றதாக (விகுணமாக)த் தோன்றலாயிற்று. இத்தோற்றம் நிலையற்றதே. இவர் உள்ளத்தில் வீற்றிருந்த கண்ணன் இவரைத் தடுத்து நிறுத்தினான். சினிமாத் தொழில் பற்றிய இவர் ஆய்வு இவரிடம் ஒருவித தெளிவினைத் தந்தது. "நமக்கு உகந்த தொழில் மோட்டார்த் தொழிலே" என்ற முடிவுக்கும் வரச் செய்தது. அதற்கு ஏற்ற தருணமும் இயல்பாகவே வந்து சேர்ந்தது.

இதுகாறும் தம்புவைப் பற்றிக் கூறியவையாவும் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றவை. நாடு விடுதலை பெற்றபிறகு தம்புவின் வாழ்க்கையிலும் தொழிலிலும் புதிய திருப்பம் ஏற்பட்டது. எல்லா நிலைகளிலும் சாதகமான சூழ்நிலைகளே உருவாயின. கும்பகோணத்தில் ஒரு பேருந்துக் கம்பெனியார் பதின்மூன்று பேருந்துகளை விற்றார். அவற்றை வாங்கினார் தம்பு. வண்டிகளைப் பழுதுபார்த்து நல் நிலைக்குக் கொணர்ந்தார்.

இவற்றை ஓட்டுவதற்கு இணக்கச்சீட்டு (Permit) வாங்க வேண்டுமல்லவா? அதற்கு முயன்றார். அக்காலத்தில் இன்னோர் அன்பர் நான்கு புதிய பேருந்துகளை வாங்கி 'நேஷனல் மோட்டார் சர்வீஸ்' என்ற பெயரில் ஒரு கம்பெனி அமைத்து இணக்கச் சீட்டுக்காக (Permit) முயன்று கொண்டிருந்தார்.

வெள்ளையர் ஆட்சியில் காரியம் நிறைவேற செல்வாக்கும் கையூட்டும் தேவைப்பட்டன. இவை அதிகாரிகளின் மட்டத்திலேயே நடைபெற்றுவந்தன. நாடு விடுதலைபெற்ற பிறகு (1947க்குப் பிறகு) அதிகாரிகள் மட்டத்திலிருந்த செல்வாக்கு படிப்படியாக அரசியல்வாதிகளின் மட்டத்திற்கு மாறியது. முதலில் செல்வாக்கால் செயல்கள் நடைபெற்றன. நாளடைவில் கையூட்டும் தலையெடுக்கத் தொடங்கியது. இக் கையூட்டுமுறை முதலில் வாமனாவதாரம்போல் தொடங்கி நாளடைவில் திரிவிக்கிரமாவதாரமாக வளர்ந்துவிட்டது. போக்குவரத்துத் தொழிலில் பேருந்துகள் பெரும்பங்கு கொண்டுள்ளன. மோட்டார் சட்டங்களிலும் வரிவிதிப்புகளிலும் மாற்றங்கள் பேரளவில் நடைபெற்றுவிட்டன. பேருந்துத் தொழில் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னர் அரசு வருமானமும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மிகவும் உயர்ந்து காணப்பட்டது.

விடுதலைக்குப் பிறகு இந்தியாவில் காங்கிரசின் செல்வாக்குதான் ஓங்கிநின்றது. ஒவ்வொரு மாநிலத்திலும் தனிப்பட்ட ஒருவர் அல்லது ஒருசிலர் மிக்க செல்வாக்குடன் திகழ்ந்தனர்—கட்சிமட்டத்தில். இவர்களே அரசுமட்டத்திலும் செல்வாக்கைச் செலுத்தி செயல்களை நிறைவேற்றுவித்தனர். தொடக்கக் காலத்தில் இலாபமற்ற உதவியாகத் தோன்றியது படிப்படியாகப் பணஉதவியாக மாறியது. அரசியல் உலகில் 'பண மூட்டைகள்' பெருகலாயின. முதலில்

இச்செயல் பொதுமக்களுக்கு விளங்காப் புதிராகவே இருந்து வந்தது. இன்றைய நிலையில் இதை அறியாதவர்களே இலர். குடிசைவாழ் மக்களும் - ஏன்? பிச்சைக்காரர்கள் உட்பட - இந்தக் கையூட்டு நாடகத்தை நன்கு அறிந்துள்ளனர்- தொடக்கத்தில் ஆட்சி தியாக புருடர்களின் கையிலிருந்தது. இவர்கள் கையிலிருந்தவரை நாட்டிற்குக் கேடொன்றும். விளையவில்லை. நாளடைவில் ஆட்சி படிப்படியாகப் பண மூட்டைகள், தில்லுமுல்லுக்காரர்கள், கபடநாடகம் நடிப் போர் இவர்கள் கைக்கு மாறியது. இவர்கள் கையில் உள்ள ஆட்சியில் சுரண்டல்களைத் தவிர வேறொன்றையும் காண முடியவில்லை. நாட்டிற்குச் சலியாத நல்ல வருவாயைத் தந்தவர்கள் யாவரும்,

எலியாக முயலாக இருக்கின் றார்கள்
ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டேன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?[2]

என்று பாவேந்தர் நாட்டில் நிலவிவரும் நிலையைக் காட்டு கின்றார். அரசியல்வாதிகள் பொருளாதாரச் சீர்கேட்டை உண்டாக்கியதைப் பாவேந்தர்,

பொத்தல்இலைக் காலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வா

அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வமெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக்கொண்டு
சதிராடு தேவடியாள்போல் ஆடிற்று!
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின்றார்கள்.[3]

2. புரட்சிக்கவி.
3. உலகப்பன் பாட்டு-2,3.

என்று பிட்டுபிட்டுக் காட்டுகின்றார். இன்றைய நிலையைச் சிந்தித்த என்மனம் குமிழியை எங்கோ இழுத்துச் சென்று விட்டது.

தமிழக அரசியலில் மிக்க செல்வாக்குடன் திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராசர். இவருக்கு வலக்கைபோல் திகழ்ந்தவர் திருச்சி T.S. அருணாசலம்; இவர் சட்டமன்றப் பேரவை உறுப்பினருங்கூட (M.L.A). பெரும்பாலோர் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்கு காமராசரை நெருங்கு வதில்லை. அக்காலத்தில் அவர் தமிழகக் காங்கிரஸ் தலைவர்; அரசுமட்டத்தில் தம்மை நேராக உட்படுத்திக் கொள்ளவில்லை. T.S. அருணாசலம் காமராசருக்கு மிகவும் வேண்டியவராதலால் பெரும்பாலோர் இவரையே நாடினர். காமராசருக்கு நேரடியாக அரசுத் தொடர்பு இல்லையாயினும் அரசு நிர்வாகத்தில் இவரது குரலே - திருக்குறிப்பே-அதிகமாக ஒலித்தது. இவர் பெயர்த்தொடர்பு இருப்பதாகத் தெரிந்தாலும் போதும், காரியங்கள் வெற்றி யுடன் நடைபெற்றுவிடும்.

பேருந்து ஓட்டுவதற்கான இணக்கச் சீட்டு பெறுவதற் கான விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்பிவிட்டுக் கிருட்டிண சாமிரெட்டியாரும், நேஷனல் மோர்ட்டார் சாவீஸ் அன்பரும் T.S. அருணாசலம் இல்லத்திற்கு ஓராண்டு காலத்திற்குமேல் நடையாக நடந்தனர். குழந்தைப் பேறு வேண்டுமென்று அரசு - வேம்புக்குக்கீழ் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானைச் சுற்றிவரும் பெண்களைப்போல அருணாசலத் தைக் சுற்றிச்சுற்றி வந்தனர். திருவண்ணாமலையைப் பல நூறுதடவைச் சுற்றுவதில் ஏற்படும் அயர்ச்சியைப்போல் பன்மடங்கு அயர்ச்சியை அநுபவித்திருக்க வேண்டும். அக் காலத்தில் (1947-50) நான் துறையூரில் இருந்தபடியால் இதனை ஓரளவு நன்கு அறிவேன். ஒருசமயம் என் சொந்த

விஷயத்தில் உதவும் பொருட்டுத் தம்பு என்னைத் தம் செலவில் சென்னைக்கு இட்டுச் சென்று ஒரு வாரம் வைத்திருந்தபோது இந்த வரலாற்றையெல்லாம் அவர் வாயாலேயே சொல்லக்கேட்டேன். சிலசமயம் அருணாசலத் துடனும், தம்புவுடனும் திருவல்லிக்கேணி கடற்கரையில் மணலில் அமர்ந்துகொண்டு உரையாடுவதுமுண்டு.

தம்பு நளினமாகப் பழகுவர். நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர். அருணாசலத்தைப் பார்க்கும்போதெல்லாம் பண்பு தவறாமல் உரையாடுவார்; இடை இடையே தம் கோரிக்கையையும் விடுவார். நேஷனல் மோட்டார் சர்வீஸ் அன்பரும் அடிக்கடி அருணாசலத்தைச் சந்தித்து இவ்வாறு உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் தம்புக்கு இருக்கும் அளவுக்கு உலகியலறிவு, உரையாடும் நளினம், பொறுமை முதலியவை அவருக்கு இல்லை. சில சமயம் இருவருமே ஒரே சமயத்தில் அருணாசலத்தைச் சந்தித்து உரையாடி அவருக்குத் தருமசங்கடத்தை விளை விப்பதுமுண்டு.

அருணாசலம் காலக்கெடுவின்றித் தம்மை இழுக்கடிப் பதைக்கண்டு நேஷனல் மோட்டார் சர்வீஸ் அன்பர் மிக்க சினம் கொண்டார். அருணாசலத்தை அவரது இளமைக்கால நிகழ்ச்சிகளை எடுத்துக்கூடி அவரை வாய்க்குவந்தபடி ஏசிப் பேசித் திரும்பினார். இதனால் இருவரிடையேயும் நொது மலாக இருந்த அருணாசலத்தின் அன்பு ஒருவரிடையே வெறுப்பாக மாறிவிட்டது. இதன் முடிவு எப்படிப்போகும் என்பதை நாம் அறிந்ததே. இத்தகையவருக்கு எப்படி உதவி கிடைக்கும்? இவ்விடத்தில் சினத்தின் கேட்டைப்பற்றி,

> சினம்கொள்வர் தம்மைத்தாமே தீயாற்சுட்டு
> செத்திடுவார் ஒப்பாவார்; சினங்கொள்வார் தாம்
> மனங்கொண்டு தம்கழுத்தைத் தாமே வெய்ய

வாள்கொண்டு கிழித்திடுவார் மானு வாராம்
தினங்கோடி முறைமனிதர் சினத்தில் வீழ்வார்
சினம்பிறர்மேல் தாம்கொண்டு கவலை யாகச்
செய்ததெணித் துயர்க்கடலை வீழ்ந்து சாவார்

என்று பாரதியார் கூறும் கருத்தும் இக்குமிழியில் எழு கின்றது. தம் தலையில் தாமே மண்ணைவாரி போட்டுக் கொண்டதுபோன்ற நிலையினை அடைந்தார் நேஷனல் மோட்டார் சர்வீஸ் அன்பர்.

நாளடைவில் அருணாசலத்தின் அன்பு தம்புமீது சாய்ந்தது. மிக விரைந்து செயற்பட்டார். காமராசரைச் கலந்தார்; இருவரது கூட்டால் தம்புக்கு 'சிதம்பர விலாஸ்' மோட்டார் கம்பெனிபோட்ட விண்ணப்பத்தின்மீது பதின் மூன்று பேருந்துகட்கு இணக்கச்சீட்டு (Permit) கிடைத்தது. வண்டிகள் ஓடத் தொடங்கின. வசூல் காவிரிவெள்ளம் போல் பெருகத் தொடங்கியது. தம்புக்கு நன்கு பழக்கப் பட்ட தொழிலாதலால் அது நாடோறும் புதுமெருகேறி பொதுமக்கள் புகழும் கம்பெனியாயிற்று. கண்ணன் காண்டீபனுக்கு உரைத்த சுதர்மத்தின் பலனைத் தம்புவின் வாழ்வில் காணலாம்.

x x x

T. V. S. கம்பெனி மாதிரி பேருந்துகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தினார். ஓட்டுநரும் நடத்துநரும் பயணிகளிடம் இங்கிதமாகவும் மரியாதை யாகவும் நடந்து கொள்ளுமாறு அறிவுரைகள் தந்தார். பேருந்துகள் புறப்படும் நேரம், அவை சேர வேண்டிய இடங்களை அடையும் நேரம் இவை பயணிகள் சௌகரியத் துக்கு ஏற்றவாறு காலங்களை மாற்றி அரசிடம் இசைவு பெற்றார். இதனால் கம்பெனி காமதேனு பால் சுரப்பதைப்

பெற்றார். இதனால் கம்பெனி காமதேனு பால் சுரப்பதைப் போல் அதிக வருமானத்தைத் தந்தது. தாம் கம்பெனியை மேற்பார்த்து நடத்துவதற்காக ரூபாயில் நான்கணா பங்கு; உரிமையாக ஆறணாபங்கு; நிதி உதவி செய்தவருக்கு ஆறணா பங்கு என்றுபங்குகளை வரையறைப் படுத்திக் கொண்டிருந்தார். கம்பெனி செழித்தவுடன் தம்புவின் வாழ்வும் செழித்தது. நடையுடை பாவனைகளில் சிறிது மாற்றம் காணப்பட்டது. எளிமையாக இருப்பவர் தான், படாடோபமாக வாழ விரும்பாதவர். இக்காலத்தில் தான் துறையூர் அஞ்சல் நிலைய வீதியில் அஞ்சல் நிலையத் திற்கருகில் ஒரு பழைய வீட்டை வாங்கி நல்ல முறையில் புதுப்பித்து பெரிய திருமாளிகையாக்கினார். நவின வசதிகள் அனைத்தையும் செய்து கொண்டார். கிருட்டிணசாமி என்ற தம் பெயருக்கேற்ப திருமாளிகைக்குத் 'துவாரகை' என்று திருநாமம் இட்டார். துறையூர்—திருச்சி சாலையில் ஒரு பெரிய இடம் வாங்கி அதில் பேருந்துகள் இரவில் நிற்பதற்காகவும், கம்பெனி அலுவலகத்திற்காகவும் ஏற்ற வசதிகளைச் செய்து கொண்டார். மகனை நல்ல முறையில் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்தார், மகளுக்கு இசைப் பயிற்சி அளிக்க வாய்ப்புகளை உண்டாக்கினார்.

இவர் நிலையைக் கண்ட இனத்தார்களில் சிலர் பொறாமைப்பட்டனர். மிட்டாதார், ஜமீந்தார்போல் வாழும் தம் வாழ்க்கை வசதிகளை விட அதிகமாக்கிக் கொண்டாரே என்ற கடுப்புதான் இதற்குக் காரணம். சிலர் தமக்குக் கம்பெனியில் பங்கு கிடைக்கும், எப்படியாகிலும் ஓரணா, இரண்டணா பங்கு வாங்கிக் கொள்ளலாம் என்று கருதியே பெருந்தொகைகளை வலியவந்து தந்தனர். தம்பு அவற்றை மறுக்கவில்லை; வாங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொண்டார். 'அதிகம் போனால் வட்டி தானே தர வேண்டும், அதனை ஒன்றுக்கு ஒன்றரை வீதம் தந்தால்

போச்சு' என்று கருதியே பணத்தை வாங்கிக் கொண்டார். இதற்கிடையில் பணம் தந்த துணிக்கடை முதலாளியும் இவர்மீது பொறாமைப்பட்டிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு. பழைய முதலாளி — செவிட்டுத் தம்பு கூட இவருடைய வேகமான முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்பட்டிருக்க வேண்டும். 'ஏழ்மை நிலையி லிருந்தவர் சீரும் சிறப்புமாக வாழ்கின்றாரே' என்று சிலரது கண்ணெச்சில் கூட பட்டிருக்க வேண்டும்.

இப்படி ஒன்றிரண்டு ஆண்டுகள் உருண்டோடின. இக் காலத்தில்தான் முன்னேற்றத்தை முன்பே கணித்துக் கூறிய சோதிடருக்குப் பாராட்டுகளும்வெகுமதிகளும் பொற்கிழியும் வழங்கியதாகக் கேள்வி! திருச்சி மாவட்டத்தில் பெரும்புள்ளி களும் ஒருவராகத் திகழலானார் தம்பு. ஏழை எளியவர்கட்கு இயன்ற வரை உதவிகள் செய்தார். தம்மிடம் பணியாற்றும் அனைவருக்கும் நல்ல ஊதியம் போனஸ், தீபாவளி பொங்கல் பண்டிகைகட்கு வெகுமதிகள், அன்பளிப்புகள் தாராளமாக வழங்கினார். இதனாலும் நாலும் தெரிந்த நல்லவர் வல்லவராக இருந்தமையாலும் தம்பு புகழேணியில் நின்றார். காங்கிரஸ் கட்சியும் இவர்மீது கவனத்தை வைத்தது. தமக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவிய T. S. அருணாசலம் குடும்பத்திற்குக் கணிசமான நிதி உதவி அதைச் செழிப்பாக்க வேண்டும் என்று அடிக்கடி என்னிடம் சொல்லிக் கொண்டிருப்பார். அப்படி ஏதாவது செய்திருந் தாலும் பிறர் அறியாமல்தான் செய்வார். இவர் செய்யும் உதவிகளில் விளம்பரத் தொனி இராது; படாடோபம் இராது. வலக்கை செய்வது இடக்கைக்குக் கூடத் தெரியாத வண்ணம் பிறருக்கு உதவுவார்.

x x x

இந்த நிலையில் நான் துறையூர்ப் பணியைத் துறந்து காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில்

பேராசிரியர் பணியை ஒப்புக் கொண்டு விட்டேன். எந்தப் பணியானாலும் அதில்என்னையே மறந்துஆழ்ந்துவிடுதல்என் இயல்பு. 'பணியே பரமனது வழிபாடு' (Work is worship) என்ற வாசகமே எனக்குச் சிறந்த ஒளிவிளக்காகப் புலப் பட்டது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் அருள் வாக்கின் கருத்தையும் ஓரளவு என் பணி வாழ்க்கையில் கடைப் பிடித்தேன். பல காரணங் களால், பல இடர்ப்பாடுகளால் தள்ளிப் போடப்பட்ட எம். ஏ. தேர்வுக்குப் படித்தல், கல்லூரி நூலகப் பணி, இவற்றில் மறந்த நிலை. கற்பிக்கும் முறை பற்றியும் கல்வி உளவியல் பற்றியும் அதிகமான நூல்களைப் படித்துக் குறிப்புகள் எடுக்க வேண்டியிருந்தது. இதனால் துறையூர் செய்திகளில் கவனமே இருப்பதில்லை.

x x x

நான்கு பேர் சேர்ந்து கூட்டு வாணிகம் செய்வதில் யாரோ ஒருவர்தான் வாணிகத்தில் செயற்படும் நிலையில் இருக்கமுடியும். சம்பள ஆட்களைக் கொண்டு தான் செயல் களைச் செய்விக்க வேண்டியிருக்கும். எல்லோரும் வாணிகத்தில் கங்காணித்தனம் பண்ணத் தொடங்கினால் வாணிகம் உருப்படாது. திறமையும் அநுபவமும் இருந்தால் யோசனை கூறலாமேயன்றி அடிக்கடி தலையீடு கூடாது. செயல்படுபவர் விருப்பம் போல் செய்கின்றார் என்ற ஐயமும் கூடாது. வாணிகத்தின் முன்னேற்றம் கருதி விட்டுக் கொடுக்கும் மனநிலை வேண்டும்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் (குறள் 510)

என்பது வள்ளுவர் வாக்கு. இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படத் தொடங்கினால் மாற்று முறை ஒன்றைக் கண்டுபிடித்தேயாக வேண்டும். இப்படி ஒரு சூழ்நிலை தம்பு கம்பெனியில்

ஏற்பட்டதோ என்ற ஐயம் என்பால் உண்டு. நேர்மையும், நாணயமும் உள்ள ஒருவரை ஐயுறுதல்தொழில் முன்னேற்றத் திற்குக் குந்தகத்தைத்தான் விளைவிக்கும். கூர்த்த மதியை உடையவராதலால் தம்பு எந்தவிதச் சூழ்நிலையையும் நாசூக்காகச் சமாளிக்கும்திறமை அவருக்குக் கை வந்தகலை. கீதையில் கண்ணன் குறிப்பிடும் சுதர்ம உணர்வுதான் உந்து விசை தந்து அவரைச் செயற்படத் தூண்டியிருக்க வேண்டும்.

என்றோ ஒரு நாள் தொழிலுக்கு முதலீடு செய்த துணிக்கடை முதலாளியை வரவழைத்து அவரிடம் விவர மாகப் பேசி அவர் முதலீடாகப் போட்ட தொகைக்குக் கணிசமான அளவுக்கு மேலாகவே வட்டி போட்டுக் கணக்கைத் தீர்த்துவிட்டார். பல தடவைகளில் பலர் ஈரோட்டாகத் தந்த தொகைகட்கு நல்ல வட்டி போட்டுக் அவர்கள் கணக்குகளையும் தீர்த்து விட்டார். இப்பொழுது பேருந்து கம்பெனிக்கு முழு உரிமையாளராகி விட்டார். இனி தம் விருப்பப்படி கம்பெனியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லுதலாம். இவற்றிலிருந்து பல கிளை நிறுவனங்களையும் தொடங்கி விருத்தி செய்யலாம். இறையருளால் அந்த நிலைகள் உருவாகத் தொடங்கின. இதற்கு முன்னரே உறையூர் சாலையில் ஒரு திருமாளிகையை அமைத்துக் கொண்டு திருச்சி வாசியாகி விட்டார்.

சில ஆண்டுகளில் 'துவாரகை' மாளிகையை விற்றுவிட்டுத் திருச்சிக்குக் குடியேறினார். உறையூர் சாலை ரோடில் ஒரு பெரிய மாளிகை அமைத்துக் கொண்டு அதில் வாழ்ந்து வந்தார். இக்காலத்தில் காமராசர் முதலமைச்சராக இருந்த காலம். இந்த நேர்மையான முதலமைச்சரின் நட்பு 'நல்லவர்' என்று பேரெடுத்த தம்புவிற்குக் கிடைத்தது இறைவனின் திருவுளக் குறிப்பாகும். இக்காலத்தில் பேருந்துத் தொழிலையும், பெட்ரோல், மண்ணெண்ணெய்

விற்கும் ஏஜென்சிகளை எடுத்து மேலும் தம் தொழிலை விருத்தி செய்து கொண்டு வருமானத்தைப் பெருக்கினார். 1957 பொதுத் தேர்தல் வந்தது. காமராசர் தம்புவைப் பெரம்பலூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நிற்குமாறு பணித்தார்; இதற்கு விருப்பமில்லையென்றால் ஓர் இலட்சம் ரூபாய் காங்கிரசுக்கு நன்கொடை வழங்கலாம் என்று மாற்று ஏற்பாட்டையும் இவர் முன் வைத்தார். தம்பு முதல் ஏற்பாட்டிற்கு இணங்கி பெரம்பலூர் தொகுதியில் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்தலில்நின்று வெற்றியும் பெற்றார்.

திருரெட்டியாரின் மகன் சின்னபாப்பு என்பவர் பட்டப் படிப்பையும் சட்டக்கலூரிப் படிப்பையும் முடித்துக் கொண்டு தந்தையாருக்கு உதவியாகத் தொழிலில் இறங்கி விட்டார். இக்காலத்தில் **'சங்கம்'** என்ற பெயரில் நட்சத்திர விடுதியொன்று தொடங்கப் பெற்றது. அதன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுநடத்தி வந்தார் சின்னபாபு. நான் திருச்சி வரும்போது தம்புவை மட்டிலும் சந்தித்துப் பேசித் திரும்புவதுண்டு. காரைக்குடியில் பணியாற்றிய போது ஒரு முறை தம்புவைச் சந்தித்தேன் "பெரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததுபற்றி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்" என்று தெரிவித்தார்.

1960-முதல் திருப்பதியில் பல்கலைக் கழகத்தில் பணியேற்ற பிறகு பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் திருச்சி தொடர்பு முற்றிலும் அற்றது. 1966-வரை குடும்பம் காரைக்குடியில் இருந்ததால் விடுமுறையில் நேராகக் காரைக்குடி வருவது திரும்புவது என்று மட்டிலும் வழக்கமாக இருந்தது. இக்காலத்தில் 1960-70 வரை அறிவியல் நூல்கள் எழுதுதல், பிஎச்.டி ஆய்வில் மூழ்கியிருத்தல் போன்றவற்றால் உலகியல் நடவடிக்கைகளில் மறந்தே போய்விட்டேன். 1966-ஜூனில் காரைக்குடி வந்த போது தவத்திரு சித்பவா

நந்த அடிகளைச் சேவிக்கும் பணி இருந்தது. திருப்பாராய்த் துறை சென்று திரும்பும்போது தம்புவையும் பார்த்து அளவளாவியதாக நினைவு. வேங்கடத்தில் பணியாற்றி வருவது குறித்துப் பெரிதும் மகிழ்ந்தார். இக்காலத்தில் தம்பு திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்திலும் தம்மை அதிக மாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

1960 முதல் திருப்பதியில் தமிழ் எம்.ஏ. தொடங்கு வதற்குத் தமிழக அரசிடம் மானியம் கோரி அதற்காக முயன்று கொண்டிருந்தேன். திரு.சி. சுப்பிரமணியம் (கல்வி அமைச்சர்) ஆதரவு இருந்தது. அவர் மத்திய அமைச்சராகித் தில்லிக்குச் சென்ற பிறகு காங்கிரசு அமைச்சரவை உதவுவ தாக இல்லை. திரு. பக்தவத்சலம் காலத்தில் என் முயற்சி பலிக்கவில்லை. இக்காலத்தில் தம்புவின் உதவி கோருவ தைப் பற்றி நினைக்கவே இல்லை. காமராசரும் அரசுப் பொறுப்பைக் கழற்றிக் கொண்டு விட்டதால் தம்புவைப் பற்றிய சிந்தனையே என் மனத்தில் எழவே இல்லை. அது திராவிட ஆட்சிக்காலத்தில்தான் கலைஞர் முதல்வராக இருந்தகாலத்தில்தான். மானியம் கிடைத்தது. திருப்பதியில் தமிழில் உயர்கல்வி, ஆய்வு போன்றவைகட்கு வழி யமைந்தது. திருப்பதி சென்றதால் சுமார் இரண்டு இலட்சம் வரை எனக்கு இழப்பு. பதவிஉயர்வு இல்லாமல் தவிப்பு. பேராசிரியர் பதவியைத் துறந்து விரிவுரையாளர் பொறுப்பை ஏற்றதால் வந்த விளை இது. பொருளைஇழந்தாலும், பதவி உயர்வு இன்றித் தவித்தாலும் அங்கு (திருப்பதியில்) உயர் கல்விக்கு வழிவகை ஏற்பட்டதால் முழுமனநிறைவு ஏற் பட்டது. இன்றளவும் (1989) மகிழ்ச்சியுடன்தான் இருக் கின்றேன்.

திருப்பதியிலிருந்த போது ஒருமுறை (1976) என்மகன் இராமலிங்கத்தின் திருமண விஷயமாகத் தம்புவிடம் தொடர்பு கொண்டேன்; நேரிலும் சந்தித்தேன். எண்ணம்

பழமாக வில்லை. அதுவும் நன்மையின் பொருட்டே என்று அமைதிகொண்டு விட்டேன். நான் நினைத்தவாறு அத் திருமணம் நடைபெற்றாலும் என் மனத்திற்குகந்தாக இராது என்று இப்போது உணர்கின்றேன்.

x x x

ஆறு ஏழு ஆண்டுகட்கு முன்னர் தம்பு திருநாடு அலங் கரித்த செய்தியை நாளிதழ்களில்கண்டேன்; துக்கப்பட்டேன். தெளிந்த மனம்; நேர்மையான உள்ளம். நோய்நொடி இல்லாத உடல். அப்படியிருந்தும் இவர்பிரிவு மின்னாது இடித்தது போலிருந்தது. அவர் திருமகன் சின்னபாப்பு தந்தையின் பிரிவை எனக்குத் தெரிவிக்கவில்லை. நல்ல பையன்தான்; நான் அவரிடம் நெருங்கிப் பழகியதை அவன் சரியாக உணரவில்லை போலும் என நினைத்துக் கொண் டேன். எனினும், என் மனம் கேட்கவில்லை. ஒரு வாரத்தில் ஓர் ஆறுதல் கடிதம் எழுதினேன். சுமார் பத்தொன்பது ஆண்டுகள் மக்கட்பேறு இல்லாதவனாக இருந்தான். கடிதத் தில், "பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறந்தலும் உலக இயற்கை என்றாலும் எல்லோராலும் பந்தபாசம் அற்றிருக்க முடியாது. உன் துக்கத்தை நான் அறிவேன்; அதனை நானும் பகிர்ந்து கொள்ளுகின்றேன். பிரிந்தவர் ஆன்மா பரமபதத் தில் அமைதியாக இருக்கும். எனினும், அவரது ஒரு கூறு நினக்கு மகனாகப் பிறந்து நின்னை வாழ்விக்கும். மனங்கலங் காது அமைதியுடன் இருப்பாயாக'' என்று எழுதியதாக நினைவு. இதற்கும் மறுமொழி இல்லை. ஒருகால் செல்வச் செருக்காக இருக்குமோ? இது இறைவனுக்குத்தான் வெளிச்சம். நான் எழுதிய மறு ஆண்டே சின்னபாப்புவுக்கு மகன் பிறந்தான்; மகிழ்ந்தேன்.

இச்செய்தி அறிந்த இரண்டு திங்களில் என் சம்பந்தியார் சம்பந்தி வீட்டில் ஒரு பெரும் பிரிவு நேர்ந்தது. கேதம்விசாரிப் பதற்காகத் திருச்சி சென்றிருந்தேன். சின்னபாப்புவை துக்க

வாசலில் கண்டேன். 'என் கடித ஆசியால் மகன் பிறந்தான்' என்று மகிழ்ச்சி தெரிவித்து மகிழ்ந்தான். 'வருவது தானே வரும்' என்று கூறி வாழ்த்தினேன்.

x x x

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் அரியலூர் அருகில் யாரோ வெடி குண்டு வைத்ததனால் இருப்பூர்தி விபத்து நேரிட்டது. இஞ்சினுக்கு அடுத்ததாகவுள்ள குளிர்ச்சாதனப் பெட்டியில் சின்னபாப்புவும் அவன் துணைவியும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். பெட்டி சுக்கு நூறாக உடைந்து சிதறிப் போயிற்று. அப்பெட்டியில் பயணம் செய்தவர்கள் அனைவருமே பரிதாபகரமாக மாண்டனர். பெற்றோருடன் சின்னபாப்புவின் திருமகன் (குழந்தை) பயணம் செய்யாமல் நேர்ந்தது இறைவன் திருவுள்ளம் போலும் என நினைத்துக் கொண்டேன். இந்தக் குழந்தை வளர்ந்து சான்றோனாகத் திகழ்ந்து தாத்தா R. கிருட்டிண சாமி ரெட்டியார் போல் பரோபகாரியாகவும் தெய்வ சிந்தனையுள்ளவனாகவும் பொலிவுறுவான் என்பது என் நம்பிக்கை,

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.[4]

குமிழி—97

## 33. நினைவுச் சிதறல்கள்

நான் துறையூரில் பணியாற்றிய காலத்தில் ஆசிரியர்கள் கிடைக்காமையால் பட்ட தொல்லைகளைக்

4. குறள் - 377 (ஊழ்)

கணித்துச் சொல்ல முடியாது. ஓய்வு பெற்ற சில ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள வேண்டியிருந்தது. வறுமையால் தானே இவர்கள் வேலை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது என்று எண்ணி மனம் புழுங்குவேன். இவர்கள் "தாம் உண்டு தம் வேலை உண்டு' என்று தம் பணியை அற்புதமாக ஆற்றி வந்தனர். இப்படி நியமிக்கப் பெற்றவர்கள் இருவர். ஒருவர் **அனந்தாச்சாரி** என்பவர்; ஆங்கிலம் கற்பிப்பதில் திறமை மிக்கவர். இன்னொருவர் **கிருட்டிணசாமி அய்யங்கார்** என்பவர்; தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். இவர் கணக்கை அற்புதமாகக் கற்பிப்பவர். இவர்களால் எனக்கு எந்த விதத் தொல்லைகளும் இல்லை. நான் இவர்களைத் தந்தைபோல் பாவித்து மரியாதையாக நடந்து கொள்வேன். நான் பள்ளிமேல் கொண்டிருந்த அக்கறையைக் கண்டு இவர்கள் வியந்து போயினர். அதன் பிறகு ஓய்வு பெற்றவர்கள் கிடைப்பதில்லை. நாங்கள் தரும் சம்பளம் அவர்கட்குப் போதாது; தனிக் குடும்பமும் வைக்க முடியாது. அவர்கள் நிலையில் உணவு விடுதி உணவும் பெரும்பாலும் ஒத்துக் கொள்வதில்லை. இக்காரணத்தால் இவர்கள் சிற்றூர்ப் பக்கங்கட்கு வருவதற்கு விரும்புவதில்லை. திருச்சி போன்ற நகர்ப்புறப் பள்ளிகளையே விரும்பினர். அங்குக் கிடைக்காவிடில் வீட்டில் ஓய்வாக இருப்பதே மேல் என்று இருந்துவிடுவர்.

x x x

பெரும்பாலும் அறிவியல், கணிதம் இப்பாடங்கட்குத் தான் ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. நான் அறிவியல், கணிதம் ஆகிய இரண்டையும் கற்றவனாதலால் மேற்வகுப்பு மாணவர்கட்குக் கற்பிக்கும் பெரும்பளுவை நான் சிரமத்துடன் தாங்கிக் கொள்வேன். எவ்வளவுதான் தாங்க முடியும்? 4, 5, 6 படிவங்களில் இரண்டு, மூன்று பிரிவுகள் ஏற்பட்டதால் பளுவைச் சமாளிக்க முடியவில்லை. தலைமை

யாசிரியனாக இருந்து கொண்டு வகுப்பு ஆசிரியர்கள் கற்பிக்கும் பொழுதுகளை (Periods) விட அதிகமாகவே கற்பித்தேன். சிலசமயம் பளு தாங்க முடியாமல் சோர்ந்து போவதுமுண்டு. என் உடல் நலத்தில் அக்கறை கொண்ட சில தோழ ஆசிரியர்கள் என் பரிதாப நிலைக்கு இரங்குவ துண்டு. இதனால் பயிற்சி பெறாத பட்டதாரிகளை நியமிக்கும் நிலையும் வந்தது. இவர்களில் மூவர் பிராமணர் கள்; ஒருவர் கணித ஆசிரியர்; மற்ற இருவர் அறிவியல் ஆசிரியர்கள். இவர்கள் பயபக்தியுடன் கற்பித்தனர்; மரியாதை யாகவும் நடந்து கொண்டனர். தமிழர்களில் இருவர் நிய மனம் பெற்றனர். இவர்களில் ஒருவர் போர்த் துறையில் பணி யாற்றித் திரும்பியவர்; எம். ஏ. பட்டம் பெற்றவர்; மற் றொருவர் பி.ஏ. கணிதப்பட்டதாரி. முன்னவர் துறையூர்ப் பக்கத்தவர்; பின்னவர் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந் தவர். இவர்கள் இருவரும் கற்பித்து மாணவர்களிடம் நற்பேர் வாங்குவதைவிட,கற்பியாது நற்பேர் வாங்கினவர்கள். மாண வர்களுடன் படக்காட்சிக்குப் போவர்; ஆசிரியர் - மாணவர் என்ற வேற்றுமையின்றிப் பழகுபவர்கள். விடாது சிறுசுருட்டு புகைப்பவர்கள் இதனால் சில மேல்வகுப்பு மாணவர்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டு அடங்காப்பிடாரிகள் ஆயினர். பள்ளியிலேயே இவர்களைத் தூண்டிவிட்டு இந்த இரண்டு ஆசிரியர்களும் வேடிக்கை பார்த்தனர். அம்மம்ம! இந்த மகானுபாவர்கள் எனக்குத் தந்த தலை வலி,நிர்வாகப் பிரச்சினைகளை இங்கு எழுதி முடியாது. ''பன்னியுரைக்கில் பாரதமாம்'' என்று திருமங்கையாழ்வார் வாக்கில் சொல்லி வைக்கலாம்.

x x x

இவர்கள் வெளிப்படையாக பிராமணர்களை வெறுப் பவர்கள். இதைச் சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொண்டால் எனக்குக் கவலை இருந்திருக்க முடியாது.

மொட்டை மனுக்கள் எழுதுவதில் மிகவும் சமர்த்தர்கள், மேலிடங்களிலிருந்து இவை For Remarks என்று போட்டு வரும். இப்படி மறுமொழி தருவதற்கே நேரம் போதாது. சிலவற்றிற்கு நானே பதில் தந்து விடுவேன். சிலவற்றிற்குப் பிச்சுமணி அய்யரின் துணையை நாடுவேன். அவர் ஒருவருக்குத் தான் தட்டச்சுப் பொறியை இயக்கத் தெரியும். போர்த் துறையிலிருந்து வந்தவருக்கும் தெரியும்; ஆனால் அவரை எப்படிப் பயன் படுத்துவது? மொட்டை மனுக் களுக்குப் பதில் எழுதும் பொறுப்பு பெரும்பாலும் பிச்சுமணி அய்யருக்கே விட்டு வைத்தேன். அலுவலகக் கடிதங்கட்கு பதில் எழுதுவதில் 'மன்னர்'. இத்தகைய திறமை வாய்ந்த வரைக் காண்டல் அரிது. எல்லாத் திறமைகளும் இவரிடம் பொருந்தி இருந்தன. இவர் இடைநிலைத் தேர்வில் (Intermediate) முதல் வகுப்பில் தேறி வறுமையால் மேல் படிப்பு தொடர முடியாமல் ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியத் தொழிலுக்கு வந்தவர்; மற்றொருவர், திரு. மாத்ருபூதம் என்பவர். என் வகுப்புத் தோழர்; இடைநிலைத் தேர்வில் ஒரு பாடத்தில் தேறாது ஆசிரியர் பயிற்சி பெற்று இத் தொழிலுக்கு வந்தவர். இவர்கள் இருவரையும் தூண்டி பி.ஏ. பட்டம் பெறச் செய்தேன்; ஐந்து மாதப் பயிற்சியில் பி.டி. பட்டமும் பெற வாய்ப்புகள் அளித்தேன். பிச்சுமணி அய்யர் நான் பள்ளியை விட்ட பிறகு கீரம்பூர் என்ற பக்கத்தூரில் புதிதாகத் தொடங்கப் பெற்ற பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி நற்பெயருடன் ஓய்வு பெற்றார். இவர் இப்போது இல்லை: திருநாடு அலங்கரித்து விட்டார். திரு. மாத்ருபூதம் பி.டி. பட்டம் பெற்று துறையூரி லேயே பணியாற்றி ஓய்வு பெற்றவர். நல்லாசிரியராதலால் ஓய்வு பெற்ற பிறகும் பல்லாண்டுகளாகத் தனி வகுப்புகள் நடத்தி, அதனால் கணிசமான அளவு வருவாய் பெற்று, வாழ்ந்து வருபவர். இன்றும் நன்னிலையில் உள்ளார்.

இவருக்குச் சில மாதங்களாகக் கண்ணொளி குன்றி வெளியில் நடமாட முடியாத நிலை.

x x x

பள்ளி அலுவலக வேலைக்கு ஒரு தட்டச்சு பொறி தேவைப்பட்டது. நிர்வாகம் வாங்கித் தருவதாக இல்லை. அலுவலகக் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்கு இது மிகவும் தேவைப்பட்டது. தேர்வுக் கட்டண வசூல் பணம் மீதியிருந்தது. நிர்வாகத்திற்கு ஒரு குறிப்பு எழுதி, இசைவு பெற்று 800/- க்கு 'ரெமிங்டன்' தட்டச்சு பொறி வாங்கப் பெற்றது. திரு. பிச்சுமணி அய்யருக்கு இயக்கத் தெரியுமாதலால், அவரைக் கொண்டு இதைப் பயன் படுத்த முடிந்தது. சரியான எழுத்தரைப் போடாத நிர்வாகம் தட்டச்சு இயக்கத் தெரியும் ஒருவரை நியமிக்கும் என்ற நம்பிக்கை எனக்குச் சிறிது கூட ஏற்படவில்லை. எருத்துப் புண் கஷ்டம் அதைக் கொத்தித் தின்னும் காக்கைக்கு எப்படித் தெரியும்?

சுதந்திரத்திற்குப் பிறகு குடிமைப் பயிற்சித் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. நாடோறும் பள்ளி தொடங்குமுன் இறைவழிபாட்டுப் பாடலை அனைவரும் கேட்கவும், நாட்டு வாழ்த்துப் பாடலை (ஜனகணமன) எல்லாருக்கும் சேர்ந்து பாட பயிற்சி தரவும் ஒரு வானொலிப் பெட்டி, ஒரு பிக்அப் அமைப்பு தேவைப்பட்டன. நிர்வாகம் வாங்கித் தராது என்பது தெளிவு. புதிதாகச் சேரும் மாணவர்களிடம் 'வானொலி நிதி'க்கென்று ஒரு ரூபாய் தண்டுவதென்று முடிவு செய்து நிர்வாகத்திடம் இசைவு பெற்றேன்; அப்படி அச் சீட்டு வாங்கிய தொகைக்கு பற்றுச் சீட்டுகள் தரப் பெற்றன. பற்றுச் சீட்டுகளின் அடிக்கட்டை இருந்தால்தானே தண்டப்பட்ட பணத்திற்கு கணக்கு சரியாக வைத்துக் கொள்ளப் பெறும்? தவிர, பாடநூல்களை வைக்குமாறு வந்து கேட்கும் கம்பெனி யாரிடம் நன்கொடைவாங்கவும் முடிவுசெய்து அப்படி ரூ25/-

ரூ 50/- வீதம் வாங்கியதில் ரூ 300/- க்கு மேல் சேர்ந்தது. இதையும் வானொலி நிதியாகத் தண்டப்பெற்ற தொகையையும் கொண்டு பெரிய வானொலிப் பெட்டி (RCA-மாடல்) ஒன்றும், பிக்அப் ஒன்றும் வாங்கப் பெற்றன. வானொலிப் பெட்டி திறக்கும் விழா ஒன்று அமைக்கப் பெற்றது. உள்ளூர் மாவட்ட நீதிமன்றத் தலைவரை விழாத் தலைவராகவும், ஆத்தூர் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் அ. சாம்பசிவ ரெட்டியாரைத் திறப்பாளராகவும் கொண்டு விழா நடத்தப் பெற்றது.

x x x

நான் துறையில் இருந்தவரை இந்தி மொழி கற்பிக்கும் வசதி பள்ளியில் இல்லை. இந்தி ஆசிரியரை நியமிக்கும் எண்ணம் நிர்வாகத்தினருக்கும் இல்லை. இந்நிலையில் திராவிடக் கழகம், சுயமரியாதைக் கட்சி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அடிக்கடி அறிவிக்கும். மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள்; பள்ளிக்கு முன்னால் மறியல் நடைபெறும். மாணாக்கர்கள் இரண்டு வரிசையாக நின்று கொண்டு 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க', 'இந்தியை வல்லந்தமாகத் திணிக்காதே' என்ற 'போர்க் குரல்களை' (Slogans) எழுப்புவார்கள். நான் இதைத் தடைசெய்ய ஏற்பாடு செய்வதில்லை. பள்ளியிலே இந்தி கற்பிக்கும் திட்டம் இல்லாதபோது இதை ஏன் தடுக்க வேண்டும்? தடுத்து நிறுத்தினால் கிளர்ச்சி வளரும் என்ற எண்ணத்தினால் வாளா இருந்து விடுவேன். உடனே பல மொட்டை மனுக்கள் மாவட்டக் கல்வி அதிகாரி, கல்வி இயக்குநர் இவர்க்கு அனுப்பப்பெறும். தலைமையாசிரியரே மாணவர்களைத் தூண்டிவிட்டு இந்தி எதிர்ப்பை நடத்தச் சொல்கிறார் என்பது மொட்டை மனுக்களின் குற்றச்சாட்டு. இவற்றிற்குச் சமாதானம் கோரி அவை எங்கட்கு அனுப்பப் பெறும். சுதந்திரம் பெற்ற பிறகு மொட்டை மனுக்களின்

எண்ணிக்கையும் அதிகரித்தது. இவற்றிற்குப் பதில் எழுதும் வீண் வேலையும் பெருகியது. ஒன்றிலும் பற்றாது இருக்கும் தலைமையாசிரியரை 'திராவிடக் கழகச் சார்பு உள்ளவர்' என்று உள்ளூர் சில்லறைக் காங்கிரசார் மொட்டை மனுக்கள் அனுப்புவது வழக்கமாகப் போய் விட்டது. ஒரு சமயம் நான் பேருந்தில் திருச்சிக்குப் போய்க் கொண்டிருந்தபொழுது அருகில் அமர்ந்திருந்த காவலர் (Police) ஒருவர் என்னை CIDக்கள் கவனித்து வருவதாக எனக்குக் காதோடு காதாகச் சொன்னார். இவர் ஓரளவு என்னை நன்கு அறிந்தவர். அபாண்டப் பழி சுமத்துவதை இவரே விரும்பவில்லை. "இது பெரிய அநியாயம்" என்றே கூறிவிட்டார். இப்படிப் பல தொல்லைகள்.

x x x

திருமணமாகி 13 ஆண்டுகட்குப் பிறகு பிறந்த என் மகனுக்குப் பெயரிடும்விழா ஒன்றைச் சிறிய அளவில் அமைத் தேன். ஓர் ஐம்பது பேருக்கு அழைப்பு விடுத்தேன். இவர் களுள் 25 பேர்கள் பள்ளி ஆசிரியர்களே; ஏனையோர் உறவினர்கள், நண்பர்கள். ஐந்து வீசை சருக்கரை தேவைப் பட்டது. பங்கீட்டு முறையில் கிடைத்த சருக்கரை போதவில்லை. ஒரு வீசை சருக்கரை விலை எட்டணா (ஐம்பது புதுக் காசு என்பதாக நினைவு). கறுப்புச் சந்தையில் வீசை ஐந்து ரூபாய் வீதம் ஐந்து வீசை வாங்க நேரிட்டது.

சருக்கரை விநியோகம் செய்ய உரிமம் பெற்ற வணிகர் ஒருவர் இரண்டு மூட்டையை விநியோகித்து விட்டுச் 'சருக்கரை கையிருப்பு இல்லை' என்று எழுதிய அட்டையை மாட்டிவிட்டார். அக்காலத்தில் உடையார் தெருவில் துணிவாகச் செயல் புரியும் பல இளைஞர்கள் இருந்தனர், அவர்கள் நான்கு கைவண்டிகளைக் கொண்டு வந்து சருக்கரை பதுக்கப் பெற்றிருக்கும் இடம் அறிந்து பூட்டை

உடைத்து 18 மூட்டை சருக்கரையை ஏற்றி வைத்துக் காவல் நிலையத்தில் கொண்டு வந்து அடுக்கிவிட்டு ''சருக்கரை வினியோகிக்கப்படும்'' என்ற பெயர் அட்டையையும் வணிகர் மாட்டி வைத்திருந்த ''சருக்கரை கையிருப்பு இல்லை'' என்ற பெயரட்டையையும் மாட்டி வைத்தனர். காவல் நிலைய ஆய்வாளர் திடுக்கிட்டுப் போய்விட்டார். வேறு வழியில்லாது வணிகரைக் கொண்டே வினியோகிக்க வகை செய்தார். இப்படிச் செய்யாமல் காவல் நிலையத்துக்குப் 'புகார்' கொடுத்தால் எதுவும் நடைபெறாது, ரூபாய் நோட்டுகள் கைமாறும் என்பதை நன்கறிந்தே இவ்வாறு செய்தனர் என்று பொது மக்கள் பேசிக் கொண்டனர்.

1940க்கு முன்னர் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளையும் சிலர் நினைவு கூர்ந்து பேசிக் கொண்டதையும் கேள்விப் பட்டேன்.

**நிகழ்ச்சி 1:** பஞ்சாயத்துத் தனி அதிகாரி ஒருவர் (ஆந்திரர்) இங்குப் பணியாற்றினார். அரை ரூபாய் முதல் கையூட்டுப் பெற்று வந்தார். பொதுமக்கள் ஒன்றும் செய்ய முடியாது தவித்தனர்; குமுறினர். மேலிடங்கட்கு இவரை மாற்றுமாறு புகார் மனுக்களை அனுப்பினர். அப்பொழுது நடைபெற்றது வெள்ளையர் ஆட்சி. கண்டிப்பும் நேர்மையும் இப்போது சீர்குலைந்து இருப்பது போல் அன்று சீர் குலையவில்லை. ஆகவே, அவரை வேற்றூருக்கு மாற்றிவிட்டனர். கையூட்டு நிறைய வாங்கிக் கை கண்டவராதலால், ஊரை விட்டுப் போக மனமில்லாது மூன்று திங்கள் விடுப்பு வாங்கிக் கொண்டு துறையூரிலேயே தங்கியிருந்தார். நாடோறும் அஞ்சல் வாங்குவதற்குப் பகல் 12 மணிக்கு அஞ்சலகத்திற்கு வருவதுண்டு.

அந்தக் காலத்தில் இப்போதிருப்பது போல் சாமான்கள் ஏற்றிச்செல்லும் வண்டிகள் (Lorries)இல்லவேஇல்லை. தினந் தோறும் மாலை ஆறுமணிக்கு இரட்டை மாட்டுக்கூடு வண்டி களில்தான் சாமான்கள் திருச்சிக்கு ஏற்றிச் செல்லப்படும். அங்ஙனமே திருச்சியிலிருந்து சாமான்களை மாலை கிளம்பி மறுநாள் அதிகாலையில் அந்த வண்டிகள் துறையூருக்குத் திரும்பும். இந்த வண்டிகள் அஞ்சல் நிலையச் சாலையில் வரிசையாகத் தெருவோரத்தில் நிறுத்தப் பெற்றிருக்கும். ஒரு நாள் ஓய்விலிருக்கும் பஞ்சாயத்துத் தனி அதிகாரி அஞ்சல் வாங்க வந்தபோது அவருக்கு நடைபெற்ற மரியாதை இது: மூன்று நான்கு வாளிகளில் சாணம் கரைத்து வண்டிகளின் அடியில் வைக்கப் பெற்றிருந்தன. எலும்புகள், கருவாடு, எருக்கம்பூக்கள் இவை கலந்து தொடுக்கப் பெற்றுள்ள மாலை யொன்றை ஒருவர் வைத்துக் கொண்டு இன்னொரு வண்டியின் கீழ் இருந்தார்.

பஞ்சாயத்து அதிகாரி அஞ்சலைப் பெற்றுக் கொண்டு மிதிவண்டி ஏறும் சமயத்தில் வண்டியை நிறுத்தினார் ஒருவர். இதே சமயத்தில் எதிர்த்திசையிலிருந்து வந்து கொண்டிருந்தார் மற்றொருவர். முன்னவர் "என்ன அண்ணே, நம் ஐயா மாற்றம் ஆகிப் போகும்போது நாம் பிரிவுபசாரம் செய்யாமல் விட்டு விட்டோமே" என்று சொல்ல, மற்றவர் "சமயத்தில் நாம் இம்மாதிரி முக்கிய விஷயத்தை மறந்து விடுகின்றோம்" என்று மறுமொழி கூற, வண்டியின்கீழ் இருந்த மூன்றாமவர் "காலம் கடந்து போனாலும் நம் பிரிவுபசாரத்தை நிறுத்த முடியாது" என்று சொல்ல, நான்காமவர் "ஐயா நல்ல வேளையாக விடுப்பில் இருப்பது நமக்கு வாய்ப்பு; ஒரு நாள் இதைச் செய்தேயாக வேண்டும்" என்று மொழிய, ஐந்தாமவர், "இப்போதே செய்துவிடலாமே" என்று கூற இப்படியாக நடிப் பொன்றைத் திட்டமிட்டிருந்தனர்.

நான்காமவர், "அண்ணே, நாம் கரைத்து வைத்திருக்கும் சந்தனத்தைக் கொண்டு வருக" என்று சொல்ல, தயாரிலிருந்த மூவர் வாளிகளிலிருந்த சாணக் கரைசலை அதிகாரிமீது மடமட வென்று வேகமாகச் சாய்த்தனர். கூட்டத்தில் ஒருவர், "தம்பி, சிறப்பாகத் தயாரித்து வைத்திருக்கும் மாலையைக் கொண்டுவா" என்று கூற, மாலையிடம் அவரும்வர, அதனை வாங்கி அதிகாரியின் கழுத்தில் சூட்ட எல்லோரும் கைகொட்டி மகிழ்ச்சி தெரிவித்து "ஐயா, போய் வாருங்கள். இப்படி எந்த அதிகாரிக்கும் பிரிவுபசாரம் நடத்தவில்லை" என்று கூறிக்கொண்டு அனைவரும் கலைந்தனர். வேடிக்கை பார்த்திருந்த பலர், "வேண்டும், வேண்டும்; இன்னமும் வேண்டும்" என்று இந்தச் செயலை ஆமோதித்தனர். பாவம், மிக்க அவமானத்துடன் வீடு திரும்பினார் அந்த அதிகாரி. என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? அதிகாரி வாளா இருந்து விட்டார். பொதுமக்கள் நல்ல செயலுக்குத் திரண்டெழுந்தால் அரசுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

**நிகழ்ச்சி 2:** 1932-33இல் மற்றொரு நிகழ்ச்சியையும் மக்கள் நினைவு கூர்ந்தனர். இக்காலத்தில் நான் முசிறி கழக உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவத்தில் கற்றுவந்தேன். மாவட்ட நீதிபதி ஒருவர் (மலை நாட்டவர்) ஒரு புரோநோட்டு வழக்கில் கையூட்டுப் பெற்று வழக்கில் பாதகமாகத் தீர்ப்பு கூறினார். இப்படிப் பல வழக்குகளில் அநியாயத் தீர்ப்பு கூறினார். இவர் கையூட்டு வாங்குபவர் என்பது ஊரறிந்த செய்தியாக இருந்தது. பொதுமக்களில் சிலர் கொதித்தெழுந்தனர். மாவட்ட நீதிபதி பழைய மாதிரி ஃபோர்டு வண்டி (Pleasure Car) வைத்திருந்தார். அது வீட்டருகில் ஒரு கொட்டகையில் நின்றது. வீட்டின்முன் பக்கப் பலகணிகளை மூடிவிட்டுப் படுப்பது வழக்கம். ஒரு நாள் சில நகர சுத்தித் தொழிலாளர்களைக் கொண்டு

இரண்டு மூன்று வாளிகள் மலத்தைத் தயாரித்து வீட்டுப் பலகணிகள், வாயிற்படி, முன்தாழ்வாரம் ஆகிய இடங்களில் கொட்டி அசிங்கப் படுத்தினர். கொட்டகையிலிருந்த மகிழ்வுந்தை வீட்டிற்கு முன்னர் தள்ளிவந்து பெட்ரோலைத் திறந்துவிட்டுத் தீமூட்டினர். இச்செயலால் அவர் பெருத்த அவமானம் அடைந்தார்; பெருத்த இழப்பையும் அடைந்தார். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற பொன்மொழி உண்மையாயிற்று.

இப்படி இன்று நடக்குமா? கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் கையூட்டுப் பேய் தாண்டவமாடுகின்றது. ஆட்சியாளர் நன்கொடை என்ற பேரில் பல அட்டூழியங் களை நடத்துகின்றனர் செல்வர்களும் செல்வாக்குள்ளவர் களும் கையூட்டிற்கு முதற்காரணமாகித் தம் காரியங் களைச் சாதித்துக் கொள்ளுகின்றனர். அப்பாவி மக்கள் பணமில்லாததால் சொல்லொணாத் துன்பம் அடை கின்றனர். ஜனநாயகப் போர்வையில் பண நாயகம் ஆட்சி செலுத்தி வருவதை எம்மருங்கும் காணலாம். ஏழை மக்கள், "ஏ ஆண்டவா, உனக்குக் கண்ணில்லையா? இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு வாளா இருக்கின்றாயே" என்று அழாக் குறையாகக் கதறுகின்றனர்.

x x x

இன்னொரு மறக்க முடியாத நிகழ்ச்சி. முறைகேட்டின் கொடுமுடி இது. பிச்சுமணி அய்யரின் மகன் 5ஆவது படிவத்தில் கணிதத்தை விருப்பப்பாடமாக எடுத்துப் படித் துக் கொண்டிருந்தான். இப்பையன் மிகுந்த கெட்டிக்காரன் என்றும் சொல்ல முடியாது. இவன் எல்லாப் பாடங்களிலும் பொதுவாக ஐம்பதிற்கு மேலும் சிலவற்றில் அறுபதைத் தாண்டியும் மதிப்பெண்கள் பெறுவான். ஒரு முழு ஆண்டுத் தேர்வில் கணிதத்தில் அவன் பெற வேண்டிய மதிப்பெண்

73. ஓர் ஆசிரியர் (பட்டதாரி, இளைஞர்) இப்பையனுடைய, விடைத்தாளை மதிப்பிடும்போது கணிதத்தில் இவன் தந்திருந்த விடைகளில் கழித்தல் குறி வந்த இடங்களில் எல்லாம் கூட்டல் குறிகளைப் போட்டு 13 மதிப்பெண்கள் வழங்கி இருந்தார். இவர் பிராமண விரோதி. அலுவல கத்தில் எல்லா நிலையிலும் தன்னை மறந்த நிலையில் உண்மையாக உழைக்கும் பிச்சுமணி அய்யர் இதைப் பார்த்துத் திடுக்கிட்டு இதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார். முதலில் மதிப்பிட்டபோது வழங்கியது 73. இதில் சிவப்புப் பென்சிலால் போட்ட மதிப்பீட்டை அடித்துவிட்டு, கழித்தல் குறிகளை யெல்லாம் கூட்டல் குறிகளாக மாற்றி விடைகளைத் தவறு என்று அடித்துக் காட்டி 13 மதிப்பெண் வழங்கி இருந்ததையும் என் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மைவேற்றுமையால் மாற்றம் தெளிவாகத் தெரிந்தது.

இதை விசாரணைக்கு வைத்து அம்பலப் படுத்த வேண்டும் என்று சொல்லிக் குதித்தார். பிச்சுமணி அய்யர் என்னைவிடப் பத்தாண்டுகள் மூத்தவர். தம் மகன் விஷய மல்லவா? எந்தப் பெற்றோரும் உணர்ச்சிவசப்படுவது இயல்புதானே? நான் முதல் மதிப்பீட்டைக் கணக்கிற்கு எடுத்துக் கொண்டு அவனை வகுப்பு மாற்றம் செய்தேன். ஆனால் மதிப்பெண் பதிவேட்டில் இந்நிகழ்ச்சியை விவர மாகக் குறிப்பிட்டுப் பதிவு செய்தேன். ஆசிரியர் பெயரை வெளியிடவில்லை. நிர்வாகத்தின் கவனத்திற்கு இந்த முறை கேட்டைக் கொண்டு வந்தேன்.

x x x

'ஓர் ஒன்பதாண்டுகள் பள்ளியை நன்கு வளர்த்து விட்டோமே. கல்லூரியில் வேலை கிடைத்தால் போகலாமே' என்ற எண்ணங்கள் என்மனத்தில் எழும். 'நாம் வளர்த்த பிள்ளையை விட்டுவிட்டு எப்படிப் போவது?' என்ற

எண்ணமும் தோன்றி அதை அமுக்கி விடும் - கடலில் முன்னர் எழுந்து திரும்பும் அலையைப் பின்னர் எழும் அலை அமுக்கி விடுவது போல். தவிர, 'கல்லூரியில் வேலை வாங்கித்தரும் அளவுக்குப் பரிந்துரை செய்ய ஒருவரும் இல்லையே' என்ற ஏக்கமும் அடிக்கடித் தோன்றும்; மறுபடியும் கல்லூரிக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தையே இது சிதைத்துவிடும். திக்கற்றவருக்குத் தெய்வம் துணையாக நிற்கும் அல்லவா? இஃது என் வாழ்க்கையில் உண்மையாகவே நிகழ்ந்துவிட்டது. இறையருளால் நான் கல்லூரிப் பணியில் போய்ச் சேர்ந்தும் விட்டேன். இதனை அடுத்த குமிழியில் வெளியிடுவேன்.

x x x

மாணவர்களை வகுப்பு மாற்றம் செய்யும்போது வரும் பரிந்துரைகள் சொல்லி முடியா. இவை பல்வேறு வடிவத்தில் வரும். என் நெருங்கிய உறவினர்களில் ஒரு சிலர் இரண்டு நாட்கள் வந்து என் வீட்டில் விருந்தினர்களாக இருந்து தொல்லைகள் தருவர். மாணாக்கர்களும் அவர்கள் பிள்ளைகளுமல்லர்; யாருக்காகவோ வருவர். என்னிடம் வருபவர்கள் ஒரு சிலராக இருந்தபோதிலும் தொல்லைகள் அதிகமாக இருக்கும்; தாங்க முடியாது. ஒருவர் சொல்லுவார்; ''உன் தாத்தாவீட்டுச்சொத்தையாகேட்கின்றேன்?பதினைந்துமதிப் பெண்ணை 25 ஆகவோ 45 ஆகவோ மாற்றிப் போட்டால் குடியா முழுகிப் போகும்? இரண்டு சொட்டு மைதானே செலவு?'' என்பார். இத்தகையவரிடம் என்ன சொல்லுவது? மதிப்பீட்டை இவ்வளவு கேவலமாக நினைப்பவர்களிடம் என்ன பேசி என்னபயன்? ஒருசமயம் ஒருவர் வகுப்பு மாற்றம் பற்றிய ஆசிரியர்களின் இரகசியக் கூட்டத்திற்கே வந்து விட்டார். அவரைவெளியில் அனுப்புவதே'போதும் போதும்' என்றாகிவிட்டது. இப்படிஒவ்வொருஆசிரியருக்கும் எவ்வளவு தொல்லைகளோ? யார் அறிவார்? அவர்கள் 'எல்லாம்

தலைமையாசிரியர் கையில்' என்று சொல்லித் தப்பித்துக் கொண்டிருக்கலாம். பொதுமக்கள், ஊர்ப் பெரியவர்கள், இவர்களில் ஒருவரும் இதுபற்றி என்னை நெருங்குவதில்லை. பதினைந்தும் (கீழ் வகுப்பு). இருபத்தைந்தும் (மேல் வகுப்பு) கணக்கில் 'சுழியும்' வாங்கியுள்ளவர்களைக் கூட விதிகளின் அமைத்துக் கொண்டு மாற்றம் செய்வேன். இப்படிச் செய்யும்போது ஏழை மாணவர்களின் வீட்டுச் சூழ்நிலை, நெடுநேரம் படிப்பதற்கு மண்ணெணய் கூட வாங்க முடியாத வறுமை இவை எல்லாம் மனத்தில் எழும். மனம் இரங்கிக் குறைந்த மதிப்பெண்கட்கு வகுப்பு மாற்றம் செய்யப்பெறும்.

ஆனால் இப்பொழுது நடைபெறும் தேர்வு முறைகள், மதிப்பீட்டில் நடைபெறும் தில்லு முல்லுகள், அலுவல கத்தில் பணி புரிபவர்கள் செய்யும் முறைகேடுகள் இவை யெல்லாம் என் மனத்தில் குமிழியிடுகின்றன. இவற்றிற் கெல்லாம் முத்தாய்ப்பாக கேரளப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அட்டூழியங்கள் அம்பலமானதால் ஆசிரியப் பணிக்குச் சொல்ல முடியாத இழுக்கு ஏற்பட்டு விட்டது. நான் படித்த காலத்தில் மதிப்பெண் வருவது இறைவன் செயல் என்று பக்தியுடன் கருதப்பெற்றது (1930-40). இப்பொழுது பணம், அரசியல்வாதிகளின் பரிந்துரைகள் இவற்றால் எதுவும் நடைபெறும் என்றாகி விட்டது. "என் பேரப் பிள்ளைகள் படித்து வெளிவருங்கால் என்னென்ன முறைகேடுகள் நடக்கப் போகின்றனவோ? ஏ ஆண்டவா, நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும்."

x x x

நான் துறையூரில் இருந்தபொழுது எதிர்பாராத விதமாக இரண்டு பெரியார்களின் தொடர்பு ஏற்பட்டது. அக்காலத்தில் '**உலகம் சுற்றும் தமிழன்**' என்பவர் (ஏ. கே. செட்டியார்-விரித்துக் கூறினால் ஏ. கருப்பன் செட்டியார்)

ஒரு நாள் துறையூருக்கு வந்தார் "உலகம் சுற்றும் தமிழன்' என்ற நூலைப் படித்து பெருமதிப்பு கொண்டிருந்தேன். ஆனால் அவர் ஏ. கே. செட்டியார் என்பது தெரியாது. இப்போது முதன் முதலாகப் பார்த்தபோதுகூட 'அவர்தான் இவர்' என்பதும் அறிந்துகொள்ள முடியவில்லை, அவர் சொன்ன பிறகுதான் 'உலகம் சுற்றும் தமிழன் இவர்தான்' என்பது தெரிந்தது. நான் கற்பனையில் கொண்டிருந்த உலகம் சுற்றும் தமிழனுக்கும் நேரில் பார்த்த ஏ. கே. செட்டியாருக்கும் மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டேன். அவ்வளவு எளிமையாக இருந் தார். குளிர்பானம் வழங்கினேன். இக்காலத்தில் (அக் காலத்தில் கூடத்தான்) இதுதானே திடீர் விருந்து!

ஆசிரியர் அறைக்கு இப்பெருமகனாரை இட்டுச் சென்று அங்கிருந்தவர்கட்கு அறிமுகம் செய்து வைத்தேன். எல்லோரும் இவரைப் பார்க்க மகிழ்ந்தனர். அரைமணி நேரத்தில் ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். ஊருக்குள் சிலருக்குதான் மிதிவண்டிப் பையன் மூலம் தெரிவித்தேன். அனைவருமே வந்து சேர்ந்தனர். 'என் பயண அனுபவங்கள்' என்ற தலைப்பில் பேசினதாக நினைவு. திரு. செட்டியார் இக்கால அரசியல் மேடைப் பேச்சாளர்கள் போல் 'வெற்று வேட்டுகள்' வெடிப்பவர் அல்லர். கருத்து களை நகைச் சுவையாக எடுத்துக் கூறுவதில் இவருக்கு நிகர் இவரே. அருமையாகப் பேசி கேட்போர் உள்ளத்தில் நிலை யான இடத்தைப் பெற்றார். அக்காலத்தி 'குமரி மலர்' என்ற மாத இலக்கிய இதழ் நடத்தி வந்தார். ஆண்டுச் சந்தா ரூ. 6/- தான். உடனே மூன்று வருடச் சந்தாவுக்கு ரூ. 18/- தந்தேன். தவறாமல் இதழ்கள் வந்து கொண் டிருந்தன.

அக்காலத்தில் சென்னையில் அலுவல்கள் இருந்தமையால் இரண்டு மூன்று பயணங்கள் இருந்தன. நான் தங்கும் இடம் பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லம் (35, ராக்கியப்ப முதலியார் தெரு, மயிலாப்பூர், சென்னை-4) ஆனால் சென்னை வரும் போதெல்லாம் குமரிமலர் அலுவலகத்திற்கு (100, மௌபீரீஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை-18)' வருவது தவறுவதில்லை. இதனால் அலுவலகத்தில் செட்டியாருடன் இணைந்து பணியாற்றிய திரு. எஸ். கோபாலன் உறவு கிடைத்தது. திரு. கோபாலன் உரையாடுவதில் ஒப்பற்றவர். செட்டியாரிடம் இருந்த நகைச்சுவைப்பண்பு இவரை அதிகமாகப் பற்றவில்லை. ஆனால் சில நிகழ்ச்சிகளை இயல்பாகப் பேசுவார், அதில் கிண்டல் தொனி அடிநாதமாக வெளிப்படும். பெரிய பெரிய இலக்கியச் சுவைஞர்களின் தொடர்பு திரு. கோபாலனுக்கு உண்டு. பெரிய IAS, ICS அதிகாரிகளின் தொடர்பு இருந்தது, காங்கிரசில் உள்ள பெரிய மனிதர்களின் தொடர்பும் இவர்கட்கு இருந்தது.

1948 முதல் திரு. செட்டியார் அவர்கள் மறையும் வரை (1984) செட்டியாரின் தொடர்பு இருந்து வந்தது. இறுதியாக சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழக அதிபர் திரு.வ. சுப்பையா பிள்ளை அவர்கள் மறைந்த அன்று 6, பவளக்காரத்தெரு, சென்னை-1 இல்லத்தில்தான் சந்தித்தது; அதன்பிறகு அவரைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லை. 1984-இல் திரு. செட்டியார் அவர்களும் திருநாடு அலங்கரித்து விட்டார்கள் என்பதைச் செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்தேன். சில மாதங்கள் கழித்துக் குமரிமலர் அலுவலகத்தில் (அலுவலகம்' லஸ் சர்ச் ரோடு) திரு. கோபாலனைப் பார்த்து துக்கச் செய்தியை விசாரித்தேன். அதன்பிறகு ஓராண்டுக்காலத்திற்குள் திரு. கோபாலனும் பரமபதித்து விட்டார் என்ற

செய்தியை மூவேந்தர் அச்சகத்தில் (சீநிவாசப் பெருமாள் கோயில் சந்நிதித் தெரு. இராயப்பேட்டை, சென்னை-14) அறிந்து வருந்தினேன்.

x x x x

துறையூரில் பணியாற்றிய போது இன்னொரு பெரியார் டாக்டர் சந்திரசேகர் என்பவர் துறையூர் பக்கம் வந்தார். பள்ளிக்கும் வருகை தந்தார். அப்போது அவர் எங்கும் பணியில் அமரவில்லை. அவசரமாகக் குளிர்பானம் வழங்கி, மேல்வகுப்பு மாணவர்கட்கும் ஆசிரியர்க்கு மட்டிலும்கூட்டம் ஏற்பாடு செய்தேன். ஆங்கிலத்தில்தான் பேசினார். மக்கள் தொகை ஆய்வுத் துறையில் வல்லவர். எங்கள் பள்ளி நிலைக்கு இறங்கிப் பேசினார். எனினும் பேச்சு எடுபட வில்லை. காரணம் அதைச் செரிமானம் செய்வதற்கேற்ற கேட்போரின் அறிவு நிலை இல்லை. அன்றிரவு என் இல்லத்தில் ஒரு சிறிய விருந்து. மறுநாள் காலையில் திருச்சிக்குப் பேருந்தில் அனுப்பி வைத்தேன். இவரைப் பின்னர் காரைக்குடியில் ஒரு முறையும், திருப்பதியில் மூன்று முறையும் சந்தித்துப் பழகினேன்[1]

x x x x

நான் துறையூரில் பணியாற்றிய போது ஒரு மாணவனை பற்றிய நினைவு இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. நாமக்கல் அருகிலுள்ள சிவநாய்க்கன் பட்டியி லிருந்து ஓர் அன்பர் தம் மகன் முத்து என்பவனை துறையூரில் என் பள்ளியில் இரண்டாவது படிவத்தில் சேர்த்து 'என்

1. இவர் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பேராசிரியராகவும், அடுத்து மத்திய அரசின் அமைச்சராகவும், அதற்கடுத்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் பணியாற்றியவர்.

மகனை உங்களிடம்ஒப்படைத்தேன்' இவனை, ஆளாக்குவது உங்கள் பொறுப்பு' என்று சொல்லி ஒப்படைத்தார். ஒன்றிரண்டு ஆண்டுகளில் அவர் விண்ணாடு புக்கார். நல்லொழுக்க முள்ள பையன் முத்து படிப்பில் சராசரி மாணவனுக்கு மேல் தரத்தில் உயர்ந்தவன். பள்ளியிறுதி வகுப்புவரை படிப்பை முடித்துக் கொண்டு திருச்சியில் ஒரு கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்புக் (Intermediate) கல்வியையும் முடித்துக் கொண்டு B. A. (Hons) படிக்க முயன்றான்; திருச்சியில் இடம் கிடைக்கவில்லை. அவனுடைய அன்னையார் பையனை இட்டுக் கொண்டு என்னிடம் வந்தார். பையனை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இட்டுச் சென்றேன். தமிழறிந்த (வித்துவான்) தலைமையாசிரியனாக இருந்தமையால் தமிழுலகில்—ஏன்? வெளியுலகிலும் —நல்ல மதிப்பு இருந்தது. பிராமணரல்லாத தலைமையாசிரியர்கள் என்னுடைய படிப்புக்கும் படாடோப மற்ற அமைதியான போக்கிற்கும் பள்ளிக்காக நான் உழைத்த உழைப்பிற்கும் நல்ல மதிப்பையும் பாராட்டலையும் வழங்கினர். அழுக்காறு தலை காட்டாதிருந்தது வியப்பினும் வியப்பு.

நான் அண்ணாமலை நகர் சென்றபோது பி.ஏ. (ஆனர்சு) சேரும் காலம் கடந்தது. விண்ணப்ப பாரம் கூட தர மறுத்தனர். ஆனால் துறைத் தலைவர்களின் கோரிக்கையின் பேரில் தருவதாகக் கூறினர். அக்காலத்தில் சீரும் சிறப்பு மாகவும் பிறருக்கு உவந்து உதவுவதிலும் சிறந்து திகழ்ந்தவர் **டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்** (ஏ. சி. செட்டியார் என்பதே எல்லோரும் அறிந்த பெயர்). என்னுடைய தமிழறிவை ''மூலதனமாகக்'' கொண்டு டாக்டர் செட்டியாரைச் சந்தித்து நிலையை விளக்கினேன். ''பையன் வரலாறு படிக்க விரும்புகின்றான்; தமிழில் நாட்டம்

இல்லை'' என்றேன். ''நான் பாரம் தருகிறேன். தமிழ் ஆனர்சில் சேர்ந்து கொள்ளலாம். சில நாட்கள் கழித்து வரலாற்று ஆனர்சுக்கு மாற்றிக் கொள்ளலாம்.'' என்று அறிவுரை கூறினார். அங்ஙனமே தமிழ் ஆனர்சில் சேர்ந்தேன்; பின்னர் வரலாற்று ஆனர்சு மாற்றிக் கொண்டான். மூன்றாண்டு கழித்து தேர்விலும் வெற்றி பெற்றான்.

x x x x

என்னைப் போலவே மாணவர் நலனே தம் பணியாகக் கொண்டவர் நாமக்கல் உயர் நிலைப் பள்ளித் தலைமை யாசிரியர் **பி. ஆர். சுப்பிரமணிய பிள்ளை**. அவர் ஆத்தூரில் தலைமையாசிரியராக இருந்தபோது **பிச்சுமணி** என்ற ஓர் அரிசன மாணவர்மீது அக்கறை கொண்டிருந்தார். அவர் நாமக்கல்லுக்கு மாற்றப்பட்ட பின்னரும் பையன் அவரைத் தொடர்ந்தான் ஆண்டுதோறும் (சுமார் 4 ஆண்டுகள்) என்னிடம் பிச்சுமணியை அனுப்பி வைப்பார், நான் பல பதிப்பகத்தார் தந்த மாதிரிப் பாடநூல்களை ஓர் அறையில் குவித்து வைத்திருப்பேன். அந்த அறைக்குப் பையனை அனுப் பித் தேவையான நூல்களை எடுத்துக் கொள்ளுமாறு ஏவு வேன். இதனால் அவனுக்கு ரூ 25/ வழங்குவதற்குச் சமமான உதவி கிடைக்கும். சுமார் ரூ 10/- மதிப்புள்ள குறிப்பேடு களையும் வழங்குவேன். ஒரு வேளை உணவு கொள்ளச் செய்து அவன் செல்ல வேண்டிய இடத்திற்கு உரிய பேருந்துக் கட்டணத்தையும் தந்து அனுப்புவேன்.

பிச்சுமணி பள்ளியிறுதித் தேர்வில் அப்பள்ளியில் முதல் மாணவனாகத் தேறினான். சுதந்திர இந்தியாவில் பல சலுகைகள் கிடைத்தன. சேலம் கல்லூரியில் அப்போது முதல்வராக இருந்தவர் **இராமசாமி கவுண்டர்** இவரும் மாணவர்க்கு உதவும் ஆசிரியர் குழுவில் சேர்ந்த ஒரு பைத்தியக்காரர். இவரிடமும் எனக்கு நெருங்கிய பழக்கம்

உண்டு; இப்பழக்கத்தை ஏற்படுத்தியவர் உலக ஊழியர் என்ற தமிழ்ப் பேராசிரியர். சேலம் கல்லூரியில் சேர்ந்து படித்த பிச்சுமணி இடைநிலைத் தேர்வில் முதல் வகுப்பு பெற்றான பின்னர் பொறிஇயல் கல்லூரியில் சேர்ந்து B. E. பட்டமும் (முதல் வகுப்பு) பெற்று நடுவண் அரசின்கீழ்ப் பொறியியல் துறையில் உத்தியோகமும் பெற்றான். சில ஆண்டுகள் பணியாற்றிய பின் அமெரிக்கா சென்று விட்டான். அங்கு நல்ல நிலையில் இருக்கின்றான். இதைக் காதால் கேட்பதற்குக் கூட திரு பி. ஆர். சுப்பிரமணியபிள்ளை நம்மிடையே இல்லை. 1952லேயே அற்ப ஆயுளுடன் இறைவன் திரு அடி சேர்ந்தார். நான் மட்டிலும் அந்த மாணவனை நினைந்து போற்றுகின்றேன்.

நன்னிலைக்கண் தன்னை
    நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு
    வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து
    நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும்
    தான்.[2]

என்ற நாலடியாரின் பாடலில் 'தன்னைத் தலையாகச் செய்வானும் தான்' என்பதற்கு பிச்சுமணி சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றான்.

---

2. நாலடியார்—248 (அறிவுடைமை)

குமிழி—98

# 34. திருத்தலப் பயணம் - இராமேச்சரம்

மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே[1]

மக்கட்பேறு இல்லாத குறையை நினைத்து அடிக்கடி என் அன்னையார் கவலைப்படுவதுண்டு. பேரன் அல்லது பேத்தியைத் தூக்கிக் கொஞ்ச வேண்டும் என்ற எண்ணம் இருக்குமல்லவா? ஆனால் என் மனைவி இத்தகைய கவலையை வெளிக்காட்டவில்லை. என் மனத்தில் இக் கவலை துறையூரில் இருந்தவரை எழவில்லை. பள்ளிப் பிள்ளைகள் அனைவரையுமே என் குழந்தைகளாகப் பாவிக்கும் எண்ணத்தை இறைவன் தந்தமையே இதற்குக் காரணமாகும். தலப் பயணம் மேற்கொள்ள வேண்டும், இராமேச்சரத்தில் சர்ப்பசாந்தி செய்ய வேண்டும், நாகர் பிரதிட்டை செய்ய வேண்டும் என்ற கருத்தை அடிக்கடி வெளியிடுவார்கள் என் அன்னையார். அவர்களின் மனக் குறையைத் தீர்த்து வைப்பதற்காக 1948 கோடை விடுமுறையில் இத்திருத் தலப்பயணத்தை மேற்கொள்ளவும் இராமேச்சரத்தில் என் அன்னையார் கருத்தை நிறை வேற்றவும் திட்டம் இட்டேன்.

கோட்டாத்தூரில் என் இல்லத்தருகில் இருந்தவர் சின்னப்பண்ணை அரங்கசாமி ரெட்டியார். முதல் மனைவி

1. தா. ப; பராபரக்கண்ணி-156

திருமணமாகிச் சில ஆண்டுகளில் இறந்து விட்டமையால் இரண்டாந்தாரமாக இன்னொரு பெண்மணியை மணந்து கொண்டவர். திருமணம் ஆகி இருபது ஆண்டுகள் ஆகியும் மக்கட்பேறு இவருக்கு வாய்க்கவில்லை. இவரையும் இவர் துணைவியையும் எங்கட்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டோம். இவரது கொழுந்தி (வயது முதிர்ந்த மூதாட்டி), என் மாமியார் (வயது முதிர்ந்த மூதாட்டி), என் அன்னையார் கோட்டாத்தூரில் இன்னோர் அம்மையார் (கைம்பெண்) இக் குழுவில் சேர்ந்தனர்; என் மைத்துனரின் முதல் மனைவி (அண்மையில் தன் ஒரே மகனை - என் வளர்ப்புப் பிள்ளையை - இழந்தவர்) எங்கள் குழுவில் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்து எருமைப்பட்டியி லிருந்து வந்து சேர்ந்தார்கள்.

என்னுடன் தொடக்க நிலைப்பள்ளியில் படித்த **கே. பி. சுப்பையர்** என்பவரையும் (சோதிடர், பஞ்சாங்கம், பிராஞ்ச் ஆபீஸ் போஸ்டுமாஸ்டர்) துணையாகச் சேர்த்துக் கொண்டோம். முன்கூட்டியே பஞ்சாங்கக் காரியத்திற்கும் அஞ்சல் வேலைக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்து கொண்டு எங்களுடன் சேரத் தயாராக இருந்தார். இராமேச்சரத்தில் வைதிகச் சடங்குகள் செய்வதற்குத் துணையாக இருக்கட்டும் என்றே இவரை வேண்டிச் சேர்த்துக் கொண்டோம். தவிர, இவர் என் பள்ளித் தோழராதலால் இவர்மீது தனிப்பாசம் வைத்திருந்தேன். துறையூரிலிருந்து கோட்டாத்தூருக்கு வரும் போதெல்லாம் ஒரு வேளையாவது இவர் அகத்தில் சிற்றுண்டி காப்பி கொள்ளாவிட்டால் மிகவும் வருந்துவார். இவர் தவிர, துறையூர்ப் பள்ளி உணவு விடுதியில் தவசிப் பிள்ளையாக (Cook) பணியாற்றிய 'தம்பு' (பெயர் நினைவு இல்லை) என்று அழைக்கப்படும் இளைஞரையும் எங்கட்கு உணவு தயாரிப்பதற்காக நியமித்துக் கொண்டோம். பள்ளி

விடுமுறையாதலால் இவர் எங்களுடன் வருவதற்கு வாய்ப் பாக இருந்தது. ஆக, பயணத்தில் கலந்து கொண்டவர் களின் தொகை பதினொன்றாக உயர்ந்தது.

எங்கெங்கு செல்வது, எப்படிச் செல்வது என்ற விவரங் களை எங்கள் குடும்ப நண்பராகவும், தமிழறிஞராகவும் திகழ்ந்த திரு. கே. எஸ் முத்துவேல்பிள்ளையவர்களைக் (Ceylon Labour Commission Agent) கலந்து திட்டமிட்டு உறுதிப் படுத்திக் கொண்டோம். திரு பிள்ளையவர்கள் சிவ பக்தர். நியம நிட்டைகளை அநுட்டிப்பவர். திருநெல் வேலிச் சீமைப் பக்கம் பல்லாண்டுகள் பணியாற்றித் துறையூருக்கு வந்து சேர்ந்தவர், காட்டுப்புத்தூர் இவரது சொந்த ஊர். பள்ளி நிகழ்ச்சிகளில் இவரைப் பயன்படுத்திக் கொண்டதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இவர் போட்டுத் தந்த திட்டப்படி இராமேச்சரம், மதுரை (திருப் பரங்குன்றம், அழகர் கோயில்), திருநெல்வேலி (குறுக்குத் துறை, நெல்லையப்பர் கோயில்), சிரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர், வானமாமலை, கன்னியாகுமரி, சுசீந்திரம், நாகர்கோயில், திருவனந்தபுரம், கோயம்புத்தூர் (பேரூர்), பழநி, திருவண்ணாமலை, திருப்பதி, திருத்தணி, சென்னை, திருவரங்கம்—என்ற வரிசை முறையில் தலச் சேவை செய்வதென முடிவு கட்டினோம். இருப்பூர்திக்-கால அட்டவணையை வைத்துக்கொண்டு திட்டமிடப்பெற்ற தால் பயணம் பற்றிய விவரங்கள் அற்றுபடியாக இருந்தன.

பள்ளி மாணவர்களை மேல்வகுப்புகளுக்கு மாற்றும் வேலை பள்ளி ஆண்டு வரவு-செலவுத் தணிக்கை இவற்றை முடித்துக் கொண்டு பயணத்தைத் தொடங்கினோம். பத்து பேருக்கும் சலுகை முறையில் பயணச்சீட்டுகள் வாங்கிக் கொண்டோம். சுமார் 40 நாட்கள் பயணமாதலால் ஒரு மூட்டை அரிசி, அதற்கு வேண்டிய பருப்பு முதலிய மளிகை

சாமான்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டோம், 1948 ஆண்டில் உணவு பங்கீட்டு முறை நடைமுறையிலிருந்ததால் நல்ல உணவு கிடைக்காதென்றும், 40 நாட்கள் கடை உணவு உட்கொண்டால் உடல் நிலை கெடும் என்றும் கருதி இந்த ஏற்பாடு செய்து கொண்டோம். திருச்சியிலிருந்து புறப்படும் இரும்பூர்தி வண்டியில் கிளம்பி அன்று மாலையே இராமநாத புரம் வந்தடைந்தோம்.

**இராமநாதபுரம் :** இராமநாதபுரத்தில் இறங்கி ஒரு சத்திரத்தில் தங்கவும் உணவு தயாரிக்கவும் ஏற்பாடு செய்து கொண்டோம். இங்கிருந்து 5 கல் தொலைவிலுள்ள **'தேவி பட்டணம்'** சென்றோம். இது **'நவபாஷாணம்'** என்றும் வழங்கப்படுகின்றது. பேருந்து வசதி இருந்தது. நாங்களே சென்று அங்குள்ள ஒருவர் உதவியால் சங்கல்பம் செய்து திரும்பினோம். இராமபிரான் இங்குதான் 'நவக்கிரக வழி பாடு' செய்ததாக செவிவழிச் செய்தியால் அறிந்தோம், பகலுணவு கொண்டு மாலை இராமநாதபுர அரசர் அரண் மனை, தாயுமானவர் சமாதி முதலிய இடங்கட்குச் சென்று திரும்பினோம். இரவில் சத்திரத்தில் தங்கல். இங்கு சுகாதார வசதி குறைவு, கிணற்றில் நீர் இறைத்துத்தான் நீராடவேண்டும்.

அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து பேருந்துமூலம் **'திருப் புல்லாணி'** சென்றோம். **'புல்லணை'** என்ற பெயர் தான் 'புல்லாணி' என மருவி வழங்குகின்றது. இஃது இராமநாதபுரத்திலிருந்து தென் திசையில் கீழக்கரை செல்லும் வழியில் ஏழுகல் தொலைவிலுள்ள ஊர். ஆழ்வார் களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 திவ்விய தேசங் களில் இதுவும் ஒன்று. திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் செய்தது. இந்தத் திவ்விய தேசத்தில் இராம

பிரான் வானர சேனையுடன் இலங்கை செல்லச்சேது கட்டத் தீர்மானம் ஆனதால் இத்தலம் 'ஆதி சேது' என்றும் வழங்கப் பெறுகின்றது. இன்றும் இத்தீர்த்தத் துறையில் மூழ்குவோர் 'ஸேதுமூலே புல்லாரண்ய க்ஷேத்திரே' என்று சங்கல்பம் செய்து கொள்ளும் வழக்கு உண்மையால் இஃது உறுதிப் படுகின்றது. மேலும், இன்றும் கன்னியாகுமரி ஆதிசேதுவாகவும், தனுஷ்கோடி மத்திய சேதுவாகவும், கோடிக்கரை அந்த சேதுவாகவும் மக்களால் கருதப் பெறுவதைக் கேட்டறியலாம்.

எய்த யோசனை ஈண்டொரு நூறிவை
அய்யி ரண்டின் அகலம் அடைந்திடச்
செய்த தால்அணை என்றிது செப்பினார்
வைய நாதன் சரணம் வணங்கியே[2]

என்ற கம்பநாடனின் திருவாக்கின்படி நூறு யோசனை நீளமும், பத்து யோசனை அகலமும் உடையதாக இராம சேது கட்டப்பட்டதாகத் தெரிவதால்[3] குமரி தனுஷ்கோடி எண்பது கல் அகலமுள்ள சேதுவால் இணைக்கப் பெற்று ஏறக் குறைய ஒன்றாக இருந்ததென்று கொள்ளினும் அமையும். 70 வெள்ளங் கொண்ட வானர சேனை சென்ற வழி இவ்வளவு அகல முள்ளதாக இருக்க வேண்டுமல்லவா?

வீடணனின் யோசனைப்படி கடல் கடக்க வருணனை வழியமைத்துத் தருமாறு தருப்பையைச் சயனமாக்கி

2. யுத்த. சேதுபந்தனம்-71

3. இராமசேதுவைக் கன்னியாகுமரிக் குரியதாகக் கூறும் வழக்கும் உண்டு. இன்றும் குமரித்துறையில் நீராடுவோர் 'ஆதியேதோ : கன்னியாகுமரி, க்ஷேத்திர மாதா பிதுர்திர்த்தே' என்று சங்கல்பம் செய்து கொள்ளும் வழக்கும் உண்டு, கன்னியாகுமரித் தல புராணமும் இதனையே கூறுகின்றது.

அதிலமர்ந்த வண்ணம் ஏழு நாளளவும்[4] இராமன் தவக் கோலத்திலிருந்த இடம்தான் புல்லணை இது வடமொழியில் 'தருப்பசயனம்' என வழங்கலாயிற்று. 'புல்லணை' என்பது அதற்கு ஏற்ற தமிழ்ப் பெயர். இந்த வரலாற்றைக் கம்ப நாடனின்,

தருண மங்கையை மீட்பது
 ஓர்நெறி தருக என்னும்
பொருள்நயந்துநல் நூல்நெறி
 அடுக்கிய புல்லில்
கருணை அம்கடல் கிடந்தது
 கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன்
 விதிமுறை வணங்கி[5]

[தருண மங்கை—இளம் பருவத்தை யுடைய சீதாப் பிராட்டி; 'புல்-தருப்பை'; கருணை அம்கடல் -இராமபிரான்]

என்ற பாடலால் அறியலாம்.

கால் நடையில் கோடிக்கரை சென்று கடலில் நீராடிச் சங்கல்பம் செய்து கொண்டு திரும்பினோம். இங்கு நீராடுவது அபாயம். கடலில் அதிக அலை உண்டு. அலைகள் உயரமாக வீசும்போது கடலில் 'இராமசேது' தெரிவதாக மக்கள் நம்புகின்றார்கள். நம்பிக்கையில் ஆராய்ச்சிப் பார்வை கூடாது என்பது என் கருத்து. ஊரிலுள்ள திருக் கோயிலின் பிராகாரத்தில் இராமபிராமன் புல்லணைமீது

4. யுத்த, வருணனை வழி-6.

5. யுத்த வருணனை வழி-5

தவக்கோலச் சேவை சாதிப்பதைக் காண்கின்றோம். கருவறையில் சேவை சாதிப்பவன் **கல்யாண சகந்நாதன்**; தாயாரின் திருநாமம் **கல்யாணவல்லி நாச்சியார்**; இத்தலத்து எம்பெருமான் இராமபிரானுக்கு வில் ஒன்றை அளித்தாகப் புராண வரலாறு ஒன்று உண்டு. இது காரணமாக இந்த எம்பெருமானுக்குத் தெய்வச் **சிலையார், திவ்வியசரபன்** என்ற பெயர்களும் நிலைத்துவிட்டன. இவர்களை வணங்கி இருப்பிடம் திரும்பினோம். பகல் உணவு கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் இராமேச்சரம் பயணமானோம்.

**இராமேச்சரம்**[6] : இங்கு நான்கு நாள் தங்கலுக்கு இராமா சாஸ்திரிகளே இட வசதி செய்து தந்தார். சுப்பையர் கூட இருந்ததால் ஏற்பாடுகள் நன்றாகவே அமைந்தன. விறகு, பால், மட்டிலும்தான் வெளியில் வாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. சென்ற நாளைக்கு மறுநாள் ஓர் அமைதியான இடத்தில் ஹோமகுண்டம் அமைத்து ஒரு நாள் முழுவதும் என்னையும் என் மனைவியையும், அரங்கசாமி ரெட்டியாரையும் அவர் மனைவியையும் ஒருசேர அமர வைத்து ஹோமம் வளர்த்து மந்திரங்கள் ஓதினார் **ரங்கப்ப ஆச்சார்** என்ற சாஸ்திரி. இவர் பெங்களூரைச் சேர்ந்தவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் மிக நன்றாகப் பேசுவார். இளங்கலைப் பட்டம் பெற்றவர் என்றும், சமஸ்கிருதத்தில் சிரோமணிப் பட்டம் பெற்றவர் என்றும் தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டார். தம்

6. 1969-ஆம் ஆண்டு நான் என் மனைவி, மக்கள் இருவர் இவர்களுடன் பாண்டி நாட்டில் சில தலங்கள், மலைநாட்டுத் தலங்கள் இவற்றைச் சேவித்தபோது இராமேச்சரம் இரண்டாவது சேவையாக அமைந்தது.

இனிமையான பேச்சால் எவரையும் ஈர்த்து விடுவார். சாத்திர ஞானம் இவரிடம் நிறைய இருந்தது. வட மொழியில் மந்திரம் ஓதி, அதைத் தமிழிலும் பெயர்ந்து இசையுடன் சொல்லிய முறை என் உள்ளத்தைக் கவர்ந்தது. எங்களை உணர்ச்சி வசப்படுமாறு செய்துவிட்டார். மாலை 4 மணிக்குக் கொலுவில் வைக்கப் பெற்றிருந்த இரண்டு நாகர் சிலைகளையும் மேளதாளத்துடன் சுமார் 50 கெஜத் தொலைவிலுள்ள ஒரு தோட்டத்திற்கு எடுத்துச் சென்று பிரதிட்டை செய்தோம். நாங்கள் கும்பலாகச் சென்ற போது எதிரில் ஒருவர் பால்குடத்துடன் காணப் பெற்றார். "இது நல்ல சகுனம்" என்றார் சாஸ்திரிகள் (இது முன்னேற் பாடாக இருக்குமோ என்பது என் ஐயம்). முதல் நாள் நிகழ்ச்சி மிகச் செவ்வனே நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி சர்ப்ப சாந்தி. இந்த நிகழ்ச்சி ஊருக்குப் புறம்பே ஒரு ஃபர்லாங் தொலைவில் ஓர் இலுப்பைத் தோப்பில் நடைபெற்றது. இங்கும் ஒரு ஹோமகுண்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. கோதுமை மாவினால் பல்வேறு நாக உருவங்கள் செய்யப் பெற்றிருந்தன. இங்கும் இரு தம்பதிகளையும் அமரச் செய்து ஹோமம் வளர்த்து மந்திரங்களை ஓதினார். நாக உருவங்கள் ஹோமகுண்டத்தில் மந்திரங்களுடன் போடப் பெற்று தகனம் செய்யப் பெற்றன. இந்த நிகழ்ச்சியும் மிக உருக்கமாக நடைபெற்றது. நாங்கள் உணர்ச்சியால் எங்களை மறந்தோம்.

மூன்றாம் நாள் தீர்த்தமாடல். இராமதீர்த்தம், அநும தீர்த்தம், சுக்கிரீவ தீர்த்தம், சடாயு தீர்த்தம் முதலிய ஐம்பதிற்கும் மேற்பட்ட தீர்த்தங்கள். பெரும்பாலும் தீர்த்தங்களில் நீர் இருப்பதில்லை. தீர்த்தக் கரையில்

பெயர்ப்பலகைகள்தாம் இருக்கும், ஊருக்கு வெளியில்தான் இவை இருந்தன. சுமார் 2 கல் தொலைவுச் சுற்றில் இவை அமைந்திருந்தன. ஒரே ஒரு தீர்த்தம் தெப்பக் குளமாக இருந்தது. அதில் மூழ்கி நீந்த முடிந்தது. திருக்கோவிலுக்குள் இரண்டு தீர்த்தங்கள் இருந்தன. வாளி-கயிற்றினால் இறைத்து ஊற்றிக்கொள்ள வேண்டும். நீர் வெளியேறு வதற்கு வழிசெய்திருந்தார்கள். மூலத்தானத்திற்கு அருகி லிருப்பது 'கோடி தீர்த்தம்'. இதிலும் நீராடவேண்டும். இதன் நீரைத்தான் செப்புப் பாத்திரங்களில் அடைத்து ஊருக்கு எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்து வருகின்றது.

இறுதியாக நாங்கள் வந்தது அக்கினி தீர்த்தம். திருக் கோயிலுக்குத் தென்புறம் உள்ள ஆழமும் அலையும் அதிக மில்லாத கடல். இஃது ஒரு சிறிய வளைகுடாபோல் ஒதுக்குப்புறமாக இருப்பதால் மக்கள் அச்சமின்றி இதில் நீராடலாம்.

மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து
குடைந்துன் கழல்பாடி.[7]
[மொய் - மொய்க்கின்ற; தடம் பொய்கை
விசாலமான குளம்; கழல் - திருவடி]

என்று மணிவாசகப் பெருமான் கூறியுள்ளவாறு 'பூம்புனல் பாய்ந்து' நீராடலாம். வடநாட்டிலிருந்து பல நாட்கள் நீராடாமல் அழுக்குடம்புடன் வரும் திருத்தலப் பணிகள் இதில் நீராடும்போது தங்கள் உடலிலுள்ள அழுக்கு முழுதும் நீங்கி நிர்மலமாக, ஒளியுடன் கூடிய திருமேனியைப் பெற

7. திருவெம்பாவை-11.

முடியும். அவர்கள் இங்ஙனம் பெறும் அநுபவத்தை நேரில் கண்டு அநுபவித்தேன். அதிகாலையில் 5 மணிக்குத் தொடங்கும் 'தீர்த்த யாத்திரை' சுமார் பத்து அல்லது பதினொரு மணிக்கு முடியும். அக்கினி தீர்த்தத்துக்குப் போகும் வழியில்தான் சங்கர மடங்கள், மத்வ மடங்கள், வேறு பல மடங்கள் அமைந்துள்ளன.

இரண்டாம் நாள் மாலையில் "**கந்தமாதன பருவதம்**' சென்று சுகமான காற்றை நுகர்ந்தோம். இங்கிருந்து நாற் புறமும் நோக்கினால் தொலைவிலுள்ள காட்சிகளைக் கண்டு அநுபவிக்கலாம். ஒருபுறம் 'மட்டக் குதிரைகள் பண்ணை' ஒன்று உள்ளது. யார் பராமரிப்புமின்றி குதிரைகள் குட்டி கள் போடுகின்றன; தாமாக வளர்கின்றன. குட்டிகளைப் பிடிப்பது கடினம்; வெருவி வெருவியோடுவதால் இவற்றைப் பிடிக்க முடிவதில்லை. சாமர்த்தியமாகப் பிடிப்பவர்கள் ரூ. 100/-, ரூ. 200/- என்று விலைக்கு விற்கலாம். வண்டி இழுப்பதற்கு உகந்தவை. ஆதலால் குதிரை வண்டிக்காரர் கள் இவற்றை வாங்கிப் பழக்குகின்றனர். சிறிய குதிரை களாக இருப்பதால் தீனிக்கு அதிகச் செலவு ஏற்படுவதில்லை. மண்டபத்திலிருந்து இராமேச்சரம் செல்லும் இருப்பூர்தி வழியில் '**தங்கச்சி மடம்**' என்ற நிலையத்தருகில்தான் இக் குதிரை வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெறுவதாகச் சொல்லுகின்றனர்.

**தனுஷ்கோடி :** மூன்றாம் நாள் இங்குச் சென்றோம். அக்காலத்தில் இராமேச்சரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு இருப்பூர்தி வண்டி இருந்தது; ஆனால் இப்போது இல்லை. காலையில் 5 மணிக்கு இராமேச்சரத்திலிருந்து கிளம்பும். மாலை 3 மணிக்கு தனுஷ்கோடியிலிருந்து திரும்பும். நாங்கள் அதிகாலை 5 மணிக்குப் படகில் சென்றோம் (12 கல்

தொலை); 7 மணிக்குத் தனுஷ்கோடியை அடைந்து 2 மணி நேரத்தில் சங்கல்பத்தை முடித்துக் கொண்டு 10 மணிக்கு இருப்பிடத்தை அடைந்தோம். திரு. ரங்கப்ப ஆச்சார் எங்களுடன் வந்து சங்கல்பம் செய்து வைத்தார். பாவம், இவருக்கு மக்கட்பேறு இல்லை! இராமாசாஸ்திரிகள் என்பவர் பேர் பெற்றவர்; மிகவும் இளைஞர். பரம்பரையாக திருத்தலப் பயணிகளுக்கு வேண்டுவன செய்து இத் தொழிலைப் பிழைப்பாகவே நடத்தி வருகின்றார். இவருக்கு உதவியாக ரங்கப்ப ஆச்சார் பணி செய்து வந்தனர். இவர்தம் மாத ஊதியம் ரூ. 100 லிருந்து ரூ. 200/- வரை இருந்தது. எங்களுடன் எங்கட்குத் துணையாக வந்த சுப்பையர்தான் ரங்கப்ப ஆச்சாரைத் தேர்ந்தெடுத்தார். இராமாசாஸ்திரிகளுக்கு ரூ. 500/-ரும் ரங்கப்ப ஆச்சாருக்கு ரூ.50/-ரும் தந்ததாக நினைவு. தனுஷ்கோடியிலிருந்து திரும்பியதும் விரைவாக உணவு உண்டு பகல் 12 மணிக்கு கோவை—விரைவு இருப்பூர்தியில் ஏறி மாலை 4 மணிக்கு மதுரை வந்தடைந்தோம்.

குமிழி –99

## 35. திருத்தலப் பயணம்—மதுரை

மதுரையை வந்தடைந்ததும் மங்கம்மாள் சத்திரத்தில் இடவசதிக்கு முயன்றோம்; கிடைக்கவில்லை. அந்தச் சாலையிலேயே சத்திரத்திற்கு அரை ஃபர்லாங் தொலைவில் நாளொன்றுக்குப் பத்து ரூபாய் வாடகையில் தனியார் பொறுப்பிலுள்ள ஓர் இடம் பிடித்தோம். உணவு சமைப்பதற்கும் நீராடவும் வசதியாகத்தான் இருந்தது. இரவில் படுப்பதற்கு வசதி இல்லை. பெண்களை வீட்டிற்குள்ளே தங்க வைத்துவிட்டு ஆண்கள் மட்டிலும் காற்றோட்டமாக வெளியில் தாழ்வாரத்தில் தங்கினோம்.

மறுநாள் காலையில் அதிகாலையில் நீராடி மீனாட்சியம்மன் கோவிலுக்குப் போகத் தயாரானோம். காலை 6 மணிக்கு அன்னையின் சேவை கிடைத்தது. அன்னையைச் சேவித்த பிறகு 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய சோம சுந்தரக் கடவுளைச் சேவித்து அவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களானோம். திருக்கோயிலை வலம்வந்து வெளியில் வரும்போது பொற்றாமரைக் குளத்தைக் கண்டோம். சங்கப் பலகை மிதந்து பல நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்த குளம் அல்லவா? இதனைக் கண்டு களித்து திருக்கோயிலை விட்டு வெளிவந்து மேலைக் கோபுரவாயிலுக்கருகிலுள்ள ஒரு சிற்றுண்டி விடுதியில் உணவு கொண்டு நகரப் பேருந்து நிலையத்துக்கு வந்து நகரப் பேருந்துமூலம் திருப்பரங் குன்றத்திற்குச் சென்று முருகனைச் சேவித்தோம்.

திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் முருகனின் முதல் ஆற்றுப்படை வீடு இது. கடல் மட்டத்திற்குமேல் 1050 அடி உயரத்தில் ஒரு குன்றமாக அமைந்திருத்தலை நினைக்கின்றோம். சங்க காலத்திலேயே இது முருகனுடைய திருத்தலமாக விளங்கியது. இதனை மருதன் இளநாகனாரின்,

> சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
> சினமிகு முருகன் தன்பரங் குன்றம்[1]

[சூர் - சூரபன்மன்; சுடர் - ஒளி பொருந்திய]
என்ற பாடற் பகுதியாலும்,

> கொடி நுடங்கு மறுகிற் கூடற் குடாஅது
> பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
> ஒடியா விழவின் நெடியோன் குன்றம்[2]

1. அகம்-59
2. ஷை. 149.

[நுடங்குதல் - அசைதல்; கூடல் - மதுரை; நெடியோன் - முருகன்]

என்ற எருக்காட்டுத் தாயங் கண்ணனாரின் பாடற் பகுதியாலும் அறியலாம். இங்குத்தான் திருமுருகாற்றுப்படை என்ற பாட்டு எழுந்தது. நக்கீரர் வாழ்க்கையில் மதுரையில் 'தமிழுக்குப் பொற்கிழி' யளித்த வரலாறும், பரங்குன்றத்தில் 'திருமுருகாற்றுப்படை' தோன்றிய வரலாறும், அவரது கயிலைப்பயணத்தில் 'கயிலை பாதி அந்தாதி, காளத்தி பாதி அந்தாதி' பிறந்த கதையும் மூன்று இலக்கிய வரலாற்று மைல் கற்களாக அமைந்துள்ளன. திருப்பரங்குன்றத்தின் இயற்கையழகுகளையும், பக்தி காட்டிய முருகனது பேரழகினையும் துய்த்துத் தன்னை இழந்த நிலையிலுள்ள ஒருவரின் இதயத்தில் தோன்றிய பகற் கனவுதான் திருமுருகாற்றுப் படையை நக்கீரர் பாடிய வரலாறாக விளைந்திருக்க வேண்டும். திருமுருகாற்றுப்படை, பரிபாடல், அகநானூறு முதலிய சங்க நூல்களாலும் தேவாரம் பாடிய சைவசமய குரவர்களாகிய நாவுக்கரசர் ஞானசம்பந்தர் ஆகிய இருவர் பாடல்களாலும், பிற்காலத்தில் அருணகிரி நாதர் போன்ற ஆன்றோர் வாக்கினாலும் புகழப்பெறும் திருப்பரங் குன்றத்தின் தெய்வப் பெருமையை, நாடோடிக் கதைகளாக வழங்கியவற்றுடன் சேர்த்துக் குழைத்து அருளுகின்றார் நிரம்ப அழகிய தேசிகர் தம் திருப்பரங்கிரிப் புராணத்தில். பரிபாடலில் காணப்பெறும் தெளிவான வருணனை திருமுருகாற்றுப்படையில் காணப்பெறவில்லை. இந்தச் சிந்தனைகள் திருப்பரங்குன்றத்தில் இருந்தபோது என் மனத்தில் எழுந்தன.

இங்குத்தான் இந்திரன் தன் மகள் தெய்வயானையை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுத்த வரலாறு கந்த

புராணத்தில் காணப்பெறுகின்றது. இது மரபு முறையில் (கற்பு முறையில்) கந்தன் தெய்வ யானையை மணந்த வரலாறு. கந்தன் வள்ளியைக் களவு முறையில் மணந்த இடமும் நினைவிற்கு வருகின்றது. என் அருமை நண்பர், சீர்திருத்தச் செம்மல் **சொ. முருகப்பா** அவர்கள் (நகரத்தார்) **மரகதவல்லி அம்மையாரை** (விசுவகர்மகுலக் கைம்பெண்) தந்தை பெரியார் தலைமையில் மணந்த இடமும் திருப்பரங் குன்றமே. பட்டுக் கோட்டையில் ஒரு சுயமரியாதைக் கூட்டத்தில் **சொ. முருகப்பா** அவர்கள் பேசியபோது **மரகத வல்லி அம்மையார்** எழுப்பிய சவாலுக்கு விடைகண்ட இடம் திருப்பரங்குன்றம், இருப்பிடம் திரும்பி மதிய உணவை முடித்துக்கொண்டுச் சற்று ஓய்வு கொண்டு பிற்பகல் திருமலை நாயகர் மகால், வண்டியூர் தெப்பகுளம், கூடல் அழகர் கோயில் முதலான இடங்கட்குச் சென்று வந்தோம்.

**அழகர் கோயில்:** மறுநாள் காலையில் 'பழமுதிர் சோலை' என்று திருமுருகாற்றுப் படையில் வருணிக்கப் பெறுவதும், ஆழ்வார் பாசுரங்களால் 'திருமாலிருஞ்சோலை மலை' என்று மங்களாசாசனம் பெற்றதுமான அழகர் கோயில் சென்றுவரும் திட்டத்தை எங்கள் குழுவிடம் சொன்னேன். கோடைக்காலமாதலால் எல்லோரும் சோர்வுற்ற நிலையி லிருந்தோம். பெரும்பாலோர் அழகர் கோயில் சென்றுவர விரும்பவில்லை. என் மனைவி, என் அன்னை கூட வர மறுத்தனர். இவர்களை மீனாட்சி கோயில்—புதுமண்டபக் கடைகளைச் சுற்றும்படி விட்டுவிட்டு நான், என் மைத்துனர் முதல் மனைவி, அரங்கசாமி செட்டியார் கொழுந்தி, 'சட மங்கலம்' என்ற அம்மையார் மட்டிலும் போகவர ஒரு வதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு அழகர் கோயில் சென்றோம். ரூ.12/- வாடகை தந்ததாக நினைவு. அக் காலத்தில் (1948) இது பெரிய தொகை வண்டிக்காரனுக்கு.

அழகர் கோயில் பற்றிச் சில சிந்தனைகள் மனத்தில் எழுகின்றன. முருகனது ஆறாவது படைவீடு பழமுதிர் சோலை. மதுரைக்கு வடக்கே பன்னிரண்டு கல்தொலைவி லிருக்கும் அழகர் கோயிலே இஃது என்று சிலர் பொதுவாகக் கருதுவதை ஆய்வாளர்கள் மறுக்கின்றனர். சிலப்பதிகாரத் தில் (சிலப். காதை-11. அடி.91) 'திருமால் குன்றம்' எனக் குறிப்பிடப் பெற்றிருப்பது இன்றைய அழகர் மலையே என்று அவர்கள் நம்புகின்றனர். முருகன் திருக்கோயில் உண்மையில் இங்கு இருந்திருக்குமாயின் இளங்கோ அடிகள் அதனைக் கட்டாயம் குறிப்பிட்டிருப்பர் என்பது அவர்களது எண்ணம். அங்ஙனமே, அகநானூற்றுப் புலவர்களாகிய மதுரை மருதன் இளநாகனாரும் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனாரும் இதனைக் குறிப்பிடாது விட்டிருப்பர் என்று சொல்லுவதற் கில்லை. கலித்தொகையில்,

> ஈரணிக் கேற்ற ஒடியாப் படிவத்துச்
> சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளும்
> ஆராக் கணைகாமங் குன்றத்து நின்னொடு
> மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ?[3]

[ஈரணி - ஈர ஆடை; ஒடிய - கெடாத; படிவம்-விரதம்; ஆராக் கணை காமம் - நுகர்ந்து அமையாத மிக்க காமம்]

என்ற பகுதி திருப்பரங்குன்றத்தைக் குறிப்பதாகவே பொருள் உரைப்பர். நச்சினார்க்கினியர் அங்ஙனமே இன்னொரு பாடலில் (கலி - 27) வரும் 'வென்வேலான் குன்று' என்பதற்கு 'முருகன் திருப்பரங்குன்றம்' என்றே பொருள் கூறப் பெற்றுள்ளது. இந்த இரண்டு பாடற் பகுதி களிலும் திருப்பரங்குன்றத்தை வெளிப்படையாகக் குறிக்கும்

3. கலி - 93.

சொற்கள் இல்லையாயினும் மதுரையில் வளர்ந்து வந்த நச்சினார்க்கினியர் திருப்பரங்குன்றத்தையே குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

மதுரைக்கு அண்மையிலுள்ள அழகர்மலைப் பகுதியில் மெய்யாகவே ஒரு முருகன் திருக்கோயில் இருந்திருக்க வேண்டுமாயின் அவர் அதனைக் குறித்திருத்தல் கூடுமேயன்றோ? பரிபாடலில் முருகனைப் பற்றி (செவ்வேள்பற்றி) எழுவர் பாடிய எட்டுப் பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றிலேனும் பழமுதிர்சோலை பற்றியோ அங்குள்ள முருகனைப் பற்றியோ ஒரு குறிப்பும் காணப் பெறவில்லை என்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. திருமுருகாற்றுப் படையின் ஈற்றடியாகிய 'பழமுதிர்சோலைமலை கிழவோன்' என்பது எழுவாயாக அமைந்துள்ளது. 'மலை கிழவோன்' என்பதற்கு 'மலைக்கு உரியவன், உரிமை பூண்டவன்' என்பது பொருள், ஒருமலைமீது சிவன் கோயில் அல்லது திருமால் கோயில் இருப்பினும் அம்மலைக்கு உரியவன் முருகன் என்பது 'சேயோன்மேய மை வரை உலகம்' என்ற தொல்காப்பிய நூற்பாத் தொடரால் (பொருள்—அகத் திணையியல் நூற்.15) உறுதிப்படும். அதாவது திருமாலிருஞ் சோலை மலைக்கு 'முருகன் க்ஷேத்திர பாலனாய் இருக் கின்றான்' என்று கொள்வதே பொருத்தமாகும்.[4]

அழகர்மலைக்கு வந்தவுடனே நம்மாழ்வார் பாசுர மொன்று நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றது.

---

4. திருமால் கோயில் கொண்டுள்ள திருவேங்கட மலையில் முருகன் க்ஷேத்திரபாலனாய் இருக் கின்றான் என்று திருவேங்கட புராணமும் திருவேங்கடத் தந்தாதியும் தெளிவாகக் குறிப் பிட்டிருப்பது ஈண்டு கருதத்தக்கது.

திருமாலி ருஞ்சோலை
மலைஎன்றேன்; என்ன,
திருமால்வந் தென்நெஞ்சு
நிறையப் புகுந்தான்.[5]

என்ற திருப்பேர் நகர்ப் பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளைச் சிந்திக்கின்றோம். நம்மாழ்வார் கொக்கு மலை, குருவி மலை, கழுகு மலை என்ற பல மலைகளையும் சொல்லிப் போகிற போக்கில் 'திருமாலிருஞ்சோலை மலை' என்ற மலையின் பெயர் யாத்ருசிகமாக[6] வெளிவருகின்றது. ஏனைய மலைகளைவிட இம்மலைக்கு ஒரு சிறப்பு உண்டு என்ற அறிவுடன் சொன்னாரல்லர். இதனையே பற்றாசாகக் கொண்டு எம்பெருமான் பெரியபிராட்டியாருடன் கூட வந்து அவர் நெஞ்சு நிறையப் புகுந்து கொள்ளுகின்றான். நினையாது சொன்னவற்றையும் நினைத்துச் சொன்னதாகக் கொடுக்க வல்லவளான பிராட்டி அருகில் இருப்பதனால் மலையைப் பற்றின ஆழ்வாரின் வாக்கு எம்பெருமானுக்கு மலையாகவே (பெரிதாகவே) ஆய்விடுகின்றது. எம்பெருமானுக்கு 'நீர் வண்ணன்' என்றொரு திருநாமமும் உண்டல்லவா? மிகச் சிறு துவாரம் இருப்பினும் நீர் உள்ளே புகுந்து நிறைந்து விடுவதைப் போலவே நீர் வண்ணனான எம்பெருமானும் ஆழ்வார் மனத்துள் புகுவதற்குத் திருமாலிருஞ்சோலை மலை என்று நினையாது சொன்ன உத்தி மாத்திரமே அவருள் புகுவதற்குரிய சிறிய துவாரமாக அமைந்து விட்ட அதிசயத்தை நினைந்து போற்றுகின்றோம்.

நாங்கள் சென்ற குதிரை வண்டி திருக்கோயிலுக்கு முன்னதாகவுள்ள ஒரு பெரிய சோலையை வந்தடைகின்றது.

5. திருவாய். 10.8:1
6. யாத்ருசிகம் - யாரோ ஒருவருடைய இச்சையில் உண்டாவது.

புறச் சூழ்நிலையும் மனநிலையும் ஒரு சேரப் பெற்ற நிலையில் ஆழ்வார் பாசுரங்கள் படலம் படலமாக என் சிந்தனையில் எழுகின்றன. ஆழ்வார்கள் காலத்தில் இருந்த சூழ்நிலையே இன்றும் நின்று நிலவுவதைக் கண்டு என் உள்ளம் அதிசயித்து மகிழ்கின்றது. இந்தச் சோலைக்கு வடக்கிலும் மேற்கிலும் நீண்டுயர்ந்த மலைச் சிகரங்கள் இருப்பதையும் சோலையும் மரங்கள் அடர்ந்து இருப்பதையும் கண்டு இறும்பூது அடைகின்றது. இப்புறக் காட்சி உடனே என்னை,

குலமலை கோலமலை
குளிர்மாமலை கொற்றமலை
நீலமலை நீண்டமலை
திருமாலிருஞ் சோலையதே[7]

(குலம்-தொண்டக்குலம்; கோலம் - அழகு; மா - பெரிய; கொற்றம் - வெற்றி; நிலம் - மரம் முளைப்பதற்குப் பாங்கான இடம்)

என்ற பெரியாழ்வாரின் பாசுரப் பகுதியில் ஆழங்கால் படச் செய்கின்றது. இந்தச் சோலையின் நடுவில் தான் திருக்கோயில் திகழ்கின்றது. ஆகவே, இது **திருமாலிருஞ் சோலை'** என்று பாராட்டப்பெறும் பொருத்தத்தைக் கண்டு வியப்பெய்தச் செய்கின்றது.

இத்தலத்தைப் பற்றிய ஆழ்வார் பாசுரங்களின் சில தொடர்கள் நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன. 'பறியொடு பிணைசேர் மாலிருஞ்சோலை:' என்பது திருவாய் மொழித் (2-10:6) தொடர். திருமலைக்கு 'மறியொடு பிணை சேர்' என்ற அடைமொழி கொடுத்தற்கு ஓர் உட்கருத்து உண்டு. இந்த மலையில் குட்டியும் தாயும்

---

7. பெரியாழ். திரு. 4.3:5

பிரியாதிருத்தல் போல நாமும் தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில் வாழும் ஈசனைப் பிரியாதிருத்தல் நன்று என்று தொனிப்பொருள் காட்டியுள்ளதை அநுபவிக்கின்றோம். 'வலஞ்செய்யும் ஆய மாயவன் கோயில் (2.10:8): ஆயன் + மாயவன்— ஆயமாயவன். 'வளஞ் செய்யும்' என்ற அடைமொழியால் எம்பெருமான் தன்னையும் கொடுத்து தன்னை அநுபவிக்கைக் கீடான வலிமையையும் கொடுப்பவன் என்பது உணரப் பெறும். இதற்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர்; ''திருச்சித்ர கூட பரிஸரத்திலே பிராட்டியுங்கூடக் கையைப் பிடித்துக் கொண்டு உலாவினாற்போல, பிராட்டியைப் பிடித்துக் கொண்டு, அழகர் ஆதரத்தோடே ஸஞ்சரிக்கின்ற தேசம்'' என்பது நம் பிள்ளை ஈடு. ''அழகர் பிராட்டிமாரோடே கூட வலஞ் செய்கிற'' என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

'மழகளிற்றினம் சேர் மாலிருஞ்சோலை' (திருவாய் 2.10:9) என்ற திருவாய்மொழித் தொடரில் ஒரு நயத்தைக் காட்டுவர் நம் பிள்ளை; ''லட்சணோபேதமாயிருப்பதொரு ஆனை நின்றவிடத்தே ஆயிரம் யானைகள் வந்து சேரா நிற்கும். அங்கு நிற்கிறதோ சோலை மழகளிறு'' என்பதாக. திருமங்கையாழ்வார் அழகரை, 'சோலை மழகளிறே' (பெரி. திரு. 4.9:2) என்றும், 'தென் ஆனாய்' (திருநெடுந்.10) — 'தெற்குத் திருமலையில் நிற்கின்ற யானையே' என்றும் விளித்தார். அப்படிப்பட்ட யானையின் அருகே மழகளிற்றினம் சேர்வது வியப்பன்று என்று காட்டியவாறு.[8]

திருக்கோயிலின் பிரதான வாயிலாகிய தொண்டைமான் கோபுர வாயிலைக் கடந்து, திருக்கோயிலின் பிராகாரங்

8. இன்னும் 'திருமாலிருஞ் சோலைமலை' பற்றிய அநுபவங்களை இந்த ஆசிரியரின் 'பாண்டி நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலில் 6-வது கட்டுரையில் காண்க.

களையும் கடந்து கருவறையை அடைந்து கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில்[2] பெரிய பிராட்டியார் பூமிப்பிராட்டியார் இருபுறமும் நிற்கச் சேவை சாதிக்கும் மூலவர் பரமசாமியைக் காண்கின்றோம். இவரே திருமாலிருஞ் சோலைமலை எம்பெருமான். இவருடைய திருமேனியழகு அலையெறிந்து நம்மீது பாய்கின்றது. நம்மையும் அறியாது,

முடிச்சோதி யாய்உனது
  முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
  தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
  பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ
  திருமாலே! கட்டுரையே.[9]
[கடி—இடுப்பு (வடசொல்)]

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் மிடற்றொலியாக வெளிப் படுகின்றது. உற்சவமூர்த்தியே **அழகர்** என்னும் **சுந்தரராசர்.** இத்திருத்தலத்தின் தாயார் **கல்யாணசுந்தரவல்லி நாச்சியார்.** இவருடைய சந்நிதி கோயிலின் தென்புறம் உள்ளது. இவரைத் 'தனிக் கோயில்தாயார்' என்றும் வழங்குகின்றனர்.

---

2. ஒரு சமயம் திருப்பதியில் M. **அனந்த சயனம் அய்யங்காருடன்** திருமாலிருஞ்சோலையைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தபோது இப்பெருமான் 'இருந்த திருக்கோலத்தில்' இருப்பதாகக் கூறினேன். அவர் 'இல்லை, ரெட்டியார், நின்ற திருக்கோலம்' என்று என்னைத் திருத்தினார். அய்யங்கார் அவர் களின் நினைவாற்றலைக் கண்டு வியந்துபோனேன்.

9. திருவாய் 3.1;1

திருக்கோயிலின் வடக்குச் சுற்றில் ஆண்டாள் சந்நிதி உள்ளது. அங்கும் சென்று அவருடைய பேரருளைப் பெறு கின்றோம். அவர் சந்நிதியில் 'சிந்தூரப் பொடி' (நாச். திரு.9) என்ற நாச்சியார் திருமொழியை ஓதி உளங்கரைகின்றோம். அடியிற்காணும் பாசுரத்தை (6) இருமுறை ஓதுகின்றோம்.

நாறு நறும்பொழில் மாலிருஞ்
சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில் வெண்ணெய்வாய்
நேர்ந்து பராவிவைத்தேன்
நூறு தடா நிறைந்த
அக்காரவடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று
வந்திவை கொள்ளுங்கொலோ[10]

[நாறும்—மணங் கமழும்; வாய்நேர்ந்து—வாயாலே சொல்லி; பராவி—சமர்ப்பித்து; சொன்னேன்— வாயால் சொன்னேன்]

இப்பாசுரத்தைப் பற்றி ஓர் இதிகாசம் உண்டு. அதையும் சிந்திக்கின்றோம். எம்பெருமானார் நாச்சியார் திருமொழி காலட்சேபம் நடத்தும்பொழுது இப்பாசுரம் அளவில் வருங்கால் 'ஆண்டாளுடைய எண்ணம் வாய்ச்சொல் அளவில் சென்றதேயொழிய, செயற்படவில்லை. அதனை நாம் தலைக்கட்ட வேண்டும்' என்று கருதி அப்பொழுதே புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளி நூறுதடா நிறைந்த வெண்ணெயும், நூறுதடா நிறைந்த அக்கார அடிசிலும் அழகருக்கு அமுது செய்வித்தருளினார் என்றும், அதன் பின்னர் அப்படியே சிரீவில்லிபுத்தூர் ஏற எழுந்தருளி ஆண்டாளை அடிவணங்கி நின்றனர் என்றும், அப்பிராட்டியும் தன் நினைவறிந்து இவர் நிறைவேற்றிய

10. நாச். திரு. 9:6

செயலுக்கு மனமுவந்து 'நம் அண்ணரே!' என்று சொல்லி அர்ச்சாவதார சமாதியைக் கடந்து தழுவிக் கொண்டாள் என்றும் பெரியோர் பணிக்கும் வரலாற்றையும் எண்ணி மகிழ்கின்றோம். அன்று முதல் இராமாநுசருக்குக் **'கோயில் அண்ணன்'** என்ற திருநாமும் ஏற்பட்டது. இதுவும் நம் நினைவிற்கு வருகின்றது.

இன்னோர் இதிகாசத்தையும் நம்மனம் குமிழியிடுகின்றது. நஞ்சீயர் சந்நிதியில் நம்பிள்ளை, 'ஒரு பூர்ண கும்பத்துக்கும் அதிகப் படியானவற்றை விரும்பாத எம்பெருமான் விஷயத்தில் நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் சமர்ப்பிக்க வேண்டுமோ?' என்று வினவ, அதற்குச் சீயர், 'திருவாய்ப்பாடியின் செல்வத்திற்கு இஃதெல்லாம் கூடினாலும் ஒரு பூர்ணகும்பத்துக்குப் போராது காணும்!' என்று அருளிச் செய்தாராம். இந்த இதிகாசம் நம்மைப் பரவசப்படுத்துகின்றது.

முற்பகல் சுமார் பதினொரு மணிக்குச் சேவையை முடித்துக் கொண்டு வந்த குதிரை வண்டியிலேயே நம் இருப்பிடம் திரும்புகின்றோம். பகலுணவு கொண்டபின் 'உண்ட களைப்பும் தொண்டனுக்கும் உண்டு' என்ற உண்மையை உணர்கின்றோம். புதுமண்டபத்தையும் கடை வீதியையும் சுற்றிப் பார்த்தவர்களும் வந்து சேர்ந்து உணவு கொள்ளுகின்றனர். அன்று பிற்பகல் எல்லோருக்குமே ஓய்வு. அன்றிரவே மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு திருநெல்வேலியை நோக்கிப் புறப்பட்டோம். கோடைக் காலத்தில் கடுமையான பயணம் இது என்பதை ஒவ்வொரு நாளும் உணர்ந்தோம். நாங்கள் கொண்டு வந்த அரிசியில் பாதியைப் பிரித்து மூட்டை கட்டி மதுரையில் தெரிந்த இடத்தில் ஒருவரிடம் தந்து திரும்பவும் மதுரைக்கு வரும் போது எடுத்துக் கொள்வதாகச் சொன்னோம். அவரும் 'சரி' என்று வாங்கி வைத்துக் கொண்டார்.

குமிழி—100

# 36. திருத்தலப் பயணம்—நெல்லை

மதுரையிலிருந்து புறப்பட்ட நாங்கள் மாலை நான்கு மணி சுமாருக்கு நெல்லை வந்து சேர்ந்தோம். திரு. முத்து வேலு பிள்ளை ஒரு சத்திரத்தில் தங்குமாறு பணித்திருந்தார். அதற்காக அந்தச் சத்திர மேலாளருக்கு ஒரு கடிதம் கொடுத்திருந்ததாக நினைவு. அதைப் பயன்படுத்திக் கொண்டு சத்திரத்தில் இடம் வாங்கிக் கொண்டோம். சமையலுக்குத் தனி இடம் இருந்தது. சாமான்களைப் பத்திரமாக வைத்துப் பூட்டிக் கொள்வதற்கு ஓர் அறையும் தந்தார்கள். படுப்பதற்கு ஒரு பெரிய சவுக்கை (Hall) இருந்தது. கைகால் முகம் சுத்தம் செய்து கொண்டு இரவு உணவுக்கு ஏற்பாடு செய்துவிட்டு சமையல்காரத் தம்புவைக் கூட்டிக் கொண்டு ஓர் உணவு விடுதியில் காஃபி பருகினோம். இலை, விறகு முதலிய சாமான்களை வாங்கிக் கொண்டு சத்திரத்திற்குப் போகும்படி பணித்து, தங்கிய இடத்தின் சூழ்நிலையையும் சத்திரத்தின் அருகிலுள்ள இடங்களையும் பார்ப்பதற்காக வெளியே சென்றோம்.

சென்னை திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் தமையன் மருமகன் திரு எஸ் இராமகிருஷ்ண ரெட்டியார் எம் ஏ,,எம் எல்.,[1] ஒரு பெரிய துணிக்கடை நெல்லையில் வைத்திருந்தார். பன்மொழிப் புலவர் இல்லத்தில் அவரிடம் சிறிது அறிமுகம் உண்டு. அவரைப் பார்க்கும் நோக்கத்துடன் வெளிக் கிளம்பியபோது 'சாலைக் குமரன்' திருக்கோயில் கண்ணில் பட்டது. இதுபற்றித் துறையூரில் திரு. முத்துவேல்

1. இவர்கள் இப்பொழுது இல்லை. பல்லாண்டுகட்கு முன்னரே திருநாடு அலங்கரித்து விட்டனர்.

பிள்ளை தெரிவித்திருந்தார். காலையும் மாலையும் சுமார் 6 மணிக்குப் பலர் வந்து சேவித்துப் போதலைக் கண்டோம். நாங்களும் முருகனைச் சேவித்தோம். பக்தர்கள் வந்து வந்து போவதைக் கண்டு மகிழ்ந்தோம். நெல்லையம்பதியில் எங்கு பார்த்தாலும் நெற்றியில் திருநீற்றுப் பொலிவுடன் பக்தர்கள் தென்படுவார்கள். சிவ வழிபாடும் முருக வழிபாடும் பெருவழக்காக இருப்பதை நெல்லையம்பதியில் கண்டு மகிழலாம். நம்மை யறியாமல் நம்மிடம் பக்தி கிளர்ந்தெழுவதையும் உணரமுடிந்தது. நானும் சாலைக்குமரனை,

..................யாஅம்இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே.[2]

என்று கடுவன் இளவெயினனார் வேண்டுவதையே வேண்டினேன்.

செவ்வேள் சேவையை முடித்துக் கொண்டு இராம கிருஷ்ண ரெட்டியார் துணிக்கடையை விசாரித்துக் கொண்டு அவரிடம் சென்றோம். ஓர் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திருநெல்வேலிசந்திப்புப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம். திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனையோ பேர் சட்டம் படித்துவிட்டு வக்கீல் தொழிலில் ஈடுபடாமல் பிறதொழில்களில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிந்தது. திரு. இராமகிருஷ்ண ரெட்டியார் அவர்களும் இதையே குறிப்பிட்டுச் சொன்னார்கள், நானும் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. கோ. சுப்பிரமணியப் பிள்ளை, திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை, திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரு. எஸ். சோமசுந்தர பாரதியார்

2. பரிபாடல்-5. வரி 78-81.

போன்றவர்கள் யாவரும் தமிழாசிரியர்களாகத் திகழ்ந்து பெரும்புகழ் பெற்றிருந்ததை நினைத்துக் கொண்டேன்.

**குறுக்குத் துறை:** இது தாமிரபரணியாற்றின் நடுவி லுள்ள செவ்வேளின் திருக்கோயில். வெள்ளம் வருங்கால் கோயில் வெள்ளத்தில் ஆழ்ந்துவிடும்; முருகனைச் சேவிக்க முடியாது. வெள்ளம் இல்லாத காலத்தில்தான் அவன் மக்களுக்குச் சேவை சாதிப்பான். இக்கடவுளைப்பற்றித் திரு. **முத்துவேல் பிள்ளை** மிகச் சிறப்பாகச் சொல்லியிருந்த தால் மறுநாள் காலையில் துயிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஆற்றங்கரைமீதே நடந்து சென்று திருக் கோயிலை அடைந்தோம். நான்கு மணிக்கே மக்கள் கூட்டம் வரத் தொடங்கியதைக் கண்டேன். கந்தர் அலங்காரத்தை ஓதுபவரும் கந்தரநுபூதியை மனனம் செய்து கொண்டிருப் பவருமாகப் பலர் பக்தி பரவசத்துடன் நீராடுவதையும், படிப் பறிவு இல்லாதவர்கள் 'முருகா, கந்தா, கடம்பா' என்ற ஒலியை எழுப்பிக் கொண்டு நீராடுவதையும், ஈரஆடையுடன் திருக்கோயிலுக்குள் வழிபடுவதையும் தீபஆராதனையைக் கண்டு களிப்பதையும் கண்டு மகிழ்ந்தோம். நாங்களும் நன்கு நீராடி ஈர ஆடையுடன் முருகனைச் சேவித்தோம்; விபூதி சந்தனப் பிரசாதங்களை வாங்கி அணிந்து கொண்டோம். ஒருவர் இசையுடன் கந்தரலங்காரத்தின் பல பாடல்களைப் பாடித் தன்னை மறந்த நிலையில் சேவித்ததைக் கண்டு நாங்களும் எங்களை மறந்த நிலைக்கு வந்துவிட்டோம். மூன்று பாடல்களை ஈண்டு நினைவுகூர்கின்றேன்.

நாளென் செயும்;வினை தானென்
  செயும்;எனை நாடிவந்த
கோளென் செயும்;கொடுங் கூற்றென்
  செய்யும்;குமரேசர்இரு

தாளும் சிலம்பும் சதங்கையும்
　　தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
　　னேவந்து தோன்றிடினே (38)

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
　　பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும்
　　நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு
　　தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
　　கோடன் மயூரமுமே (70

மாலோன் மருகனை மன்றாடி
　　மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
　　தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழில் செங்கோ
　　டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
　　னேஅந்த நான்முகனே (90)

இவற்றை எழுதும்போது இன்றும் இவற்றில் ஆழங்கால் படுகின்றேன். முருகனை மனமாரச் சேவித்து ஈர ஆடையை மாற்றிக் கொண்டு இருக்கை திரும்பினோம்.

**நெல்லையப்பர் கோயில் :** சிறிதளவு சிற்றுண்டியும் காஃபியும் உட்கொண்டு நெல்லையப்பர் கோயிலை நோக்கி விரைந்தோம். நகரப் பேருந்தில் ஏறித் திருக்கோயில் அருகில் இறங்கித் திருக்கோயிலினுள் புகுந்தோம், காந்திமதி அம்மன் திருச்சந்நிதி வழியாக. மதுரையிலுள்ள சம்பிரதாயத்தைப்

போல இங்கும் அன்னை காந்திமதியை வணங்கிய பின்னர் தான் வேணுவனநாதர் என்ற நெல்லையப்பரை வணங்க வேண்டும். இந்தக் கோயில் இன்றிருக்கும் இடம் அந்தக் காலத்தில் ஒரு மூங்கில் காடாக இருந்தது. இராமக்கோன் என்ற இடையன் ஒருவன் நாடோறும் தன் மாட்டுப்பட்டிக் குச் சென்று பால் கறந்து பால் நிறைந்த குடத்துடன் வீடு திரும்பும்போது கால்தடுக்கி விழுந்து பால் வீணாவதாக இருந்தது. ஒருநாள் ஒரு கோடரியுடன் வந்து மூங்கிற் புதரை வெட்டி அகற்ற முனைந்தபோது வெளிப்பட்டவரே வேணுவன நாதர் (வேணுவனம் - மூங்கில் வனம்). இவரே கருவறையில் வெட்டுப்பட்ட தலையுடன் சேவை சாதிக் கின்றார். வேதசர்மா என்ற பெயர் கொண்ட அர்ச்சகர் ஒருவர் கோயில் பூசைக்கு வேண்டிய நெல்லை எடுத்துத் தம் வீட்டின் முற்றத்தில் வெயிலில் உலர்த்திவிட்டு நீராடச் சென்றிருந்தபோது பெருமழை பெய்தது. கவலையுடன் அர்ச்சகர் வீட்டிற்கு விரைந்தபோது அந்த நெல் காய்ந்த இடத்தில் ஒருதுளி மழையும் விழா திருப்பதைக் கண்டு வியந் தார் அர்ச்சகர். நெல்லை வேலிபோல் நின்று காத்ததன் காரணமாக இறைவன் நெல்வேலிநாதன் ஆகின்றார். ஊரைச் சுற்றி நெல்வயல்கள் பரந்திருப்பதால் ஊரும் 'நெல்வேலி' என்ற பெயரைப் பெறுகின்றது.

காந்தமதி - நெல்லையப்பரைப்பற்றி ஒரு சிறிய கதையும் உண்டு வறிஞன் ஒருவன் நெல்லையப்பரைப் பல நாள் வணங்கியும் அவனுக்கு இறைவன் செவி சாய்க்கவில்லை. ஒருநாள் காந்திமதியின் சந்நிதிக்கு வந்து தன் விண்ணப் பத்தை அன்னையின் மூலமாக அப்பனுக்குச் சமர்ப்பிக் கின்றான். வைணவத்தில் பெரிய பிராட்டியார் புருஷகார பூதையாகப்[3] பொலிவதைப்போல் இவளும் பொலிவாள்

3. புருஷகாரம் - சேர்ப்பிக்குந் தன்மை; புருஷகார பூதை - சேர்ப்பிப்பவள்.

என்றுவறிஞன் நம்புகின்றான். அவனது வறுமையும் நீங்கிவிடு கின்றது. இந்தநிகழ்ச்சியைக் கவிஞன் ஒருவன் வடித்துத் தந்த,

ஆய்முத்தப் பந்தரில் மெல்லணை
மீதுஉன், அருகிருந்து
'நீமுத்தம் தா'என்று அவர்கொஞ்சும்
வேளையில், நித்தநித்தம்
வேய்முத்த ரோடுஎன் குறைகள்எல்லாம்
மெல்லமெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ?
நெல்வேலி வடிவுஅன்னையே!

—தனிப்பாடல்

என்ற பாடலை நினைவு கூர்ந்த வண்ணம் அன்னை காந்தி மதியை வணங்குகின்றோம்; அடுத்து நெல்லையப்பரையும் சேவிக்கின்றோம்.

நடாரசாரின் ஐந்து சபைகளுள் இங்குள்ளது **தாமிரசபை.** சுவாமி சந்நிதிக்கெதிரில் ஏழிசை ஒலி எழும்பும் கருங்கல் தூண்கள் உள்ளன. இந்த ஒலியை ஒரு சிறு கோலால் தூண் களைத் தட்டிக்கேட்டு மகிழலாம். இக்கோயிலின் சிற்பங்கள் மிகவும் புகழ் பெற்றவை; நாய்க்கர் காலத்துச் சிற்பங்கள்தாம் அதிகம் உள்ளன. திருக்கோயில் ஐந்து கோபுரங்களுடன் திகழ்கின்றது. இத்திருத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பாடல் மட்டிலும் உண்டு. வழிபாட்டை முடித்துக் கொண்டு இருப் பிடம் திரும்புகின்றோம். உணவு கொண்டு இரவு உணவுக்கும் வழி செய்துவிட்டுச் **சமையல்காரத் தம்புவையும் கூட்டிக் கொண்டு** ஆழ்வார் திருநகரி சிரீவைகுண்டம் திருச்செந்தூர் போய் வரத்திட்டமிட்டோம்.

**ஆதிநாதப் பெருமாள் :** திருநெல்வேலிக்கும் திருச்செந் தூருக்கும் இருப்பூர்தி வண்டி உண்டு. அதில் ஏறி ஆழ்வார் திருநகரி நிலையத்தில் இறங்கி இவ்வூருக்குள் சிறிது

தொலைவு நடந்து வரவேண்டும். திருக்குருகூர் - இதன் பழைய பெயர். நம்மாழ்வார் அவதரித்த காரணத்தால் இத் திருப்பதி 'ஆழ்வார் திருநகரி' என்ற பெயரைப் பெறுகின்றது. (ஆழ்வார்-நம்மாழ்வார்) இது நவ திருப்பதிகளுள் ஒன்று. இந்தத் திருப்பதிக்கு வந்த கவிஞர் ஒருவர்,

இதுவோ திருநகரி? ஈதோ பொருநை?
இதுவோ பரமபதத்து எல்லை—இதுவோதான்
வேதம் பகிர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்.

[சடகோபன் - நம்மாழ்வார்]

என்ற ஒரு வெண்பாவால் சிறப்பிக்கின்றார். திருக்கோயி லினுள் நுழைந்து ஆதிநாதப் பெருமானைக் கண்டு வணங்கு கின்றோம். உற்சவர் பொலிந்து நின்ற பிரான். இவர் பக்கத்தில் உற்சவர்களாக சீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகிய மூவரும் நிற்கின்றனர்.

மூலவர் ஆதிநாதரும் அவர் அருகிலிருக்கும் நாச்சியார் களும் சுதையினாலானவர்கள். இத்திருக்கோயிலில் ஆதிநாத வல்லியும் குருகூர் நாயகியும் ... விக்கோயில் நாச்சியார்களாகத் திகழ்கின்றனர். இத்திருத்தலத்தில் புகழ் பெற்றவர் நம்மாழ்வார். அவர் சந்நிதிக்கு வந்து வீற்றிருக்கும் திருக் கோலத்தில் எழிலே வடிவமாகக் கொண்டிலங்கும் 'வேதம் தமிழ் செய்த வித்தகரைக்' கண்டு வணங்குகின்றோம். இத் தலத்தில் ஆழ்வார் உபதேசிக்கும் ஞான முத்திரையுடன் காட்சி தருகின்றார். இவரைச் சேவித்த பிறகு அவர் இருந்த புளிய மரத்தையும் கண்ணுற விரைகின்றோம். ஒரே மரமாக இருக்கும் இது பல பெ... ...ளுடன் திகழ்கின்றது; இஃது ஏழு பரிவுகளாகப் பிரிந்து திருக்கோயில் விமானம் முழுவதும் பரவி நிற்கின்றது. இஃது 'உறங்காப்புளி' என்று

வழங்கி வருகின்றது. வைணவர்கள் இதனைத் 'திருப்புளி யாழ்வார்' என்றே வழங்குவார்கள். இதன் அடியில் ஆழ்வார் தனிக்கோயிலில் சிலை வடிவில் காட்சித் தருகின்றார்! இவரை வணங்குகின்றோம்.

இத்திவ்விய தேசத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் இன்னொரு செய்தியையும் அறிகின்றோம். தண்பொருநை யாற்றின் வடகரையில் 'காந்தீச்சுவரம்' என்ற சிவன் கோயில் ஒன்று உள்ளது. இங்குக் கரூர்சித்தர் என்ற ஒரு பெரியார் இருந்ததாகவும் அவரிடம் நாய் ஒன்று இருந்ததாகவும், நாடோறும் அது திருக்குருகூர் தெருக்களில் விழும் எச்சில் உணவை அருந்தி வந்ததாகவும் தெரிந்து கொள்ளு கின்றோம். ஒரு நாள் அந்நாய் குருகூரிலிருந்து ஆற்றைக் கடந்து தன் இருப்பிடத்திற்குத் திரும்புங்கால் வெள்ளத்தின் நீர்ச்சுழலில் சிக்கி உயிர் இழந்ததாகவும், அப்பொழுது அதன் உயிர் ஒளிபெற்று மீளா உலகினை அடைந்ததாகவும், இதனைக் கண்ணுற்ற சித்தர் அழகான பாடல் ஒன்றினை அருளியதாகவும் அறிகின்றோம்.

வாய்க்கும் குருகைத் திருவீதி
எச்சிலை வாரி யுண்ட
நாய்க்கும் பரமபதம் அளித்தாய்
அந்தநாயோடு இந்தப்
பேய்க்கும் பலமளித் தால் பழுதோ?
பெருமாள் மகுடம்
சாய்க்கும் படிகவி சொல்லும்
ஞானத் தமிழ்க்கடலே.

என்பது அவர் பாடிய பாடல். இவரும் நம்மாழ்வாரைப் பாடி அவர் திருவருளைப் பெற்றார்.

**சிரீவைகுண்டம்:** திருநகரியிலிருந்து பேருந்து மூலம் சிரீவைகுண்டம் அடைகின்றோம். பரமபதத்திலுள்ள

சிரீவைகுந்தத்திற்குச் செல்லுவதுபோன்ற எல்லையற்ற மகிழ்ச்சியை அடைகின்றோம். இதுவும் நவ திருப்பதிகளுள்[4] ஒன்று. திருக்கோயிலில் நுழைந்து சிலை வடிவிலுள்ள மூலவரை வணங்குகின்றோம். இவர் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகம் கொண்டு சேவை சாதிக்கின்றார். தன்னந்தனியாகவே நிற்கின்றார். இவரைப் பற்றிய ஓர் இதிகாசம்: இதனை அர்ச்சகர் சொன்னது. சோமுகாசுரன் என்பவன் ஓர் அசுரன். அவன் நான்முகனிடத்திருந்த நான்கு திருமறைகளையும் பறித்துச் சென்று விடுகின்றான். அதனால் நான்முகன் வைகுந்தநாதனை நோக்கித் தவம் செய்கின்றான். நான்முகனது தவத்திற்கெழுந்தருளின எம்பெருமான் பெரிய திருவடியின்மீது ஏறி வந்து சோமுகாசுரனை வென்று நான்கு மறைகளையும் மீட்டு அவற்றை நான்முகனிடமே தந்து விடுகின்றான். நான்முகன் பொருட்டு அவசரமாக எழுந்தருளிய காரணத்தால் தேவிமார் இன்றித் தன்னந் தனியனாக வந்துள்ளார்.

**திருச்செந்தூர்:** சிரீவைகுண்டத்திலிருந்து பேருந்து மூலம் திருச்செந்தூர் வருகின்றோம். கடற்கரைத் தலம். இத்தலத்தைத் திருமுருகாற்றுப் படை **'திருச்சீரலைவாய்'** என்று சுட்டியுரைக்கும். வழக்கில் **'செந்தில்'** என்றும் பெயர் வழங்குகின்றது. கடலலைகள் மோதும் கரையோரத்தில் உள்ள கோயிலாதலால் **'அலைவாய்'** என்று பெயர் பெற்றது போலும். காலப் போக்கில் இப்பெயர் அக்கோயில் உள்ள ஊருக்கும் பெயராகி விட்டது.

4. **நவதிருப்பதி:** இவற்றுள் பொருநையாற்றின் தென் கரையிலிருப்பவை திருக்குருகூர், திருக்கோளூர், தென் திருப்பேரை என்ற மூன்றுமாகும். சிரீவைகுண்டம், நத்தம் என வழங்கும் வர குண மங்கை, திருக்குளந்தை, திருப்புளிங்குடி, தொலை விலி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) என்ற ஆறும் ஆகும்.

சங்க காலத்திலேயே இத்திருப்பதி முருகன் உகந்த தலமாக இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அலைவாயில் முருகன் ஆறு திருமுகங்களுடனும் பன்னிரண்டு திருக்கைகளுடனும் அடியார்க்குச் சேவை சாதிக்கின்றான். முருகப் பெருமானின் ஆறுமுகங்களின் அருட்செயல்களும் அம்முகங்கட்கு ஏற்றவாறு பன்னிரண்டு திருக்கைகளின் அருட் செயல்களும் திருமுருகாற்றுப் படை விரித்துப் பேசும். அடியார்களை ஆட்கொள்ளும்பொருட்டு அவன் வான வீதியில் வருங்காட்சி,

அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வாள்வளை ஞால
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே[5]

[அந்தரம்-வானம்; பல்லியம்-இசைக்கருவிகள்; கறங்க-முழங்க; காழ்-வயிரம்; வயிர்-ஊதுகொம்பு; வளை-சங்கு; ஞால-ஒலிக்க; உரம்-வலிமை; உரும்இடி-இடியோசை; ஆறாக-வழியாக; முன்னி-எண்ணி; சேறல்-செல்லுதல்.]

என்று அழகாகக் காட்டப் பெறுகின்றது. இந்த முருகனைச் சேவிப்பதற்குமுன் கடலில் நீராடினோம்.

நாங்கள் சென்ற அக்காலத்தில் திருக்கோயிலினருகில் தலப்பயணிகள் தங்குவதற்கு விடுதிகள் கட்டப் பெறவில்லை. இதனால் நீராட வேண்டிய நேரத்தில் நீராட முடியவில்லை. கடலில் நீராடிய பிறகு அருகிலுள்ள நாழிக் கிணறுகளில் நீராடினோம். இந்த அற்புதம் எங்குக் காண முடியாதது.

5. திருமுருகு—அடி 119-125

ஒன்றரை—இரண்டு அடி விட்டமுள்ள வட்டமான கிணறு இது. இதில் ஒரு நாழியால் (அளவுள்ள ஒரு பாத்திரம்) நீரை மொண்டால், மீண்டும் நீர் அதே மட்டத்திலிருக்கும். இப்படி மொண்டு நீராட வேண்டும். நீராடின நீர் வெளியில் செல்லுவதற்கும் வசதி செய்யப் பெற்றிருந்தது. இதில் நீராடிய பிறகு ஆடைகளைப் பிழிந்து கடற்கரை மணலில் உலர்த்தி விட்டு மாற்று ஆடைகளைப் புனைந்து கொண்டு திருக்கோயில் சென்று ஆறுமுகப் பெருமானைச் சேவித்தோம். பகழிக்கூத்தர் அருளிய இரண்டு பாடல்களை மிடற்றொலியில் பாடிச் சேவித்தோம்.

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு;
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தாளம் தனக்கு விலையுண்டு;
தழைத்துக் கழுத்து விளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண்டு; உன்கனிவாய்
முத்தம் தனக்கு விலையில்லை;
முருகா முத்தம் தருகவே;
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தம் தருகவே.[6]

6. திருச்செந்தூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ்—முத்தப்பருவம்.

என்பது முத்தப் பருவத்தில் உள்ள பாடல். பாடியவாய் தேனூறச் செய்யும் செந்தமிழ்க்கனி.

எள்ளத் தனைவந் துறுபசிக்கும்
இரங்கிப் பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமூரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை
வள்ளத் தமுதுண்டு அகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே;
வளரும் களபக் குரும்பை முலை
வள்ளிக் கணவா! வருகவே![7]

என்பது வாரானைப் பருவத்திலுள்ள இன்கனி. இந்த இரண்டு கனிகளையும் சுவைத்த நிலையில் முருகப்பெருமானிடமிருந்து விடை பெறுகின்றோம்.

நாங்கள் இருப்பூர்தி நிலையத்திற்கு வரும்போது வண்டியும் தயாராக இருந்தது. அதில் ஏறி திருநெல்வேலியை அடைந்தோம். அடுத்த நாள் பயணத்திட்டத்தைப் பற்றிச் சிந்தித்தோம்.

---

7. ஷ்டி. ஷ்டி. வாரானைப்பருவம்

குமிழி—101

# 37. திருத்தலப் பயணம்—கன்னியாகுமரி

தண்பொருநையில் நீராடினோம்; பொருநையில் நீராடினால், வீடு திரும்புவதற்கே மனம் இராது. பளிங்கு போன்ற நீரில் நீராடும்போது உடல் தூய்மைப் படுவதுடன் நற்சிந்தனைகளும் மனத்தைப் பளிங்கு போலாக்குகின்றன. காலை உணவு உண்டு இரவுக்கும் தக்க முறையில் உணவு தயார் செய்து கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் பேருந்தில் குமரி முனையை நோக்கிப் புறப்படுகின்றோம். போகும் வழியில் வானமாமலைத் திருக்கோயில் சென்று வழிபட நினைக்கின்றோம். எங்கள் குழுவில் உள்ள ஒரு மூதாட்டி இத்திருக்கோயில் வழிபாட்டை வற்புறுத்தியதால் இத் திட்டம்.

**வானமாமலை :** இது சிரீவரமங்கை என்றும் வழங்கப் பெறும். நான்கு நேரி (நாங்குநேரி) என்பது பொதுமக்கள் வழங்கும் பெயர். இது திருநெல்வேலி—நாகர் கோயில் நெடுஞ்சாலையில் நெல்லைக்குத் தெற்கில் 19கல் தொலைவி லுள்ளது. இந்த ஊரில் நான்கு ஏரிகள் இருந்தமையால் ஊர் **'நான்குநேரி'** என்ற பெயரால் வழங்கியது. இப்பொழுது ஒரே ஓர் ஏரிதான் உள்ளது. இது திருக் கோயிலை அடுத்துள்ளது. ஆதியில் கோயிலின் கருவறையே குளத்திற்குள் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லு கின்றனர். இன்றும் குளத்தில் நீர் நிறைந்திருக்கும்பொழுது கோயிலின் கருவறையைச் சுற்றி ஒன்றிரண்டு அடி நீர் நிற்பதைக் காணலாம். இத்திருத்தலத்தில் திருக்கோயில், குளம், ஏரிக்கரையிலுள்ள மரங்கள் எல்லாம் பரமபத நாதனை நினைவு படுத்திக் கொண்டே இருக்கும். இந்தத்

திவ்விய தேசத்து எம்பெருமானை நம்மாழ்வார் மட்டிலும் மங்களாசாசனம் செய்துள்ளார். (திருவாய் 5.7) ஆழ்வார் பாசுரங்களில் ஊரின் பெயர் 'சிரீவரமங்கை' என்றே காணப் பெறுகின்றது.

வண்டி பேருந்து நிலையத்தை அடைந்ததும் சாமான்களை நிலையத்திலேயே இறக்கி வைத்து விட்டுத் தம்புவைக் காவலாக இருக்கச் சொல்லித் திருக்கோயிலை அடைகின்றோம். திருச்சுற்றிலுள்ள ஆழ்வார்கள், ஆசாரியர்களைச் சேவித்துக் கொண்டு கருவறையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **தோத்தாரிப் பெருமாளைப்** பட்டாபிஷேகக் காட்சியில் காண்கின்றோம். இந்தக் காட்சி பரமபதநாதன் வைகுந்தத்தில் இருக்கும் இருப்பை நினைவுறுத்துகின்றது. நம்மாழ்வார்,

> வானமா மலையே! அடி
> யேன்தொழ வந்தருளே (5.7:6)

என்ற திருவாய்மொழியில் இப்பெருமானுக்கு அடிமைத் தொழில் செய்ய விழைவதை நினைக்கின்றோம். '**வானமா மலை**' என்பது ஆழ்வார் தோத்தாத்திரிப் பெருமாளுக்குச் சூட்டும் திருநாமம். விண்ணளவும் சென்று கிட்டும்படி ஓங்கின மலைபோல் இராநின்ற எம்பெருமானை மலையாகவே கூறுதல் பொருத்தமன்றோ? எம்பெருமானின் திருநாமமே ஊரின் திருநாமமாக மாறிவிட்டது. நான்கு நேரி என்ற இத்திவ்விய தேசத்தை வைணவப் பெருமக்கள் **வானமாமலை** என்றே வழங்கி வருகின்றனர்.

நாடோறும் நடைபெற்று வரும் எண்ணெய்க் காப்புத் திருமஞ்சனமே இத்திருத்தலத்தின் சிறப்பாகும். ஆறுபடி நல்லெண்ணெயுடன் சிறிதளவு சந்தன எண்ணெயைச் சேர்த்துக் காப்பு நடைபெறுகின்றது. இங்ஙனம் மூலவருக்குத் திருமஞ்சனம் செய்யப்பெற்ற எண்ணெயை ஓரிடத்தில்

சேகரம் செய்து அதனைப் பின்னர் ஓர் எண்ணெய்க் கிணற்றில் ஊற்றி விடுகின்றனர். நாம் கால்படி நல்லெண்ணெய் கொணர்ந்தால் அதனை இக்கிணற்றில் ஊற்றிவிட்டு அக்கிணற்றிலிருந்து கால்படி எண்ணெய் எடுத்துக் கொள்ளலாம், கோயில் ஆட்சியாளர்களிடம் சொன்னால் எடுத்துத் தருவார்கள், இந்த எண்ணெய் தீராத சருமநோய் (தொழுநோய்) முதலியவைகளை எல்லாம் தீர்க்கின்றது என்று மக்கள் நம்புகின்றனர், வட நாட்டுப் பக்தர்கள் இந்த எண்ணெயை, அதிகமாக வாங்கிச் செல்லுகின்றனர். இந்த எண்ணெயின் பெருமையைக் குறுமுனியாகிய அகத்தியரே தம்முடைய மருத்துவ முறையில் குறிப்பிட்டுள்ளாராம்.

**கன்னியாகுமரி :** வானமாமலை எம்பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு 'நீலத்திரைக்கடல் ஓரத்திலே — நித்தம், தவம் செய்யும் குமரி எல்லையை' நோக்கிப் புறப் படுகின்றோம். சரியான வெயிலில் பயணம். மாலை ஐந்து மணிக்குக் கன்னியாகுமரியை அடைகின்றது, பேருந்து. அங்குள்ள சத்திரமொன்றில் தங்க இடவசதி செய்து கொள்ளுகின்றோம். சாமான்களைச் சத்திரத்தின், ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டுத் தம்புவையும் கூட்டிக் கொண்டு ஒரு சிற்றுண்டி விடுதியில் சிறிதளவு சிற்றுண்டியும் காஃபியும் உண்டு ஊரைச் சுற்றிப் பார்க்கின்றோம்.

இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பல்வேறு வித வண்ணக் கற்கள் வந்து இறங்கி இருந்தன. பல்வேறு இடங் களில் குடிசைகளைப் போட்டுக் கொண்டு கல்தச்சர்கள் கல் வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டோம், விசாரித்ததில் விவேகாநந்தர் பாறையின்மீது எழுப்பப் பெறும் கோயில் திருப்பணிக்காக இக்கற்கள் தயாராகின்றன என்றார்கள். இவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டே கடைத் தெருவையும் சுற்றினோம். எங்கும்

சங்காலான சாமான்கள் பரப்பி வைத்துக்கொண்டு விற்பதைக் கண்டோம். இரவு எட்டுமணிபோல் சத்திரம் திரும்பினோம். மறுநாள் காலையில் உணவு தயாரிப்பதற்கு வேண்டிய சிறிதளவு விறகு, வேறு சில மளிகை சாமான்கள் வாங்கிக் கொண்டோம்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கடல் நீராடச் சென்றோம். காலையில் கதிரவன் கடலிலிருந்து எழுகின்ற காட்சியைக் கண்டோம், நீராடி ஆடை மாற்றிக் கொண்டு குமரிமுனையில் தவம் செய்யும் பகவதி அம்மையின் திருக்கோயிலை நோக்கி நடக்கின்றோம். இங்கு அரபிக்கடல், வங்காளக் குடாக் கடல், இந்து மாக்கடல் மூன்றும் சேர்ந்து அலைவீசிக் கொண்டிருந்ததைக் கண்டோம். பௌர்ணமியில் ஒரே நேரத்தில் பகலவன் மறைவதையும் சந்திரன் உதயமாவதையும் காணலாம். பகவதி அம்மை தவம் செய்வதைப் பற்றிச் செவிவழியாக வழங்கும் கதைகள் பல. மூன்று கதைகளை இங்குக் கூறுவேன்.

**முதல் கதை:** பண்டைக் காலத்தில் பரத கண்டத்தை ஆண்ட ஆதிப் பரதனுக்கு எட்டுப் புதல்வர்கள்; குமரி என்று ஒரே மகள். ஏழு அண்ணன்மாருக்கு வள்ளி ஒரு தங்கையாக அமைந்ததைப் போல், எட்டு அண்ணன்மாருக்கு ஒரு தங்கை அமைந்தாள். இந்த ஒன்பது பேருக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுத்தான் பரதன். தென்பகுதி பெண்ணுக்குக் கிடைத்தது. குமரியிருந்து ஆண்ட இடமே இன்றைய குமரிமுனை என்கின்றது இக்கதை.

**இரண்டாவது கதை:** அன்னை செய்யும் தவத்தைக் குறித்தது இக்கதை. நள்ளிரவில் வசுதேவர் கண்ணனை ஆயர் பாடியிலும், ஆயர் பாடியில் பிறந்த பெண் குழவியைச்

சிறையில் தேவகியருகிலும் மாற்றிவிடுகின்றார். கம்சன் இந்தப் பெண் குழவியை எடுத்துச் சென்று அதனைக் கொல்ல விரைகின்றான். ஆனால் அக்குழந்தையோ அவனை இகழ்ந்து உதைத்துத் தள்ளிவிட்டு ஆகாயத்தில் மறைகின்றது, இங்ஙனம் மறைந்த குழந்தையே திருமாலின் தங்கையான எல்லாம் வல்ல சக்தி. இந்தச் சக்தியே பகவதி என்ற திருநாமத்தோடு இக்கடற்கரையில் கையில் இலுப்பைப் பூமாலை தாங்கிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்கின்றாள். இவளே என்றும் கன்னியாக குமரியாக, நின்று தவம் செய்கின்றாள்.

**மூன்றாவது கதை:** பகன், மூகன் என்ற இரண்டு அசுரர்கள் தேவர்கட்கு இடுக்கண் விளைவிக்கின்றனர். தேவர்கள் இறைவனிடம் முறையிட, அவன் தன்னுடைய சக்தியை இருகூறாக்கி இரண்டு பெண் தெய்வங்களாக உருவாக்குகின்றான். இந்தச் சக்தியில் ஒன்று வடகோடியில் கங்கைக் கரையில் காளி தேவியாகவும், மற்றொன்று தென் கோடியில் கடற்கரையில் குமரியாகவும் நின்று நம்மைக் காக்கின்றனர். பகவனுடனும் மூகனுடனும் போர் புரிந்து வென்று தேவர்களின் இடுக்கண் தீர்க்கின்றனர்.

**திருக்கோயில் :** இக்கதைகளை அறிந்தவண்ணம் திருக்கோயிலில் நுழைகின்றோம். கோயில் பெரியதும் அல்ல; சிறியதும் அல்ல; நடுத்தரமானது. திருக்கோயிலின் தலைவாயில் வடபுறமாக அமைந்துள்ளது. இரண்டு சுற்றுகள் உள்ள கோயில். பெரிய சுற்றில் கொடி மரம், பலிபீடம் முதலியன உள்ளன. நாடோறும் அம்மை இதனைச் சுற்றி வருவாள். இதற்கு அடுத்த உள் சுற்றில் மணிமண்டபமும் சபா மண்டபமும் உள்ளன. மணிமண்டபத்தை ஆறு வட்டத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இதற்கும் உள்ளே உள்ள உள் மண்டபத்தில்தான் கன்னிக்குமரி தவக்

கோலத்தில் நிற்கின்றாள்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நிற்கின்றாள். இவளது கிரீடத்தில் பிறைச் சந்திரன் ஒளி தருகின்றான். இவள் அணிந்திருக்கும் வைர மூக்குத்தி மிக மிகப் பிரகாசமானது. அம்மையைக் கண்டு தரிசித்துவிட்டு உடல் புளகிக்க உள்ளம் நிறைவு பெறும் நிலையில் வெளிவருகின்றோம்.

தென்னெல்லை காத்தாளும்
    தேவி! குமரீநின்
பொன்னடியைக் கும்பிட்டுப்
    போற்றுகின்றேன் - மன்னுபுகழ்ச்
செந்தமிழ்நாடு ஒன்றாகித்
    தேவர்நாடு, ஒத்துலகில்
சந்ததம் வாழவரம்
        தா[1]

என்ற பாடலை இசைத்தவண்ணம் குமரிப் பகவதியிட மிருந்து விடை பெறுகின்றோம்.

**தடைப்பட்ட திருமணம் :** குமரியின் பேரழகால் ஈர்க்கப் பெற்ற சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயன் இவளைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்புகின்றான். இதற்காகத் தேவர்களைக் கூட்டித் தன் கருத்தை வெளியிடுகின்றான். தேவர்கள் கூடிய இடமே சுசீந்தரம். அது 'கன்னியம்பலம்' என்ற பெயரால் வழங்கி வருகின்றது. தாணுமாலயனின் விருப்பம் அறிந்த தேவர்கள் கன்னிக்குமரி திருமணம் புரிந்து கொண்டால் அவளுடைய தவம் பழுதாகி அசுரர்களை அழிக்க முடியாதே என்று மனம் கலங்குகின்றனர். இச் சமயத்தில் நாரதர் தோன்றி தேவர்களைச் சமாதானப் படுத்தித் தாமே முன்னின்று திருமணத்தைச் செய்து

1. தேவி : மலருமாலையும் - குமரிபகவதி - 1.

வைப்பதாகச் சொல்லுகின்றார். நாரதர் தாணுமாலயனுக்கு விதித்த நிபந்தனைகள் இரண்டு: (1) கண்களில்லாத் தேங்காய், காம்பில்லா மாங்காய், நரம்பில்லா வெற்றிலை கணு இல்லாக் கரும்பு, இதழ்கள் இல்லா மலர்--இவற்றைச் சீதனப் பொருளாகக் கொண்டுவர வேண்டும்; (2) திருமணம் நடைபெற வேண்டிய நல்லோரை பகலவன் உதயத்தில்; அதற்கு ஒரு நாழிகைக்கு முன்னதாகவே மணமகன் மண வறைக்கு வந்துவிடவேண்டும்.

மணமகனான தாணுமாலயன் இதற்கெல்லாம் சலிக் காமல் கேட்ட பொருள்களை வண்டி வண்டியாக அனுப்பி விடுகின்றார். இடையில் உள்ல ஐந்துகல் தொலைவைக் கடக்க நள்ளிரவே புறப்பட்டுவிடுகின்றார். இதைக் கவனித்த நாரதர் உடனே சேவல் உருக்கொண்டு சூரிய உதயத்தை அறிவித்துவிடுகின்றார். முகூர்த்தநேரம் தவறி விட்டதாகக் கருதி, தாணுமாலயன் பெருத்த அவமானத் துடன் சுசீந்திரத்திற்குத் திரும்பிவிடுகின்றார். தாம் திரும்பிய இடமே இன்றும் 'வழுக்குப்பாறை' என வழங்கு கின்றது. இது சுசீந்திரத்திற்குக் கிழக்கே ஒருகல் தொலைவி லுள்ளது. இதில் சேவலின் கால் தடமும் தாணுமாலயனின் திருவடித் தடமும், காணப்படுகின்றன. இங்ஙனம் பகவதி - தாணுமாலயன் திருமணம் தடைப்பட்டு விடுகின்றது; பகவதியின் தவம் தொடர்ந்து நடைபெறுகின்றது. அவளுக்கு வந்த பரிசப் பொருள்களான பொன்னும் மணியும் நெல்லும் கரும்புமே இன்று குமரிக்கரையில் பல நிற மணல் களாகவும் குன்றுகளாகவும் பரந்து கிடக்கின்றதாகக்கூறுவர். மாலை நேரக் கதிரவன் கடலில் குளிப்பதைக் கவனித்து விட்டுச் சுசீந்திரம் செல்லுகின்றோம்.

**சுசீந்திரம் :** சுமார் மாலை ஏழுமணிக்குச் சுசீந்திரம் அரசர் சத்திரத்தில் இடம் பிடித்து இரவு உணவு உட் கொள்ளுகின்றோம். இரவில் சத்திரத்தில் உறங்கும்போது

விழிப்பாக இருக்கவேண்டும் என எச்சரித்தனர். ஏதாவது களவு போய்விட்டால் அரசர் காவலர்கள் (State Police) கவனிக்க மாட்டார்கள் என்றும் எங்களுக்குத் தெரிவித்தனர். அரண்மமனைச் சவுக்கையில் படுக்க ஏற்பாடு செய்து கொண்டோம். எங்கள் சாமான்களை ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டோம்; கையில் மின்விளக்கு இருந்தது. சுப்பையர் உட்பட ஆண்கள் நால்வர்; பெண்கள் எழுவர். இவர்களுள் நால்வர் சிறிதளவு நகையுடன் இருந்தனர். இவர்களை நடுவில் படுக்கவைத்து, அடுத்துக் கைம்பெண்கள் மூவரை படுக்குமாறு அமர்த்தி இருபுற ஓரத்திலும் பக்கத்திற்கு இருவராக ஆண்கள் படுத்துக்கொண்டோம். இரவு ஒருமணி இருக்கும். செம்மறி ஆட்டுக்கிடா கொம்புபோன்ற மீசையையுடைய நல்ல திடகாத்திர மனிதர் ஒருவர் எங்களுடன் வந்து படுத்தார். அவர் வந்தது தெரிந்து மின் விளக்கு அடித்துப் பார்த்தோம். "வேறிடத்தில் படுப்பது தானே? எங்களுடன் ஒட்டியபடி ஏன் வந்தீர்?" என்று கேட்டோம். அதற்கு அவர் "மடியில் கனம் உள்ளது. இவ்வூரில் திருடர்கள் அதிகம். அவர்கட்கு அஞ்சியே உங்களுடன் படுத்தேன்" என்றார். "எங்கள் சாமான்களை அறையில் வைத்துப் பூட்டியுள்ளோம். உங்கள் மடிக் கனத்தையும் தாருங்கள்; உள்ளே வைத்துப் பூட்டிக் காலையில் தருவோம்" என்றோம். சிறிது கனைத்துவிட்டு அவரே ஒன்றும் பேசாமல் எழுந்து போய்விட்டார். "இவர்களிடம் நம் பருப்பு வேகாது" என்று எண்ணியே சென்றிருக்க வேண்டும் என்பதாக நினைத்துக் கொண்டோம். இஃது எங்கட்கு ஒரு வகையான அநுபவம். சுசீந்திரத்திலிருந்து திரு. சுப்பையர் எங்களிடமிருந்து விடைபெற்று ஊர் திரும்பினார். அய்யர் இப்போது (டிசம்பர் - 89) இல்லை; சில ஆண்டுகட்கு முன்னர் திருநாடு அலங்கரித்துவிட்டார்.

சுசிந்திரம் பழையாறு என்ற ஆற்றின் கரையிலுள்ளது. ஆற்றின் தென்கரையிலிருந்து சுமார் 300 அடி தொலைவில் உள்ளது. காலையில் நீராடி மாற்றுடை உடுத்திக்கொண்டு; திருக்கோயில் சென்று தாணுமாலயனைச் சேவிக்கின்றோம். கருவறையில் இவர் இலிங்க வடிவமாக இருக்கின்றார். திருமஞ்சனக் காலம் தவிர மற்றைய நேரத்தில் கவசத்தால் மூடப் பெற்றே இருக்கின்றார். இங்குத் திருமுழுக்காட்டும் எண்ணெய் பூமிக்குள் சென்று கன்னியாகுமரித் தீர்த்தத்தில் கலந்து விடுவதாக ஐதிகம். இங்குள்ள ஆஞ்சனேயர் புகழ் பெற்றவர், 18 அடி உயரத்தில் மிகவும் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றார்.

தாணுமாலயன் இணைந்து இருப்பதைப் பற்றிய கதை ஒன்றுண்டு. அத்திரி முனிவரின் மனைவி அனசூயை கற்பில் சிறந்தவள் என்பதை நாம் அறிவோம். திருமணத்தில் அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வழக்கம் உண்டல்லவா? முனிவர் தம் மனைவியை ஆச்சிரமத்தில் தனியாக விட்டு இமய மலைக்குத் தவம் செய்யச் சென்றிருக்கின்ற சமயத்தில் 'கலகப்பிரியர்' நாரதர் நாமகள் பூமகள், மலைமகள் இவர்களிடம் வந்து இரும்புக் கடலைகளை வேகவைத்துத் தருமாறு வேண்ட, அவர்கள் அது தம்மால் ஆகாது என்று சொல்லவே, நாரதர் அனசூயையிடம் வந்து அவற்றைக் கொடுக்க, அவள் தனது கற்பின் மகிமையால் வேகவைத்து அளிக்கின்றார். இதைத் தேவியர் மூவரிடம் சொல்லி வைக்கின்றார் கலகப்பிரியர். தேவியர் ஏவியவண்ணம் மும்மூர்த்திகளும் அனசூயையின் கற்பைப் பரிசோதிக்கப் புறப்பட்டு வருகின்றனர். அத்திரி முனிவரின் ஆச்சிரமத்திற்கு அதிதிகளாக வந்தவர்களை உபசரித்து உணவு பரிமாற முனைகின்றபோது மும்மூர்த்திகளும் தமக்குப் பிறந்தமேனியாக உணவு பரிமாற வேண்டும் என்கின்றனர். அனசூயை தம் கற்பின் மகிமையால் அவர்கள் மூவரையும் மூன்று குழந்தைகளாக்கி அமுதூட்டுகின்றாள். நாரதர் மூலம்

செய்தியறிந்த மூவரும் அனசூயையிடம் வந்து தமது கணவர்கள் பழைய வடிவம் அடையத் தவம் கிடக்கின்றனர். அனசூயை தேவர் மூவரையும் பழைய உருவங்களை அடையுமாறு அருள்கின்றாள். அனசூயையின் வேண்டுகோளின்படி மூவரும் இணைந்து தாணுமால் அயனாக (தாணு - சிவன்; மால் - திருமால்; அயன் - நான்முகன்) ஒரே உருவத்தில் அந்தத் தலத்தில் தங்கிவிடுகின்றனர்.

தாணு மாலயன் வரலாற்றை அறிந்த நாம் 'சுசீந்திரம்' என்ற பெயர்க் காரணத்தையும் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? அகல்கை - இந்திரன் கதையை நாம் அறிவோம். அகலிகையைக் கல்லாகவும் இந்திரன் உடல் முழுவதும் பெண் குறியாகும் படியும் கௌதமர் சாபம் இடுகின்றார். பின்னர் தேவர்களின் வேண்டுகோளின்படி தேவேந்திரன் உடல் எல்லாம் கண்களாகும்படி சாபத்தை மாற்றுகின்றார் முனிவர். அந்த இந்திரன் இத்தலத்திற்கு வந்துதான் சாப நீக்கம் பெறுகின்றான். அவன் உடலும் தூய்மையாக்கப் பெற்று (சுத்திகரிக்கப் பெற்று)ப் பழைய உருவை அடைகின்றான். இந்திரன் சுசி பெற்றதலம் 'சுசி இந்திரம்— சுசீந்திரம்' என்ற பெயர் பெறுகின்றது. இங்குள்ள தாணு மாலயனை ஒவ்வோர் இரவும் தேவேந்திரனே பூசை செய்கின்றான் என்பது ஐதிகம். இங்கு அர்த்தசாம பூசை இல்லை. ஆனால் பூசைக்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்து வைத்து விட்டு அர்ச்சகர்கள் நின்று கொள்வர், அர்த்த சாம பூசை அமராபதியால் நடைபெறுவதால் மாலை பூசை செய்தவர் காலை கடை திறக்கக் கூடாது என்பது கட்டளை. இது காரணமாக இங்குப் பூசைக்கு இருவர் நியமிக்கப் பெற்றுள்ளனர். காலையில் கடை திறக்கும்போது "அகம் கண்டது புறம் கூறேன்' என்று சூளுரைத்தே வாயில் திறக்கவேண்டும் என்பது கட்டளை. தேவேந்திரன் ஆணைப்

படி விசுவகர்மா இங்குத் தாணுமாலயனுக்கு திருக்கோயிலை நிர்மாணித்தான் என்பது செவிவழிச் செய்தி.

திங்களும் கருணை காட்டும்;
  தீக்கண்உன் வெகுளி காட்டும்;
கங்கையுன் பெருமை காட்டும்;
  கடுவுமுன் ஆண்மை காட்டும்;
சிங்கம்நுண் இடையைக் காட்டச்
  சிறையனம் நடையைக் காட்டும்;
மங்கையோர் பாகா! தாணு
  மாலையா! சுசிந்தை வாழ்வே![2]

என்று தாணுமாலயனை வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

**திருவனந்தபுரம் :** தாணுமாலயனிடம் விடைபெற்றுக் கொண்டு நாகர்கோவில் வந்து திருவனந்தபுரம் புறப்படு கின்றோம் பேருந்து மூலம். பேருந்து திருவனந்தபுரத்தை நோக்கிச் செல்லுங்கால் சாலையின் இருபுறமும் அடர்ந்த தோப்புகள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள், பூங்கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்குமாக வலைப்பின்னல் போன்றுள்ள பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய்கள் இவற்றைக் கண்டு களிக்கின்றோம். இருமருங்கும் காணப் படும் ஓங்கி உயர்ந்த பலா மரங்களில் குலைகுலையாகத் தொங்கும் பலாக்கனிகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

ஓங்குமரன் ஓங்கிமலை
  ஓங்குமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர்
  சோலையுடை விம்மித்

2. தே. வி : மலரும் மாலையும்—சுசிந்தைமாலை

தூங்குதிரை யாறுதவழ்
சூழலது ஓர்குன்று.[3]

[மரன் - மரம்; ஓங்கி - உயரப்பெற்ற; குலாவும் - விளங்குகின்ற; புடை - பக்கம்; தூங்குதிரை-மிக்க அலைகள்; சூழல் - சுற்றிடம்]

என்று கம்பநாடன் காட்டும் சூழ்நிலை நமது நினைவிற்கு வருகின்றது. அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமனுக்குப் பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக் காட்டுவது இப் பாடல். நாகர் கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலைதான். சில இடங்களில் பகலவன் கதிர்களும் உள்புகாநிலை. இக் காட்சிகளைக் கண்டுகளித்த வண்ணம் திருவனந்தபுரத்தை அடைகின்றோம்.

இருப்பூர்தி நிலையத்தருகிலுள்ள 'குமரன் விடுதி'யில் 3 அறைகள் வாங்கிக் கொள்கின்றோம். விடுதியின் வெளியில் சுற்றுப்புறச் சுவர்களின் அடங்கலுக்குள் உணவு தயாரிக்கவும் இசைவு பெறுகின்றோம். வேறு இடங்களில் அலைந்து இடம் பிடிக்க விரும்பவில்லை. மாலை மூன்று மணிக்கே வந்து விட்டதால் விரைவில் குளித்து அனந்தசயனச் சேவைக்குத் தயாராகின்றோம். அன்றிரவு சமையல் இல்லை. உணவு விடுதியில் உணவு கொண்டோம். அதனால் தம்புவையும் கூட்டிக் கொண்டு திருக்கோயிலுக்குப் புறப்படுகின்றோம். அரைகிலோ மீட்டர் நடைதான்; கோயிலை அடைந்து விடலாம்.

திருவனந்தபுரத் திருக்கோயிலும் ஓர் அழகிய சோலை சூழ்ந்த இடத்தில்தான் அமைந்துள்ளது. "பெரியநீர் வேலை சூழ்ந்து, வாசமே கமழும் சோலை வயல் அணி அனந்தபுரம்"

3. கம்ப. ஆரணி - அகத். 57

(திருவாய் 10,2:4) என்று நம்மாழ்வார் இத்திருப்பதியைச் சிறப்பிக்கின்றார். கிட்டத்தட்ட இதே நிலையினை இன்றும் காணலாம். இந்த அழகிய திருப்பதியை நம்மாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார் (10.2). இந்த மங்களாசாசனப் பாசுரங்களைச் சிந்தித்த வண்ணம் திருக் கோயிலை அடைகின்றோம். திருக்கோயிலுக்குள் நுழைபவர்கள் சட்டை, பனியன் அணியக்கூடாது என்பது நடைமுறை. இவற்றைக் கழற்றிக் கோயில் வாயிலில் இதற்கென்றே காத்துக் கிடக்கும் ஒருவரிடம் தந்து செல்கின்றோம். திருச்சுற்றைச் சுற்றிவருவதற்கே அரைமணி நேரத்திற்கு மேலாகும். இறுதியாக கருவறைக்கு வருகின்றோம்.

இந்தத் திவ்வியதேசம் சாதாரணமானதன்று. இஃது 'அயர்வறும் அமரர்களும்' வந்து அடிமை செய்யும் இடமாதலின் திருநாட்டைக் காட்டிலும் ஏற்றம் பெற்றதாகும். அமரர்களின் தலைவரான சேனை முதலியார் வந்து வழிபடுதலால் அவருடன் நித்திய சூரிகளும் வந்து அந்தரங்கமான பணிவிடை செய்கின்றனர். நித்திய சூரிகளும், நான்முகன் முதலிய தேவர்களும், நம்போலியரும் வழிபடுவதற்கென்றே இந்த எம்பெருமான் மூன்று திருவாயில்களை அமைத்துக் கொண்டு சேவை சாதிக்கின்றான். முத்தர்களும் நித்திய சூரிகளும் திருமுகத்திற்கு நேராகவுள்ள வாயிலின்முன் நின்றும், அரன் அயன் முதலிய தேவர்கள் திருநாபிக்கு நேராகவுள்ள வாயிலின்முன் நின்றும், நம்போலியர் கிடைத்தற்கரிய திருவடிக்கு நேரேயுள்ள வாயிலின்முன் நின்றும் வழிபடல் வேண்டும். இன்றும் இத்தகைய அமைப்பினைக் கருவறையில் காணலாம். இதனை ஆசாரிய ஹிருதயமும் 'முகநாபி பாதங்களை துவாரத்திரயத்திலே காட்டும்'[4] (திரயம் - மூன்று) என்று குறிப்பிடும்.

4. ஆசா. ஹிரு. 183.

கருவறைக்கு முன்புறமுள்ள அர்த்த மண்டபத்தின் அடித் தளக் கருங்கல் 20 அடி சதுரத்தைக் கொண்டது; கல்லின் கனம் இரண்டரையடி. இஃது 'ஒற்றைக்கல் மண்டபம். திருவாட்டாற்றுத் திருக்கோயிலிலும் இத்தகைய அடித்தளக் கல்லையுடைய மண்டபம் உள்ளது. இரண்டு கோயில்களும் ஒரேமாதிரி அமைப்பினைக் கொண்டனவாயினும் சிற்பங்கள் முதலியவற்றை நோக்கத் திருவாட்டாற்றுத் திருக்கோயில் பழமையுடைய தெனத்தோன்றுகின்றது. அங்குப் பெரும் பாலும் கேரளநாட்டுப் பணி அதிகம்; இங்குத் தமிழ்நாட்டுப் பாணி அதிகம். ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்துகொண்டு மூன்று திருவாயில்கள் மூலமாகவும் தெற்கு நோக்கிச் சாய்ந்த திருவபிடேகமும் வடக்கு நோக்கி நீட்டிய திருவடிகளையும் கொண்டு கிழக்கு நோக்கிய நிலையில் அனந்தன்மீது பள்ளி கொண்டுள்ள பதுமநாபனைக் கண்ணாரக் கண்டு சேவிக் கின்றோம். பாதாதிகேசமாகச் சேவித்த நாம் திருவரங்கத்து அமுதினைச் சேவித்த திருப்பாணாழ்வாரின் அநுபவ நிலையை அடைகின்றோம். 'என் அமுதினைக் கண்ட கண் கள் மற்றொன்றினைக் காணாவே' (அமலனாதி 10).

இந்தத் திருக்கோயில் திருவட்டாற்றுத் திருக்கோயில் போலவே[5] சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. பல படிகள் ஏறியே கோயிலினுள் நுழைதல் வேண்டும். கோயிலின் நாற்புறமும் கனமான கோட்டைச் சுவர்கள் சூழ்ந்துள்ளன. திருக்கோயிலுக்கருகிலேயே திருவாங்கூர் அரசரின் அரண் மனையும் உள்ளது. அவர் அரண்மனையிலிருந்து திருக் கோயிலுக்குவந்து போதற்குத் தனிச் சுரங்கவழி உண்டு. 100 அடி உயரமும் ஏழு நிலைகளுமுள்ள கோபுரம் கம்பீரமாக நின்று தொலைவிலுள்ளவர்களையும் ஈர்க்குந் தன்மையது.

5. இந்த ஆசிரியர் எழுதியுள்ள 'மலை நாட்டுத் திருப்பதிகள்' (கட்டுரை - 2) என்ற நூலில் காண்க. மலைநாட்டுத் திருத்தலங்களை 1969இல் என் மனைவியுடனும் இருமக்களுடனும் சேவித்தேன்.

கோபுரத்திலும் மண்டபங்களிலும் தூண்களிலும் பல்வேறு சிற்பங்களைக் காணலாம். இவை யாவும் தென்னிந்தியச் சிற்பங்களே. திருவாட்டாற்றுத் திருக்கோயிலிலுள்ளவை போலவே கோயிலைச் சுற்றிய பிராகாரத்தில் ஆயிரக் கணக்கான பித்தளை விளக்குகள் பொருத்தப் பெற்றுள்ளன. திருவிழாக் காலங்களில் இவை ஏற்றப்பெற்று விழாவிற்குப் பொலிவினையும் கவர்ச்சியினையும் தரும். இரவு எட்டுமணி சுமாருக்கு இருப்பூர்தி நிலையத்து விடுதியில் உணவு கொண்டு நம் விடுதிக்குத் திரும்புகின்றோம்.

வந்த நாளைத் தவிர திருவனந்தபுரத்தில் இரண்டு நாள் தங்குகின்றோம். ஒருநாள் காலையில் உணவு விடுதியில் சிற்றுண்டி கொண்டு மிருகக் காட்சிச் சாலைக்குப் (Zoo) போகின்றோம். சென்னையில் அக்காலத்தில் இருந்ததைவிட இது மிகச் சிறப்பாக இருந்தது. சிங்கம், புலி முதலிய மிருகங்கள் இயற்கைச் சூழ்நிலையிலேயே திரியும்படி விடப் பெற்றிருந்தமை மிகச் சிறப்பு. சென்னையில் காணப்பெறாத பல விலங்குகளை இங்குப் பார்க்க முடிந்தது. பெரிய இடம்; சுற்றிப் பார்ப்பதற்கு அரைநாள் போதாது. மிகச் சிரமத்துடன் விரைவாக வீடு திரும்பினோம். பகலுணவு கொண்டு சிறிதுநேரம் ஓய்வு. மாலையில் கோவளம் கடற்கரை சென்று சுற்றிப் பார்த்துத் திரும்பினோம்.

அடுத்தநாள் காலையில் இரவுக்கும், மறுநாள் காலைக்கும் உணவு தயாரித்துக் கொண்டோம். ஒன்பது மணிக்குத் தம்புவையும் கூட்டிக் கொண்டு நகரக் குடிநீர்த் திட்ட அமைப்பைப் பார்க்கச் சென்றோம். சென்னையில் கூட இத்தகைய அமைப்பு இல்லை. பல்வேறு நிலைகளில் நீர் பல்வேறு முறைகளில் தூய்மையாக்கப் பெறுகின்றது. இறுதியில் குளோரின் சிறிது கலக்கப்பெற்று பெரிய குளம் போன்ற அமைப்புகளில் சேகரிக்கப் பெறுகின்றது. இந்தக் குளங்களினின்றும் பல்வேறு இடங்கட்கு விநியோகிக்கப்

பெறுகின்றது. திருவனந்தபுரம் குடிநீர் மிகச் சுவையாக இருக்கும். குளிக்கும்போது சோப்புப் போட்டால் மிகவும் வழுவழுப்பாக இருக்கும்; சோப்பும் எளிதில் கரையும். எல்லோருமே திருவனந்தபுரம் நீரை அநுபவித்தோம். இத்தகைய நீரைத் திருமலையில் பாபநாசம் அருவியிலும், திருப்பதி கபில தீர்த்த அருவியிலும்தாம் கண்டோம்.

அன்று மாலையே மதுரையை நோக்கிப் புறப்படலானோம். திருவனந்த புரத்திலிருந்து கொல்லம் வரையிலும் அகலப் பாதை வண்டி. கொல்லத்திலிருந்து மீட்டர் பாதை வண்டி. எங்கள் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு மாற்றுவது கஷ்டமாகத்தான் இருந்தது. என்ன செய்வது? திருத்தலத்தில் பெற்றது சுகாநுபவம். பயணத்தில் அநுபவித்தது சிரமாநுபவம்! அதுவும் வயது மிக்க மூதாட்டிகளைச் சேர்த்துக் கொண்டு பயணம் செய்வதில் ஏற்படும் சிரமங்கள் சொல்லி முடியா. எப்படியோ கொல்லம் துரித வண்டியில் ஏறிக் கொண்டோம்.

குமிழி—102

## 38. திருத்தலப் பயணம்—பழநி

கொல்லத்திலிருந்து இரவு புறப்பட்ட விரைவு இருப்பூர்தி மறுநாள் காலையில் மதுரை சந்திப்பை அடைந்தது. சாமான்களைப் பயணிகள் தங்குமிடத்தில் வைத்துக் கொண்டே நிலையத்திலேயே குளித்து விட்டோம். முன்னர்த் தெரிந்தவரிடம் தந்திருந்த அரிசியைத் திரும்பப் பெற்று நிலையத்திற்குக் கொணர்ந்தோம். நிலையத்திலேயே சிற்றுண்டி அருந்திப் பழநி பக்கமாகச் செல்லும் இருப்பூர்தியை எதிர்பார்த்துக் கொண்டுக் காத்திருந்தோம். வண்டி வந்ததும் அதில் ஏறிக் கொண்டோம். இந்த வண்டி திண்டுக்கல் - பழநி வழியாகக் கோவைக்குச் செல்லுவது.

மாலை 5 மணிக்குப் பழநியை அடைந்தோம். அக்காலத்தில் இன்றிருப்பது போன்ற வசதிகள் நிலையத்தில் இல்லை.

பழநி : கோட்டாத்தூரிலுள்ள ஒரு பண்டாரத்துக்கு உறவினர் ஒருவர் பழநியில் இருந்தார். அவருக்கு முன்னதாகவே எழுதியிருந்தோம். அவர் இருப்பிடத்தை விசாரித்துக் கொண்டு அவரிடம் சென்றோம். அவர் தங்குவதற்கும் இடவசதி செய்து தந்தார். முகம் கழுவிக் கொண்டு கடைத் தெருவைச் சுற்றினோம். விபூதிப் பொட்டலங்கள், பஞ்சாமிர்தம் வாங்கிக் கொண்டோம். மலையடிவாரத்தருகிலேயே இடம் கிடைத்ததால் எல்லா வசதிகட்கும் வாய்ப்பு. எல்லோரும் ஓர் உணவு விடுதியில் காஃபி அருந்தினோம். தம்பு விறகு வாங்கி இரவு உணவுக்குத் தயார் செய்யத் தொடங்கினார். பாலுக்குப் பண்டாரம் ஏற்பாடு செய்தார். இரண்டு நாட்கள் பழநியில் தங்கினோம்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நான் மட்டிலும் மொட்டையடித்துக் கொண்டேன். இது மொட்டையாண்டி பழநியப்பனுக்கு உகந்த வழிபாடு. எல்லோரும் சரவணப் பொய்கையில் நீராடினோம். இப்போதுள்ளவை போன்ற வசதிகள் அக்காலத்தில் இல்லை. பொய்கையில் இறங்கி நீர் எடுத்து வந்து மேலே குளிக்க வேண்டும். குளித்தபின் அறைக்குவந்து ஆடைகளை மாற்றிக் கொண்டு மலைக்குப் போகத் தயாரானோம்.

வினைதவிர் மருந்தே போற்றி
மெய்யினர் விருந்தே போற்றி
நினைதரு தெருளே போற்றி
நித்தியப் பொருளே போற்றி

வளைமலர் அடியாய் போற்றி
மாமணி முடியாய் போற்றி
தளைநிகர் பழநி மேவும்
சண்முகா போற்றி போற்றி[1]

என்ற பாடலை நா நவிற்ற, பண்டாரம் வழிகாட்ட, மலைக்குச் சென்று பழநியாண்டியை வழிபட்டோம். பண்டாரம் கூட வந்ததால் நல்ல தரிசனம் கிடைத்தது. மலையிலிருந்து இறங்கி வந்து தங்கும் இடத்தை அடைந்தோம். தம்பு உணவைத் தயாராக வைத்திருந்தார். உணவு கொண்ட பின் சற்று ஒய்வு. இரவு உணவும் தயாராகிவிட்டது. இதனால் தம்புவையும் கூட்டிக் கொண்டு திருஆவினன்குடியிலுள்ள முருகனை வழிபடச் சென்றோம்.

**திருஆவினன்குடி :** இது பழநி என்னும் தலத்தில் மலையடிவாரத்தில் உள்ள திருக்கோயில். ஆ(ற்)றுபடை வீடுகளில் ஒன்று இன்றும் இஃது ஆவிநன்குடி என்னும் ஊரைச் சேர்ந்த பழைய கோவில். மலையின்மீதுள்ள தண்டபாணிக் கோயில் பிற்காலத்தது.[2] சங்க காலத்தில் இப்படை வீட்டைப்பற்றிக் குறிப்பு உள்ளது. சங்க இலக்கியங்களில் தனிப் பெருமை வாய்ந்த அகநானூற்றில்,

முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அதுகேட்டு யானை பொதினி, ஆங்கண்[3]

[நெடுவேள்ஆவி-பெருமையுடைய வேள் ஆகிய ஆவி]

என்ற குறிப்பு மாமூலனார் வாக்காகக் காணப்பெறுகின்றது. அதே நூலில்,

1. மாம்பழக் கவிசிங்க நாவலர் : பழநிக்கோயில் விண்ணப்பம்-7.
2. பழநித் தலவரலாறு-பக் 14 (பழநி தேவஸ்தான வெளியீடு.)
3. அகம்-1

முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி.[4]

என்று மற்றொரு குறிப்பும் உள்ளது. ஆவியர் என்ற வேளிர் வகுப்பினரின் தலமே ஆவிநன்குடி. 'பொதினி' என்ற சொல் காலப் போக்கில் 'பழநி' எனத் திரிந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்து. சங்க காலத்தில் பழநி மலை நாட்டை வேள் ஆவியின் குடியினர் ஆண்டு வந்தனர். அவர்களுள் கடைஎழு வள்ளல்களுள் ஒருவரான **வையாவிக் கோப்பெரும்பேகன்** என்பவன் மயிலுக்குப் போர்வை தந்த வள்ளல்; ஆவிகுடியினர் வாழ்ந்த ஊர் 'ஆவிகுடி' என்று வழங்கப்பெற்று 'ஆவிநன்குடி' என்ற சிறப்புப் பெயராக மாறியது போலும். 'ஆவிநன்குடி' என்ற பெயர் 'ஆவினன் குடி' எனத் தவறாக எழுதப் பெற்றுச் சில புராணக்கதைகளுக்கும் காரணமாயிற்று. 'திரு'வாகிய பெரிய பிராட்டியாரும் (இலக்குமி), 'ஆ' என்ற காமதேநுவும், 'இனன்' ஆகிய சூரியனும் வழிபட்டதால் 'ஆவினன்குடி' என இக்கோயிலுக்குப் பெயர் வந்ததாகத் தலபுராணம் கூறுகின்றது. இவை மட்டுமா? 'குடி' என்பதில் 'கு' என்பதற்கு 'பூமி' என்றும், 'டி' என்பதற்கு 'அக்கினி' என்றும் பொருள் கொண்டு நிலமகளும் நெருப்புக் கடவுளும் கூட சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர் என்று செப்புகின்றது தலபுராணம். இந்த இருவருக்கும் கூட மற்றவர்களுடன் இக்கோயில் மண்டபத்தில் உருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன! புராணச் செய்திகள் வரலாற்று நிகழ்ச்சிகளை மறைத்து விடுகின்றன என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

பிரணவத்தின் பொருள் அறியாத நான்முகன் முருகனால் சிறையிடப் பெற்றதும், அந்த நான்முகனை விடுவிப்பதற்காக, முன்னே முனிவர்கள் புக, அவர்கட்குப்

---

4. அகு-61

பின்னர் கந்தருவரும் அவர் மகளிரும் பாடிவர, புள்ளணிநீள் கொடிச் செல்வனும் (திருமால்), மூவெயில் முருக்கிய முரண் மிகு செல்வனும் (சிவபெருமான்), யானை எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும் (இந்திரன்), முப்பத்து மூவர் தேவருடனும் பதினெண் கணங்களுடனும் திருவாவிநன்குடிக்கு வருகின்றனர் என்பதும் திருமுருகாற்றுப் படையில் குறிப் பிடப் பெற்றுள்ள செய்தியாகும்.

தெய்வயானையுடன் திருவாவிநன்குடியில் முருகன் தங்கியிருக்கும் காட்சியை,

உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு, சின்னாள்
ஆவிநன்குடி அசைதலும் உரியன் [5]

[கொண்மார் - கொள்ளும் பொருட்டு; அந்தரக் கொட்பினர் - வானத்தே சுழன்று வந்தவர்களாக; தா- கேடு; கொள்கை - கற்பு; அசைதல் - தங்குதல்]

என்று குறிப்பிடும் திருமுருகாற்றுப்படை. இந்தச் சிறு தேவர்கள் நான்முகனைச் சிறைவீடு செய்யவேண்டும் என்ற நோக்கத்தைக் காரணமாகக்கொண்டு வருவதாகத் தோன்றி னாலும், முருக தரிசனத்தைப் பெறுவது ஒரு பெரும்பேறு என்பதும், அதுசமயம் தங்கள் குறைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஆசிரியர் பெற வைக்கும் குறிப்பு. தேவர்கள் எல்லாம் வந்து குறையிரக்கும் திருத் தலம் நாம் வசதியும் நிலவுலகத்திலன்றோ உளது என்பது நாம் அடையும் பெருமித உணர்ச்சியுமாகும்.

அன்று பிற்பகல் ஓய்வு. இரவு 10 மணிக்குக் கோவைக்கு வண்டி. இருப்பூர்தி நிலையத்தில் வந்து

5. திருமுருகு - அடி (173 - 176)

காத்துக் கிடக்கின்றோம். கூட்டம் சொல்லி முடியாது. 10 மணித்துளிகளுக்குள் சாமான்களையும் வயது வந்த இருவர்களையும் வண்டியில் ஏற்றியாக வேண்டும். ஒரே பெட்டியில் இடம் கிடைக்கவில்லை. எப்படியோ பண்டா ரத்தின் உதவியாலும் இறையருளாலும் வண்டி ஏறி விட்டோம். அதிகாலையில் வண்டி கோவையை அடைந்தது.

**திருப்பேரூர் :** இரண்டு குதிரை வண்டிகளை அமர்த்திக் கொண்டு நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள பேரூரை அடைகின்றோம். இது தேவார வைப்புத்தலம் (சம்பந்தர் 2.39:1; அப்பர் 6.70:1; சுந். 7.82:10). இது தேவாரங்களில் "காஞ்சிவாய்ப் பேரூர்" (சுந்.7.90:10) எனக் குறிக்கப்பெறுகின்றது. 'பேரூர் உறைவாய் பட்டிப்பெருமான்' (தேவா. 7.47:4) என்றும், 'பேரூரர் பெருமானைப்புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே' (7.90:10) என்றும் குறிப் பிடுவர் தம்பிரான் தோழர். ஆன்பட்டி (அப்பர் 6 7:10) என்று அப்பர் பெருமான் குறிப்பிடுவதும் இத்தலமே. பசு வழிபட்டதலம். இறைவன் பெயர் பட்டிப் பெருமான். இத்தலத்தைக் 'குடகத் தில்லை யம்பலம்' எனவும் வழங்கு வர். 'மேலைச் சிதம்பரம்' என்று இப்போது வழங்கப்படும் பெயர் இப்பொருளுடையதே. இதனருகேயுள்ள 'காஞ்சி யாறு' இப்போது. 'நொய்யலாறு' என வழங்குகின்றது.

இவ்வூரை அடைந்ததும் சாமான்களைச் சத்திரத்தில் வைத்துப் பூட்டி விட்டு நொய்யலாற்றில் நீராடுகின்றோம். கோடையாதலால் சிறிதளவு தண்ணீர் ஓடுகின்றது. பாத்தி ரத்தால் மொண்டு மொண்டு குளிக்க வேண்டியிருந்தது. வெளியில் ஒரு தோப்பில் நவக்கிரக வழிபாடு செய்ததாக நினைவு. யாரோ ஒரு புரோகிதரைக் கொண்டு செய்யப் பெற்றதாக நினைவு.

அடுத்து, பேரூர்ப் பெருமானை வழிபடுவதற்குத் திருக்கோயில் செல்லுகின்றோம்.

பாரூரு மாவல் குலுமை நங்கையவள்
பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் தரும னார்தமர் செக்கி
விடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பி ரானா ரூரன்
மீகொங் கிலணி காஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே.[6]

என்ற சுந்தரமூர்த்தியின் திருப்பாடலைப் பாடித் துதிக்கின்றோம். பின்னர் வெள்ளியம்பலத்தில் நடனமாடும் நடராசப் பெருமானைக் கண்டு வழிபடுகின்றோம். நண்பகல் உணவு கொண்டு ஓய்வுகொள்ளுகின்றோம். மாலையில் சாந்தலிங்க அடிகள் திருமடத்திற்குச் சென்று சுற்றிப் பார்க்கின்றோம். மாலை 6 மணிக்கே குதிரை வண்டிகளில் கோவை நிலையத்தை அடைந்து நீலகிரி விரைவு வண்டிக்காக காத்திருக்கின்றோம். வண்டி வந்ததும் சௌகரியமாக ஏறிக்கொள்ளுகின்றோம். காட்டுப் பாடியில் இறங்கித் திருப்பதி செல்லும் வண்டியைப் பிடித்துத் திருப்பதியை அடைகின்றோம்.

**திருப்பதி - திருமலை :** திருப்பதியில் தேவஸ்தான சத்திரத்தில் இடம் வாங்கிக் கொண்டு தங்குகின்றோம். திருமுழுக்காடிவிட்டு அலர்மேல் மங்காபுரம் சென்று அன்னையை வழிபட்டுத் திரும்புகின்றோம். அன்று மாலையில் கோவிந்தராசர் கோயில், ஊரின் நடுவேயுள்ள இராமர் கோயில் சென்று கோவிந்தராசரையும், இராமபிரானையும் வழிபட்டுத் திரும்புகின்றோம். அடுத்த நாள்

6. தேவா. சுந். 7.90:10

காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு திருமலைக்குப் பேருந்தில் புறப்படுகின்றோம்.

கண்ணனடி யிணைஎமக்குக் காட்டும் வெற்பு;
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு;
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு;
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;
'புண்ணியத்தின் புகல்இது'எனப் புகழும் வெற்பு;
பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும் வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;
வேங்கடவெற்பு எனவழங்கும் வேத வெற்பே.[7]

[கடியும் - ஒழிக்கும்; திண்ணம் : உறுதி; செறிந்த - நிறைந்த; புகல் - இருப்பிடம்; பொன்உலகு - பரம பதம்; புணர்க்கும் - அடைவிக்கும்.]

என்ற வேதாந்த தேசிகரின் பாசுரத்தை நினைந்தவண்ணம் பேருந்தில் இருக்க, பேருந்து கொண்டை ஊசி வளைவில் நெளிந்து நெளிந்து போய்க் கொண்டிருக்கின்றது. புதிதாக அமைக்கப்பெற்ற சாலை இது ; கல் - மண் சாலைதான்; இன்னும் தார்கூடப் போடப்பெறவில்லை.

மலையை அடைந்ததும் அரங்கசாமி ரெட்டியார் மொட்டையடித்துக் கொள்ளுகின்றார். பழநியாண்டவனைப் போல் மொட்டையடித்துக் கொள்ளாது வந்தவர்களையெல்லாம் மொட்டையடித்து அனுப்புபவன் ஏழுமலையான். என்ன கருத்திலோ இப்படிச் செய்கின்றான்? இது ஒருவரும் அறியாத புதிர். எல்லோரும் 'கோனேறு' என்னும் திருக்குளத்தில் நீராடி மாற்று உடை அணிந்து கொள்ளுகின்றோம். கோடைக்காலமாதலால் ஈரஆடையும் விரைவில் உலர்ந்துவிடுகின்றது. அதனை மடித்துப் பைகளில் வைத்துக்கொண்டு தரிசனத்துக்குக் 'குயு' வரிசையில்

7. தேசிகப் பிரபந்தம் - 82.

நிற்கின்றோம். ஒரு மணி நேரத்தில் தரிசனம் முடிந்து விடுகின்றது. உண்டியலில் காணிக்கையைச் செலுத்திவிட்டு பிரசாதங்கள் பெற்று உண்டு விட்டு, இலட்டுகள், திருமால் வடைகளை வாங்கிக்கொண்டு பேருந்து நிலையத்திற்கு வருகின்றோம். திருப்பதிப் பயணம் அக்காலத்தில் அரிதாத தால் சமையல் தம்புவையும் கூட்டிக்கொண்டுவருகின்றோம்.

திரும்பும்போது நான், என் மனைவி, என் மைத்துனர் மனைவி, சடமங்கலம் அம்மாள் நடையில் இறங்குகின்றோம். தம்பு உட்பட மற்றவர்கள் பேருந்தில் திரும்புகின்றனர். அவர்கள் சத்திரத்தில் உணவு தயாரித்து வைக்கின்றனர். நாங்கள் நடையில் திரும்பும் போது,

கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்து ஓட,
குருடன் கொம்பில்
தேன்என்று காட்ட, முடவன்
அத்தேனை எடுக்கஅயல்,
தான்நின்ற ஊமை, எனக்கென்று
கேட்க தருவன்வரம்
வான்நின்ற சோலை வடமலை
மேல்நின்ற மாதவனே.[8]

என்ற அழியா வாழ்வு பெற்ற பழம் பாடல் ஒன்றை நினைவு கூர்ந்த வண்ணம் இறங்கி வருகின்றோம். சுமார் 12மணிக்கு அடிவாரத்திற்கு வந்துவிடுகின்றோம். வெய்யலின் கொடு மையால் பொடி தாங்க முடியவில்லை. எதிர்பாராத வண்ணம் குதிரை வண்டி கிடைக்கின்றது; அதில் ஏறிச் சத்திரத்திற்கு பகல் ஒரு மணிக்கு வந்து சேர்கின்றோம். முன்வந்தவர்கள் உணவு தயாரித்து உண்டு ஓய்வு கொண்

8. ஓர் பழம்பாடல்

டிருக்க, நாங்கள் உண்டு உண்டு அவர்களுடன் சேர்ந்து கொள்ளுகின்றோம். உண்ட களைப்பு தொண்டர்க்கும் உண்டல்லவா?

மாலை ஐந்துமணி சுமாருக்கு கோவிந்தராஜ சுவாமி கோயில், கோனேறு அருகில் உள்ள கடைகள் இவற்றைச் சுற்றிப் பார்த்துச் சில பொருள்களை வாங்க நினைக்கின்றோம். இங்குச் சந்தனக்கல், மரத்தாலான சாமான்கள், திருமண் இட்டுக் கொள்ளப் பயன்படும் நாமக்கட்டிகள், திருச்சூர்ணம் இவை வைக்கும் அழகிய ஓலைப் பெட்டி முதலியவற்றை வாங்கிக் கொண்டோம். நான் சைவனாயினும் என் வீட்டிற்கு அதிகமாக வருபவர்கள் வைணவர்கள்; பாகவதர்கள், எங்கள் சமையலை ஏற்றுக் கொள்ளாமல் தாங்களே 'நளபாகம்' பண்ணி உட்கொள்ளும் வீரவைணவர்களும் எங்கள் உறவினர்கள். இவர்கட்குப் பயன்படும் பொருட்டே திருமண்காப்புக்குரிய சாமான்களை வாங்கினேன். நான் காரைக்குடியில் இருந்தவரை இவை என் வீட்டிலிருந்தன. கம்பன் விழாவுக்குத் தவறாது வரும் இராமராசன் (கம்பராமன்) பூதூர் கி. வேங்கடசாமி ரெட்டியார் இவர்கட்கும் ஒரு முறை வந்த திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கட்கும் பிறருக்கும் இவை பயன் பட்டு வந்தன.

அடுத்த நாள் அதிகாலையில் 2மணி சுமாருக்கு மூட்டை முடிச்சுகளுடன் திருச்சி செல்லும் இருப்பூர்தியில் ஏறிவிடுகின்றோம். வண்டி சுமார் 7மணிக்கு காட்டுப்பாடியை அடைகின்றது. பல் தேய்த்துக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி - காஃபி அருந்துகின்றோம். சுமார் அரைமணி நேரம் வண்டி நிற்பதால் இவற்றை யெல்லாம் செய்து கொள்ள வசதியாக அமைகின்றது.

குமிழி — 103

# 39. திருத்தலப்பயணம் - திருவண்ணாமலை

காட்டுப் பாடியிலிருந்து மீண்டும் இருப்பூர்திப் பயணம் தொடர்கின்றது. வண்டி மாற்ற வேண்டியதில்லை. அதே வண்டி வேறு எண் போடப்பெற்று விழுப்புரம் நோக்கிப் புறப்படுகின்றது; பகல் பயணமாதலால் வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்லுகின்றோம். காட்டுப்பாடி - வேலூர் அருகில் பல ஏக்கர்கள் மல்லிகை சாகுபடியைக் கண்டு வியந்து போகின்றோம். அடுத்து, கண்ணமங்கலம் நிலையம் வருங்கால் அரங்கசாமி ரெட்டியார் தான் இங்கு எருதுகள் வாங்குவதற்கு வந்ததாகவும், இந்த ஊர் மாட்டுச் சந்தை பேர்போனதாகவும் எங்களிடம் சொன்னார். இங்கு மாடுகள் வாங்கினால் திருவண்ணாமலை - திருக்கோவலூர் - அறியலூர் - பெரம்பலூர் வழியாக நடத்திதான் கொண்டு வரவேண்டும் என்றும் விளக்கினார். வண்டி முற்பகல் சுமார் $10\frac{1}{2}$ மணிக்குத் திருவண்ணாமலை வந்து சேர்கின்றது.

திருவண்ணாமலை நிலையத்தில் மாட்டுவண்டி, குதிரை வண்டி நிறையக் கிடைக்கும். வண்டிக்காரன் முதலியார் சத்திரத்தில் தங்கலாம் என்று சொல்லியதனால் முதலியார் சத்திரத்தை வந்தடைந்தோம். ஒருநாள் வாடகை ஐந்து ரூபாய்தான். நல்ல வசதிகளுடன் கூடிய விசாலமான இடம். எங்களுக்கு ஒரு பெரிய அறை தந்தார்கள். சமையலுக்குத் தனி இடம். சாப்பிடுவதற்குக் காற்றோட்டமான தொட்டி முற்றம். குளிப்பதற்கு நல்ல தண்ணீர் வசதி இருந்தது; காலை மாலைக் கடன்களை நிறைவேற்றுவதற்குக் கழிப் பறைகளும் இருந்தன.

வந்தவுடன் சமையலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு ஒவ்வொருவராக நீராடினோம். வெளிவாசலிலேயே விறகு

கிடைத்தது. காய்கறிகளும் கிடைத்தன. தம்பு முதலில் குளித்துவிட்டு சமையலைத் தொடங்கினார். பெண்கள் காய்கறிகளை வெட்டுதல் போன்ற பணிகளைச் செய்தனர். 2மணிக்கு உணவு கொண்டோம். சற்று ஓய்வு கொண்டோம். மாலை ஐந்துமணி சுமாருக்கு திருக்கோயில் வழிபாட்டிற்குச் சென்றோம். நடேந்தே செல்லும் அளவிற்குக் கோயில் அருகில் இருந்தது. பஞ்ச பூத தலங்களுள் இது தேஜஸ் (தேசு) என்னும் தீயைக் குறிக்கும். மணிவாசகப் பெருமான்,

> பிரமன் அரியென் (று)
> இருவரும்தம் பேதைமையால்
> பரமம் யாம்பரம்
> என்றவர்கள் பதைப்பொடுங்க
> அரனார் அழல்உருவாய்
> அங்கே அளவிறந்து
> பரமாகி நின்றவா
> தோணோக்கம் ஆடாமோ.[1]

என்ற பாடலில் கூறும் அழல் உருவே மலையுருவாய் உள்ளது என்று நினைந்த வண்ணம் திருக்கோயிலுக்கு வருகின்றோம். அண்ணாமலையார், உண்ணாமுலையம்மை இவர்கள் திருவுருவங்கள் அழகும் அருளும் நிரம்பியவை; இவர்களைச் சேவிக்கின்றோம். இத்தலத்தை நினைத்தாலே முத்தி தருவது. அருணகிரிநாதர் வாழ்ந்து முத்தி பெற்றதலம். வல்லாள மகாராசன் கோபுரவாயிலுள் நுழையும்போது வடபுரம் இருக்கும் முருகனே, இக்கோபுரத்தின் மேலிருந்து அருணகிரியார் குதிக்கும்போது அவருக்குத் தீங்கு வராமல் காத்தருளிய பெருமான். இவரை வழிபடுகின்றோம்.

---

1. திருவா. திருத்தோணோக்கம் - 12

மாணிக்கவாசகர் திருவெம்பாவையை இத்தலத்தில் தான் அருளினார். ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய இருவரின் பாடலும் இத்தலம் பெற்றுள்ளது. இது தவிர திருப்புகழ், அருணகிரி அந்தாதி, அண்ணாமலை வெண்பா, சோணசைலமாலை, அருணைக் கலம்பகம் முதலியனவும் புகழ் பெற்றவை. எல்லப்ப நாவலர் இயற்றிய அருணாசல புராணம் இலக்கியச்சுவை மிக்கது. இவற்றையெல்லாம் எங்களுடன் வந்தவர்கட்கு விளக்கினேன்.

இங்கு 360 தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். கார்த்திகை தீபம் இங்குப் புகழ்பெற்ற திருவிழா. 10 நாட்கள் நடைபெறும். 10ஆம் நாள் காலையில் பரணி தீப தரிசனம் நடைபெறும். இத்தீப தரிசனத்தை அநுபவிக்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாலை 3மணியிலிருந்தே திரளுவர். இச்செய்திகளை விளக்கிக்கொண்டே மாலை 8 மணி சுமாருக்குச் சத்திரத்திற்குத் திரும்பினோம். இரவு உணவும் பகலிலேயே செய்துவிட்டதால் அதனை உண்டு துயில் கொண்டோம்.

**மறுநாள் :** அதிகாலையில் சத்திரத்திலேயே நீராடி வழியில் உணவு விடுதியில் சிற்றுண்டி கொண்டு இரமண ஆசிரமம் புறப்பட்டோம். ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்தோம். அடிகள் தரிசனமும் கிடைக்கும் பேறு பெற்றோம். அடிகள் அருளுரை வழங்கிக்கொண்டிருந்தனர். அடியார்கள் கூட்டம் அவ்வுரையை உன்னிப்பாகச் செவிமடுத்துக் கொண்டிருந்தது. நாங்களும் ஒரு மூலையில் அமர்ந்து அருளுரையைக் கேட்டுப் பயன் பெற்றோம். சுமார் 11 மணிக்கே சத்திரத்திற்குத் திரும்பி 12 மணிக்கே உணவு கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் இருப்பூர்தி நிலையத்திற்கு வந்துவிட்டோம். காட்டுப்பாடியை நோக்கிச் செல்லும் வண்டியிலேறி காட்டுப்பாடியை அடைந்தோம்.

மாலை - 6 மணிக்கு. அங்கிருந்து பிளாட்பாரம் மாறி சென்னை செல்லும் வண்டியிலேறி இரவு எட்டுமணிக்கு அரக்கோணம் வந்து சேர்ந்தோம். இரவு உணவு கொண்டு அரக்கோணம் நிலையத்தில் தங்கினோம். இரவு முழுவதும் சாமான்களைக் குவியலாக வைத்து விட்டு அவற்றைச் சுற்றிலும் படுத்துக்கொண்டு தூங்கியும் தூங்காமலும் காலத்தைக் கழித்தோம். இரவில் இருப்பூர்தி நிலைய அநுபவமே தனி.

**திருத்தணி :** இருப்பூர்தி நிலையத்தில் விழிப்பாகவே காலம் கழித்துக் காலையில் 6 மணிக்குக் கிளம்பும் வண்டியில் சௌகர்யமாக ஏறிக்கொண்டோம். எங்கள் வண்டி காலை 7 மணி சுமாருக்குத் திருத்தணி வந்தடைந்தது. சாமான் களை எடுத்துக்கொண்டு திருத்தணி மலையேறும் படிப் பாதையிலுள்ள தனியார் விடுதியில் வாடகைக்கு இடம் வாங்கிக் கொண்டோம். எல்லோரும் தம்பு உட்பட அங்கு நீராடிவிட்டு தணிகைக் குமரன் வழிபாட்டுக்குத் தயா ரானோம். ஒன்பது மணிக்கு மலையேறி முருகனைக் கண்டு களித்தோம்; தரிசனம் வசதியாகவே கிடைத்தது, அவனருள் இருக்கும்போது எதுதான் கிடைக்காது? இராமலிங்க அடிகளின் திருப்பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. அஃது இது:

முன்னைப் பொருட்கு முதற்பொருளே
முடியா தோங்கு முதுமறையே
முக்கட் கரும்பீன் றெடுத்த முழு
முத்தே! முதிர்ந்த முக்கனியே!
பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும்
பொன்னே! புனித பூரணமே!
போத மணக்கும் புதுமலரே!
புலவ ரெவரும் புகும்பதியே!

மின்னைப் பொருவு முலகமயல்
வெறுத்தோ ருள்ள விளக்கொளியே!
மேலும் கீழும் நடுவுமென
விளங்கி நிறைந்த மெய்த்தேவே!
தன்னைப் பொருவுஞ் சிவயோகந்
தன்னை யுடையோர் தம்பயனே!
தணிகா சலமாந் தலத்தமர்ந்த
சைவ மணியே! சண்முகனே![2]

என்ற பாடலை மனமுருகிப் பாடி அநுபவித்தேன். இராம லிங்க வள்ளலின் பாடல்கள் உள்ளத்தை உருக்கும் முறையே தனிச்சிறப்புடையது. பதினொரு மணிக்குத் திரும்பினோம். சமையல் தொடங்கி ஒரு மணியளவில் முடிந்தது. உண்டு ஓய்வு எடுத்துக்கொண்டோம். சென்னை செல்லும் இருப் பூர்தி மாலை 6 மணிக்கு வருகிறதாக அறிந்து இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து தயாராக இருந்தோம். வண்டி இரவு ஒன்பது மணி சுமாருக்கு சென்னை வந்தடைந்தது வண்டியிலேயே இரவு உணவு கொண்டுவிட்டோம். நிலையத்தருகில் மூர்மார்க்கெட்டுக்கு அருகில் இராவ்பகதூர் இராமசாமி முதலியார் சத்திரத்தை விசாரித்துக்கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் வந்து சேர்ந்தோம். ஒரே கூட்டம். உள்ளேயே நுழைய முடியவில்லை. சத்திரத்தின் வெளியே உள்வாசலில் சாமான்களைக் குவியலாக வைத்துவிட்டு அவற்றைச் சுற்றிலும் படுத்துக் கொண்டோம்.

**சென்னை - மயிலை ;** துறையூரிலிருக்கும்போதே பன் மொழிப் புலவர் **வே. வேங்கடராஜுலு ரெட்டியாருக்கு** எழுதி யிருந்தோம் நாங்கள் வரும் உத்தேசத் தேதியைக் குறிப்பிட்டு. அச்சமயம் எல்லோரும் விடுமுறைக்கு ஊர் சென்று விடுவார்கள் என்றும், தான் மட்டிலும் தனியாக இருப்பதால்

2. முதல் திருமுறை. செல்வச் சீர்த்தமாலை - 4

வசதியாகத் தங்கலாம் என்றும் எழுதியிருந்தார்கள் அப்போது அவர்கள் மயிலாப்பூர் வடக்கூர் செல்வவிநாயகர் தெருவில் 13-வது எண்ணுள்ள வீட்டில் தங்கியிருந்தார்கள். நான் இந்த வீட்டிற்கு அடிக்கடி வந்து தங்கிப் போனதுண்டு. சென்னை வந்த போதெல்லாம் இங்குத்தான் தங்குவது வழக்கம். ஒரு மாட்டுவண்டி பிடித்து சாமான்களை ஏற்றி சாமான்களுடன் தம்புவை வருமாறு பணித்தோம். வண்டிக் காரன் நல்லவனாக அமைந்தான். அவன் பாதுகாப்பாக வருவதாகக் கூறினான். நாங்கள் டிராம் வண்டி ஏறி (அக்காலத்தில் டிராம் வண்டி சென்னையில் இருந்தது) மயிலாப்பூர் வந்தோம். தண்ணீர்த்துறையருகில் (வடமொழிக் கல்லூரியருகில் உள்ளது.) இறங்கி முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெரு வழியாக நாட்டு சுப்பராய முதலித் தெருவை அடைந்து அதன் குறுக்கேயுள்ள வடக்கூர் செல்வ விநாயகர் கோயில் தெருவிலுள்ள வீட்டையடைந் தோம். நாங்கள் வந்து அரை மணி நேரத்தில் சாமான் களுடன் தம்புவும் வந்து சேர்ந்தார்.

நான் வந்ததும் அனைவரையும் மயிலை முனிவர் ரெட்டியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். ரெட்டியார் அவர்கள் சமையலறை, குளியலறை முதலியவற்றைக் காட்டினார்கள். இரவில் மாடியில் தங்கலாம் என்று சொன் னார்கள். கோவிந்தன் என்ற பணியாள் எனக்கு நன்கு தெரிந்தவன். எல்லாவித உதவிகட்கும் அவனை வைத்துக் கொண்டோம். பால், விறகு, காய்கறிகட்கு அவன் ஏற்பாடு செய்து விட்டான். சென்னையில் மூன்று நாட்கள் தங்கினோம்.

**முதல் நாள் :** காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நீராடிக் கோயிலுக்குப் போவதற்குத் தயாரானோம். போகும் வழியில் ஓர் உணவு விடுதியில் சிற்றுண்டி கொண்டு

(லஸ் என்ற இடத்தில்) கற்றார்கள் ஏத்தும் கபாலீசுவரர் கோயில் சென்றோம். இறைவனை வணங்கி மகிழ்ந்தோம். இக்கோயில் ஈசுவரனை வணங்கும்போது ஞானசம்பந்தப் பெருமான் பாம்பு கடித்து இறந்துபோன பூம்பாவை என்ற வணிகப் பெண்ணின் எலும்பைப் பெண்ணாக உயிர் பெற்றெழச் செய்த நிகழ்ச்சியை நினைவு கூர்கின்றோம். 'மட்டிட்ட' (2. 47) என்ற முதற் குறிப்புடைய சம்பந்தர் தேவாரத்தின்,

> மட்டிட்ட புன்னையங்
> கானல் மடமயிலைக்
> கட்டிட்டங் கொண்டான்
> கபாலீச் சரமமர்ந்தான்
> ஒட்டிட்ட பண்பின்
> உருத்திர பல்கணத்தார்க்
> கட்டிட்டல் காணாதே
> போதியோ பூம்பாவாய் (1)

என்ற முதற்பாடலை நாவினால் நவிற்றி கபாலீசுவரரிட மிருந்து விடைபெற்றுக்கொண்டு மயிலாப்பூர் கடைவீதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே உலகப் பொதுமறையாகிய திருக்குறளை அருளிய திருவள்ளுவர் திருக்கோயிலுக்கு (இராக்கியப்ப முதலித் தெருவில் - ரெட்டியார் இல்லத்துக்கு அருகில் உள்ளது) வந்து அவரையும் வணங்குகின்றோம்.

பகலுணவு கொண்டு சிறிதுநேரம் ஓய்வு கொள்ளு கின்றோம். மாலையில் அல்லிக்கேணி அச்சுதனைக் காணும் நோக்குடன் ஹாமில்ட்டன் பாலத்தருகிலிருந்து கிளம்பும் அரையணா (மூன்று தம்படி) டிராம் ஏறி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் இறங்கிப் பார்த்தசாரதித் திருக் கோயிலை அடைகின்றோம்.

குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின் றாட
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணி.[3]

என்று இத்தலத்தை வருணிப்பர் திருமங்கையாழ்வார். இத் திருக்கோயிலின் திருக்குளம் அல்லிப் பூக்கள் நிறையப் பெற்றிருந்தமையால் 'அல்லிக்கேணி' என்ற பெயர்பெற்று அதுவே நாளடைவில் தலத்துக்கும் உரிய பெயராகி நிலைத்து விட்டது.

இத்திருக்கோயிலில் ஒரு சம்பிரதாயம் உண்டு. பார்த்த சாரதியைச் சேவிப்பதற்கு முன்னரே ஏனையவரை எல்லாம் சேவித்துவிட வேண்டும். கோயிலை வலம்வரும்போதே வேதவல்லித்தாயார், வரதராசர் அழகியசிங்கர், ஆண்டாள், அரங்கநாதன், சக்கரவர்த்தித் திருமகன் சிறிய திருவடி, ஆழ்வார்கள் இவர்களைச் சேவித்துவிட்டு,

பார்ஏறு பெரும்பாரம் தீரப் பண்டு
பாரதத்துத் தூதுஇயங்கி பார்த்தன் செல்வத்
தேர்ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை
செருக்களத்துத் திறல்அழியச் செற்றான் தன்னை[4]

(பார்த்தசாரதியைச்) சேவிக்கின்றோம். மூலவர் வேங்கடக் கிருஷ்ணன் கருவறையில்கம்பீரமான நீண்டுயர்ந்த தோற்றத் துடன் முறுக்கிய மீசையுடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவைசாதிப் பவர் இவர். உற்சவர் பார்த்தசாரதி. திருவேங்கடமுடை யானே சுமதி என்ற தொண்டைமான் சக்கரவர்த்தியின் பிரார்த்தனைக் கிணங்க 'பார்த்தன் செல்வத் தேரேறு சாரதியாய்' எழுந்தருளியுள்ளான் என்பது வரலாறு.

---

3. பெரி. திரு. 2·3:7.
4. பெரி. திரு, 2·10:8

வில்பெரு விழவும் கஞ்சமும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை, புரம்எரி செய்த
சிவன்உறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன்நின் றானை
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.[5]

என்ற பாசுரம் இவரைக் கண்டவுடன் மிடற்றொலியாக வெளிப்படுகின்றது. இங்ஙனம் சேவித்தபின் வீடு திரும்பு கின்றோம்.

**இரண்டாம் நாள் :** அருங்காட்சியகம் வந்து பல்வேறு பழம்பொருள்கள் சேமித்து வகைப்படுத்தி வைக்கப்பெற்றி ருப்பதைக் கண்டு களிக்கின்றோம். அப்படியே அருகிலுள்ள கன்னிமேரா நூலகத்தையும் பார்வையிடுகின்றோம். அடுத்து, மிருகக்காட்சி சாலை (Zoo), உயர்நீதிமன்றம், கலங்கரைவிளக்கு இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு பாரிமுனையில் சிற்றுண்டி அருந்தி திருவல்லிக்கேணி கடற் கரைக்குவந்து கடற்கரைக் காட்சிகளைக் கண்டுகளிக் கின்றோம். மாலை $7\frac{1}{2}$ மணி சுமாருக்கு அல்லிக் கேணி நெடுஞ்சாலைவந்து டிராம் ஏறி வீடு திரும்புகின்றோம்.

**மூன்றாம் நாள் :** அனைத்திந்திய வானொலி நிலையம், அடையாறு ஆலமரம், பிரம்மஞான சபை நூலகம் இவற்றை யெல்லாம் பார்வையிட்டுக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வருகின்றோம். பல்கலைக்கழக நூலகத்தைப் பார்வை இடுகின்றோம், மாலை ஆறு மணிக்கு வீடுதிரும்பு கின்றோம். $7\frac{1}{2}$ மணிக்குள் இரவு உணவுகொண்டு ரெட்டி யாரிடம் விடைபெற்றுக் கொண்டு எழும்பூர் இருப்பூர்தி

5. பெரி. திரு. 2·3:1

நிலையத்திற்கு வந்துவிடுகின்றோம். மறுநாள் அதிகாலையில் திருச்சி டவுன் நிலையத்தில் இறங்கி நீராகார மடத்துக்கு வந்து சேர்கின்றோம்.

**திருச்சியில் :** அதிகாலையில் காவிரி நீராட்டம். காலையில் தாயுமானவர் கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில் சென்றுவந்தோம். தாயுமானவர் சந்நிதியில்,

*தந்தை தாயும்நீ; என்னுயிர்த் துணையும் நீ;*
*சஞ்சல மதுதீர்க்க*
*வந்த தேசிக வடிவும்நீ; உனையலால்*
*மற்றொரு துணைகாணேன்;*
*அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே!*
*ஆதியே! அடியார்தம்*
*சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்*
*சிரகிரிப் பெருமானே!*[6]

என்ற பாடலை மனமுருகிப் பாடுகின்றோம். காலை பத்து மணிக்குள் 'எங்கும் சுற்றி அரங்கனைச் சேர்' என்ற முதுமொழிக்கிணங்க திருவரங்கம் வருகின்றோம். உட்கோயில்களையெல்லாம் சுற்றிப்பார்த்து மூர்த்திகளையெல்லாம் வணங்கியபின் அரங்கன் சந்நிதிக்கு வருகின்றோம். வந்து, பாதாதிகேசமாகச் சேவிக்கின்றோம். இங்ஙனம் சேவிக்கும் போது,

*ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது*
*இரங்கி, மற்றுஅவற்கு இன்னருள் சுரந்து*
*மாழை மான்மட நோக்கி உன்தோழி*
*உம்பி எம்பிஎன்று ஒழிந்திலை; உகந்து*

---

6. தா.பா. ஆசையெனும்-10

தோழன் நீஎனக்கு இங்குஒழி என்ற
சொற்கள் வந்(து)அடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்துஅம் மானே![7]

என்ற திருமங்கையாழ்வார் பாசுரம் மிடற்றொலியாக வெளிப்படுகின்றது.

அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற்(று) ஒன்றினைக் காணாவே,[8]

என்ற திருப்பாணாழ்வாரின் அநுபவம் பெற்றதாக ஒரு பிரமை ஏற்படுகின்றது. அரங்கனிடம் விடைபெற்றுக் கொண்டு நீராகாரமடம் திரும்பிப் பகல்உணவு கொண்டு பிற்பகல் 4மணிக்குத் துறையூர்வந்து விடுகின்றோம். அரங்கசாமி ரெட்டியார் முதலியோரைக் குதிரை வண்டியில் கோட்டாத்தூருக்கு அனுப்பிவிட்டு நாங்கள் பள்ளியருகிலுள்ள எங்கள் வீட்டை அடைகின்றோம்.

x x x

இந்தக் குமிழி எழும்போது (டிசம்பர் 89) அரங்கசாமி ரெட்டியார், அவர் துணைவி, என் மாமியார். என் மைத்துனரின் முதல் மனைவி, என் அருமை அன்னையார், கே பி, சுப்பையார்-இவர்கள் யாவரும் திருநாடு அலங்கரித் துவிட்டனர். சமையல்காரத் தம்பு எங்கோ இருக்கின்றார்; இருக்கும் இடம் தெரியவில்லை. என்னுடன் வந்த அரங்கசாமி ரெட்டியாரின் கொழுந்தியார் (90 அகவையைத் தாண்டியவர்) கண் தெரியாமல் நினைவு தடுமாறிப் படுக்கையுடன் கிடந்தவரும் திருநாடு அலங்கரித்து விடுகின்றார். இறையருளால் நானும் என் மனைவியும் இரண்டு குமாரர்கள், மருமகள்மார்,இரண்டு பேரன்மார்கள், இரண்டு பேத்திமார்களுடன் நல்ல நிலையில் இருக்கின்றோம்.

7. பெரி. திரு. 5·8;1
8. அமலனாதி-10

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.[9]

**குமிழி-104**

## 40. இளைஞர் அறிவுச்சுடர்

மனத்தின் வியத்தகு ஆற்றல்களுள் ஒன்று கற்பனை யாகும். சாதாரண மக்கள் இல்லாததைப் படைப்பதையும் வானக்கோட்டைகளை எழுப்புவதையும் கற்பனை என்று கருதுகின்றனர். பூசலார் நாயனார் கற்பனையில் நிர்மாணித்த திருக்கோயில் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். உண்மையில் நிலைபேறில்லாப் பொருள்களை உண்டாக்கும் மனத்தின் ஒருவகையாற்றல் கற்பனையாகும் என்பது தெளியப்படும். ஆற்றங்கரையில் இயற்கைச் சூழலினிடையே தனிமையாக உட்கார்ந்திருக்கும்போது, நம்முடைய மனம் தட்டுத் தடையின்றிப் பாவனை உலகங்களில் (Make-belive worlds) அலைகின்றது. வானத்திலுள்ள மேகங்களில் பிராணிகள், பறவைகள், கட்டடங்கள் ஆகியவற்றின் வடிவங்களைக் காண்கின்றோம். சாதாரண நிகழ்ச்சி ஒரு சிறுகதையாகின்றது. இவை யாவும் கற்பனையே. ஆனால் உளவியலில் கற்பனையை வரையறைப் படுத்திப் பேச வேண்டும்.

கற்பனையை மீள்ஆக்கக் கற்பனை (Reproductive Imagination), படைப்புக் கற்பனை (Creative Imagination) என்று இரண்டு வகையாகப் பிரித்துப் பேசுவர். ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ திரும்பக் காண்பது மீள் ஆக்கக் கற்பனையாகும். நாம் ஒருமுறை பார்த்த தஞ்சைக்

9. குறள்-90 (வாழ்க்கைத்துணை நலம்).

கோயிலையோ சித்தன்ன வாசலின் சிற்பத்தையோ நினைக்கின்றோம். இவ்வாறு நினைப்பதில் நம் மனத்தில் தோன்றும் கோயிலும் உண்மைக் கோயிலும் ஒற்றுமையுடையவை; அங்ஙனமே நிகழ்ச்சியும் நிகழ்ச்சியின் படிமமும் (Image) ஒற்றுமையுடையவை. இவை மீள்ஆக்கக் கற்பனைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இதனால் நினைவு மீள்ஆக்கக் கற்பனையாகின்றது என்பது பெறப்படும்; புலன் காட்சியில் (Perception) தோன்றியதே மீண்டும் மனத்தில் தோன்றுகின்றது.

உயர் கற்பனையில் பழைய அநுபவங்களைக் கொண்டே புதிய சேர்க்கையை ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம். எடுத்துக் காட்டுகளாக பாற்கடல், பொன்மலை, கற்பகத்தரு, காமதேநு என்பவை முன்னைய அநுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. சிறுகதை, ஓவியங்கள், புதினங்கள் அறிவியல் கொள்கைகள், கவிதைகள் யாவும் படைப்புக் கற்பனைக்கு எடுத்துக் காட்டுகளாகும். நாம் வாழ்க்கையில் கொள்ளும் உயர்ந்த குறிக்கோள்களும் குழந்தைகளின் பாவனைகளும் படைப்புக் கற்பனையின் கூறுகளாகக் கொள்ளலாம். இத்தகைய படைப்புக் கற்பனைகள் மாணாக்கர்களிடம் வளர்வதற்கும் அவர்களிடம் படைப்பாற்றலை வளர்ப்பதற்கும் பள்ளியில் வாய்ப்புகள் தருதல் வேண்டும் என்ற எண்ணம் நான் சைதையில் ஆசிரியர்க் கல்லூரியில் படித்த நாள் முதல் (1941) என் மனத்தில் குமிழியிட்டுக் கொண்டிருந்தது.

தாய்மொழி கற்பிக்கும்வாயிலாக அமைந்த பிறகு வாய்ப்புகள் தருவது எளிது. இதனால் மாணவர்கள் தமிழிலேயே சிந்திக்கும் வாய்ப்புகள் பெறுகின்றனர். தாய்மொழியில்தான் படைப்பாற்றலை எளிதில் வளர்க்கலாம்; வளர்க்க முடியும். மாணாக்கர்களின் தேவைகள் மனப்

பான்மை, கவர்ச்சி ஆகியவற்றிற்கேற்றவாறு மொழிப்பாடங்களைக் கற்பிக்க வேண்டுமானால் சாதாரணமாகக் கொடுக்கப்பெறும் கட்டுரைப் பயிற்சிகள் மட்டிலும் போதா. நாளிதழ்களிலும் பருவ இதழ்களிலும் வெளிவரும் புதிய இலக்கிய வகைகளையும் கவிதைகளையும் படிக்கும் மாணாக்கர்களுக்கு அவற்றைப்போல் தாமும் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுதல் இயல்பு. தாய்மொழியாசிரியர்கள் சிறிது முயற்சி எடுத்து இத்துறையில் தக்க கவனம் செலுத்தினால் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களிடம் சிறு கட்டுரைகள், சிறு நாடகங்கள், சிறு கதைகள், சிறுசிறு கவிதைகள் முதலிய இலக்கிய வகைகளைத் தாமாகவே எழுதும் ஆற்றலை வளர்த்துவிட முடியும.

கருவிலே திருவுடைய **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**, கவிஞர் **கண்ணதாசன்**, டாக்டர் **திரிபுரசுந்தரி (லட்சுமி)** போன்ற எழுத்தாளர்கள் ஏகலைவன் வமிசத்தவர்கள். பள்ளிகளில் படிக்கும்போதே எழுத்தில் ஆர்வம் கொண்டு இதழ்களைப் படித்தே சிறந்த எழுத்தாளர்களானார்கள். இப்படியே நான் அறியாத எண்ணற்ற எழுத்தாளர்கள் பிறர் தூண்டுதல் இல்லாமலேயே எழுத்துப் பழக்கத்தை வளர்த்துக் கொண்டவர்கள். ஆனால் நாம் முயற்சி எடுத்தால் அரைவேக்காடாகவாவது பல எழுத்தாளர்கள் தோன்றலாமல்லவா? இப்படி நினைத்தது என் மனம். இதற்குப் பயிற்சி தரும் ஆசிரியர்கள் எழுத்துப் பழக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமே என்றும் சிந்தித்தது. இப்படி ஆராய்ந்து மூளையைக் குழப்பிக் கொள்வதைவிட செயலில் இறங்குவதே மேல் என்று தீர்மானித்தேன். முதலில் கையெழுத்தில் இதழ் தொடங்கலாம் என்று முடிவு செய்தேன்.

நல்ல பாண்டுதாளில் (அளவு டெமி - ஒன்றுக்கு எட்டு) நான்கு பக்கமும் அழகாக வண்ண மையில் கோடுகளிட்டு, எழுதுவதற்கு ஏற்றவாறு இருக்குமாறு தாள்கள் தயாரிக்கப் பெற்றன. மாணாக்கர்கட்கு கவிதை, கட்டுரை, விகடத் துணுக்கு, சிறுகதைகள், சில நிகழ்ச்சிகள் - இவை கையெழுத்து மலருக்கு ஏற்கப்படும் என்று அறிவிப்பு செய்ததில் ஏராளமான மாணவர்களின் எழுத்துகள் வந்து குவிந்தன. தமிழாசிரியர்கள், குறிப்பாக நற்றிறம் படைத்த வி.சி. கிருஷ்ணசாமி ரெட்டியாரின் மேற்பார்வையில் இவை பரிசீலிக்கப் பெற்று தேர்ந்தெடுக்கப்பெற்றன. தேர்ந்தெடுக்கப் பெற்றவற்றை நடை முதலியவற்றில் கை வைக்காமல் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், வாக்கியப் பிழைகளில் திருத்தம் செய்யப் பெற்றன. திருத்தமானவற்றை கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள் என்று வகைப்படுத்தி நன்கு அழகாக எழுதவல்ல மாணவர்களைக் கொண்டு எழுதப் பெற்றன. எழுதி முடிந்தவுடன் இவற்றை அச்சகத்தில் தந்து கட்டமைக்கப் பெற்றன. இதழ் அழகாக அமைந்தது. **'இளைஞர் அறிவுச் சுடர்'** என்று திருநாமம் சூட்டப் பெற்றது. இரண்டாண்டுகள் கையெழுத்திலேயே இதழ் தயாரிக்கப் பெற்றன. இங்ஙனம் வாய்ப்புகள் தந்ததில் மாணாக்கர்களின் அருமையான படைப்புகள் சுடர்விட்டுத் திகழ்வதைக் கண்டுதான் இப்பெயர் சூட்டப் பெற்றது.

1949, 1950 இதழ்கள் அச்சில் கொண்டு வரப்பெற்றன. மாணாக்கர்கள் வரையும் சில அழகான ஓவியங்கள் குறும்புச் சித்திரங்கள் (Cartoons) போன்றவற்றையும் அச்சுக் கட்டைகள் (Blocks) தயாரிக்கப்பெற்று வெளியிடப் பெற்றன. அட்டை மூவண்ணத்தில் தயாரிக்கப் பெற்றதால் மலர் அழகுடனும் கவர்ச்சியுடனும் திகழ்ந்தது. இவற்றில் மாணாக்கர்கள் அருமையான கட்டுரைகள், சிறுகதைகள்,

கவிதைகள், ஓரங்க நாடகங்கள், உரையாடல்கள், கற்பனைக் கட்டுரைகள், எழுதியதைக் கண்டு வியந்து போனேன். நான் பள்ளியைவிட்டு நீங்கிய பிறகு இம்முறையில் மேற்கொள்ளப் பெற்ற முயற்சி கைவிடப் பெற்றது. ஏதோ பாடம் சொல்வது, தேர்வு எழுதுவது, மதிப்பெண் வழங்குவது, மேற்வகுப்பிற்கு மாற்றப்பெறுவது என்று பழக்க மரபுப்படி பள்ளி நடைபெறுகிறதாக அறிகின்றேன். பள்ளி விழாக்கள் கூட உற்சாகமாகக் கொண்டாடப் பெறுவதில்லை. மூலவிசை (Micn Spring) சரியாக இல்லாவிட்டால் பொறி எப்படிச் சரியாக இயங்க முடியும்?

ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே;
அடக்கு வித்தால் ஆரொருவர் அடங்காதாரே;
ஓட்டு வித்தால் ஆரொருவர் ஓடாதாரே;
உருகு வித்தால் ஆரொருவர் உருகாதாரே;
பாட்டு வித்தால் ஆரொருவர் பாடாதாரே;
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே;
காட்டு வித்தால் ஆரொருவர் காணாதாரே;
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே.[1]

என்ற அப்பர் பெருமானின் தனித் திருத்தாண்டகப் பாடலொன்றுடன் இக்குமிழி உடைகின்றது!

குமிழி—105

## 41. கவிஞன் உள்ளம்

"இன்னற், பொருள்தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; நானோர் தும்பி" என்றார் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ் இலக்கியப் பூங்காவில் ஏராளமான நறுமலர்கள் உள்ளன; தமிழ் இளைஞர்கள் யாவரும் தும்பிகளாக வேண்டும் என்ற

1. அப்பர் 6.95 : 3

எண்ணம் என்பால் எழுந்தது. 'சுதந்திர இந்தியா' பிறப்பதற்கு ஆறாண்டுகட்கு முன்னர்தான் நான் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்டேன். இந்நிலையில் இக்கால ஆங்கிலக் கல்வியைக் குறைகூறும்,

> கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
> கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
> அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
> ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்;
> வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்.
> வாழு நாட்டில் பொருள்கெடல் கேட்டிலார்;
> துணியு மாயிரம் சாத்திர நாமங்கள்
> சொல்லு வாரெட் டுணைப்பயன் காண்கிலார்;

என்ற கவிதை யான்பெற்ற கல்வியைப் பற்றி நினைக்கும்படி செய்தது. எந்தக் கல்வியாயினும் தேர்வை நோக்கமாகக் கொண்டு கற்கும் கல்வியெல்லாம் இப்படித்தான் இருக்கும். ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலக் கல்வியை அடியோடு வெறுக்கும், 'தேசபக்தர்களைக்' காணும்போது எனக்கு மிகவும் வருத்தத்தை விளைவிக்கின்றது. இந்த ஆங்கிலக் கல்விதான் சுதந்திர இந்தியா பிறப்பதற்கு காந்தியடிகள், நேரு போன்றவர்கட்கு வழி காட்டியது; விசுவேஸ்வரய்யா போன்ற பொறியியல் விற்பன்னர்கட்கு நாட்டை வளமாக்குவதற்கு அறிவை நல்கியது. அதிகம் பேசுவானேன்? சுதந்திரம் கிடைத்து 42 ஆண்டுகட்குப் பிறகும் நம்மால் நம் நாட்டிற்கேற்ற ஒரு புதுக் கல்வித் திட்டத்தை வகுத்துக்கொள்ள முடியவில்லையே. ஆங்கிலேயர் கண்ட கல்விமுறையில்தானே ஒட்டுவேலை செய்து கொண்டிருக்கின்றோம்? இதைப்பற்றி உணர்ச்சி வசப்பட்டு அதிகம் பேசுவதே வெட்கம்! வெட்கம்!!

---

1. பா. ச: சுயசரிதை - 23

சுதந்திர இந்தியாவில் எல்லா மொழிகளிலுமே என்றுமே இல்லாத வேகத்தில் புதுமை இலக்கியம் தோன்றிய வண்ணம் உள்ளது. புதினங்கள், சிறுகதைகள், பெரும்பாலும் தழுவல்களாகவும், மொழிபெயர்ப்பாகவும், நமது வாழ்வில் ஒட்டாத காதற் கதைகளாக இருந்தபோதிலும் இவற்றையும் படிப்போர் பெருகி வருகின்றனர் என்பதில் ஐயம் இல்லை. கவிதைத் துறையிலும் சிலர் புது முறைகளைக் கையாண்டு பலர்க்கும் இன்பமூட்டி வருகின்றனர். இவர்களில் பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம் போல் கவிதை இயற்றி வரும், கவிமணி, நாமக்கல் கவிஞர் பாவேந்தர் பாரதி தாசன் ஆகியோர் முத்திறப் புதுமைக் கவிஞர்களாவர். இவர்கள் பாரதியார் தோற்றுவித்த மறுமலர்ச்சி இலக்கியத்தை,

அரிதாள் அறுத்துவர
மறுதாள் பயிராகும்

என்ற முறையில் மறுபோகமாகப் பயிர் செய்து வந்த மாபெருங் கவிஞர்கள். இவர்கள்தாம் நான் தமிழ் இலக்கியத்தைக் கற்பதற்கு வேண்டிய சுவையையும் உணர்ச்சியையும் என்பால் எழுப்புவதற்குக் காரணமானவர்கள்.

கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டுத் துறையூர் வாழ்வில் நான் தமிழன்னையின் மடியில் அமர்ந்து கொண்டு தமிழமிழ் தம் பருகிக் கொண்டிருந்தேன். இந்தக் காலப்பகுதியில்தான் வித்துவான் பட்டம் பெற்றேன்; இதற்குச் சற்றுப் பின்னர் தமிழ் எம்.ஏ. பட்டமும் வந்து சேர்ந்தது. இவை யெல்லாம் வாழ்க்கையில் புகுவதற்கு வேண்டிய பயணச் சீட்டுகள்; ஆனால் இவை தமிழிலக்கியத்தை அநுபவித்துப் படித்தற்கு அடையாளங்கள் அல்ல; சிலருக்கு இவை 'கல்வியில் கரை கண்டோம்!' என்ற ஆணவத்தையும் தன் முனைப்பையும்

எழுப்பி வருவதைக் கண் கூடாகக் காணவும் செய்கின்றோம். சிலரிடம்தான் 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[2] என்ற புத்துணர்ச்சியை எழுப்புகின்றதையும் காணாமல் இல்லை.

இந்தக் காலகட்டத்தில் நான் கண்ட சில உண்மைகள்; "தமிழ் ஒரு குழந்தை மொழியன்று; சங்ககாலந் தொட்டு—ஏன்? அதற்கு முன்பே—எவ்வளவோ காலம் கண்டு, எத்தனையோ நிகழ்ச்சிகள் கண்டு, கருத்து வேற்றுமைகளும் கொள்கை முரண்பாடுகளும் கண்டு, தொல்காப்பியர், திருவள்ளுவர், கம்பர் போன்ற மேதாவிகளையும் குழந்தைகளாக அணைத்துக்கொண்டு தாய்மைப்பண்பு பெற்று வளர்ந்து வந்திருக்கும் தாய்மொழி யல்லவோ நந்தமிழ் மொழி? காலவகையால் பழையன கழியப் புதியன கண்டு வந்துள்ளது. இன்னும் புரட்சிகரமான புதுமைகளையும் காணப் போகின்றது. இம்மொழியின் இலக்கியவரலாறே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொடங்கியிருக்க வேண்டும் என்பது ஆய்வு முடிவு, இந்த இருபது நூற்றாண்டு வளர்ச்சி நெறியிலும் மைல்கற்கள் உண்டு; இந்த வளர்ச்சி நெறியை இன்றும் நாம் அறியக் காட்டும் மைல்கற்கள் இவை."

இன்னும் என் மனத்தில் எழுந்த சில உணர்வுகளையும் குறிப்பிடுவேன். "தமிழ்வளரும் புதியபுதிய துறைகளில் எல்லாம் தமிழின் உயிர்நாடி பேச வேண்டும். சங்க இலக்கியங்களில் கொலுவீற்றிருக்கும் அரசிளங் குமரியின் அதிகார முத்திரை வேண்டும்; தமிழ் தமிழாக வளர வேண்டும். நம் இலக்கிய வளர்ச்சி நெறியைச் சிறிதும் அறிந்து கொள்ளாமல் பிற இலக்கியங்களின் உதவியால் மட்டிலும்

2. குறள்-1110 (புணர்ச்சிமகிழ்தல்)

தமிழை வளர்த்து விட முடியாது. புதிய கருத்துகளை வெளியிடலாம்; வெளியிட முடியும்; வெளியிடத்தான் வேண்டும். புரட்சிகரமான கருத்துகளையும் காரசாரமாக வெளியிடலாம். அவற்றை வெளியிடுவதற்குப் புதிய புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டு வரலாம். வேறு மொழிகளிலிருந்து கருத்துச் செல்வத்துடன் வேறு நாடுகளிலிருந்து கலைச் செல்வங்களுடன், இன்றியமையாத சொற் செல்வத்தையும் கொண்டு சேர்த்து, தமிழ்மரபுக்கேற்பப் புதிய சொற்களையும் பிறப்பித்து நம் வீட்டுமொழியின் கருவூலத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால் தமிழின் பண்போடு கூடிய உயிராற்றலை உணர்ந்து எழுத வேண்டும்; பாடவேண்டும். அப்போதுதான் பழமைக்கும் பழமையான தமிழ் புதுமைக்கும் புதுமையாய் வளர்ந்தோங்க முடியும்.''

இத்தகைய இலக்கியப் பரப்பில் சங்க இலக்கியங்கள்தாம் ஆதிமைல் கல். இது முக்கியமானகல்லாகவும் உள்ளது. தமிழ்ப் பண்பையும் தமிழர் பண்பாட்டையும் உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்குச் சங்க நூல்களை அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. துறையூரில் நான் உலக ஊழியனார், இலால்குடி நடேசமுதலியார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், பு ரா. புருடோத்தம நாயுடு, டாக்டர் மு. வரதராசன், அ.மு. பரமசிவானந்தம், பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், சி. இலக்குவனார் இவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்த சிறப்புச் சொற்பொழிவுகள் என்னிடம் ஆராத் தமிழ்க் காதலை எழுப்பித் தமிழ் இலக்கியங்களைப் படிக்கத் தூண்டின. கவிராஜபண்டிதர் ஜகவீர பாண்டியனும், பாவேந்தர் பாரதிதாசனும் கூட துறையூருக்கு வந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இவர்கள் பேச்சும் என்னுடைய அகத்தெழுச்சியைத் தூண்டி விட்டது.

காவியப் போக்கிலும் கருத்து வளத்திலும் கம்பன் என் மனத்தைக்கவர்ந்ததுபோல் வேறு யாரும் கவரவில்லை. திருத்தொண்டர் புராணம் என் பக்தியை வளர்க்கக் காரணமாயிற்று. ஞானியார் குடும்பவழியில் வந்த என்னை என் இறுதிக் காலத்தில் பக்தியுடன் காலங்கழிப்பதற்கு எருவிட்டது இந்தப் புராணம்தான். இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் இராஜ நடையில் கம்பீரமாகச் செல்லுவதை அறியமுடிந்தது. 'நவில்தொறும் நூல்நயம் போலும்' என்ற உண்மையை வள்ளுவப் பெருந்தகையிடத்தில் தான் நான் கண்டேன்: பரிமேல் அழகரின் உரை இதைக் காண எனக்குக் கைகொடுத்து உதவியது. ஓதற்கெளிதாய் உணர்தற்கரிதாக இருப்பதை இந்தத் தெய்வப் பனுவலில்தான் காண முடிந்தது.

பிற்காலத்து இலக்கியங்கள் யாவும் உயர்வு நவிற்சி யணிகள் செறிந்து சிந்தனைக்கு விருந்தாக இருப்பதை அவற்றைப் பயின்று அனுபவித்தபோதுதான் காணமுடிந்தது. சங்க இலக்கியங்கள்மீது என் நாட்டம் சென்றபோது தமிழ் மொழியின் உண்மை இயல்பையும் அதன் பெருமையையும், பழந்தமிழர்களின் சீரிய வாழ்க்கை முறைகளையும் சங்கப் புலவர்கள் காட்டும் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பது போன்ற குறிக்கோள் நெறிகளையும் கண்டு அநுபவித்து மகிழ்ந்தேன். சீரிய தமிழ்த்தாய் எழில்களெல்லாம் திரண் டிருக்கும் மங்கைப்பருவத்துடன், ஓர் அரசிளங்குமரிபோல், அரியாசனத்தில் திருவோலக்கம் கொண்டிருக்கும் காட்சி யைச் சங்க இலக்கியங்களில் கண்டு மகிழ்ந்தேன். சங்க இலக்கியங்களைப் பயின்று வருவதில் உள்ள இடர்ப்பாடுகள், ஆசிரியர் துணையின்றிப் பயில்வார்க்குத்தாம் தெரியும். சில பாக்களைப் பயின்று அவற்றின் நுட்பங்களையும் உள்ளுறைப் பொருள்களையும் மனநிறைவுடன் அறிந்து கொள்வதற்குப் பலமணி நேரம் செலவு செய்துள்ளேன்.

பலாப்பழத்தை உரித்து அவற்றின் சுளைகளை எடுப்பது போன்ற சிரமம் இருப்பினும், ஒவ்வொரு பாடலும் ஒரு படித் தேனாகவே இனித்ததை அறிந்தேன். பாக்களைப் படித்துப் பொருள் உணர்வதில் உள்ள சங்கடங்களை எண்ணிப் பார்த்தால் தமிழ் இலக்கியத்தைக் கண்டு மக்கள் 'தெனாலிராமன் பூனை' போன்று மிரளுவதின் உண்மையைத் தெளிந்தேன். புலி பயத்தை விடக் கிலி பயந்தான் பெரும் பாலோரை மிரளும்படி செய்கின்றது என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த நிலையில் டாக்டர் மு, வரதராசன் அவர்களின் குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை விருந்துகளும் விளக்கங்களும் இளைஞர்களின் சங்க இலக்கியக் காதலுக்குத் தூண்டுகோல்களாக அமைந்தன. இவரை அடுத்து கி.வா. சகந்நாதன் அவர்களின் 'சங்க நூற்காட்சிகள்' என்ற தொடரில் வெளிவந்த எட்டு நூல்களும் இதனை மேலும் வளர்த்தன. இந்த முறையில் தமிழன்னைக்கு என் தொண்டும் சேரவேண்டும் என்ற அவா என்னை உந்தியது. பொதுவாக இலக்கியத்தில் ஒரு சுவையையும் சிறப்பாகச் சங்க இலக்கியத்தில் ஒரு நாட்டத்தையும் ஊட்டி விட்டால் எவரும் அவற்றை விரும்பிப் படிப்பார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. இந்த நிலையில் யான் படித்து அநுபவித்த சங்கஇலக்கியப் பாடல்களில் சிலவற்றை அவ்வப் போது சிறுசிறு கட்டுரைகளாக எழுதிக்கொண்டு வந்தேன். இவற்றை அக்காலத்தில் துறையூரில் வெளிவந்து கொண்டிருந்த 'கிராம ஊழியன்' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றிவந்த வல்லிக் கண்ணன் என்பவரிடம் காட்டிய துண்டு. காரணம், அவர் பொது மக்களின் சுவையை நன்கு அறிந்தவர், அவரும் 'இவை நன்று' என ஆமோதித்தார். ஒழிந்தநேரங்களில் என் சோதர ஆசிரியர்கட்கும் அவற்றைந் படித்துக்காட்டுவேன். எல்லோருமே அவற்றை நன்கு

அநுபவித்தார்கள் என்றே சொல்ல வேண்டும்; பத்திரிகைக்கு அனுப்பினால் பலருக்குப் பயனாக இருக்கும் என்றும் கூறினார்கள்.

அக்காலத்தில் பெரியசாமி தூரனை ஆசிரியராகக் கொண்டு கோவையிலிருந்து வெளிவந்த **'கால சக்கரம்'** என்ற திங்கள் இதழுக்கு அனுப்பி வைத்தேன். பத்துக் கட்டுரைகள் இந்த இதழில் வெளிவந்தன. அப்போது உயர்நிலை பள்ளியில் மாணவியாக இருந்த **திருமதி. சவுந்திரா கைலாசம் அம்மையார்** இவற்றைப் படித்து அநுபவித்ததை அண்மையில் ஒருசமயம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது என்னிடம் தெரிவித்தார்கள். வெளி வந்த 10 கட்டுரைகளையும் வெளிவர இருந்த 15 கட்டுரை களையும் தொகுத்து **'கவிஞன் உள்ளம்'** என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டேன் (சனவரி, 1949) இதுதான் என் முதல் வெளியீடு; 'கன்னி வெளியீடு'.

இந்த நூலுக்கு ஓர் அணிந்துரை தக்கார் ஒருவரிடமிருந்து பெற வேண்டும் என்று கருதினேன். அப்போது கல்வியமைச்ச ராக இருந்தவர் **தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாரவர்கள்.** அன்று (ஏன் இன்றுகூட—1989) என் மதிப்புக்கும் மரியாதைக்குமாக இருப்பவர் இப்பெருமகன். அணிந்துரை வாங்குவதற்கென்றே துறையூரிலிருந்து சென்னை வந்தேன். அப்போது அமைச்சர் சாந்தோம் பகுதியில் வசித்து வந்தார். நூலின் ஒரு படியை முன்னரே அவருக்கு அஞ்சல் வழிஅனுப்பி வைத்திருந்தேன். நேராக அவர் மனமுவந்து சிறியேனை இன்முகத்துடன் வரவேற்றார். பின்னர், "மிஸ்டர் ரெட்டியார், தங்கள் நூலுக்கு அணிந்துரை தர விரும்பி னேன். நூலைப் படித்துப் பார்த்ததில் அது காதற் கட்டுரைகளைக் கொண்டிருப்பதைக் கண்டேன். என் நிலைக்கும் நான் மேற்கொண்டுள்ள இராமகிருஷ்ண

வித்தியாலயப் பணிக்கும் இவை ஒவ்வாதவை. ஆகவே இந்த நூலுக்கு அணிந்துரை தர முடியாமைக்கு வருந்து கின்றேன். வேறொரு நூலுக்கு அவசியம் தருவேன்' என்று கூறி நூலை என்னிடமே திருப்பித் தந்து விட்டார்.' நானும் அவரிடம் நகைச்சுவையாக, "ஐயா, அநுமன் குறித்து ஒரு நூல் எழுதத் திட்டமிட்டுள்ளேன். அதற்குப் பெறுவேன்! என்று கூறி விடை பெற்றுத் திரும்பினேன்.

அக்காலத்தில் தமிழில் கலைக்களஞ்சியப் பணிதொடங்கப் பெற்றிருந்தது இப் பெருமகனாரின் முயற்சியால். 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற நிறுவனம் இப்பொறுப்பை மேற் கொண்டிருந்தது. திரு. பெரியசாமித்தூரன் இதன் முதன்மைப் பொறுப்பாசிரியர் பொறுப்பைஏற்றிருந்தார். இவரிடமாவது அணிந்துரை பெறலாம் என்று கருதி அவர் குடியிருந்த புரசைவாக்கத்திலுள்ள இல்லத்திற்கு இரவு 7-30க்கு வந்து சேர்ந்தேன், 'காலசக்கரத்தின்' ஆசிரியரல்லவா? காலச் சக்கரத்தில் வெளிவந்த 10 கட்டுரைகளும் இந்நூலில் அடங்கி யுள்ளன என்றும் கூறி அணிந்துரை வழங்குமாறு வேண்டி னேன். நூலைப் புரட்டிப் பார்த்தார்; என்ன நினைத்தாரோ அணிந்துரை தர மறுத்துவிட்டார். முதலில் அவர் என்னை வரவேற்ற முறை, பேசிய தோரணை இவையே எனக்குப் பிடிக்கவில்லை. தம்மைத் தம் நிலைக்கு மேல் உயர்ந்தவர் என்று கருதிக் கொண்டிருந்தமையைக் குறிப்பால் உணர்ந்து கொண்டேன். நன்றி சொல்லி விடை பெற்றுத் திரும்பினேன்.

அடுத்து, என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் தங்கியிருந்த பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லத்திற்குத் திரும்பினேன். (13, வடக்கூர் செல்வ விநாயகர் தெரு, மயிலாப்பூர்). மறுநாள் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு குமரிமலர் அலுவலகம்

(100, மாவ்பிரேஸ் சாலை, ஆழ்வார் பேட்டை) வந்தேன் உலகம் சுற்றும் தமிழன் ஏ. கே. செட்டியாரிடம் அணிந்துரை பெறும் நோக்கத்துடன். அவர் மிகவும் மகிழ்ந்து, ''நான் தருவதில் மகிழ்கிறேன். ஆனால் என்னைவிடச் சிறந்த எழுத்தாளரும் இலக்கியச் சுவைஞருமான பி. ஸ்ரீ ஆச்சாரி யாரிடம் பெறுவது நல்லது'' என்று கூறி அருகிலுள்ள சீனிவாச அய்யங்கார் சாலையில் ஓர்இல்லத்தில் தங்கியிருந்த பி. ஸ்ரீ. யிடம் என்னை இட்டுச் சென்று, அறிமுகம் செய்து வைத்து, நான் வந்த காரியத்தை எடுத்துரைத்தார். அன்று தான் முதன் முதலாக பி. ஸ்ரீ. அவர்களைக் கண்டேன். அதற்கு முன்னர் அவர் எழுதியுள்ள பல நூல்களைப் படித் திருந்தேன்; ஆனந்தவிகடனில் வெளிவந்த 'கம்பசித்திரம்' தொடர் கட்டுரைகளைப் படித்து அநுபவித்தேன். அவரும் ஒப்புக் கொண்டு நூலை வாங்கிக் கொண்டார். பதினைந்து நாளில் அனுப்புவதாகச் சொன்னார்: அனுப்பியும்வைத்தார். இந்தப் பெருமகனின் ஆசியைக் கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதுகின்றே

நூலை ஒரு நல்ல பாத்திரத்திற்கு அன்புப்படையலாக்க நினைத்தேன். என் மனத்தில் முதலிடம் பெற்றிருந்தவர் பன்மொழிப் புலவர் வே.வே. ரெட்டியார். அவருக்கு,

திருந்திய வுளத்தை மாலடிக் காக்கிச்
சேவையைத் தமிழ்மொழிக் காக்கிப்
பொருந்திய வழுதை யார்வலர்க் காக்கிப்
புலமையை அடக்கத்திற் காக்கிப்
மருந்தெனும் கருணை எம்மனோர்க் காக்கிப்
மனத்துற வெய்திய பெரியோன்
அருந்தமிழ்க் குரிசில் வேங்கட ராசன்
அடிமலர்க் குரிய திந்நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். ஒளிப் படம் (Photo) தர மறுத்ததால் நூலை அவர் திருவுருவம் அணி செய்யாத நிலை. இதுவே குறை. இவருடைய ஆசி யால்தான் என் பிற்கால வாழ்க்கை உயர்ந்தது என்று இன்றும் அதிராத நம்பிக்கை கொண்டுள்ளேன். தமிழின் பால் என்னை ஆற்றுப்படுத்தியவரும் இப்பெருமானாரே.

குமிழி-106

## 42. காரைக்குடி - கம்பன் திருநாள்

நான் துறையூரிலிருந்தபோது திரு. **கே.எஸ். முத்து வேல் பிள்ளை** அடிக்கடி டி.கே.சி. பற்றியும் காரைக்குடி கம்பன் திருநாள் பற்றியும் கூறி ஓராண்டு காரைக்குடிக் கம்பன் திருநாளுக்குப் போய்வருமாறு அடிக்கடிச் சொல்லி உற்சாக மூட்டிவருவார். 1949-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அந்தத் திருநாள் நடைபெற்றது. அந்த விழாவுக்கு டி.கே.சி. சென்னையிலிருந்து இந்தோ-சிலோன் விரைவு இருப்பூர்தி யில் வந்து கொண்டிருந்தார். திரு. முத்துவேல் பிள்ளை யவர்கள் என்னை வற்புறுத்தி அந்த வண்டியில் வந்து கொண்டிருந்த ரசிகமணிக்கு என்னைத் திருச்சியில் அறிமுகப் படுத்தி அவருடன் இணைத்துவிட்டார். இந்த நாள்தான் பின்னர் என் வாழ்வின் பொற்காலத்திற்குக் கால்கோள் விழாவாக அமைந்தது.

டி.கே.சி.யை நேரில் பார்த்துப் பழகாவிடினும் அவரது நூல்கள் பலவற்றை முன்னரே படித்து அறிந்திருந்தேன். இதனால் '**ரசிகமணி**' என்ற பட்டம் பொருத்தமானது என் பதையும் தெரிந்திருந்தேன். திரு. முத்துவேல் பிள்ளை எதையும், யாரையும் சற்று மிகைப்படுத்திக் கூறும் பழக்க முடையவர் என்பதை அவருடன் பழகும் அனைவரும் அறிவர். வஞ்சகமின்றிப் பழகும் வெள்ளை மனிதர்.

என்னைப்பற்றி அறிமுகம் செய்யும்போது ‘‘இவர் என் மாப்பிள்ளை. துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர். நன்கு தமிழ் கற்றவர். வித்துவான் பட்டமும் பெற்றுள்ளார்.............’’ இப்படி அடுக்கிக் கொண்டே போனார். ‘‘ ‘வித்துவான்’ எதற்கு?’’ என்று குறுக்குக் கேள்வி கேட்டார் டி.கே.சி. உடனே நான், ‘‘ஏதோ தமிழ் படித்தேன். ஆசிரியத் தொழிலிலுள்ள எனக்குத் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்று கருதி தேர்வு எழுதி பட்டமும் பெற்றேன்’’ என்றேன். ‘‘அது சரி; ஆனால் எல்லாம் கற்றுவிட்டோம் என்ற தலைக் கனம் இல்லாதிருந்தால் சரி’’ என்று புன்முறுவல் பூத்தார். உடனே நான், ‘‘ஐயா, பி.ஏ (Bachelor of Arts) என்பதற்கு தாங் கள் ஓரிடத்தில், தங்கள் எழுத்தில், ‘கலையுடன் திருமண மாகாதவர்கள்’ என்று கூறியுள்ளதையும், பி.ஏ. பட்டத் திற்குப் பிறகுதான் படிக்க வேண்டியவை நிறைய உள்ளன; இனி, படித்தால் அவை புரியும் என்பதற்கு அறிகுறி இது என்பதையும் நினைவூட்டி, இக் குறிப்பு என்னை உய்விக் கின்றது’’ என்று எடுத்துக்காட்டினேன். ‘‘இதையும் நீங்கள் தெரிந்து வைத்திருக்கின்றீர்களா?’’ என்று கூறி மகிழ்ந்தார்· கம்பன் விழாவுக்கு முதல் நாளே டி.கே.சி. காரைக்குடிக்கு வந்துவிட்டார்.

அழகப்பா கல்லூரி வளாகத்தில் திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமானின் மருமகன் திரு. V.K.C. நடராசன் (பொருளாதார விரிவுரையாளர்) தங்கியிருந்தார்· அவருடைய இல்லத்தில் தங்கினார் டி.கே.சி. அடியேனும் அங்குத்தான் தங்கினேன். இதனால் திரு. தொண்டை மானின் நட்பும் ஏற்பட்டது. வி.கே.சி. நடராசனின் தொடர்பும் கிடைத்தது. வந்த நாள் மாலையிலேயே அமராவதி புதூரில் திரு. சொ. முருகப்பா-மரகதவல்லி இவர் களால் மிகத் திறமையாகவும் பாசத்துடனும் நடத்தப்பெற்று

வந்த (இப்போது அது நடைபெறவில்லை) 'மகளிர் இல்லம்' என்ற குழந்தைகள் பள்ளி ஆண்டுவிழாவில் டி.கே.சி. தலைலமை வகித்தார். அந்த விழாவிற்கு நானும்அழைத்துச் செல்லப் பெற்றேன். அங்கு திரு. சொ. முருகப்பா, ராய. சொக்கலிங்கம், தூத்துக்குடி A.C. பால் நாடார், பேராசிரியர் அ. சீநிவாச ராகவன், பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர், மீ.ப. சோமசுந்தரம் (சோ.மு.) ஆகியோரின் நட்பும் தொடர்பும் ஏற்பட்டன. டி.கே.சி.யுடன் அழகப்பா வளாகத்தில் இறங்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளே சட்டை போடாத மடித்துப் போட்ட மேலாடையுடன் காரைக்குடி கம்பன் சா. கணேசன் (பின்னர் 'கம்பன் அடிப்பொடி' என்று எல்லோராலும் பாராட்டப் பெற்றவர்) டி.கே.சி.யை வர வேற்பதற்காக நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந் தார். அப்போதுதான் டி.கே.சி. கணேசனுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அந்த அறிமுகம் பின்னர் என் வாழ்க்கையின் பாதையையே மாற்றியது. குக்கிராமங் களில் குறுக்கும் நெடுக்குமான சிறு சாலைகளில் பயணம் செய்து கொண்டிருப்பவருக்கு நெடுஞ்சாலைப் பயணம் கிடைத்தது போன்ற அநுபவம் ஏற்பட்டது.

அன்று மாலையில் மகளிர் இல்ல ஆண்டுவிழா 4½ மணிக்குத் தொடங்கியது. காரைக்குடி தேவகோட்டை, வேறு அருகிலுள்ள ஊர்களிலிருந்து பல முக்கிய பெரியோர் கள் வருகை புரிந்திருந்தனர். எல்லா வகையிலும் விழா சிறப்புடன் நடைபெற்றது. அப்போது டி.கே.சி. அவர்கள் திருக்குற்றாலக் குறவஞ்சியிலுள்ள ஒரு பாடலை, தமக்கே உரிய சிறப்பான பாணியில், விளக்கியது இன்னும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. அந்தப் பாடல்;

கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம்
சதுர்வேதம்; கிளைகள் ஈன்ற

கனையெலாம் சிவலிங்கம்; கனியெலாம்
சிவலிங்கம்; கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம்; வித்தெலாம்
சிவலிங்கம்; சொரூப மாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டு வோமே.[1]

இந்தப் பாடலை விளக்குவதற்குமுன் தம் முன்னிருப்பவர்களை மானசீகமாகக் குற்றாலத்திற்குக் கொண்டுபோய் விடுகின்றார். அந்தச் சூழ்நிலையைத் திரும்பப் படைத்துவிடுகின்றார். நாம் கோவிலுக்குள் சென்று குற்றாலத் தீசரை வணங்கும் பிரமையையும் ஏற்படுத்தி விடுகின்றார், தல விருட்சம் குறும்பலாவையும் காட்டுகின்றார். அதில் தொங்கும் பல பலாக் கனிகளையும் காட்டுகின்றார். பழத்தை உரித்துக் காட்டும்போது திரிகூடராசப்ப கவிராயர் கண்டு அநுபவித்தசிவலிங்கங்களையே காட்டிவிடுகின்றார். கார்த்த வீரியார்ச்சுனன் ஆயிரம் சிவலிங்கங்களை வைத்து ஒரே காலத்தில் வழிபட்டதாகக் காவியங்களில் படித்துள்ளோம். இங்கு நூற்றுக்கணக்கான பலாக்கனிகளில் ஆயிரக்கணக்கான சிவலிங்கங்களை நமக்குக் கற்பனையில் காட்டுகின்றார். பாடல்களைத் தமக்கேயுரிய பாணியில் வெவ்வேறுவிதமாகப் பாடிப்பாடித் தாம் அநுபவிக்கின்றார். ஊதுவத்திப் புகை போன்ற வாசனைப் புகையைப் பம்பால் அறைமுழுதும் அனுப்புவதுபோல், டி.கே.சி.யின் திருவாயினின்றும் புறப்படும் ஓசையநுபவம், பொட்டாசியம் பெர்மாங்கனேட் ஸ்படிகத்துண்டுகள் கண்ணாடி சாடியிலுள்ள நீரில் சிறிது சிறிதாகக் கரையும்போது கண்களால் காணும் காட்சிபோல, சொற்களிலிருந்து புறப்படும் நேர்ப்பொருள்கள், தொனிப் பொருள்கள் நம் கற்பனையுடன் கரைந்து, கலந்து, நம்

1. திருக் குற்றா. குறவஞ்சி - 3.

சிந்தையில், சிந்தனையில் படியும்போது அற்புதமான கவிதாநுபவம் பெறுவதை அறிகின்றோம். விழா முடிந்து கூட்டம் கலையும்போது பலர் இப்பாடலை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே அநுபவித்துப் போனதை நேரில் கண்டேன்; வியப்புற்றேன்.

கம்பன் திருநாள் அப்போது மீனாட்சி மகளிர் உயர் நிலைப்பள்ளி ஆடுகளத்தில் பெரிய கொட்டகை போட்டு மேடை அமைத்து அதில் நடைபெற்றது. மூன்று நாட்கள் இக்கொட்டகையிலும் நான்காம் நாள் நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதியிலும் நடைபெற்று வந்தது. நான்கு நாள் நிகழ்ச்சிகளை அமைப்பதில் கணேசனுக்கு நிகர் கணேசனே. அற்புதமாக அமைத்துவிடுவார். இந்த மூன்று நாட்கள் இரவில் கல்லூரி வளாகத்தில் திரு. நடராசன் இல்லத்தில் தங்கியிருந்தேன். காலையில் எல்லோருக்கும் சிற்றுண்டி அனுப்புவார் சா.க. அழைத்துப்போக வண்டி வரும் (4 கி.மீ). பகல் உணவு சா.க. வீட்டில்; அங்கேயே ஓய்வு; மாலை சிற்றுண்டி முடிந்தபின் விழா தொடங்கும். இரவு 8 மணிக்கு உணவு. 9மணிக்கு வளாகத்திற்குத் திரும்பி விடுவோம்.

முதல் நாள் விழாவில் டி.கே.சி, தலைவராகவோ, தொடங்குபவராகவோ இருந்ததாக நினைவு. 43 ஆண்டு கட்கு முன் நிகழ்ந்தது இது; நினைவிலிருந்தவரை எழுது கின்றேன். டி.கே.சி.யின் பேச்சு என்னை நன்கு கவர்ந்தது. கூட்டத்தில் அவர் எடுத்துக்காட்டி விளக்கிய பாடல்:

கானாள நிலமகளைக் கைவிட்டுப்
    போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி; போனவர்கள்
    வரும்அவதி போயிற் றென்னா

ஆனாத உயிர்விடவென்று அமைவானும்
ஒருதம்பி; அயலே நானாது
யானாம்இவ் வரசாள்வென்? எனனேஇவ்
வரசாட்சி? இனிதே அம்மா.[2]

இராமன் வராமையால் தான் இறக்கத் துணிந்துவிட்டதாக வும், அரசப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படியாகவும் பரதன் சத்துருக்கனனிடம் கூற அதற்கு அவன் கூறும் மறு மொழியாக அமைந்தது இப்பாடல். சூழ்நிலையை விளக்கி நம்மை அயோத்திக்குக் கொண்டு சென்றுவிடுகின்றார். ''கொழுந்துவிட்டு நிமிர்கின்ற கோபத்தான்'' கூறுவதை உணர்ச்சி பொங்க விளக்குகின்றார் டி.கே.சி. இவ்வாறு விளக்கும்போது தான் சத்துருக்கனனாகவே ஆய்விடு கின்றார். நம்மையும் அவனாகவே ஆக்கிவிடுகின்றார் தம் முடைய அற்புத ரசவாத வித்தையால். இதற்கு முன் இவரது நூல்களைப் படித்திருந்தாலும் இவர் பேச்சைக் கேட்ட பிறகு மீண்டும் இவர் நூல்களைப் படிக்கும்போது பேசுவதும் எழுதுவதும் ஒன்றாகவே இருப்பதை அறிகின்றேன்.

நான்கு நாட்கள் கணேசன் வீட்டில் அவருடனும் விருந் தினர்களாக வந்துள்ள கம்பன் அடியார்களுடனும் நன்கு கலந்து பழகும் வாய்ப்புகள் கிடைத்தன. நான்காம் நாள் ஒரு சிற்றுந்தில் (Van) எங்களுக்கு வேண்டிய உணவு (வர்க்கன்ன வகைகள்), குடிப்பதற்கு வேண்டிய நீர் இவற்றை ஏற்றிக்கொண்டு சிலர் வர, மூன்று நான்கு மகிழ்வுந்துகளில் சில விருந்தினர்கள் வர, நாட்டரசன் கோட்டைக்கு எங்கள் பயணம் தொடங்கியது சுமார் காலை 9½ மணிக்கு. 10½ மணிக்குக் கல்லல் என்ற ஊரில் செட்டியார் ஒருவர் (பெயர் நினைவு இல்லை) சிறு விருந்து அளித்தார்.

---

2. கம்ப. யுத்த (II), மீட்சி-223.

சில பிஸ்கட்டுகள்; காஃபி. 100 இளநீர் வரையில் குவித்து வைத்திருந்தார். ஒருவர் அவற்றை வெட்டி வெட்டி நீரை ஒரு பெரிய போவணியில் விட்டுக்கொண்டே இருந்தார். சில இளைஞர்கள் நீரை வினியோகித்துக் கொண்டே இருந்தார்கள். விரும்பினவர்கள் இளந்தேங்காய்ப் பருப்பையும் உண்டு மகிழ்ந்தனர்.

$11\frac{1}{2}$ மணிக்கு மீண்டும் பயணம் தொடங்கியது. பிறிதோர் இடத்தில், ஒரு மடத்தில், வண்டிகளை நிறுத்திப் பகலுணவு தரப் பெற்றது. இந்த மடம் வேப்ப மரங்கள் சூழ்ந்த சோலை; குளிர்ச்சியாக இருந்தது. கூட்டமாக உண்பதும் வேடிக்கையாகப் பேசுவதும், அப்படிப் பேசும் போது இதுகாறும் மூன்று நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிய திறனாய்வுமாகப் பேச்சு அமையும். இது பெருமகிழ்ச்சியை அளித்தது. புதியதோர் அநுபவத்தையும் தந்தது. குக்கிராமத்தில் அடைபட்டுச் சிறுவர்கள் கல்வியிலும் பள்ளியின் வளர்ச்சியிலும் ஆழ்ந்து கிடந்த என் மனம் விரிந்து பரவக் காரணமாகவும் இருந்தது. இஃதெல்லாம் இறைவன் எனக்கு நல்கிய வாய்ப்புகள் என்று பக்தியுடன் கருதிப் போற்றுகின்றேன்.

மீண்டும் $2\frac{1}{2}$ மணிக்குப் பயணம் தொடங்கியது. $3\frac{1}{2}$ மணிக்கு நாட்டரசங்கோட்டைக் கம்பன் சமாதியை அடைந்தோம். சா. கணேசன் திருமுழுக்காடி உடல் உளத்தூய்மையுடன் வழிபாட்டுக்குத் தயாரானார். 4 மணிக்கு எல்லோருக்கும் மாலைச் சிற்றுண்டி, காஃபி வழங்கப் பெற்றன. கம்பன் வாக்குகளிலிருந்தே பொருக்கி 108 அடிகளடங்கிய 'போற்றி அகவல்' தயார் செய்யப் பெற்றிருந்தது. கம்பன் சமாதியின்மீது இலிங்கம் பிரதிட்டை செய்யப்பெற்றிருந்தது. இசைப் பயிற்சியுடைய ஒருவர் அகவலை அடி அடியாக நிறுத்திப் படிப்பார். ஒவ்வொரு அடி படிக்கப்

பெறும் போது சா. கணேசன் அலரும் நிலையிலுள்ள செந்தாமரை மொட்டினை இலிங்கத்தின் மீது மிக்க பக்தியுடன் வைப்பார். 108 மொட்டுகளை வைத்து வழிபாடு நடத்துவதற்கு கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் ஆகும். மாலை ஐந்து மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கும். ஒரு தலைவர்; நான்கு பேச்சாளர்கள் கடமைகளை முடிப்பதற்கு சுமார் 2½ மணி நேரம் ஆகும், 8 மணிக்கு இரவு உணவுடன் விழா நிறைவு பெறும். ஆண்டுதோறும் விழா இங்கு இங்ஙனம் நடைபெற்று வருகின்றது. நான் முதன் முதலாகக் கலந்து கொண்டது **பத்தாவது** திருநாள் என்பதாக நினைவு.

அன்றிரவு அதிகாலையில் நாட்டரசன் கோட்டை நிலையத்திற்கு பெரும்பாலோர் வாகனங்களில் கொண்டு இறக்கப் பெறுவர். அவரவர்கள் அவரவர்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய்விடுவார்கள். நான் சுமார் அதிகாலை ஐந்து மணிக்கு வண்டியேறி சுமார் முற்பகல் ஒன்பது மணிக்குத் திருச்சி வந்தடைந்தேன். என் நண்பர் வழக்குரைஞர் திரு. G. M. **விருத்தாசலம்** வில்லியம்ஸ் சாலையில் பிளாஸா சினிமாக் கொட்டகைக் கருகில் குடியிருந்தார், அவர் இல்லம் சென்று நீராடிவிட்டு ஆடைகளை மாற்றிக்கொண்டு துறையூர் வந்து சேர்ந்தேன், காரைக்குடிப் பயண அநுபவம் என்றும் என் மனத்தில் பசுமையாக இருக்கும் சிறந்த அநுபவமாக அமைந்து விட்டது.

**குமிழி—107**

## 43. எதிர்பாராத நிகழ்ச்சி

*காலைப் பிடித்தேன் கணபதி!*
*நின்பதம் கண்ணி லொற்றி*

நூலைப் பலபல வாகச்
சமைத்து நொடிப் பொழுதும்
வேலைத் தவறு நிகழாது
நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின்
நிறுத்தல் குறியெனக்கே

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய்! கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்,
கனக்கும் செல்வம், நூறுவயது;
இவையும் தரநீ கடவாயே![1]

என்ற கணபதி தோத்திரப்பாடல்களுடன் இந்தக் குமிழி வெளிவருகின்றது காரணம், இந்தக் கணநாதன் காரைக்குடி சா. கணேசன் வடிவில் நான் எதிர்பாராததை வழங்கி என் வாழ்க்கைப் பாதையையே மாற்றியமைத்த நிகழ்ச்சி இதில் வெளிவருகின்றது.

1949-50 ஆண்டு இறுதியில் என் உயர்நிலைப் பள்ளி வாழ்க்கை நிறைவு பெறுகின்றது. 1948-ஆம் ஆண்டு என் நெருங்கிய நண்பர்களால் போடப்பெற்ற மொட்டை விண்ணப்பம் ஓராண்டு கழித்து செயற்படத் தொடங்கியது. பல்வேறு தொல்லைகள். இவற்றையெல்லாம் விவரமாக எழுத விருப்பம் இல்லை. இல்வாழ்க்கை சரியாக அமையாத கணவன்மார்கள் மனைவியை வெறுத்து, குடும்பத்தை

1. பா.க: வி.நா. மாலை - 6,7.

வெறுத்து, துறவத்தை மேற்கொள்வது போன்ற நிலை எனக்கு ஏற்பட்டது. நான் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கி வளர்த்த பள்ளியில் தொடர்ந்து வேலை செய்ய விருப்பம் குறைந்து கொண்டு வரத்தொடங்கியது. நிர்வாகத்தின்மீது என்றுமே எனக்குப் பாசம் ஏற்படவில்லை. ஆனால் பள்ளியே எனக்கு உயிராக அமைந்துவிட்டது, பிள்ளைகளின்மீது இருந்த பாசம் குறையவில்லை. இவர் களை விட்டுப் பிரிய நேரிடுகின்றதே என்ற கவலை இருந்து வந்தது. தொல்லைகளைப் பொறுக்கமுடியாமல் எங்காவது ஓடிப் போகலாமா? என்ற எண்ணம் கூடத் தோன்றிவிட்டது. இறைவன் ஏதாவது நல்லவழி அமைப்பான் என்று எண்ணிக் கொண்டு மன அமைதியுடன் பணியாற்றிவந்தேன். ஆனால் இதுகாறும் ஈடுபாட்டுடன் ஆற்றி வந்ததுபோல் ஆற்ற வில்லையே என்பதை உணர்ந்து கொண்டுதான் இருந்தேன்.

இந்த ஆண்டு (1949) அக்டோபர் - 13ஆம் நாள் மக்கட் பேறு ஏற்பட்டது; பிறந்தது ஆண்குழந்தை. இவன் பிறப் பால் என் வாழ்வில் வளம் ஏற்படும் என்று நம்பினேன்; நம்பிக்கை வீண்போகவில்லை. வீட்டிற்கு அருகில் வசித்து வந்த நர்ஸின் உதவியை நாடியிருந்தேன். இறையருளால் அவர் வருவதற்குமுன் சுகப்பிரவசம் ஆகிவிட்டது. 10 நாட்கள் கழித்து உள்ளூர்ப் பஞ்சாங்கம் குன்னுப்பட்டி சுப்பையர் வந்து சடங்குகளைச் செய்து என் விருப்பப்படி இராமலிங்கம் என்று திருநாமம் சூட்டினார். கோட்டாத்தூர் சுப்பையரும் வந்திருந்தார். இருவருக்கும் எட்டு முழ சரிகை வேட்டி பட்டு அங்கவஸ்திரம் அன்பளிப்பாக வழங்கப் பெற்றன. உறவினர்கட்கும் நண்பர்கட்கும் நல்விருந்து அளிக்கப் பெற்றது. பெரியோர்கள் குழந்தையை வாழ்த் தினர். பதினான்கு ஆண்டுகள் கழித்துப் பிறந்த குழந்தை 3 பவுண்டு எடைதான் இருந்தது. டாக்டர் பட் என்ற என் நண்பர் இரண்டு மூன்று மாதங்கள் போனால்தான் குழந்

தையின் ஆயுள்பற்றி உறுதிசொல்ல முடியும் என்றார். படித்த படிப்புடன் அநுபவமும் கலந்து வந்த வார்த்தை இது. இறையருளால் மகன் நிறைவாழ்வு பெற்றான்; உயர் கல்வியும் பெற்று நல்ல உயர்பதவியிலும் இருந்து வருகின்றான். இரண்டு பேத்திமார்கள்,

சொல்லு மழலையிலேயே —கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே —என்து
மூர்க்கந் தவிர்த்திடுவாய்;

இன்பக் கதைகளெல்லாம் — உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே — உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ? [2]

என்று பாரதியார் சொல்லுகிறபடி எனக்கு மகிழ்வூட்டி வருகின்றனர்.

மொட்டை விண்ணப்பத்தின் தொல்லையால் மூன்று மாதம் சென்னைக்குப் போவதும் வருவதுமாக இருந்தேன். பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் வீடு தான் தங்குமிடம்; பயிலும் இடம். அடிக்கடி பல்கலைக் கழக நூலகமும் சென்று வருவேன். பல நூல்களைப் பயின்று குறிப்புகளும் எடுத்துக் கொண்டு வந்தேன். இந்த ஆண்டு மன அமைதியின்மையால் எம்.ஏ. தேர்வு எழுத வில்லை. மார்ச்சு 31இல் (1950) துறையூர் திரும்பினேன். தேர்வு சமயம் மாணவர்களைக் கவனிக்க முடியவில்லையே என அடிக்கடி வருந்தியதுண்டு. நான் இங்ஙனம் அலைந்து

---

2. பா.க. கண்ணன் பாட்டு - கண்ணம்மா என் குழந்தை-8,9

வருவதைக் கண்டு மொட்டை விண்ணப்பத்திற்குக் காரண மாக இருந்தவர்களின் முகத்தில் இன்ப ஒளியையும் என் ஆன்ம நண்பர்களின் முகத்தில் துன்பக் களையையும் கண்டு மகிழ்ந்தேன்.

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்[3]

என்ற குறள் எனக்கு மன அமைதியைத் தந்து என்னைக் காத்தது.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு[4]

என்ற குறளின் உண்மையை அநுபவ வாயிலாக உணர்ந் தேன். இன்னும், இன்றும்,

பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்பு
அகநட் பொரீஇ விடல்[5]

என்ற குறள் என் வாழ்க்கையில் வழிகாட்டுகின்றது; மின் கைவிளக்குபோல் உதவுகின்றது.

பள்ளி மாணவர்கள் வகுப்பு மாற்றம், பள்ளி ஆண்டு வரவு - செலவுக் கணக்கு இவற்றையெல்லாம் பக்தியுடன் செய்து முடித்தேன். சில நாட்களாக என் வாழ்க்கையில் என்றுமில்லாத மன அமைதியும் மன மகிழ்ச்சியும் நிலவின. ஏதோ நற்காலம் வருகின்றது என்பதற்கு இவை உற்பாதங் களாகத் தோன்றின. ஒரு நாள் திடீரென்று ஒரு தந்தி வந்தது காரைக்குடி அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரி

3. குறள்-621 (இடுக்கண் அழியாமை)
4. ஷை 819 (தீநட்பு)
5. ஷை. 830 (கூடாநட்பு)

முதல்வரிடமிருந்து; மறுநாள் கடிதமும் வந்தது தமிழ்ப் பேராசிரியராக வந்து சேரும்படி. கல்லூரி சூலை 5 நாள் திறக்கப் பெறுகின்றது என்ற குறிப்பும் கடிதத்திலிருந்து தெரிந்து கொண்டேன். இது வியப்பினும் வியப்பாக இருந்தது. கல்லூரிப் பணியை விரும்பி விண்ணப்பித்தாலும் கிடைப்பதில்லை. அப்பணி கனவு நிலையிலேயே இருந்தது. விண்ணப்பம் போடவும் துணிவு இல்லை பரிந்துரைப் பதற்குத் தக்கார் இல்லாதலால். ஆயினும் இந்தக் கல்லூரிக் காக வந்த விளம்பரத்தைப் பார்க்காததால் விண்ணப்பம் போடவும் இல்லை. பள்ளி வாழ்க்கையில் நேரிட்ட குழப்பத்தால் மன அமைதியின்றி அங்கும் இங்குமாக அலைந்து திரிந்து கொண்டிருந்தமையால் இந்த விளம்பரம் என் கண்ணில் படவில்லை.

இறையருளை நினைந்து காரைக்குடிப் பணியை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தேன்.

கடமைதான் ஏது? கரிமுகனே! வையத்து
இடம்நீ அருள்செய்தாய், எங்கள்-உடமைகளும்
இன்பங் களுமெல்லாம் ஈந்தாய்நீ யாங்களுனக்(கு)
என்புரிவோம் கைம்மா(று) இயம்பு[6]

என்று 'கணபதியின் அருளை' எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். கம்பன் திருநாள் காணப்போன எனக்குக் கச்சி ஏகம்பன் தன் மூத்த பிள்ளைமூலம் இங்ஙனம் அருள் புரிந்தான் போலும் என்று நினைந்து,

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துஉருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செழுத்தைச்

6. பா.க : வி.நா.மி : 21

சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே[7]

என்று ஏகாம்பர நாதனைத் துதித்துத் தாளாளரிடம் சென்று என்னைக் கழற்றிவிடுமாறும், ஓராண்டு விடுமுறையும் தொடர்புரிமையும் (Lien) தருமாறும் வேண்டினேன்; என் அன்றைய நிலையை எடுத்துக் கூறியும் இரண்டாண்டுகள் கழித்து திரும்ப வந்து விடுவேன் என்று கூறியும் மனம் இரங்கவில்லை; மறுத்துவிட்டார்.

நான் தொடங்கி வளர்த்த பள்ளியை முற்றிலும் துறந்து விட முடிவு செய்தேன். 'பட முடியாது இனித்துயரம் பட்டதெல்லாம் போதும்' என்று நினைந்து இந்த முடிவிற்கு வந்தேன். எது வந்தாலும் அஃது எம்பெருமான் அருள் தானே என்ற நம்பிக்கையைச் சிறு வயது முதற்கொண்டே என் இயல்பாகச் செய்துவிட்டான் என்னைப் படைத்த இறைவன் அவன்மீது எல்லாப் பாரத்தையும் போட்டு நிலைமையை விளக்கித் தாளாளரிடம் பேசிய அனைத்தையும் கோவைப் படுத்தி அழகான ஆங்கிலத்தில் அலுவலகக் குறிப்பாக எழுத்தர்மூலம் அனுப்பி வைத்தேன்; உடனே முடிவு தெரிய வேண்டும் என்று சொல்லியும் அனுப்பினேன். எழுத்தர் சீநிவாச அய்யங்கார் இங்கிதம் தெரிந்தவர். நீதிமன்றத்தில் அமீனாவாகப் பணியாற்றியவரல்லவா? நளினமாகப் பேசி வெற்றியுடன் திரும்ப நினைத்தார். இவர் பருப்பும் வேகவில்லை. 'ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளின்படி செய்யலாம்' (As per the terms of the Agreement) என்று

7. பட்டினத்தார் பாடல்கள் - கச்சி ஏகம்பமாலை-9.

எழுதியனுப்பிவிட்டார். தாளாளர். நான் அவரைக் கெஞ்சிச் சலுகைபெற விரும்பவில்லை. இறுதி வரையில் பணி வாகப் போவதே முறை என்பதை ஆண்டவன் எனக்கு வழி காட்டிக் கொண்டே இருப்பான்.

இப்போது முற்பகல் 11 மணி. ரூ. 540/-க்கு இலட்சுமி விலாஸ் பாங்கிக்கு முத்துசாமிமூலம் (Attender) ஒரு காசோலை அனுப்பி ஒரு Pay Order வாங்கி வரும்படி செய்தேன். திரு. பிச்சுமணி அய்யரை ஒரு கடிதம் தயார் செய்து தட்டச்சு செய்யும்படிப் பணித்தேன். "நிபந்தனை களின்படி ரூ 540/-க்கு (மூன்று மாத சம்பளம்) Pay Order இணைத்துள்ளேன். தங்களிடம் விடுதலை பெறும் உத்தரவைக் கூட எதிர் பார்க்கவில்லை. பள்ளியில் என் காலத்தில் ஏதாவது குறைகள் இருப்பின் அவற்றை ஈடு செய்வேன்" என்று வாசகம் இருக்குமாறு கடிதம் தயார் செய்யப்பெற்றது. பிற்பகல் 4 மணிக்குள் எழுத்தர் சீநிவாச அய்யங்கார் மூலம் கடிதத்தையும் Pay Order ஐயும் அனுப்பிக் கடித நகல் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்பம் வாங்கி வருமாறு பணித்தேன். இத்துடன் என் ஒன்பதாண்டு பள்ளி வாழ்வு நிறைவு பெற்றது.

கல்லூரி காரைக்குடியில் சூலை ஐந்தாம் நாள் தொடங்கப் பெறுகின்றது என்று தெரிந்திருந்தமையால் பெட்டி படுக்கையுடன் சூலை 4 ஆம் நாள் காலையில் புறப்பட்டேன். இருப்பூர்தி வண்டி 12 மணிக்கு இருக்கும் என்பதாக நினைவு. மாலை 4 மணிக்குக் காரைக்குடிப் போய்ச் சேர்ந்தேன். காரைக்குடியில் எவரையும் அறியேன். இருப்பூர்தி நிலையத்திலிருந்து குதிரை வண்டி ஒன்றை நியமித்துக் கொண்டு நேராக திரு. சா. கணேசன் இல்லத் திற்குச் சென்றேன். அச்சமயம் அவர் இல்லத்தில் இருந்

தார். மகிழ்ச்சியுடன் வரவேற்றார். "நல்ல வேளையாக வந்து சேர்ந்து என் வாக்கைக் காப்பாற்றினீர்" என்று அன்புடன் பேசினார். அதன் பிறகு திருச்சூரிலிருந்து பேராசிரியர் ஐ. என். மேனன் முதல்வராகப் பணிஏற்றியிருப் பதையும் மறுநாள் அழகப்பா கல்லூரியிலிருந்து திரு எஸ். திருவேங்கடாச்சாரி (விரிவுரையாளர்) பேராசிரியராகப் பணி ஏற்கப் போவதையும் கூறினார். மற்றும் ஆங்கிலம், கணிதம், அறிவியல், உளவியல் துறைகட்கு யார் யார் வருகின்றனர் என்பது மறுநாள்தான் தெரியும் என்றும் தெரிவித்தார்.

பின்னர், "எங்கள் விளம்பரத்திற்கு நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் வந்தன. தமிழ்ப் பேராசிரியர்கட்கு ஒரு விண்ணப்பம் கூட இல்லை. நீங்கள் விளம்பரத்தைப் பார்க்கவில்லையா? ஏன் விண்ணப்பம் போடவில்லை? திரு. அ. ச. ஞானசம்பந்தம் வேலூர் வூரீஸ் கல்லூரியில் உள்ள திரு. யோகசுந்தரத்தைப் பரிந்துரைத்தார் (இடை நிலை வகுப்பு வரை உள்ள கல்லூரி). என்ன காரணத்தாலோ அவரை நியமிக்க என் மனம் ஒப்பவில்லை. டாக்டர் செட்டியார் 'அடுத்த ஆண்டு தமிழ்த் துறையை ஏற்படுத்த லாம்' என்று சொன்னார். நான்தான் 'நாம் தொடங்கும் போதே தமிழுக்கும் வகை செய்ய வேண்டும்' என்று வற்புறுத்தினேன். 'விண்ணப்பமே இல்லாதபோது என்ன செய்வது?' என்றார். 'நான் எப்படியாவது தக்கவர் ஒருவரைக் கொணர்வேன்' என்றேன். உடனே, 'தமிழைப் பொறுத்தவரை உங்கள் பொறுப்பு' என்று கூறி இந்த நியமனத்தை என் பொறுப்பில் விட்டார். எனக்கு உங்கள் நினைவுதான் வந்தது. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்பது கூட எனக்குத் தெரியாது. பத்து ஆண்டுகள் தலைமையாசிரியராக இருந்திருக்க வேண்டும் என்பது

டாக்டர் செட்டியாரின் விருப்பம். நீங்கள் தலைமையாசிரியராக இருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். எப்படியானாலும் ஆகட்டும் என்றுதான் திரு. மேனனிடம் (முதல்வர்) சொல்லி உங்கட்குத் தந்தி கொடுக்கச் சொன்னேன்; கடிதமும் எழுதச் சொன்னேன்'' என்றார். ''நாளை திரு. S. திருவேங்கடாச்சாரியாரிடம் பேசுங்கள். இன்னும் விவரங்கள் தருவார்'' என்று கூறி முடித்தார். அடுத்த நாள் திருவேங்கடாச்சாரியிடம் பேசி மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணத்துடன் அன்றிரவு திரு. கணேசன் அவர்கள் இல்லத்திலே தங்கியிருந்தேன். அன்றிரவு,

பக்தி யுடையார் காரியத்தில்
பதறார்! மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்;
சக்தி தொழிலே அனைத்துமெனில்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா! கணநாதா!
மேன்மைத் தொழிலிற் பணியெனையே[8]

என்ற பாரதியாரின் பாடலை நாவில் நவிற்றிக் கொண்டே துயில் கொண்டேன்.

---

8. பா. க : வி.நா.மா. பாடல்-27.

## பின்னிணைப்பு—1
## குமிழியில் எழுந்த நூல்கள்

அருணகிரிநாதர் : கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி (கழகம்)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு

இராமலிங்க சுவாமிகள் : ஆறாம் திருமுறை (இராமலிங்கர் பணிமன்ற வெளியீடு)

ஔவையார் : கொன்றை வேந்தன், நல்வழி (மர்ரே ராஜம் பதிப்பு)

கம்பர் : கம்பராமாயணம் (வை. மு. கோ. பதிப்பு)

கவிமணி : மலரும் மாலையும் (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி)

சங்கப் புலவர்கள் : அகநானூறு (பாகனேரி வெளியீடு)

சங்கப் புலவர்கள் : பரிபாடல் (டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு)

சமண முனிவர்கள் : நாலடியார் (வை. மு. கோ. பதிப்பு)

சுப்புரெட்டியார், ந : மணிவிழா மலர் (1977)

தாயுமானவர் : தாயுமானவர் பாடல்கள் (தருமபுரம் பதிப்பு)

திரிகூடராசப்பக் கவிராயர் : திருக்குற்றாலக் குறவஞ்சி (கழக வெளியீடு)

திருவள்ளுவர் : திருக்குறள்—பரிமேலழகர் உரை (கழக வெளியீடு)

தொல்காப்பியர் : தொல்காப்பியம்-பொருளதிகாரம் இளம் பூரணம் (கழகம்)

நக்கீரர் : திருமுருகாற்றுப்படை (வையாபுரிப் பிள்ளை வெளியீடு)

நிரம்ப அழகிய தேசிகர் : திருப்பரங்கிரிப் புராணம்

நீதிவெண்பா : (கழக வெளியீடு)

புகழிக் கூத்தர் : திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் (கழக வெளியீடு)

பட்டினத்தடிகள் : பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் (மணிவாசகர் பதிப்பக வெளியீடு)

பரஞ்சோதி முனிவர் ; திருவிளையாடற் புராணம் (கழக வெளியீடு)

பவணந்தி முனிவர் : நன்னூல் காண்டிகை உரை (வை.மு. கோ. பதிப்பு)

பாரதியார் : பாரதியார் கவிதைகள் (S.R.S. வெளியீடு)

மாணிக்கவாசகர் : திருவாசகம் (தருமபுர வெளியீடு)

மாதவச் சிவஞான முனிவர் : காஞ்சி புராணம் (கழக வெளியீடு)

மூவர் முதலிகள் : தேவாரம் அடங்கன் முறை (சமாஜப் பதிப்பு)

பின்னிணைப்பு—2

# பொருட்குறிப்பு அடைவு


## அ

அகநானூறு 305, 344
அக்கினி தீர்த்தம் 301
அசுவமேத யாகம் 190
அடங்காப் பிடாரிகள் 275
அடையாறு ஆலமரம் 360
அண்ணா, பேரறிஞர் 177
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 184, 290
அதிசய மின்னணு 118
அத்திரி முனிவர் 197, 335
அத்வைதம் 208
அநுசூயாதேவி 197, 336
அநுமன் 375
அந்தப்புரம் 178, 181
அந்தர்யோகம் 213
அப்பக்குடத்தான் சந்நிதி 219
அப்பர் தேவாரம் 2
அப்பர் பெருமான் 121, 194, 367
அப்பர் சுந்தர முதலியார் 222
அமிர்தலிங்கம், பூ 29
அரங்கசாமி, எம் 31
அரங்கசாமி, ப. 67, 174, 219, 220
அரங்கசாமி மூதலியார், V.R. 11, 53, 72, 107
அரங்கசாமி ரெட்டியார், P. (வக்கீல்) 130, 131, 132, 151, 152, 177, 204
அரங்கசாமி ரெட்டியார் 122, 123, 134
அரங்கசாமி ரெட்டியார், சின்னப்பண்ணை 293, 306, 352, 362
அரங்கநாதன் 359
அரங்கன் விழா 259
அருணகிரி நாதர் 305, 353
அரசியல்வாதிகள் 261, 262
அருணாசலபுராணம் 184
அருணாசலக் கவுண்டர் கு. 379
அருணாசலம் T. S. 263
அருட்பிரகாச வள்ளலார் 25
அலைவாய் 323
அவினாசிலிங்கம், தி. சு. 9, 221, 244, 374
அழகப்ப வள்ளல் 19
அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 67, 267
அழகர் கோவில் 306
அழகிய சிங்கர் 359
அறநெறிச்சாரம் 136, 254
அனந்த சயனம் அய்யங்கார், M. 312
அனந்தாச்சாரி 274
அன்பில் 219
அன்பு கணபதி 218

## ஆ

ஆசிரியர் கூட்டு இணைப்பு 220
ஆசிரியர் கூட்டு இணைப்பு மாநாடு 220
ஆண்டாள் 359

ஆதிசேது 297
ஆதிநாதப் பெருமாள் 320
ஆம்புலன்ஸ் வண்டி 242
ஆலாலசுந்தரம் செட்டியார், பூ. 218, 371
ஆளவந்தார் 231
ஆழ்வார் திருநகரி 321
ஆறாவது படைவீடு 307
ஆறுமுகப் பெருமான் 326
ஆற்றோரம் 177

இ

இணக்கச்சீட்டு 261, 263
இந்திரன் 305
இயாகோ 103
இரகுநாதன், சி 52, 54, 226
இரவிவர்மா 62
இராசகோபாலய்யர், T. S. 4, 13, 53, 68
இராசகோபால் பிள்ளை, M.R. 154, 204
இராசமாணிக்கம், சீனி 203
இராமகிருஷ்ணன், S 120
இராமகிருஷ்ணன் (த ஆ) 209
இராமகிருஷ்ண ரெட்டியார், எஸ். 315, 316
இராமக்கோன் 319
இராமசாமி T, P. 200
இராமசாமிக் கவுண்டர் 177, 291
இராமசாமி ரெட்டியார், ஆ. பெ. 132, 242
இராமசாமி ரெட்டியார் 160
இராமசாமி ரெட்டியார் 84, 85
இராமசாமி ரெட்டியார் 104
இராமசேது 297, 298
இராமசந்திர ஆச்சாரி, A 17, 78
இராமச்சந்திர அய்யர் V. S. 53, 107, 108
இராமச்சந்திர அய்யர், K. 8, 53, 107, 108
இராமகிருஷ்ணதபோவனம் 195, 206, 207
இராமநாதன் 23, 24
இராமநாதன் 131
இராமநாதபுரம் 296
இராமய்யா டி. எஸ். 3, 111, 229, 234, 245
இராமய்யர் A. 221
இராமராசன் 351
இராமராஜ் R 162
இராமலிங்கத்தின் திருமணம் 271
இராமலிங்கம் பிள்ளை, வெ. 86
இராமாசாஸ்திரிகள் 299, 303
இராமாநுசரெட்டியார், பெ. 154
இராமாநுசம் 17
இராமேச்சுரம் 299
இராமசாமி முதலியார் சத்திரம் 356
இராவண வீழ்ச்சி 164
இராஜகோபால் டிரான்ஸ் போர்ட்ஸ் 251
இராஜாம்பாள் 135
இருவினையொப்பு 236
இலக்கிய இன்பம் 182
இலக்குமண ரெட்டி, வ. 31
இலக்குவனார் சி. 66, 177, 182, 183
இலவச உணவு (பகல்) திட்டம் 117
இளங்கோ அடிகள் 372
இளம்பிள்ளைவாதம் 147
இளைஞர் எழுச்சி 182

இளைஞர் வானொலி 117
இளைஞர் அறிவுச்சுடர் 366
இஸ்லாமிய மருத்துவர் 144

ஈ

ஈச்சம்பட்டி 149

உ

உச்சிப்பிள்ளையார் 172
உச்சிப்பிள்ளையார் கோயில் 361
உடற்பயிற்சி ஆண்டு விழா 193
உடையார் தெரு 279
உணவு விடுதி 209
உண்ணாமுலை அம்மை 353
உதைபந்து 167
உதைபந்து ஆடுகளன் 167
உத்தமர் கோயில் 219
உப்பிலியபுரம் 130
உமாபதி வி. எஸ் 31
உமாபதி ரெட்டியார் 111, 170, 229, 234, 245, 246
உயர்நீதி மன்றம் 360
உரிமம் 250, 258, 279
உலக ஊழியர், வீ 177
உலக ஊழியனார், வீ 65,371
உலகப்பன் பாட்டு 262
உலகம் சுற்றும் தமிழன் 286, 287
உறங்காப்புளி 321
உறையூர் 219
உறையூர் சாலை 269

எ

எதிர்பாராத நிகழ்ச்சி 384
எம்பெருமனார் 313
எருக்காட்டுத் தாயங் கண்ணனார் 305, 307
எருமைப்பட்டி 242
எல்லப்ப நாவலர் 354
எல். ஜி. பெருங்காயம் 41

ஏ

ஏழைபங்காளர் காமராசர் 117

ஐ

ஐந்து மாவட்டக் கல்வி அதிகாரிகள் 224

ஒ

ஒழுங்குமுறை 212
ஒற்றைக்கல் மண்டபம் 340

ஓ

ஓமியோபதி குளிகை 100

க

கங்காணித்தனம் 268
கங்கைவேடன் 182
கணக்குப்பிள்ளை 254
கணபதி, ச. 31
கணபதி அய்யர் (வக்கீல்) 151
கணித அநுபவம் 29
கண்ணன் 230, 260
கண்ணதாசன் 365
கண்ணன் தூது 139
கண்ணமங்கலம் 352
கண்ணன் என் சேவகன் 49
கண்ணெச்சில் 267
கணேசன், சா. 379, 381
கதிமோட்சம் 157
கந்தமாதன பருவதம் 302
கந்தர் அநுபூதி 317
கந்தர் அலங்காரம் 317
கபடநாடகம் 127
கபாலீசுவரர் 358
கபிலதீர்த்தம் 342
கம்பநாடன் 297, 298
கம்பராமன் 351

கம்பசித்திரம் 376
கம்பனில் புதுமை 196
கம்பராமாயணப்பாடல் 243
கம்பர் 370
கம்பன் அடிப்பொடி 379
கயிலை அனந்தர் 203
கரடிக்கவுண்டன் 159
கருணாநிதி, 365
கருத்தய்யா 6
கருத்தேற்றங்கள் 100
கருப்பன்செட்டியார், ஏ. 287
கருர்சித்தர் 322
கர்ப்பூரச்சுடர் 138
கலகப்பிரியர் 335
கலங்கரை விளக்கு 360
கலைஞர் முதல்வர் 271
கல்வித்துறை விதிகள் 113
கவிஞன் உள்ளம் 187, 374
கவிதாநுபவம் 381
கற்பகத்தரு 364
கன்னிமேரா விடுதி 110
கன்னியம்பலம் 332
கன்னியாகுமரி 329

கா

காட்டுப்புத்தூர் 20, 22, 24
காந்தியடிகள் 368
காந்தீச்சுரம் 322
காமதேனு 364
காமராசர் 116, 263, 265, 269
கார்த்தவீரியார்ச்சுனன் 380
காலசக்கரம் 187, 374, 375
காவிரி நீராட்டம் 361
காளத்தி வேடன் 182
காளமேகம், டாக்டர் 241
காளிதேவி 231

கி

கிடைமட்ட வளர்ச்சி 32
கிட்டு 213
கிராமஊழியன் 373
கிருட்டிணமூர்த்தி அய்யர், க. 8, 33
கிருட்டிணசாமி அய்யங்கார் 277
கிருட்டிணசாமி வி.சி 9
கிருஷ்ணசாமி ரெட்டியார், மு. 147
கிருட்டிணசாமி ரெட்டியார், வி. சி. 168, 170 173, 245, 366
கிருட்டிணசாமி ரெட்டியார் R. 201, 251, 257
கிருட்டிணராஜு ரெட்டியார், என். 130

கு

குடிமைப் பயிற்சித்திட்டம் 277
குடும்ப விளக்கு 187
குண்டுந்தம்பு 124, 125, 126
குண்டுத்தம்புகள் 104
குமரப்பக் கவுண்டன் 190
குமரன் விடுதி 388
குமரி 331
குமரிமலர் 287, 375
குமாரசாமி ராஜா 215
குரங்குரெட்டி 159
குறள் 165
குறும்புச் சித்திரங்கள் 366
குழுக்குத்துறை 317

கூ

கூடைப்பந்து 166
கூடைப்பந்து ஆடுகளன் 166

கே

கேதம் விசாரிப்பு 272
கேரளப் பல்கலைக் கழகம் 286

### கை

கைகேயி 100, 178, 181
கையூட்டு 26
கையூட்டு நாடகம் 262

### கொ

கொப்பம்பட்டி 245
கொல்லம் 342

### கோ

கோடி தீர்த்தம் 301
கோடீஸ்வரன் 251
கோபாலன், எஸ் 388
கோயிலடி 219
கோயில் அண்ணன் 314
கோவிந்தராஜுலு நாயுடு, எஸ். 62, 63
கோவிந்தாச்சாரி (த.ஆ) 70

### கௌ

கௌதமர் 336

### ச

சகந்நாதரெட்டியார், T.C. 195
சகுனி 100
சக்கரவர்த்தித் திருமகன் 359
சங்கம் 270
சதியின் விசுவரூபம் 111
சத்துருக்கனன் 382
சந்திரசேகர், டாக்டர் 289
சப்தரிஷி ரெட்டியார், K.C. 20
சப்தரிஷிரெட்டியார், எஸ். 170
சமூக சேவை 77
சர்ப்பசாந்தி 293, 300
சவுந்திரா கைலாசம் அம்மையார் 374

### சா

சாட்சிகள் 158
சாந்தா நந்தா 215
சாம்பசிவம் பிள்ளை 72, 74, 75, 226, 231
சாம்பசிவ ரெட்டியார், அ. 177, 278
சாரங்கபாணி 177

### சி

சிங்காரவேலு முதலியார், சி. 53, 54, 57, 107 226
சிதம்பரநாதன் செட்டியார், அ. டாக்டர் 280
சிதம்பர ரெட்டியார், முதலாளி 257, 258
சிதம்பரவிலாஸ் 258, 265
சித்தன்னவாசல் சிற்பம் 394
சிந்தாமணி 201
சிந்தூரப்பொடி 313
சித்பவாநந்த அடிகள் 195,271
சிரீவைகுண்டம் 322
சிவத்தய்யா 6
சிவராமகிருஷ்ணய்யர் 238
சின்னகுண்டு 104, 122, 224
சின்னதுரை 37
சின்னப்பணம் 185, 186

### சீ

சீநிவாச அய்யங்கார், K. 31
சீநிவாசராகவன், அ. 379
சீமைக்காரை 238
சீருடைத்திட்டம் 117

### சு

சுங்கத்துறை 255
சுசீந்திரம் 332, 333, 336
சுதந்திர இந்தியா 368
சுதர்மம் 260
சுதர்மத்தின் பலன் 265

சுந்தரம் அய்யர் (த.ஆ) 20
சுந்தரமூர்த்தி 348
சுந்தரராம அய்யர் 177, 204
சுந்தரவடிவேலு, நெ.து. 117
சுப்பிரமணியம், சி. 206
சுப்பிரமணியம், சி.வீ. 53, 71
சுப்பிரமணியம் (சி.நா. ப.) 94, 125
சுப்பிரமணியத்தின் சூழ்ச்சி 91
சுப்பிரமணியம் பி.ஆர். 204, 291
சுப்பிரமணியபிள்ளை, கோ. 217, 316
சுப்பிரமணியபிள்ளை, பி.ஆர். 54, 58
சுப்பிரமணியரெட்டியார் 79
சுப்பு 10, 11
சுப்புரெட்டி 9, 10
சுப்புரெட்டியார் 11
சுப்பையா, வ 288
சுப்பையர் கே. பி. 294, 334
சுயமரியாதைக்கட்சி 278
சுழல் கேடயங்கள் 194
சுழல் கோப்பைகள் 194

**செ**

செக்காடுபவர் 162
செங்குட்டுவன் 200
செங்குத்து வளர்ச்சி 32
செட்டியார், ஏ.கே. 287
செந்தமிழ்த் தீனி 187
செந்தாரப்பட்டி முனிசிப்பு 251
செந்தில் 323
செய்துகொண்டேகற்றல் 19
செல்லமுத்துவாத்தியார் 4

**சே**

சேதுராமன், K. 33
சேதுப்பிள்ளை, ரா.பி. 203, 217, 316
சேந்தமங்கலம் 123
சேலம் கல்லூரி 66
சேனை முதலியார் 339

**சொ**

சொக்கலிங்கம், ராய. 379

**சோ**

சோமசுந்தரஅய்யர், எஸ். 34
சோமசுந்தர பாரதியார், எஸ். 316
சோமசுந்தரம், மீ.பா. 379
சோமு 379
சோமுகாசுரன் 323

**ஞா**

ஞானசம்பந்தர் 305, 354
ஞானியார்மரபு 3

**ட. கரவர்க்கம்**

டாக்டர் மு வ. 216
T.V.S. கம்பெனி 265
டி. கே. சி. 378, 382

**த**

தங்கச்சிமடம் 302
தஞ்சைக்கோயில் 363
தணிகைக்குமரன் 355
தந்தை பெரியார் 161, 205, 306
தமயந்தி 181
தம்பிரான் தோழர் 347
தம்பு 253, 295
தருப்பசயனம் 298
தருமசங்கடம் 265
தலைமையாசிரியர் 194
தலைவருக்குக் கீழ்ப்படிதல் 247
தலைவலி 29

## தா

தாணுமாலயன் 333, 335
தாணுமாலயன்-பகவதி திருமணம் 333
தாயுமானவர் 116, 247, 296
தாயுமான அடிகள் 216
தாயுமானவர் கோயில் 361
தாயுமானசுவாமி பாடல் 17
தானாகக் கண்டறியும்முறை 43

## தி

திண்ணனூர் 221
தியாகராசன், எஸ் 191
திராவிட ஆட்சி 271
திராவிடக்கழகம் 278
திரிகூடராசப்ப கவிராயர் 3?0
திரிபுரசுந்தரி 365
திரிவிக்கிரமாவதாரம் 261
திருஅரங்கம் 219, 253, 254
திருஆவிநன்குடி 345
திரு ஆவினன்குடி 345
திருச்சி தமிழாசிரியர்கழகம் 173
திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் 271
திருச்சிமாவட்டக் காங்கிரஸ் மாநாடு 221
திருச்சீரலைவாய் 323
திருச்செந்தூர் 323
திருவரங்கச் செல்வன் 259
திருக்குறள் மாநாடு 217
திருக்குற்றாலக்குறவஞ்சி 379
திருத்தணி 355
திருத்தொண்டர் புராணம் 372
திருப்பதி—திருமலை 348
திருப்பரங்குன்றம் 304
திருப்பாணாழ்வார் 362
திருப்புல்லாணி 296
திருப்புளியாழ்வார் 322
திருப்பேரூர் 347
திருப்பேர் நகர் 219
திருமங்கையாழ்வார் 275, 362
திருமாலிருஞ்சோலை 310
திருமாலிருஞ்சோலைமலை 306, 309, 313
திருமால் குன்றம் 307
திருமுருகாற்றுப்படை 305
திருவண்ணாமலை 263
திருவள்ளுவர் 370
திருவனந்தபுரம் 337
திருவெம்பாவை 307
திருவேங்கடம்பிள்ளை 55, 58, 69

## து

துரியோதனன் 100, 252
துரைசாமி அய்யர் (வக்கீல்) 131
துரைசாமிரெட்டியார், K.S. 51
துரைராஜ் 230
துவாரகை 206, 269
துவைதம் 208
துறையூர் லட்சுமி விலாஸ் வங்கி 27
துறையூர் வாழ்வு 369

## தெ

தெய்வச் சிலையார் 299

## தே

தேசபக்தர்கள் 368
தேசப்படங்கள் 38
தேசியக்கல்லூரி 33
தேவிபட்டணம் 296
தேவேந்திரன் 336

## தொ

தொல்காப்பியர் 360

## ந

நச்சினார்க்கினியர் 307
நடராசஅய்யர் 23
நஞ்சீயர் 314
நடராச அய்யர் (த.ஆ.) 45
நடராச அய்யர்விடுதி 10
நடேசமுதலியார் (லால்குடி) 117. 217. 371
நடுத்துறை 3
நந்திரெட்டியார் 22
நரபலி 242
நல்லிபாளையம் 128
நம்பிள்ளை 314
நம்பிள்ளை ஈடு 311
நம்மாழ்வார் 312, 321, 322, 338
நவதிருப்பதி 323
நவபாஷாணம் 296
நளன் 181
நளவெண்பா 181
நன்னூல் 184

## நா

நாகரெட்டியார், S. R. 226, 244, 246, 248, 250
நாங்குநேரி 327
நாடாப்பதிவு 81
நாட்டரசன் கோட்டை 382
நாமக்கல் கவிஞர் 87
நாரதர் 336
நாராயண அய்யர், டாக்டர் 241
நாராயணசாமி அய்யர் 22
நாராயணசாமி, B 191
நாலடியார் 292
நாவுக்கரசர் 354

## நி

நிரம்ப அழகிய தேசிகர் 305
நிலைதாங்கி 210

## நீ

நீராகாரமடம் 78
நீர்வண்ணன் 309

## நு

நுடமருத்துவர் 239

## நெ

நெல்லை 315
நெல்லையப்பர் கோவில் 319
நெல்வேலி நாதன் 319

## நே

நேஷனல் மோட்டார் சர்வீஸ் 261

## ப

பகவதி 231
பகவதி அம்மை 330
பகன் 331
பகழிக் கூத்தர் 325
பஞ்சபூததலம் 353
பஞ்சாயத்துத் தனிஅதிகாரி 281
பட்டர்வொர்த்சாலை 171
பட்டுசாமி ஓதுவார் 67
படைப்புக் கற்பனை 363
பணநாயக ஆட்சி 283
பணமுட்டைகள் 261
பயண அநுபவங்கள் 287
பரமசாமி 312
பரமசிவம்பிள்ளை, வள்ளல் 217
பரமசிவானந்தம், அ மு. 219, 371
பரிமேலழகர் 102

பரிபாடல் 305, 308
பரிமேலழகன், வி.ஆ. 66
பவணந்தியார் 183
பழநி 343
பள்ளி ஆண்டுவிழா 194
பழமுதிர்சோலை 306
பழநிசாமிக்கவுண்டர் 177
பழநிசாமிப்பிள்ளை, கே.எல் 53, 54, 59, 227
பஷீர்அகமது, நீதிபதி 62

பா

பாட்டநுபவம் 29
பாண்டிச்சேரி 184
பாபநாசம் 342
பாரதப் பெரும்போர் 25
பாரதிதாசன் 177, 185, 367, 371
பாரதியார் 113, 249, 259, 359
பாராட்டுமொழி 37
பாரிஸ்காரை 240
பால் நாடார், A C. 3,9
பாவேந்தர் 17, 184, 189, 262, 359
பாற்கடல் 364

பி

பிச்சுமணி, K, 32, 36
பிச்சுமணி (மாணவன்) 291
பிச்சுமணி அய்யர், கே. 245, 276, 277, 284
பிரசன்ன வேங்கடாசலபதி 7
பிரம்மஞான சபை 360
பிரிட்டிஷ் அரசு 255
பிளாஸ்டர் ஆப் பாரிஸ் 240

பு

புதிர்க்கதிர்ப்பார்வை 12
புதுக்கல்வித் திட்டம் 368
புருடோத்தம நாயுடு, பு.ரா. 66, 177, 183, 371
புல்லணை 296
புருஷகாரம் 319
புருஷகார பூதை 319
புனித சூசையப்பர் கல்லூரி 174

பூ

பூசலார் நாயனார் 363
பூப்பந்து 168
பூப்பந்து ஆடுகளன் 168
பூம்பாவை 358

பெ

பெண் பாவம் 135
பெத்து ரெட்டியார், ஆ. 132
பெரிய குண்டு 104
பெரியசாமி தூரன் 374, 375
பெரிய வாச்சான் பிள்ளை 311
பெரிய பிராட்டியார் 319
பெரியாழ்வார் 311
பெருமாள் பாளையம் 15
பெருமாள் முதலியார், மு. ரா. 75
பெருமாள் ரெட்டியார், செ. 40
பெருமாள் ரெட்டியார், மு. 147
பெரும் பிரிவு 272

பொ

பொட்டணம் 14
பொதுத்தேர்வு (1952) 161
பொய்யாமொழி 257
பொன்மலை 364
பொன்னம்மாள் 147
பொன்னய்யா உயர்நிலைப் பள்ளி 174

பொன்னுசாமி ரெட்டியார், என். 130, 131
பொன்னுசாமி ரெட்டியார், 125
பொஸட்டோ விடுதி 110

போ

போடிநாய்க்கன்பட்டி 126

ம

மகளிர் இல்லம் 379
மகாலிங்கம், டி. ஏ. 3
மங்கம்மாள் சத்திரம் 303
மணிவாசகப்பெருமான் 301, 353
மண்டோதரி 164
மதுரை இளநாகனார் 307
மந்தரை 100
மயிலம் தமிழ்க் கல்லூரி 34
மரகதவல்லி அம்மையார் 306
மருதமுத்து, எஸ் 191
மனைப்புற விருந்து 149

மா

மாணவர் இலக்கியக் கழகம் 176
மாணவர் இல்லம் 169
மாணி வாழ்க்கை 13
மாணிக்கவாசகர் 354
மாணிக்கவாசக முதலியார், முத்து. சு. 65
மாணிக்கம், எல். 191, 245, 247
மாத்ருபூதம், P. 31,111,245, 247
மாத்ருபூதம் அய்யர் 44
மாபெரும் பெண்பாவம் 135
மாமா 240
மாமூலனார் 344
மாம்பழக் கவிராய சிங்க நாவலர் 344
மாவட்டக் காவல்துறைத் தலைவர் 163
மாவட்ட நீதிபதி 282
மாவட்ட நீதிபதிகள் 177

மி

மிருகக் காட்சி சாலை 360

மீ

மீன் ஆக்கக்கற்பனை 363
மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தெ. பொ. 316

மு

முகமது உசேன் நயினார், டாக்டர் 65
முதல் மதிப்பீடு 284
முத்து 289
முத்தியாலு ரெட்டியார் 135
முத்துசாமி 27
முத்துரெட்டியார், முனிசிப்பு 251
முத்துவேங்கடாசலதுரை 5
முத்துவேல்பிள்ளை, கே. எஸ். 177, 295, 377
முருகப்பா, சொ. 306, 379, 315, 371
முருகேச முதலியார் 226
முயன்று தவறிக்கற்றல் 19

மூ

மூகன் 331

மெ

மெய்காட்டி 212

மே

மேற்பார்வை படிப்பு 212

மொ

மொட்டைக் கடிதம் 255
மொட்டை மனுக்கள் 276, 278
மொட்டையாண்டி 343

யா

யாத்ருசிகம் 309

ரகர வர்க்கம்

ரசிகமணி 377
ராமுடு 213
ராவ்ஜிக்கள் 190
ராஜன் T. S. S. 196
ரிப்வான்விங்கில் 128
ரெட்டியார்பட்டி 147

வ

வக்கீல் சங்கம் 156
வடமொழிக் கல்லூரி 357
வரதராஜப்பிள்ளை, ஜி. 217
வரதராசர் 359
வரதராசனார், மு. 202, 371, 373
வல்லிக்கண்ணன் 373
வளைபந்து 167
வள்ளுவம் 212
வள்ளுவப் பெருந்தகை 102, 372
வள்ளுவர் வாக்கு 244, 259
வழக்குத் தொடர்கள் 128
வழக்கு முடிவுகள் 137
வழுக்குப்பாறை 333

வா

வாமனாவதாரம் 261
வாயோரப் புன்முறுவல் 43
வாழ்க்கைத் தேவைப்பிராது 135
வானமாமலை 327, 328
வானொலி நிலையம் 360
வானொலிப்பெட்டி 277, 278

வி

விசயவேங்கடாசலதுரை 3
விசிட்டாத்வைதம் 208
விசுவாமித்திரன் 243
விசுவேசுரய்யா 368
விருத்தாசலம், G. M. 384
விவேகாநந்தப்பாறை 329
விளக்கப் படங்கள் 39
விஜயராகவாச்சாரியார் எம்.எஸ். 144
வி. ஆர். ஆர். 73, 74

வீ

வீடணன் 297
வீரபாண்டிய கட்ட பொம்மன் 6
வீரமரெட்டியார் 128, 129
வீரராகவ அய்யங்கார், K. (வக்கீல்) 131, 138, 145
வீராசாமி பத்தர், 52, 70

வெ

வெல்லப் பிள்ளையார் 7
வெள்ளைப்பணம் 185
வெள்ளைக்காரப்பணம் 185
வெள்ளைவாயன் 59
வென்வேலான்குன்று 307

வே

வேங்கடாசலதுரை, பி. எம். 954, 204
வேங்கடசாமி ரெட்டியார், கி. 351
வேங்கடராம அய்யர், ஜமீன் 4

வேங்கடராஜுலு ரெட்டியார், வே. 64, 108, 196, 216, 288, 315, 351, 371, 375
வேதசர்மா 319
வேதவல்லித் தாயார் 359
வேதாந்த தேசிகர் 349
வேதாசலம் பிள்ளை 161

### வை

வையாவிக் கோப்பெரும் பேகன் 345
வைரிசெட்டிபாளையம் 244, 248, 249

## வடமொழி

ஜகந்நாதன், கி. வா. 373
ஜக வீரபாண்டியனார் 371
ஜமீந்தார் சத்திரம் 233
ஜனகராஜன் 243
ஜனநாயக ஆட்சி 283
ஜெரோம் பாதிரியார் 63 67
ஜெரோம் டி. சௌசா 62,
ஸ்டேட் ராஜா 41
ஸ்ட்ராத்தம் துரை, ஆர்.எம். 53, 107
ஹாமில்ட்டன் பாலம் 358

# பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் நூல்கள்

## ஆசிரியம் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

## இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சு விடுதூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியங்களில்—அறம், நீதி முறைமை
18. புதுமை(வை)க்கவி சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள்**

19. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
20. இனி நோக்கில் நாலாயிரம்
21. வைணவமும் தமிழும்
22. சைவசமய விளக்கு
23. ஆன்மிகமும் அறிவியலும்
24. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
25. கலியன் குரல்
26. கீதைக்குறள் (பதிப்பு)
27. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
28. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
29. கீதைப் பொழிவுகள்
30. கண்ணன் துதி
31. இராமர் தோத்திரம்

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள்**

32. மலைநாட்டுத் திருப்பதிகள்
33. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
34. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
35. வடநாட்டுத் திருப்பதிகள்
36. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த.அ.ப. பெற்றது)
37. சோழ நாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி (ஷை)
38. தம்பிரான் தோழர்
39. நாவுக்கரசர்
40. ஞானசம்பந்தர்
41. மாணிக்கவாசகர்

## திறனாய்வு :

42. பாட்டுத் திறன்
43. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
44. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
45. அகத்திணைக் கொள்கை
46. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
47. கண்ணன் பாட்டுத் திறன்
48. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
49. பாரதீயம் (த.அ.ப. பெற்றது)
50. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
51. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
52. ஆழ்வார்கள் ஆரா அமுது
53. விட்டு சித்தன் விரித்த தமிழ்
54. சடகோபன் செந்தமிழ்
55. பரகாலன் பைந்தமிழ்

## வரலாறு, தன் வரலாறு :

56. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
57. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
58. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
59. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
60. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
61. வேமனர்
62. குராஜாட
63. சி. ஆர். ரெட்டி
64. தாயுமான அடிகள்
65. பட்டினத்தடிகள்
66. வடலூர் வள்ளல்

67. பிரதிவாதி பயங்கரம்
68. மலரும் நினைவுகள்

## அறிவியல் :


69. மானிட உடல்
70. அணுவின் ஆக்கம்
71. இளைஞர் வானொலி
72. இளைஞர் தொலைக்காட்சி
73. அதிசய மின்னணு
74. நமது உடல் (த. அ. ப. பெற்றது)
75. இராக்கெட்டுகள் (த.அ.ப. பெற்றது)
76. அம்புலிப் பயணம்
77. தொலை உலகச் செலவு
78. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
79. இல்லற நெறி
80. வாழையடி வாழை
81. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
82. வான மண்டலக் காட்சி

## ஆராய்ச்சி :

83. கலிங்கத்துப்பரணி
84. வடவேங்கடமும் திருவேங்கடமும்
85. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
86. Studies in Arts and Sciences : (61st Birth Day Cammemoration Volume)
87. Collected Papers.


# பிழை—திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 32 | | குமிழி 65 | குமிழி-69 |
| 52 | 1 | திருநாகு | திருநாடு |
| 83 | 20 | இராமசாமி | சுப்பிரமணிய |
| 112 | 12 | கரைபோட்டு | கரைபோட்ட |
| 164 | 20 | மண்டோதிரி | மண்டோதரி |
| 268 | 26 | ளள்ளுவர் | வள்ளுவர் |
| 275 | 25 | திருமங்கையாழ்ளார் | திருமங்கையாழ்வார் |
| 306 | 25 | செட்டியார் | ரெட்டியார் |
| 325 | 17 | தாளம் | தரளம் |
| 366 | 25 | குறுப்புச் சித்திரங்கள் | குறும்புச் சித்திரங்கள் |



**VENKATAM PUBLICATIONS**
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040.

## இந்நூலாசிரியரைப் பற்றி ...



பிறப்பு : 27-8-1916

74-அகவையைக் கடக்கும் இந்த நூலாசிரியர் பி. எஸ்சி., எல்.டி., வித்துவான், பி. ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950)-பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் (1960—77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978-பிப்ரவரி-1979-ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல்வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (12), சமயம் (25), திறனாய்வு (12), அறிவியல் (14), ஆராய்ச்சி (5), வாழ்க்கை வரலாறு (14)-என்று 87 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும் - ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும், தமிழக அரசு திரு. வி. க. விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.

---

MK Color Process, Madras-14 Phone : 848311
Design by P. N. Anandan